அந்த நோய்களுக்கு உடல், உள்ளம் இரண்டும் அதிஷ்டானங்கள் (இருப்பிடங்கள்). ரஜஸ், தமஸ் என்னும் இரண்டுக்கும் உள்ளம் இருப்பிடம். *(41—44)*

16. நோயாளி பரீட்சை—நோய் பரீட்சை :

நோயாளியைக் கண்ணால் பார்த்தும், உடலைத் தொட்டும், சில கேள்விகள் கேட்டும் நோயைச் சோதிக்க வேண்டும். நோய் தோன்றக் காரணம், வரப் போகும் நோயின் முற்குறி, நோய் தோன்றிய பின் அதன் இயற்கைக் குறிகள், நோய் நீங்கும் வகை. நோய் உடலில் பரவும் வகை ஆகியவைகளால் நோயைச்சோதிக்க வேண்டும். *(45)*

17. தேசம்

பூமி, தேசம் என்று தேசமானது இரு வகைப்படும். பூமி என்னும் தேசம் ஜாங்கலம் (காட்டுப் பகுதி), அநூபம் (ஜலமய மான இடம்), சாதாரணம் (இரண்டும் கலந்தது) என மூன்று வகையாகும். காட்டில் தோன்றிய மூலிகைகளில் வாதம் முக்கியமாக இருக்கும். அநூபத்தில் கபம் அதிகம். இவற்றிற்கு இடையிலானது சாதாரணமெனப்படும். *(46½)*

18. மருந்து கொடுக்கும் காலமும் மருந்து வகைகளும் :

நோயாளிக்குச் சிகிச்சை செய்யும்போது 'காலம்' என்ற சொல் இரு பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று, க்ஷணம், முகூர்த்தம் முதலியவற்றில். நோயின் நிலையை அறிவிக்க ; மற்றொன்று இவ்விரண்டும் நோயாளிக்கு மருந்து கொடுக்க என இரு பொருளில் பயன்படும்.

மருந்தளிப்பது இரு வகையாகும். ஒன்று சோதனம் (மருந்து கொடுத்து உடலுக்குள்ளிருந்து சீற்றமுற்ற தோஷங்களை வெளியில் வரச்செய்வது) இரண்டு சமனம் (உடலுக்குள்ளேயே சீற்ற முற்ற தோஷங்களைத் தணித்து நிறுத்தல்).

[1]வஸ்தி, [2]விரேசனம், [3]வமனம் என்பவை உடலில் சீற்றமுற்ற தோஷங்களுக்கு முறையே உயர்ந்த சோதனமாகின்றன. அத்தோஷங்களுக்கு முறையே எண்ணெய், நெய்,

---

1. வஸ்தி - ஏதேனுமொரு கருவியினால் ஆசனத்துவாரத்தின் வழியாக தைலம் முதலியவற்றைச் செலுத்தி, குடலைக் கழுவுவதற்கான முயற்சியானது வஸ்தி எனப்படும்.
2. விரேசனம் - மலத்தை வெளியில் கொண்டு வரும் மருந்து.
3. வமனம் - வாந்தி.

தேன் என்பவை தணிப்பவை ஆகின்றன. அறிவு, தைரியம், ஆன்ம ஞானம் என்பவை மனத்திலுள்ள நோய்களுக்கு உயர்ந்த மருந்துகளாகும்.

இனி இந்நூலிலுள்ள அத்யாயங்களைப் பற்றிச் சுருக்க மாகக் கூறப்படுகிறது. *(47—49)*

19. அத்தியாய சங்கிரகம்

1. ஸூத்திரஸ்தானத்திலுள்ள அத்தியாயங்களின் பெயர்கள் :

1. ஆயுஷ்காமீயம் *2.* சிஷ்யோப நயநீயம் *3.* தினசர்யா *4.* ருதுசர்யா *5.* வ்யாத்யஸம்பவநீயம் *6.* த்ரவத்ரவ்ய விஞ் ஞாநீயம் *7.* அந்நஸ்வரூப விஞ்ஞாநீயம் *8.* அந்நஸம்ரக்ஷணீயம் *9.* விருத்தாந்ந விஞ்ஞாநீயம் *10.* அந்நபாநவிதி, *11.* மாத்ராசி தீயம் *12.* விவிதௌஷத விஞ்ஞாநீயம் *13.* அக்ர்யஸங்க்ரஹம் *14.* சோதநாதி கணஸங்க்ரஹம் *15.* மஹாகஷாய ஸங்க்ரஹம் *16.* விவிதகணஸங்க்ரஹம் *17.* த்ரவ்யாதி விஞ்ஞாநீயம் *18.* ரஸபேதீயம் *19.* தோஷாதி விஞ்ஞாநீயம் *20.* தோஷபேதீயம் *21.* தோஷோபக்ரமணீயம் *22.* ரோகபேதீயம் *23.* பேஷஜாவ சரணீயம் *24.* த்விவிதோபக்ரமணீயம் *25.* ஸ்நேஹ விதி *26.* ஸ்வேத விதி *27.* வமனவிரேசன விதி *28.* வஸ்தி விதி *29.* நாவன விதி *30.* தூமபான விதி *31.* கண்டூஷாதி விதி *32* ஆஸ்சோதந விதி *33.* தர்ப்பணபுடபாக விதி *34.* யந்த்ர விதி *35.* ஜலௌகா விதி *36.* ஸிராவ்யத விதி *37.* சல்யாஹரணீய விதி *38.* சஸ்த்ரகர்ம விதி *39.* க்ஷாரகர்ம விதி *40.* அக்நிகர்ம விதி இந்த நாற்பது அத்தியாயங்களும் ஸூத்ரஸ்தானத்தில் உள்ளன. *(50—53½)*

2. சாரீரஸ்தானத்தின் அத்தியாயங்கள் :

1. புத்ரகாமீயம் *2.* கர்ப்பாவக்ராந்தி *3.* கர்ப்போப சரணீயம் *4.* கர்ப்பவ்யாபத் *5.* அங்கவிபாகம் *6.* ஸிராவிபாகம் *7.* மர்மவிபாகம் *8.* ப்ரக்ருதிபேதீயம் *9.* விக்ருதாங்க விஞ்ஞா நீயம் *10.* விக்ருதேஹாவிஞ்ஞாநீயம் *11.* விக்ருதவ்யாதி விஞ்ஞா நீயம் *12.* தூதாதி விஞ்ஞாநீயம் இவை சாரீர ஸ்தானத்தில் பன்னிரண்டு அத்தியாயங்கள். *(54—55)*

3. நிதாநஸ்தானத்தின் அத்தியாயங்கள் :

1. ஸர்வரோகநிதாநம் *2.* ஜ்வரநிதாநம் *3.* ரக்த-பித்த-காஸ நிதாநம் *4.* ச்வாஸஹித்மாநிதாநம். *5.* ராஜயக்ஷ்மா

நிதாநம் 6. மதாத்யயாதி நிதாநம் 7. அர்சோநிதாநம் 8.அதிஸார க்ரஹணீ நிதாநம் 9. மூத்ராகாத நிதாநம் 10. ப்ரமேஹ நிதாநம் 11. வித்ரதி-வ்ருத்தி-குல்மநிதாநம் 12. உதர நிதாநம் 13. பாண்டு-காமலா-சோப-விஸர்ப்ப நிதாநம் 14. குஷ்ட்ட க்ருமி நிதாநம் 15. வாத-வியாதி-நிதாநம் 16. வாதசோணித நிதாநம் என நிதாந ஸ்தானத்தில் 16. அத்தியாயங்கள். (56— 57)

4. சிகித்ஸாஸ்தானத்தின் அத்தியாயங்கள் :

1. ஜ்வர சிகித்ஸா 2. ஜீர்ணஜ்வர சிகித்ஸா 3. ரத்த பித்த சிகித்ஸா 4. காஸசிகித்ஸா 5. க்ஷதக்ஷய காஸசிகித்ஸா 6. ச்வாஸ ஹித்ம சிகித்ஸா 7. ராஜயக்ஷ்ம சிகித்ஸா 8. சர்தி-ஹ்ருத்ரோக-த்ருஷ்ணா சிகித்ஸா 9. மதாத்யயாதி சிகித்ஸா 10. அர்சஸ்சிகித்ஸா 11. அதிஸார சிகித்ஸா 12. க்ரஹணீ சிகித்ஸா 13. மூத்ராகாத சிகித்ஸா 14. ப்ரமேஹ சிசித்ஸா 15. வித்ரதிவிருத்தி சிகித்ஸா 16. குல்ம சிகித்ஸா 17. உதர சிகித்ஸா 18. பாண்டுரோக சிகித்ஸா 19. ச்வயது சிகித்ஸா 20. விஸர்ப்ப சிகித்ஸா 21. குஷ்ட்ட சிகித்ஸா 22. ஸ்வித்ரக்ருமி சிகித்ஸா 23. வாதவ்யாதி சிகித்ஸா 24. வாதசோணித சிகித்ஸா என சிகித்ஸாஸ்தானத்தில் 24 அத்தியாயங்கள். (58— 59)

5. கல்ப ஸ்தானத்தின் அத்தியாயங்கள் :

1. வமன கல்பம் 2. விரேசன கல்பம் 3. வமநவிரேசந வ்யாபத்ஸித்தி 4.வஸ்தி கல்பம் 5. ஸித்த வஸ்தி கல்பம் 6. வஸ்தி வ்யாபத்ஸித்தி கல்பம் 7. ஸ்நேஹ வ்யாபதிகா ஸித்தி 8. பேஷஜ கல்பம் என கல்ப ஸ்தானத்தில் எட்டு அத்தியாயங்கள். (60— 61)

6. உத்தரஸ்தானத்தின் அத்தியாயங்கள்

1. பாலோபசரணீயம். 2. பாலாமயப்ரதிஷேதம் 3. பாலக்ரஹவிஞ்ஞாநம் 4. பாலக்ரஹ ப்ரதிஷேதம் 5. ஸ்நபந விதி 6. ப்ரத்யேக க்ரஹ ப்ரதிஷேதம் 7. பூத விஞ்ஞாநீயம் 8. பூத ப்ரதிஷேதம். 9. உந்மாத ப்ரதிஷேதம் 10. அபஸ்மார ப்ரதிஷேதம் 11. வர்த்மரோக விஞ்ஞாநம் 12. வர்த்ம ரோக ப்ரதிஷேதம் 13. ஸந்தி ஸிதாஸிதரோக விஞ்ஞாநம். 14 ஸந்தி ஸிதாஸிதரோக ப்ரதிஷேதம் 15. த்ருஷ்டி ரோக விஞ்ஞானம் 16. திமிர ப்ரதிஷேதம் 17 லிங்க நாசப்ரதிஷேதம் 18. ஸர்வ கதாக்ஷிரோக விஞ்ஞாநம் 19. அபிஷ்யந்த ப்ரதிஷேதம் 20 அக்ஷிபாகபில்ல ப்ரதிஷேதம் 21. கர்ண ரோக விஞ்ஞாநம் 22. கர்ணரோக ப்ர திஷேதம் 23. நாஸாரோக விஞ்ஞாநம் 24. நாஸாரோக

ப்ரதிஷேதம் 25. முகரோக விஞ்ஞாநம் 26. முகரோக ப்ரதிஷேதம் 27. சிரோரோக விஞ்ஞாநம் 28. சிரோரோக ப்ரதிஷேதம் 29. வ்ரணவிபக்தி விஞ்ஞாநீயம் 30. வ்ரண விஞ்ஞாந ப்ரதிஷேதம் 31. ஸத்யோவ்ரண விஞ்ஞாநப்ரதிஷேதம் 32. பங்க விஞ்ஞாந ப்ரதிஷேதம் 33. பகந்தர விஞ்ஞாந ப்ரதிஷேதம் 34. க்ரந்த்யாதி விஞ்ஞாநீயம் 35. க்ரந்த்யாதி ப்ரதிஷேதம் 36. க்ஷுத்ர ரோக விஞ்ஞானம் 37. க்ஷுத்ர ரோக ப்ரதிஷேதம் 38. குஹ்யரோக விஞ்ஞாநம் 39. குஹ்யரோக ப்ரதிஷேதம் 40. விஷப்ரதிஷேதம் 41. ஸர்ப்பவிஷவிஞ்ஞாநம். 42. ஸர்ப்பவிஷ ப்ரதிஷேதம் 43. கீடவிஷவிஞ்ஞாந ப்ரதிஷேதம் 44. லூதாவிஷ விஞ்ஞாந ப்ரதிஷேதம் 45. ப்ரத்யேக லூதாவிஷ ப்ரதிஷேதம் 46. மூஷிக-அலர்க்க விஷ விஞ்ஞாந ப்ரதிஷேதம் 47. விஷோபத்ரவ ப்ரதிஷேதம் 48. விஷோபபோக்யம் 49. ரஸாயனம் 50. வாஜீகரணம் என இந்த 50 அத்யாயங்கள் உத்தர ஸ்தானத்தில் உள்ளன. (62—66)

இவ்வாறு 150 அத்தியாயங்கள் 6 ஸ்தானங்களில் கூறப்பட்டுள்ளன.

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் 'ஆயுஷ்காமீயம்' என்னும் முதல் அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

*சிஷ்யோபநயநீயம்

இனி ''சிஷ்யோபநயநீயம்'' என்னும் அத்தியாயத்தை விளக்குவோம். இவ்வாறே ஆத்ரேயர் முதலான முனிவர்களும் கூறியுள்ளனர். (1—2)

1. மாணவனுக்குக் கல்வி கற்கும் தகுதிகள்

ஆசானிடம் பக்தி, நற்குடி, அறிவு; மறதியின்மை, திறமை, வாய், மூக்கு, கண்கள், உடல், அழகிய நகங்களின் ஒளி இவைகள் நேராக அமைந்திருத்தல், பிரம்மசரியம், குளிர், வெப்பம், இன்பம் துன்பம் முதலான இரட்டைகளை வெல்லும் திறமை, நன்னடத்தை, உறுதிப்பாடு, ஆறு மாதங்கள் உடன் வசித்தல், சக்தி, வெட்கம், சுத்தம் ஆகியவைகளுடன் கூடிய சீடன், இந்த சாத்திரத்தின் பொருளையும் செயல் முறையையும் முழுமையாகக் கற்கத் தகுதி பெற்றவனாகிறான். (3—4)

2. கற்கத் தகாத காலம்

காலமல்லா காலம், மின்னலும், இடியும் தோன்றும் சமயம், பூகம்ப சமயம், இராகுவைக் காண்கை, கிரகண நாட்கள், பௌர்ணமி, சந்திரனில்லாத அமாவாசை தினம், எதிரில் குரு இல்லாத காலம் இந்த சமயங்களில் கற்கலாகாது. சொற்களைத் துண்டு துண்டாகப் பிரித்தோ, மிகவும் தாமதமாகவோ, ஏற்றத் தாழ்வான குரலிலோ படிக்கலாகாது. (5—6)

3. ஆசானுக்குப் பணிவிடை

குருவை விட தாழ்ந்த, மற்றும் அவர் அணிந்துள்ளதை விடக் குறைந்த, வேறுபட்ட ஆடையை அணிந்து, அரசனுக்குப் போல் ஆசானுக்கு பணிவிடை செய்தல் வேண்டும். அவர் தூங்கிய பிறகே தான் படுத்துறங்கி, அவருக்கு முன்பே விழித்தெழ வேண்டும். அவருடைய பெயரை மட்டும் தனியாகச் சொல்லலாகாது. சாதுவாக இருப்பினும் அவர் வருந்தும் வகையில் வேடிக்கை விளையாட்டுகளைச் செய்யலாகாது. ($7\frac{1}{2}$)

---

* சிஷ்யோபநயநீயம் :— எத்தகைய சீடனுக்கு ஆயுர்வேதம் கற்பிக்க வேண்டும், கற்பிப்பவர் எத்தகையவராக இருக்க வேண்டும் என்பனவற்றை விவரிக்கும் அத்தியாயம்.

4. 'மருத்துவன்' என்ற சொல்லுக்கு இலக்கணம்

வெற்றி கொள்ள முடியாதவனாய், முரட்டுத்தனமில்லாதவனாய், அமைதியாய் உண்மையே பேசி, கருணையுள்ளம்கொண்டு அழகானவனாய், பல வகையான கேள்வி ஞானம் பெற்று, காலத்தை அறிந்து, நூல்களைக் கற்று, பொருளாதார மென்னும் அர்த்த சாத்திரத்தில் அறிவு பெற்று, திக்கற்ற நோயாளிகளைத் தன் மக்களைப் போல் நினைத்து சிகிச்சை புரிபவனாய் குருவின் அனுமதியைப் பெற்ற ஒருவன் 'பிஷக்' (மருத்துவன்) என்ற சொல்லுக்கு உரியனனாவான். *(8—9½)*

5. மருத்துவம் செய்யத் தகுதியற்றவர்

சாத்திர நூற்பயிற்சி மட்டும் பெற்று, செயல் முறையில் தேர்ச்சி பெறாத மருத்துவன், போரைக் கண்ட பயங்காளியைப் போல் நோயாளியைக் கண்டவுடனே மயக்கமெய்தி விடுவான். *(10½)*

6. சாத்திரம் பயிலாமையின் தீமை

முரட்டுத் தனமாகச் சாத்திரத்தைப் புறக்கணித்து செயலில் மட்டும் ஈடுபடும் மருத்துவன் நல்லோர்களுடைய பழிக்கு இலக்காகி அரசனால் மரண தண்டனையும் பெறுகிறான்.

7. மருத்துவனுக்கு மன்னனின் ஆதரவு

நோய்க்குக் காரணம், அதன் அறிகுறிகள், அதை நீக்குதல், நோய்கள் மறுபடி தோன்றாமலிருக்க வழி செய்தல் என்ற இந்த நால்வகையான அறிவைப் பெற்றவன் மன்னரால் மதிக்கத்தக்க தலைசிறந்த மருத்துவனாகக் கருதப்படுகிறான். *(12½)*

8. சாத்திரத்தின் பெருமை

சஸ்திரம் (ஆயுதம்), சாத்திரம், தண்ணீர் என்ற இம்மூன்றும் நன்மை தீமைகளை ஏற்படுத்துவதற்காக உள்ளன. இவை தகுந்த மனிதர்களை நாடிச் செல்கின்றன. எனவே கேள்வி ஞானத்தினால் தன் அறிவைச் சுடர்விடச் செய்து கொள்ள வேண்டும்.

சாத்திரமானது இருளையகற்றும் தீவட்டி போன்றது. தரிசனமென்பது பரந்த அறிவாகும். எனவே, இவையிரண்டையும் நன்கு ஒருங்கே இணைத்து, சிகிச்சை புரிந்தால் குற்றமிருக்காது. *(13—14½)*

9. வெற்றி பெறும் மருத்துவன்

மருத்துவன் தன் தொழிலில் வெற்றி பெற கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும். அழைத்த பிறகே நல்லுடையணிந்து, சகுனங்களையும் கண்டபின் செல்ல வேண்டும். நோயாளியைத் தவிர்த்து மற்றொன்றில் மனம் செலுத்தக்கூடாது.

அறிகுறிகளைக் கொண்டு நோய்களை நன்கு பரிசீலிக்க வேண்டும். நோயாளியைப் பற்றிய இரகசியங்களை வெளியிடக் கூடாது. சிகிச்சை செய்ய வேண்டிய காலத்தை நழுவ விடாமல், அதே சமயம் அவசரப்படாமல் சிகிச்சை செய்ய வேண்டும். (15—17½)

10. பெண்களிடம் நடந்து கொள்ளும் முறை

கணவனுடைய ஆதரவை இழந்த பெண்களிடமிருந்து எந்தப் பொருளையும் ஏற்கக் கூடாது. அவர்களுடன் தனிமையைத் தவிர்க்க வேண்டும், பரிகாசப் பேச்சுக்களையும் பயன்படுத்தக் கூடாது. (18½)

11. அணுகத் தகுதியில்லாத மருத்துவர்

துன்புற்றவன், அரசனின் நல்ல மருத்துவர்களால் வெறுக்கப்பட்டு, அவர்களை வெறுப்பவன், பகையெண்ணம் கொண்டவன், முரடன், வருத்தம் கொண்டவன், அச்சமுள்ளவன், நன்றி கொன்றவன், மருத்துவனெனத் தன்னைத்தானே மதித்துக் கொள்பவன், மருத்துவச் சாதனங்களற்றவன், கலங்கியவன், பணிவற்றவன், அற்பாயுளுள்ளவன் என இத்தகைய குணங்களமையப்பெற்று, தொழிலை விலை கூறுகிற மருத்துவர்களை, தான் வெகுநாள் பிழைத்திருக்க விரும்பினாலும் நோயாளி அணுகலாகாது. இவ்வித மருத்துவர்கள் யமனின் முன்னோடிகளல்லவா? (19-21)

12. நான்கு பிரிவுகள் கொண்ட மருத்துவம்

மருத்துவன், மருந்துகள், பணியாள், நோயாளி என மருத்துவம் நான்கு பிரிவுகள் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒவ்வொன்றும் தனித்தனியே நான்கு பிரிவுகள் கொண்டது. (22)

13. மருத்துவன், மருந்து

திறமை, குருவிடம் சாத்திரப் பொருளைக் கற்றறிதல், செயல்முறைகளைக் கண்டறிதல், தூய்மை என இந்நான்குவிதச் சிறப்புகளைப் பெற்றவனே 'பிஷக்' அல்லது 'மருத்துவன்' என

அழைக்கப்படுகிறான். பல முறைகள், பல குணங்கள், நிறைவு, தகுதி இவைகளைக் கொண்டது மருந்து எனப்படும். (23)

14. பணியாள், நோயாளி

பணியாள் என்பவன், அன்பு, தூய்மை, திறமை, அறிவு ஆகிய நான்கு வகையான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

செல்வம், மருத்துவனுக்கு வசமாயிருத்தல், ஆகாரம், நோய் முதலிய விஷயங்களை மருத்துவனுக்கு நினைவூட்டுதல், தைரியம் என்ற நான்கு வித தகுதியுள்ளவனே நோயாளியெனச் சொல்லப்படுகிறான். (24)

15. மருத்துவனின் பெருமை

பணியாள், நோயாளி, மருந்து இம்மூன்றிலும் குறையில்லாமலிருந்தும், தகுதியில்லாத ஒரு மருத்துவனால் அவற்றை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. மருத்துவனிடம் தகுதியிருந்தால், மற்ற உதவி ஏதுமின்றி அவனால் காரியத்தை வெற்றிகரமாய் முடிக்க முடியும். எனவே மருத்துவத்திற்கு மருத்துவனே முக்கிய காரணமென்று கூறுகின்றனர். (25½)

16. நோயின் பிரிவுகள்

தீர்க்கக் கூடியது, தீர்க்க முடியாதது என நோயை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். எளிதில் தீர்க்க வல்லது, கஷ்டப்பட்டுத் தீர்க்க வல்லது என நோயை வேறு விதமாகவும் பிரிக்கலாம். [1]யாப்யமென்றும், [2]அநுபக்ரமணீயம் என்றும் தீர்க்கமுடியாதது இருவகையாகும். (26½)

17. எந்நிலையிலும் பிணியைக் குணப்படுத்தலாம்

நோயாளியின் உடல் எல்லா மருந்துகளையும் தாங்குகிற நிலையில் இருக்கலாம். இளமை, ஆண்மை, புலன்களை அடக்கும் தன்மை இவைகளும் இருக்கலாம். நோயானது மர்ம ஸ்தானத்தைச் சென்றடையாமல், அது சிறு காரணத்தால் தடைபட்டிருக்கலாம். நோயின் முன்னிலையும் அறிகுறியும் சிறிதளவேயிருந்து நோயாளிக்கு வேறு நோய் வராமலிருக்கலாம். ரசம், ரத்தம் முதலியவைகள் நோயாளியின் உடலில்

---

1. யாப்யம்— ஆகாரம், சிகிச்சை முதலியவற்றால் சிறிது காலம் தணிக்கப்படும் நோய்.
2. அநுபக்ரமணீயம்— சிகிச்சையால் தீர்க்க முடியாத நோய்.

கலக்காமல் [1]தூஷ்யம், [2]தேசம் [3]ருது [4]ப்ரகிருதி இவை சமமாக இல்லாமல், கிரகங்கள் அனுகூலமான ராசிகளில் இல்லாமல் ஒரே தோஷ மார்க்கத்திலிருந்து நோய் புதிதாகத் தோன்றலாம். இப்படிப்பட்ட நிலையிலும் சுலபமாய் சிகிச்சையினால் நோயைக் குணப்படுத்த முடியும். எளிய முறையால் குறுகிய காலத்தில் சாதிக்கக் கூடியதை [5]'சுகசாத்திய'மென்கிறோம். (27—29)

18. எளிதில் செய்ய முடியாதவை

ஆயுதங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி நீடித்துச் சிகிச்சை செய்ய வேண்டியதை 'கிருச்சிர சாத்தியம்' எனக் கூறுகிறோம். இத்தகைய நோய்களில் தீராத நோய்களின் அறிகுறிகள் காணப்படுகின்றன. அவற்றை ஆயுதம் முதலியவைகளைக் கொண்டு தீர்க்க வேண்டும். (30)

19. நீக்கக்கூடிய நோய்கள்

ஆயுளானது மிகுந்திருப்பதாலே, அநேகமாக [6]பத்தியங்களைக் கொண்டு காலம் கழிக்க வேண்டும். அற்ப காரணங்களால் அற்ப இன்பத்தைக் கொடுத்துக் கொண்டு அந்த ஆயுளானது வளர்கின்றது. இத்தனை ஆண்டுகள் வாழ வேண்டுமென்றுள்ள [7](நியதாயுளுள்ள) வனுடைய நோயானது முற்றிலும் நீங்குவதில்லை. கீழே சாய்ந்து கொண்டிருக்கும் மாடி வீட்டையோ சுவரையோ சிறிது நேரம் தாங்கி நிற்பவன்போல், அத்தகையவனைச் சிறிதளவே காப்பாற்ற முடியும். (31— 32)

20. நீக்க முடியாத நோய்கள்

போக்க முடியாத நோய்கள் விஷயத்தில் சிகிச்சையனைத்தும் வீணாகின்றது. எனவே அத்தகைய தீராத நோய்களுக்குச் சிகிச்சை செய்யாமல் காலதாமதம் செய்வதே நல்லது. இந்த தீராத நோயுள்ள நோயாளிக்குத் தலை சுற்றல், மயக்கம், எதிலும்

---

1. தூஷ்யம்—ரசம், ரத்தம், மாமிசம், கொழுப்பு வஸை, எலும்பு, சுக்ரம் இவை.
2. தேசம் —பூமியும் உடலும் தேசமெனப்படும்.
3. ருது— பருவம்.
4. ப்ரக்ருதி— இயற்கை
5. சுகசாத்தியம்— எளிதில் குணமடையத்தக்கது.
6. பத்தியம்— உணவில் கட்டுப்பாடு.
7. நியதாயுள்— அவரவர்க்கென ஏற்பட்டுள்ள ஆயுள்.

விருப்பமின்மை, மரணக் குறிகள் இவை காணப்படும். அந்த நோய் புலன்களைத் தாக்கி அழிக்கும். (33)

21. ஆராய்ந்து சிகிச்சை புரிதல்

இவ்வாறு முதலில் நோயை நன்கு ஆராய்ந்த பிறகே சிகிச்சையைத் தொடங்க வேண்டும். அவ்வாறு செய்யாதவன் தன்னலம், கல்வி, புகழ் இவைகளனைத்தும் அழியப் பெறுவான். (34½)

22. தீர்க்கத் தக்கதும் தீர்க்கத்தகாத நிலையையடைதல்

வலிவான நோயின் அறிகுறிகளுள்ள தீர்க்கக்கூடிய இரண்டு நோய்கள் கூடினால் அவை தீர்க்க முடியாதவைகளாகி விடும். தீர்க்க முடிந்தது, தீர்க்க முடியாதது இவை இரண்டும் கூடினால் தீர்க்க முடியாததாகவே ஆகிவிடும். தீர்க்க முடியாதது தீர்க்க முடிந்ததாக ஆகாது; தீர்க்க முடிந்ததோவென்றால் தீர்க்க முடியாததாக ஆகலாம். (35—36)

23. ஏழை மக்களுக்கு இலவச மருத்துவம்

பாம்பின் விடம், எரியும் தீ, இரும்பு, இவற்றைவிட மிக மிகக் கொடியது துன்புறுகின்ற ஏழை மக்களிடமிருந்து பொருளைப் பெற்றுப் பயனடைவது. (37)

24. மருத்துவனின் பிறவிப்பயன்

துன்புற்றவர்களிடம் இரக்கம் காட்டுவது சிறந்ததென அறிந்து நடக்கும் மருத்துவன், பிறவிப்பயன் பெற்று, அனைத்தையும் கடந்து, உயர்ந்த நிலையில் நிற்கிறான். (38)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் 'சிஷ்யோபநயநீயம்' என்னும் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்

* தினசரியை

இனி 'தினசரியை' என்னும் அத்தியாயத்தை விளக்குவோம். இவ்வாறே ஆத்ரேயர் முதலான மாமுனிவர் கூறினர். (1—2)

1. காலையில் விழித்தெழல்

ஆரோக்கியமுள்ளவன் தன் ஆயுளைக் காக்கும் பொருட்டு **பிராம்ம முகூர்த்தத்தில் (விடியற்காலையில்) தனது சீரண நிலையையும், அசீர்ண நிலையையும் கவனித்துக் கொண்டு, விரைவாகப் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். (3)

2. காலைக் கடனை முடித்தல்

காலையில் வடக்கு நோக்கியும், இரவில் தெற்கு நோக்கியும் அமர்ந்து, மௌனமாக இருந்து, உடலை வளைத்து, உடலில் ஆடை அணிந்து, தலையைத் துணியால் மறைத்து, உடலுக்குள் நகர்ந்து வருகின்ற மலத்தையும், சிறுநீரையும் சிறிது சிறிதாகக் கழிக்க வேண்டும். பலாத்காரமாக முயற்சி செய்து கழித்தலாகாது. (4½)

3. மல மூத்திரங்களைக் கழிக்கத் தகாத இடங்கள்

மிகவும் அசுத்தமான இடம், தெருக்கள், மண்குவியல், சாம்பல், பசுத்தொழுவம், மக்கள் முன்னிலை, பசுஞ்சாணம், பட்டணத்தருகாமை, புற்று, அழகிய இடம், உழுத நிலம், வேள்வி வளர்க்கும் இடம், மரத்தின் மேல் கீழ் பாகங்கள், பெண்கள் முன்னிலை, குரு முதலிய வணக்கத்திற்குரியவர்களின் அருகாமை, பசு, சூரியன், சந்திரன், காற்று, நெருப்பு, நீர் இவற்றின் முன்புறம், புல் பூண்டுகளால் மூடாத தரை ஆகிய இடங்களில் மல ஜலங்களைக் கழிக்கலாகாது. பயத்திலும் சக்தியற்ற நிலையிலும் இக்கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. (5—6½)

---

* தினசரியை—நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகள்.

** பிராம்ம முகூர்த்தம் என்பது பொதுவாக விடியற்காலை மணி 4— 5-க்கு இடையிலான காலம்.

4. வேகமுள்ளபோது மற்ற காரியங்களைத் தவிர்க்க வேண்டும்

மல மூத்திரங்களை வேகமாகக் கழிக்க வேண்டிய நிலை வரும் பொழுது மற்ற காரியங்களைத் தவிர்க்க வேண்டும். வெல்லத் தக்க நோயை அகற்ற முயலாமல் வேறு காரியங்களில் இறங்கக் கூடாது. (7)

5. கால் கழுவும் முறை

கல், மரத்துண்டு முதலிய உறுத்தும் பொருள் கலக்காத, தகுந்த மண்ணுருண்டையால் ஆசனவாயைத் துடைத்து, பாத்திரத்தினாலோ, கையாலோ தண்ணீரையும் மண்ணையும் எடுத்து தண்ணீர்த்துளி தன்மேலே படாமல் கழுவ வேண்டும். மலப் பூச்சும், துர்நாற்றமும் நீங்கும் வரை சுத்தம் செய்ய வேண்டும். ($8\frac{1}{2}$)

6. [1]ஆசமனம் செய்யத் தகுந்த காலங்கள்

உடலிலுள்ள [2]தாதுக்களைத் தொட்ட பிறகும், மல ஜலங்களைக் கழித்த பிறகும், கண்ணீர் [3]வஸை இவற்றைத் தொட்ட பிறகும், தலைமயிர், நகங்கள் இவை உதிர்ந்தபொழுதும், குளித்த பிறகும், சாப்பிடுவதற்கு முன்பும், பின்பும், தூங்கி எழுந்த பிறகும், தும்மல் ஏற்பட்ட பிறகும், பூசைக்கு முன்பும், வழி நடந்த பிறகும், கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ உட்கார்ந்து கைகளை இரண்டு முழங்கால்களுக்கு வெளியில் வைக்காமல் (உள்ளடக்கி வைத்து) வேறொன்றையும் பார்க்காமல், மௌனமாக, மேல் துணியை (உத்தரீயம்) அணிந்து ஆசமனம் செய்ய வேண்டும். அதற்காக இருக்கும் உள்ளங்கையிலுள்ள நீர், கட்டை விரலுக்கு உள்ளடங்கி மேலே செல்லாமல் இருத்தல் வேண்டும். காய்ச்சப்படாத, துர்நாற்றம், நுரை, கொப்புளம், உவர்ப்பு இல்லாத சுவையான குளிர்ந்த நீரைப் பிறர் கையிலிருந்து வாங்காமல், தானாக எடுத்து ஆசமனம் செய்ய வேண்டும். செய்யும் பொழுது ஒலி எழுப்பாமல் கைகால்களைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதிலேயும் இரு கைகளைச் சுத்தம் செய்வதிலேயும் கவனம் செலுத்த வேண்டும். ($9-12\frac{1}{2}$)

7. பல் துலக்கும் முறை

ஆல், வேங்கை, எருக்கு, கருங்காலி, புங்கு (புங்கன்) அலரி, ஆச்சாமரம், அரிமேதம் (கருவேலம்), நாயுருவி, ஜாதிப்பூச்செடி,

---

1. ஆசமனம்—உள்ளங்கையில் தண்ணீரை ஏந்தி, மந்திரம் சொல்லி மும்முறை பருகுவது
2. தாதுக்கள்—இரத்தம் முதலியவை
3. வஸை—மாமிசத்தின் மீதுள்ள உவர் நீர்

மருதமரம் இவைகளின் குச்சிகளையும், கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு சுவையுள்ள இத்தகைய செடிகளின் வேர்களையும் பயன்படுத்தலாம். நுனியில் நன்கு இழைத்த, நேரான, முண்டுகள் இல்லாத, நல்ல நிலத்தில் தோன்றிய, சுண்டு விரலின் நுனியளவு பருமனுள்ள, முண்டுகளில்லாத 12 அங்குலமுள்ள குச்சியைக் கொண்டு காலையிலும், புசித்த பிறகும் மௌனமாகப் பல் துலக்க வேண்டும். பிறகு [1]த்ரிவர்க்கம் என்னும் மூன்று வகையான மூவகைப் பொருள்களின் தூள்களைத் தேனுடன் கலந்து பற்களின் மீது பல்லீறுகளைப் பாதிக்காமல் துலக்க வேண்டும். *(13—16½)*

8. நாக்கை வழித்தல்

பல் விளக்கிய பிறகு நாக்கு வழிக்கும் கருவியால் நாக்குக்குத் துன்பமிழைக்காமல் வழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால், வாயிலுள்ள அழுக்கு நீங்குகிறது. நாக்கிலும் பல்லிலுமுள்ள அழுக்குகள் அகன்று விடுகின்றன. நாக்கில் ருசி, மலர்ச்சி, லேசான தன்மை இவை ஏற்படுகின்றன. *(17—18)*

9. பல் துலக்கத் தகுதி

அசிரணம், வாந்தி, சுவாசம், காசம், சுரம், முகப்பாரிசுவ வாயு என்னும் வாதநோய், நாவறட்சி, வாய்ப்புண் என்னும் நோய்களுள்ளவர்களும், மற்றும், இதயம், கண்கள், தலை, காது இவற்றில் நோயுள்ளவர்களும் பல் துலக்கக் கூடாது. *(19)*

10. பல் துலக்கத் தகாத குச்சிகள்

நருவிலி, வேம்பு, தான்றிமரம், கருங்காலி, அரச மரம், வில்வம், அசோகம், நொச்சில், முருங்கை. மஞ்சாற்று, காட்டாத்தி, கொன்னை, வன்னிமரம், உவகை, பிப்பலம், இலுப்பை, குக்குலு, தேவதாரு, புளிப்பு ரசமுள்ள மரங்கள், வெள்ளை இலவம், கருப்பு இலவம், கவல், இனிப்பு, புளிப்பு உவர்ப்புச் சுவை வகைகள், உலர்ந்தது, துளையுள்ளது, துர்நாற்றம், பிசுக்குள்ளது இவற்றால் பல் துலக்கலாகாது. *(20—21½)*

1, த்ரிவர்க த்ரிதயம் மூன்று வகையான மூவகைப் பொருள்கள் :

1. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்(த்ரிபலா)
2. சுக்கு, மிளகு, திப்பிலி (த்ரிகடு)
3. லவங்கம், லவங்கப்பட்டை, ஏலரிசி (த்ரிஜாதகம்)

11. தவிர்க்க வேண்டிய மரம்

பலாச மரத்தினாலான இருக்கை, பற்குச்சி, காலணி இவைகளைப் பயன்படுத்தக் கூடாது. (22)

12. பல் துலக்கும்போது சில வழிகள்

பல் துலக்கும்போது கீழ்ப் பல் வரிசையை முதலில் துலக்க வேண்டும். பிறகு தினமும் காலையில் வாயில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு, கண்களை நனைக்க வேண்டும். வெயிற்காலத்திலும் இலையுதிர் காலத்திலும் குளிர்ந்த நீரைத்தான் கண்களை நனைக்கப் பயன்படுத்த வேண்டும். (23)

13. மங்கலச் செய்திகள்

பிறகு தேவர்களையும். முதியோர்களையும் வணங்கி, நன்மையளிக்கவல்ல *''மங்களாஷ்டசதம்'' என்ற துதியைக் காதால் கேட்டுக் கொண்டே தங்கப் பாத்திரத்தில் ஏந்திய நெய்யில் தன் முகத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். (24)

14. கண்களுக்கு மை தீட்டல்

பிறகு [1]ஸௌவீரமென்னும் கண்மையை நாள்தோறும் கண்களுக்குத் திட்ட வேண்டும். அது கண்களுக்கு இதமானது. அதனால், அழகு, நுட்பமான பார்வை, கருப்பு, வெளுப்பு, சிவப்பு என்னும் மூவர்ணங்களும் விளக்கமாயமையும். இரப்பை மயிர்கள் அழகாகவும் உறுதியாகவும் ஆகின்றது. கண்களுக்கு முக்கியமாகக் கபத்தால் தீங்கு ஏற்படும்பொழுது அதைப் போக்க வாரம் ஒரு முறை [2]'ரஸாஞ்சனம்' பூசவேண்டும். (25—26½)

15. மூக்கில் எண்ணெய் விடுதல்

பிறகு [3]அணுதைலத்தை [4]நஸ்யமாக மூக்கில் செலுத்த வேண்டும். பிறகு வாய்க் கொப்பளிக்கவும். அதனால், பருத்த தெளிவான உயர்ந்த முகம், விரிந்த மார்பு, தோள், நீண்ட கழுத்து,

---

மங்களாஷ்டசதம்
*இந்நூலில் சாரீரஸ்தானம் 12-ஆம் அத்தியாயத்தில் காண்க.

1. ஸௌவீரம்—ஒரு வகை கண் மையின் பெயர்
2. ரஸாஞ்சனம்—ஒரு வகை கண் மையின் பெயர்
3. அணு தைலம்—துளித் துளியாக மூக்கில் விடும் எண்ணெய்.
4. நஸ்யம்—மூக்குக்குள் செலுத்தும் பொருள்

வாயில் நறுமணம், குரலில் இனிமை, புலன்களில் தூய்மை, சுருக்கமற்ற முகம், நரைக்காத மயிர் முதலியவற்றைப் பெறலாம். வங்கு ஏற்படாது.

எண்ணெயை மூக்கில் செலுத்தி அதைக் கொண்டு வாய் கொப்பளிப்பதால் உதடு வெடித்து கடினமாதல், முகவறட்சி, பல்வலி, குரல் தடைபடுதல் போன்றவைகளும் அகலுகின்றன.

கருங்காலி, பாலுள்ள மரம், கருவேலம் இவற்றின் கஷாயத்தினால் வாய் கொப்பளித்தால், வாயில் அருவருப்பு, ருசியின்மை, அழுக்கு, துர்நாற்றம், நீர் வடிதல் இவைகளெல்லாம் நீங்கும். வெத வெதப்பான ஜலத்தினால் வாய் கொப்பளித்தால் வாய் லேசாகிவிடும். (27-31)

16. புகை பிடித்தல்

[1]பிராயோகிகம் என்ற வகையைச் சேர்ந்த புகை பிடித்தலைச் செய்து, சந்தனம், பூமாலை முதலானவைற்றை அணிவதால் கழுத்துக்கு மேலுள்ள உறுப்புகளில் வாத கப நோய்கள் தோன்றுவதில்லை. கண்களில் மை தீட்டுவதால் ஏற்படும் வாத கப நோய்களை நஸ்யத்தால் நீக்கலாம், நஸ்யத்தால் ஏற்படும் வாத கப நோய்களை வாய்க் கொப்பளித்தலால் அகற்றலாம். வாய்க் கொப்பளித்தலால் தோன்றும் வாத கப நோய்கள் புகை பிடித்தலால் நீங்கும்.

சந்தனம், மாலை முதலானவற்றைப் பயன்படுத்தினால் ஏழைமை அகன்று மனத்தெளிவு உண்டாகும். சந்தனம், மாலை முதலியவை ஆண்மையை வளர்க்கும். தீமையை அகற்றும்; மனதைத் தெளிவாக்கும். (32—33)

17. அணியத்தகாதவை

கந்தல் ஆடை, அழுக்குத் துணி, அதிக சிவப்புத் துணி, இவற்றை அணியலாகாது. நீண்ட மாலையை, எல்லோரும் அறியும்படி அணியலாகாது. தாமரை மலரைத் தவிர மற்ற சிவந்த பூக்கள், மற்றவர் அணிந்த துணி, பூ, காலணி இவற்றையும் அணியாதிருத்தல் நலம். (34—35)

18. தாம்பூலம் போட்டுக் கொள்ளுதல்

உணவில் சுவை, தெளிவு, நறுமணம் இவற்றை விரும்பினால், ஜாதிக்காய், லவங்கம், பச்சைக் கற்பூரம், ஜாதிப்பூ,

---

1. பிராயோகிகம்—நோயற்ற காலத்தில் பயன்படுத்தப் படுவது.

[1]கடுகம் இவைகளுடன் இனிய வெற்றிலைத் துளிர்களைப் பாக்குடன் சேர்த்து வாயில் போட்டுக் கொள்ள வேண்டும்.

ரத்த பித்த நோய், மார்புக்குள் அடிபட்டவன், ரஸம், உடல் இளைப்பு, வறட்சி, கண்ணோய், விஷம், மூர்ச்சை, மதம் இவற்றிற்குள்ளானவர்கள், சோகை நோயுள்ளவர்கள் தாம்பூலத்தைப் பயன்படுத்தக் கூடாது. தூங்கியெழுந்தவுடன், உண்ட பிறகு, குளித்தவுடன், வாந்தியெடுத்தவுடன் தாம்பூலத்தைப் பயன்படுத்தினால் நன்மையுண்டாகும்.

இரண்டு வெற்றிலை, ஒரு பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து மெல்லுதல் நன்று. *(36—38½)*

19. பொருளீட்டல்

எழுச்சிபெற்ற பொருளையீட்டும் காரியங்களில் ஈடுபட வேண்டும். ஏனென்றால், நீண்ட ஆயுளிருப்பினும் பொருட் சாதனமில்லாவிடில் அது வெறுக்கத்தக்கதாகும். பொருளை விரும்புகிறவன், பயிர்த்தொழில், வாணிபம், பசுக்களைக்காத்தல், குணமுள்ள அரசனைச் சார்ந்திருத்தல் முதலியவற்றை தொழிலாகக் கொண்டிருக்க வேண்டும். பொருளை விரும்புகிறவன் இம்மை மறுமைகளைப் பாதிக்காத வகையில் செயல் புரிய வேண்டும். மலமூத்திர வேகங்களைத் தவிர்த்தபின், வழி நடை, தூக்கம், ஆகாரம், சபை, பெண் முதலிய தொடர்பான செயல்களில் ஈடுபடலாம். *(39—41)*

20. வெளியில் செல்லும் முறை

இரத்தினம் , பூசிக்கத் தக்கவர், நெய், மங்கலப் பொருள்கள் இவற்றைத் தன் கைகளால் தொட்டுப் பூசித்து, பின் தனது தொழிலைச் செய்ய வெளியில் கிளம்ப வேண்டும். குடை, செருப்புகளுடன், வெளியில் செல்லும்போது இரு கையளவு மட்டுமே பார்வையைச் செலுத்திச் செல்ல வேண்டும்.

இரவில் முக்கியமான வேலையிலிருக்கும்போது, கையில் தடி, தலையில் தலைப்பாகையுடனும், மற்றொருவர் உதவியுடனும் செல்ல வேண்டும். பகலில் தலையை மறைத்தவாறு செல்லலாகாது. *(42—43)*

---

1. கடுகம்—சுக்கு, மிளகு, திப்பிலி இவை மூன்றும் கடுகம் எனப்படும்.

21. காலால் தாண்டிச் செல்லத் தகாதவை

கோயில், பூசிக்கத் தக்கவர் [1]துவஜஸ்தம்பம், சாம்பல், உமி, அமங்கலப் பொருள்கள், கல்பொடி, பலி, ஸ்நானம் செய்த இடம் இவற்றைக் கால்களால் தாண்டக் கூடாது. (44)

22. வெளியில் செல்லும் முறை

நடுப்பகல், காலை, மாலை, சந்தி வேளைகள், இரவு, நடுநிசி, நடமாட்டமில்லாத நாற்சந்தி இவ்விடங்களில் செல்லுவதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல் இரவு வேளைகளில் மரம், கோயில், நாற்சந்தி இவைகளில் தங்குவதைத் தவிர்க்க வேண்டும். (45)

23. செல்லத் தகாத இடங்கள்

கொலை நடக்கும் காடு, சூன்னியமான வீடு, இடுகாடு இவற்றில் பகலிலும் செல்லக் கூடாது (45½)

24. செய்யத் தகாதவை

சவத்தை நோக்கி [2]ஹுங்காரம் செய்ய வேண்டாம். வணக்கத்திற்குரியவர், உயர்ந்த பொருட்கள், மங்கலப் பொருட்கள் இவைகளை அப்பிரதக்ஷிணமாகச் (இடமாகச்) செல்லக்கூடாது. மற்றவைகளை வலம் வரக்கூடாது. நாற்சந்தி, புகழ்மிக்க மரங்கள் இவைகளைக் கண்டவுடன் வணங்கவேண்டும்.

மதம் பிடித்தவன், நோயாளி, தாழ்ந்தவன், தன்னடக்கமற்றவன், பசி தாகமுள்ளவன், இவர்களோடு சேர்ந்து செல்வதும், வாலறுபட்ட, ஒற்றைக் கண்ணுள்ள எருது, குதிரை, இவற்றின் மீது அமர்ந்து செல்வதும் நல்லதன்று.

விடியற்காலம், மாலை, இருண்ட நேரம், கதிரவன்ஆகாயத்தின் உச்சியையடைந்த நடுப்பகல், அண்மையில் தண்ணீர் கிடைக்காத இடம் ஆகிய இடங்களில் வேகமாகவோ, தொடர்ந்தோ பிரயாணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

பகைவன், அறிமுகமில்லாதவன், அறமற்றவன் இவர்களுடன் தனியாகச் செல்ல வேண்டாம். வழியில் செல்லும்போது, நோயாளி, முதியவர், பெண், சுமை சுமப்பவன், வண்டி, அந்தணர் இவர்கள் வந்தால் வழிவிட வேண்டும். (46—49)

---

(1) துவஜஸ்தம்பம்—கொடிக்கம்பம்

(2) ஹுங்காரம்— கோபத்தில் எழும் ஹும்' என்னும் ஒலி

25. தக்கவை, தகாதவை

தனது வாகனங்களான குதிரை முதலானவற்றிற்கு ஸ்நானம், பானம் போஜனம் இவற்றைச் செய்வித்த பிறகே தான் செய்ய வேண்டும். முதலில் இவற்றைத் தான் செய்யக் கூடாது. கைகளால் ஆற்றைத் தாண்டலாகாது, பெருந்தீயை எதிர்நோக்கிச் செல்வது சிறந்ததன்று.

மேடு பள்ளமுள்ள மலைமீதும், சந்தேகத்திற்கிடமான ஓடத்தின் மீதும், மரத்தின் மீதும் ஏறலாகாது. கல்லாலோ, மற்றொரு பழத்தாலோ மரத்திலுள்ள பழத்தை அடித்து வீழ்த்துவது விவேகமன்று.

பிறர் தடுக்கும்போது மாற்றான் வீட்டில் நுழைவது தகாத செயல். குறுக்கு வழி செல்வதும் சிறந்ததன்று. உட்கார இடம் கொடாதபோது, தானாக ஆசனத்தில் அமருவதும், தூங்குபவரை எழுப்புவதும் சிறந்ததன்று. கைகளால் வாத்தியங்களை இசைத்துக் காட்டுவது, வாய்க்கு வந்தபடி பேசுவது, கை வாக்கு, கால், கண், பாலுறுப்பு, வயிறு ஆகிய புலன்களை மனம் போனபடி செலுத்தி ஆசையைத் தீர்த்துக் கொள்வது நன்றன்று. பிற பெண்டிரைப் பார்த்தல், தகாத முறையில் உறவு கொள்வது போன்ற காரியங்களைச் செய்வது நன்றன்று.

பட்சத்திற்கு (15 நாட்களுக்கு) மூன்று முறை தலைமுடி, தாடி, நகங்கள், உரோமங்கள் இவற்றைத் தன் கை நகங்களைப் பயன்படுத்தாமல் பிறரைக்கொண்டு கத்தரித்துக் கொண்ட பிறகு நீராட வேண்டும். *(50—54½)*

26. எண்ணெய் குளியல் முறை

புசிக்கவும், குடிக்கவும் விருப்பமுள்ளவன், வாதத்தைத் தணிக்கவல்ல, நறுமணம் கொண்ட, பருவகாலத்துக்கேற்ற, சுகத்தை பயக்கவல்ல, தைலங்களால் தலை ஸ்நானம் செய்ய வேண்டும். எண்ணெய் குளியல், வாதநோயை அகற்றுகிறது. உடல் வலிவு, தூக்கம், உடற்கட்டு, உடற்பருமன் இவைகளையும் அளிக்கிறது. சூடு, காயம், வாட்டம், ஓய்ச்சல் முதுமை இவற்றையும் போக்குகிறது.

தேர்ச்சக்கரத்தின் குடத்திற்கு எண்ணெய் பயன் அளிப்பது போல உடலுக்கும் எண்ணெய் நல்ல பயனை அளிக்கிறது. உடலில் உணர்ச்சி ஏற்படுவதற்கு வாயுவே காரணம். அவ்வுணர்ச்சி என்பது தோலைச் சார்ந்தது. எண்ணெய் குளியல் குறிப்பாக தோலுக்கு நன்மை பயக்குமாதலால் அதைச் செய்ய வேண்டும்

முக்கியமாக, தலை, காது, பாதங்களில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளவேண்டும்.

தலையில் எண்ணெய் தேய்த்துக் கொள்வதால், தலை முடிக்கு நன்மை உண்டாவதோடு, கபாலம் என்னும் மண்டை யோடும் புலன்களும் வலுவு பெறுகின்றன. காதில் எண்ணெயை செலுத்துவதால், தாடையில் வலி, 'மன்யாஸ்தம்பம்' என்னும் கழுத்தைத் திருப்ப முடியாத வலி, தலைநோய், காதுவலி, இவைகள் நீங்குகின்றன.

பாதங்களில் செய்யும் எண்ணெய்ப் பூச்சினால், பாதங் களில் உறுதியையும், தூக்கம், தெளிவான கண்பார்வையையும் பெறலாம். பாதத்தில் உணர்ச்சியின்மை, வலி மரத்துப்போதல், சுருக்கம், வெடிப்பு போன்ற துன்பங்கள் அகலுகின்றன.

கபம், வாந்தி, பேதி இவைகளால் துன்புறுகிறவர்களுக்கும் அசிரணரோகமுள்ளவர்களுக்கும் எண்ணெய்க் குளியல் தவிர்க்க வேண்டும். *(55—61)*

27. உடற் பயிற்சியும் அதன் பயனும்

உடலுக்குக் களைப்பை ஏற்படுத்தும் செயலை வியாயாமம் அல்லது 'உடற்பயிற்சி' எனக் கூறுவர். உடல் இலேசாயிருத்தல் வேலை செய்யும் திறன் [1]சடராக்னியின் வளர்ச்சி, உடற் கொழுப்பு நீங்குதல், உடலிலுள்ள உறுப்புகளுக்கு உறுதியை அளிப்பது போன்ற நன்மைகள் உடற் பயிற்சியால் உண்டா கின்றன.

வாத பித்த நோயாளி, சிறுவன், கிழவன், அசிரண நோயுள்ளவன் இவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடலாகாது.

பலசாலிகளும், மிகுதியாக உணவு உட்கொள்கிறவர்களும், குளிர்காலத்திலும், வசந்த ருதுவிலும் (சித்திரை, வைகாசி மாதங்கள்) பாதி அளவே செய்ய வேண்டும். மற்ற பருவகாலங் களில் சிறிதளவு பயிற்சியே போதுமானது. *(62—64)*

28. உடற்பயிற்சிக்குப் பிறகு செய்ய வேண்டியவை

உடற் பயிற்சி செய்தபின், உடல் முழுவதையும் பிடித்து விடச் சொல்ல வேண்டும்.

---

1. சடராக்னி—சடரம் என்பது வயிறு. அவ்வயிற்றி லுள்ள தீ போன்ற சூடான ஒரு வித சக்தியே சடராக்னி எனப்படும்.

அதிகமாக உடற்பயிற்சி செய்வதால், தாகம், க்ஷயம், [1]ப்ரதமகம், ரத்த பித்தம், உடல் ஓய்ச்சல், வாட்டம், காஸம், சுரம், வாந்தி போன்ற தீமைகள் உண்டாகின்றன. (65)

29. அளவுக்கு மீறிய உடற் பயிற்சியால் தீங்கு

உடற்பயிற்சி, கண் விழித்தல், வழி நடத்தல், பெண்ணுடன் உடலுறவு, சிரிப்பு, பேச்சு முதலான சாகஸங்களை அளவுக்கு அதிகமாகச் செய்பவன், அதிக பளுவான யானையை இழுக்கச் செல்லும் சிங்கம் தானே மடிவதுபோல் மடிந்து விடுவான். (66)

30. உடற் பூச்சினால் ஏற்படும் நன்மை

உடற்பூச்சு கபத்தை அகற்றும், உடற் கொழுப்பைக் கரைக்கும், உடலுறுப்புகளை உறுதிப்படுத்தும், சருமத்தை மிகவும் தெளிவடையச் செய்யும். (67)

31. நீராடுதலின் பயன்

நீராடுதல் என்பது சடராக்னியை வளர்க்கும், ஆண்மையை அதிகப்படுத்தும், ஆயுளை அதிகமாக்கும், உடலொளியையும் பலத்தையும் தரும், தினவு, அழுக்கு, களைப்பு, வேர்வை, சோம்பல், நாவறட்சி, உடல் எரிச்சல் இவற்றைப் போக்கும். தலைக்குக் கீழ்ப்பகுதியை வென்னீரில் நனைத்து நீராடுவதால் பலம் அதிகரிக்கும். தலைக்குச் செய்யும் வெந்நீர் குளியல் தலை முடி, கண்கள் இவற்றின் வலுவை அழித்து விடும். (68-69½)

32. நீராடும்போது செய்யத் தகாதவை

தலையை நனைக்காமல் நீராடுவதோ சிறிதளவே உள்ள குளிர்ந்த நீரில் நீராடுவதோ நல்லதன்று. ஸ்நான-ஜலத்தில் இறங்குவதும், தூங்குவதும், ஆடையின்றி நீராடுவதும் செய்யத் தகாதவை. [2]ஐந்து கையளவு மண்ணை (ஐந்து பிண்டங்கள்) வெளியில் எடுத்து இடாமல் பிறர் நீரில் குளிக்கக்கூடாது. (70—71)

33. நீராடும்போது தவிர்க்க வேண்டியவை

தண்ணீரில் தன் உடல் நிழலைப் பார்த்தல், கரையிலிருந்து நீர் நிலையை நோக்குதல், கைகால்களால் தண்ணீரை அடித்தல்,

---

1. ப்ரதமகம்— இது ஒரு வகை சுவாசம்.

2. ஐந்து பிண்டங்கள் : நாம் குளிக்கும் குளம் முதலான நீர்நிலைகளை அமைத்தவரை நினைத்துப் போற்றி அவருக்காக அளிக்கும் மண் உருண்டைகள் ஐந்து. அல்லது ஐந்து முறை இரு கையாலும் நீரை எடுத்து அளித்தல்.

நீராடிய பின் உடலைக் கையால் துடைத்தல், தலை மயிரை ஸ்நானம் செய்த பின் உதறுதல், ஈரத் துணிகளையும் தலைப் பாகையையும் அணிதல், குளிக்கும்போது உடுத்திய துணியை ஸ்நானம் செய்த பின் தொடுதல், ஸ்நானம் செய்த பின், எண் ணெயையும் [1]வஸையையும் தீண்டுதல் ஆகியவைகளைத் தவிர்க்க வேண்டும். படுக்கும்போதும், வெளியில் கிளம்பும்போதும், தேவ பூசை செய்யும்போதும் துணியை மாற்றிக் கொள்ள வேண்டும். [2]முகபாரிசுவ வாயு, கண், காது, வாய் நோய்கள் [3]அதிசாரம், வயிற்றில் உப்புசம் [4]பீனஸநோய், அசீர்ண நோய் உள்ளவர்களும் சாப்பாட்டிற்குப் பிறகு நீராடக் கூடாது. (72—75)

34. உண்ணும் முறை

அன்ன பானங்களுக்கென்று விதித்துள்ள முறையில் அன்ன பானங்களைப் புசித்தல் வேண்டும். ஆபத்தான காலத்தில் இஷ்டப்படி புசிக்கலாம். கிடைத்ததை மகிழ்ச்சியுடன் ஏற்று, மன மலர்ச்சியுடன், ஓமத்தீயில் தேவர்க்கென சிறிது இட்ட பிறகு தன் சக்திக்கேற்றவாறு ஏழைகளுக்கு அளித்த பின் தான் புசிக்க வேண்டும். உணவைத் தனிமையில் தண்ணீரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தனக்கு அனுகூலமான நிலையில் அமர்ந்து புசிக்க வேண்டும்.

அன்னத்தைச் சமைக்கும்போது 'இது எல்லோருக்குமே' என்று கூறிக் கொண்டே சமைக்க வேண்டும். தனக்கென்று சமைக்கலாகாது. சாக விரும்புகிறவர்கள், செத்தவர்கள், கஷ்டப் பட்டு வாழ்கிறவர்கள் ஆகியோரின் அன்னத்தைப் புசிக்கக்கூடாது. (76—78)

35. தவிர்க்க வேண்டிய உணவு

பெண்ணுக்கு அடங்கியவன், போரில் தோற்றவன் [5]அலி [6]பதிதன், கொடியவன் பாவம் செய்பவன், கணான்னம் (ஒரு கூட்டத்தினரின் அன்னம்), பகைவன், வேசி, சத்திரம், இகழப்

---

1. வஸை—மாமிசத்திலிருந்து உண்டாகும் ஒரு வகைப் பசையுள்ளத் திரவப் பொருள்.
2. முகபாரிசுவவாயு— முகம் ஒரு புறமாக இழுத்துக் கொள்ளுதல்
3. அதிசாரம்—அதிக மலக்கழிப்பு
4. பீனஸம்—மூக்கில் தொடர்ந்து சளியடைப்பு
5. அலி—நபும்சகன்
6. பதிதன்—குலக் கட்டுப்பாட்டிலிருந்து நழுவியவன்

பட்டவன், வட்டி வியாபாரி இவர்களுடைய அன்னத்தை அருந்த வேண்டாம்.

புசிக்க வேண்டிய பலகாரங்களை மடியில் வைத்துப் புசிப்பதும், இரு கைகளால் தண்ணீர் குடிப்பதும் தகாத காரியமாகும். சூரியன் மறைந்த பிறகும், எள்ளுடன் கூடிய பொருளையும் புசிக்க கூடாது. சாப்பிட்டவுடனே உடலை வருத்தி வேலை செய்ய வேண்டாம். சாத்திரத்தால் விலக்கப்பட்ட எந்தச் சுகத்தையும் நாடுவது நல்லதன்று. *(79—80)*

36. நன்னடத்தை

தனக்குத் தெரிந்த நல்லொழுக்கமுள்ளவர்களை உதவியாக வைத்துக் கொண்டு தருமம் நிறைந்த, எல்லோரும் விரும்பத் தக்க, ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களை விளக்கும் கதைகளைச் சொல்லி பகலின் நடுப்பகுதியைக் கழிக்க வேண்டும்.

மக்களாலும் அரசராலும் புறக்கணிக்கப்பட்டவர்களுடனும் நாஸ்திகர்களுடனும் சேரக்கூடாது. சண்டை செய்வதிலும், பகைமையிலும் விருப்பம் கொள்ளக் கூடாது. உயர்விலும் தாழ்விலும் தைரியத்துடன் இருக்க வேண்டும்.

சாத்திரம் தவிர மற்றவற்றில் 'போதும்' என்ற எண்ணம், ஆனால் சாத்திரத்தையே மேன்மேலும் கற்க வேண்டுமென்னும் ஆவல், எல்லாப் பிராணிகளுடனும் பொறுமையுடன் பழகுதல், தாக்ஷண்யம், திறமை, நன்கு ஆலோசித்துச் செயல்படுதல், வெட்கம், அறிவு, அதிக ஊக்கம், பகுத்துண்ணுதல் விருந்தினரிடம் அன்பு, அற்பமான ஜீவனம் செய்யாமை, கம்பீரம், அமைதி, தன்னைச் சார்ந்தவரிடம் அன்பு கொளல்,[1] பித்ருக்களுக்குப் பிண்ட தானம் செய்தல், வேள்வி வேட்டல், ஹோமம் செய்தல், தயை, நல்ல விஷயங்களை ஒப்புக் கொள்ளும் பணிவு, ஏழைகளிடம் கருணை காட்டுதல், பயந்தவர்களுக்குச் சமாதானம் சொல்வது, கோபம் கொண்டவர்களைச் சாந்தமடையச் செய்வது, தானே வந்து பேசும் குணம், நன்முகம், நன்னடத்தை, பூசிக்கத் தக்கவரைப் பூசித்தல் போன்ற நற்பண்புகள் நிறைந்தவனாய் இருக்க வேண்டும். பணம், உறவு, வயது, கல்வி, நடத்தை உள்ளவர்களை முறையே வெகுவாகப் பூசிக்க வேண்டும். *(81—86)*

---

1. பித்ருக்கள் : இறந்த முன்னோர்கள் பித்ருக்கள் எனப் படுவர். அவர்களுக்கு அன்னம், எள், நீர் போன்றவைகளை மந்திரம் கூறி அளிப்பது பிண்டதானம் எனப்படும்.

நரகமாகிய நெருப்புக்கு விறகு போலிருக்கிறவர்களான தனக்கு துரோகம் செய்தவன், மரியாதையில்லாதவன், மூடன், நல்வழியை நீங்கியிருப்பவன், இவர்களிடம் கருணை காட்ட வேண்டும். தர்மம், அர்த்தம், பிரியம், உண்மை, மிதம், நன்மை இவற்றைப் பயக்கும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். *(87—88)*

தன்னை அலட்சியப்படுத்தாதே; தோத்திரமும் செய்யாதே; தன்னைத் துன்புறுத்தாதே. தொழில், பணம், உடல்பலம், சாத்திர அறிவு இவைகளின் காரணமாகத் தாழ்ந்தவர்களை அவமதிக்காதே. மர்மஸ்தானங்களைத் தொட்டு துன்புறுத்தாதே. குரூரனாகவும் கொடியவனாகவும், மற்றவரை நிர்பந்தம் செய்பவனாகவும் இருத்தல் நன்றன்று. ஒரு பலனுக்குக் காரணத்தைப் பார்த்து பொறாமைப்படு. ஆனால் பலனைப் பார்த்து பொறாமைப்படாதே. பாபிகளிடமும் பாபத்தைச் செய்யாதே. பிறருக்குத் தண்டனை அளிக்காதே. கோபத்தால் பிறரை வீழ்த்தாதே. தண்டிக்கத் தக்கவர்களாக 'இருப்பினும் தன் மகன், சீடன் இவர்களைத் தவிர்த்து மற்றவர்களைத் தண்டிக்கலாகாது. நர்த்தனம், வாத்தியம், கீதங்கள் முதலானவற்றை அதிகமாகச் செய்யக்கூடாது. தேச காலங்களுக்கேற்ப நல்வாக்கு, ஆடை, பணிவு, கம்பீரம் இவைகளைக் கொண்டவனாக இருக்க வேண்டும்.

உடலின் கீழ்ப்பகுதியில் அணிந்துள்ள உடையினால் தொப்புளுக்கு மேலே உள்ள உடற்பகுதியைத் தொடக்கூடாது. ஆண், பெண் உடலுறவு கொண்ட பிறகு, உடனே சுத்தம் செய்து கொள்ள வேண்டும். வாயை மூடாமல், சிரிப்பு, தும்மல், ஏப்பம், கொட்டாவி விடுதல் முதலியவற்றைச் செய்யலாகாது. இரண்டு கைகளாலும் ஒரே சமயத்தில் தன் தலையைச் சொரியக் கூடாது. தலையால் பாரத்தைச் சுமக்கலாகாது. ஒரே சமயத்தில் நெருப்பையும் நீரையும் சுமக்கலாகாது. மூக்கைக் குடையக் கூடாது. பற்களைக் கடிக்கலாகாது.

பயனின்றி தரைமீது எழுதுதல், வெட்டுதல், பிளத்தல், கையால் தட்டுதல், பிசைதல் முதலியவைகளைச் செய்யலாகாது. அவசியமில்லாத போதும், அவசியமானபோதும் கூடவாய், உடல், நகம் இவைகளைத் தட்டி ஓசைபடுத்தக் கூடாது.

ஒரு பாதத்தின் மீது மற்றொரு பாதத்தை வைக்கலாகாது, சொரியக் கூடாது, கழுவவும் கூடாது. வெண்கலப் பாத்திரத்தில்

இரு பாதங்களையும் வைத்து சுத்தம் செய்யக்கூடாது. காலைப் பரப்பிக் கொண்டு உட்காரக் கூடாது. (89—97)

நகம், பாதம் போன்ற அழுக்குச் சேரக்கூடிய உடலுறுப்பு களை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நெருப்பை வாயால் ஊதாமல் வளர்த்து வழிபட வேண்டும். அக்னியிடம் தூய்மையின்றி செல்லலாகாது. காற்று வீசும் பக்கம், திறந்தவெளி, களைப்புற்ற சமயம், வேறொன்றில் மனம் சென்ற சமயம் என இவற்றில் அக்னியை வழிபடக் கூடாது. வாயால் ஊதாமல், நழுவவிடாமல், காலுக்குக் கீழே வைக்காமல் நெருப்பைக் கௌரவிக்க வேண்டும்.

அசையக் கூடிய, மிகச்சிறிய, விரும்பத்தகாத, சிறப்பற்ற பொருளையும் மல மூத்திரங்களையும் சுத்தம் செய்யாத முகம் பார்க்கும் கண்ணாடியையும் பார்க்கக்கூடாது.

சூரியன் தோன்றி மறையும் சமயம், அதிகமாகக் கொளுத் தும் சமயம், பிரதிமையில் பிரதிபலிக்கும் சமயம், கிரகணகாலம், துணியால் மறைக்கப்பட்ட சமயம் இவ்வேளைகளில் சூரியனைக் காணலாகாது. பொதுவாக மிக்க ஒளியுடனிருக்கும் எந்தப் பொருளையும் பார்க்கக் கூடாது. கோபத்துடன் கூடிய ஆசானின் முகத்தை நோக்கலாகாது.

நீர் கழிக்கின்ற நிலை, மாத விலக்கு, ஆடையில்லாத நிலை, வேறு புருஷனுடன் உடலுறவு கொண்டுள்ள சமயம் ஆகிய வேளைகளில் பெண்களைப் பார்ப்பது தவறு.

தண்ணீரருந்துதல், புசித்தல், தூக்கம், தும்மல், கொட் டாவி, தகாத படுக்கை ஆகிய நிலைகளில் தன் மனைவியைப் பார்க்கலாகாது. மனைவியுடன் ஒரே படுக்கையில் படுப்பதும், அவளுடன் சேர்ந்து புசிப்பதும் நன்றன்று.

பொறாமைப்படாமல் தன் மனைவியைக் காக்க வேண்டும். மனம் போனபடி சுதந்திரமாக நடக்கும் பெண்ணானவள் வீட்டை அழித்து விடுவாள். தூய்மையில்லாத பொழுது நக்ஷத்திரங்கள், ராகு, சந்திரன், சூரியன் இவர்களைப் பார்த்தல், பிரயாணம், படித்தல், தூக்கம் ஆகிய காரியங்களைச் செய்யக்கூடாது. கன் றுக்குப் பால் கொடுக்கும் பொழுதும், மேயும் பொழுதும் பசுவை மற்றவருக்குத் தெரிவிக்கக் கூடாது.

சூரிய சந்திர கிரகணங்கள், குறைகொள்ளி வீழ்தல், வானவில் என்பவைகளைப் பிறருக்குக் காட்ட வேண்டாம்.

தெய்வ பூஜை செய்யும்போது வேறு வேலையில் ஈடுபடக்கூடாது. மழை பொழியும்போது ஓடுவதும், பக்ஷத்தின் திதியைத் தாமே கூறுவதும் நக்ஷத்திரங்களைச் சுட்டிக் காட்டுவதும், தன்னுடைய ஜன்ம லக்னம், நக்ஷத்திரம், பணம், பலம், வீட்டிலுள்ள தவறுகள் இவைகளை வெளியிடுவதும் நல்லதல்ல. *(98—107)*

தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும், தலைவனுக்கு தன்னிடம் உள்ள பற்றின்மையையும் வெளியிடலாகாது.

எதிர்காற்று, வெயில், தூசி, பனி, கொடிய காற்று, வளைந்திருத்தல், தும்மல், ஏப்பம், இருமல், தூக்கம், புசித்தல், ஆண் பெண் உறவு, ஓசையுடன் மலம் கழித்தல், கை, புருவம், கண் இவைகளை உயர்த்திக்கொண்டு பேசுதல், கரையிலிருந்து தண்ணீரில் நிழலைப் பார்த்தல், கள் குடித்தல், பாம்பு, கோரைப்பல்லும் கொம்புமுள்ள மிருகங்கள், தாழ்ந்தவன், நாகரிகமற்றவன் முதலானவர், நிபுணன் இவர்களிடம் சேவை புரிதல், நல்லோருடன் சண்டை, சந்தி வேளைகளில் புசித்தல், பெண் சேர்க்கை, தூக்கம், கற்றல், சிந்தனை என்பவை, நோயின்மை, வாழ்க்கை, செல்வம், கல்வி இவை நிலையானவை என்று நினைத்தல், தண்ணீர்-தீ-பூசிக்கத் தக்கவர் இவர்களிடையே புகுந்து செல்லுதல், சவத்தின் புகை, மது அருந்துவதில் அதிகப்பற்று, பெண்களின் மீது நம்பிக்கை, அவர்களுக்குச் சுதந்திரமளித்தல் என்பவைகளையெல்லாம் ஒதுக்கி விட வேண்டும். *(108—112)*

வாஸ்து சாத்திரம் என்கிற கட்டிடக் கலை நூல்களில் கூறியபடி அமையாத இடத்தில், ஒரு நாள் கூட வசிக்கக் கூடாது. நோய்கள் நிரம்பி, மருத்துவர்களும் தலைவனும் இல்லாத, அறமற்றவர்கள் நிரம்பிய, ஏவல், சூனியம் முதலானவைகளுக்கு இருப்பிடமான இடத்திலும் மலைப்பகுதியிலும் தங்குவது தவறு. *(113)*

37. கடமை

அதிகமாகத் தண்ணீர், வசதி, மருந்து வகை, [1]சமித்துகள், மலர், புல், விறகு இவை இருக்குமிடத்திலும், சுபிட்சம், க்ஷேமம், அழகிய சூழ்நிலைகள் நிறைந்து, அறிஞர்கள் நிறைந்த பட்டணத்திலும் வசித்து, தேவர்கள் [2]சித்தர்கள் சாத்திரங்கள் இவற்றைக் கண்டு வெறுப்படையாதவனாய்

1. சமித்துகள்— ஓமத்தீயில் இடுகின்ற, அரசு, புரசு முதலான மரக்குச்சிகள்
2. சித்தர்கள்—புலன்களை வெற்றி கொண்டு ஆன்மாவை அறிந்தவர்கள்.

³திரிவர்கத்தைக் காத்து தகுதிக்கேற்றபடி மக்களையும் காத்து, உட்பகைவர்களை வென்று, இம்சை, களவு, தகாத இடத்திற்குச் செல்லுதல், கோள் சொல்லுதல், கடினமான பேச்சு, பொய், முன்பின் முரணாகப் பேசுதல், மனத்தால் பிறரைப் பகைத்தல், பிறர் செல்வத்தைக் களவாடும் எண்ணம், சாத்திரத்தை தவறாக அறிதல் எனப் பத்துவகையான தீயநெறிகளை விலக்கி, உடல், சொல், எண்ணம் இவைகளால் ஏற்படும் பத்து வகையான பாபங்களைச் செய்யாதிருக்க வேண்டும். *(114—117½)*

மற்றவருக்குத் தீங்கிழைத்துப் பொருளீட்டுவதை விட்டு விட வேண்டும். தரும வழியில் ஈட்டிய பணத்தைத் தானம் செய்யாமலேயே சொர்க்க-மோட்சமென்னும் பேறுகளை முயற்சியின்றியே பெற்றுவிடுகிறான். அதாவது அறமற்ற வழியில் ஈட்டிய பணத்தைத் தானம் செய்தாலும் அது எந்தப் பயனையும் அளிக்காது. *(118—119)*

மாலையில் சிறிதளவே இதமான உணவை உட்கொண்டு அமைதியான மனத்துடன் சுத்தமாக இருந்து, ஆண்டவனை நினைத்துக் கொண்டு, தனது படுக்கைக்குச் செல்ல வேண்டும். படுக்குமிடம் சுத்தமாகவும், ஜனக்கூட்டமில்லாததாகவும், தனக்கு வேண்டிய இரண்டு மூன்று பணியாட்களை மட்டும் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

தக்க தலையணையுடன், நன்கு பரப்பப்பட்டு, மேடுபள்ளமில்லாத, முழங்கால் உயரமுள்ள, மெத்தென, சுபமான படுக்கையில் படுக்க வேண்டும். கிழக்கு அல்லது தெற்கில் தலை வைத்து, பெரியோர்கள் பக்கம் கால் நீட்டாமல், இரவின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் அறத்தையே நினைத்து காலத்தைக் கழிக்க வேண்டும். *(120—122½)*

இவ்வாறு சாரமற்ற உடலினால் அறநெறியைப் பின்பற்றுவதே சாரமானதென அறிய வேண்டும். கட்டுப்பாடற்ற செயல்களைப் பின்பற்றினால் மரணதேவனின் தண்டனைக்குப் பயந்திருக்க வேண்டும். உடல்நலம், செல்வாக்கு, அறிவு, வயது இவைகளுக்கேற்ப செயல்படுபவனுக்கு ஆயுளானது சுகமாகவும் இதமாகவும் இருக்கும். மாறுபட்டவனுக்கு மாறாகவே நடக்கும். *(123—124)*

---

(3) திரிவர்கம்—அறம், பொருள், இன்பம்.

அரசன் என்பவன் எல்லா ஒளிகளுக்கும் இருப்பிடமாக விளங்குகிறான்; எனவே அவனை உள்ளத்தால் பழிக்காமல் பக்தியுடன் அவனுக்குச் சேவை செய்ய வேண்டும். (125)

அரசனுக்கு எதிரில் [1]பர்யஸ்திக நிலையிலிருத்தல், கோபம், சிரிப்பு, வாய்ச்சண்டை, காரித்துப்புதல், கொட்டாவி விடுதல், மற்றும் இயற்கைக்குப் புறம்பான செயல்கள் இவையனைத்தையும் அறவே விலக்கிவிடவேண்டும். (126)

[2]ஸத்துவம் [3]ரஜஸ் [4]தமஸ் என்னும் இவைகளின் நிலைகளை நன்கு ஆராய்ந்து தனக்கு நன்மையை வகுத்துக் கொள்ள வேண்டும். பெரியோர்கள் அறிந்த வேறு நல்லுரைகளையும் பின்பற்ற வேண்டும். (127)

இவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் நன்மை பயக்கின்ற நன்னடத்தையுடன் கூடியவன், பரந்த உயர்ந்த குணங்களுள்ளவனாகவும், தேவர்களால் காக்கப் பட்டவனாகவும், நூறாண்டுக்கு மேல் வாழ்பவனாகவும், அமைதி பெற்றவனாகவும் புண்ணியச் செயலுள்ளவனாகவும், நற்கதியில் மூழ்கியவனாகவும் அடுத்த பிறவியிலும் மகிழ்ச்சியடைவான்.

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
தினசர்யை எனும் மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. பர்யஸ்திகம்—துணி முதலானவைகளால் தன் முதுகு முழங்கால் இவைகளைச் சுற்றுதல்.
2. ஸத்துவம்—உடல், உள்ளம் இவைகளின் தூய்மை.
3. ரஜஸ்—தூய்மையும் அழுக்கும் கலந்த நிலை.
4. தமஸ்—முழுவதும் அழுக்கடைந்த இருள் நிலை.

நான்காவது அத்தியாயம்

*ருது சர்யை

இனி ''ருதுசர்யா'' என்னும் அத்தியாயத்தை விவரிப்போம். இதையே ஆத்ரேயர் முதலான முனிவர்களும் கூறினர். (1— 2)

1. காலத்தின் இலக்கணம்

தோற்றமும் மறைவும் இல்லாதது காலம். அதையே கடவுள் என்கிறோம். ஒரு ஜீவன் முற்பிறவியில் சேர்த்து வைத்த வினையையொட்டி காலமானது அவனுக்கு [1]நிமித்தகாரணமாக இருக்கின்றது. காலத்தையொட்டி கதிரவன், நட்சத்திரங்கள், கிரகங்கள், விண் முதலான பெரும்பூதங்கள் ஆகியவை அவ்வவ்வாறு மாறுதலைப் பெற்று பிறவியெடுக்கின்ற உயிரினங்களுடைய பிறப்புகளுக்கும் பருவ காலங்களுக்கும், ரஸம், வீரியம், தோஷம், உடல், உடல்பலம் இவற்றின் அழிவு வளர்ச்சி இவற்றுக்குக் காரணமாகவும் சாட்சியாகவும் காட்சி தருகின்றன. (3)

2. காலத்தின் பிரிவுகள்

காலமானது-மாத்திரை-காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம், யாமம், பகலிரவுகள், பட்சம், மாதம், ருது, அயனம், வருடம் என்று பன்னிரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. (4)

ஒரு கண் இமை துடிக்கும் காலம்	—	ஒரு மாத்திரை
15 மாத்திரைகள்	—	ஒரு காஷ்டை
30 காஷ்டைகள்	—	ஒரு கலை
20 கலைகளும் 3 காஷ்டைகளும்	—	ஒரு நாடி (நாழிகை)
2 நாடிகள்	—	ஒரு முகூர்த்தம்
சமமான இரவும் பகலும் கொண்ட தினத்தில் 3— ¾ முகூர்த்தங்கள்	—	ஒரு யாமம்
4 யாமங்கள்	—	ஒரு பகல்
4 யாமங்கள்	—	ஓர் இரவு

* ருது சர்யை—பருவ கால நிகழ்ச்சிகள்

1. நிமித்தகாரணம்—முக்கிய காரணமல்லாத பொதுக் காரணம்.

15 பகல் இரவுகள் சேர்ந்தது	—	ஒரு பட்சம்
2 பட்சங்கள் கொண்டது சுக்லபக்ஷத்தில் மாதம் முடியும்.	—	ஒரு மாதம்
மார்கழி முதல் அந்த மாதங்கள் இரண்டிரண்டாகச் சேர்ந்து முறையே	—	ஹேமந்த - சிசிர, வசந்த - கிரீஷ்ம, வர்ஷா-சரத் என்னும் 6 ருதுக்களாக (பருவங்களாக) ஆகின்றன.
அவற்றில் சிசிரம் முதலான மூன்று ருதுக்களுக்கு	—	உத்தராயணம், அல்லது ஆதானம் என்று பெயர்.
மற்ற மூன்று ருதுக்களுக்கு	—	தக்ஷிணாயனம், அல்லதுவிஸர்கம் என்று பெயர். இந்த ஆதான விஸர்கங்கள் இரண்டும் சேர்ந்தால் ஒரு வருடமாகும்.

(5)

3. ஆதான காலம் (உத்தராயணம்)

[1]ஆதானம், [2]விஸர்கம் என்ற இவ்விரண்டில் ஆதானமென்னும் காலம் அக்நியைச் சார்ந்தது. அச்சமயம் அக்நிக்குப் பலம் அதிகம். காலத்தின் இயற்கையான வழியில் அதாவது மகரம் முதலான ராசிகள் வழியாகச் செல்லும் சூரியன் மிகவும் சூடான கிரணங்களுடன் கூடியவனாகின்றான். இவனுடைய சேர்க்கையினால் காற்று தீவிரமாகவும், கடுமையாகவும் மாறுகிறது. சந்திரனால் உண்டான குளிர்ச்சி என்னும் குணத்தைக் குறைத்து, உலகிலுள்ள ஈரப்பசையைக் காற்று எடுத்துக் கொள்கின்றது. அது பருவங்களையொட்டி நாளுக்கு நாள் வறட்சியை ஏற்படுத்தி, கடுமையான சுவைகளான கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பவைகளை மிகுதியாக வளர்த்து மக்களுக்கு நலிவைத் தருகின்றது. (6)

4. விஸர்க காலம் (தட்சிணாயனம்)

விஸர்கம் என்பது மிக்க இதமானது. அதிலும் காலவழி, மேகம், காற்று, மழை இவைகளால் சூரியன் தாக்குண்டு

1. ஆதான காலம் (உத்தராயணம்)—தைமுதல் ஆனி வரையிலான ஆறு மாதங்கள்.
2. விஸர்ககாலம் (தட்சிணாயனம்)— ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள்.

தக்ஷிணாயனத்தை அடையும் பொழுது சந்திரனுடைய பலமும் குறைவதில்லை. அதனால் சந்திரன் குளிர்ந்த கிரணங்களால் தொடர்ந்து நிறைவு பெற்றிருக்கிறான். மகேந்திர மலையில் பொழிந்த மழைநீரால் உலகத்தின் வெப்பம் தணிகிறது. இத மான ரசங்களான புளிப்பு, உப்பு, இனிப்பு என்பவை முறையே மக்களுக்கு வலிவை அளிக்கின்றன. (7)

விஸர்கம், ஆதானம் என்ற இரண்டுகளுக்கிடையே [1]ஹேமந்த ருதுவிலும் [2]சிசிர ருதுவிலும் மக்களுக்குப் பலம் அதிகரிக்கும். [3]சரத் ருதுவிலும் [4]வசந்த ருதுவிலும் அந்த பலம் நடுநிலையில் இருக்கும். மழைகாலத்திலும் கோடைகாலத்திலும் மக்களுக்கு பலக்குறைவு தோன்றும்.

(8)

5. ஹேமந்தருது (பனிக்காலம்)

ஹேமந்தருதுவில் சூரியன், காற்று இவை புகைத்தூளி களால் அழுக்குற்றும், பனியால் மூடப்பட்டும் இருக்கும். குளிர்ச்சி யின் காரணமாக வடதிசைக் காற்றால் மயிர்கூச்சலுண்டாகும். இந்தப் பருவ காலத்தில் பாச்சோத்தி, ஞாழல், புங்கை, நிலாக் கொடி பூக்கள் மலர்ந்து விளங்கும். யானை, ஆடு, எருமை, குதிரை, காக்கை, பன்றி இவைகளுக்கு மதம் பெருகிவிடும். பனி மூட்டத்தினால் மீன்களும் புள்ளினங்களும் மறைந்திருக்கும். ஆறு களிலிருந்து ஆவி வெளிக்கிளம்பும். கிணற்று நீர் சூடாக இருக் கும். (9—11)

6. சிசிரருது (குளிர் காலம்)

குளிர் காலத்தில் குளிர் காற்றினால் தாக்கப்பட்டு உடலி லுள்ள சூடு, உடலின் வழியாக வயிற்றில் ஒன்று சேர்ந்து சடராக்னியை வலுவுள்ளதாகச் செய்யும், எனவே சடராக்னியை வளர்ப்பதற்காக விஸர்க்காலத்தில் பலசாலிகளுக்கு இயற்கை யாக, பலமூட்டும் உணவையும் பானத்தையும் கொடுக்க வேண்டும். இல்லையேல் விறகு இன்றி நெருப்பு அணைவது போல் உண வாகிற விறகின்றி அது அணைந்துவிடும். அல்லது அது மிகவும் வளர்ந்து உடலிலுள்ள தாதுக்களையே தின்று உடலை அழித்து விடும். அதனால் நெருப்பின் துணைவனான காற்று குளிர் காலத்தில் குளிரின் சேர்க்கையால் சீற்றமடைந்து விடும். (12-14)

1. ஹேமந்தருது— மார்கழி, தை, மாதங்கள்.
2. சிசிரருது— மாசி, பங்குனி மாதங்கள்.
3. சரத்ருது— ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்.
4. வசந்தருது— சித்திரை, வைகாசி மாதங்கள்.

எனவே குளிர்காலத்தில் பசையுள்ளதும், இனிப்பு, உப்பு, புளிப்புச் சுவையுள்ளதுமான பொருள்களைப் புசிக்க வேண்டும். வளைகளில் வாழ்பவை (எலி முதலானவை) நீரில் வாழ்பவை (ஆமை, மீன் முதலானவை), ஈரமுள்ள இடத்தில் வாழ்பவை (பன்றி முதலானவை) [1]பிரஸஹம் (கழுகு முதலானவை) இவற்றை முயற்சியுடன் கொழுக்க வைத்து, இவற்றின் இறைச்சி, வெல்லம், மாவு இவைகளால் செய்த பொருள்கள் புதிய போதைப் பொருள்கள், உளுந்து, கரும்புரசம், பால் இவற்றால் செய்த பொருள்கள் [2]நிணநீர், எண்ணெய், புதிய அரிசியால் சமைத்த அன்னம் ஆகியவற்றை உண்ண வேண்டும். உடற்பயிற்சி, உடல் பிடித்தல், எண்ணெய் குளித்தல், வேர்வை, புகை, கண்மை, [3]வெயில் இவைகளையும் பயன்படுத்த வேண்டும்.

உடலைத் தூய்மைப்படுத்துவதற்கு வெந்நீரைப் பயன்படுத்த வேண்டும். நிலத்தடியிலுள்ள அறையிலோ வீட்டின் உட்புறம் உள்ள அறையிலோ தங்க வேண்டும். பஞ்சுமெத்தை அல்லது கம்பளிப்படுக்கையருகில் கும்மட்டியை வைத்துக் கொண்டு படுக்க வேண்டும்.

உடல் மீது குங்குமப்பூ அல்லது அகில் சந்தனத்தைக் கனமாகப் பூசிக்கொண்டு, மெல்லியதும், சூடானதும், சாம்பிராணி முதலிய வாசனைப்புகை நிரம்பியதுமான துணியால் போர்த்துக் கொண்டு பருமனான உடலமைப்புக் கொண்ட பெண்ணை அணைத்துக் கொள்வதன் மூலம் குளிர் காற்றைவிலக்கிக்கொண்டு உரிய நேரத்தில் தூங்க வேண்டும்.

குளிர்காலத்தில் மேகம், காற்று, மழை இவைகளின்காரணமாக குளிர் மிகுதியாக இருக்கும். மற்றும் இது [4]ஆதான காலமாக இருப்பதால் வறட்சி நிலை தோன்றக் கூடும். எனவே இந்தப் பருவத்தில் மார்கழி, தை (ஹேமந்த ருது) மாதங்களுக்காகக் கூறியுள்ள வசதிகளை அதிகமாகச் செய்து கொள்ளவேண்டும். (15—20½)

---

1. பிரஸஹம்— இறைச்சியைப் புசிக்கும் பறவைகள்
2. நிணநீர்— உடலில் இறைச்சிக்கும் எலும்புக்கும் இடையேயுள்ள ஒரு வகை பசைநீர்.
3. வெயில்— அதாவது வெயில் உடலில் படும்படி நிற்க வேண்டும்.
4. ஆதான காலம்— பக்கம் 39-ல் பார்க்க

7. வசந்த ருது (சித்திரை,வைகாசி)

வசந்த ருதுவில் தென்றல் காற்று வீசும். சூரியனின் கிரணங்கள் சற்றுச் சிவந்திருக்கும். மரங்களில் புதிய, மெல்லிய இலைகளும், புதிய மரப்பட்டைகளும் தோன்றும். திசைகள் தெளிவாகக் காணப்படும். பலாசம், அசோகம், மா முதலான மரங்களால் காடுகள் அழகாகக் காட்சி தரும். குயில்கள், தேன்வண்டுகள் முதலானவற்றின் இனிய நாதங்களின் எதிரொலி நாற்றிசையும் பரவியிருக்கும். குளிர்காலத்தில் குளிர்ந்திருந்த கபமானது கதிரவனின் கிரணங்களால் உருகி சடராக்னியைத் தணியச் செய்கிறது. அதனால் தடைபட்ட சடராக்னியானது பலவிதமான நோய்களைத் தோற்றுவிக்கின்றது.

எனவே, இந்தப் பருவத்தில் கடுமையான வாந்தி, புகை, வாய் கொப்பளித்தல், காரியுமிழ்தல், நஸ்யம் (ஒரு வகை மருந்தினாலான மூக்குப் பொடி) இவற்றையும், உடற்பயிற்சி, உடற்பிடித்தல், தேன், யவமெனும் தானியம், கோதுமை [1]ஜாங்கல தேசத்து மாமிசம், நண்பர் கூட்டம், பருவப் பெண், தோட்டம் துறவு, என்பனவற்றையும் பயன்படுத்த வேண்டும். நீராடி தன்னை ஒப்பனை செய்துகொண்டு, மாலையணிந்து, சந்தனம் அகில் முதலானவற்றைப்பூசி, மாம்பழம், தாமரை மலர் இவைகளின் உருவம் கொண்ட ஓவியங்களால் நிரம்பிய விசித்திரமான பாத்திரங்களில் ஊற்றி வைக்கப்பட்ட குற்றமற்ற [2]ஆஸவம் [3]அரிஷ்டம், கள், திராட்சை ரசம், இலுப்பைக் கள் (மாதவரசம்) முதலியவை, கோரைக் கிழங்கு, சுக்கு முதலியவை சேர்த்துக் காய்ச்சிய தண்ணீர், அல்லது வேங்கை மரம், சந்தனம் கருங்காலி இவைகள் சேர்ந்த தண்ணீர், தேன் கலந்த தண்ணீர் இவற்றைப் பருக வேண்டும். சத்துள்ள உணவு, குளிர்ப் பொருள்கள், பகல் தூக்கம், பசை, புளிப்பு, இனிப்புச் சேர்ந்த சுவையான உணவு, புளிப்புள்ள பொருள்கள் இவற்றைத் தவிர்க்க வேண்டும். *(21—27½)*

8. க்ரீஷ்ம ருது (ஆனி, ஆடி)

க்ரீஷ்ம ருதுவில் சூரியன் நீலவண்ணத்துடன் காசாம்பு மலரை ஒத்திருப்பான். காட்டுத் தீயினால் தாக்குண்ட திசை

---

1. ஜாங்கலம்— வாதம் அதிகமாக உள்ள தேசம்
2. ஆஸவம்— ஒருவகையான திரவ மருந்து
3. அரிஷ்டம்— மருந்துச்சரக்குகளை கஷாயமாகக் காய்ச்சி திரவப் பொருட்களில் ஊற வைத்து மருந்து தயாரிப்பது.

களும் பூமியும் சூடாகி விடுகின்றன. தென்மேற்கிலிருந்து வீசும் காற்று இன்பமாக இருக்கும். காற்றும் வெயிலும் கலந்த வேர்வையினால் உயிரினங்கள் சுரம் கண்டவை போல் சூடாக்கப்படுகின்றன.

வெப்பம் தாளாமல் உயர்ந்த யானைகளும், எருமைகளும் நீரில் இறங்கி கலக்கும். கதிரவனின் கொடிய கிரணங்களால் நீர் குறைந்து ஆறுகள் உயர்ந்த கரைகளுடன் விளங்கும். நிழலற்ற உயர்ந்த மரங்கள், இலைகளை உதிர்க்கும். கொடிகள் உலர்ந்து காணப்படும். இவ்வாறு க்ரீஷ்மருது காட்சி தரும்.

அந்தக் கோடை காலத்தில் சூரியன் உலகிலுள்ள நீர்ப் பசைகளையெல்லாம் இழுத்துக் கொள்கிறது. எனவே, உடற் பயிற்சி, வெயிலில் செல்லுதல், காரம், புளிப்பு, கரிப்பு என்னும் சுவைகள், உஷ்ண வீரியமுள்ள பொருள்கள் இவற்றைப் பயன் படுத்தக்கூடாது.

இந்தப் பருவத்தில் மதுவை அருந்தக்கூடாது. அவசியம் ஏற்பட்டால் சிறிதளவு மதுவை அதிகத் தண்ணீருடன் கலந்து அருந்தலாம். இல்லையேல் வறட்சி, தளர்ச்சி, எரிச்சல், மயக்கம் இவை தோன்றக்கூடும். புதிய மண்பாண்டத்தில் ஊற்றப் பட்டு மனதுக்குகந்த நறுமணம் கொண்ட அதிக சர்க்கரையுடன் கூடிய குளிர்ந்த பானம், அல்லது நெய் கலந்த கஞ்சி; சுவை மிகுந்த திரவமான குளிர்ந்த அன்னம், காட்டில் வசிக்கும் மான், பட்சிகளின் மாமிசம், மார்கழி தை மாதங்களை (ஹேமந்த ருதுவைச்) சேர்ந்த அரிசி, பால், நெய், திராட்சை, இளநீர் சர்க்கரை, பனையோலையால் செய்த விசிறியின் காற்று இவற்றைப் பயன்படுத்தலாம். தாமரை, நெய்தல் பூக்களின் இன மாகிய தாமரைத் தண்டை வளைபோல் அணிந்து, உடல் மீது சந்தனம் பூசிய மெல்லிய பெண்கள், குளம், நடவாபி, நதி, குளிர்ந்த காடு, நறுமணம் வீசும் மெல்லிய ஆடை இவைகளைப் பயன்படுத்த வேண்டும். இயந்திரத்தின் மூலம் நீர்த்தாரை விழும் அறைகளில் பகலில் உறங்க வேண்டும். இரவில் திறந்த வெளியில் கற்பூர சந்தனம் உடல் மீது பூசிக் கொண்டு நறுமணமுள்ள மலர்ப் படுக்கை மீது காம உணர்வின்றி உறங்க வேண்டும். *(28—38)*

9· வர்ஷருது (ஆவணி, புரட்டாசி)

வீசும் கடற்காற்றால், எல்லா தானியங்களும் முளைக் கின்றன. உடைந்த நீலக்கற்கள் போன்ற மேகங்களால் வானத்

தின் நடுப்பகுதி மறைக்கப்பட்டிருக்கின்றதுபோல் காட்சி தருகிறது. குளங்களில் புதிய தண்ணீர் நிறைந்திருப்பதால் படிகள் நீரில் மூழ்கி விடுகின்றன. மழைத் தண்ணீர் நிரம்பிய குளங்கள் உயர்ந்து கடல்போல் காட்சியளிக்கின்றன. நீர் நிரம்பியிருப்பதால் நிலத்தை நன்கு காண முடிவதில்லை. மேகம், மயில், தவளைகள், இவற்றின் இனிய கம்பீர ஒலிகள் காதில் வீழ்கின்றன. மின்மினிப் பூச்சிகள், வானவில், மின்னல் இவற்றின் பட்டொளியால் திசைகள் அழகுற்றிருக்கின்றன. தரை மீது நாற்புறமும் பச்சைப் பசேலென்று புல் வளர்ந்திருக்கிறது. வாகை, குடமல்லிப்பூக்கள் மலர்ந்து காட்சி தருகின்றன.

ஆதான காலத்தில் அடங்கிய மழைகாலத்தில் மழை, பூமியின் ஆவி, நீர், அம்லப் பக்குவம், கெட்ட நீர் முதலானவற்றின் காரணமாக, உடலில் அக்னிமந்தம் ஏற்பட்டு விடுகிறது. எனவே வாந்தி, மலக்கழிப்பு சிகிச்சை முறையைப் பின்பற்றி [1]ஆஸ்தாபனம் [2]அநுவாஸனம் என்னும் வஸ்தி கருமத்தைச் செய்தல் வேண்டும்.

பழைய அரிசி, கோதுமை [3]யவம் இவைகளிற் செய்த கஞ்சியை அருந்த வேண்டும். குற்றமற்ற மதிரா(கள்) அரிஷ்டம் உலர்ந்த சிறிய திராட்சை ஆகியவற்றையோ அல்லது சிறிதளவு தண்ணீரையோ, மழை ஜலம், கிணற்று நீர், மலையிலிருந்து வழியும் நீர், குளத்து நீர் இவற்றையோ கொதிக்கவைத்துக் குடிக்க வேண்டும். மழை அல்லது காற்றுள்ள நாட்களில் வேர்வை, வாதம் இவைகளைப் போக்கக்கூடிய உலர்ந்த லேசான உணவை இனிப்பு, புளிப்பு, உப்பு, என்ற சுவையுடன் கலந்து சூடாகப் பயன்படுத்த வேண்டும். மழை காலத்தில் தேன் கலந்து சுத்தமாக்கப்பட்ட அன்னபானங்களைப் பயன்படுத்த வேண்டும். பாம்பு, நிலத்தின் ஆவி, குளிர்காற்று மழைச்சாரல், ஈ, கொசு, எலி, இவைகள் இல்லாத, நெருப்புக்கும்மட்டியால் சூடாக்கப்பட்ட வீடுகளில் தங்க வேண்டும்.

யானைத் தந்தங்களால் ஆன கைப்பிடிகளால் தேய்த்தல், உடம்பு பிடித்து விடுதல், நீராட்டம், புகை பிடித்தல், அகரு என்னும் வாசனைப் பொருளை உடலிற் பூசுதல் ஆகியவற்றைக் கையாள வேண்டும். விதவிதமான உடைகளையும் மாலைகளையும் அணிந்து யானை மீதமர்ந்து செல்ல வேண்டும்.

---

1. ஆஸ்தாபனம்—கஷாயவஸ்தி
2. அநுவாஸனம்—எண்ணெய் வஸ்தி
3. யவம்—பார்லி எனப்படும் ஒருவகை அரிசி

ஆறு, [1]உதமந்தம், பகல் தூக்கம், திரவமான உணவு, சிற்றின்பம், பனி, கால்நடையாகச் செல்லுதல், உடற்பயிற்சி, சூரிய கிரணங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தாமல் இருத்தல் வேண்டும். *(39—49)*

10. சரத் ருது (ஐப்பசி, கார்த்திகை)

சரத்ருது என்னும் இலையுதிர்காலத்தில் ஆகாயத்தில் வெண்மையான மேகங்கள் படர்ந்திருக்கும். பூமி சிறிது சேறுடன் கூடிக் காணப்படும். மலர்ந்த நாணற்பூ, நிலத்தாமரை, வெள்ளைத் தாமரை, சம்பாப் பயிர் இவைகளால் பூமி அழகுற்று காட்சி அளிக்கும்.

மேகங்களைப் பிளந்து கொண்டு வெளிவந்த கதிரவன் தன் கிரணங்களை வீசுகிறது. திக்குகள் மஞ்சள் நிறமாகவும், தெளிவாகவும் [2]கிரௌஞ்சப் பறவைகளின் கூட்டத்தால் பரவப் பட்டது போன்றும் இருக்கும்.

தாமரை மலர்களில் மறைந்திருக்கும் மீன்கள், அன்னப் பட்சிகள், இவற்றின் உராயலினால் அலைகள் துண்டிக்கப்படு கின்றன. அவ்வித சிறப்புடன் கூடிய தெளிவான குளங்கள் காட்சி தருகின்றன.

மழை, குளிர்ச்சி இவற்றின் காரணமாக சுருங்கிய உடலில், சூடான சூரிய கிரணங்கள் பட்டு இதற்கு முந்திய பருவத்தில் சேர்ந்திருந்த பித்தம் எழுச்சியை அடைகிறது.

இந்தப் பருவத்தில் கசப்பான நெய், அல்லது கசப்புப் பொருள்களாலான நெய், விரேசனம், இரத்தம் எடுத்தல், குளிர்ச்சி, லேசான அன்னபானங்கள், உவர்ப்பு, இனிப்பு, கசப்பு கலந்த பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

பசி எடுத்தால், சம்பாதானியம், 60 நாட்களில் பயிராகும் தானியம், கோதுமை, பச்சைப்பயறு, சர்க்கரை, தேன், புடலை, நெல்லிக்காய், திராட்சை, காட்டு விலங்குகளின் இறைச்சி இவற்றை அதிகமாகப் புசிக்கலாம்.

பகலில் சூரியனின் கிரணங்களால் சூடாக்கப்பட்டு, இரவில் சந்திர கிரணங்களால் குளிர்ச்சியாக்கப்பட்டு [3]அகஸ்திய நக்ஷத் திரத்தினால் சுத்தம் செய்யப்பட்டு, தெளிவான காலத்தினால் பக்குவம் செய்யப்பட்ட நீரை அருந்தினால் அது அமிர்தபானத்

1. உதமந்தம்—கொதித்த நீரில் கரைத்த ஸத்துமாவு
2. கிரௌஞ்சம்—ஒரு வகைப் பறவை.
3. அகஸ்திய நட்சத்திரம்—தென்திசையில் வானத்தில் விளங்கும் ஒரு நட்சத்திரம்.

திற்குச் சமமாகும். அன்னப்பறவை இறக்கைகளை அடித்துக் கொண்டு நீச்சலடிக்கின்ற குளத்திலுள்ள தாமரைகளின் மீது வண்டுகள் வட்டமிடுகின்றன. அங்குச் சென்று அதைப் பயன்படுத்த வேண்டும். லேசாகவும் சுத்தமாகவும் உள்ள ஆடைகளையும் மாலையையும் அணிந்து, உடல் மீது வாசனையுள்ள குளிர்ந்த பூச்சுக்களைப் பூசி, மாடிவீட்டின் மச்சு மீதமர்ந்து இரவின் [1]முதல்யாமத்தில் சந்திரனின் கிரணங்களைப்பார்த்து அனுபவிக்க வேண்டும். வயிறு நிறையச் சாப்பிடுதல், தயிர், க்ஷாரப்பொருள், வஸை, எண்ணெய், எதிர் காற்று, சக்தி வாய்ந்த மது, பகலுறக்கம், பனி இவைகளை விலக்கிவிட வேண்டும்.

(50-59)

11. பொது விதி

எல்லாப் பருவங்களிலும் எல்லா ரசங்களையும் பயன் படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். எந்தப் பருவத்தில் எந்த ரசமானது சிறந்ததெனக் கூறப்பட்டுள்ளதோ அதை அந்தப் பருவத்தில் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்.

முன் பருவத்தின் கடைசி ஏழுநாட்களும் அடுத்த பருவத்தின் தொடக்க ஏழு நாட்களும் ருது சந்தி எனப்படும். இந்த நாட்களில் முந்திய பருவத்தின் நியமங்களை முறையே தவிர்த்து புதிய பருவத்தின் நியமங்களை முறையே பின்பற்ற வேண்டும். ஒரேயடியாக நியமங்களைப் புறக்கணித்து விட்டால் உடலுக் கொவ்வாதவைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்கள் தோன்றி விடும்.

இவ்வாறு பருவங்களில் மக்களின் உடல் நலத்திற்காக மேற்கண்ட விதிகள் கூறப்படுகின்றன. இதற்கு எதிர் மறையான நிலைகளுக்கேற்ப வேறு விதிகள் குறிப்பிடப்படும், பருவங்களுக்கு, மாதம், ராசி, இலக்கணம் என்பவைகளைப் பற்றி கூறப்பட்ட மூன்று இலக்கணங்களுள் ஒன்றுக்கு மேல் ஒன்று உயர்ந்திருப்பதால் பருவத்திற்கேற்ற நடைமுறைகளையே பின் பற்ற வேண்டும். *(60—63)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ருது சர்யை' என்னும் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. இரவின் முதல் யாமம்—மாலை 6 முதல் 10 மணி வரை

ஐந்தாவது அத்தியாயம்

*ரோகானுத்பாதநீயம்

இனி ''ரோகானுத்பாதநீயம்'' என்ற அத்தியாயத்தை ஆத்ரேயர் முதலான மாமுனிவர்கள் விவரித்தபடி விளக்குவோம். (1—2)

1. இயற்கை வேகங்களைத் தடுக்கலாகாது

உடலிலிருந்து வெளியாகும் அபானவாதம், மலம், மூத்திரம், தும்மல், நீர் வேட்கை, பசி, தூக்கம், இருமல், களைப்பு, சுவாசம், கொட்டாவி, கண்ணீர், வாந்தி, சுக்ரம் (விந்து) இவைகளின் வேகத்தைத் தடுத்து நிறுத்தலாகாது.

ஆசனவாய் வழியாக வரும் காற்றைத் [1](அபானவாயுவை) தடுப்பதால் குன்மம், [2]உதாவர்த்தம், வயிற்று வலி, உடல் வாட்டம் இவை ஏற்படும். மல மூத்திரங்கள் தடைப்படும். கண்பார்வை குறையும். சடராக்னி அழியும். இதய நோயும் உண்டாகும்.

உடலில் எண்ணெய் தேய்த்தல், செலுத்துதல் முதலிய முறைகளை யுண்டாக்குதல் வியர்வை தோன்றுதல் [3]வர்த்திகள், அன்னபானங்கள், வஸ்தி இவை வாதத்தை இயற்கையாக இயங் வைப்பதில் சிறந்தவை.

மலத்தை அடக்குவதால் ஆடு சதையில் முறுக்குவதுபோன்ற வலியும், ஜலதோஷம், தலைவலி, வாயு மேலே செல்லுதல், வயிற்றில் கத்தரிப்பது போன்ற வலி, இதயத்தில் தடை, வாய் வழியாக மலம் வருதல் என்ற நோய்களும், ஆசனவாய் வழியாக வரும் காற்றைத் தடுப்பதால் ஏற்படும் நோய்களும் உண்டாகும்.

---

* ரோகானுத்பாதநீயம்—நோய் தோன்றாமலிருக்கச் செய்து கொள்ளும் வழிவகை.

1. அபானவாயு—ஆசன வாய் வழியாக வரும் காற்று.
2. உதாவர்த்தம்—உடலிலுள்ள வாதமானது மேல் நோக்கிச் செல்லுதல்.
3. வர்த்தி—சில மருந்துகளைத் திரி, அல்லது துணியில் பூசி, திரித்து ஆசனவாய் வழியாய்ச் செலுத்தி மலத்தை வெளி வரச்செய்தல்.

சிறுநீரை அடக்குவதால் உடலுறுப்புகள் உடைந்தது போலாதல், [1]அச்மரீ என்னும் நோய், வஸ்தி (சிறு நீர்ப்பை) ஆண்குறி, தொடை எலும்பு இவற்றில் குத்தல் மற்றும் மலம் வாயு இவற்றால் ஏற்படும் முன் கூறிய நோய் இவை பெரும் பாலும் தோன்றக் கூடும். (3—7)

2. மலத்தை அடக்குவதால் ஏற்படும் நோய்களும் மருத்துவமும்

கடுமையான பொருட்களால் தயாரிக்கப்படும் வர்த்தி, வயிறு, ஆசனவாய் முதலிய இடங்களில் வாதத்தைப் போக்கும். தைலங்கள் தடவுதல், வாதத்தை நீக்கும் பொருள்களால் தயாரிக் கப்பட்ட சூடான கஷாயத்தில் அமர்ந்து இருத்தல் . வியர்வை யைத் தோற்றுவித்தல் [2]வஸ்திகர்ம, மலத்தை வெளிப்படுத் தும் அன்னபானங்கள் ஆகியவை மலத்தைத் தடுப்பதால் ஏற் படும் நோய்களுக்குச் சிகிச்சைகளாகும். (8)

3. சிறுநீரை அடக்குவதால் ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை

சிறுநீரைத் தடுப்பதால் ஏற்படும் நோய்களைத் தடுக்க முன் கூறிய சிகிச்சைகளுடன் சாப்பாட்டிற்கு முன் நெய் குடிக்க வேண்டும். அதேபோல் சிரணமான பிறகும் மிகுந்த அளவில் நெய் பருக வேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் சிகிச்சைக்கு [3]'அவபீடகம்' என்று பெயர்.

4. மற்றும் சில வேகங்களைத் தடுப்பதும் அவற்றின் சிகிச்சையும்

ஏப்பத்தை அடக்குவதால் நாக்கில் சுவையின்மை, உடல் நடுக்கம், இதயமும் மார்பும் தடைப்படுதல், வயிற்றுப் பொருமல், இருமல், விக்கல் இவை தோன்றும். இவற்றிற்கும் விக்கலுக்குச் செய்வது போன்ற சிகிச்சை செய்க.

தும்மலின் வேகத்தை அடக்குவதால், தலைவலி, புலன் களில் பலவீனம், பெருந்தலை நரம்புகளில் பிடிப்பு, [4]அர்திதம் இவை உண்டாகும். காரமான புகை, கண்மை, நுகர்தல்,

---

1. அச்மரீ—சிறுநீர்க்குழாயில் மணல் போன்ற சில பொருள்களின் அடைப்பு.
2. வஸ்திகர்ம—ஆசனத்துவாரத்தில் குழாய் மூலம் எண் ணெய் முதலியவற்றைச் செலுத்திக் குடலைக் கழுவுதல்.
3. அவபீடகம்—சிறுநீர் தடைபடும் நோய்க்குக் கொடுக் கும் ஒரு வகை நெய்.
4. அர்திதம்—முகம், வாய் இவைகளை ஒரு பக்கமாக இழுக்கும் வாதநோய்.

மூக்கில் தீக்ஷ்ண [1]நஸ்யம் போடுதல், சூரியனைப் பார்த்தல், இவையெல்லாம் தடைபட்டுள்ள தும்மலை வெளிப்படுத்தும். பிறகு வேர்வை பிடிப்பது, எண்ணெய் குளித்தல் இவற்றைச் செய்ய வேண்டும். உணவிற்குப் பிறகு வாதத்தை நீக்கும் நெய்யை அருந்த வேண்டும்.

தாகத்தின் வேகத்தை அடக்குவதால் நாவுலர்ச்சி, உடல் வலி, செவிட்டுத் தன்மை, மயக்கம், தலைசுற்றல், இதய நோய்கள் ஆகியவை தோன்றும். இவற்றைப் போக்க (ஸ்நானம்-அன்னம்-பானம் முதலானவற்றில்) முழுவதுமாகக் குளிர்ந்த முறைச் சிகிச்சையைப் பின்பற்றுவதே நலம்.

பசியின் வேகத்தைத் தடுப்பதால் உடல்வலி, சுவையின்மை, வாட்டம், இளைப்பு, வயிற்றுவலி, தலைசுற்றல் இவையெல்லாம் உண்டாகும். இக்காலத்தில் எண்ணெய்ப் பசையுடன் கூடி, சூடாக உள்ள லேசான உணவைச் சிறிதளவு உட்கொள்ள வேண்டும்.

தூக்கத்தைத் தடுப்பதால் மயக்கம், தலை — கண்களில் பாரம், சோம்பேறித்தனம், கொட்டாவி, உடல்வலி இவை தோன்றும். இவற்றைப் போக்க தூக்கமும் உடலைப் பிடித்து விடுவதும் நல்லது.

இருமலைத் தடுப்பதால் இருமல் அதிகமாதல், சுவாசம், சுவையின்மை, இதயநோய், நாவுலர்தல், உடலுலர்தல், விக்கல் தோன்றும். இவற்றை நீக்க இருமலுக்கான சிகிச்சையை நன்கு செய்தல் வேண்டும்.

களைப்பினாலுண்டான சுவாசத்தை அடக்குவதனால், குன்மம், இதயநோய், மயக்கம் இவை தோன்றும். இவற்றை நீக்க ஓய்வெடுத்தல், வாதத்தைத் தணிக்கும் சிகிச்சை முறைகள் ஆகியவை சிறந்தவை.

கொட்டாவியைத் தடுப்பதால், தும்மலைத் தடுப்பதால் தோன்றும் நோய்களே வருகின்றன. இதற்கு வாதத்தையகற்றும் சிகிச்சை முறைகளைக் கையாள வேண்டும். *(9—18)*

---

1. நஸ்யம் : வாத, கப தோஷங்களுக்குரிய எண்ணெய், நெய் மருத்துகளைக் கொண்டும், பச்சிலைச் சாறுகள், தாய்ப்பால், மருந்துப்பொடிகள் கல்கம் முதலியவற்றால் மூக்கில் விட்டு தோஷங்களை வெளிப்படுத்தி நோயைப் போக்கும் முறை.

கண்ணீரைத் தடுப்பதால் [1]பீநஸம், கண்நோய், தலை வலி, இதயநோய், கழுத்து நரம்புச் சுளுக்கு இவையுண்டாகும். இவற்றை நீக்க தூக்கம், மதுபானம், இனிய கதை கேட்டல் முதலானவற்றைச் செய்ய வேண்டும்.

வாந்தியைத் தடுத்து நிறுத்துவதால் [2]அக்கி, படை, குட்டம், கண்ணரிப்பு, சோகை, சுரம், இருமல், சுவாசம், இதயம் படபடத்தல், வங்கு, வீக்கம் இவையுண்டாகும். இவற்றை நீக்க வாய்க் கொப்பளித்தல், புகை பிடித்தல், எண்ணெய்ப் பசை யற்ற பொருள்களைப் புசித்து வாந்தியெடுத்தல், உடற்பயிற்சி, இரத்தத்தை வெளியேற்றல், மலக்கழிப்பு இவற்றைச் செய்தால் நலமளிக்கும். க்ஷாரம், லவணம் என்னும் உப்புகள் கலந்த எண் ணெய் குளித்தால் நன்மை உண்டாகும்.

வீரிய (விந்துவின்) வேகத்தைத் தடுப்பதால் விந்து ஒழுகுதல், ஆண்குறியில் வலி, அந்தப்பகுதியில் வீக்கம், சுரம், இதயவலி, சிறு நீர்தடுப்பு, உடலுறுப்புகள் உடைந்தது போலிருத்தல், விதை வீக்கம், சிறுநீர் துவாரத்தில் கல் அடைப்பு, அலித்தன்மை இவை உண்டாகும். இவற்றைப் போக்க கோழி மாமிசம், ஸுரை என்னும் கள்; சம்பா தானியம், வஸ்தி, எண்ணெய்க் குளியல், நீர்த்தொட்டி - நீராட்டம், வஸ்தியைச்சுத்தம் செய்யும் பொருள் களால் தயார் செய்யப்பட்ட பால், மனதுக்குகந்த வயதுப் பெண் களின் புணர்ச்சி இவற்றைக் கையாள வேண்டும். *(19—24)*

4. *வேகத்தடுப்புச் சிகிச்சையில் தவிர்க்க வேண்டியவை

வேகத்தைத் தடுக்கும்பொழுது வாந்தியில் மலம் கலந்து வந்தால் அவன் மிகவும் வருந்தினாலும், இளைத்தாலும், நாவறட்சி ஏற்பட்டாலும் சிகிச்சை செய்வது கடினம். அதனால் சிகிச்சையைத் தவிர்ப்பது நலம்.

---

1. பீநஸம்—மூக்கிலிருந்து எப்பொழுதும் கபம், சீழ் முதலியன கசிதல், மூக்கினுள் எரிச்சல், பொருமல், மணமறியாமை.

2. அக்கி—விஸர்ப்பம்—வலி, எரிச்சல், அரிப்புடன் கூடி தோலின் மேல் பரவும் வியாதி.

* வேகங்களைத் தடுக்கும் நோயாளி, நீர்வேட்கை, வயிற்று வலிகளால் தாங்க முடியாதளவு துன்புற்றிருந்து, இளைத்து பலங்குன்றி மலமாக வாந்தியெடுப்பின் அவனை (மருத்துவம் செய்யத் தகுதியில்லாதவன், தேறமாட்டான் என்று) தள்ளி விட வேண்டும்.

5. நோய்களுக்கு முக்கிய காரணங்கள்

மலம், சிறுநீர் முதலியவை வெளியாகாமலிருக்கும்போது பலாத்காரமாக அவற்றை வெளிப்படுத்துவதாலும், அவை தாமாக வரும்போது அவற்றைத் தடுத்து நிறுத்துவதாலும் பொதுவாக எல்லா நோய்களும் உண்டாகின்றன.

பெருவாரியாகத் தோன்றுகின்ற நோய்களுக்குச் சிகிச்சை முறைகள் இங்கே கூறப்பட்டன. வேகத்தைத் தடுப்பதால் வாயுவானது பலவிதமாகச் சீற்றமடைகிறது. எனவே, இந்த வாயுவை, வாயுவைத் தணிக்கக்கூடிய உணவு, நீர், மருந்து வகைகளைக் கொடுத்து தணிக்க வேண்டும். மற்ற நோய்களுக்கு அதற்குரிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டும். *(25—27)*

6. கவனக்குறைவால் ஏற்படும் தீமைகள்

நாளடைவில் தூய்மையான தெளிந்த தண்ணீரிலும், இரத்தினங்களிலும் கூட அழுக்கு வந்து விடுகிறது. பருவ காலத்திற்கேற்றபடி நடந்து கொள்ளும் மனித உடலிலும் சில சமயங்களில் தோஷங்களும் மலங்களும் தங்கிவிடும். அவ்வித அழுக்குகளை உரிய நேரத்தில் அகற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதே போல் மலங்கள் முழு அளவில் குவிந்து 'சயம்' என்னும் நிலையை அடைந்து நீண்ட காலத்தில் மருந்து அருந்த வெறுப்பவர்களிடத்தில் கீழ்க்கண்ட நோய்களைத் தோற்றுவிக்கின்றன. அளவு மீறிய பருமன், [1]அக்நிமந்தம், குட்டம், நீரிழிவு, தோல் சம்பந்தமான நோய்கள், ஓஜஸ் நஷ்டமடைதல்; மயிர்க்கால் வழிஅடைப்பு, புலன்களின் அழிவு, சுவாசம், வீக்கம், சோகை, [2]ஆமரோகம், தொடை மறத்துப் போதல், புசிக்காமலேயே வயிற்றில் நிறைவுணர்ச்சி, மயங்கிய நிலை, சோம்பேறித்தனம், மலச்சிக்கல், மூலநோய், பவுத்திரம், மண்ணீரல், பிணிக்கட்டி, அக்கி, மதம், [3]'ஸந்யாஸம்' என்னும் மூர்ச்சை, ஜலதோஷம், வாந்தி, தொண்டை நோய், புழு, நரம்புச் சுருட்டல், சோம்பல், கெட்ட கனவு, தொண்டை நோய், தலைவலி, புத்தியும் தூக்கமும் அழிதல் முதலியவைகளாகும். பலமளிக்கும் பொருள்களைக்கொடுத்து பலத்தை அளித்த போதிலும் ஒளி, நிறம், பலம் இவை குறைந்து

---

1. அக்நிமந்தம்—சடராக்னியின் வலிவு குறைதல்.
2. ஆமரோகம்—அரைகுறையாகச் சீரணித்தல்.
3. ஸந்யாஸம்—தலைக்குள் சூடு அல்லது பித்தம்வளர்ந்து சந்நிபாதத்தினால் உண்டாகும் ஒரு வகையான மூர்ச்சை நோய்.

போகின்றன. ஏனெனில், தோஷங்களால் பூசப்பட்ட உடலில் ரஸத்தைச் சுரக்கும் குழாயானது ரஸத்தை ஏந்தி வருவதில்லை. எனவே ஆரோக்கிய நிலையிலேயே முறைப்படி வாந்தி முதல் பல சோதனைச் சிகிச்சைகளைச் செய்விக்க வேண்டும்.

[1]லங்கனம் மற்றும் [2]பாசனங்களால் தணிந்து போன தோஷங்கள் சில சமயம் பீறிட்டெழலாம். இவை [3]ஸம்சோதனம் என்னும் சிகிச்சையால் மறுபடியும் தோன்றுவதில்லை.

(28—36)

சிகிச்சை முறை:—

காலமறிந்த மருத்துவன் உடலைச் சுத்தம் செய்த பிறகு, பொருத்தமான [4]சித்த ரசாயனங்களையும் [5]விருஷ்ய யோகங்களென்னும் உடலுக்குப் பலமளிக்கும் மருந்துகளையும் பயன்படுத்த வேண்டும்.

சிகிச்சையினால் உடல் மெலிந்து விட்டால், பத்தியத்தை அளிக்கின்ற, உடலை வளர்க்கும் கீழ்க்கண்ட உணவு முறையால் உடலைப் பலப்படுத்த வேண்டும். சம்பா அரிசி, அறுபதாங் குருவையரிசி, கோதுமை, பச்சைப்பயிறு, மாமிசம், நெய் முதலிய உள்ளத்திற்கு உவந்த உணவுப் பொருள்கள், மற்றும் சட்ராக்னியை வளர்க்கின்ற மருந்து வகைகளுடன் பக்குவம் செய்ததும் சுவை தருவதும், அக்னியை வளர்க்க வல்லதுமான உணவு, எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், உடல் தேய்த்தல், ஸ்நானம், நிரூஹ வஸ்தி என்னும் [6]கஷாய வஸ்தி [7]ஸ்நேஹ வஸ்தி என்னும் எண்ணெய் வஸ்தி இவற்றை உபயோகிக்க

---

1. லங்கனம்—பட்டினி போடுதல் முதலிய சொற்பச் சிகிச்சை.
2. பாசனம்—பக்குவமாகாத உணவை செரிக்கச் செய் வித்தல்.
3. ஸம்சோதனம்—வாந்திக்கு அல்லது பேதிக்கு மருந் தளித்து உடலைச் சுத்தம் செய்தல்.
4. சித்த ரசாயனம்—மூப்பையும் நோயையும் நீக்கும் உயர் மருந்து.
5. விருஷ்யயோகம்— ஆண்மையை வளர்க்கும் மருந்து
6. கஷாய வஸ்தி— ஆசன வாயில் வஸ்தி கருவியினால் கஷாயம் செலுத்துதல்.
7. ஸ்நேஹ வஸ்தி— ஆசன வாயில் வஸ்தி கருவியினால் எண்ணெய் செலுத்துதல்.

வேண்டும். இதனால் நோயாளிகளுக்கு அமைதியும், சுசுமும் உண்டாகும். சடராக்னியும், [1]தாத்வக்னியும் வளர்கின்றன. புத்தி, வர்ணம் இவற்றில் தெளிவு உண்டாகிறது. புலன்களின் தெளிவு, நீண்ட ஆயுள் இவை வளர்கின்றன.

7. ஆகந்துக ரோகமும் சிகிச்சையும்

பூதம், விஷம், வாயு, காயம், முறிவு முதலியவைகளால் தோன்றுபவைகளும், காமம், குரோதம், பயம் முதலிய மான சிகக் காரணங்களால் தோன்றுபவைகளுமான எல்லா நோய் களும் ஆகந்துகமெனப்படும். *(37—41)*

இதை நீக்க மதியிழப்பினால் செய்யும் தவறுகளைச் செய்யா திருத்தல், புலன்களின் அமைதி, ஞாபக சக்தி, தேசகாலங்கள், மற்றும் ஆன்மாவின் அறிவு, நன்னடத்தையைக் கடை பிடித்தல், அதர்வவேதத்தில் கூறப்பட்ட சாந்தியைக் கடைபிடித்தல், எதி ரிடையான கிரகங்களுக்குப் பூசை, பூதவித்யையில் கூறியபடி பூதங்கள் அருகில் வராமல் செய்வதற்கான வழிகளை ஏற்றல் போன்ற முறையைக் கைக்கொள்ளலாம். இவ்வாறு தோஷங் களால் தோன்றும் நோய்களும் புறக் காரணங்களால் தோன்றும் நோய்களும் தோன்றாமலிருப்பதற்கும், தோன்றிய நோய்கள் அடங்குவதற்கும் சுருக்கமான சிகிச்சை முறைகளாகும். *(42—44)*

8. நோயற்ற வாழ்வு

குளிர் காலத்தில் குவிந்திருக்கும் தோஷங்களை வசந்த ருதுவிலும், வெயிற் காலத்தில் குவிந்து இருக்கும் தோஷங்களை மழைகாலத்திலும், மழைகாலத்தில் சேர்த்து வைத்த தோஷங் களை சரத்ருது என்னும் இலையுதிர் காலத்திலும் நன்றாகச் சோதனை செய்தால், பருவநிலைகளால் ஏற்படும் நோய்கள் ஒரு பொழுதும் வராது.

தினந்தோறும் இதமான உணவு, நன்னடத்தை இவைகளை ஏற்பதாலும், ஆராய்ந்து செயல்படுவதாலும், விஷயங்களில் பற்றின்றியிருப்பதாலும், தானம் செய்வதாலும், சமநோக்குக் கொண்டிருப்பதாலும், உண்மையாக ஒழுகுவதாலும், பொறுமை யாலும், ஆப்த நண்பர்களைச் சார்ந்திருப்பதாலும் மனிதன் நோயற்று வாழ்கிறான்.

---

1. தாத்வக்நி— ரசம், ரத்தம் முதலிய தாதுக்களில்உள்ள அக்நி.
2. ஆகதுகம்— வாத பித்த தோஷங்களல்லாது புறக் காரணங்களால் தோன்றும் நோய்.

கிடைக்காத பொருள்களுக்காக வீண்முயற்சி செய்யாதவனுக்கும், கிடைக்கும் பொருள்களுக்காக முயற்சி செய்பவனுக்கும், புலனடக்கமுள்ளவனுக்கும் நோய் தோன்றுவதில்லை. அதாவது நோய் விளைவிக்கும் முன்கருமம் இல்லாவிடில் இவ்வாறு நடக்கும். அது இருந்தால் நோய் வரும்.

காலம் ஏற்றதாக இருத்தல், மனத்திற்கு இனியதான நுகர்ச்சிப் பொருள்கள், தருமத்தை முக்கியமாகக்கொண்ட, இரு உலகங்களிலும் நலமளிக்கும் செயல்கள், சுதந்திரமான உள்ளம், தெளிந்த அறிவு இவை தைரியம் உள்ளவனுக்கு இன்பம் அளிப்பவை. *(45—48).*

அஷ்டாங்கசங்கிரகம் ஸூத்ர ஸ்தானத்தில் ரோகானுத்பாதனீயம் என்னும் ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறாவது அத்தியாயம்

*திரவத் திரவிய விஞ்ஞாநீயம்

இனி ஆத்ரேயர் முதலான முனிவர் கூறியவாறு திரவத் திரவிய விஞ்ஞாநீயம் என்னும் அத்தியாயத்தை விளக்குவோம். (1—2)

1. நீர் வகை

நீரானது உயிர் வாழ்வையளிப்பது, மன நிறைவை ஏற்படுத்துவது. இதயத்திற்கு இதமளிப்பது, மகிழ்ச்சியூட்டுவது, அறிவில் திறமையைத் தோற்றுவிப்பது. நொய்தானது. தெளிவாகத் தெரியாத இனிப்பு போன்ற சுவையுடையது. மனதுக்கு உவகையளிப்பது, சுத்தமானது. குளிர்ச்சியானது, லேசானது. அமுதத்திற்கு ஒப்பானது. கதிரவனால் இழுத்துக் கொள்ளப்பட்டு மறுபடியும் கீழே விழுவதால் லேசானது. வாதம், கபம், இரண்டையும் அழிக்கவல்லது. குளிர்ச்சியாகவும், உயிரூட்டுவதாகவும், நன்மை பயப்பதாகவும் இருப்பதனால் இது பித்த நோய், இரத்த நோய், விஷ நோய் இவற்றை அகற்றுகின்றது.

[ஆகாயத்திலிருந்து நழுவி இரவி, மதி, காற்று ஆகியவற்றின் தொடர்புடன் கிடைக்கும் நீர், 'காங்கம்' என்றும், ஸாமுத்ரம் என்றும் இருவகையாகப் பகுக்கப்படுகிறது. இந்நீர் தேசம், காலம் இவற்றிற்கேற்ப, நன்மையோ தீமையோ விளைவிப்பதாகிறது. வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்பட்ட தூய்மையான சம்பா நெல்லரிசியின் சாதம், எந்த மழை நீரினால் நனைக்கப்பட்டாலும் நொய்ந்து போகாமலும், நிறம் மாறுபடாமலும் இருக்கிறதோ, அந்த மழை நீர்தான் 'காங்கம்' எனப்படுகிறது. இதற்கு மாறானது 'ஸாமுத்ரம்' எனப்படும். சோறு எந்த நீரின் சேர்க்கையால் நொய்ந்தும், நிறம் மாறியும் கெட்டுவிடுகிறதோ அந்த நீர் ஸாமுத்ரம் எனப்படுகிறது.]

---

*நீர் பால் முதலிய திரவப் பொருட்களைப் பற்றிய விவரம் கூறப்படுவதால் இவ்வாறு பெயர் பெறுகிறது.

2. காங்கோதகம்[1]

மழை நீர் ஆகாயத்திலிருந்து விழும்போது கதிரவன், சந்திரன், காற்று இவற்றால் தீண்டப்பட்டு நன்மை - தீமை விளைவிப்பதற்காக இடம், காலம் என்பனவற்றை எதிர்பார்த்திருக்கிறது (3—5)

மார்கழி-தை மாதங்களில் விளையும் சம்பா அரிசியினால் ஆக்கப்பட்ட சாதம் வெள்ளிப் பாத்திரத்தில் கங்கை நீரை ஊற்றுவதால் கெட்டுப் போவதில்லை. கெட்ட நாற்றம் வீசாது. நிறம் மாறுபடுவதில்லை. இந்த நீர் பருகுவதற்குத் தகுதியானது. இதற்கு எதிரிடையானது [2]ஸாமுத்ர நீராகும். ஸாமுத்ரம் எனப்படும் இந்த நீரை ஐப்பசி மாதம் தவிர வேறு மாதங்களில் பருகக் கூடாது. (6)

3. பருகுவதற்கு ஏற்ற நீர்

நிலத்தைத் தோண்டி எடுத்த நீர், அருவி நீர், சுற்பாறையிலிருந்து பாய்ந்து வரும் நீர், துணியினால் வடிக்கட்டின நீர், பொன் அல்லது மண் பாத்திரத்தில் வைக்கப்பட்ட நீர், வேறு பொருளுடன் தொடர்பில்லாத மழை நீர் இவற்றையே எப்பொழுதும் பருக வேண்டும். மழை நீர் கிடைக்காவிடில் அதற்கு ஈடான நிலத்து நீரைப் பருகலாம். (7—8)

4. இடத்திற்கு ஏற்ப நீரின் நிலை

வெண்மையான மண்ணில் துவர்ப்புச் சுவையும், கருப்பு மண்ணில் இனிப்பும், பாண்ட்ரம் எனும் சிவப்பும் வெளுப்பும் கலந்த மண்ணில் கசப்புச் சுவையும், நீல நிற மண்ணில் துவர்ப்பும் இனிப்பும், உவர் மண்ணில் உப்பும், கபிலத்தில் (கரு மஞ்சள்) சிறிது உப்பும் உள்ளன. மேற்கண்ட மண்கள் கலந்த நிலத்தில் உள்ள நீரிலும் பல குணங்கள் உள்ளன.

நீர்த்தத்துவம் அதிகமான இடத்தில் இனிப்புச் சுவையும், நிலத்தத்துவம் அதிகமான இடத்தில் உப்பும் புளிப்பும் கலந்த சுவையும், உஷ்ண (சூடு) தத்துவம் அதிகமான இடத்தில் கசப்பும் கார்ப்பும் கலந்த சுவையும், வாயு (காற்று) தத்துவம் அதிகமான இடத்தில் துவர்ப்புச் சுவையும், ஆகாய தத்துவம் அதிகமான

---

1. காங்கோதகம்—சுத்தமான நீர்; இது 'கங்கைநீர்' என வழங்கப்படுகிறது.

2. ஸாமுத்ர நீர்—இதில் தூசு கிருமிகள் அசுத்தம் முதலியவை கலந்திருப்பதால் கடல்நீருக்குச் சமமானது. 'கடல் நீர்' என்று வழங்கப்படுகிறது.

இடத்தில் தெளிவில்லாத சுவையும் தண்ணீருக்கு ஏற்படுகின்றன. ஆதலால் இடத்திற்கு ஏற்ப நீரின் சுவை மாறுபடுவதைக் கவனிக்கலாம்.

கருப்பும் வெளுப்பும் உள்ள நிலத்தில் உள்ள நீர் கதிரவன், காற்று இவற்றால் தாக்கப்பட்டு புனிதமாக (சுத்தமாக) ஆகிறது. (9—11)

5. எட்டு வகையான நீர்

1. கிணற்று நீர் 2. ஏரியில் உள்ள நீர், 3. சிறுகுளத்து நீர், 4. மலையிலிருந்து நிலத்தைப் பிளந்துகொண்டு பெருகும் நீர் 5.. நீர்வீழ்ச்சியிலிருந்து பெருகும் நீர் 6. ஊற்று நீர் 7. நடபாவி நீர். 8. ஆற்று நீர் என நீர் எண் வகைப்படும்.

1. கிணற்று நீர்—கடுப்பானது, பித்தத்தைத் தோற்றுவிப்பது.
2. ஏரியில் உள்ள நீர்—சிறிது வாதத்தை ஏற்படுத்தும். இனிப்புச் சுவையுள்ளதும் இலகுவாகவும் இருக்கும்.
3. குளத்து நீர்—குரு குணமுள்ளது. வாதத்தைத் தோற்றுவிக்கும்.
4. மலையில் பாறைக்கடியில் உள்ள நீர்—பித்தமுண்டாக்கும்.
5. அருவி நீர்—வாத பித்த கபங்களை அழிக்கும்.
6. நிலத்தைப் பிளந்து கொண்டு வரும் நீர்—இனிமையாகவும், பித்தத்தை நீக்குவதாகவும் இருக்கும். (ஊற்று நீர்)
7. நடபாவி நீர்—இனிமையாகவும், இலேசாகவும், இருக்கும்.
8. ஆற்று நீர்—வாதத்தைத் தோற்றுவிக்கும். வரட்சியும் கார்ப்பும் உள்ளது.

இவை தன்வம் என்னும் காட்டுப் பிரதேசங்களிலும், நீர் சூழ்ந்தஇடத்திலும், மலைக்கு அருகிலுமிருந்தால் இந்த இடங்களையொட்டி இலேசாகவும், பருமனாகவும் உள்ளமையை (குரு, லகு என்பதை) அறிந்து கொள்ள வேண்டும். (12—15)

6. சில நதி நீர்களின் குணங்கள்

சுருங்கக் கூறின் மேற்குக் கடலில் கலப்பதும், வேகமாகப் பாய்கின்றதும், சுத்தமான நீர் உள்ளதுமான ஆறுகளின்நீர் நன்மை பயக்கக்கூடியது. இதற்கு எதிரிடையானது நன்மையைத் தராது-

*பாறைகள் கற்களில் தாக்குவதால் தாக்குண்ட மலய மலையில் தோன்றும் நீருள்ள ஆறுகளும், இமய மலையிலிருந்து தோன்றும் ஆறுகளும் நன்மையளிப்பவை.

நிலையாகத் தேங்கி நிற்கும் ஆற்றுநீர் கிருமி ரோகம், யானைக்கால், இதயநோய் தொண்டை நோய், தலைநோய்கள் இவற்றைத் தோற்றுவிக்கின்றது.

கிழக்குத் திசையில் உள்ள வங்காளம், மாலவம், கொங் கணம் என்ற இடங்களில் தோன்றிய ஆறுகள் மூலம் அர்சஸ் என்ற நோயையும், மகேந்திர மலையில் தோன்றிய ஆறுகள், உதரம் என்னும் பெருவயிறு நோய், யானைக்கால் நோய் இவற் றையும், ஸஹ்ய மலை, விந்திய மலைகளிலிருந்து தோன்றும் ஆறுகள், குஷ்டம், பாண்டு, தலைநோயையும், பாரியாத்திரம் என்னும் மலையில் தோன்றிய ஆறுகள், வாதம் பித்தம், கபம் இவற்றால் தோன்றும் தோஷங்களையும் தம் தம் நீரால் போக்கும். பலத்தையும் உடல் உறுதியையும் அளிக்கும். கடல் நீர் மூவகையான தோஷங்களை உண்டாக்கும். (16—20)

7. கெட்டுப் போன நீர்

சிலந்தி முதலிய பூச்சிகள், பாம்பு முதலானவற்றின் சிறுநீர், மலம், சவம், இவை அழுகி விடுவதாலும், புற்குவியல், குப்பை, சாணங்கள் கலப்பதாலும் அழுக்காகி நீர் கெட்டு விடுகிறது.

சேறு, தாமரை, பாசி, ஹடம் என்ற ஒரு வகைப் புல், இலைகள் போன்றவை நிறைந்ததும், கதிரவன், சந்திரன்,காற்று இவற்றின் தொடர்பு அற்றதும், சின்னஞ்சிறிய பிராணிகளைக் கொண்டதும், அப்பொழுதே பொழிந்த மழை நீர் கலந்ததும், கலங்கியதும், அழுக்குற்றதுமான நீர் கெட்டு விடுகிறது.

மிகவும் பருமனான நுரையுடன் கூடியதும், சுவையற்றதும், மணமுள்ளதும், சூடாகவோ அதிக குளிர்ச்சியாகவோ உள்ள நீரினல் பற்கூச்சம் உண்டாகும். பற்களைப் பயன்படுத்த முடி யாது. பருவமில்லாக் காலத்தில் பொழிந்த மழை நீரும், பருவம் தொடங்கி முதன்முதலில் பொழிந்த நீரும், சிலந்தி முதலியவற்

*இமயமலை, மலையமலைகளிலிருந்து தோன்றும் நதிகளின் நீர், கற்குவியல்களினூடே பாய்ந்து, அடிபட்டுச் சிதறி ஓடி, இலேசாக்கப்படுவதால், யாவருக்கும் இதமாகயிருக்கிறது. இமய மலயமலைகளிலிருந்து ஓடும் இதே நதிகள் முன் கூறியபடி இல்லா மல் தங்கி ஓடுமிடங்களில் கிருமி, ஆனைக்கால்-நோய், இதயம், தொன்டை, தலே நோய்களே உண்டாக்குகிறது.

றின் நூல், சிறுநீர், விஷம், இவற்றின் சேர்க்கையின் காரண மாகக் கெட்டுப் போன நீரும், நீராடுவதாலும், பருகுவதாலும் தண்ணீர் தாகம், வயிற்றுப் பொருமல் [1]மகோதரம், காய்ச் சல், இருமல், சடராக்னி குறைதல், கண்வலி, தினவு, தொண்டை நோய் போன்றவற்றைத் தோற்றுவிக்கின்றன. அதனால் கெட்டுப் போன நீரைப் பயன்படுத்தலாகாது.

வேறு நீர் இல்லாதபோது இதைக் கெட்டியான துணியால் வடிக்கட்டிப் பயன்படுத்தலாம். இதைப் புழு பூச்சிகள் கலக்கா மல் காக்க வேண்டும்.

கெட்டுப் போன நீரை, கதிரவனின் வெப்பத்தாலும், நெருப்பில் காய்ச்சிய இரும்பு உருண்டையைப் போடுவதாலும், [2]பர்ணி மூலம், தாமரைத் தண்டு, முத்து, சேராங்கொட்டை, பாசி இவற்றாலும், துணி, கோமேதகம் என்ற மணியினாலும் தெளியச் செய்யலாம்.

அதன் கெட்ட நாற்றத்தை அரளி, பாதிரி, புங்கு இவற்றின் மலர்களினால் போக்கலாம். ஓரிடத்து நீர், அதாவது கிணற்று நீரைப் பருகி அது சீரணமாகாத நிலையில், வேறிடத்து நீரை, அதாவது குளம் ஆறு போன்றவற்றின் நீரைப் பருகலாகாது. இது போல் குளிர்ந்த நீர் (தண்ணீர்) பருகி, அது சீரணமாகாத நிலையில் கொதிக்க வைத்த நீரைப் பருகலாகாது. அதாவது குளிர்ந்த நீர் அஜீர்ணமாயிருக்கும்போது, வெந்நீர் அருந்தி, நீர் மாற்றக் கலவையால் நேரும் கேடான விளைவுகளுக்கு ஆளா கலாகாது. ஆனால் வெந்நீர் பருகிப் பழகியவர் அது செரித்த நிலையிலும் தண்ணீர்ப் பருகலாகாது. தண்ணீர்ப் பருகுவதிலும் இந்த முறையைக் கடை பிடித்தல் வேண்டும். தண்ணீர் பருகிப் பழகியவர் வெந்நீர்ப் பருக நேர்ந்தால், அது (வெந்நீர்) அசீர்ண மாயிருக்கும்போது பனிக்கட்டிபோல் குளிர்ந்த நீரைப் பருகலா காது. *(21—29)*

8. நீரின் இன்றியமையாமை

தண்ணீர் எல்லாப் பிராணிகளுக்கும் உயிர் போன்றது. உலகம் எல்லாம் தண்ணீர் மயமே. தண்ணீரில்லாமல், நோயாளி, நோயற்றவன் ஒருவரும் வாழ முடியாது. எனவே எதை மறுத்தாலும் தண்ணீரை மறுக்க முடியாது. தண்ணீர் இல்லா விடில் வாய் உலர்ந்து விடும். உடலில் வலி ஏற்படும். மரணமும் ஏற்படும். *(30—31)*

---

1. மகோதரம்—வயிற்றுக்குள் நீர் தங்குதல்.
2. பர்ணிமூலம் - ஒரு வகை வேர்

9. அளவான நீரே அமிர்தத்திற்கு ஒப்பானது

சுத்தநீர், மருந்துடன் கூடியது, கொதிக்க வைத்தது, குளிர்ந்தது, சூடானது என ஐந்து வகையான நீரை ஆராய்ந்து, அளவாகப் பயன்படுத்தினால் அது அமுதத்திற்கு ஒப்பாகும். இல்லாவிடில் அது விஷத்திற்கு ஈடாகும்.

மிகவும் தாகமாக இருக்கும்பொழுது பருகும் அதிக நீரானது பித்த கபமாக மாறுகிறது. குறிப்பாக காய்ச்சலின்போது கொடுக்கப்பட்ட குளிர் நீரானது பித்த-கபத்தை வளர்த்து ஆமம் எனும் அசீரணம், தண்ணீர்த் தாகம், தூக்கம், சோம்பல், வயிற்று உப்புசம், உடல் பளுவாதல், இருமல், சடராக்னி குறைதல், அருவருப்பு, (மனப் பிரட்டல்) வாயிலிருந்து உமிழ் நீர் சுரத்தல் [1]சுவாசம் [2]பீனஸம் என்ற நோய்கள் உண்டாகும்.

எல்லா வகையான நீரும் சீரணித்த பின் இனிய சுவையுடையதாயிருக்கும். இது சூடாயிருந்தாலும், வீரியத்தில் குளிர்ந்ததாகவே இருக்கும். ஆகவே நீர் லேசாக இருப்பதால் மிகச் சிறிதளவாவது பருக வேண்டும். பருகாமலே இருத்தல் கூடாது. *(32—35)*

10. வெதுவெதுப்பான நீர்:

கபத்தின் மூலம் அசீரணம் ஏற்பட்ட போதிலும், வாதத்தினால் அசீரணம் ஏற்பட்ட போதிலும், தாகமில்லாவிடினும், சோறு நனையுமளவு தண்ணீரை அருந்த வேண்டும். மிகவும் அதிகமாகப் பருகினால் சடராக்னி தணிந்து விடும். கபவாதங்களின் காரணமாக வயிற்றில் தங்கியுள்ள உணவானது, சுடு நீரால் உருகி ஆமாசயத்தின் கட்டிலிருந்து விலகி விரைவில் சீரணிக்கிறது.

தோஷங்களை உடைய, நிலைபெறாத சீரண சக்தியுள்ளவன், நோய் காரணமாக பலக்குறைவுள்ளவன் இவர்கள், சிறிதளவுகூட குளிர்ந்த நீரைப் பருகலாகாது.

நீரும் நெருப்பும் ஒன்றுக்கொன்று பகையாதலால் குளிர்ந்த நீரை சிறிதளவு பருகினாலும், மூவகை தோஷங்களையும் அதி

---

1. சுவாசம் - மூச்சுத் திணறல்.
2. பீனஸம் - நாட்பட்ட ஜலதோஷம்.

கரிக்கச் செய்யும். எனவே சீரண சக்தி குன்றியவன் குளிர் நீரைப் பருகலாகாது.

கண்களில் நீர் வடிதல், மண்ணீரலில் தோன்றும் நோய், கட்டி, குன்மம், பித்த பாண்டு, வயிற்றுநோய், கழிச்சல், மூல நோய், கிரஹணி, உடல் இளைத்தல், வீக்கம் இவை உள்ளவர் எந்த நீரையும் பருகலாகாது. இந்நோய் உள்ளவர்கள் தண்ணீர் பருகாமல் இருக்க முடியாவிட்டால் மருந்து கலந்த நீரைச் சிறி தளவு பருகலாம்.

நோயற்ற நிலையிலும், வெயிற்காலம், இலையுதிர்காலம் இவற்றைத் தவிர்த்து மற்ற காலங்களிலும், சிறிதளவு வெந்நீரைப் பருக வேண்டும். *(36— 40)*

11. உண்ணும் நேரத்தில் நீர் பருகுவதின் பயன்

உண்பதற்கு முன் பருகிய நீர் சீரணக் குறைவையும் உடல் இளைப்பையும் உண்டாக்கும். புசித்த பின் பருகும் நீர் உடற் பருமனையும் சீரணப் பையின் மேற்பகுதியில் கபத்தையும் ஏற்படுத்தும்.

உணவுக்கிடையே பருகும் நீர் பருக்கவோ இளைக்கவோ செய்யாமல் உடலைச் சமநிலையில் வைக்கும். தாதுக்களின் சமநிலையை ஏற்படுத்தி உணவை எளிதில் சீரணிக்கச் செய்யும். *(41— 42)*

12. குளிர் நீர் பருகுவதன் பயன்

குளிர் நீர் பருகுவதால், குடிவெறி, உடல் அழற்சி, மயக்கம், வாந்தி, களைப்பு, தலைசுற்றல், நாவறட்சி, உடல் எரிச்சல், பித்தம், இரத்தக் கொதிப்பு, நஞ்சு இவை நீங்கும்.

13. சுடுநீர் பருகுவதன் பயன்

இடம், பருவம், பசு, இலேசு இவற்றை ஆராய்ந்து, நான்கில் ஒரு பங்கு, மூன்று பங்கு, அரை பாகம் குறையும்படி கொதிக்கச் செய்த, நுரையில்லாத, வேகமற்ற, சுத்தமான நீர் நன்மையையளிக்கும்.

விக்கல், வயிறு உப்புதல், வாதம், கபம், நாவறட்சி, இருமல், மூச்சுத் திணறல், முற்றின ஜலதோஷம், பக்கச் சூலை, ஆம தோஷம், கொழுப்பு இவற்றிலும், அப்பொழுதே உடலைச் சுத்தி செய்த நிலையிலும் புதிய சுரத்திலும் இந்த நீர் பருகுவது நன்மை பயக்கும்.

இந்த நீர் சடராக்னியை வளர்க்கும், சீரணிக்கவும் செய்யும். தொண்டைக்கு நன்மையளிக்கும், இலகு குணமுள்ளது. சிறு நீர்ப்பையை தூய்மைப்படுத்தும்.

கல், வெள்ளி, மண், பொன், கொம்பரக்கு இவற்றால் சூடாக்கப்பட்டதும், அல்லது கதிரவனின் கிரணங்களால் சூடாக்கப்பட்டதுமான நீரையோ, அதே நீரைக் குளிரச் செய்தோ பருகினால் மூன்று தோஷங்களும், நாவறட்சியும் நீங்கும்.

கொதிக்க வைத்து ஆறிய நீர் லகுவானது. வறட்சியற்றது, களைப்பை நீக்குவது.

பித்தமும் கபமும் சேர்ந்த நிலையிலும் [1]ஸந்நிபாதத்திலும் மேற்கண்ட நீர் நலம் தரும்.

சூடாக்கி,குளிர்ச்சி செய்யப்பட்டு,ஓர் இரவு தங்கிய நீரானது நெருப்பின் இலேசான தன்மையையும், சடராக்னியை வளர்க்கும் தன்மையையும் இழந்து விடுவதால்,சீரணத்தின் இறுதியில் புளிப்புச் சுவையை அளிப்பதோடு மூவகை தோஷங்களையும் வளர்ப்பதாகவும் ஆகிறது. *(43—48)*

பனிக்கட்டி அல்லது பனித்துளிகள் கலந்த, குளிர்ந்த நீர் குருகுணம் உடையதாகவும், ஓடாமல் நிலையாகவும், கெட்டியாகவுமிருப்பதால் கப வாதங்களை எழுப்புகிறது. சந்திரகாந்தக் கல்லில் தோன்றிய நீர், அரக்கர் முதலிய க்ரஹங்களினால் தோன்றும் தீமைகள், நஞ்சு, பித்தம், காய்ச்சல் இவற்றை நீக்கும். கண்பார்வை, மூளை, உடல் இவற்றை நிலைப்படுத்தும். மேலும், இனியதும் குளிர்ந்ததும் இலகுவானதுமாகும். *(49 -50)*

14. இளநீரும்—மழை நீரும்

இளநீர் வறட்சியற்றதன்மை, எண்ணெய்ப்பசை, இனிப்புச் சுவை, குளிர்ச்சி, லகு,ஆண்மை வளர்ச்சி இவற்றைக் கொண்டதாகும். நாவறட்சி, பித்தம், வாதம் இவற்றை அகற்றும், சடராக்னியை வளர்க்கும், சிறுநீர்ப்பையை தூய்மைப்படுத்தும். மாரிக்காலத்தில் மழைநீர் உடலுக்கு மிகவும் சிறந்தது. ஆற்று நீர் மிகவும் தீமையளிக்கக் கூடியது. *(51)*

நீர் வகை முற்றும்.

---

1. ஸந்நிபாதம்—வாத பித்த கபங்கள் மூன்றும் வீறு கொண்டு எழுதல்.

2. பாலின் வகை

பால் எண் வகையானது. அது பசு, எருமை, ஆடு, ஒட்டகம், தாய், செம்மறியாடு, யானை, குதிரை இவற்றினுடையவை.

1. பாலின் பொது குணங்கள்

எல்லா வகையான பாலும் பொதுவாகச் சுவையிலும் பாகத்திலும் இனிமையானது. பசையுள்ளது. [1]ஓஜஸை அளிக்கவல்லது, தாதுக்களை வளர்ப்பது, வாதம், பித்தம் இவற்றைக் குறைப்பது. ஆண்மையை வளர்ப்பது. கபத்தை அதிகரிக்கச்செய்வது. பளுவானதும் குளிர்ச்சி பொருந்தியதுமாகும். (52—53)

2. பசுவின் பால்

உயிர்வாழ்வுக்கு இதமானது. முதுமையையும், நோய்களையும் நீக்கும் சிறந்த மருந்துப் பொருள். மார்பின் உட்காயம், தாதுக்களின் வலிமைக்குறைவு இவற்றிற்குச் சிறந்த மருந்து. மூளைக்கு நல்லது. உடலுக்கு நல்ல நிறத்தைக் கொடுக்கவல்லது. தாய்ப்பாலை வளர்க்கிறது. மலத்தை நெகிழச் செய்கிறது. களைப்பு, தலைசுற்றல், பித்தவெறி முகக்களையின்மை [2]சுவாச நோய், இருமல், நாவறட்சி, பசி, நாட்பட்ட சுரம், நீர்ச்சுருக்கு, இரத்தபித்தம் என்ற நோய்களைப் போக்க வல்லது. (54—55)

3. எருமைப் பால்

சடராக்னி அதிகமுள்ளவன், தூக்கமில்லாதவன் இவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியது. குரு குணமும் குளிர்ச்சியான வீர்யமும் உடையது. (56)

4. வெள்ளாட்டுப் பால்

வெள்ளாடுகள் நீரைச் சிறிதளவே பருகுவதாலும், அதிகம் ஓடியாடித் திரிவதாலும், காரமும் கைப்புமுள்ள பச்சிலைகளை உண்பதாலும் அவற்றின் பால் லகு குணமுடையதாகும். இது எலும்புருக்கி நோய், காய்ச்சல், சுவாசம், இரத்த பித்தம், அதிசாரம் என்ற கழிச்சல் நோய்களையும் போக்கும். (57)

---

1. ஓஜஸ் என்பது ஏழுதாதுக்களின் ஸாரம். அல்லது உடலுக்கு வலிமையையும் காந்தியையும் அளிக்க வல்லது.
2. சுவாஸநோய்—மூச்சுத்திணறல்.

5. ஒட்டகப் பால்

சிறிதளவு வறட்சியைக் கொடுக்கும், உஷ்ண வீர்யமுள்ளது. உப்புச் சுவையுடன் கூடியது. சடராக்னியை வளர்ப்பதும் லகு குணமுள்ளதுமாகும். வாதம், கபம், வயிற்று உப்புசம், கிருமி நோய், உடல் வீக்கம், பெருவயிறு, மூலநோய் இவற்றிற்கு மிகவும் சிறந்தது. (58)

6. தாய்ப் பால்

[1]தர்ப்பணம் [2]ஆச்சோதனம், [3]நஸ்யம் என்ற முறைகளால் வாதம், பித்தம், இரத்த நோய், அடிபடுதல் முதலியவற்றால் ஏற்படும் காயம், கண்ணோய் ஆகியவற்றை அகற்றும். (59)

7. செம்மறியாட்டுப் பால்

உஷ்ண வீர்யமுள்ளது. இதயத்திற்கு ஒவ்வாதது. வாத நோயைக் கண்டிப்பது. விக்கல், சுவாசம், பித்தம், கபம் இவற்றை உண்டாக்குவது.

8. யானைப் பால்

அதிக வன்மையைக் கொடுக்கும். (60)

---

1. தர்ப்பணம்—கண்களுக்கு உண்டாகும் சில கோளாறுகளைப்போக்கி அவற்றிற்கு வேண்டிய வன்மையைக் கொடுத்து திருப்தி உண்டாக்கும் முறை. யவம் என்னும் அரிசி, அல்லது உளுந்தினுடைய மாவை நீரில் பிசைந்து கண்களைச் சுற்றி இரண்டு அங்குலம் உயரமுள்ள சுவர் வைத்து அந்தப் பாத்தியில் நெய், தாய்ப்பால் மூலிகைச் சாறுகள், மூலிகைகளால் தயாரித்த நெய், எண்ணெய் முதலியவற்றை நிரப்பி தேவையான நேரம் வைத்திருந்து செய்யும் சிகிச்சை முறை.
2. ஆச்சோதனம்—கண்களைத் திறந்து மருந்தை இரண்டு அங்குல உயரத்திலிருந்து துளித் துளியாக ஊற்றுவது.
3. நஸ்யம்—மூக்கின் வழியாகச் செலுத்தப்படும் மருந்து, மூலிகைச் சாறுகள், நெய், தாய்ப்பால் போன்றவைகளால் செய்யப்படும் மருத்துவம்.

9. ஒற்றைக் குளம்புள்ள பிராணிகளுடைய பால்

லகு குணமுள்ளது. உஷ்ண வீர்யம் பெற்றது. உடலுறுப்புக்களில் உள்ள வாதத்தை அகற்றுவது. சிறிதளவு புளிப்பும், உப்பும் கலந்த சுவையுடையது. உடலில் திமிரைத் தோற்றுவிக்கும்.

10. காய்ச்சிய, காய்ச்சாத பால்

தாய்ப் பாலை நேரிடையாகவே அருந்துவது சிறந்ததாகும். தாய்ப்பாலைத் தவிர, மற்ற மேற்கண்ட பிராணிகளின் பச்சைப் பால் கபத்தை வளர்க்கக் கூடியது. குரு குணமுள்ளது.

சிறிதளவு காய்ச்சிய பால், அதற்கு நேர்மாறான (லகு) குணமுடையது. அதிகம் காய்ச்சிய பால் குரு குணமுள்ளது.

கறந்த, சூட்டுடன் உள்ள பால் அமுதத்திற்கு ஒப்பாகும். (61—62)

11. பாலின் குரு, லகு நிலைகள்

புளிப்புச் சுவையுள்ள பொருட்கள், எள், தேங்காய், கடலை இவற்றின் பிண்ணாக்கு, இவற்றைத் தின்னும் பிராணிகளுடைய பால் அதிக குரு குணமுள்ளதாய் கபத்தை உண்டாக்க வல்லது.

ஒரே இடத்தில் கட்டியிருப்பதன் காரணமாக மாலைப் பாலைக் காட்டிலும் காலைப்பால் குரு குணமுள்ளதாக இருக்கும். அதேபோல் நடமாடும் பிராணிகளின் பால் இலகு குணம்கொண்டிருக்கும். அவ்வாறே பெரிய உடல் உடைய பிராணிகளைக் காட்டிலும் குறுகிய உடல் உள்ள பிராணிகளின் பால் லகு குணமுள்ளது. இந்த முறையை இறைச்சிகளின் குரு, லகு குணங்களை அறியவும் பயன்படுத்தலாம். (63—64)

12. தயிரின் குணங்கள்

இயற்கையாகவும், சீரணித்த பின்பும் புளிப்புச் சுவை கொண்டது. மலத்தைக் கட்டும். [1]குரு குணமும், உஷ்ண வீர்யமும் கொண்டது. வாதத்தைப் போக்கும். கொழுப்பு, விந்து, மலம், கபம், இரத்த பித்தம், சடராக்னி, வீக்கம் இவற்றை உண்டு பண்ணும். சுவையூட்ட வல்லது. சுவையிழந்த நாவிற்கு சுவையளிக்கும். குளிர், முறைக்காய்ச்சல், நாட்பட்ட ஜலதோஷம், நீர்ச்சுருக்கு இவைகளுக்குச் சிறந்தது. கிரஹணி என்னும் நோய்

1. குரு—விரைவில் சீரணிக்காதது

கண்டால் ஏட்டை நீக்கிய தயிரைப் பயன்படுத்தல் சிறந்த முறையாகும்.

இரவில் தயிர் பருகக்கூடாது. சூடாக்கியும் பயன்படுத்தக் கூடாது.

வஸந்தம் (சித்திரை-வைகாசி மாதங்களிலும்,) கிரீஷ்மம் (ஆனி-ஆடி, மாதங்களிலும்) சரத்ருது (ஐப்பசி - கார்த்திகை மாதங்களிலும்) தயிரை உபயோகிக்கக் கூடாது.

பாசிப் பருப்பு, தேன், நெய், கற்கண்டு, நெல்லிக்கனி இவற்றில் ஏதேனும் ஒரு பொருளுடன் சேர்க்காமல் தயிரைத் தனியாகப் பருகக் கூடாது. தினந்தோறும் தயிர் குடிக்கக்கூடாது. தோயாத தயிரையும் குடிக்கலாகாது. அப்படி குடித்தால் காய்ச்சல்,இரத்த பித்தம் எனும் நோயும், அக்கி, குஷ்டம், இரத்தச் சோகை, தலை சுற்றல் இவையும் உண்டாகும். (65—68)

13. மோரின் குணங்கள்

[1]இலகு குணமுள்ளது. துவர்ப்பும், புளிப்புச் சுவையும் கொண்டது. சடராக்னியை வளர்க்கவல்லது. கப வாதங்களைப் போக்குகிறது. வீக்கம், பெருவயிறு (வயிற்றில் தோன்றும் நோய்கள்) மூலம்,கிர**ஹணி** எனும் நோய், சிறுநீர்த் தடை,அரோசகம் (சுவையின்மை), குன்மம், மண்ணீரலில் தோன்றும் நோய், நெய் அதிகமாகப் பருகுவதால் தோன்றும் பிணிகள், இடுவிஷம், பாண்டு நோய், இவற்றை மோர் நீக்கும்.

காயம் ஏற்பட்டபோதும், கோடை காலத்திலும், உடல் இளைத்தல், [2]மூர்ச்சை, தலை சுற்றல், உடல் எரிச்சல், இரத்த பித்த நோய் இவைகள் ஏற்பட்டிருக்கும் பொழுதும் மோர் அருந்தலாகாது. (69—70)

14. தயிர்த் தெளிவின் குணங்கள்

மோரின் குணங்கள் இதற்கும் உண்டு. மற்றும், மலத்தை இளக்கும், உடல் சுரப்பித் துவாரங்களைச் சுத்தப்படுத்தும், மலக் கட்டை நீக்கும். இலகு குணம் உடையது. (71)

15. புதிதாகக் கடைந்தெடுத்த வெண்ணெயின் குணங்கள்

குளிர்ச்சியானது. இனிப்பு, துவர்ப்பு, புளிப்புச் சுவைகளுடன் கூடியது. எலும்புருக்கி நோய், மூலநோய், முகம் 'கோணுதல்

1. லகு—விரைவில் சீரணிப்பது.
2. மூர்ச்சை—மயக்கம் (நினைவிழத்தல்)

[1](அர்திதம்) இரத்த பித்தம், வாதம் இவற்றைக் குணப்படுத்தும். மலத்தைக்கட்டும். சடராக்னியை வளர்க்கும்.

16. பாலிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெயின் குணங்கள்

மிகவும் மலத்தைக் கட்டும். இரத்த பித்தம், கண்நோய் இவற்றைப் போக்கும். (72)

17. நெய்யின் குணங்கள்

அறிவு, ஞாபக சக்தி, நுண்ணறிவு, சடராக்னி, பலம், ஆயுள், விந்து, கண்கள், சிறுவர், முதியோர், மக்கட்பேறு, உடல் ஒளி, மிருதுத் தன்மை, குரல் இவற்றிற்குச் சிறந்தது.

மார்புக்குள் வலி, உடல் இளைப்பு, அக்கி என்னும் தோல் பிணி, ஆயுதம், நெருப்பு இவற்றால் துன்புற்ற உடல் இவைகளுக்குச் சிறந்தது.

வாதம், பித்தம், நஞ்சு, மனக்கலக்கம், உடல் வறட்சி, முகத்தெளிவின்மை (களையின்மை) காய்ச்சல் இவற்றை நீக்கும்.

நெய், எண்ணெய்ப் பசையுள்ள பொருட்களில் சிறந்தது. குளிர்ச்சியான வீர்யம் உடையது. முதுமை ஏற்படாமல் ஆயுளை வளர்க்கும். இளமையைக் காக்கும்.

அந்தந்த முறைப்படி பக்குவம் செய்யப்பட்ட நெய் ஆயிரம் பங்கு அதிகமான வீரியத்தைப் பெற்று பலவித சிகிச்சைகளில் பயன்படுத்தத் தக்க தகுதி பெறுகிறது.

பழகிய நெய், வெறி, காக்காய் வலிப்பு, மூர்ச்சை, இவற்றையும், தலை, காது, கண், கர்ப்பப்பை இவற்றில் தோன்றும் நோய்களையும் போக்கும் தன்மையுடையது. புண்களைச் சுத்தம்செய்து ஆற்றச் செய்கிறது.

இதில் சாதாரண நெய்யில் உள்ள முன்கூறிய குணங்கள் பன்மடங்கு இருக்கும். இந்தப் பழைய நெய்அமுதத்திற்கு ஈடானது. நெய்த்தெளிவு நெய்யைப் போன்ற குணம் உள்ளது. அமுதத்திற்கு ஒப்பானது. வறட்சியானது. சீக்கிரம் பரவும் குணமுள்ளது. லேசாய் இருக்கும். (73—77)

---

1. அர்திதம்—முகத்தில் ஏற்படும் பக்கவாதம். முகத்தைக் கோணலாகச் செய்யும்.

18. சில திரவப் பொருள்களின் பகுதிகளும், குணங்களும்

[1]கிலாடம் [2]கூர்ச்சிகா, [3]தக்ர பிண்டிகா, [4]மோரடம், [5]க்ஷீர சாகம், [6]பீயூஷம் என்ற பொருட்கள் உடல் வலிமை யளிக்கும். ருசியை உண்டு பண்ணும், சடராக்னியைக் குறைக்கும். விந்து, தூக்கம், கபம் இவற்றை வளர்க்கும்.

மலச்சிக்கலை உண்டாக்கும். குரு குணம் உள்ளவை. வாத பித்த கப தோஷங்களை வளர்க்கும் சக்தி வாய்ந்தவை.

அந்தந்தப் பாலை ஒட்டி தயிருக்கும், நெய்க்கும் உள்ள குண தோஷங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

பாலுக்குள் பசுவின் பாலும், நெய்க்குள் பசுவின் நெய்யும் சிறந்தவை. செம்மறியாட்டின் பாலும் நெய்யும் மட்டமானவை. *(78—80)*

3. கரும்பு ரசம்

1. கரும்புச் சாற்றின் குணங்கள்

கரும்பின் சாறு குருகுணம், எண்ணெய்ப் பசை,உடலைப் பருக்கச் செய்யும் தன்மை, கபத்தையும் சிறு நீரையும் வளர்த்தல், ஆண்மையை அதிகரித்தல், குளிர்ச்சி, வாதத்தைப் போக்கும் தன்மை, உணவு உண்டவுடன் பருகினால் வாதச் சீற்றத்தை ஏற்படுத்துதல், இரத்த பித்தத்தைத் தணிக்கும். இயல்பு, சுவை யிலும் பாகத்திலும்இனிப்புச் சுவை, மலமிளக்கும் தன்மை ஆகிய குணங்களுடன் கூடியது. நுனிக் கரும்பின் சாறு சிறிதளவு

---

1. கிலாடம்—சிறிதளவு பாலில் அதிகமான மோரைச் சேர்ப்பதால் ஏற்படும் தயிர்.
2. கூர்ச்சிகா—பாலை, தயிர் அல்லது மோருடன் சேர்த்துக் காய்ச்சுவதால் ஏற்படும், கெட்டியான பகுதியும் திரவப் பகுதியும்.
3. தக்ர பிண்டிகா—மோரின் அடியில் தங்கும் பகுதி.
4. மோரடம்—கிலாடத்தைக் கடைவதால் உண்டாகும் திரவம்.
5. க்ஷீரசாகம்—பாலைத் தயிர் அல்லது மோருடன் சேர்த்து,காய்ச்சாமல் கெட்டியாகவும் திரவமாகவும் ஆக்கும் பகுதி.
6. பீயூஷம்—கன்று போட்ட சில நாட்கள்வரை கறக்கும் பாலிலிருந்து எடுக்கும் தயிர்.

உப்புக் கரிக்கும் தன்மை கொண்டது. பற்களால் கடித்து சாற்றை உறிஞ்சினால் சர்க்கரைக்கு ஒப்பான சுவை கொண்டிருக்கும். (81—82)

2. இயந்திரத்தில் பிழிந்த கரும்பஞ்சாறு

கரும்பின் அடிப்பகுதியும், நுனிப்பகுதியும், பிராணிகளால் தின்னப் பட்டவையும் சேர்த்துப் பிழிவதாலும் அழுக்குச் சேர்ந்திருப்பதாலும், சிறிது காலம் தங்கியிருப்பதாலும், இயந்திரத்தில் பிழியப்பட்ட சாறு கெட்டு விடுகிறது. அது எரிச்சலை உண்டாக்குவது. குரு குணம் உடையது. மலக்கட்டை ஏற்படுத்துவது. (83)

3. நாமக் கரும்புச் சாற்றின் குணங்கள்

இது குளிர்ச்சி, தெளிவு, இனிப்பு இவற்றில் சிறந்தது. மூங்கிற்கரும்பு இதைவிடக் குறைந்த குணம் கொண்டது. நூறுகணுக் கரும்பு, பேய்க்கரும்பு, நேபாளத்தில் விளையும் கரும்பு, இவை முறையே சிறிது உப்புச் சுவையுடையனவாகவும் சிறிது உஷ்ண வீர்யம் உள்ளனவாகவும், சிறிதளவு எரிச்சல் உண்டாக்குவனவாகவும் இருக்கும். (84—85)

4. வெல்லப்பாகு

குரு குணமுடையதாய், கபத்தை அதிகரிக்கச் செய்து மூவகை தோஷங்களையும் சேமித்து வைக்கக் கூடியதாய், சிறுநீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்றும் தன்மையும் வாய்ந்ததாய் உள்ளது.

5. வெல்லத்தின் குணங்கள்

நன்கு சுத்தம் செய்யப்பட்ட வெல்லம் சிறிதளவு கபத்தைத் தோற்றுவிக்கும். சிறு நீர், மலம் இவற்றை வெளிப்படுத்தும் தன்மை கொண்டது. சுத்தம் செய்யப்படாத வெல்லம், அதிக கிருமிகள், மஜ்ஜை என்னும் தாது, இரத்தம், கொழுப்பு, மாமிசம், கபம் இவற்றை மிகவும் அதிகப்படுத்தும். பழைய வெல்லம் இதயத்திற்கு உகந்தது. உடலுக்கு நலமளிப்பது. புதிய வெல்லம் கபம், சடராக்கினிக் குறைவு இவற்றை ஏற்படுத்தும். (86—87)

6. சர்க்கரையின் குணங்கள்

ஆண்மையை வளர்க்கும், இளைத்தவன், காயமுற்றவன் இவர்களுக்கு நன்மையளிக்கும். இரத்த பித்தம், வாதம் இவற்றை நீக்கும்.

பழுப்பு நிறக் கற்கண்டைவிட வெண்மைநிறச் சர்க்கரை குணத்தில் சிறந்தது. இனிய சுவையுள்ள ஒருவிதப் புல்லின் சாற்றிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை (யாஸ சர்க்கரை) பழுப்புக் கற்கண்டைப் போன்ற குணமும்,கசப்பு, இனிப்பு துவர்ப்புச் சுவையும் கொண்டிருக்கும்.

இது குளிர்ச்சியும், இலகுகுணமும் உள்ளது. காசம் என்ற ஒரு வகைப் புல், தர்ப்பைப் புல் இவற்றால் செய்யப்பட்ட சர்க்கரை மூவகைத் தோஷங்களையும் விலக்கும்.

எல்லா வகையான சர்க்கரையும், எரிச்சல், நாவறட்சி, வாந்தி, மூர்ச்சை, இரத்த பித்தம் இவற்றை அகற்றும்.

கரும்புச் சாற்றால் பக்குவம் செய்யப்படும் முற்கூறிய பொருட்களுள் சர்க்கரை குணங்களில் சிறந்தது. வெல்லப்பாகு குணத்தில் தாழ்ந்தது. (88—90)

இத்துடன் கரும்புரச வகை முற்றும்.

4. தேன்

1. தேனின் குணங்கள்

கண்களுக்கு நன்மையளிக்கும். சேர்ந்திருக்கும் கபத்தை உடைக்கும். நாவறட்சி, கபம், நஞ்சு, விக்கல், இரத்த பித்தம் இவற்றைப் போக்கும்.

குஷ்டம், நீரிழிவு, கிருமி, வாந்தி, சுவாசம், இருமல், கழிச்சல் இவற்றைப் போக்கி, புண்களைச் சுத்தப்படுத்தி, பிளந்த பகுதிகளைச் சேர்த்து புண்ணை ஆற்ற வல்லது. வாதத்தைத் தோற்றுவிக்கும்.

தேன் சுவையில் இனிப்பாகவும், சீரணமாகி மாறுதலடையும் போது 'கடு' என்னும் உறைப்புச் சுவையாகவும் இருக்கும். தேன் சர்க்கரைத் தேனுக்கு ஒப்பானது. (91—92)

2. தேனை அருந்துவதில் எச்சரிக்கை

வண்டுகள் விஷமுள்ள மலர்களிலிருந்தும் தேனைச் சேகரித்து வருகின்றன. விஷமுள்ள தனது உடலிலிருந்தும் தேனைச்

சேர்த்து வைக்கின்றன. அதனால் தேன் இயற்கையிலேயே விஷத்துடன் கலந்திடும் தன்மை கொண்டது. எனவே தேனைச் சூடாக்கியோ, உஷ்ண வீர்யமுள்ள பொருட்களுடன் சேர்த்தோ, உஷ்ணகாலத்திலோ பயன்படுத்தினாலும், உஷ்ணத்தினால் வருந்துபவனுக்குக் கொடுத்தாலும் மிகத் தீங்கு நேரிடும்.

தேன் சீரணிக்காமலேயே வெளிவந்து விடுவதால், வாந்தி எடுக்கச் செய்வதற்கும், கஷாய வஸ்தி என்ற சிகிச்சையிலும் சூடாக்கிய தேனைப் பயன்படுத்தத் தடையில்லை.

குரு, வறட்சி, துவர்ப்பு, குளிர்ச்சி பொருந்திய பொருளாகையால் தேனைச் சிறிதளவே பயன்படுத்த வேண்டும். அதிகமாகத் தேனைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அசீர்ணத்தைவிட வேறு எந்த விதமான கொடிய நோயும் இல்லை.

இத்தகைய அசீர்ணம் சிகிச்சைக்குக் கட்டுப்படாது. மனிதனை விஷம் போல் மாய்த்துவிடும்.

பலவகையான பொருட்களால் ஆக்கப்பட்டதனால், தேன் உயர்ந்த *யோக வாஹி ஆகிறது. எனவே தேனை ஆண்மையை வளர்க்கும் மருந்துகளுடன் கலந்து கொடுப்பதால் ஆண்மையைப் பெறலாம். (93—97)

3. தேனின் வகை

[1]ப்ராமரம் [2]பௌத்திகம், [3]க்ஷௌத்ரம் மாக்ஷிகம் என தேன் நான்கு வகைப்படும். அது முறையே ஒன்றைவிட ஒன்று சிறந்தது. அவற்றில் க்ஷௌத்ரம், மாக்ஷிகம் என்ற வகைத் தேனே பயன்படுத்தத் தக்கது. அதிலும் நாட்பட்ட தேன் மிகச் சிறந்தது. (98)

இத்துடன் தேன் வகை முற்றும்.

---

* யோக வாஹி—ஒரு பொருள் வேறு பல பொருள்களோடு தனித்தனியே சேரும்போது அந்தந்த பொருளின் குணங்களுக்கேற்ற தன்மைகளைப் பெறும் நிலை.

1. ப்ராமரம்—வண்டுகளால் சேகரிக்கப்பட்ட தேன். இதன் நிறம் வெளுப்பு.
2. பௌத்திகம்—பெரிய தேனீக்களால் சேமிக்கப்படும் தேன். இதன் நிறம் மஞ்சள்.
3. க்ஷௌத்ரம்—வளர்க்கும் தேனீக்களால் சேகரிக்கப் படும் தேன் நிறம் சிவப்பு.
4. மாக்ஷிகம்—சிறிய தேனீக்களால் மரத்தின் சிறிய கிளைகளில் சேமிக்கும் தேன். இதன் நிறம் கருப்பு, குணம் கடுமை.

5. எண்ணெய்

1. எண்ணெய் வகை

எல்லா வகையான எண்ணெய்களும், எடுக்கப்படும்பொருள் களின் தன்மைக் கேற்றவாறு குணங்களை அடைகின்றன.

அவற்றுள் முக்கியமானது எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) அது வெகு விரைவில் வேலை செய்யும் விரைவுத் தன்மையுடையது. [1]வியவாயி என்ற குணமுடையது. பருகினால் தோலில் கெடுதலைச் செய்யும். கண்களுக்குத் தீமை விளைவிக்கும். உடலில் உள்ள நுண்ணிய துவாரங்களில் செல்லும் தன்மையும், உஷ்ண வீர்யமும் கொண்டது. கபத்தை வளர்க்காது. வெளி உபயோகத் தினால் இளைத்தவர்களைப் பருக்கச் செய்வதும், உட்கொண் டால் பருத்தவர்களை இளைக்கச் செய்வதும் இதன் குணமாகும். மலச்சிக்கலை தோற்றுவிக்கவும் பூச்சிகளை அழிக்கவும் திறமை வாய்ந்தது.

மேலும் முறைப்படி பக்குவம் செய்யப்படும் நல்லெண்ணெய் எல்லா வகை நோய்களையும் நீக்கும். (99—100)

2. நல்லெண்ணெயின் வரலாறு

முற்காலத்தில் அரக்கர்கள் இந்த எண்ணெயைப் பயன் படுத்தியதால் முதுமையற்று, நோயற்று, களைப்பற்று, போரில் அதிக வலிமையுள்ளவர்களாகத் திகழ்ந்தனர் என்று புராண வரலாறு கூறுகிறது. (101)

3. வெள்ளாமணக்கு எண்ணெய்

கசப்புச் சுவை, உஷ்ண வீர்யம், இனிப்புச் சுவை இவற்றை இதில் காணலாம். மலமிளக்கி, குரு குணம் வாய்ந்தது. முறைப் படி உட்கொள்ள விரை வீக்கம், குன்மம், வாதம், கபம், வயிற்று நோய்கள், முறைக்காய்ச்சல், இடுப்பு, உடலில் மறைக்கப் பட வேண்டிய இடம், குடல், பின்தட்டு இவற்றில் உண்டாகும் குத்தல் வலி, வீக்கம் ஆகியவற்றை வெள்ளாமணக்கு எண்ணெய் போக்கும். (102)

---

1. வியவாயி—பயன்படுத்தியவுடன் உடல் எங்கும் பரவுவது.

4. சிவப்பு ஆமணக்கு எண்ணெய்

[1]தீக்ஷ்ண குணம், உஷ்ண வீரியம், வழவழப்பு, அதன் நாற்றம் (மணம்) இவைகளை இதில் அதிகம் காணலாம். 103)

5. கடுகு எண்ணெய்

சுவையில் கார்ப்பு, தீக்ஷ்ணம், இலகு, உஷ்ண வீரியம் இவைகளைக் கொண்ட இவ்வெண்ணையில் கபம், விந்து, வாதம் இவற்றை நீக்கும் சக்தியைக் காணலாம்.

6. குஸும்பா எண்ணெய், ஆளிவிதை எண்ணெய்

உஷ்ண வீர்யமுடைய இவ்வெண்ணெய் தோல் வியாதி, கபம், பித்தம் இவற்றைத் தோற்றுவிக்கும். (104)

நீர்வாளம், முள்ளங்கி, கடுகு, புளியாரை, வேம்பு, முருங்கை. நாய்வேளை விதை, புங்கு, உவகைச் செடி, சங்கினீமர விதை, கடம்பம், ஒரு வகை தேவதாரு, அகில், தேவதாரு, முருக்கன், ஆச்சாமரம், நீரடிமுத்து, சேராங்கொட்டை இவற்றின் எண்ணெய்கள், தீக்ஷ்ண குணமுடையவை. காரச் சுவை உடையன. ரத்த பித்தம் உண்டாகும், மூலம், குஷ்டம், கிருமி, கபம், விந்து, கொழுப்பு, வாதம் இவற்றை அகற்றும் சக்தியை இதில் பார்க்கலாம். (105—106)

7. புங்கன், வேம்பு எண்ணெய்கள்

இதில் கசப்பான சுவையும் அதிக உஷ்ணம் இல்லாத குணமும் நிறைந்திருக்கும்.

வெண்சிவதை எண்ணெய்

துவர்ப்பு, கசப்பு, கார்ப்புச் சுவைகளுள்ள இதில் புண்களைச் சுத்தம் செய்து ஆற்றும் திறனுள்ளது.

நீரடிமுத்து எண்ணெய், சேராங்கொட்டை எண்ணெய்களில் மிக்க உஷ்ணம், தீட்சணியம், காரம், இவைகள் உள்ளதோடு குறிப்பாக கிருமிகளையும் குஷ்டத்தையும் போக்கும் சக்தியும், மற்றும் வாந்தியினாலும், பேதியினாலும் உடலில் உள்ள தோஷங்களை அகற்றும் திறனும் உள்ளன. தானிக்காய், மாலதி, அக்ரோட், தேங்காய், இலுப்பை, வெள்ளரிக்காய், கக்கறிக்காய்,

---

1. தீக்ஷ்ணம்-கொடூரத்தன்மை, கூர்மையான ஊசி. கத்திகளைப் போன்று அதன் குணம் ஊடுருவிப் பாய்ந்து செல்லும் தன்மை யுள்ளது. (உ-ம்) மிளகின் காரம்—அமிலங்களின்காரம்—எரிக்கும் தன்மை.

பூசனி, நருவிலி, முரலஞ்செடி இவற்றின் எண்ணெய்களில் வாத பித்தங்களை அகற்றும் கடுமையான சக்தி உள்ளது. தலை மயிரை வளர்க்கச் செய்யும். கபத்தை வளர்க்கவும் தகுதியுள்ள இதில் குரு குணத்தையும் சீத வீர்யத்தையும் காணலாம். குமிழ், புரசு இவற்றின் எண்ணெய்கள் பித்தத்தையும் கபத்தையும் போக்கும். மேற்கூறிய எல்லா வகை எண்ணெய்களிலும் நல்லெண்ணெய் சாலச் சிறந்தது. செந்துருக்கம் என்னும் குஸும்பா விதை எண்ணெய் அதற்கு நேர்மாறானது. *(107—111)*

8. [1]வஸை நீரும் [2]மஜ்ஜை என்னும் எண்ணெய்ப் பசைகள்

வாதத்தைப் போக்குவதிலும், பலம், பித்தம், கபம் இவற்றை வளர்ப்பதிலும் தகுதி பெற்ற இவற்றில் மாமிசத்திற்கு ஒப்பான குணமுள்ளது. மேதஸ் எனும் கொழுப்பில் வஸை, மஜ்ஜை போன்ற குணமுள்ளன.

உயர்ந்ததும் தாழ்ந்ததுமான வஸைகள்

ஆந்தை, பன்றி, அன்னப்பறவை, கோழி இவற்றின் வஸைகள், அவ்வின வஸைகளில் சிறந்தவை. கும்பீரம் என்ற ஒரு வகை மீனின் எண்ணெயும், எருமை [3]காக மத்கு என்னும் பிராணி, நீர்க்கோழி இவற்றின் வஸையும் சிறந்ததன்று. இலை, தழை முதலியவற்றைத் தின்னும் பிராணிகளுள் வெள்ளாட்டின் கொழுப்பு சிறந்தது. யானையின் கொழுப்பு கீழ்த்தரமானது. *(112—114)*

—எண்ணெய் வகை முற்றும்

6. கள் வகை

1. கள் வகை

சடராக்னியை எழுப்பி, சுவையளித்து, தீக்ஷ்ண குணமும், பூண்டு, உஷ்ண வீர்யத்துடன் விளங்குகிறது கள். மனமகிழ்வையும் உடல் வலிமையையும் இதனால் பெறலாம். இனிப்பு, கசப்பு, கார்ப்பு, புளிப்பு என இச்சுவைகள் இருந்தும் [4]விபாகம் என்னும் பிரிவு சீரணம் ஆகும்போது புளிப்புச்சுவை உண்டாகின்றது.

---

1. வஸை—சுத்த மாமிசத்திலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை எண்ணெய்.
2. மஜ்ஜை — எலும்புகளுக்குள்ளிருக்கும் எண்ணெய் போன்ற ஒரு வகைப் பசைப் பொருள்.
3. காகமத்கு—ஒரு வகைப் பிராணி.
4. விபாகம்—பிரிவு என்றும் கூறுவர். அறுசுவைகளும் இனிப்பு உவர்ப்பு இனிப்பாகவும், புளிப்பு, புளிப்பாகவும், துவர்ப்பு—காரம், கைப்பு காரச்சுவையுடனும் மூன்றுவித சுவையுள்ள பிரிவுகளாக மாறுகிறது.

மலத்தை இளக்கும் துவர்ப்புச் சுவையுடன் கூடி குரல், உடல் நலம், சமயோசித அறிவு, நிறம் இவற்றையும் அளிக்கிறது. இலகு குணமுள்ளது. உறக்கம் அதிகம் உள்ளவர்களுக்கும் உறக்கமில்லாதவர்களுக்கும் நலனைத் தரும். பித்த ரத்தங் களைக் கெடுக்கிறது. மெலிந்தவருக்கும் பருத்தவர்களுக்கும் நன்மை பயக்கிறது.

வறட்சித் தன்மையும் சூக்கும குணமுமுள்ளது அது. உடலில் உள்ள நீர்ச்சுரப்பித் துவாரங்களைச் சுத்தப்படுத்துவதோடு வாதத்தையும் கபத்தையும் போக்குகிறது.

அளவுடன் பருகினால் மேற்கண்ட பயன்கள் ஏற்படும். அளவுக்கு மீறிப் பருகினால் நஞ்சைப்போல் கொல்லும் கால னாய் விடுகிறது.

2. புதிய கள்

புதிய கள் குரு குணம் கொண்டு, மூவகை தோஷங்களையும் தோற்றுவிக்கிறது. பழைய கள் இவற்றிற்கு எதிரிடையான குணங்கள் உள்ளது. உஷ்ணமான சூழ்நிலையிலும் பேதிக்கு எடுத்துக் கொண்டபொழுதும், பசியால் வருந்தும் பொழுதும் கள் அருந்துதல் கூடாது.

அதிகக் கடுமையானதும், அதிக மிருதுவானதும், அதிக கெட்டியானதும், தெளிவானதும் கெட்டுப் போனதும் ஆன கள்ளைப் பருகலாகாது. (115—118)

3. சுரா என்னும் கள்

குன்மம், வயிற்று நோய், மூலம், க்ரஹணி, உடல் இளைப்பு இவற்றை நீக்கும். எண்ணெய்ப் பசையைத் தோற்று விக்கும். குரு குணமுள்ளது. வாதத்தைப் போக்கவல்லது. கொழுப்பு, இரத்தம், தாய்ப்பால், சிறுநீர், கபம் இவற்றை வளர்க்கும். (119)

4. வாருணி என்னும் கள்

ஸுரா என்னும் கள்ளின் குணங்களே இதிலும் உள்ளன. இதயத்திற்கு நல்லது. லகு குணமுள்ளது. தீட்சண குணம் கொண்டது.

உடல் வலி, இருமல், சுவாசம், பெருமூச்சு, மலச்சிக்கல், வயிற்று உப்புசம், பீனஸம் எனும் ஜலதோஷம் இவற்றை அழிக்கின்றது.

ஜகலம், மேதகம் எனும் கள்ளின் அடிப்பகுதி சூல நோய், சீதபேதி, வீக்கம், நாவறட்சி, வயிற்று இறைச்சல், மூலம் இந் நோய்களுக்குச் சிறந்ததாகும். இவை இரண்டும் சீரணசக்தியை உண்டுபண்ணும். மலத்தைக் கட்டுப்படுத்தும். வறட்சி குணம் பூண்டது.

கள்ளில் உள்ள சக்கையைத் தண்ணீர் சேர்த்து வடிக்கட்டுவதனால் அதில் உள்ள சாரம் நீங்கி விடுகிறது. பிறகு மலக்கட்டையும், மூவகை தோஷங்களின் சீற்றத்தையும் உண்டாக்கும்.

5. தானிக்காயில் காய்ச்சிய கள்

மிகவும் போதையை அளிக்காது. இலகு குணம் உடையது. நன்மை பயக்கும். புண், பாண்டுநோய், குஷ்டம் இவற்றிற்கு இது அவ்வளவாகப் பகையன்று.

6. யவ தானியக் கள்

மலக்கட்டைத் தோற்றுவிக்கும். குரு குணம், வறட்சித் தன்மை. மூவகை தோஷங்களை அதிகப்படுத்தல் ஆகிய குணங்கள் கொண்டது. *(120—123)*

*அரிஷ்டங்களின் குணம்

பக்குவம் செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்ற குணத்தை அரிஷ்டத்தில் காணலாம். அது மற்ற கள் வகையை விட அதிக குணமுள்ளது. [1]க்ரஹணி, பாண்டு, குஷ்டம், மூலம், உடல் இளைப்பு, வீக்கம், மகோதரம், சுரம், குன்மம், கிருமி, மண்ணீரல் நோய் இவற்றைப் போக்கும்.

---

1. க்ரஹணி—குடலின் ஒரு பகுதி கோளாறடைந்து அதில் தோன்றும் நோய்.

* அரிஷ்டம்—பொருட்களைக் கஷாயமாகக் காய்ச்சி பூமிக்குள் வைத்து பக்குவம் செய்யப்பட்ட பொருள். (திரவம்).

துவர்ப்பு, கார்ப்புச் சுவையுடன் கூடிய இது வாதத்தைத் தோற்றுவிக்கிறது. (124—125)

1. திராக்ஷாரிஷ்டத்தின் குணங்கள்

இது உடலை இளைக்கச் செய்கிறது. இதயத்திற்கு உவந்தது. அதிக சூடற்றது. இனியது, மலமிளக்சி, பித்தத்தையும் வாயுவையும் சிறிதளவு அதிகப்படுத்துகிறது. பாண்டு, மேகம், மூலம், கிருமி இவற்றைப் போக்கும் தன்மையுடையது.

2. **கர்ஜூர அரிஷ்டத்தின் குணங்கள்

இது திராக்ஷாரிஷ்டத்தைவிட குணங்களில் சிறிது குறைந்தும் வாதத்தை அதிகப்படுத்துவதாகவும், குரு குணமுள்ளதாகவும் காணப்படுகிறது.

3. சர்க்கராரிஷ்டத்தின் குணங்கள்

சர்க்கரையினால் செய்யப்படும் அரிஷ்டம் நறுமணமும், இனிப்புச் சுவையும் கொண்டு இதயத்திற்கு நலமளிக்கிறது. அதிக போதையை உண்டு பண்ணுவது இல்லை. லகு குணமுள்ளது.

4. வெல்லத்தினால் செய்யப்படும் அரிஷ்டத்தின் குணங்கள்

இது சிறுநீர், மலம், வாதம் இவற்றை நன்கு வெளிப்படுத்தும். உடல், சடராக்னி இவற்றை வளர்க்கும் தன்மையுடையது.

[1]சீது என்ற அரிஷ்டத்தின் குணங்கள்

பக்குவம் செய்யப்படாத சீது வாதத்தையும் பித்தத்தையும் ஏற்படுத்தும். எண்ணெய் சிகிச்சையினால் ஏற்படும் மாறுபாடுகள் கபத்தினால் ஏற்படும் கோளாறுகள் இவற்றைப் போக்கவல்லது.

பக்குவம் செய்யப்பட்ட சீது, கொழுப்பு, வீக்கம், பெருவயிறு, மூலம் இவற்றைக் கண்டிக்கும்.

பக்குவம் செய்யப்படாத சீதுவைவிட பக்குவம் செய்யப்பட்ட சீது சிறந்தது. (126 —129)

**கர்ஜூரம்—பேரீச்சைக்காய்

1. சீது—கருப்பஞ்சாறு, அல்லது இனிய சுவையுள்ள மூலிகைச் சாற்றினால் செய்த பொருள் (கொதிக்க வைக்காமல்)

8. பலவகை [1]ஆஸவங்களின் குணம்

1. மத்வாஸவத்தின் குணங்கள்

தோஷங்களைப் பிரிக்கும் தன்மையும், தீக்ஷ்ண குணமும் உள்ள இது நீரிழிவு, நாட்பட்ட ஜலதோஷம், இருமல் இவற்றைப் போக்குகிறது.

2. சுராஸவத்தின் குணங்கள்

தண்ணீருக்குப் பதிலாக கள்ளையே ஊற்றிச் செய்யும் சுராஸவம், மிக போதையை உண்டுபண்ணும்; இனிப்புச் சுவையும், தீட்சண குணமும் கொண்டது. வாதத்தைப் போக்கும்.

3. மைரேயாஸவத்தின் குணங்கள்

ஆஸவத்தையும், கள்ளையும் ஒரு பாத்திரத்தில் கூட்டி, கேழ்வரகுச் சோற்றினால் மைரேயாஸவம் தயாரிக்கப்படுகிறது. இது இனிப்புச் சுவை உடையது. ஆண்மையை வளர்ப்பது. மலமிளக்கி, உடல்வளர்ச்சியை ஏற்படுத்துவது. குரு குணமுள்ளது.

4. தாதகீபலாஸவம்

காட்டாத்திப் பூவினால் செய்யப்பட்ட ஆஸவம் தாதகீபலாஸவம் எனப்படுகிறது. நாட்பட்ட இந்த ஆஸவம் வறட்சியை அளிக்கும். சுவையையும் சடராக்னியின் வளர்ச்சியையும் ஏற்படுத்தும்.

5. திராக்ஷாஸவம்

இது [2]மத்வாஸவத்திற்கு ஒப்பானது. ஆனால் அதிகமாக சடராக்னியை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. திராக்ஷை, கருப்பஞ்சாறு இவற்றால் செய்யப்பட்ட ஆஸவத்தின் குணங்கள் [3]மிருத்வீக ஆஸவத்தின் குணத்திற்கு ஒப்பானது.

---

1. ஆஸவம்—தண்ணீரைக் கொதிக்க வைக்காமல் மூலிகைகளை ஊறப்போட்டு தயார் செய்யும் ஒருவகை பானம்
2. மத்வாஸவம்—தேனைக் கொண்டு செய்யப்படும் ஒருவகை கள்
3. மிருத்வீக ஆஸவம்—சிறிய திராக்ஷைப் பழங்களால் செய்யப்படும் ஆஸவம்.

ஆஸவங்கள் சுருக்கமாக இதயத்திற்கு உகந்தவை. வாயுவை உண்டு பண்ணுபவை. மூலிகைகளுக்கேற்ற குணங்களைக்கொண்டவை.

திராட்சை, கரும்பு, தேன், சாலி எனும் உயர்வகை நெல், யவம் எனும் தானியம் என்ற இவ்வைந்தும் ஆஸவம், அரிஷ்டம் இவற்றைச் செய்ய சிறந்த மூலப் பொருட்களாகும். இவை தவிர மீதி காட்டாத்திப்பூ போன்றவை இவற்றிற்கு [1]மாற்றுப் பொருள்களாகின்றன.

6. சுக்தம் எனும் ஆஸவம்

இது இரத்த பித்தம், கபம் இவற்றைக் கிளறி விடும். வாதத்தை இயற்கை நிலைக்குக் கொண்டு வரும். எரிச்சலையுண்டாக்கும். மிகத் தீட்சண குணமுள்ளது. உஷ்ண வீர்யமுடையது. இதயத்திற்கு நன்மையானது. சுவையளிப்பது, மலமிளக்கி, சடராக்னியை வளர்ப்பது, தொட்டால் குளிர்ச்சியாயிருக்கும். சோகை, கண்பார்வை, கிருமி இவற்றை அழிக்கும். வெல்லத்தினால் செய்த சுக்தம் (குடசுக்தம்) கரும்புச் சாற்றினால் செய்த சுக்தம் (இக்ஷு சுக்தம்) தேனால் செய்த சுக்தம் (மது சுக்தம்) சிறு திராக்ஷையினால் செய்த சுக்தம் (மார்த்வீக சுக்தம்) என்று பெயர் பெறுகின்றன.

இவை முறையே, ஒன்றைவிட ஒன்று இலகு குணமுள்ளது, கிழங்குகள், வேர்கள், கனிகள் இவற்றைக் குட சுக்தம் முதலானவற்றுடன் சேர்த்து நிலத்தடியில் வைத்து பக்குவம் செய்யப்படுமாகில் அவை அந்தந்த சுக்தத்திற்கு ஈடான குணமுள்ளவைகளாகின்றன.

7. சாண்டாகி அல்லது காலாம்லம்

மற்றும் சில பொருட்களைக் காய்ச்சி இறக்கி பக்குவம் (நிலத்தடியில் புதைத்தல்) செய்து சிலகாலம் வரை புளிக்கச் செய்யப்படும் காலாம்லம் எனும் மது (கள்) சாண்டாகி எனப் பெயர் பெறும். அது சுவையையளிக்கும். இலகு குணமுள்ளது.

---

1. மாற்றுப்பொருள் மூலப்பொருள்களுக்குப் பிரதிநிதி ஆகிறது. இந்த ஐந்தும் சேர்ந்து செய்யும் மத்யம் மிக வீர்யமுள்ளதாக இருக்கும்.

8. தான்யாம்லம்

இது மலக்கட்டை உடைக்கும் திறன், உஷ்ண வீர்யம், தீட்சண குணம், பித்தம் இவற்றுடன் கூடியது. தொட்டால் குளிர்ச்சி தரும். உடல் களைப்பு, மனஓய்ச்சல் இவற்றை நீக்கும். சுவையளிக்கவல்லது. சடராக்னியை வளர்ப்பது, சிறு நீர்ப் பையில் உண்டாகும் வலியைப் போக்கும். கஷாயவஸ்திக்குச் சிறந்தது. இதயத்திற்கு நன்மையானது. இலகு குணமுள்ளது, வாதத்தையும் கபத்தையும் நீக்கும்.

ஸௌவீரகாம்லம், துஷோதகாம்லம் இரண்டும், த்தான்யாம்லத்திற்கு ஒப்பானவை. இவை கிருமி, இதய நோய், குன்மம், மூலம், பாண்டு இவற்றைப் போக்கும்.

உமியினால் செய்யப்படும் அம்லம் துஷோதகாம்லம் என பெயர் பெறும். உமியற்ற பொருட்களினால் செய்யப்படும் அம்லம் ஸௌவீரகாம்லம் எனப்படும். *(130—140)*

கள்வகை முற்றும்.

9. சிறுநீரின் குணங்கள்

பசு, வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, யானை, குதிரை, ஒட்டகம், கழுதை இவற்றின் சிறுநீர், பித்தத்தைத் தோற்றுவிக்கும். அது தீட்சணியம், வறட்சி குணமுடையது. உஷ்ணவீர்யமுள்ளது. சிறிதளவு உப்பு, கார்ப்புச் சுவையுள்ளது. கிருமி, வீக்கம், பெருவயிறு, வயிற்று உப்புசம், வயிற்றுவலி, சோகை, கபம், வாதம், குன்மம், ருசியின்மை, நஞ்சு, வெண்குஷ்டம், குஷ்டம், மூலநோய் இவற்றை நீக்கும். இலகு குணம் உடையதாகும்.

பேதி, கஷாய, வஸ்தி மேற்பூச்சு, வியர்வை உண்டாக்குதல் எனும் சிகிச்சைகளில் மேற்கண்ட பிராணிகளின் சிறு நீர் சிறந்ததாகும்.

பசுவின் சிறு நீர்—சடராக்னியை வளர்த்தல், சீரணிக்கச் செய்தல், மலத்தை சிதறச் செய்தல் இவற்றில் சிறந்தது.

1. வெள்ளாட்டின் சிறுநீர்—சுவாசம், இருமல் இவற்றைப் போக்கும். காதில் செலுத்தினால் காதுக் குத்தல் என்ற நோய் நீங்கும்.

யானை குதிரைகளின் சிறுநீர், வெண்குஷ்ட சிகிச்சையிலும், க்ஷாரம் என்னும் காரம் தயார் செய்யும் முறையிலும் பயன் படுத்தத் தக்கது.

2. கழுதையின் சிறு நீர் :—பைத்தியம், காக்கை வலி, கிருமி, பிரமேகம் இவற்றை நீக்கும். மேற்கூறிய பிராணிகளின் மலம் துவர்ப்பும் கசப்பும் உள்ளது. விக்கல், சுவாசம் இவற்றைப் போக்கும்.

மானின் சாணம், ஓஜஸ், க்ஷயம் என்னும் நோய் இவற்றைப் போக்கும். தானியங்களையும் புழுப்பூச்சிகளையும் கொத்தித் தின்னும் பறவைகளின் மலம் வாதநோயைப் போக்கும்.

மாமிசத்தைத் தின்னும் பறவைகளின் மலம் காக்கைவலிப்பு பைத்தியம் இவற்றைப் போக்கும்.

3. [1]மகா மிருகங்களின் சாணம், குஷ்டத்தை நீக்கும். நீர் வாழும் பிராணிகளின் மலம், கண் நோயை நீக்கும். அதிக மான பித்தத்தைத் தணிக்கும்.

மேற்கண்ட பிராணிகளின் மலமும் பித்தமும், கசப்பானது. நஞ்சை நீக்கும்.

இவற்றின் கோரோசனம், கபத்தையும் வாதத்தையும் கண்டிக்கும். துவர்ப்புச் சுவையுடையது. வறுமையை நீக்க வல்லது.

4. மனிதனுடைய சிறுநீர் நஞ்சை நீக்கும்.
(141—148)

—சிறு நீர் வகை முற்றும்—

திரவ திரவிய விஞ்ஞானியம் எனும் அத்தியாயத்தில் நீர், பால், கரும்பு வகை, எண்ணெய் வகை, கள் வகை இவற்றைப் பற்றி பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. (149)

இத்துடன் அஷ்டாங்க சங்கிரகம் **ஸூத்ரஸ்தானத்தில்**
'திரவத் திரவிய விஞ்ஞானீயம்' எனும்
ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. மகாமிருகங்கள்—பன்றி, எருமை, கலைமான், ருரு என்னும் மான், ரோஹிதமான், யானை, காட்டுக் குதிரை காட்டு எருது, காண்டாமிருகம், கவயம் என்னும் எருது போன்ற பசு இவை பத்தும் மகாமிருகங்கள்.

ஏழாவது அத்தியாயம்

*அன்னஸ்வரூப விஞ்ஞாநீயம்

'அன்னஸ்வரூப விஞ்ஞானீய' மென்னும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். (1—2)

1. [1]சூகதானிய வகைகள்

சம்பா நெல் வகைகள்

சிவப்புச் சம்பா, பெருஞ்சம்பா, சின்னச்சம்பா, காச்மீரம் முதலிய நாடுகளிலுண்டாகும் தூர்ணகம் என்னும் ஒரு வகைநெல், பக்ஷிகளால் பிற நாடுகளிலிருந்து முதலில் கொண்டு வரப்பட்ட தாகக் கூறப்படும் 'சகுநாஹ்ருதம்' (கருடன் சம்பா) என்னும் ஒரு வகை நெல், கருப்பு நிறமுள்ள, இனிப்புச் சுவையைக் கொண்ட லாராமுகம் என்னும் நெல், நீண்ட வெளுப்பான ஊகுமுள்ளுடன் கூடிய நெல், வெள்ளிலோத்திப்பூ போன்ற சுவையுள்ள 'ரோத்ர சூகம்' எனும் ஒரு வகை நெல், சுகந்த சம்பா, முன்னாட்களில் வடநாட்டிலிருந்த பதங்கம், தபநீயம் என்னும் இருவகை தானி யங்கள், புண்ட்ரம், பாண்டு, புண்டரீகம், ப்ரமோதம், கௌரம், சாரிவம், காஞ்சநம், மஹிஷம், சூகம், தூஷகம், குஸுமாண்டகம் லாங்கலம், லோஹலாலம், கர்தமம், சீதபீருகம் முதலான சிறு தானியங்கள் இவையனைத்தும் பத்தியமான சம்பா நெல் வகைகள். (3—5)

பொதுவாக எல்லா வகைச் சம்பா நெல்கள்

இனிப்புச் சுவையுள்ள இவை விபாகத்திலும் இனியதாக உள்ளவை. பசையுள்ளவை, வீரியத்தை வளர்ப்பவை, மலத்தைக் கட்டுபவை, மலத்தைக் குறைப்பவை, இவற்றில் துவர்ப்பு, துணைச் சுவையாக உள்ளது. பத்தியமானவை, லகுவானவை, சிறுநீரை அதிகப்படுத்துபவை. சீதமானவை. (6)

---

* புசிக்கத்தக்க பொருள்களின் இயற்கை நிலையை அறிவுறுத்தும் பகுதியாதலால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. சூகம் என்றால் 'சுணை'-ஊகுமுள் என்று பொருள். சில தானியங்களின் நுனியில் இது இருக்கும். எனவே இந்த ஊகுமுள் உள்ள தானியம் 'சூக தானியம்' எனப்படும்.

சுணையுள்ள தானியங்களில் சிவப்புச் சம்பா

இந்தச் சம்பா நெல் சுணையுள்ள தானியங்களில் சிறந்தது.

இது தாகத்தைத் தணிக்கும், மூவகை தோஷங்களையும் நீக்கும். இதைக் காட்டிலும் மட்டமானது பெருஞ்சம்பா. அதை விட தாழ்ந்தது சின்னச்சம்பா. இதற்குப் பிறகு இதே வகையில் தூர்ணகம் முதலான நெல் வகைகள் முறையே குணத்தில் தாழ்ந்த வகைகளாகும். (7)

யவம் எனும் தானியம், ஓராண்டு விளைச்சல் நெல், புழுதியில் விளைந்த நெல் முதலானவை, சுவை. சூடு, குருத் தன்மை, பசை, எண்ணெய்ப்பசை, விபாகத்தில் புளிப்பு இவை சுளைக் கொண்டவை. கபம், பித்தம் இவைகளைத் தோற்று விக்கும். மலம், சிறுநீர் இவற்றை வெளிப்படுத்தும். இவற்றில் முதலிருந்து வரிசையாக ஒவ்வொன்றும் தரத்தில் சிறந்தது. (8-9)

நெல் தானியங்களில் அறுபதாம் குறுவை

குறுகிய கால நெல் வகைகளில் அறுபதாம் குறுவை நெல் பசையுள்ளது, மலத்தைக் கட்டும். இலகுவானது, சுவை உள்ளது, மூவகை தோஷங்களையும் நீக்குவது, உடலைத் திடப் படுத்துவது, குளிர்ச்சியானது, எல்லாவற்றைக் காட்டிலும் சிறந் தது. கருப்பு, வெளுப்பு என இது இருவகைப்படும். இவற்றில் வெளுப்பு உயர்ந்தது. (10)

இதற்குப் பிறகு முறையே மகாவ்ரீகி, கிருஷ்ணவ்ரீகி, ஜது முகம், குக்குடாண்டகம், லாவகம், பாராவதகம், ஸூகரம், வரகம். உத்தாலகம், உஜ்வலம், சீனம், சாரதம், தர்துரம், கந்த னம், குருவந்தம் என்னும் தானியங்கள் முன் கூறிய தானியங் களைக் காட்டிலும் குறைந்த குணமுள்ளவை. (11—12)

மேற்கண்ட நெல் வகைகளைக் காட்டிலும் மற்ற, கூறப் படாத தானியங்கள் இனிப்புச் சுவையானவை, புளிப்பாக மாறக் கூடியவை, பித்தத்தைச் செய்பவை, குருவானவை.

பாடலமென்னும் நெல், அதிக சிறுநீர், அதிக மலம், மற்றும் சூட்டைத் தோற்றுவிக்கும். மூவகைத் தோஷங்களையும் எழச் செய்யும். (13)

சிறுதானியங்கள் கங்கு, கோத்ரவம், ஜூர்ணா என்பது, காமூடீ, சூர்ணபாதிகா, ச்யாமாகம், தோயச்யாமாகம், ஹஸ்திச்யாமாகம், சிம்பிரம், சிசிரம், நீவாரம், வருகூ பரகம், உத்கடம், மதூலிகா, சாந்தம், ஸண்டி, வேணு, ப்ரசாந்திகா கவேதுகம், அண்டலௌஹித்யம், தோயபர்ணி, முகுந்தகம் என்னும் இந்த தானியங்கள் அனைத்தும் கப-பித்தங்களை நீக்குபவை, ரூக்ஷமானவை. துவர்ப்பு, இனிப்பு, குளிர்ச்சி, வாயு இவைகளைத் தருபவை. மலமூத்திரங்களைக் கட்டுபவை, இலகுவானவை, உடலை இளைக்கச் செய்பவை. (14—16)

பிரியங்கு என்னும் கம்பு போன்ற ஒரு வகைப் புல்தானியம் ஒடிந்த உறுப்புக்களை ஒட்ட வைக்கும், உடலைப் பருக்கச் செய்யும். குருவகையைச் சேர்ந்தது. வரகு தானியம் இளகிய மலத்தைக் கட்டும். தொட்டால் குளிர்ச்சியாக இருக்கும். விஷத்தை அகற்றும்.

உத்தாலகம் என்னும் தானியம் உஷ்ண வீரியமுள்ளது. நீவாரம் என்னும் காட்டில் விளையும் நெல் கபத்தை வளர்க்கும். மதூலிகா என்னும் தானியம் குளிர்ந்த வீர்யமுள்ளது. மிக்கப் பசையுள்ளது. ஆண்மையை வளர்ப்பது. (17—18)

யவம் என்னும் தானியம்

ரூக்ஷம், குளிர்ச்சி, குருத்தன்மை, இனிப்புச் சுவை இவைகளைக் கொண்டது. வாதத்தையும், மலத்தையும் இளக்கும் தன்மையது, வீரியத்தை வளர்ப்பது, உடலுறுதியை அளிப்பது. சிறுநீர், கபம், கொழுப்பு, பித்தம் இவைகளைக் குறைப்பது, நாட்பட்ட ஜலதோஷம், சுவாசம், இருமல், தொடை அசையாமை, கழுத்து நோய், தோல் நோய்கள் இவைகளை நீக்கும். இந்த யவத்தைக் காட்டிலும் வெளிநாட்டில் தோன்றும் யவ தானியங்கள் குணமளிப்பதில் தரக் குறைவானவை. மூங்கிலரிசி உஷ்ணமானது. மலமிளக்கி, துவர்ப்பானது; வாத பித்தங்களைத் தோற்றுவிப்பது. (19—21)

கோதுமை

வீரியத்தை வளர்ப்பது, குளிர்ச்சியானது, குரு குணம் உள்ளது. பசையுள்ளது, உயிரையளிப்பது, வாத-பித்தங்களைப் போக்குவது, முறிந்த உறுப்புகளைச் சேர்க்க வல்லது, இனிப்பானது, உடலை நிலை நிறுத்துவது, மலமிளக்கி. மெல்லிய நீண்ட

கோதுமை உடலுக்கு உகந்தது. குளிர்ச்சி, துவர்ப்பு, இனிப்புச் சுவையுடன் இலகு என்னும் குணத்துடன் கூடியது. (22)

2. சிம்பி தானிய வகைகள்

தோலை நீக்கினால் இரண்டாகப் பிரியும் பருப்பு வகைகள் சிம்பி தானியம் எனப்படும். பயறு, சிறுபயறு, காட்டுப் பயறு, கருத்த சணல் பயறு, மொச்சை, துவரை, கடலை மற்றும் பல வகையான இரட்டைப் பருப்புள்ள தானியங்கள் இவை துவர்ப்பு இனிப்புச் சுவையுடையவை. இலகுவானவை, மலக்கட்டு, வயிற்று உப்புசம் இவைகளைத் தருபவை. வறட்சி, மலபந்தம் தருபவை. குளிர்ந்தவை, பாகத்தில் கார்ப்புச் சுவையாக மாறுபவை. பித்தம், இரத்தம், கபம், கொழுப்பு இவைகளுக்கு இவற்றைக் கஞ்சியாக அருந்தலாம். மேற்பூச்சாகவும் பயன்படுத்தலாம். (23—25)

பச்சைப் பயறு

எல்லாப் பருப்பு வகைகளிலும் சிறந்தது. லகுவானது, சிறிது வாயுவை அளிக்கும். பயறு வகைகளில் பச்சைப்பயிறு மிகச் சிறந்தது.

'மகுஷ்டகம்' எனும் துலுக்கப் பயறு அல்லது நன்னிப் பயறு கிருமியைத் தோற்றுவிக்கும். கொத்துக்கடலை உடற்பூச்சு முதலியவைகளில் பயன்படுத்துவதால் அதிக நிறத்தையுண்டு பண்ணுகிறது. உள்ளுக்குப் பயன்படுத்தினால் அதிக மலக்கட்டை ஏற்படுத்தும்.

மொச்சை

குருவானது, அதிக மலத்தைப் பெருக்குவது, வறட்சி, மிக்க வாயு இவற்றைத் தோற்றுவிப்பது. (26—27)

கொள்ளு

துவர்ப்பு, இனிப்புச் சுவை, வறட்சி, உஷ்ணவீர்யம், இவைகளையுடையது. [1]இரத்தபித்தங்களை உண்டாக்குவது, நாட்பட்ட ஜலதோஷம், சுவாசம், இருமல், மூலம், விக்கல், வயிற்று உப்புசம், கபவாயு [2]கல்லடைப்பு, விந்து, கண்பார்வைச் சக்தி, வீக்கம், பெருவயிறு இவைகளைப் போக்குவது, மலத்தைக் கட்டுவது, லகுவானது, தீட்சண குணமுடையது. பக்குவமடைந்தால் புளிப்புச் சுவையையும், எரிச்சலையும் தருவது. (28-29)

1. இரத்த பித்தம் :— ஒரு வகை நோய். மேல் கீழ் வழியாக ரத்தம் போகும் நோய்.
2. கல்லடைப்பு— விந்து கட்டி (கல்போல்) வரும் நீர் அடைப்பு.

அவரைக்கொட்டை

மலமிளக்கி, வறட்சியானது, துவர்ப்பு, இனிப்புச் சுவை யுள்ளது, குருவானது, பக்குவமானால் புளிப்பாகும். வாதத்தை தேங்கச் செய்வது, தாய்ப்பால், சிறுநீர், இரத்த பித்தம் இவற் றைத் தருவது. உஷ்ண வீர்யம், எரிச்சல் இவற்றைத் தருவது. கண், விந்து, கபம், வீக்கம், நஞ்சு இவைகளை அழிப்பது. (30)

உளுந்து

எண்ணெய்ப் பசையுள்ளது; வலிவு, கபம், மலம், பித்தம் இவற்றைத் தருவது, மலமிளக்கி, குருவானது, உஷ்ண வீர்ய முள்ளது. வாதத்தை அழிப்பது, இனிப்புச் சுவையுள்ளது, விந்துவை வளர்ப்பது, அதை வெளிப்படுத்துவது. (31)

கண்டிப் பயறு, பூனைக்காலி விதை என்பவைகளும் உளுந்தைப் போலவே விந்து வளர்ச்சி, விந்து வெளிப்படுதல், வாத நீக்கம் இவைகளைத் தரும். உஷ்ணமானவை. (32)

குசாம்ரம் என்னும் சிம்பிதானியம் இனிப்பானது. வாத பித்தத்தை நீக்கும். குளிர்ச்சியானது. பலவகையான சிம்பி தானிய வகைகள் இனியவை, வாதபித்தங்களைப் போக்குபவை. குளிர்ந்தவை, குருவானவை, வலிவை அழிப்பவை, வறட்சியைத் தோற்றுவிப்பவை, அதிக சடராக்னியுள்ளவர்கள் மிக்க எண் ணெய், நெய் போன்ற பொருள்களுடன் சேர்த்தே இதைப் புசிக்க வேண்டும். (33)

எள்ளின் குணங்கள்

எண்ணெய்ப்பசை, உஷ்ண வீர்யம், கசப்புச் சுவை; உறைப்பு, துவர்ப்பு, இனிப்புச் சுவையுடையது. அறிவிற்கு நல்லது. தலை மயிரை வளர்க்கும். உடல் நிறத்தையுண்டாக்கும். தொட்டால் குளிர்ச்சியாக இருக்கும். வாதத்தை நீக்கும். குருகுணமுள்ளது. சிறுநீரைக் குறைக்கும். பக்குவ நிலையில் உவர்ப்பாக மாறும். மூளை, சடராக்னி, கபம், பித்தம் இவற்றை வளர்ப்பது, கரிய எள் சிறந்தது. இதைக் காட்டிலும் தாழ்ந்தது வெள்ளை எள். இதைக் காட்டிலும் சிவப்பு எள் தரக் குறைவானது. (34—35)

ஆளிவிதை

எண்ணெய்ப் பசையுள்ளது, ருசியானது, கசப்பானது, உஷ்ண வீர்யமுள்ளது, கபத்தையும், பித்தத்தையும் வளர்ப்பது, குருவானது, கண்பார்வையையும், விந்துவையும் போக்குவது, இறுதியில் உவர்ப்புச் சுவையுடையது. (36)

குசும்பாவிதை (செந்துருக்கம்)

ஆளிவிதை போன்ற குணமுள்ளதே.

உளுந்து இரு பருப்புகள் உள்ள தானியங்களில் தரக் குறைவானது. அதே போல் ஊகுமுள் உள்ள தானியங்களில் யவம் என்பது தாழ்ந்தது. (37)

புதிய தானியமும், அதிக நீர்த்தேக்கமுள்ள நிலத்தில் பயிரான தானியமும் கபத்தை வளர்க்கக்கூடியவை. ஓர் ஆண்டு பழகிய தானியம், நன்கு காய்ந்த பூமியில் பயிரானது, நீரில்லாத மேட்டுப்பாங்கான நிலத்தில் பயிரானது, விரைவில் பயிரானது, வகுவானது. தக்கபடி வறுத்து தோல் நீக்கிய பருப்பு தானியம், உபயோகத்திற்கு உகந்தது. (38)

சிம்பி தானியவர்கம் முற்றும்.

3. பக்குவமான அன்னங்கள்

வடிகஞ்சி, ([1]மண்டம்) பார்லி [2](பேயா) கஞ்சி, கூழ், [3](விலேபி) சோறு இவை முறையே இலகுவானவை, உயர்ந்தவை. அதாவது சோற்றைக் காட்டிலும் கூழ், கூழைக் காட்டிலும் பார்லிகஞ்சி, பார்லிகஞ்சியைக் காட்டிலும் வடித்த கஞ்சி இலகுவானது, சிறந்தது.

---

1. மண்டம்— என்பது கஞ்சியின் அடிச்சோறு அற்ற தெளிவு நீர்.
2. பேயா— மிகவும் கெட்டியல்லாததும் தெளிவில்லாததும், பருகுவதற்கு தக்கதுமான கஞ்சி.
3. விலேபி— கூழ் போன்று கெட்டியாக கை, கரண்டிகளில் ஒட்டிக் கொள்ளும்படி தயாரித்த கஞ்சி.

வடி கஞ்சி (மண்டம்)

வாதத்தை இயற்கை நிலைக்குக் கொண்டு வரக்கூடியது. நாவறட்சி, உடல் வாட்டம், மருந்தைப் பயன்படுத்திய பின் மிகுந்துள்ள தோஷங்கள் இவற்றை நீக்கும். உணவைச் சீரண மடையச் செய்யும். தாதுக்களைச் சமமாக்கும். தசை நார் களை (ஸ்ரோதஸ்) மிருதுவாக்கும்; வியர்வையையுண்டாக்கும். சடராக்னியை வளர்க்கும். *(39—40)*

பார்லி கஞ்சி (பேயா)

பசி, தாகம், உடல் வாட்டம், உடல் இளைப்பு, வயிற்று நோய், சுரம் இவற்றை நீக்கும். மலத்தை எளிதில் வெளிப்படுத் தும், பத்தியமானது. சடராக்னியைத் தூண்டும். உணவைச் சீரணமடையச் செய்யும். *(41)*

கூழ் (விலேபி)

மலத்தைக் கட்டுவது, மனதுக்குகந்தது, நாவறட்சியைப் போக்குவது. சடராக்னியை வளர்ப்பது, நன்மை பயப்பது, புண்கள், கண்நோய், இவற்றால் துன்புற்றவர், சோதனை சிகிச்சைசெய்து கொண்டவர், உடல் இளைத்தவர், எண்ணெய், நெய்ப் பசை யுள்ள திரவப் பொருள்களைக் கொண்டு சிகிச்சை பெறுபவர் இவர்கட்கு நன்மை பயக்கும். *(42)*

சோற்றின் குணங்கள்

அரிசியை நன்றாகக் கழுவி, கஞ்சிடை வடித்து, நன்கு பக்கு வப்படுத்தி, அதிலுள்ள ஆவிப்புகை அடங்கிய பின்; சூடான சோறு இலகு குணமுள்ளதாக இருக்கும். அரிசியை வறுத்து, தீயின் இயற்கையான தீபன பாசன குணங்களுள்ள திரவியங்களின் கஷாயத்தில் சமையல் செய்து எடுக்கப்படும் சோறு மிக்க லகுவாக இருக்கும். இவற்றிற்கு மாறாகப் பக்குவம் செய்யப்பட்ட சோறும், பால், புலால் முதலியவற்றுடன் சேர்த்துப் பக்குவம் செய்யப் பட்ட சோறும் குரு குணமுடையவை. *(43—44)*

இந்த முறைகளில் தயாரிக்கும் உணவுப் பொருள்கள், அவற்றைச் சேர்க்கும் முறைகள், அவற்றின் அளவுகள் இவற்றின் தன்மையையொட்டி, மற்ற உணவு வகைகளின் குணங்களைப் பற்றிக் கூற வேண்டும்.

மாமிச ரசத்தின் குணம்

வறண்ட உடல் உடையவர்கள், பிணி நீங்கியவர்கள், வாந்தி பேதி முதலிய சுத்தி சிகிச்சை யெடுத்துச் சுத்தமானவர்கள், வாந்தி

முதலிய சிகிச்சை செய்து கொள்ள வேண்டியவர்கள், இளைத்தவர், துர்பலமானவர், மார்பில் தாக்குண்டவர், தாது, புலன்கள், உடல் வண்ணம் இவை குறைந்தவர்கள், சிறந்த பார்வை, செவிக்கூர்மை, சடராக்னி, ஆயுள், பலம், நிறம், குரல் இவற்றைப் பெற விரும்புகிறவர்கள், எலும்பு முறிந்தவர்கள், அல்லது மூட்டு நழுவியவர்கள், இரணமுடையவர்கள் மற்றும் வாத நோய் கண்டவர்கள் இவர்கட்கு இதயத்துக்குவந்தது. பத்தியமானது. ஆண்மையை வளர்ப்பது, உடல் வளர்ச்சியைத் தருவது. மனதுக்கு திருப்தியானது. (45—47)

பயத்தம் கஞ்சி

வாந்தி முதலியவைகளால் சுத்தமானவர், இரணம், தொண்டை, கண் இவைகளில் நோயுற்றவர் இவர்களுக்கு மிகவும் இதமானது.

கொள்ளின் ரசம்

கோளாறடைந்த வாயுவை இயற்கை நிலைக்குக் கொண்டு வரும். குன்மம், [1]தூநி, [2]பிரதிதூநி என்ற நோய்களை அகற்றி விடும்.

உளுத்தம் கஞ்சி

வயிற்றுக்குள்ளிருக்கும் மலத்தை அதிகமாக வளர்க்கும். கலம், காம்பலிகம் என்னும் கஞ்சிகள், மனதுக்கினியவை, தோஷங்களைச் சிதைக்கும் இயல்புடையவை, தம்தம் திரவியங்களின் குணத்தைப் பின்பற்றுபவை.

மாமிசத்தினால் செய்யப்படுவது 'ரச' மெனப்படும். பயறு முதலிய தானியங்களால் செய்தவை 'யூஷ' மெனப்படும். இலந்தைப்பழம் முதலான கனி வகைகளால் தயார் செய்யப்பட்டது 'கலம்' எனப்படும்.

பொதுவாக முள்ளங்கி, காரட்டுப் போன்ற வேர்கள், எள்ளின் விழுது, மாதுளை முதலியவைகளால் புளிக்க வைத்துத் தயார் செய்யப்படுவது 'காம்பலிகம்' எனப்படும். (48—49)

---

1. தூநி— குடலின் மேற்புறத்திலிருந்து கீழ்நோக்கிப் பரவுகின்ற ஒரு வகை வாத நோய்.
2. பிரதிதூநி— ஆசனவாய் பக்கத்தில் தொடங்கி, இரைப்பையின் பக்கமாக மேல் நோக்கிப் பரவுகின்ற ஒரு வகை வாதநோய்.

எண்ணெய் முதலியவைகளில் வறுத்து, சுக்கு முதலியவைகளைக் கொண்டு பக்குவம் செய்தவை 'கிருதம்' என்றும்; எண்ணெய் முதலியவைகளால் வறுக்கப்படாமல், சுக்கு முதலியவைகளால் பக்குவம் செய்யப்படாத பொருள்கள் 'அகிருதம்' என்றும் கூறப்படும். (50)

தகலாவணிகம்

சிறிதளவு மாமிச ரசத்துடன் கலந்து, தெளிவாகத் தயாரிக்கப்படுவது தகலாவணிகம் எனப்படும். (51)

திரவிய குணங்கள் சமமாக இருப்பினும் கஞ்சியைக் காட்டிலும் ரசமும், ரசத்தைக் காட்டிலும் பருப்பும், பருப்பைக்காட்டிலும் காய்கறிகளும், ஒன்றுக்கு மேல் ஒன்று குருவானது. திரவமான கஞ்சியை விட கெட்டியான கஞ்சி குரு குணமுள்ளது. புளிப்புச் சுவையை விட இனிப்புச் சுவை குருவானது. (52)

எள்ளுப் பிண்ணாக்கினால் செய்த பொருட்கள், உலர்ந்து போன கீரைவகை, முளைவிட்ட தானியம், சாண்டாகி என்னும் ஒரு வகைக் காடி இவை கண்பார்வையை அழிக்கும். தோஷத்தைச் செய்யும், களைப்பையுண்டாக்கும். மற்றும் குருகுணமுள்ளது.

அப்பளம்—லகுவாகவும் ருசியாகவும் இருக்கும். (53)

(1) ஸர்ஜக்ஷாரம் முதலானவைகளுடன் தயாரித்த அப்பளம் மிகவும் லகுவானது.

ராக-ஷாடவங்களின் குணங்கள்

(சர்க்கரை, தேன் முதலிய இனிய பொருள்களைக்கொண்டு தயாரிக்கும்) ராகம் என்னும் திரவமும், (புளிப்புப் பொருள்கள், கறிகாய், சர்க்கரை முதலியவைகளால் தயாரிக்கும்) ஷாடவம் என்னும் திரவமும் இதயத்துக்கு இனியவை, ஆண்மையை வளர்ப்பவை, ருசியை உண்டுபண்ணுபவை, குருவானவை, மனதுக்குப் பிடித்தவை; தலைசுற்றல், தாகம், வாந்தி, மதம், மயக்கம், இளைப்பு இவற்றை அழிப்பவை. (54)

மந்தம் எனும் (தண்ணீரில் காய்ச்சிய) கஞ்சி, தாகம், வாந்தி, களைப்பு இவைகளை நீக்கும். குளிர்ச்சியானது, விரைவில் பலமளிப்பது. இதை அருந்துபவருக்கு பிரமேகம், க்ஷயம், குஷ்டம் என்ற நோய்கள் தோன்றா. (55)

---

1. ஸர்ஜக்ஷாரம்— ஒரு வகை உப்பு

[1]'ரஸாலா' என்னும் ஒரு வகைத் திரவப் பொருளானது உடலை வளர்க்கும்; வீரியத்தை அதிகமாக்கும்; உடலில் மினுமினுப்பையுண்டாக்கும்; பலத்தை வளர்க்கும்; சுவையையுண்டாக்கும்.

பானகம்—உடற்களைப்பு, பசி, தாகம், வாட்டம் இவைகளைப் போக்கும், மனதைத் தெளிவாக்கும், குருவானது. மலத்தை இறுகக்கட்டும். அதிகமாகச் சிறுநீரை வெளிப்படுத்தும். இதயத்துக்கு இதமானது, மற்றும் தனது பொருள்களையொட்டியிருக்கும். இதை 'ஷர்பத்' என்பர். (56—57)

நெல்பொரி - தாகம், வாந்தி, பேதி, நீரிழிவுநோய், கொழுப்பு, கபம் இவைகளை அழிக்கும். காசம், பித்தம் இவைகளைத் தணியச் செய்யும்; சடராக்னியை வளர்க்கும்; இலகுவும் குளிர்ச்சியுமானது. (58)

அவல்—குருவானது, பலத்தையளிக்கும்; கபத்தையும், மலக்கட்டையும் செய்யும்.

பொரி :—மலக்கட்டைத் தோற்றுவிக்கும், வறட்சி, திருப்தி இவற்றை உண்டாக்கும். தாதுக்களையும் தோஷங்களையும் கல்லி வெளிப்படுத்தும், குருவானது. (59)

பொரிமாவின் குணங்கள்

தொண்டை நோய், கண்நோய், பசி, நாவறட்சி, களைப்பு, வாந்தி, புண் இவைகளை நீக்கும். லேசானது. நீரில் கரைத்துக் குடித்தால் உடனே பலனளிக்கும். நெய் கலந்து உருண்டையாக்கினால் அது குருவாகும். மிருதுவான மாவுருண்டை லகுவானது, பொரிமாவில் நீர் கலந்தால் லேசாகி விடும்.

பூரி, லட்டு, முறுக்கு,கொழுக்கட்டை முதலிய உருவ மாற்றத்தையொட்டி அதன் குணங்கள் மாறுபடும். (60—61)

தண்ணீர் அருந்தியபின் உடனே பொரிமாவைப் புசித்து மறுபடியும் தண்ணீர் அருந்துவதும், அல்லது இருமுறை பொரிமாவைப் புசிப்பதும், இரவில் மாவை மட்டும் புசித்தலும் தகாது. உணவு சாப்பிட்ட பின்பும், பற்களால் கடித்தும் பொறி மாவை அதிக அளவிலும் புசிக்கலாகாது. 62)

---

1. ரஸாலா— மிளகுப்பொடி, சர்க்கரை முதலியவை கலந்து குழப்பிய தயிர்

கொடி இலந்தை, மர இலந்தைப் பழங்கள் முதலானவை களால் செய்யப்பட்ட மாவானது களைப்பு, நாவறட்சி, உடல் வாட்டம் இவற்றை நீக்கும். புளிப்புச் சுவையால் செய்த மாவு இதயத்துக்கு இதமானது. கலக்கும் பொருட்களின் குணத்தை அளிக்கவல்லது. (63)

பிண்ணாக்கு

சோர்வையளிக்கும், நாவறட்சியையும், வாயு-(மல)க் கட்டை யும் உண்டாக்கும். கண்பார்வையைக் கெடுக்கும்.

வேஸவாரம் என்று பெயருள்ள சுக்கு, மிளகு முதலியவை களைச் சேர்த்து இடிக்கப்பட்ட மாமிசம், குருவாகவும், எண் ணெய்ப் பசையுள்ளதாகவும், வலிமை அளிப்பதாகவும் ஆகும்.

பயறு போன்ற தானியங்களால் செய்யப்பட்ட வேஸவாரம் குருகுணமுள்ளது, சேர்க்கும் பொருட்களின் குணத்தைப் பெறக் கூடியது. (64—65)

உமி-தவிடு-பசுஞ்சாணத்து வரட்டி, மண் பாண்டம்,வறுப்புச் சட்டி, நெருப்புத் தணல் இவற்றில் பக்குவம் செய்த பணியாரங்கள் ஒன்றையடுத்து மற்றொன்று முறையே லகுவாக இருக்கும். காரீ, கேண்டரிகா என்பவை மேன்மேலும் குருவானவை. (66)

4. மாமிச வகை

மான் வகை

வெள்ளைமான், பரந்த கண்களுடைய கருப்புமான், வேக மாய் ஓடும் சிறுமான், மயிர்களடர்ந்த எருமை போன்ற மான், மிருதுவான உடல் படைத்த மான், புள்ளிமான், பசு போன்ற மான், மெல்லிய தோல் மூடிய கொம்புகளைக் கொண்ட கலை மான், வரபோதம், முயல் போன்ற குள்ளமான மான், செம்மறி யாடு போன்ற மான், ச்வதம்ஷ்ட்ரா, கலைமான், சரபம் என் னும் எட்டு கால்களை உடைய கொடிய விலங்கு போன்ற மான் கோக காரகம் என்னும் நரி போன்ற மான், மெல்லிய மான், கஸ்தூரி மான், கிருத மாலம் என்னும் மான், ப்ருஷதம் என்னும் மான் என மான் இருபது வகைகளை உடையது. (67-68

*விஷ்கிரப் பறவை வகை

உள்ளாங்குருவி, நாகணவாய்ப்புள், கவுதாரி, செங்கண் குருவி, செங்குருவி, களவிங்கப் பறவை, உபசக்கரம், சகோரம், குருபா, விச்சுளி, விச்சுளிப்பேடு, தித்திரி, மீன்குத்தி, மயில், கோழி, கொக்கு, ஸாரஸபட்சி, கிரிவர்த்திகா, ஸார்பதம், இந்த்ராபம், நாரை என்பவை 'விஷ்கிரம்' என்ற பறவை வகை யைச் சேர்ந்தவை. *(69-71)*

**பிரதுதம் என்ற பறவை வகை

மரங்கொத்திப்பறவை, தலையில் முடியுள்ள கருங்குருவி, குருட்டுநாரைப்பறவை, சகோரபட்சி, கஞ்ஜரீடகம், ஹாரிதம், துர்நாமாரி, க்ருகம், க்ருஹம், லட்வா, வடஹா, கோஷ்வேடம், டிண்டிமாணவம், ஜடீ, துந்துபி, பார்காரம், லோஹப்ருஷ்டம், குலிங்ககம், சாரிகா, (மைனு) சுகம், (கிளி) சார்ங்காக்யம், கிரீடீ, ககுயஷ்டிகா, மஞ்ஜூலீயகம், தாத்யூகம், (ஆந்தை) கோபா, புத்ரப்ரியா, ஆத்மஜா, கலவிங்கம், பரப்ருதம், (குயில்) கபோதம் (புறா) அங்காரசூடகம், பாராவதம், பாணவிகம் என்ற முப்பத்து நான்கும் பிரதுத வகையைச் சார்ந்த பறவைகள். *(72-75)*

பொந்துகளில் வாழ்பவை

சுவேதம், ச்யாம சித்ரப்ருஷ்ட்டம், காலகம், காகுலீம்ருகம் (இவை நான்கு வகையான பாம்பு வகைகள்) தவளை, சில்லடம், கூடசிகா, உடும்பு, சல்லகம், சண்டகம், (வயலில் வசிக்கும் எலி) விருஷம், பாம்பு, காட்டுப்பூனை, முள்ளம்பன்றி (சுவாவித்) கீரி இவை பொந்தில் வாழ்பவை. *(76)*

***பிரஸஹவகை உயிரினங்கள்

பசு, கழுதை, கோவேறிக் கழுதை, ஒட்டகம் குதிரை, சிவிங்கி, சிங்கம்,கரடி, குரங்கு, பூனை, எலி, புலி, சென்னாய், கீரி, சிறுத்தை, கருங்குரங்கு, நரி, பருந்து, காடை, நாய், காக்கை, கருடன், வான்கோழி, அழுகுரல் பறவை, கழுகு, ஆந்தை, கடுவன், குருவி, தூமிகா, மதுஹா என இவ்வகையான பிராணிகளும், பறவைகளும் 'ப்ரஸஹங்கள்' எனப்படும். *(77–79)*

---

*விஷ்கிரம்—நிலங்களில் சிதறியுள்ள தானியங்களைப் பொறுக்கித் தின்னும் பறவைகளுக்குப் பெயர்.

**பிரதுதம்—தமது அலகுகளால் தானியத்தைப் பிளந்து புசிக்கும் பறவைகள்.

***ப்ரஸஹங்கள் – வலியக் கவர்ந்து தீனி தின்னும் பிராணிகள் ப்ரஸஹங்களெனப்படுகின்றன.

மகா மிருக வகைகள்

எருமை, *ந்யங்கு, ரோஹிதம், பன்றி, ருரு என்னும் மான், யானை, ஸ்ருமரம், கட்கம், சமரம், கவயப்பசு, இவை மகா மிருகங்கள். (80)

நீர்வாழ் பறவைகள்

அன்னம், ஸாரஸபட்சி, காதம்பகம் என்னும் ஒருவகை அன்னப்பறவை, கொக்கு, நீர்க்கோழி, நீர்க்காக்கை (ம்ருணால கண்டம்) சக்ரவாகப்பட்சி, நாரை, ரக்த சீர்ஷகம், அழுகுரல் பறவை (புண்டரீகாக்ஷம்) சராரி என்னும் பறவை, மணி துண்டிகா, காகதுண்டம், கநாராவம், மத்கு, நீர்க்கோழி கிரௌஞ்சபக்ஷி, நந்திமுகம், மல்லிகா, இவை நீரில் வாழும் பறவைகள்.

மீன் வகைகள்

**ரோஹிதம், பாடீநம், ஆமை, கும்பீரம், நண்டு, சுக்தி, சங்கம், உத்ரம், சம்பூகம், சபரீ, வர்மி, சத்ந்ரிகா, சுல்லகி

---

*ந்யங்கு—கவிழ்ந்தோடும் மான்.
ரோஹிதம்—கேசரியென்னும் மான்.
ருரு—கருப்புச் சாரலுடைய கலைமான்.
ஸ்ருமரம்—பெரிய கவரிமான்.
சமரம்—சவுரிமான்.
கட்கம்—காண்டாமிருகம் எனப்படுகின்ற கல்யானை.
கவயம்—பசுபோன்ற பெரியமான்.
**ரோஹிதம்— செங்கல் மீன்.
பாடீநம்— ஆயிரம் பற்களுள்ள பெரிய மீன்.
கும்பீரம்— யானையைப் பிடிக்கும் பெரிய முதலை.
சுக்தி— முத்துச்சிப்பி எனப்படும் உயிரினம்.
சங்கம்—சங்கு.
சம்பூகம்—நத்தை.
சபரீ—துள்ளியோடும் கண்டை மீன்.
வர்மி—புழுப்போன்ற வயிறு நீண்ட மீன்.
நக்ரம்—சிறுமுதலை.
மகரம்—சுறா மீன்.
சிசுமாரம்—முதலை போன்ற கொடிய மீன்.
ராஜி—நீர்ப்பாம்பு.
சிலிசிமம்—சாதாரண சிறிய மீன்.

நக்ரம், மகரம், சிசுமாரம், திமிங்கிலம், ராஜீ, சிலிசிமம் என்பவை மீன் வகைகள். (81-84,

எண் வகை மாமிசங்கள்

இவ்வாறு மிருக்யம், வைஷ்கரிகம், பிரதுதம், பிலேசயம், ப்ரஸஹம், மஹாமிருகம், ஜலசரம், மத்ஸ்யம் என எட்டு வகைப்படும் மாமிசங்கள் உண்டென ஆசாரியர்கள் கூறியுள்ளனர். (85)

வெள்ளாடு, செம்மறியாடுகளின் தன்மை

வெள்ளாடும், செம்மறியாடும் ஜாங்கலம், ஆநூபம் (அதாவது காட்டிலும், நீர் நிறைந்த பகுதிகளிலும்) என்ற இரண்டு இடங்களிலும் காணப்படுவதால் அவை எந்த வகையைச் சேர்ந்தவையென முடிவு செய்ய இயலாது.

இந்த எட்டு வகைகளில் மான், விஷ்கிரம், பிரதுதம்முதல் மூன்றும் ஜாங்கலங்கள், பின் மூன்றும் (மஹாமிருகம், ஜலசரம், மீன்கள் என்பவை) ஆநூபங்கள். நடுவிலுள்ள இரண்டும் (பிலேசயமும் பிரஸஹாவும்) சாதாரண தேசத்தைச் சேர்ந்தவை; விகீர்ய (பொறுக்கிக் கொரித்தல்) முதலிய செய்கையினால் புசிப்பதால் விஷ்கிரம் முதலிய பெயர்கள் வந்தன. (86)

காற்றடர்ந்த இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிச குணங்கள்

மேற்கண்ட மாமிச வகைகளுள், காற்றடர்ந்த இடங்களில் வாழ்கின்ற பிராணிகளின் மாமிசங்கள் உயர்ந்தவை, ருசியானவை, மலக்கட்டைத் தோற்றுவிப்பவை. குளிர்ந்த சக்தியுள்ளவை. துவர்ப்பும் இனிப்பும் கலந்தவை. லகுவும் இதமுமானவை. அதிகமான பித்தமும், நடுத்தரமான வாதமும், அற்பமான கபமும் சேர்ந்த கூட்டில் நன்மையளிப்பவை. (87)

இவைகளுக்குள் தாமிர வர்ணமுள்ள —ஹரிணம்' என்னும் மானும் கருப்புமானும் இதயத்துக்கு இதமானவை. மூவகை தோஷங்களையும் போக்கக்கூடியவை. முயல்மாமிசம் லகுவானது. அறு சுவைகளையும் கொண்டது. மலக்கட்டை ஏற்படுத்தும். ரூக்ஷமானது. குளிர்ந்த வீரியம் கொண்டது. கார்ப்புச் சுவையாக மாறுவது, சடராக்னியை வளர்ப்பது, வாதம் குறைவான சந்நிபாதத்தில் நன்மையளிப்பது.

முயலைப்போல் லாவ பட்சியின் இறைச்சியும் ரூக்ஷமில்லாதது; சிறிதளவே ரூக்ஷமுள்ளது. காட்டுப்புறா, மணிப்புறா போன்ற மற்றவைகளும் போற்றுதற்குரியவை.

அவற்றிலும் தித்திரிபட்சியின் மாமிசம் சிறந்தது. அது புத்தி, சடராக்னி, விந்து இவற்றை வளர்க்கும். மலக்கட்டை உண்டாக்கும். உடலில் மினுமினுப்பைத் தோற்றுவிக்கும். வாதம் மேலோங்கிய உயர்ந்த சந்நிபாதத்தைப் போக்கும். இது காற்றடர்ந்த இடங்களிலும், நீர் நிறைந்த இடங்களிலும் சுற்றி வருவதாகையால் சதையில் மினுமினுப்பு, சூடு, குரு, பருமன் இவற்றை அளிக்கக்கூடியது.

மயில் மாமிசம் பத்தியமன்று. ஆயினும், காது, குரல், ஆயுள், கண்கள் இவற்றிற்குப் பத்தியமானது. அதே போல் காட்டுக் கோழியின் மாமிசம் ஆண்மையை வளர்க்கும். நாட்டுக் கோழியின் மாமிசம் கப குணமுடையது. குருவானது. கிரகரம், உபசக்ரகம் என்னும் பறவைகளின் மாமிசங்கள் அறிவையும் சடராக்னியையும் வளர்க்கும். இதயத்தை உறுதிப்படுத்தும். காட்டுப் புறாவின் இறைச்சி குருவானது, கரிப்புக் குணமுள்ளது. வாத, பித்த கபதோஷங்களை வளர்ப்பது.

மேற்கூறிய வகைகளைத் தவிர்த்து மற்ற வகைகளைச் சார்ந்த பிலேசயம் முதலான வகைகள், ஒன்றையடுத்து மற்றொன்று குருத்தன்மை, உஷ்ணம் என்பவற்றால் உயர்ந்தவை. இவையனைத்தும் சிறு நீரையும் ஆண்மையையும் வளர்க்கும். இவை பலமளிப்பவை, வாதத்தைப் போக்குபவை, கபத்தையும், பித்தத்தையும் வளர்ப்பவை.

மஹாமிருக - பிரஸஹங்களின் மாமிச குணங்கள்

மஹாமிருகங்களின் மாமிசங்கள் சீத வீரியத்தை அளிப்பவை. மாமிசத்தைப் புசிக்கின்ற பிரஸஹ வகுப்பைச் சேர்ந்த பிராணிகளின் மாமிசம் கண்களுக்குப் பலமளிக்கும். மல மூத்திரங்களை ஏற்படுத்தும். உவர்ப்புச் சுவையாக மாறும். உடலில் மாமிசத்தை வளர்க்கும். நாட்பட்ட மூலம், க்ரஹணி, க்ஷயம் இவைகளால் துன்புற்றவர்களுக்கு மிகவும் இதமானது. உடும்பு மாமிசம் நஞ்சை நீக்கும். எலி மாமிசம் விந்துவை வளர்க்கும். பசுமாட்டின் மாமிசம் வரட்டு இருமல், களைப்பு, வளர்ச்சியடைந்த சடராக்னி, விஷக்காய்ச்சல், பீநஸம், உட

விளைப்பு, வெறும் வாத தோஷம் இவற்றைக் கட்டுப்படுத்தும்.

சடகம் என்ற குருவியின் மாமிசம் கபத்தையுண்டாக்கும். எண்ணெய்ப் பசை உண்டாக்கும். வாதத்தைப் போக்கும். விந்துவை அதிகமாக வளர்க்கும்.

எருமை மாட்டின் இறைச்சி குருவாகவும், உஷ்ண வீர்யத்தை அளிப்பதாகவும் இருக்கும். அதிக தூக்கத்தையும் உடல் உறுதியையும் உண்டாக்கும்.

பன்றி மாமிசம் அதேபோல் குணமுள்ளது. மேலும் களைப்பை நீக்கும். நல்லசுவை, சுக்லம், பலம் இவற்றை அளிக்கும்.

அன்னப்பறவையின் இறைச்சி நல்ல குரலை உண்டாக்கும். ரத்த பித்தங்களை அழிக்கும். கொழுப்பை வளர்க்கும். இது குளிர்ச்சியையுண்டாக்கும் தன்மையது. இனிப்புச் சுவையுடையது. *(88–100)*

மீன்கள்

மிகவும் கபத்தையும் பித்தத்தையும் வளர்க்கக்கூடியவை. வாதத்தைப் போக்கக்கூடியவை. அவற்றில் ரோகிதம் என்ற வகையைச் சேர்ந்த மீன் நீரில் எதிர் நீச்சல் போட்டுச் செல்வதாலும், தண்ணீரிலிருந்து எழுந்து ஆகாயத்தில் துள்ளுவதாலும் அது உயர்ந்த மீன் வகையைச் சார்ந்தது. 'சிலிசிமம்' என்ற மீன்வகை மிகவும் தாழ்ந்தது. அது கண்ணுக்குப் புலப்படாத சேறு, பாசி முதலிய இடங்களில் சுற்றி வருவதால் மூவகைத் தோஷங்களையும் உண்டாக்கும்.

நண்டு

ஆண்மையை அளிப்பதில் மிகவும் சிறந்தது. உடலைப் பருமனாக்குவது, உவகையூட்டுவது. குரு குணமுள்ளது.

வெள்ளாட்டு மாமிசம்

அதிகக் குளிர்ச்சி தருவதல்ல, குருவானதுமல்ல. அதிக எண்ணெய்ப் பசை உண்டாக்குவதில்லை. வாதாதி தோஷங்களை வளர்ப்பதல்ல. மனிதருடைய உடலிலுள்ள தாதுக்

களுக்குச் சமமான குணமுள்ளதாக இருப்பதால் கபத்தைத் தோற்றுவிக்காமல் உடலைப் பருக்க வைக்கும்.

செம்மறியாட்டு மாமிசத்தின், குணம் இதற்கு எதிரிடையாகும். ஆயினும் உடலைப் பருக்கச் செய்வதாகும்.

விலக்கத்தக்க இறைச்சிகள்

கொழுப்பு அதிகமாக உள்ள மாமிசத்தை விலக்க வேண்டும். நோய், நஞ்சு, நீர் இவைகளால் இறந்த மாமிசத்தை விலக்க வேண்டும். தானாக இறந்தது, புகையினால் இறந்தது, கண்களுக்குப் புலப்படாத வேறு இடத்தில் இறந்தது, இளைத்தது என்ற இவ்வகையான மாமிசங்களைத் துறக்க வேண்டும்.

அப்பொழுதே கொல்லப்பட்டதும், நல்ல வயதில் உள்ளதும், சுத்தமானதும் நறுமணம் கொண்டதுமான மாமிசம் உயர்ந்ததாகும். சிறந்த இறைச்சியாகும். *(101–105)*

அந்த அந்த வகையில் உயர்ந்தவை

மான்களில் ஏணம், குரங்கம், ஹரிணம், சசம் என்பவை உயர்ந்தவை. விழ்கிற வகைப் பறவைகளில் முள் லாவம், கபிஞ்ஜலம், தித்திரி, க்ரகரம் என்பவை உயர்ந்தவை. பிலேசயங்களுள் — பொந்தில் வாழ்பவைகளில் உடும்பும், முள்ளம் பன்றியும் சிறந்தவை. ப்ரஸஹங்களில் கழுகும் சிங்கமும் உயர்ந்தவை. (பலாத்காரமாக அடித்துச் சாப்பிடும்வகையில்) பிரதுதங்களில் மயிலும்—சாரிகை என்பதும் உயர்ந்தவை. மஹாமிருகங்களில் ந்யங்கு உயர்ந்தது. நீர் வாழ்வனவற்றில் அன்னமும், ரோஹிதமென்னும் மீனும், ஆமையும், வர்மீ என்பதும் உயர்ந்தவை. லாவம் முதலியவற்றில் லாவமும், சுவாவித், கோதா என்பவைகளில் கோதா என்னும் உடும்பும் சிங்கமும் உயர்ந்தவைகளாகும். *(106–107)*

பசு, தவளை, எருமை போன்ற மான், காட்டுப்புறா இவை தம் தம் வகைகளில் நிந்திக்கத் தக்கவையாகும். *(108)*

மாமிச குணங்களில் வேற்றுமை

பட்சிகளின் முட்டைகள் குருவானவை. குஞ்சுகளுடைய மாமிசம் துவர்ப்பும், இனிப்பும் கலந்தது. வயதானவற்றின் மாமிசம் நரம்புகள் நிறைந்ததும் பலமற்றதும், குருவானதும் மூவகைத் தோஷங்களைக் கொண்டதுமாகும். ஆண் உடலின்

முன்பாதி, அதாவது தொப்புளுக்கு முன்புறப் பகுதியும், பெண் மிருகங்களின் பின்பாதி — அதாவது தொப்புளுக்கு பின்புறமும் குருவானவை. கரு தரித்துள்ள பிராணியின் மாமிசம் குருவானது. விலங்குகளில் பெண் இனமும், பறவைகளில் ஆண் இனமும் லகு குணமுள்ளவை.

தலை, தோள், தொடை, முதுகு, இடுப்பு, கால் இவற்றில் பிந்தியதைவிட முந்திய உறுப்புக்களின் மாமிசங்கள் குணத்தில் முறையே குருவாக இருக்கும். அதேபோல் சிரணப்பையைக் காட்டிலும், இரைப்பையின் மாமிசம் அதிக குருவானது. இரத்தம் முதலான தாதுக்கள் முறையே பின்னுள்ளவை குரு குணத்தில் சிறந்தவை. மற்ற உறுப்புக்களின் மாமிசத்தைக் காட்டிலும் விதையும், அதைக்காட்டிலும் ஆண்குறியும், அதை விட மூத்திரக் குண்டிக்காயும் அதைவிடக் கல்லீரலும், அதை விட ஆசனவாயும் அதாவது பின்தட்டின் மாமிசம்—குரு குணத்தில் சிறந்தவை. (109-112)

கீரை வகைகள்

இலை, பூ, பழம், தண்டு, கிழங்கு மற்றும் வேர்வகையில் உண்டானவை என கறிகாய்கள் அறுவகையானவை.

வட்டத்திருப்பி முதலியவற்றின் குணங்கள்

வட்டத்திருப்பி, கிச்சிலிக்கிழங்கு, நிலவாகை, ஆரை, பட்டாணிக்கடலை, கருப்புக்கடுகு, சக்கரவர்த்திக் கீரை இவை வாத—பித்த—கபக்கோளாற்றினால் உண்டாகும் துன்பங்களை அகற்றுபவை. லகு, மலத்தைக் கட்டக்கூடிய தன்மையுடையவை. அவற்றில் ஆரை என்பது சடராக்னியையும் ஆண்மையையும் வளர்க்கும். கறுப்புக் கடுகுக்கீரை கிரஹணிநோய், மூலம் இவற்றை அகற்றும். சக்கரவர்த்திக் கீரை மலத்தை உடைத்துத் தள்ளும் சக்தியுடையது. (113–116)

மணத்தக்காளி, வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தோஷங்களையும் கஷ்டத்தையும் நீக்கும். ஆண்மையை வளர்க்கும். இரசாயநம், மலத்தை இளகச் செய்யும் தன்மையுடையது. குரலுக்கு நல்லது. உஷ்ண வீரியமுடையது.

புளியாரையின் குணங்கள்

சுவையில் புளிப்பானது, உஷ்ணவீரியமுள்ளது, மலக்கட்டை ஏற்படுத்தும், லகுவானது, சடராக்னியை வளர்ப்பது,

கிரஹணி நோய்க்கும், மூலத்திற்கும், வாத கப நோய்களுக்கும் இதமானது.

பேய்ப்புடல் முதலியவற்றின் குணங்கள்

பேய்ப்புடல், ஏழிலம்பாலை, வேம்பு, நாய்வேளை, கார்போகரிசிச் செடி, சீந்திற்கொடி, பிரம்புக் குருத்து, கண்டங் கத்திரி, ஆடாதோடை, காட்டு எள், இலந்தை, வல்லாரை, வெள்ளரி, பாகல், பற்பாடகம், வெள்ளருகு, பொன்னாங் கண்ணி, கத்திரி, செவிங்கனார்ப்பூண்டு, மூங்கிற் குருத்து, கருந்தும்பை, நந்தியாவர்த்தம், சளியம், கடுகு ரோகிணி, சார்வளை, கோமுகம், சந்தனம், பீர்க்கு, அருகம் புல் இவை சுவையில் கைப்பு, விபாகத்தில் உறைப்பு, கிராஹி, வாதத்தைத் தரும், கபத்தையும் பித்தத்தையும் போக்கும். *(117–119)*

பேய்ப்புடலின் விசேஷ குணங்கள்

பேய்ப்புடல் இதயத்துக்கு இதமானது. கிருமிகளை அழிக்கும். நாக்கில் சுவையற்ற நிலையை உண்டாக்கும். விபாகத்தில் இனியது.

கண்டங்கத்திரி, கத்திரி இவற்றின் குணங்கள்

சடராக்னியை வளர்க்கும், மலமிலக்கி, வாதத்தை அகற்றும், பித்தத்தை உண்டாக்கும்.

ஆடாதோடை

இருமல், வாந்தி, இரத்தபித்தம் இவற்றை நீக்கும். இரத்த பித்தத்திற்கு மிகவும் சிறந்த மருந்து.

பாகல்

கைப்புச் சுவையுடன் சிறிது உறைப்புச் சுவையுள்ளது. சடராக்னியை வளர்க்கும், கபத்தைப் போக்கும்.

கத்திரி

காரம் அல்லது உறைப்பு, கசப்பு, உஷ்ண வீர்யம் உடையது. இனிப்புச் சுவையுள்ளது. கபம், வாதம் இவற்றை நீக்கும். சடராக்னியை வளர்க்கும். மனதிற்கு இனியது, சுவையளிப்பது, பித்தத்தைக் குறைக்கும், காரத்தையும் சடராக்னியையும் உண்டுபண்ணும். *(120–122)*

மூங்கிற் குருத்து

துவர்ப்பு, இனிப்பு, கைப்பு ஆகிய மூன்று சுவைகளுடன் கூடியது. வயிற்றுப் பொருமலைத் தோற்றுவிப்பது.

* ஏ

பீர்க்கு, (கார்போக அரிசிச்செடி)

இவையிரண்டுக்கும் மலத்தைப் பிரித்து வெளியாக்குதல் (பிளத்தல்) சடராக்னியை வளர்த்தல் என்பவை குணங்கள்.

சிவதை, இலவம், குமிழம்செடி, சிறுதேக்கு, கர்ணகம், மருதாணி, புல்லுருவி, பாலுள்ள மரங்கள், கோவை, வ்ருக்ஷகம் எனும் மரம், பாச்சோத்தி, சணல், மலையத்தி, நருவிலி, எட்டிக் கொட்டை, சேராங்கொட்டை, கொக்கு மந்தாரை, தாமரை, ஆம்பல், முள்முருக்கன், இவை பேய்ப்புடல் வர்க்கத்தைச் சேர்ந் தவை. இவை இனிப்பும் துவர்ப்பும் கலந்த சுவையுள்ளவை. பித்தத்தைப் போக்குவதில் சிறந்தவை. (123–126)

சிறுதேக்கு சிறுநீரைக் கட்டுப்படுத்தும், மலத்தை இளகச் செய்யும்.

மூங்கில் முளையும், தண்ணீர் விட்டான் கிழங்கும்

இவ்விரண்டும் கசப்பானவை, இலகுவானவை, கண்களுக்கு இதமானவை, ஆண்மையை வளர்ப்பவை, மூவகைத் தோஷங் களையும் அகற்றுபவை, குறைப்பவை.

சிறுகீரை

சீத வீரியமுள்ளது, வறட்சியைத் தருவது, லகுவானது, மதம், பித்தம், நஞ்சு, இரத்த தோஷம் இவைகளை நீக்குவது.

பூண்டு

காச்மீரத்தில் பிரசித்தமான முஞ்ஜாத எனும் கிழங்கு, வாதபித்தங்களை அகற்றும். எண்ணெய்ப் பசையுள்ளது, சீதவீரியமுள்ளது, குரு, இனிப்புச் சுவையுள்ளது, உடலைப் பருமனாக்குவது. விந்துவை வளர்ப்பது.

பாலைக்கீரை

பிசுபிசுப்புள்ளது. கபத்தை வளர்க்கும். மலத்தைப் பிரித்து இளக்கும், குரு குணம் கொண்டது. குளிர்ச்சியானது.

L B

கொத்துப்பசலை

மேற்கண்ட குணங்களுடன் மலத்தை அடக்கும் திறமையும் கொண்டது.

கானாவாழை (கஞ்சு)

பசலைக்கீரையின் குணமுள்ளது. ஆயினும் பசலை மலத்தை இளக்கும்; இது மலத்தைக் கட்டும். *(127 – 129)*

நிலப்பூசனிக் கிழங்கு

நிலப்பூசனிக் கிழங்கு (பால் முதுக்கன்) வாதத்தைப் போக்கும், பித்தத்தை நீக்கும், சிறுநீரைப் பெருக்கும், இனிப்புச் சுவையுள்ளது, சீத வீரியமுள்ளது, ஆயுளை வளர்ப்பது, உடலைப் பருக்கச் செய்வது, தொண்டைக்கு இதமானது, குரு, ஆண்மையை வளர்ப்பது, இரசாயனத்தில் பயன்படுவது. *(130)*

ஜீவந்தி எனும் சிறுபாலைக் கீரை

கண்களுக்கு இதமானது. எல்லா தோஷங்களையும் நீக்குவது, இனிப்புச் சுவையுள்ளது, சீத வீரியமுள்ளது, கறிகாய்களனைத்திலும் சிறந்தது. இனிப்பாக இல்லாத மற்றொரு வகை ஜீவந்தி குறைவான குணமுள்ளது. *(131)*

காட்டு வாழையின் குணங்கள்

காட்டு வாழை வாதபித்தங்களை நீக்கும்.

பர்வணி, பர்வபுஷ்டிகா – என்பவைகளும் வாதபித்தங்களை அகற்றக்கூடியவை. *(132)*

பூசனி முதலியவற்றின் குணங்கள்

பூசனி, சுரை, கொம்மட்டி, சுத்திரி, வெள்ளரி, கோவை, பெரும்பூசனி, சீனப்பறங்கி, காட்டுவெள்ளரி இவை கபம், வாதம் இவற்றை வளர்க்கும். [1]'பேதநம்' [2]விஷ்டம்பி அபிஷ்யந்தி குரு என்ற குணங்களைக் கொண்டிருக்கும். சுவையிலும், விபாகத்திலும் இனிமையானவை.

---

1. பேதநம் – மலத்தை உடைத்துத் தளர்த்தும் தன்மை.
2. விஷ்டம்பி – வயிற்று வாயுவைத் தேக்கி பொருமலைத் தோற்றுவிக்கும் தன்மை.

கொடிகளில் உண்டாகும் காய்களில் சிறந்ததான சாம்பற் பூசனி, வாத-பித்த கோளாறுகளை நீக்கும். [1]வஸ்தியைச் சுத்தப்படுத்தும். ஆண்மையை வளர்க்கும்.

வெள்ளரி

சிறு நீரை அதிகமாக வெளியில் கொண்டு வரும். சுரை, கொம்மட்டி, வெள்ளரி, காட்டு வெள்ளரி என்பவை பிஞ்சு களாக இருக்கும்பொழுது மிகவும் பசையற்றிருக்கும். மலக் கட்டை ஏற்படுத்தும், பித்தத்தை நீக்கும். குளிர்ந்த வீரிய முள்ளது. அது பழுத்தால் இதற்கு நேர்மாறான குணங்களுட னிருக்கும். *(133 – 135)*

முலாம் பழம்

க்ஷாரமென்னும் ஒரு வகை உப்புடன் கூடியிருக்கும், பித்தத்தை வளர்க்கும், கப வாதங்களை நீக்கும். சுவையைத் தோற்றுவிக்கும், சடராக்கினியைத் தூண்டும், இதயத்திற்கு இதமாகயிருக்கும், [2]அஷ்டீலா என்னும் ஒருவகைக் குன்ம நோயை யும், வயிற்றுப் பொருமலையும், அகற்றும், லகுவானது. *(136)*

தாமரைத்தண்டு, முதலியவற்றின் குணங்கள்

தாமரைக்கொடி, தாமரையின் தண்டு, தாமரைக்கிழங்கு, நீர்ச்சேம்பு, ஆம்பற்கிழங்கு, நெய்தல் கிழங்கு, சேம்பு, அல்லிக் கிழங்கு, மேட்டுத்தாமரை, கோரைக்கிழங்கு, கதம்ப வேர் இவையெல்லாம் ரூக்ஷம், மலத்தைக் கட்டும், சீதவீர்யம், குரு என்னும் குணங்களைக் கொண்டிருக்கும். *(137–138)*

கலம்பம் (கடம்ப தண்டு) நாலிகா (சர்மலந்தக்கொடி) மார்ஷகம் (சிறுசெஞ்சீரை), குடிஞ்சர (தும்பை), குதும்பகம், சில்லி, நிஷ்பாவம் (அவரை), லட்வாகம் (புங்கன்), குரூடகம்) கவேதுகம் (காட்டுக்கொதம்பூ), ஜாதுகா (இங்குதி), ஸால (ஓரிலைவேர்), கல்யாணி (காட்டுளுந்து), த்ரிபர்ணீ (மூவிலை), பிரிய பர்ணிகா (பெரும்குரும்பை), குமாரஜீவம் (புத்திலஞ்

---

1. வஸ்தியைச் சுத்தப்படுத்தல் – சிறுநீர் வரும் வழியில் உள்ள அடைப்புக்களை நீக்கி, வஸ்தியென்னும் சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை தாராளமாக வெளிப் படுத்துவது.
2. அஷ்டீலா – அடிவயிற்றில் நீண்ட கல் குழவிபோல் உண்டாக்கும் வலியுடன் கூடிய ஒரு வகைக்கட்டி.

சீவிக்கீரை), லோநிகா (புளியாரல்) யவசாகம் (புளியாரல்) ஸுவர்ச்சலா (வல்லாரை இலை), குருண்டம், நலினி (பவழக் கொடி) கர்வா (முள்ளச்சாமந்தி) வ்ருகம் (முருக்கன்), தூமகம் (இருள்மரம்), லக்ஷ்மணா (திருதாளி), ஜீவந்தி, (சீரைப்பாலை), சஞ்சுபர்ணி (நிச்சிர), பிரபுந்நாட (தகரம்), குவேரகம் (படு கரணை), எல்லா வகையான உருளைக்கிழங்குகள், பருப்பு வகைகள் இவையனைத்தும் இனிப்பு, வறட்சி, சிறிது உப்பு, வாத கபங்களைச் செய்பவை, குரு, சீதளம், மலமூத்திரத்தைத் தூண்டுபவை, அனேகமாக நின்று சீரணிப்பவை. இவைகளை வேகவைத்து ரசம் பிழிந்து, அதிக எண்ணெய் சேர்த்துப் புசித்தால் அதிக தோஷங்களைச் செய்யா. (139 – 143)

இலேசான இலைகளையுடைய துத்தி என்பது சக்கரவர்த்திக் கீரைக்குச் சமமான குணமுள்ளது. (144)

தழுதாழை, மாவிலங்கை

இவ்விரண்டும் சுவையில் இனிப்பானவை, சிறிது கைப்பானவை, கபவாதங்களை நீக்குபவை.

சாறடை, வெள்ளைச் சாறடை, கருவேப்பிலை

இவற்றில் ஒருவிதமான கார்ப்புச் சுவையும், கசப்பும் இருக்கும். தீபநம், பேதநம் என்ற குணங்களுண்டு. விஷதோஷம், சோகை, கப-வாதக் கோளாறு இவற்றை நீக்குபவை.

புங்கமரத்தளிர், மொட்டு

இவை சடராக்னியை வளர்க்கும்; கப வாதங்களைப் போக்கும்; மலத்தை இளக்கும்.

வெள்ளரி, கலப்பைக்கிழங்கு

இவையிரண்டும் லகு, உஷ்ண குணமுள்ளவை; மலத்தை வெளிக்கிளப்புபவை; கசப்புச் சுவை கொண்டவை.

எள்ளின் இலையும், நீர்நொச்சியும்

வாதத்தையுண்டுபண்ணும். காரமும், கசப்புமுள்ளது, புளிப்பானது, மலத்தை உடைப்பது.

ஆமணக்கின் இலை

நீர்நொச்சி போன்ற குணம் படைத்தது.

மூங்கில் குருத்து

விதாஹி, ரூக்ஷம், என்னும் குணங்களைக் கொண்டது, விபாகத்தில் காரமானதும், கபத்தையழிப்பதும் ஆகும். (145–147)

வில்வத்தின் இலை

வில்வத்தின் இலை, சித்திரத்தை, சித்தாமுட்டி இவற்றின் கீரை வாதத்தைப் போக்குபவை. கழிச்சலை நிறுத்துபவை. (148)

சீந்திற்கொடியின் இலை வாதத்தைப் போக்கும்.

காட்டுக்கரணை, கொடிவேலி என்பவை கபத்தைப் போக்கும்.

பொன்னாங்கண்ணி

சடராக்னியை வளர்க்கும், கசப்பானது, மண்ணீரலிலும் மூலத்திலும் உண்டாகும் நோய்களை நீக்கும். கப வாதங்களையும் போக்கும்.

தூதுவளை — கிருமி, இருமல், மார்ச்சளி இவைகளைப் போக்கும். மலமிளக்கும் தன்மையது.

குசும்பக்கீரை — குரு, பித்தத்தை வளர்ப்பது, மலமிளக்குவது, வறட்சியளிப்பது, உஷ்ண வீரியமுள்ளது, புளிப்புச் சுவையுடையது.

கடுகுக்கீரை — க்ஷாரம், இனிப்பு, எண்ணெய்ப்பசை, உஷ்ண வீரியம், குரு என்ற குணங்களுடன் கூடியது. கீரை வகைகளில் மட்டமானது. மல மூத்திரங்களைக் கட்டுவது, மூன்று தோஷங்களையும் உண்டுபண்ணுவது. (149 – 151)

முள்ளங்கி

இளையதாக இருந்தால் சிறிது க்ஷாரத்தின் சுவை, கசப்பு, இவற்றுடன் கூடி, எந்தச் சுவையையும் உணரமுடியாமலிருக்கும். மூன்று தோஷங்களையும் அகற்றும். இலகுவானது, உஷ்ணவீரியமுள்ளது. குன்மம், இருமல், காசநோய், சுவாச நோய், புண்கள், கண்ணோய்கள், தொண்டை நோய்கள், குரல் கம்மல், பசியின்மை, மலம் மேல்நோக்கி வருதலென்னும் உதாவர்த்தம், நாட்பட்ட ஜலதோஷம் இவற்றைப் போக்கும்.

முதிர்ந்த முள்ளங்கி

வறட்சியும், உஷ்ணவீரியமும் கொண்டது. காரமானது. நல்ல சுவையுள்ளது. விபாகத்தில் இனிப்புச் சுவையுடையது, எல்லாத் தோஷங்களையும் வளர்ப்பது. முற்றிய முள்ளங்கி நெல் அல்லது மாமிச ரசத்தினால் தயார் செய்ததாகில் வாதத்தைப் போக்கும். உலர்ந்த முள்ளங்கி வாத கபங்களை நீக்கும்.

நெருப்பின் மீது வைத்துச் சமைக்காத உலர்ந்த முள்ளங்கி எல்லாத் தோஷங்களையும் வளர்க்கும். பச்சைக்கிழங்கு தோஷங் களையுண்டுபண்ணும். (152 – 154)

பிண்டாலு என்னும் ஒரு வகைச் சேம்பு வாத கபங்களை நீக்கும். பித்தத்தை வளர்க்கும்.

காட்டுத்துளசி, முருங்கை, கருந்துளசி, கர்ப்பூரவல்லி, கடுகு, வாசனைப்புல், தனியா, நேபாளதேசத்து தனியா, கடற் பாசி, ஓமம், குராசாணி, இஞ்சி, ஒருவகைத் துளசி, பூண்டு, கருஞ்சீரகம், சீரகம், யானைத்திப்பிலி, கிடாரை, வெண்கரு சாங்கோரை, எலுமிச்சை, கராச்வம், ஓமம், கருத்த சிறு துளசி, பெரும்பயறு, ஆடுதீண்டாப்பாளை, என்பவை மலக்கட்டை ஏற்படுத்துபவை. சுவையிலும் பாகத்திலும் உறைப்புச்சுவை யுடையவை. வாதம் முதலான தோஷங்களைத் தூண்டி அவற் றின் இடங்களிலிருந்து நகர்த்துபவை. லகுகுணமுள்ளவை. எரிச்சலை உண்டாக்குபவை, வறட்சியளிக்கக்கூடியவை. தீஷ்ண குணமும் உஷ்ண வீர்யமும் கொண்டவை. பார்வை, கிருமி இவை களை அழிப்பவை. இந்தக் கீரைகள் ஊறுகாய்களில் பயன் படுத்தப்படுகின்றன. இவை அவற்றில் வாசனையைத் தந்து, மனதுக்கு இதமளிக்கின்றன. சடராக்னியை வளர்த்து சுவை யளிக்கின்றன.

கருந்துளசி

விக்கல், இருமல், நஞ்சு, சுவாசம், பக்கச் சூலை, உடல் நாற்றம் இவைகளைப் போக்கும்.

கர்ப்பூரவல்லி – வீக்கம், இடுநஞ்சு இவைகளை நீக்கும்.
தனியா – துவர்ப்பும், கசப்பும், சிறிது இனிப்பும் கொண் டது. சிறுநீரைச் சுரப்பிக்கும். பித்தத்தை உண்டுபண்ணும்.

ஓமம் — மூத்திரப்பையில் தோன்றும் குத்தலை நீக்கும்.
கொடிவேலி — சடராக்னியை வளர்க்கும்.

வெள்ளைப்பூண்டு

இலை க்ஷாரமும் இனிப்புமானது. நடுவில் இனிய ருசியும், பிசுபிசுப்புமுள்ளது. தீக்ஷ்ணமும், உஷ்ணமும் ஆனது. கிழங்கு கடுவான பாகமுள்ளது, மலமிளக்குவது, இருதயத்திற்கு இதமானது, தலைமயிருக்கு நல்லது, குருகுணமுள்ளது, ஆண்மையை வளர்ப்பது, எண்ணெய்ப் பசையுண்டாக்குவது, சடராக்னியை வளர்ப்பது, சீரணிக்கச் செய்வது, முறிந்த எலும்பைச் சேர்ப்பது, பலத்தை அளிப்பது, ரத்த—பித்தங்களைக் கொடுப்பது, வெண்குட்டம், தொழுநோய், குன்மம், மூலம், நீரழிவு, கிருமி, கபம், வாதம், தும்மல், நாட்பட்ட ஜலதோஷம், சுவாசம், இருமல் இவற்றை நீக்கும்.

வெங்காயம்

வெள்ளைப்பூண்டைக் காட்டிலும் குணத்தில் குறைந்தது. விபாகத்தில் இனிப்பானது, கபத்தை வளர்க்கும், பித்தத்தை வளர்க்காது. வாயுவை மட்டும் நீக்கும்.

சேனை-(கருணை)க் கிழங்கு

சடராக்னியை வளர்க்கும், சுவையுண்டாக்கும், கபத்தை நீக்கும், பசையற்றிருக்கும், லகுவானது, குறிப்பாக மூலநோய்க்கு இதமானது.

காட்டுச் சேனைக்கிழங்கு

தோஷங்களை அதிக அளவில் கோளாறடையச் செய்யும். *(155–166)*

காய்கறி—கீரை வகைகளில் பூ, குரு குணம் படைத்தது. இலை வகை இதைக்காட்டிலும் குருவானது. பழங்கள் மிக்க குரு. இதேபோல் தண்டு, கிழங்கு, முறையே குரு குணம் படைத்தவை. காய்கறி—கீரை வகைகளில் ஜீவந்தி (கீரைப்பாலை) எல்லாவற்றிலும் சிறந்தது; கடுகு எல்லாவற்றைக் காட்டிலும் தாழ்ந்தது. *(167)*

பழவர்க்கம்

திராட்சைப் பழம்

திராட்சைப் பழம் பழங்களனைத்திலும் சிறந்தது. ஆண்மையை வளர்ப்பது, கண் பார்வையைத் தருவது, மலமூத்திரங்களை

வெளியில் தள்ளுவது, எண்ணெய் பசையுள்ளது, சீத வீரியமுள்ளது, இனிப்பான பாக ரசமுள்ளது. சிறிது துவர்ப்பானது, குருவானது. வாதம், பித்தம், இரத்தம், வாயில் கசப்பு, [1]மதாத்யயம், நாவறட்சி, காசம், சுரம், சுவாசம், களைப்பு, தொண்டைக் கம்மல் க்ஷயம் என்பவைகளை நீக்கும்.

மாதுளைப்பழம்

மாதுளைப்பழம் இனியதாக இருந்தால் பித்த மேலீட்டைக் குன்றக்கும். சன்னிபாதக் கோளாற்றை நீக்கும். புளிப்பாக இருந்தாலும் பித்தத்திற்கு எதிரிடையாகாது. சிறிது உஷ்ணவீரியமுள்ளது, வாத கபங்களைப் போக்குவது. எல்லா வகையான மாதுளைகளும் உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமானவை, லகுவானவை, எண்ணெய்ப் பசையுள்ளவை. மலக்கட்டை ஏற்படுத்துபவை, ருசியைத் தருபவை, சடராக்னியைத் தூண்டுவன.

(168–171)

வானழ, பேரீச்சை, பலா, தெங்கு, ஈச்சை, காட்டு மாமரம், பனை, பெருங்குமிழ், பழமுன்னிப்பாலை, இலுப்பை, சிற்றிலந்தை, இலந்தை, ஏறழிஞ்சில், பேயத்தி, நருவிலி, வாதுமை, மரவள்ளி, மலைப்பூவக்காய், நாகமல்லி, அழிஞ்சில், மலைவாழை, முறளஞ்செடி, இந்த மரஞ்செடிகளின் கனகளுக்கு [2]ப்ரும்ஹணம் குரு, சீதவீரியம், எண்ணெய்ப்பசை, மலக்கட்டு, என்னும் குணங்களும் உண்டு. இவை எரிச்சல் (நாவறட்சி), [3]க்ஷதகாசம், க்ஷயம், இரத்தபித்தம் என்பவைகளை நீக்கும். கபம், விந்து இவைகளை வளர்க்கும், சுவையிலும் விபாகத்திலும் இனிமையானவை.

இவற்றில் தெங்கு (தென்னை) குரு, ஸ்நிக்தம், பித்தத்தை நீக்குவது, இனியது, குளிர்ச்சியுள்ளது, பலத்தையும் மாமிசத்தையும் வளர்ப்பது, இதயத்திற்கு இனியது, உடலைப் பருமனாக்குவது, சிறுநீர்ப்பையைச் சுத்தப்படுத்துவது.

---

1. மதாத்யயம் — மதுபானம் செய்வதால் வெறி அதிகமாகித் தோன்றும் தீங்கு.
2. ப்ரும்ஹணம் — உடல் பருத்தல்.
3. க்ஷதகாசம் — மார்பினுள் அடிபட்டு இருமலுடன் இரத்தமும் வெளிவரும் காசநோய்.

வாழைப்பழம்

வாழைப்பழம் இனிப்பானது, துவர்ப்பானது, மிதமான குளிர்ச்சியுள்ளது. இரத்த பித்தங்களை நீக்குவது, ஆண்மையை வளர்ப்பது, ருசியானது, கபத்தை வளர்ப்பது, குருவானது.

பழமுன்னிப்பாலை என்பது பசையுள்ளது, இனியது, துவர்ப்பானது, குருவானது.

பனம்பழம் பித்தத்தை வளர்க்கும்; மலத்தை அகற்றும்.

பெருங்குமிழன் பழம்

இது மலமிளக்கி, மலமூத்திரத் தடைகளை அகற்றும், தலை மயிரை வளர்க்கும். சுத்தமானது, ரசாயனம் என்னும் சிறப்புக் குணமுடையது.

இலுப்பைப்பழம் – இதயத்திற்கொவ்வாதது.

வாதாம்பருப்பு முதலியவை – உஷ்ண வீரியம் கொண்டவை, கப, பித்தங்களை வளர்க்கும். மலமிளக்கி, வாதத்தைப் போக்கும். பசையுள்ளவை.

இலந்தைப் பழம் – மலத்தை இளகச் செய்வது.

முரளம்பழம் – அதிக வாதத்தை நீக்கும், பசையுள்ளது, சூடில்லாதது, குளிர்ச்சியானது.

முரளம்பழச்சதைப்பற்று – இனியது, ஆண்மையை வளர்ப்பது, பித்தத்தையும் வாதத்தையும் போக்குவது.

இலந்தைப்பழச்சதை – முரளம்பழ மஜ்ஜைக்குச் சமமான குணங்களுள்ளது. மற்றும் நாவறட்சி, வாந்தி, இருமல் இவற்றை நீக்குவது. *(172–180)*

(திந்துகம்) தும்பீபலம், மலையகத்தி, ஆஸீநம், பலிநீ, கோவை, டங்கம், மருதைமரம், மகிழம், பேராமுட்டி, கருங்காலி, தனுகுமரம், சுவேதபாகம், விளா, வில்வம், புளிநாரத்தைப் பழம், நாவல்பழம், பால் உள்ள மரங்களின் விதை, தாமரை மணி இவையனைத்தும் கபத்தையும், பித்தத்தையும் அழிக்கும். துவர்ப்பும் இனிப்புமானவை. பசையற்றவை, குளிர்ந்தவை, கனமானவை. சுரண்டி எடுத்துவருவது, மலக்கட்டு, வயிற்றுப் பொருமல், இவைகளைத் தோற்றுவிக்கும். ஸ்தம்பனம் செய்யும். வாதத்தைச் சீற்றமடையச் செய்யும். *(181–183)*

விளாங்காய்

பச்சையாக இருந்தால் தொண்டைக்கு நல்லதல்ல. துவர்ப்பானது, புளிப்பானது, மூன்று தோஷங்களையும் தோற்றுவிக்கும். பழுத்திருந்தால் ருசியாக இருக்கும். துவர்ப்பும் புளிப்புமானது. ருசியுள்ளது, விக்கலையும் வாந்தியையும் நீக்குவது. இது காண்டவம், ஷாடவம், அரிஷ்டம், ராகம் எனப்படும். இதைச் செயற்கை உணவு வகைகளில் உபயோகிப்பது நல்லது. விளாங்காய், பழம் இரண்டும் விஷத்தைப் போக்கும். மலபந்தத்தை ஏற்படுத்தும். மற்ற விளாங்காய் இனங்களையும் இதேபோல் காண்க. *(184)*

வில்வப்பழம் — உடல் பருமனையளிப்பது, பசையுள்ளது, வாத பித்தங்களை நீக்குவது.

புளிப்பு நாரத்தம் பழம் — உடலைச் சுத்தம் செய்யும், புளிப்பானது.

நாவல்பழம் — மிகவும் வாதத்தைத் தருவது.

க்ஷீரி — (பால்மரங்கள் — ஆலமரம், அரசமரம் முதலியன) இவைகளில் தோன்றும் பழங்கள் சிறிது புளிப்பானவை.

தான்றிப்பழம் — பித்தத்தையும், கபத்தையும் நீக்கும்; புளிப்பாக இருக்கும்; வாதத்தை வளர்க்கும். *(185–188)*

மாங்காய், மாங்கனிகளின் குணங்கள்

மாங்காய் பிஞ்சு — துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு இந்த சுவைகளைக் கொண்டிருக்கும். உடலின் மழமழப்பை நீக்குவது, வாதம், இரத்தம், பித்தம் இவைகளைத் தோற்றுவிப்பது.

முதிர்ந்த மாங்காய்

புளிப்பானது. இரத்தம், பித்தம், கபம் இவற்றை உண்டாக்குவது.

பழுத்த மாங்காய்

இனிப்பானது, புளிப்பானது, குருவானது, பசையுள்ளது, வாதத்தைப் போக்குவது, பித்தத்தை வளர்க்காதது, உள்ளத்திற்கு இதமானது. கபம், மாமிசம், சுக்ரம், பலம் இவற்றை அளிப்பது. *(189)*

மாம்பழரசம்

இதயத்துக்கு இதமானது, நறுமணமுள்ளது, பசையுள்ளது, சுவையையுண்டாக்குவது, சடராக்னியை எழுப்புவது. பித்தம்,

வாதம் இவற்றை நீக்குவது, சுக்ரம், இரத்தம் இவற்றைத் தூய்மையாக்குவது. (190)

நிலாக்கொடிப்பழம்

நிலாக் கொடிப்பழம் துவர்ப்பானது, ருசியைத் தருவது, இதயத்துக்கு இதமானது, வாதத்தை வளர்ப்பது.

வில்வப்பழம்

பழுத்த வில்வம் குரு, அக்னிமந்தத்தைத் தருவது, தோஷங்களைச் செய்வது, துர்நாற்றமுள்ள காற்றைத் தரும்.

வில்வக்காய்கள்

தீக்ஷ்ணமானவை, பித்தத்தை வளர்ப்பவை, இலகுவானவை, சடராக்னியை வளர்ப்பவை. வாத பித்தங்களை நீக்குபவை, சூடானவை, பசையுள்ளவை, இரண்டும் அதிக மலக்கட்டைத் தோற்றுவிப்பவை. (191–192)

புளி மலக்கட்டை ஏற்படுத்தும். உடல் மழமழப்பை நீக்கும், உஷ்ண வீரியமுள்ளது. வாத கபங்களைப் போக்கும்.

[1]கோசாம்ரமென்னும் பழம்—இந்த குணங்களில் சற்று குறைவுள்ளதாக இருக்கும்.

புங்கம்பழம் – மலக்கட்டை ஏற்படுத்தும், பித்தம், கபம் இவைகளுக்குப் பகையல்ல.

வன்னிமரத்தின் பழம் – குரு, உஷ்ணமானது, மதுரம், தலைமயிர் உதிரும், விபாகத்தில் காரமானது.

ஊவக்காய் – உறைப்புச் சுவையுடையது. தீட்சண்யமுள்ளது, உஷ்ண வீர்யமுள்ளது. மலத்தை உடைப்பது, பித்தம் தருவது, கிருமி, குல்மம், செய்விஷம், மண்ணீரல், மூலம், கபம், வாயு இவற்றைத் தணிக்கக்கூடியது. கசப்பான ஊவக்காய் இனிப்புச்சுவையுடையது. இது அதிக உஷ்ணம் தராது. மூன்று தோஷங்களையும் இளக்குவது. (193 – 196)

---

1. கோசாம்ரம் – எரிப்புமாங்காய்.

கடம்பம், தண்ணீர் முட்டாங்கிழங்கு, அரிநெல்லிக்காய், திருசூல்யம், இலுப்பை, விகங்கதம் என்பவை உவர்ப்பான வன்னிப்பழத்தைக் காட்டிலும் சிறிது குணங்களில் குறைந்தவை. (197)

துரிஞ்சிக்காயின் தோல்

துரிஞ்சிக்காயின் மேல் தோல் கசப்பும், உவர்ப்புச் சுவையும் கொண்டது. பசையுள்ளது. வாதத்தை அகற்றுவது.

உட்சதை இனிப்பானது, உடலைப் பருமனாக்குவது, வாத பித்தங்களை நீக்குவது, குருவானது. அதன் கதுப்பு லகுவானது, காசம், சுவாசம், விக்கல், மதவெறி, நாவறட்சி, வாதம், கபம், மலக்கட்டு, வாந்தி, அருசி, குன்மம், வயிற்று நோய்கள், மூலம், வயிற்றுளைச்சல், அக்னி மந்தம் இவைகளைப் போக்கும். (198 – 199)

சேராங்கொட்டை

சேராங்கொட்டையின் மேல்தோலும் சதையும் உடலைப் பருக்க வைக்கும். இனியது, சீத வீரியமுள்ளஃது. அதன்கொட்டை நெருப்பைப் போல் அழற்சி உண்டாக்கக்கூடிய உஷ்ண வீரிய முள்ளது. அறிவிற்குகந்தது. அதிக வாதத்தையும் கபத்தையும் நீக்குவது.

ஈச்சம்பழம்

ஈச்சம்பழம் இரு வகையானது. இவற்றுள் இனிப்பு ஈச்சை சீதவீரியமும், புளிப்பு ஈச்சை உஷ்ணவீரியமும் கொண்டவை. இவ்வகையிரண்டும் குருவானவை, சுவையானவை, அளவு மீறிய சடராக்னியைத் தணிப்பவை. (201)

***ஆருகம்**

ஆருகம் என்பது இனியதும் சுவையானதுமாகும். நன்கு பக்குவமடைந்த ஆருகம் விரைவில் சீரணிக்கும் தன்மையது, அதிக உஷ்ணவீரியமற்றது, குருவானது, மூன்று விதமான தோஷங்களையும் தோற்றுவிப்பது. (202)

---

* ஆருகம் – இமாலயப் பிரதேசங்களில் விளையும் ஒருவித கனி. இது காபூல் பிரதேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழம். ''ஆல்பகோடா'' என்று கூறுவர்.

திராட்சையும் ஈச்சம்பழமும்

உலராமல் பசுமையாக இருக்கும்பொழுது, புளிப்பாகவும், உஷ்ணவீரியமுள்ளதாகவும் இருக்கும். பித்த கபங்களை வளர்க்கும். குருத்தன்மையைக் கொண்டிருக்கும். வாதத்தைப் போக்கும். மலத்தை இளக்கி வெளிப்படுத்தும். பெருங்களாக்காயும் இதே குணங்கள் கொண்டிருக்கும். (203)

புளிப்பு ரசமுள்ள இலந்தை, சிற்றிலந்தை, அயனிபலா, (காட்டுப்பலா) காட்டுமா, ஆருகம், புளிப்பு நார்த்தை, எலுமிச்சை, புளிப்பு மாதுளை என்பவைகளின் பழங்கள் சிறிது பித்தத்தை வளர்க்கும். பக்குவமும் உலர்ந்ததுமான பெருங்களாக்காயும் அதே குணமுள்ளதாகும். (204)

உலர்ந்த இலந்தைப் பழம், உலர்ந்த புளியம்பழம் இவ்விரண்டும் சடராக்னியை வளர்ப்பவை, மலத்தைப் பிளப்பவை, லகு என்ற குணங்களைக் கொண்டிருக்கும். நாவறட்சி, அயர்வு, உடல் வாட்டம் இவற்றைப் போக்கும். கப வாதங்களில் இதமானவை. (205)

அயனிபலா (காட்டுப்பலா)

பழங்கள் எல்லாவற்றிலும் மட்டமானது. இது தோஷங்களனைத்தையும் வளர்க்கும் தன்மையது.

பயன்படுத்தத் தகாத தானியங்கள், கறிகாய்கள், பழங்கள்

தானியங்கள்

பனி, காற்று, நெருப்பு, கெட்டகாற்று, விஷ ஜந்துக்களின் உமிழ்நீர், இவற்றினால் கெட்டுப் போனாலும், புழுவுடன் கூடினாலும், நீரில் அமிழ்ந்தாலும், தகுதியற்ற நிலத்தில் பயிரானாலும், பருவம் தவறிப் பயிரானாலும், வேறுவகைத் தானியங்களுடன் சேர்ந்தாலும் நாட்பட்டதால் பலமிழந்தாலும் பயன்படுத்தத்தகாதவை.

காய்கறிகள்

மேற்கண்ட குற்றங்களுள்ள, நெய் முதலான பசையுள்ள பொருள்களின் சேர்க்கையில்லாமல், பக்குவம் செய்ததும், கடினமாகவும், ரசமற்றும், உலர்ந்தும் இருந்தால் விலக்கத் தக்கவை. முள்ளங்கி மட்டும் உலர்ந்தாலும் பயன்படுத்தலாம்.

பழங்கள்

மேற்கண்ட தோஷங்களுடன் கனியாமலும் இருந்தால் பெரும்பாலும் பயன்படுத்தத் தகாதவையே. வில்வப் பழம் மட்டும் கனியாவிட்டாலும் பயன்படுத்தலாம். *(206–209)*

பழ வர்க்கம் முற்றும்

சூகவர்கம், சிம்பிவர்கம், பக்குவான்னவர்கம், மாமிசவர்கம் சாகவர்கம், பலவர்கம் என்னும் அறுவகை வர்கங்களைச் சேர்ந்த அன்னபானங்களைப் பற்றிய இந்த ஒரு பகுதி மிகவும் உபயோகப் படக் கூடியது. ரசம், வீரியம் முதலியவைகளின் வழியாக தன்னுடைய வேலையைச் செய்வதில் வல்லது எனக் கூறப் பட்டது. *(210)*

எல்லாவிதமான பொருள்களையும் பற்றி முழுதாகவும் விரிவாகவும் சொல்வதென்பது முடியாது. ஏனென்றால்,பொருள் அளவு (மாத்திரை) சேர்க்கை (ஸம்யோகம்), செயல் (க்ரியை) தேசம், காலம், நிலை முதலியவற்றின் மாறுபாட்டையொட்டி இப்பொருள்களால் ஏற்படும் நன்மை தீமைகள் மாறுபடுவதால் இவைகளின் நன்மை, தீமை விஷயத்தை முழு அளவில் நிச்சயிக்க முடிவதில்லை. எனவே அவற்றைப் பற்றி முழுவதுமாகக் கூற இயலாது. *(211—212)*

மாத்ராதி விவரணம்

அளவாக அருந்திய மதுவானது மதுவினால் ஏற்பட்ட நோய்களை நீக்குகிறது. எள்ளளவு அருந்திய விஷமும் அமுதமாகி விடுகிறது. மிகக்குறைந்த அளவில் புசித்த உணவானது வாதத்தையும், அதிக அளவில் புசித்த உணவானது மூன்று தோஷங்களின் சேர்க்கையையும் கோளாறடையச் செய்கின்றது. சம அளவில் சேர்த்து அருந்தும் தேனும், நெய்யும் விஷத்தைப் போல் கெடுதல் விளைவிக்கிறது. *(213—214)*

சுவை மாற்றங்கள்

க்ஷாரமானது (ஒரு வகை உப்பு) புளிப்பின் சேர்க்கையினால் உடனே இனிப்பாக மாறிவிடுகிறது.

கோவையின் கசப்புச் சுவை தும்பை பழத்தின் சேர்க்கையினால் சற்று இனிப்பாகிறது.

பெருங்காயத்துடன் சேர்ந்தால் பொன்சிலாசத்திலும் இந்துப்பிலும் வாசனை வருகிறது. பொன்சிலாசத்தின் காரணமாகப் பெருங்காயத்திலும் இந்துப்பிலும் நிறமும் வருகிறது. இந்துப்பின் காரணமாக பெருங்காயத்திலும் பொன்சிலாசித்திலும் சுவை வருகிறது. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இம்மூன்றும் கலந்தால், விசித்திரமான செம்மை நிறம், வாசனை, சுவை இவை தோன்றுகின்றன.

கேழ்வரகு தானியம்

ரத்த பித்தத்தை அழிப்பது. ஆனால் வயிற்றில் எரிச்சலை உண்டாக்கும். உஷ்ண வீர்யமுள்ள பொருள்களுடன் கலந்தால் ரத்த பித்தங்களை வளர்க்கும்.

எள்

குஷ்டநோயைத் தோற்றுவிப்பதாக இருப்பினும் எள்ளு சேராங்கொட்டையுடன் சேர்ந்தால் குஷ்டத்தை அழிக்கும்.

வெல்லம்

சடராக்னிக் குறைவை ஏற்படுத்தும். ஆயினும் கடுக்காயுடன் சேர்ந்து சடராக்னியை அழிக்கிறதில்லை. வளர்க்கும்.

திருஷ்ணு என்னும் தண்ணீர் வேட்கை நோயில் சடராக்னி தீட்சண்யமான பொழுது, நெருப்பைச் சுடர் விட்டெரியச் செய்ய கூடிய நெய்யும் மெழுகுடன் கலந்து உட்கொள்ள தாகம் தணியும்.

உயிரூட்டும் பாலும் சிறிதளவு விஷத்துடன் கலந்தால் மரணத்திற்கு காரணமாகிறது.

ஸ்தாவர விஷம்

[1]ஸ்தாவர விஷம் [2]ஜங்கம விஷம் இரண்டும் உயிரை நீக்குவதில் சமமாக இருந்தாலும் ஒன்று மற்றொன்றுக்கு மாற்று (பிரதி விஷம்) ஆக ஆகிறது.

சத்துமாவு

இது பசையற்றதாகவும் வாதத்தை வளர்ப்பதாகவும் இருந்தாலும் தண்ணீரில் கரைத்துக் குடித்தால் உடலுக்கும் உள்ளத்திற்கும் உவகையூட்டும்.

---

1. ஸ்தாவரவிஷம்— அரளி, ஊமத்தை முதலியவற்றின் விஷம்
2. ஜங்கம விஷம்— தேள், பாம்பு முதலியவற்றின் விஷம்.

இரத்தினங்கள், மந்திரங்கள் இவற்றை உடலுக்குள் செலுத்தாவிட்டாலும் அவை தமது வேலைகளைச் செய்கின்றன. (215—220)

இஞ்சியிலிருந்து சுக்கு உண்டாகிறது. சுக்கு பதப்படுத்துவதால் இலகுவாகிறது.

இலகு குணத்துடன் கூடிய ஸத்துமாவினால் குருவான [1]ஸித்தபிண்டிகை ஏற்படுகின்றது. இலகு குணமுள்ள சிவப்பு அரிசியினாலான (வறுத்து இடித்த) அவல் குருவாக ஆகிறது.

சம்பா அரிசியானது இடித்து மாவாக்கப்பட்டால் சோதுமையைக் காட்டிலும் குருகுணமுள்ளதாகிறது. குருவும் பித்தமளிப்பதுமான அரிசியினாலுண்டான பொரியானது லகுவும் பித்தத்தைப் போக்குவதுமாகும். மலக்கட்டை ஏற்படுத்தும். இலகுவான பச்சைப் பயிறுல் செய்த [2]குஷ்மாஷம்' என்னும் தின்பண்டம் மலத்தைப் பிளப்பதும் குரு குணமுள்ளதுமாகிறது.

மோர் அதிக மலக்கட்டைச் செய்யும். அதுவே இஞ்சி, ஓமம் முதலியவற்றுடன் சூடாக்கப்பட்டால் மலத்தைக்கட்டாது. (221—224)

வெல்லம், தண்ணீர் இவ்விரண்டையும் கலந்துசெய்யப்பட்ட குளிர்பானம் மிகவும் அதிகமாக சிறுநீர் கழிக்கச் செய்யும். குருவானது. வெல்லமும் தயிரும் குருவானவை. இவற்றைக்கொண்டு செய்யப்படும் ரஸாலா என்னும் பானம் மிக்க குருவாகவும், அதிகமாக சுக்லத்தை வளர்ப்பதாகவும் ஆகும். (225)

குருவும், வீக்கத்தைச் செய்வதுமான தயிரை மத்தால் கடைந்து எடுக்கப்பட்ட மோரில், வெண்ணெயை எடுக்காவிட்டாலும் அது வீக்கத்தை நீக்குவதாகவும் லகுவாகவும் ஆகும்.

மிகவும் பசையுடன் கூடிய நெய் முகத்தைக் கோணலாக்கும். வாத நோயை வெண்ணெய் போக்குவது போல் போக்காது. (226)

---

1. ஸித்த பிண்டிகை— இயற்கையாக லகு குணமுள்ள பாவுகளைச் சேர்த்துச் செய்யும் உருண்டை.

2. குல்மாஷம்— அரிசி, பச்சைப் பயறு இவைகளின்மாவை வெந்நீரில் பிசைந்து சிறிது வேக வைத்து கொழுக்கட்டை மாதிரி செய்யும் பலகாரம்.

கோதுமை

கண்பார்வையை அளிக்கக் கூடியதாக இருந்தாலும், எண்ணெயில் சமைக்கப்படுமானால் கண்பார்வையைப் போக்கி விடும்.

முள்ளங்கி

தோஷங்களை உண்டாக்கும். ஆனால் அதை எண்ணெய் வகையுடன் சமைத்துவிட்டால் தோஷங்களை வளர்க்காது.

தேன்

விஷத்தைப் போக்குவதாக இருந்தாலும் தேன் சூடாக்கப் பட்டால் விஷமாகி விடும். செம்பு இரும்பு பித்தளை முதலிய, அதற்கு ஒவ்வாத பாத்திரத்தில் வைக்கப்பட்ட திராட்சை புளிப்பாகவும், தோஷமளிப்பதாகவும் ஆகிவிடுகிறது. *(227—228)*

சந்தனப் பூச்சு தாபத்தைத் தணிக்கும். ஆனால்நுண்ணியதாக அரைத்தும் உலர்ந்தும் தடிப்பாகவும் செய்யப்படும் சந்தனப் பூச்சு சதையின் சூட்டை வெளிவிடாமல் தடுத்து எரிச்சலை உண்டாக்கும்.

அகில்

அகில் உஷ்ண வீரியமுள்ளதானாலும், வழவழப்பில்லாமல் அரைத்து மேலே பூசினால் குளிர்ச்சியை உண்டாக்கும்.

எள் அறிவையுண்டாக்கும், உஷ்ண வீர்யமுள்ளது. தொட்டால் குளிர்ச்சி. அதிலுண்டாகும் எண்ணெயும், வண்டலும் உஷ்ண வீர்யமுள்ளவை. வளர்ச்சியைக் கொடுப்பதில்லை. எள் கபத்தை உண்டு பண்ணும். எண்ணெயும் வண்டலும் கபத்தை உண்டுபண்ணாது.

தயிருக்கு உள்ள உடல் வீக்கத்தையுண்டாக்கும் தன்மை, மோருக்கும் வெண்ணெய்க்கும் கிடையாது. *(229—231)*

பூமி-ஸாத்மியம் (உடலைச் சேர்ந்த பொருள் போல் ஆவது)
பாலைவனத்தில் வசிப்பவருக்கு தயிர், பால், தூதுவளை;
கிழக்கு நாட்டிலுள்ளவருக்கு க்ஷாரம்; (ஒரு வகை உப்பு)
சிந்து நாட்டவருக்கு மீன்கள், மலைப் பிரதேசத்தினருக்கு எண்ணெய் மற்றும் புளிப்பு;
மலயமலைவாசிகளுக்கு கிழங்கு வேர் வகைகள், கொங்கண தேசத்திற்கு பேயா; (கஞ்சி)
உத்தர பிராந்தியத்தவருக்கு காய்ச்சிய மாவுக் கஞ்சி;

அவந்தி நாட்டவருக்கு (மாலவதேசம்) கோதுமை, பாஹ்லீகம், பாஹ்லவம், சீனதேசத்தவருக்கு இறைச்சியை தணல் மீது பொறித்தெடுத்து உண்பது ஒத்துக் கொள்ளக் கூடியது.

யவனம், சகம் என்னும் இடங்களில் வசிப்பவருக்கு மாமிசம், கோதுமை, மார்த்வீகம் என்னும் திராட்சையிலிருந்து தயார் செய்யும் மது, மற்றும் ஆயுதத்தில் குத்தி நெருப்பில் வாட்டிப் புசிப்பது ஸாத்மியமாகும். (232—234)

உடலுக்கு உகந்தது

சிலருக்கு நெய், பால், மது, மாமிசம் இவைகளும், சிலருக்கு கஞ்சி வகைகளும், மாமிசரசமும், சிலருக்கு கோதுமை, சிலருக்கு நெல் வகையும் உடலுக்கு ஸாத்மியமாகின்றன. உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவும் பழக்கப்படுத்திக் கொண்டால் அது உடலுக்கு ஒத்துப் போய் விடுகிறது. (235)

தோஷம் அளவு, காலம் இவற்றிற்கு ஏற்றவாறு உணவு, நீர், மருந்து இவற்றைப் பயன்படுத்தினால் அது உடலுக்கு ஒத்துக் கொண்டு விடுகிறது. உடலுக்கு வலிவை அளிக்கிறது. அதிகமாகப் பயன்படுத்தினாலும், அதிகமான தீங்கை விளைவிப்பதில்லை.

பசுவின் பால்

பசுவின் பால் மலத்தை இளக்கும் தன்மை படைத்திருந்தாலும் சிலருக்கு மலக்கட்டை ஏற்படுத்துகின்றது. அனேகமாக கபமும், வாதமும் அதிகமாக கொண்டவனுக்கு குளிர்காலத்தில் சடராக்னியை பெரும்பாலும் குறைக்கிறது. விஷத்தைப் போக்கும். பாலும் பாம்பின் உடலில் விஷத்தை வளர்க்கிறது.

உடற்பருமனானவர், கிழவர், சிறுவர் போன்றவர்களுக்கு வாந்தி முதலியவைகளைத் தவிர்க்க வேண்டும். (236—238)

காய்ச்சாத மோர், வயிற்றில் கபத்தை அழிக்கிறது. தொண்டையில் கபத்தை வளர்க்கிறது. திராட்சையும் பேரீச்சமும் வாதத்தைப் போக்குபவைகளாக இருப்பினும் வயிற்றில்வாதத்தை வளர்க்கின்றன. (239)

மயில்

உடல் நலமுள்ளவனுக்கு மயில் மாமிசம் அதிக பத்தியமானதல்ல; ஆனால் இதே மயில், செவி, குரல் வயது (முதுமை)

கண்கள் இவற்றிற்கு மிகவும் இதமானது. கண்களுக்கு குளிர்ச்சிப் பொருள்கள் உயர்ந்தவை. செவிகளுக்கு சூட்டுப் பொருள்கள் உயர்ந்தவை. (240)

பால்

பால் இனிப்புச் சுவையுள்ளது, மலத்தை இளக்குவது, குளிர்ச்சியானது, பால் தயிராக மாறும் காலத்தில் இதற்கு எதிரிடையானது. புளிப்பு மலத்தைக் கட்டும். தொடுவதற்கு குளிர்ச்சியானாலும் சூட்டை உண்டு பண்ணும். பாலிலிருந்து தயிர் உண்டாவது போல் தயிரிலிருந்து நெய் உண்டாகிறது. நெய் பாலுக்கொப்பானது. பால் வாதத்தைப் போக்கும். தயிரும் வாதத்தைப் போக்கும். ஆனால் இவற்றிற்கிடையிலான நன்றாகத் தோயாத இளந்தயிர் (மந்தகம்) வாதத்தை வளர்க்கும். துவர்ப்பு மற்றும் புளிப்புச் சுவையைக் கொண்ட மோர் மலக்கட்டைச் செய்யும். வெறும் புளிப்பான மோர் மலத்தை இளக்கும். (241—243)

காட்டாத்திப்பூ, வெல்லம், நீர் இம்மூன்றும் காலப் போக்கில் கள் [1]ஸூக்தம் இவைகளில் புளிப்புத் தன்மைக்குக் காரணமாகிறது. குளிர்காலத்தில் எண்ணெய், புளிப்பு, உப்பு என்னும் சுவைகள் இதமானவை; ஆனால் இவை குளிர் காலத்தின் முன்வரும் காலத்திலும் தொடக்கத்திலும் பின்வரும் காலத்திலும் முடிவிலும் நன்மை தரா. (244)

கோடை காலம் தவிர, மற்ற பருவங்களில் தண்ணீரில் கொதிக்க வைத்த பொரிமாவும், பகல் தூக்கமும் சிறந்தவையல்ல. கோடை முதலான பருவங்களில் அவைகளுக்கு இயற்கையான சூடு, மழை, குளிர் அதிகமாகவோ குறைவாகவோ இல்லாமல், சமமாக இருந்தபோதிலும் வாதம் முதலானவைகளை அதிகப் படுத்தி குவிப்பதில் காரணமாகின்றன. காலத்தை ஒட்டி சிசிரம் முதலான பருவங்களில் வறட்சி, பசை, பலம் இவை வளர்ச்சி

---

1. ஸூக்தம்—ஏதேனுமொரு திரவப்பொருளில், வேர்கள் கிழங்குகள், பழங்கள், எண்ணெய் முதலியவைகள், கிழங்குகள், பழங்கள், எண்ணெய் !முதலியவைகள், உப்பு வகைகள் சேர்த்து காய்ச்சப்பட்ட திரவப் பொருள்.

உடைவதற்கும் குறைவதற்கும் ஒரு முறையுள்ளது. இதேபோல் இனிப்பு முதலான ரசங்களில் மற்றொரு முறையுள்ளது. (245)

அப்பொழுதே தயார் செய்யப்பட்ட மணத்தக்காளி ரசாயனமாகும். இதுவே ஓரிரவுக்குப் பிறகு விஷமாக மாறிவிடும். இளைய முள்ளங்கி தோஷங்களை நீக்கும். இதுவே நன்கு முற்றிப் போய்விட்டால் கிழங்கு போல் தோஷங்களைத் தோற்றுவிக்கும். (246)

காய்ச்சலில் சிகிச்சை முறை

காய்ச்சலில் தோஷங்களின் பலாபலங்களை ஆராய்ந்து ஆறு நாட்களுக்குப் (பேயா) என்னும் கஞ்சி, கஷாயம், நெய், பால், மலங்கழித்தல் இவைகளை முறையே பயன்படுத்த வேண்டும். முதலில் லங்கனம் செய்வித்து கஞ்சியைத் தர வேண்டும். பிறகு 7-வது நாள் கஷாயம், 14வது நாள் நெய், 21-வது நாள் பால், 28-வது நாள் மலங்கழிக்கச் செய்தல் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும். (247)

விலக்க வேண்டியவைகளும் சில செய்ய வேண்டியவைகளும்

வாந்தி, இதயநோய், குன்மம் இந்த நோயுள்ளவர்க்கு வாந்தியெடுக்கச் செய்வது விலக்க வேண்டியதாக இருப்பினும் அந்தந்த வியாதிக்குச் சிகிச்சையில் இதைச் செய்ய வேண்டும். இதேபோல் மூலநோய், குட்ட நோயுள்ளவருக்கு வஸ்தி தருவது விலக்கபட்டிருந்தாலும் அவைகளின் சிகிச்சையில் செய்ய வேண்டியதென்று குறிப்பிட்டுள்ளது. (248)

விரைவில் நோய்கள் தணியக் காரணங்கள்

சுரத்தில் பருவமும் தோஷங்களும் சமமாக இருத்தல், நீரிழிவு நோயில் தோஷங்களும் தூஷ்யங்களும் சமமாதல் இரத்த குன்மத்தில் அது நாட்பட்டதாகி விடுதல் இவையனைத்தும் எளிதில் குணமடைவதற்குக் காரணங்களாகின்றன. (249)

கண்களில் பலவிதமான கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதலாகிய அபிஷ்யந்தம் என்னும் நோயில், மூன்று நாட்களுக்கு பிறகே கண் மருந்துச் சொட்டுகளை (ஆஸ்ச்யோதனத்தை)ப் பயன்படுத்த வேண்டும். இதே போல் தோஷங்கள் பக்குவமடைந்த

பிறகு கண்மையைப் பயன்படுத்த வேண்டும். [1]பிரதிச்யாயத்தில் [2]நஸ்யம், திமிரம் என்னும் கண்பார்வையை மறைக்கும் நோயில், அது மிகவும் வளராத நிலையில் காரி ரத்தக் குழாயைக் கீறி கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தும் (ஸிரா மோக்ஷம்) சிகிச்சையைப் புரிதல் என இவையனைத்தும் அந்த அந்த நிலையை யொட்டிச் செய்யவேண்டும்.

கெட்ட இரத்தத்தினால் தோன்றும் நோய்களில் 'ஸிரா மோக்ஷம்' சிறந்த முறை, ஆனாலும் இரத்த பித்தத்தில் கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த 'ஸிரா மோக்ஷம்' உயர்ந்ததல்ல. கண்ணோயாளிகளுக்குப் பத்தியமான உணவும் இரவில் நன்மை யளிக்காது. உலர்ந்த பொரிமாவு தீமையானதாக இருப்பினும் நீரிழிவு நோயாளிக்கு நன்மையளிப்பதேயாகும். (250-252)

குன்மமென்னும் நோயுள்ளவர்க்கு பால், தயிர் முதலானவை இதமற்றவைகளாக இருப்பினும், கொட்டைக் கரந்தை முதலானவைகளுடன் சேர்ந்து உபயோகித்தால் இதமளிக்கும். மழைக்காலத்தில் வாதத்தின் கோளாறு ஏற்படுவது இயல்பாயினும் வாதத்தை அளிக்கும் இயல்புடையதானாலும் தேன், மழைக் காலத்தில் இதமானது. (253)

மதுவினால் தோன்றும் நோய்களுக்கு மதுவே மருந்து; ஒரு விஷத்துக்கு மற்றொரு விஷம் மருந்து; நீர்ப்பாங்கான இடத்தில் செய்த நெய்க்கு ஹேமந்த ருதுவில் பலம் அதிகமாகும். வாதத்தின் குணம் லகு ஆனாலும் வாதத்தினால் ஏற்பட்ட சுரத்திற்கு சோம்பேறித்தனமும் உடல் பளுவாக இருத்தலும் முன் அறிகுறிகளாகும். (254)

பூண்டைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எரிச்சலானது அனேகமாக வேர்வையை வரவழைப்பதால் நீங்குகிறது. பகலில் தூங்குவதால் ஒரு நாள் முன்னதாகப் புசித்த உணவு சீரணித்து விடுகிறது. ஆனால் அன்று புசித்த உணவு சீரணமாவதில்லை. (255)

கொழுப்பினால் குடலில் தடுத்து நிறுத்தப்பட்ட வாயு சடராக்னியைப் பெருக்குகிறது. இதே வாயு மூலநோயில் தடைபட்டால் சடராக்னியை அழிக்கிறது.

1. பிரதிச்யாயம்—தலைக்குள் வாதம் கோளாறடைந்து, நாசியின் கீழுள்ள கப-பித்தங்கள் தலையை நோக்கி வலிக்கப்படுவது.
2. நஸ்யம்—மூக்கினுள் செலுத்தப்படும் மருந்து.

கஷ்டப்பட்டு அருந்தக் கூடியதும், தாமதமாகச் சீரணிக்கக் கூடியதுமான நெய் சடராக்னியை வளர்க்கின்றது. எளிதில் குடிக்கத் தக்கதும் சீரணிப்பதுமான பாலானது சடராக்னியை வளர்ப்பதில்லை. பாலும் நெய்யும் சுவை முதலானவைகளில் சமமானவையே. (256)

பாம்பு முதலானவைகளின் உடல் அழுகினால் அதிலிருந்து தேள்கள் தோன்றுகின்றன. இதே தேள்கள் கொட்டினால் பாம்பு முதலானவைகள் இறந்து விடுகின்றன. (257)

தன்னுடையதான கொடிய விஷமாக இருந்தாலும் அது பாம்பு முதலான அந்த உயிரினங்களை மாய்ப்பதில்லை. பாம்பு முதலியவைகளின் விஷமானது விந்துபோல் அதன் உடல் முழுவதும் பரவியிருந்தாலும் இவற்றின் மாமிசத்தைப் பயன்படுத்தும்படி மாமிச வர்க்கத்தில் இவற்றைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (258)

ஈயைப் புசிப்பதாலுண்டாகும் வாந்தியில்— ஈயின் மலமே அந்த வாந்தியைத் தடுக்கிறது. (259)

கபத்தினாலுண்டான நோய்களுக்கு லங்கணம் நல்லது. ஆனாலும் கபத்தினாலுண்டான சுரத்திலும், குன்மத்திலும் லங்கணத்தினால் வாயு அதிகமாகும். எனவே லங்கணம் செய்வது சரியல்ல.

கிரஹணி என்னும் வயிற்றுக் கடுப்பு நோயில் மோர் எப்பொழுதும் நல்லது. காயத்தினால் ஏற்பட்ட இரணத்தில் இதே மோர் தோஷத்தை வளர்க்கிறது. பீனசம் என்னும் ஜலதோஷம், சுவாசம், இருமல் முதலியவைகளில் தக்க மருந்துகள் சேர்த்து சூடாக்கிய மோரே உயர்ந்தது. (260-262)

இதே வகையில் மற்றும் பல நுண்ணிய, கிடைத்தற்கரிய காரணங்களால் தோன்றிய விசித்திரமான இயல்புகள் பொருள்களில் காணக்கிடைக்கின்றன. இங்கு அவற்றைப் பற்றிய சில விவரங்கள் தரப்பட்டுள்ளன. புத்திசாலியானவன் இதேபோல் மற்றவைகளைப் பற்றியும் தாமாகவே ஊஹித்து அறிந்து முடிவு செய்ய வேண்டும். சாத்திரம் ஒன்றின் மீது மட்டுமே சார்ந்திருக்காமல், சாத்திரத்தின் மீது தம் அறிவைப் பயன்படுத்தி ஆலோசித்துச் செய்வீர்களாக. (263)

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில்
அன்னஸ்வருப விஞ்ஞாநீயம் என்னும்
ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

*'அன்னரக்ஷா விதி'

இதற்குப் பிறகு 'அன்னரக்ஷா விதி' என்னும் அத்தியாயத்தை ஆத்ரேயர் முதலான முனிவர்கள் விவரித்த வகையில் விளக்குவோம். (1— 2)

1. எங்கும் பகைவர்

பலவகைச் செல்வம் படைத்த பணக்காரர்கள், குறிப்பாக அரசர்கள், இவர்களுக்கெல்லாம் நண்பர்களைக் காட்டிலும் பகைவர்களே மிகுதியாக இருக்கின்றனர். அப் பகைவர்களால் தூண்டப்பட்டு இவர்களருகிலுள்ளவர்கள் உணவிலும் பானத்திலும் நஞ்சைக் கலந்து கொடுத்து விடுகிறார்கள். பெண்களும் பகைவர்களின் ஒற்றர்களால் தூண்டப்பட்டு தமக்குச் செல்வாக்கு ஏற்பட வேண்டுமென்ற பேராசையினால் நஞ்சைக்கொடுத்துவிடுகிறார்கள்.

2. உயிரைக் காக்கும் மருத்துவர்

எனவே, அரசன் உயிரைக் காக்கும் மருத்துவரை நியமிக்க வேண்டும். அவன் நற்குடிப்பிறப்பு, நட்புணர்ச்சி, நம்பிக்கை, தெய்வபக்தி, நன்னடத்தை, மனைவி முதலிய சுற்றம் இவற்றுடன் கூடியிருத்தல் வேண்டும். திறமை, தாட்சண்யம், உறுதிப்பாடு, புனிதத்தன்மை, பணிவு, சோம்பலின்மை தீய பழக்கத்தால் வரும் துன்பமின்மை, செருக்கின்மை,சினமின்மை,' சாகசச் செயலின்மை, சொற்களின் கருத்தறியும் திறமை, ஆயுர்வேதத்தின் எண்வகைப் பிரிவுகளனைத்திலும் தேர்ச்சி இவற்றைப் பெற்றவனாயிருத்தல் வேண்டும்.' சாத்திர முறைப்படி ஆயுர்வேதத்தினால் நன்மை பெற்று, எப்பொழுதும் கொடிய விஷநோய்களை நீக்கக் கூடிய மருந்துவகைகளை எப்பொழுதும் அருகில் பெற்றிருத்தல் வேண்டும். உடலுடன் ஒத்து போகக் கூடிய எல்லாவகையான முறைகளையும் அறிந்திருக்க வேண்டும். (3— 4)

---

* அன்னரக்ஷாவிதி—உணவில் பகைவர் போன்றவர்களால் இடப்படும் நஞ்சிலிருந்து காத்துக்கொள்ளும் முறையைக் கூறுவது.

3. புகலிடம்

சீடன் ஆசானைப் போலவும், மகன் தந்தையைப் போலவும் மருத்துவரை உரியகாலத்தில் பணத்தாலும், மதிப்பாலும் போற்றிப் பூசிக்க வேண்டும். அவனுடைய பேச்சு விரும்பத்தகாததாக இருந்தாலும் இப்போதைக்கு அதுவே சரி என ஏற்க வேண்டும். யானைப் பாகன் நற்குணமுள்ளவனாக இருந்தாலும், அங்குசத்தினால் அவ்வப்போது யானையை அடக்காவிட்டால் மக்களிடம் மதிப்பைப் பெறமுடியாது. அதேபோல் அரசன் தன்னுடைய உணவு, செய்கைகள் இவற்றைப் பற்றி மருத்துவனுக்கு அடங்கியவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அதிருஷ்டவசமாகக் கிடைத்துள்ள உயிர் வாழ்க்கை அபாயம் நிரம்பியது. அது உபாயத்தின் வலிவால்தான் உடலில் தங்கியுள்ளது. எனவே அரசன் மருத்துவனின் வசத்திலிருப்பதே பெரியதோர் உபாயமெனக் கருத வேண்டும். (5— 6)

மற்றும் அரசர்க்கு பல மனைவியரும் சுற்றத்தினரும் இருப்பர். வயிற்று வலி, மயக்க நிலை, முதலான நோய்கள் விரைவில் கொல்லக்கூடியவை. எனவே நோயாளியை, குறிப்பாக அரசனின் உடல் நிலையை ஒவ்வொரு கணமும் கவனித்து வர வேண்டும். அரசர்கள் சுதந்திரமானவர்கள். கவனக்குறைவால் தவறு செய்பவர்கள். நோய் முதலியவற்றின் துன்பங்களைப் பொறுக்க முடியாதவர்கள். தமக்குதாமே நன்மை பயக்காத செயலில் ஈடுபடுவர். தம்மை அண்டியுள்ள, ஆனால் தமக்குத் தீமை விளைவிக்கின்ற, இனிய பேச்சுகளைப் பேசுகிறவர்களால் எப்பொழுதும் சூழப்பட்டிருப்பார்கள்.

எனவே அரசன் மருத்துவர்களுக்கு அரண்மனைக்கு அருகில் தங்குமிடம் அமைத்துத் தரவேண்டும். அவ்வாறு செய்தால்தான் அரசனின் உடலுக்குப் பயன்படும் எல்லாச் சாதனங்களின் மீதும் மருத்துவருடைய பார்வை இருந்து வரும். (7)

4. அரசனைப் புசிக்கவைக்கும் முறை

மருத்துவன், நல்ல முறையில் சமைக்கப்பட்ட, நன்கு பரீட்சிக்கப்பட்ட, சுத்தமான, முதலில் நெருப்பு, ஈ முதலியவைகளுக்கு அளிக்கப்பட்ட, மயிலின் கண்முன் காட்டிய, புரோக்ஷண மந்திரத்தால் நீர் தெளித்த உணவை, அரசனின் கையில் இரத்தினம்,

மூலிகை இவைகளைக் கட்டி, தான் அவன் எதிரில் அமர்ந்து புசிக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அரசன் புசிக்கும்போது, விஷத்தைப் போக்கும் மருந்து பூசப்பட்ட நகார் (துந்துபி) என்னும் வாத்தியத்தை முழங்கச் செய்ய வேண்டும். (8— 9)

5. நஞ்சு கலந்த உணவின் அறிகுறிகள்

அன்னம் நஞ்சு கலந்தால் கஞ்சி பிரியாமல் குழம்பிவிடும். அது காலம் கடந்து பக்குவமாகும். பக்குவமான சிறிது நேரத்திலேயே ஊசிப்போன பொருள் போல் ஆகிவிடும். ஆவிகுன்றி கெட்டியாகி விடும். மற்றும் இயற்கையான நிறம், மணம், சுவை எல்லாம் நீங்கிவிடும். தண்ணீர்விட்டுக் கொண்டு (நொய்ந்து) விடும். இதில் பற்பல வண்ணங்களில் பளபளப்பு நாற்புறமும் காணப்படும். (10)

6. நஞ்சுச் சேர்க்கையால் பொருள்களின் மாற்றம்

நஞ்சின் சேர்க்கையால் உணவின் கூட்டுப் பொருட்கள் உலர்ந்துவிடும். கொதித்த பொருள் அழுக்கடைந்துவிடும். [1]'வியஞ்ஜனங்களில்' காணப்படும் தனது முகவொளி குறைவாகவோ, அதிகமாகவோ, விகாரமாகவோ அல்லது முற்றிலும் காணப்படாமலோ இருந்துவிடும். இறுதியில் நுரைக்குவியல், தலையுச்சியிலுள்ள நேர்க்கோட்டில் பற்பல கோடுகள் இவை காணப்படும். நூல்களைப் போன்றவைகளும், நுரைக்குமிழ்களும் தோன்றும். குறிப்பாக உப்பு அதிகமான அன்னத்தில் நுரை வரிசையாகக் காணட்படும்.

ரசம் (மாமிசரசம் அல்லது குழம்பு) முதலியவைகளின் நடுவில்நீல நிறக்கோடு, பாலில் தாமிர நிறம், மது, நீர் இவைகளில் கருப்பு, தயிரில் சாம்பல் கலந்த நிறம், மோரில் சிறிது நீலமும் மஞ்சளுமான கோடு, தயிர்த் தெளிவில் புறா நிறம், காடியில் கருப்பு நிறம், திரவமான மருந்து வகைகளில் கபில நிறம், நெய்யில் தண்ணீரில் போன்ற நிறம், தேனில் பச்சை நிறம், எண்ணெயில் சிவப்பு நிறம், மற்றும் கொழுப்புப் போன்ற வாசனையையும் கொண்டிருக்கும்.

---

1. வியஞ்ஜனங்கள்— அன்னத்தோடு கலந்து புசிப்பதற்கான பருப்பு, கூட்டு, குழம்பு முதலியன.

நஞ்சின் காரணமாக பச்சையாக உள்ள காய்கள் பழுத்து விடும். பழுத்தவை அழுகி விடும்.

ஈரமான பொருள்கள் உடனே வாடி விடும். உலர்ந்தவை கருப்பாகவோ, விகாரமாகவோ ஆகிவிடும். கடினமான பொருள் மிருதுவாகவும், மிருதுவானவை கடினமாகவும் ஆகும்.

மலர் மாலைகள் விஷத்தால் வாடி விடும். நறுமணத்தை இழக்கும். நுனிப்பகுதி வெடித்து ஒடிந்து விடும்.

விரிப்புகள், துப்பட்டிகள் விஷத்தால் அழுக்கு நிறம் பெற்று இவற்றின் நூலிழைகள், உரோமங்கள் இவை உதிர்ந்து விடும்.

உலோகங்கள் (பொன், வெள்ளி முதலியன) இரத்தினங்கள் முதலானவற்றால் இயற்றப்பட்ட அணிகலன்களில் சேறு போன்று அழுக்குப் பதிந்துவிடும். இவற்றின் நெருக்கம், பளபளப்பு, நிறம், எடை, ஒளி, வர்ணம், தொடு உணர்வு இவையெல்லாம் அழிந்துவிடும். *(11–17)*

7. நஞ்சு கொடுப்பவனின் அறிகுறிகள்

நஞ்சு கொடுப்பவன், தான் செய்யும் குற்றத்தின் அச்சத்தினால் நடுங்கி, பயந்து, வேர்வையும் உடல் நடுக்கமும் கொள்வான். உலர்ந்த கருத்த முகத்துடன் நாற்புறமும் பரபரப்புடன் குறிப்பின்றி பலவிடமும் பார்ப்பான். தான் விஷத்தைப் பயன் படுத்திய பொருளை நோக்குவான். அவ்வாறே மேல் துணி நழுவ, தூண் சுவர் முதலானவைகளால் தன்னை மறைத்துக் கொள்வான்.

நடை தளர, கோழைத்தனத்துடன், வெட்கம் கொண்டு, அவசியமில்லாத இடத்திற்குச் செல்வான். கேள்விக்குப் பொருத்தமில்லாமல் பதிலளிப்பான்; அல்லது பதிலே கூறமாட்டான். சொல்ல விருப்பமின்றி, மயக்கத்தை அடைவான். விரல்களைச் சொடுக்குவான், கழுத்தைப் பிடித்துக்கொள்வான், தலையைச் சொறிவான், உதடுகளை நக்குவான், கனைப்பான், கொட்டாவி விடுவான், தரையில் எழுதுவான், செய்கைகளில் அவசரப் படுவான், அல்லது எதிரிடையாகச் செய்வான், ஓர் இடத்தில் தங்க மாட்டான். *(18)*

8. விஷப் பரீட்சை

பல சமயங்களில் அரசனின் ஆணையின் பயத்தினாலோ, அவசரத்தினாலோ, வேறு குற்றமிழைத்தாலோ, சிலர் மனம்

தளர்ந்து விஷமிடுபவனைப்போல் செயலைச் செய்கின்றனர். எனவே, சந்தேகப்பட்ட உணவு வகைகளை தீ முதலியவைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். நஞ்சு கலந்த உணவைத் தீயில் சேர்த்தால் அதில் எழும் தீப்பிழம்பு ஒரு சுற்றுச் சுற்றி வறட்சி, மந்தமான ஒளி, வானவில் போன்ற பல நிறங்கள் இவைகளுடன் 'சடசட' என்னும் ஒலியைத் தோற்றுவிக்கும்.

சவத்தின் மணத்துடன் கூடிய இந்த நெருப்பின் புகை, மயக்கம், உமிழ்நீர், சளி கசிதல், மயிர்கூச்சம், தலைவலி, மூக்கின் வழியாக நீர் சுரத்தல், கண்களில் உணர்ச்சியின்மை இவைகளை உண்டாக்கும். *(19 – 21)*

9. இதற்குச் சிகிச்சை

ஜடாமாம்சி, கோஷ்டம், விளாமிச்சவேர் இவைகளைச் சம எடையில் எடுத்து தேனில் ஊறவைத்து [1]நஸ்யத்தையும், கண்மையையும் செய்ய வேண்டும்.

அதேபோல் இவைகளால் (தேன் கலக்காமல்) புகை பிடித்தல் வேண்டும்.

அல்லது, நாயுருவி வேர், வாயுவிடங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி வேர்கள், கொடிவேலி, ஆடு தீண்டாப்பாளையின் பூ, சாமந்திப் பூவின் க்ஷாரம், திராட்சை, நெய், வெல்லம் இவற்றால் புகை பிடிக்க வேண்டும். *(22)*

10. பறவைகளைக் கொண்டு ஆராய்தல்

நஞ்சு கலந்த உணவைத் தீயிலிட்டால் சடசட என்ற ஒலி உண்டாவதுபோல் எண்ணெயும் உப்பும் கலந்த உணவையும் தீயிலிட்டால் சட சட என்ற ஒலி உண்டாகிறது. ஆகையினால் பறவைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

காக்கைகள்

காக்கைகள் நஞ்சு கலந்த உணவைப் புசித்தால் அவற்றின் குரல் குறைந்து போகும்.

ஈக்கள்

ஈக்கள் நஞ்சு கலந்த உணவின் மீது உட்காருவதில்லை. உட்கார்ந்தால் மடிந்துவிடும்.

---

1. நஸ்யம்— மூக்கில் செலுத்தும் மருந்து. மூக்கில் மருந்து செலுத்தும் சிகிச்சை முறை.

சகோரபட்சி

சகோரபட்சியின் கண்கள் நஞ்சைக் கண்டவுடன் சிவப்பாக மாறிவிடும்.

குயிலும், பிறவும்

குயிலின் குரல் மாற்றமடையும். அன்னப் பறவையின் நடை தடுமாறும். பிருங்கராஜப் பட்சி கூவும், கிரௌஞ்ச பட்சி வெறியுணர்ச்சி கொள்ளும். கோழி கூச்சலிடும். கிளி அலறும். மைனாக்குருவி வாந்தி செய்யும். சாமீகரம் என்ற பறவை வேறு ஓர் இடம் செல்லும். நீர்க்கோழி இறந்துவிடும். ஜீவஞ்ஜீவக பட்சி வருத்தமடையும். கீறி மயிர்க்கூச்சலடையும். குரங்கு மலம் கழிக்கும். மான் அழும். மயில் மகிழ்ச்சியடையும். அதைக் கண்டவுடன் நஞ்சு தனது வலிவைச் சிறிது இழந்துவிடும். *(23)*

11. நஞ்சு கலந்த உணவும், சிகிச்சையும்

நஞ்சு கலந்த உணவிலிருந்து எழுகின்ற ஆவியின் நிறம் மயிலின் கழுத்து நிறம் போலாகும். இந்த ஆவியினால் விஷம் கலந்த புகை போன்றதும் மூர்ச்சை, மயக்கம், முதலியவைகளும் தோன்றும். எனவே இதற்குத் தக்க சிகிச்சையைச் செய்ய வேண்டும். *(24)*

12. நஞ்சு கலந்த சோற்றைத் தொடுவதால் தீங்கும் சிகிச்சையும்

நஞ்சு கலந்த சோற்றைக் கையால் தொடுவதால்விஷத்திற்குச் சமமாகக் கையில் எரிச்சல், வீக்கம், உணர்ச்சியின்மை, நகங்கள் உதிர்ந்துவிடுதல் இவை ஏற்படும். அதற்காக வெட்டிவேர், இந்திரகோபம், வல்லாரை, தாமரை இவைகளை அரைத்துப் பூச வேண்டும்.

13. நஞ்சு கலந்ததைப் புசிப்பதால் தீமையும் சிகிச்சையும்

நஞ்சு கலந்த உணவைப் புசிப்பதால் உதடுகளில் 'கபகப' என்று எரிச்சலுண்டாகும். வாய்க்குள் எரிச்சல், நாக்கின் அடிப்பகுதியில் பளு, முகவாய் அசைவற்றுப்போதல், பல் கூசுதல், உமிழ் நீர் பெருகுதல் என்பவையுண்டாகும். சுவைகளை அறிய முடியாத நிலை ஏற்படும். அதற்குப் புகை பிடித்தல் சிகிச்சை, மேலே கூறப்போகும் பற்குச்சிச் சிகிச்சை இவைகளைச் செய்ய வேண்டும். *(25–26)*

14. இரைப்பை, சிறுகுடலில் நஞ்சு சேருவதால் ஏற்படும் தீங்குகளும்; சிகிச்சை முறையும்

இரைப்பையில் நஞ்சு கலந்த உணவு சேர்ந்தால் வியர்வை, மதம், மூர்ச்சை, வாந்தி, உடல்நிறம் மாறுதல், வயிற்று உப்புசம், மயிர்க்கூச்சம், எரிச்சல், சுவையின்மை, கண் பார்வை குறைதல், மாரடைப்பு, உடல் உறுப்புகளில் பலவிதப் புள்ளிகள், கொப்புளங்கள் இவை தோன்றும்.

இதற்குச் சிகிச்சையாக மருக்காரை, சுரை, கோவை, பேய்ப்புடல், இவற்றின் பழங்களுடன், தயிர், தேன் இரண்டையும் கலந்து உடனே வாந்திக்குக் கொடுக்க வேண்டும். அல்லது அவரைக் கொடியின் கஷாயத்தால் வாந்தி செய்விக்க வேண்டும். பிறகு எண்ணெய்ப் பசையுள்ள திரவியங்களால் ஸ்நேஹனம் செய்து, உடல்நிலை நன்கு உள்ளவனாகில், மலங்கழிக்கச் செய்தல் வேண்டும். (27–28)

15. ஜீவனம் என்னும் விஷம் போக்கும் மருந்து

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுநாகப்பூ, அதிமதுரம் (தகரவிதை) ஓரிலை, மூவிலை வேர்கள், கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, இவைகளைச் சம எடையில் சேர்த்துப் பொடி செய்ய வேண்டும். பிறகு சிங்கம், புலி, ஓநாய், சிவிங்கி, கரடி, சிறுத்தை, பூனை, நரி, மான், உடும்பு இவைகளில் ஒன்றின் பித்தத்துடன் தேனைக் கலந்து குடிக்க வேண்டும். ஜீவனம் என்ற பெயருள்ள இந்த மருந்து எல்லா வகையான நஞ்சுகளையும் நீக்கும் உயர்ந்த மருந்துப் பொருள் ஆகும்.

இந்த மருந்து சீரணித்தபிறகு, ஞாழல், சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம் கலந்த பால், நெய் இவைகளால் செய்யப் பட்ட கஞ்சியை அருந்தச் செய்ய வேண்டும். (29 – 30)

அந்தக் கஞ்சி சீரணமான பின், த்ரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) சேர்ந்த பாசிப்பருப்புக் கஞ்சியில் சிறிதளவு உப்பு, நெய் சேர்த்து, அதனுடன் மிருதுவான அன்னத்தைப் புசிக்கச் செய்ய வேண்டும். இலுப்பை, வாகைப்பூ, சந்தனம் இவற்றை அரைத்து உடல்மீது பூசவேண்டும். (31)

நஞ்சு சீரணப்பையில் புகுந்து வறட்சி, எரிச்சல், மதம், மயக்கம், பேதி, வயிற்றுப் பொருமல், சோம்பல், புலன்களில்

கோளாறு, வலிவின்மை, இளைப்பு, [1]பாண்டு, [2]உதரம் எனும் வயிற்றுநோய் இவைகளைத் தோற்றுவிக்கும்.

இதற்காக அவுரிவேர், மலங்காரக்காய் சேர்த்துக் கொதிக்க வைத்துத் தயாரித்த நெய் அருந்தி மலம் கழிக்கச் செய்ய வேண்டும். மற்றும் தேன் கலந்த தூஷிவிஷாரி எனும் நஞ்சை நீக்கும் மருந்தைத் தயிருடன் குடிக்க வேண்டும். *(32–33)*

16. பற்குச்சியில் விஷம்

பற்குச்சியில் நஞ்சு பூசிக் கொடுத்தால் அந்தப் பற்குச்சி வலிவிழந்துவிடும்.

மருந்து வாசனை, வறட்சி உண்டாகும். தாடை, பற்கள், நாக்கு, உதடு இந்தப் பகுதிகளிலும் பல்லீறுகளிலும் வீக்கம் உண்டாகும்.

இதற்கு [3]பிரச்சானம் செய்து, ஆயுதத்தால் குத்திவிட்டு பின், காட்டாத்திப்பூ, நாவல்பழக் கொட்டை, கடுக்காய் இவைகளின் பொடிகளில் தேன் கலந்து, அல்லது ஏழிலைப் பாலை இலைகளை அரைத்து அதன் குழம்பினால் பூச வேண்டும்.

மாதுளை, களாக்காய், வைரப்புளி, வேம்பு, மாமரம், கொடி இலந்தை, இலந்தை இவற்றின் சாற்றுடன் தேன் கலந்து வாய் கொப்பளிக்கச் செய்ய வேண்டும்.

இதனால் விஷம் கலந்த நாக்குவழித்தல், கவலம், கண்டூஷம் என்பவைகளை உபயோகிப்பதனுல் ஏற்படும் தீங்குகள் நீங்கும். *(34–36)*

---

1. பாண்டு— இரத்தம் குறைவதால் ஏற்படும் சோகை நோய்.
2. உதரம்— என்பது வயிற்றில் தோஷங்களாலும், கல்லீரல், மண்ணீரல் பருத்தும், நீர் தங்கியும் வயிறு பருத்து – ஜலோதரம், மஹோதரம் என்னும் நோய்கள் உண்டாவதைக் குறிக்கும்.
3. பிரச்சானம் — என்பது கூரிய கத்தி முனை, குடாரி போன்ற ஆயுதங்களால் (விஷம் பட்டு வீங்கிய இடத்தில் சிறுசிறு காயங்கள் ஏற்படுத்தி கெட்ட ரத்தத்தை வெளியேற்றும் முறையாகும்.

17. கண்மையில் நஞ்சும், சிகிச்சை முறையும்

கண்மையில் நஞ்சு கலந்திருந்தால் கண்ணீர் பெருகும், கண்களில் அழுக்கு, எரிச்சல், கண்சிவத்தல், வலி, பார்வைக் கோளாறு, குருடாதல் இவையுண்டாகும். இவை நீங்க நெய்யை அருந்த வைக்க வேண்டும். சூடு செய்த பாலில் ஏழுமுறை திப்பிலியை ஊறவைக்க வேண்டும். பிறகு அந்த [1]கல்கத்தினால் நெய் தயார் செய்து அதனால் கண்களுக்கு [2]அக்ஷிதர்பணம் செய்ய வேண்டும். *(37)*

விளாமரம், ஆடுதீண்டாப்பாளை, சேராங்கொட்டை, இவற்றின் பூக்களின் சாற்றில் ஊறிய மாவிலங்கைப் பிசினால் கண்மை தயார் செய்து கண்களில் இடவேண்டும். கண்டங்கத்திரி, வாகை விதை, தாமரை, பேராமுட்டி இவற்றின் சூர்ணத்தை ஏழு தடவை தேனால் பாவனை செய்தல் வேண்டும். இந்த சூர்ணத்தில் சிறிதளவு சௌவீராஞ்ஜனமென்னும் கண்மையையும் தங்க பஸ்மத்தையும் கலந்து மைதீட்ட வேண்டும். *(38)*

18. நஸ்யத்திலும் புகையிலும் விஷம்

நஸ்யம் என்னும் மூக்கில் செலுத்தும் பொடியிலும், புகையிலும் விஷம் கலந்து இருந்தால் தலைவலி, சளி வெளிவருதல், மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் மற்ற துவாரங்களிலிருந்தும் இரத்தம் வெளியாதல், மற்றும் மூக்கு, கண் முதலிய புலன்களின் விகாரத்தன்மை இவை உண்டாகும்.

இதற்குச் சிகிச்சையாக அதிவிடயம், வெண்நொச்சி, மணத்தக்காளி, மல்லிச்செடி என்பனவற்றின் கல்கத்தினைப் பாலில் கலக்கி நெய்யைத் தயார் செய்துகொண்டு அதை நஸ்யமாக மூக்கிலிடவும், பருகவும் செய்ய வேண்டும்.

எண்ணெய் தேய்த்தல் என்னும் உடற்பூச்சில் விஷம் கலந்தால், தோலில் எரிச்சல், வியர்வை, அழற்சி, கொப்புளம், தோல் வெடிப்பு இவை தோன்றும்.

---

1. கல்கம்—மைய அரைத்த பொருள்
2. அக்ஷிதர்பணம்—தண்ணீருடன் அரைத்த யவஅரிசி அல்லது உளுந்தின் மாவினாலான விழுதினால் கண்களைச் சுற்றி இரு அங்குல உயரமுள்ள சுவர் வைத்து அதற்குள் கண்ணின்மேல் நெய், பால் மூலிகைகளினால் தயாரித்த திரவங்களை ஊற்றி வைத்துச் சிறிதுநேரம் (1 மணி முதல் 2 மணி நேரம்) வைத்திருக்கும் சிகிச்சை முறை.

இதற்குச் சிகிச்சையாக குளிர்நீரால் சந்தனம், தகரவிதை, வெட்டிவேர், கோஷ்டம், மூங்கில் இலை, சீந்தில் கொடி, வல்லாரை, வெண்நொச்சி, தாமரை, சந்தனம், இவைகளை அரைத்து உடல் மீது பூச வேண்டும். இதே சந்தனம் முதலியவற்றை அரைத்து அல்லது பொடியாக்கி விளாம்பழ ரசம், பசுவின் சிறுநீர் இவற்றுடன் அருந்த வேண்டும். விஷ்ணுக்கிராந்தை அல்லது குடமல்லி, வெள்ளைத் தழுதாழை, ஞாழல், நன்னாரி, அதிமதுரம், சித்தரத்தை, காட்டு வெள்ளரி, தேட்டை மரம், என்பனவற்றின் வேர்களை நருவிலிமரத்தின் வேர் கஷாயத்துடன் அரைத்து உடல் மீது பத்துப் போடவேண்டும்.

இந்த உடற்பூச்சைப் போலவே தேய்த்தல், அழுத்தித் தேய்த்தல், ஊற்றுதல், பூசுதல், ஆபூஷணம் அலங்கரித்த வாகனத்தின் மீதேறுதல், படுக்கை, மேல்விரிப்புத்துணி, கவசம், பாதக்குறடு, இருக்கை, இவற்றுடன் நஞ்சு கலந்திருந்தால் அவற்றிற்கான சிகிச்சை கூறப்பட்டுள்ளது. (39–43)

குறிப்பாக அணிகலன்களில் செலுத்தப்படும் நஞ்சினால் ஏற்படும் நோய்களுக்கு அமுக்கிராங்கிழங்கு, நாயுருவி, கடலாடி, கருங்காலி, வாகை இவற்றின் கல்கத்தை (அரைத்த பொருளை) பசுவின் பித்த நீருடன் கலந்து பூச வேண்டும். (44)

கால் வைக்கும் பீடத்தில் நஞ்சு பூசப்பட்டிருந்தால் நருவிலி மரப்பட்டை (சித்தரத்தை) என்பவைகளை அரைத்த கல்கத்தில் தேன் கலந்து உடல் மீது பூச வேண்டும். குடையில் நஞ்சு பூசப்பட்டிருந்தால் விரைவில் கொப்புளங்கள் உண்டாகிப் பருக்கும். அவை பழுத்த நாவல் பழத்தின் நிறம் கொண்டிருக்கும்.

இதற்கு அதிமதுரம், பாதிரி, நீர்க்கோரைக்கிழங்கு, பாச்சோத்திப் பட்டை, மரமஞ்சள், கோஷ்டம், சித்தரத்தை, கருங்காலி, வாகை இவற்றை அரைத்த கல்கத்தினால் உடல் முழுவதும் பூச வேண்டும். சாமரம், விசிறி இவற்றில் நஞ்சு பூசப்பட்டிருந்தால் மேற்கண்டவாறே செய்ய வேண்டும். (45–47)

தலையில் எண்ணெய் தேய்க்கும்போது நஞ்சு கலந்திருந்தால் தலைவலி, கட்டிகள் உண்டாகும். தலைமயிர் உதிரும். அதற்கு சிவதை வேர், கருஞ்சிவதை, அம்மாம்பச்சரிசி, இவைகளின் சூர்ணத்தை நெய் மற்றும் கரடியின் பித்தத்துடன் ஏழு ஏழு தடவை ஊறவைத்த கருப்பு மண்ணைத் தலைமேல் பூச வேண்டும்.

அல்லது சாணம், மல்லிகை, எலிச் செவி இவற்றில் ஏதாவ தொன்றின் சாற்றினால், அல்லது ஒட்டடையில் கலந்து பூச வேண் டும். அல்லது நரிவிலிப் பட்டை, பாதிரி, வாகை, அதிமதுரம், மஞ்சள், மரமஞ்சள் இவற்றின் தூளை வெள்ளாட்டின் பாலில் கலந்து தலையில் தொடர்ந்து ஊற்ற வேண்டும். தலைகுளித்தல், குளிக்கும் நீர், சிப்பு, மாலை, தலைப்பாகை, இவற்றுடன் நஞ்சு கலந்திருந்தால் மேற்கண்ட சிகிச்சையைச் செய்ய வேண்டும்.
(48—49)

காதில் ஊற்றும் திரவப்பொருளில் நஞ்சு கலந்திருந்தால் காதில் வீக்கம், குத்தல் வலி, அழற்சி, காது கேட்காமை இவை யுண்டாகும்.

அதற்கு வில்வ இலையின் சாற்றில் நெய், தேன் கலந்து, அல்லது ஸோமவல்கம் எனும் கருங்காலியின் குளிர்ந்த ரசத்தைக் காதில் நிரப்ப வேண்டும்.

முகத்தில் பூசும் பொருள்களில் நஞ்சிருந்தால் முகத்தில் கருநிறம் உண்டாகும். தாமரைத் தண்டில் உள்ள முள்போன்ற முனைகளுடன்கூடிய பருக்களும் புள்ளிகளும் தோன்றும். மற்றும் எண்ணெய்க் குளியலுக்குச் சொன்ன விகாரங்களும் உண்டா கும்.

அதற்கு அதிமதுரம், முதுக்கன் கிழங்கு, உச்சித்திலக மரம், சிறுதேக்கு, சாரடை, சந்தனம் இவற்றை நெய்யில் கலந்து பூச வேண்டும். மற்றும் வெவ்வேறு அளவில் நெய்யையும் அருந்தச் செய்ய வேண்டும். (50—53)

19. விஷத்துடன் கூடிய பூக்களை நுகர்தல்

விஷத்துடன் கூடிய பூக்களை நுகர்ந்தால் தலைவலி, கண்ணீர் வடிதல், வாசனையறியாமை இவை உண்டாகும். இதற்குப்பின் கூறப்போகிற முறையிலும் முகத்தில் பூசுவதற் கான முறையிலும் அன்னத்தின் ஆவிக்குக் கூறிய வகையிலும் சிகிச்சை புரிய வேண்டும்.

இதைப்பற்றி கூறுவது வருமாறு:— பழம், வேர், இலை இவற்றையும், பாத்திரம், கூட்டுப்பொருள் இவற்றையும் விழிப் புடன் தண்ணீரால் கழுவ வேண்டும். நுகர்ந்து அறிய வேண் டியவைகளை நுகர்ந்து பார்த்தும், தொடத்தக்கவைகளைத் தொட்டுப் பார்த்தும், அவற்றில் அதிக குணங்களை அளிக்கக் கூடிய பொருட்களைக் கலந்து ஒரு மணி நேரம் எதிர்பார்க்க

வேண்டும். தண்ணீரும் பாத்திரமும் சுத்தமாக இருப்பதைக் கவனித்தபிறகுதான் மன்னன், முறைப்படி உணவைப் பயன் படுத்த வேண்டும். (54–57)

20. கடுமையான விஷம் சாதாரண விஷத்தைப் போக்கும்

கடுமையான விஷத்தைப் பழக்கப்படுத்திக் கொண்டால் சாதாரண விஷம் செயலற்றுப் போய்விடும். எனவே அறிவாளி யான மருத்துவன், தன் கையில் கடுமையான விஷத்தைக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். விஷத்தைத் தரித்து இருப்பது மிகவும் பாக்கியம். அது அரக்கர்களை அழிக்கும், மகிழ்ச்சி அளிக்கும். (58)

21. மருந்தகம்

மூடியுடன் கூடிய பானை, மூசை, மரப்பெட்டி இவற்றில் மருந்துகளை வைக்கவேண்டும். அரண்மனையின் கிழக்கு அல்லது வடக்குத் திசையில் இரகசியமான இடத்தில் மருந்தகம் அமைக்க வேண்டும்.

22. சமையற் கூடம்

உயரமான இடத்தில் கிழக்கு அல்லது வடக்குத் திசையில் உயர்ந்த பகுதியில் சன்னல்களை உடைய, போதிய அளவு பெரி தான, நன்கு சுத்தம் செய்யப்பட்ட, நம்பிக்கைக்குரிய மக்களைக் கொண்ட சமையலறையை அமைக்க வேண்டும். அதன் வாயி லில் நல்ல வாயிற்காப்போன் இருக்க வேண்டும். ஒவ்வோர் இடமும், நன்கு பிரிக்கப்பட்டு இருக்க வேண்டும். அதற்கு மேல் சிறந்த விரிப்பு கட்டப்பட்டிருக்க வேண்டும். நன்கு கழுவப் பட்ட கெட்டியான தண்ணீர்ப்பானைகள், தூயநீர் நிரம்பியதா கவும், சுத்தமான விறகுகளுடனும் இருக்க வேண்டும்.

தமக்குரிய வேலைகளில் தேர்ச்சி பெற்ற, தவறு செய்யாத, கவனமுள்ள திறமைசாலிகளான, தம் தலைமுடி, நகங்கள் இவற்றை நீக்கிய (மன்னனின்) தந்தையார் காலத்திலிருந்து இருக் கிற மன்னனின் செயல்களுடன் தொடர்பில்லாத சமையற்காரர் கள் இருக்க வேண்டும்.

இந்த சமையல்காரர்களின் தலைவனை நல்ல குடிமகனாக, அந்தணனாகப் பரீட்சித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவன் தின்பண்டங்களை நல்ல முறையில் படைப்பவனாக, பக்தி

யுள்ளவனாக, மருத்துவரின் ஆணைக்குட்பட்டவனாக, தூய்மை யுள்ளவனாக இருக்க வேண்டும்.

அரசனின் அருகில் உள்ளவரனைவரும் தமக்கிடையே சண்டையிட்டுக்கொள்ளாமல், எந்நேரமும் அரசனின் நன்மை யையே குறிக்கோளாகக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். (59–64)

23. மருத்துவனின் கடமை

அவர்களில் நற்குணம் படைத்த மருத்துவனொருவன் மனப்பூர்வமாக விழிப்புடன் இருக்க வேண்டும். அரசனின் நிலம், வீடு, அவன் உபயோகிக்கும் மற்ற சாதனங்கள் இவற்றைக் காப்பதில் கருத்துடன் இருக்க வேண்டும்.

வெற்றி நோக்குடன் பகைவனை நோக்கிப் புறப்படுகின்ற அரசனுக்கு நல்லவகையில் தயாரித்த மருந்துகள், ஆயுதங்கள், இயந்திரங்கள் இவற்றைக் கொண்ட எந்த மருத்துவனுடைய இல்லத்தில் உயர்ந்த கொடிச் சின்னம் பறக்குமோ, அந்த மருத்துவனே போருக்கு வந்த சேனையாட்களுக்குச் சிகிச்சை புரிய வேண்டும். (65–66)

செல்லும் பாதை, தண்ணீர், நிழல், உணவு, குதிரை, யானை முதலியவைகளுக்கான புல், மரம், தழை முதலிய உணவு வகைகள், விறகு, இவற்றைப் பகைவர்கள் நஞ்சினால் கெடுத்துவிடுவார்கள். எனவே அவற்றை ஆராய்ந்து அறிய வேண்டும். நிலம், நீர், புல், கட்டை, கல் இவையுள்ள பாதை களையும், வழியிலுள்ள மரங்களையும் பற்றி அரசன் மருத் துவனைக் கலந்து ஆலோசிக்காமல் ஓரிடத்திற்குச் செல்வதோ, ஓரிடத்தில் தங்குவதோ கூடாது. (67–68)

24. விஷம் தாக்கிய நிலத்தின் அறிகுறிகள்

விஷம் தாக்கிய பூமி சற்று கொளுந்தியதுபோல் காணப் படும். புல், மரம், செடிகள் எல்லாம் சுருண்டு போகும். புழு, பூச்சிகள், பாம்புகள் முதலியவை இறந்து காணப்படும். அந் நிலத்தில் குதிரைகளின் குளம்புகள், நகங்கள் இவை அனைத் தும் உதிரத் தொடங்கிவிடும். எரிச்சல், தினவு முதலிய துன்பங் கள் தோன்றும். வாந்தி, மயக்கம், காய்ச்சல், மோகம், தலை நோய் இவையுண்டாகும். (69–70)

இதற்குச் சிகிச்சை

முருங்கை வேர், சீந்தில் கொடி, வெட்டிவேர், மாதுளம் பழச்சாறு, பெருங்காயம் இவற்றைச் சிறிது தயிருடன் கலந்து அளவுடன் அருந்தச் செய்ய வேண்டும்.

வெள்ளாடு, செம்மறியாடு, யானை இவற்றின் சிறுநீர், இறைச்சிகள், இரத்தங்கள் மற்றும் 'ஏலாதி கணத்தில்' கூறப் படும் வாசனைப் பொருள்கள் இவற்றைச் சம அளவில் எடுத்துச் சமைக்க வேண்டும்.

சமைத்த பொருளில் கார்போக அரிசி, சித்தரத்தை, வெண்சிவதை, பேரரத்தை, கீழாநெல்லி, கருங்காலி இவற்றின் தூள்களைச் சேர்த்து அந்த நிலத்தின்மீது தூவவேண்டும். (71-73)

25. கெட்ட நீரின் அறிகுறிகள்

நஞ்சு கலந்த நீரில் சுவையிராது, சிறிது சூடு தோன்றும். பலவகையான கோடுகள் பதிந்திருக்கும். நுரை ஏற்படும். பளு வாகிவிடும், ஒரேவிதமாக இராது, பறவைகளும் விரும்பாது, மீன் முதலியவை மயக்கமுற்றுவிடும். அல்லது இறந்துவிடும். இந்த நீரைத் தொட்டால் வலி, வீக்கம், தினவு இவை ஏற் படும்.

இந்தக் கெட்ட நீரைக் கொண்டு சமைத்த உணவைப் புசித்த உடனே எரிச்சலுண்டாகத் தொடங்கும். கொதிக்கும் நிலையில் தாமதமாக வேகும். வெந்து மூர்ச்சை, காய்ச்சல், இவற்றைத் தோற்றுவிக்கும். நாற்புறமும் கருப்பு, மஞ்சள், சிவப்பு, பற்பல நிறங்கள் உடல் முழுவதிலும் காணப்படும். (74— 76)

இதற்குச் சிகிச்சை

பூமி தோஷத்திற்குக் கூறிய [1]'சிக்ருவாதி கணத்தை'ச் சேர்ந்த மருந்தைத் தயிருடன் அருந்த வேண்டும்.

ஆடுதீண்டாப்பாளை, பேய்த்தும்மட்டி, சீந்திற்கொடி, வேலிப்பருத்தி, கருந்துளசி, அதிவிடயம் இவற்றைக் கொளுத்தி அந்தச் சாம்பலைத் தண்ணீரில் காய்ச்சி வடிக்கட்ட வேண்டும்.

இவ்வாறு பலமுறை செய்ய வேண்டும். பிறகு அந்த வடிக் கட்டிய நீரை நெருப்பில் கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்

1. சிக்ருவாதிகணம்— முருங்கைவேர் முதலியவை.

கும்போது வெண்சிவதை, மஞ்சள், மரமஞ்சள், ஏலரிசி, இருவேலி, மஞ்சேஷ்டி, கோரோசனம், கார்போகஅரிசி, இவைகளை அரைத்து அதில் சொட்டுச் சொட்டாக விடவேண்டும். இந்த மருந்தின் சொட்டுகள் விழுமிடத்தில் விஷம் நீங்கிவிடும். பாதிரி, தேவதாரு, மருதை, கொன்றை, முருங்கை, இவைகளைப் பொசுக்கி, இவற்றின் சாம்பல்களை நஞ்சு நீருள்ள பாத்திரத்தில் இடவேண்டும். அதனால் நீர் சுத்தமாகி விஷம் நீங்கிவிடும். *(77—80)*

26. விஷக் காற்றின் அறிகுறிகளும் சிகிச்சையும்

குளிர்காலத்தில் விஷம் கலந்த காற்று மிகச் சூடாக வீசும். கோடைக்காலத்தில் மிகக் குளிர்ச்சியாக இருக்கும். அதனால் தலைசுற்றல், மூர்ச்சை முதலானவை ஏற்படும். இதற்கு [1]''சோபாஞ்சன முறை'' மருந்தைப் பயன்படுத்த வேண்டும்.

தேவதாரு, தகரவிதை, நன்னாரிவேர், அதிமதுரம், ஸௌவீராஞ்ஜனம், காவிமண், சேனை, மஞ்சேஷ்டி (லதா), பாச்சோத்திப் பட்டை இவற்றைப் பொடி செய்து அப்பொடியை மரத்தின் உச்சி, கொடிக் கம்பம் போன்ற பெரிய உயரமான விஷங் கலக்கும் இடங்களில் தூவிவிட வேண்டும். நாற்புறமும் வீசும் காற்று இப்பொடிகளுடன் கலப்பதனால் விஷம் நீங்கி விடுகிறது. *(81—83)*

27. மரத்தில் விஷம் கலந்தால்

அதன் நிழல் விகாரமாகும். பூக்கள் மணமற்றோ, அதிக மணத்துடன் கூடியோ இருக்கும். அந்தப் பூக்களை நுகர்ந்தால் மார்பிலும், தலையிலும் வலி ஏற்படும். பழமும், இலையும் உடலில் தினவைத் தோற்றுவிக்கும். வயிற்றுக் கொதிப்பு அல்லது அதிசாரமென்னும் அதிக மலக்கழிச்சலை உண்டாக்கும். இந்த இடத்தில் பூமி தோஷத்திற்குக் கூறிய முறைகளனைத்தையும் செய்ய வேண்டும். *(84—85)*

28. விஷ கன்னிகையின் அறிகுறிகள்

ஆராயாத, அறிமுகமில்லாத கன்னிப் பெண்ணைத் தொடக்கூடாது. மனிதர்கள், மற்றவரை மாய்ப்பதற்காகப் பல விதமான முயற்சிகளைச் செய்கின்றனர். அவற்றில் ஒருவகையே விஷ கன்னிகை என்பது.

---

1. சோபாஞ்சனம்—''சிக்ருவாதிகண மருந்து''.

பிறந்தது முதற்கொண்டு விஷத்தின் சேர்க்கையை ஏற்படுத்தி கன்னிகைப் பெண்களை விஷமயமாக்கி விடுகிறார்கள். இவர்களைத் தொட்டாலும், இவர்களுடைய மூச்சுக் காற்று மேலே பட்டாலும், மனிதர்கள் இறந்துவிடுவார்கள். இந்தக் கன்னிகையைக் கண்டுபிடிப்பது எவ்வாறெனில், இவளுடைய கைகள் அல்லது தலைமயிர்கள் இவைகள் பட்டாலே பூவும் இலையும் வதங்கிவிடும்; இவளுடைய படுக்கையில் மூட்டைப் பூச்சிகள், துணியில் பேன்கள், குளிக்கும் நீரில் உள்ள உயிரினங்கள் இறந்துவிடும். எனவே இந்தக் கன்னிகையைத் தொலைவிலிருந்தே ஒதுக்கிவிட வேண்டும். *(86— 89)*

முதலில் மந்திர ஜலத்தைத் தெளிக்காமல், மருத்துவன் அறியாமல், பார்க்காமல், சமையற்காரர் முதலியவர்களைப் புசிக்கச் செய்யாமல் அரசன் எதையும் புசிக்கக்கூடாது. *(90)*

29. நஞ்சை நீக்கும் மை

பிறவிப் பயன் தருவதும் எல்லாக்காரியங்களையும் சாதிப்பதும், பாவம், அரக்கர், நஞ்சு இவற்றிலிருந்து காப்பதும், கண்களுக்கு மிக்க நன்மை தருவதும், ஆயுளை வளர்ப்பதும், பகைவரை மாய்ப்பதுமான ஒருவகை மையைப்பற்றி விளக்குவோம்.

சுக்கில பட்சத்து நன்னாளில் பூசம், புனர்வசு, அஸ்தம், சித்திரை, மிருகசீரிஷம், திருவோணம், ரேவதி, சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவைகளில் ஏதேனுமொரு நக்ஷத்திரத்துடன் சந்திரன் சேர்ந்திருக்கும்பொழுது சிறந்த முகூர்த்த வேளையில், சிந்து நதியின் நீரோட்டத்தில் தோன்றிய ஒளி, மணம், நிறம், நிரம்பிய நீல கமலத்தைப் போல் மினுக்குகின்ற, அஞ்சனக்கல்லைக் கொண்டு வரவேண்டும். *(91— 92)*

இந்த 'சௌவீராஞ்ஜனம்' எனும் அஞ்சனக்கல்லின் எட்டு பாகங்களுடன் பொன், வெள்ளி, செம்பு, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பங்கு சேர்த்து இவைகளனைத்தையும் ஒரு மூசாவில் இட்டு, பூசை, மங்கல வாசகங்களைப் படித்தல் இவைகளைச் செய்வதை முன்னிட்டு தீயை மூட்டி, கருங்காலி, கருவேலம், வெண்கருங்காலி, ஓமம், தினிசமரம் என்பவற்றில் ஏதேனுமொரு கட்டையினாலோ அல்லது பசுஞ்சாணத்திலான வரட்டியினாலோ எரிக்க வேண்டும். *(93)*

பிறகு சந்திரன், துருவ நட்சத்திரம் இவைகளைப் பார்த்து விட்டு, பிரமன், தக்ஷன், அசுவிநீ தேவர்கள், ருத்திரன், இந்திரன், ஆதித்தியர், வருணன், அக்னி, வாயு, விஷ்ணு, ஜனகர், பரத்துவாசர், தன்வந்திரி, ஸுச்ருதர், பவ்யர், சுகன்யா, ஸ்கந்தர், ச்யவனர், கருடன் இவர்களையும் மற்ற தேவர்களையும், புஷ்பம், அக்ஷதை, நெல்பொரி, ஸ்வஸ்திகம் எனப்படும் மங்களப் பொருள்களான நெய், தேன், பால் முதலியவைகளாலும் சேர்த்து உமியற்ற யவ தானியம் இவற்றாலும் செய்த பொருள்கள், வெல்லம் நெய் கலந்த பாயஸம் முதலியவைகளால் பூசித்து வயது முதிர்ந்த மருத்துவர், அந்தணர் இவர்களுக்கு வெள்ளைத்துணி, அதிக நிறையுள்ள பொன் முதலியவைகளைத் தக்ஷிணையாக அளித்து மரியாதை செய்து, மேற்கண்ட தீயில் இந்த மையை ஆயுதச் சலாகையினால் வாட்டி, தனித்தனியாகக் கீழ்க்காணும் பொருள்களில் ஆற்ற வேண்டும்.

பசுஞ்சாணத்தின் நீர், பசுமூத்திரம், நெய், தயிர், தேன், கொழுப்பு திரவம், மஜ்ஜை என்னும் எலும்புச்சோறு, எண்ணெய், கள், எல்லா வாசனைப் பொருள்களின் நீர், சர்க்கரை கலந்த நீர், கருப்பஞ்சாறு இவற்றிலும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், குமிழம், திராட்சை, அடபதியன் கிழங்கு, முத்தங்காய், ஆம்பல், தாமரை, சௌகந்திகம், தாமரைத்தண்டு இவற்றின் கஷாயங்களிலும் அதேபோல் லாவம், சிவல், பறவை, ஆந்தை, மான், முயல், புள்ளிமான், நண்டு இவற்றின் ரசத்திலும், இலுப்பை, சந்தனம், சிலாசத்து, வெட்டிவேர், பதிமுகம், விலாமிச்சைவேர், மஞ்ஜேஷ்டி, நன்னாரி வேர், காவிமண், குங்மப்பூ இவற்றை அரைத்துக் காய்ச்சிய நீரிலும் தனித்தனியாக ஆற்றவும்.

பிறகு வெள்ளைத் துணியில் கட்டி, பன்னிரண்டு இரவுகள் மழை நீரில் வைக்க வேண்டும். *(94— 95)*

பிறகு நிழலில் உலர்த்தி, படிகம், முத்து, பவழம், சிலா சத்து இவைகளைக் கலந்து மறுபடியும் பூசை, மங்கலப் பாடங்களுடன், பெரிய சிறந்த துணி அணிந்துகொண்ட கன்னிப் பெண்ணைக் கொண்டு அம்மியில் அரைக்கச் செய்து, பொன், வெள்ளி, செம்பு, சங்கு, கல், யானைத்தந்தம், எருமைக் கொம்பு, கவயமென்னும் மிருகத்தின் கொம்பு, வைடூரியம், படிகம், ஆட்டுக் கொழுப்பு, வேங்கை மரப்பட்டை இவைகளில் ஒன்றுடன் கூடிய அஞ்சனப் பெட்டியில் வைக்க வேண்டும்.

பிறகு முன்போல் மங்கலச் சொற்களுடன் அதர்வ வேத முறைப்படி காயத்ரீ மந்திரத்தைச் செபிக்கும் எல்லாமறிந்த அந்தணனைக் கொண்டு அதற்கு உயிரூட்ட வேண்டும்.

அதன்பின், யானைமீதேற்றி, வெள்ளைக்குடை, சாமரம், விசிறி முதலியவைகள் பின்தொடர, சங்கு, துந்துபி வாத்தியங்கள் முழங்க அந்தணர்கள் ஓதும் வேத கோஷத்துடன் கூடிய புண்யாஹ வாசன மந்திரத்துடன் மாலை முதலியவைகளால் பூசித்த மருத்துவன் வீட்டிலிருந்து தலைவன் வீட்டிற்குக் கொண்டுவர வேண்டும். அதற்குப் பிறகு முன்பு விதேக நாட்டு மன்னனால் கூறப்பட்ட எக்காரியத்தையும் சாதிக்கவல்ல மையினால் முற்கூறிய திரவியங்களில் ஏதாவது ஒன்றால் தயாரிக்கப்பட்ட சலாகையினால் பசு, அந்தணர் இவர்களைப் பூசித்தபின், தூய்மையாக விரதமேற்று, கீழ்க்கண்ட மந்திரத்தைக் கூறி, முதலில் வலக் கண்ணில் மையைத் தீட்ட வேண்டும்.
(96— 99)

30. மைதீட்டும் மந்திரக் கருத்து

''கண்ணைத் தூய்மைப்படுத்தும் அரசனுக்கு நன்றாக சமமான அறிவு படைத்த 'ததாகத' பகவானான புத்தருக்கு வணக்கம்; கண், அறிவுக்கண், ஞானக்கண், விஞ்ஞானக் கண் இவற்றைச் சுத்தம் செய்வீராக. சமர்ப்பிக்கிறேன்.''

31. மையின் மகிமை

பிறகு மேற்கண்ட இதே தாரிணி என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டே காலை, மாலை தினந்தோறும் மிகவும் புனிதமான, உடல் நலமளிக்கக்கூடிய, உற்சாகத்தை ஊட்டக் கூடிய எல்லாவகையான நஞ்சுகளையும் நீக்கக்கூடிய இந்த மையை அசுவினீ குமாரர்கள், விருத்திரனை அழிக்க முயற்சி செய்த இந்திரனுக்காக முன்பு தயார் செய்தார்கள்.

எனவே அரசர்களுக்கும், அரசர்களுக்கு இணையான பெரும் செல்வம் படைத்தவர்களுக்கும் நாட்டை வெற்றி கொள்ள வேண்டும் என்னும் விருப்பம் கொள்பவர்களுக்கும் வேதம் படிக்கவோ, அல்லது பெரிய சாத்திரம் பயிலவோ முயற்சிப்பவர்களுக்கும், மனமகிழ்ச்சியுடன் கூடிய மருத்துவன் இந்த மையை அமைத்துத் தரவேண்டும். (100— 101)

இதைப்பற்றிச் சில சுலோகங்களும் உண்டு; அவற்றின் கருத்து:—

இனி பிருகஸ்பதி செய்த மங்கலமான ஒரு யோகத்தை (மருந்துச் சேர்க்கையை)க் கூறுவோம். இதைப் பயன்படுத்தும் மன்னன், பகைவர்களிடம் ஏமாற்றமடையமாட்டான். வில்வம், துவரை, யவக்ஷாரம், பாதிரி, குங்குமப்பூ, அல்லது பெருங் காயம், மிளகு ஆனைவணங்கி (இலவம்) இவைகளைக் கொதிக்க வைத்த நீரினால் புரோக்ஷணம் செய்வது சிறந்தது.

விஷத்துடன் கூடிய புல்லுக்கட்டு, விறகு, குடிநீர், ஆயுதம், படுக்கை, இருக்கை, நீர், போர்க்கவசம், அணிகலன், குடை, சாமரம், வீடு இவைகளின்மீது மேற்கண்ட நீரைத் தெளித்தால் உடனே விஷம் நீங்கிவிடும்.

அதேபோல் உளுவை, பாதிரி, அதிவிடயம், மஞ்சள், பூவுள்ள முருங்கை, நன்னாரி, மூக்கரட்டை, மஞ்சிஷ்டி, மூங்கில் வேரின் தோல், விளாங்காய், எருதின் ரத்தம், புளியாரை இவற்றால் முன்போல் நீர் தெளிக்க, நஞ்சு நீங்கும்.
(102— 106)

32. நஞ்சை நீக்கும் மணிகள்

அரக்கு, ஞாழல், மஞ்சிஷ்டி, தொட்டாச் சுருங்கி, அரி தாளம், அரேணுகம், அதிமதுரம், தேன் இவைகளைக் கலந்து, கிரியின் பித்தத்துடன் அரைக்க வேண்டும். இவற்றை அரைத்த கல்கத்தை பசுவின் கொம்பில் நிரப்பி, தரைக்குள் ஏழு நாட்கள் புதைத்து வைக்க வேண்டும். பிறகு மேலே எடுத்து இதனால் உருண்டையான மணிகளைத் தயார் செய்து, அதன் மீது தங்கத்தால் மூடி, கையில் தரிக்க வேண்டும். விஷம் கலந்த பொருள்களை இதனால் தொட்டால் உடனே நஞ்சு நீங்கி விடும். *(107— 108).*

33. சௌம்மியம் எனும் மருந்து

மனோசிலை, அரிதாளம், வன்னி மரப்பூ, இலவங்கப் பட்டை, மஞ்சள், வெள்ளைக்கடுகு, விளாங்காய், கோஷ்டம், மஞ்சிஷ்டி இவைகளை நாய், காராம்பசு இவற்றின் பித்த நீரை விட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும். இது சௌம் மியம் என்னும் உயர்ந்த மருந்தாகும். இது கொடிய நஞ்சை யும் நீக்கும். முன்கூறியதுபோல் இதனால் மணியையும் தயார் செய்து கொள்ளலாம். *(109— 110)*

எலிச்செவி, நாய்க்குருணை இவைகளைக் கையில் அணிந் தால் நஞ்சை அழிக்கும்.

அரேணுகம், ஜடாமாம்ஸி, மஞ்சிஷ்டி, மஞ்சள், அதிமதுரம், தேன், தான்றிப்பட்டை, லவங்கம், அரக்கு இவைகளை நாயின் பித்தநீர் விட்டு அரைத்து முன்போல் மணியாகச் செய்ய வேண்டும்.

மேற்கண்ட மருந்துகளை அரைத்து, வாத்தியங்கள் மீதும், கொடியிலும் பூசினால் இவைகளைப் பார்த்தும் இவற்றின் ஓசையைக் கேட்டும் இவற்றின் வாசனையை நுகர்ந்தும் மனிதன் நஞ்சு நீங்கியவனாகி விடுகிறான். *(111—113)*

34. நஞ்சு நீக்கும் மூலிகைச் சேர்க்கை

சுக்கு, மிளகு, திப்பிலி, ஐவகை உப்புகள், மஞ்சிஷ்டி, மஞ்சள், மரமஞ்சள், சிறிய ஏலக்காய், சிவதை, பச்சிலை, வாயுவிடங்கம், பேய் தும்மட்டி, அதிமதுரம் இவையனைத்தையும் தேனில் கலந்து பசுவின் கொம்பில் வைக்கவும். இதன் ஓர் பகுதியைப் புசிப்பதற்கு முன் வெந்நீருடன் பயன்படுத்த வேண்டும். புசித்த நஞ்சு சீரணமாகி விடும். நஞ்சை அருந்தாமலிருந்தாலும் மருந்து எவ்விதத் தீமையையும் விளைவிக்காது. *(114—115)*

35. நஞ்சை நீக்கும் புகை பிடித்தல்

அரக்கு, குங்கிலியம், விளாமிச்சைவேர், கடுகு, பச்சிலை, வெட்டிவேர், வாயுவிடங்கம், சேறுகொட்டை, குக்குலு, மருத மரத்தின் பூக்கள் இவற்றின் புகையை, தான் தங்குமிடத்தில் போட்டால் தாவரங்கள், உயிரினங்கள் இவற்றின் நஞ்சுகள் அழிந்துவிடும். அந்த இடத்தில் விஷமுள்ள புழுக்கள், கொசு, பூச்சிகள், எலிகள், பாம்புகள் முதலானவை தங்க முடியாது. இந்தப் புகையுள்ள இடத்தில் ஏவல், சூனியம் முதலியவைகளையும் செய்ய முடியாது. *(116—118)*

மயிலிறகு, கொக்கின் எலும்பு, கடுகு, சந்தனம், நெய் இவைகளை இடித்து, இவற்றின் புகையைப் படுக்கை, இருக்கை, துணி, வீடு இவற்றிற்குப் போட்டால் நஞ்சு நீங்கும்.

பேய்த்தும்மட்டி, திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி), மஞ்சிஷ்டி, அதிமதுரம், ஐவகையான உப்புகள், மஞ்சள், மரமஞ்சள், லவங்கப்பட்டை, வாயுவிடங்கம், ஏலக்காய், சிவதை இவற்றைச் சமபாகமாக எடுத்துப் பொடி செய்யவும். அதைத் தேனுடன் கலந்து, பசுவின் கொம்பினுள் வைத்து, அரசன்

---

1. சைந்தவம், ஸஞ்சலம், பிடம், உத்பிதம், ஸாம்பரம் என்பவை ஐவகை உப்புகள்.

ஸ்நானம் செய்யும் நீரில் கலந்துவிட வேண்டும். இதேபோல் முன்கூறிய த்ரியூஷணாதி சூரணத்தைக் குளிக்கும் நீரில் கலக்க வேண்டும்.

எருக்கம்பூ, வெண்நொச்சில், நாயுருவி, கடுகு, தேட்டை மரம், சித்தரத்தை, இவைகளைக் கொதிக்க வைத்த நீரில் தயிர், நெய் கலந்து, அல்லது சந்தனம் சதுரக்கள்ளி, புரசு இவற்றின் பட்டைகள், பெருங்குரும்பை, ஏலாவாலுசம், துளசி, சித்தரத்தை, சிறுகீரை, மணத்தக்காளி, இவற்றின் கொதித்த நீர் எல்லாவிதமான ஜலகாரியங்களிலும் நன்மை யளிக்கும். (119— 123)

கோரோசனம், பச்சிலை, மனோசிலை, குங்குமப்பூ, இவற்றை அரைத்து, நிரம்பப் பொட்டு இட்டால், விஷம் தீங்கை விளைவிக்காது. இவர்கள் பெண்கள், ஆண்கள், அரசர் கள் இவர்களுக்கு அன்பர்களாகி விடுவார்கள்.

36. நஞ்சை நீக்கும் சூர்ணம்

மஞ்சள், மஞ்சிஷ்டி, நாயுருவி தானியம், வேப்ப மரப் பட்டை இவைகளின் பொடிகளை உடல்மீது பூசினால் உடல் நஞ்சு நீங்கப்பெறுமென்று கௌதம முனிவர் பகர்ந்தார்.

'விஷப்ரதிஷேதம்' என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்ட 'ஸஞ்ஜீவனம்' முதலிய மருந்தை நஸ்யம், பானம், கண்மை, உடற்பூச்சு என்ற வகையில் பயன்படுத்த வேண்டும்.

விஷமுண்டவனுக்கு திப்பிலி, அதிமதுரம், தேன், சர்க் கரை, கருப்பஞ்சாறு இவற்றுடன் கலந்து தீட்சணமான வாந்திக்குத் தர வேண்டும்.

மஞ்சள், மரமஞ்சள், பச்சிலை, மிளகு, ஏலக்காய், சிவதை இவற்றின் பொடிகளைத் தேனில் குழைத்து, பேதிக்குத் தர வேண்டும். ரத்தத்தை வெளியிடுவது அவசியமானால் ஸிரை என்னும் அசுத்த ரத்தக்குழாய்களிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். (124— 127)

37. அஜேய க்ருதமும், அம்ருத க்ருதமும்

விஷத்திலுல் பீடிக்கப்பட்டவன் நன்மையை வேண்டி முதலில் தன் இதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அதற் காக உணவு புசிப்பதற்குமுன் காலியாக உள்ள வயிற்றில் அஜேயக்ருதம், அமிருதக்ருதம் என்னும் மருந்துகளை அருந்த

வேண்டும். (இந்த மருந்துகளின் விவரத்தை 40வது அத்தியாயத்தில் காணலாம்). இவை கிடைக்காவிடில் நெய், தேன், தயிர், பால் இவற்றை அருந்தலாம். ஒன்றும் கிடைக்காவிடில் குளிர்ந்த நீரைப் பருக வேண்டும். *(128— 129)*

உடும்பு, மான், கீரி இவற்றின் இறைச்சியுடன் சர்க்கரை, அதிமதுரம், கருஞ்சிவதை இவற்றை அரைத்த கல்கம், புள்ளி மானின் இறைச்சியுடன் திப்பிலி, சுக்கு சேர்த்து அரைத்த கல்கம், மயிலின் இறைச்சியுடன் சுக்கு, அதிவிடயம், சர்க்கரை கலந்து பொருத்தமுள்ள, ஒன்றுசேர்ந்த மூலிகைகளால் செய்யப்பட்ட மாமிச ரசத்தில் நெய் சேர்த்து, குளிரச் செய்து குடிக்க வேண்டும்.

நஞ்சு அருந்தியவனுக்கு வாந்தி, பேதி, குடலைச் சுத்தப்படுத்துதல், இந்தச் சோதனைகள் செய்தபின், இதயத்தைச் சுத்தப்படுத்தக்கூடிய மிகவும் நுண்ணியதான செப்புச் சூரணத்தை (அதாவது தாமிர பஸ்மத்தை) தேனில் கலந்து தர வேண்டும்.

இதயம் சுத்தமாகிய பிறகு, தங்க பஸ்மம் இரண்டு குந்துமணி (ரத்தி) அளவு கொடுக்க வேண்டும். தங்கத்தை அருந்துபவனுடைய உடலில் தாமரை இலை மீது தண்ணீரைப் போல் நஞ்சு தங்காது. ஆயுள் மிகவும் வளரும், செயற்கையான விஷத்திலும் இதே முறையைக் கையாள வேண்டும்.

இவ்வாறு மருத்துவன் நஞ்சு, செயற்கை விஷம் முதலியவற்றிலிருந்து அரசனைக் காக்க வேண்டும். அரசன் அழிந்தால் மக்களுடைய செயல்களெல்லாம் அழியும்.

அரசன் மற்றவர்களைப் போலிருந்தாலும் ஆணை, தைரியம், பொறுமை, தியாகம் இவைகள் அமாநுஷங்களெனப்படும்.

மருத்துவன் புலனடக்கத்துடன், விழிப்புடன் செயல்களால் இவனைப் பூசிக்க வேண்டும். *(130— 135)*

அரசன் உள்ள இடத்தில், மருத்துவன் முன்கூட்டி அறிவித்த பிறகே உள்ளே நுழைய வேண்டும். அரசனால் மதிக்கப்பட்ட போதிலும் தகாத வாகனம், இருக்கை இவற்றின்மீது அமரக் கூடாது.

அரசனுக்கெதிரே தக்க ஆசனத்தில் அமரவேண்டும். அரசன் கூறியதை ஆட்சேபிக்கலாகாது. அரசனுக்குத்தக்க வார்த்தைகளைக் காலம் கடத்தாமல் கூற வேண்டும்.

சுயநலமில்லாத பேச்சை தனக்கு அன்பனும், தனக்கு நன்மையளிப்பவனுமான அரசனிடம் கூறவேண்டும்.

மற்றவர்களுக்கான பேச்சை, காலம், தேசம் இவற்றை யொட்டிக் கூற வேண்டும்.

தருமமானதும் பொருள் நிறைந்ததுமான வார்த்தையை, அரசன் தன்னைக் கேட்காமல் உபதேசிக்கலாகாது. அது மிகவும் சாகசமானது.

அரசனுக்குத் தீமை செய்யாதே. அவ்வாறு செய்தால் அடியோடு அழிந்து விடுவாய்.

அரசனுக்கு அனுகூலமான, நன்மை பயக்கக்கூடிய வார்த்தைகளைத் தனிமையில் கூற வேண்டும். தீய வழியிலிருந்து அரசனை விலக்க வேண்டும்.

பரந்த நோக்கம் கொண்ட பேச்சுக்களால் தனிமையில் அவனைச் சமாதானப்படுத்த வேண்டும். குற்றம் நிறைந்தவனாக இருந்தால் அதை உபேட்சை செய்துவிட வேண்டும்.

அரசனின் பேச்சுக்கு எதிராகப் பேசுவதை விட்டு விட வேண்டும். அரசனின் உள்ளத்தை அறியாத அறிஞனும், அரசனின் எண்ணத்தை அறிந்த மூடனும், அரசனுக்கு மிகவும் அன்பரா்க இருந்தபோதிலும் விரைவிலேயே முறையே அரசனின் வெறுப்புக்கும், அன்புக்கும் உரியவராகி விடுகிறார்கள். மிகவும் எளிய, சிறிய செயலாக இருந்தாலும் அரசனுக்குக் கூறிய பின்பே செய்ய வேண்டும்.

பொக்கிஷம், பெண்களுள்ள அந்தப்புரம் இந்த இடங்களில் காரணமின்றிச் செல்லக்கூடாது. சென்றாலும் வெகுநேரம் தங்கலாகாது.

வெறுப்புணர்ச்சியைக் காட்டாமல், சிறிதளவு லாபம் கிடைத்தாலும் மகிழ்ச்சியை வெளியிட வேண்டும்.

அரண்மனையில் மற்றவருடன் தனிமையில் பேசுதல், வாக்குவாதம், சண்டை முதலியவைகளைச் செய்யலாகாது.

அரசனைப்போல் உடையணிவது, நகைகள் அணிவது லீலைகள் முதலியவைகளைச் செய்யக்கூடாது.

அரசனை மகிழ்விப்பதற்காக, அரசனால் வெகுமதியாக அளிக்கப்பட்டவைகளை அணிந்திருக்க வேண்டும். அரசனைப்

பின்பற்றிச் செல்லும்போது சிரிக்க வேண்டிய இடத்தில் புன் முறுவல் செய்ய வேண்டும்.

அரசனிடம் அரசனைப்பற்றியோ மற்றவர்களைப்பற்றியோ ரகசியங்களை மற்றவர்கள் கூறும்போது, மௌனமாக இருக்க வேண்டும். தன்னைப்பற்றி யாராவது கூறினால் அதைக் கேட் காமல் செவிடன்போலிருந்து விடவேண்டும்.

தைரியம், இனிய தன்மை, நல்லொழுக்கம் இவற்றுடன் கூடியிருத்தல் வேண்டும். மிகவும் முயற்சித்து (உழைத்து) தன்னை மிகவும் உயர்ந்தவனாக ஆக்கிக் கொள்ளலாகாது. ஏனென்றால் உயரத்திலிருந்து கீழே விழுவது மிக்க துன்பத் தைத் தரும். மேலெழும்போது எவ்வளவு இன்பம் கிடைக்குமோ அதைக் காட்டிலும் அதிகமான துன்பம் கீழே விழும்போது கிடைக்கும்.

38. ராஜசேவையின் கஷ்டம்

அரசனுக்கு அருகில் இருந்து பணிவிடை புரிவது, ஆயுதம், பாம்பு, நெருப்பு இவைகளுடன் விளையாடுவதற்கொப்பாகும். இத்தகைய வேலை மிகவும் பணிவும் திறமையும் உள்ளவர் களாலேதான் செய்ய முடியும். மிகவும் கஷ்டப்பட்டுக் கிடைக் கும் செல்வமும், பெருமதிப்பும் அரசனால் பெற்று, தன் கடமை யிலிருந்து பிறழாமல், வெகுகாலம் இன்புற்று இருப்பதற்கேற்ப கவனக்குறைவாக நடந்துகொள்ளாமல் இருக்க வேண்டும்.

மருத்துவன் அரசனின் படுக்கையை, நாற்புறமும் ரக்ஷா மந்திரத்தை ஓதி அமைத்துத் தர வேண்டும்.

இரவில் கடுகு, யவம் முதலான அட்சதையுடன் கூடிய புனிதமான சாம்பலால், படுக்கையின் தலைப்பகுதியில் சித்திர மாக வரைந்துள்ள ரக்ஷாசக்திக்கு யவத்தின் முளை, யவம், புல், பலவகையான பூக்கள், பழங்கள், இலைகள் இவற்றுடன் கூடிய நீர் நிரம்பிய பாத்திரத்தை அமைக்க வேண்டும்.

மாலையில் புசித்த பின்னும் இரவின் முடிவிலும் உபகாரம் அளிக்கவும். இந்த புனித காரியத்தைத் தூய்மையுடனிருந்து செய்ய வேண்டும். இந்தச் செயல் ஆயுளை வளர்க்கும். உடலை வலிவுள்ளதாக்கும். தீய சக்திகளையும், விஷங்களையும் தன் வசமாக்கும். ஏழைமையை அகற்றும். *(136—153)*

இந்த அத்தியாயத்தில் விஷத்திலிருந்து காத்துக் கொள்ளும் வழி முறைகளும் அதனால் உண்டாகும் நோய்களுக்குச் சிகிச்சையும் சுருக்கமாகக் கூறப்பட்டன. விரிவாக உத்தரஸ்தானம் என்னும் பகுதியில் மறுபடி கூறுவோம். இதை முழு அளவில் ஆராய்ந்தும், நல்ல வகையில் தன் அறிவால் நோய்களின் அறிகுறிகளை ஆராய்ந்தும் சிகிச்சையைச் செய்ய வேண்டும். (154)

அரசன் இவ்வாறு விஷத்திலிருந்தும், இடு விஷத்திலிருந்தும், பூதங்களிலிருந்தும், தன்னைக் காத்துக் கொள்வதற்கு தினந்தோறும் ஜாக்கிரதையாக இருந்து, இந்த உபதேசத்தை ஏற்று நடந்தால், பகைவர் கூட்டத்தால் தாக்கப்படாமல், மகாத்மாவாகி தொடர்ந்து பலகாலம் மக்களுக்குப் பெருநலவாழ்வை விளைவித்து வாழ்வான். (155)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'அன்னரக்ஷாவிதி' எனும் எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்

*விருத்தான்ன விஞ்ஞாநீயம்

ஆத்ரேயர் முதலான மாமுனிவர்கள் கூறியபடி இனி ‘விருத்தான்ன விஞ்ஞாநீயம்’ என்னும் அத்தியாயத்தை விவரிப்போம். (1—2)

1. சேர்க்கத்தகாத உணவுகள்

கிராமங்களில் உள்ளதும், ஈரமான இடங்களில் வசிக்கின்றதும், நீரில் வாழ்கின்றதுமான உயிரினங்களின் இறைச்சியை, தேன், வெல்லம், எள், பால், உளுந்து, முள்ளங்கி, தாமரைத்தண்டு இவற்றோடும், முளைத்த தானியங்களோடும் சேர்த்து உண்ணக் கூடாது. குறிப்பாகப் பாலுடன் மீனைச் சேர்த்து உண்ணக்கூடாது. இரண்டும் சுவை, சீரணித்து மாறும் நிலை இவற்றில் இனிப்பாக இருத்தல், இரண்டுமே கபத்தை அதிகமாகக் கிளறிவிட்டு சிக்கல் உண்டாக்குதல், பால் குளிர்ந்த வீர்யமும், மீன் உஷ்ண வீர்யமும் கொண்டு ஒன்றுக்கொன்று முரணான வீரியத்தை உடையதாயிருத்தல் ஆகிய காரணங்களால் பாலையும் மீனையும் சேர்த்து உண்ணக் கூடாது.

அந்த மீன் வகைகளிலும் சிலிசிமம் என்ற வகையான மீனை குறிப்பாகப் பாலுடன் சேர்த்து உண்ணலாகாது. இரு பக்கங்களிலும் செதில்கள், சிவந்த கண்கள், உடல் முழுவதும் செந்நிறக் கோடுகள், சிவந்த கதிரவனைப் போல் நிறம், பெரும்பாலும் நீர் ஓரங்களில் வசிப்பதால், அளவு கடந்த கபத்தைத் தோற்றுவிப்பதுடன் அதிகமாக நோயையும் மற்றும் [1]ஆம விஷத்தையும் உண்டு பண்ணுகிறது. இவைகளே இம்மீனை உண்ணாமைக்குக் காரணங்களாகும். புளிப்புள்ள எப்பொருளுடனும் பாலைக்

---

* விருத்தான்ன விஞ்ஞாநீயம்—ஒன்றுக்கொன்று பகையான உணவுப் பொருள்களை விளக்கும் அத்தியாயம்.

1. ஆமவிஷம்—அசீரணத்தினால் உண்டாகும் விஷம். சடராக்கினி பலமிழந்திருத்தலால், அல்லது உணவு அதிக ‘குரு’வாக சீரணமாகாமல் ரஸ தாதுவானது நன்கு பக்குவமாகாமல் இருக்கும் நிலை ‘ஆமம்’ என்பது. இந்த நிலை நீடித்தால் உடலுக்கு ஒவ்வாத ஒருவித விஷத்தன்மை தோன்றும். இதற்கு ‘‘ஆம விஷம்’’ என்பது பெயர்.

கலந்து உண்ணக் கூடாது. மற்ற [1]புளிப்புச் சுவையுள்ள கனி வகைகளும் பாலுக்குப் பகையானவை.

கங்கு என்ற தானியம், வரகுதானியம், [2]மகுஷ்டம் எனும் தானியம், வேல்லம் எனும் தானியம். கொள்ளு, உளுந்து, வரகு, மொச்சை இவைகளும் பாலுக்குப் பகையானவை.

முள்ளங்கி முதலான பச்சைக் கறிகாய்களைப் புசித்து, பின் பால் அருந்தக் கூடாது. அப்படிப் பருகினால் குஷ்ட நோய் உண்டாகும்.

புஷ்கரமூலம், ரோஹணீகம், ஜாதுகம் என்ற கீரை வகைகளைத் தேன், பால் இவற்றுடன் சேர்த்துப் புசிக்கக் கூடாது.

கடுகு எண்ணெயில் வறுத்த புறாவின் இறைச்சியைத் தேன், பால் இவற்றுடன் கலந்தும், அவ்வாறே கடுகு எண்ணெயில் வறுத்த மீன், பன்றி இவற்றின் இறைச்சிகளையும் உண்ணக் கூடாது.

இலந்தைப் பழத்தை, முள்ளம் பன்றி, பன்றி இறைச்சி இவற்றுடன் கலந்தும், பச்சை இறைச்சியைப் பித்த நீருடன் கலந்தும், கோழி, மான் இவற்றின் இறைச்சியைத் தயிருடனும், செம்மறி ஆட்டு மாமிசத்தைக் குசும்பக்கீரையுடன் சேர்த்தும், எள்ளால் செய்யப்பட்ட முறுக்கை காடியுடன் சேர்த்தும் உண்ணக்கூடாது.

பாலுடன் உப்பையும், முள்ளங்கியுடன் உளுத்தம் பருப்பையும், வெண்ணெயுடன் முள்ளங்கியையும், கள், திராக்ஷைரசம் இவற்றுடன் பசலைக் கீரையையும் உவகைகொட்டைகளை மூங்கில் குருத்துடன் அல்லது அகத்திக் கீரையுடன் கலந்து, முளைவிட்ட தானியங்களை தாமரைத் தண்டுடனும், லகுசம் பழத்தை தயிர், உளுத்தம் பருப்பு, வெல்லம், தேன், நெய் இவற்றுடன் சேர்த்தும் உண்ணலாகாது.

வாழைப் பழத்தை தயிர், மோர், பனம்பழம் இவற்றுடன் சேர்த்துப் புசிக்கலாகாது.

மணத்தக்காளியை, திப்பிலி, மிளகு இவற்றுடனும், தேன், வெல்லம் இவற்றுடனும் சேர்த்துப் புசிக்கக் கூடாது.

---

1. புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள் உண்டதற்கு முன்பும் பின்பும் பாலை அருந்தக் கூடாது.
2. மகுஷ்டம் : நன்னிப் பயறு – துலுக்கப் பயறு.

அதே மணத்தாளியை மீன் சமைத்த பாத்திரத்திலும், இஞ்சி சமைத்த பாத்திரத்திலும், பக்குவப்படுத்தி உண்ணக் கூடாது.

அந்த மணத்தக்காளிக் கீரையை வேறு பாத்திரத்தில் சமைத்தாலும், ஓர் இரவு பழகிய பின் உண்ணக்கூடாது.

வெண்கலப் பாத்திரத்தில் பத்து இரவுகள் வைத்த நெய்யைப் பருகக் கூடாது.

அதேபோல் கள், தயிர், தேன், சேராங்கொட்டை இவற்றுடன் உஷ்ணமானதும் உஷ்ண வீரியமுள்ள பொருட்களையும் சேர்த்து உண்ணக் கூடாது. *(3-12)*

கம்பில்லம் என்னும் ஒருவகைக் குருவியின் மாமிசத்தை மோருடன் சமைத்தால் தீங்கு விளைவிக்கும்.

கள்ளிக் காக்கையின் மாமிசத்தைச் சூலத்தில் குத்தி நெருப்பில் பக்குவம் செய்வதால் நஞ்சுத் தன்மையை உண்டாக்கும். கள், 'கிரிசரா' என்னும் அரிசி, உளுந்து இவற்றைச் சேர்த்துச் செய்த ஒருவகைக் கஞ்சி, பாயசம் இவற்றை ஒரே சமயத்தில் பருகுவது பகையாகும்.

தேன், நெய், கொழுப்பு, வஸை, எண்ணெய், தண்ணீர் இவற்றில் ஏதேனும் இரண்டையோ, மூன்றையோ அல்லது அனைத்தையுமோ ஒரே அளவில் சேர்த்துப் பயன்படுத்துதல் ஒன்றுக்கொன்று பகையாகித் தீங்கில் முடியும்.

தேனையும், நெய்யையும் வெவ்வேறு அளவில் கலந்து பருகினாலும் அவ்விதம் பருகியபின் காங்கோதகம் என்னும் மழை நீரைப் பருகினாலும் அது விடத்தன்மையை உண்டாக்கும்.

தேனும், தாமரை வித்துக்களும் ஒன்றுக்கொன்று பகையானவை. குந்துருக்கம் எனும் கீரை, தேன், சர்க்கரையாலான ஒரு வகை கள், பேரிச்சம் பழத்தினாலான [1]மைரேயம் என்ற கள் இவை ஒன்றுக்கொன்று பகையான குணமுள்ளவை. இம் மூன்றையும் சேர்த்து உண்டால் வாதத்தை மிகவும் சீற்றமடையச் செய்யும்.

1. மைரேயம்—பேரீச்சம் பழத்தினாலான ஒரு வகை கள்.

[1]ஹாரித்ரகம் என்னும் பக்ஷியின் மாமிசத்தை, கடுகு எண்ணெயில் பொறித்து உபயோகிப்பது [illegible]. அது பித்தத்தை மிக்கச் சீற்றமடையச் செய்யும்.

பாயசத்தை அருந்தியபின் [2]மந்தம் எனும் பானத்தை அருந்தினால் அது கெடுதலைத் தோற்றுவிக்கும். கபத்தை மிகச் சீற்றமடையவும் செய்யும்.

கொத்துப் பசலை எனும் கீரையை எள்ளுப் பொடியுடன் சேர்த்து பக்குவம் செய்து உண்டால் அது மலக்கழிச்சலுக்குக் காரணமாகும்.

நாரை எனும் பறவை மாமிசத்தை கள் அல்லது சிறிது வேகவைத்த (சுண்டல்) காராமணியுடன் பயன்படுத்தினாலும் அது தீமையை விளைவிக்கும்.

அதே மாமிசத்தைப் பன்றிக் கொழுப்பில் பொறித்து உண்டபொழுது அது காலனாக மாறிவிடும். உடும்பு, லாவம் எனும் ஒருவகைச் சிட்டுக்குருவி, தித்திரி என்னும் பறவை, மயில், காடை இவற்றின் மாமிசத்தை ஆமணக்குச் செடியின் விறகுக் குச்சிகளைக் கொண்டு உண்டான தணலில் சமைத்து உண்டாலும், ஆமணக்கு எண்ணெயில் பொறித்து உண்டாலும் உயிர்க்கு ஆபத்து விளையும்.

பச்சைப் புறாவின் மாமிசத்தை மஞ்சள் செடியின் அடித் தண்டில் குத்தி அதே மஞ்சள் தண்டை எரித்து அந்தத் தீயில் பக்குவப்படுத்தி உண்டால், உடன் உயிர் நீங்கிவிடும். அதே மாமிசத்தைச் சாம்பல் அல்லது மண் தூசிகளால் அசுத்தமாக்கப் பட்டதைச் சேர்த்துப் புசித்தாலும் உடன் உயிர் போய்விடும்.

மீன் வறுத்த எண்ணெயில் வறுக்கப்பட்ட திப்பிலி தீமையை அளிக்கவல்லது. அதேபோல் மீன் வஸை எண்ணெயில் வறுத்த திப்பிலியும் உயிரைப் போக்கும் தன்மையுடையது.

சீதவீர்யம், உஷ்ணவீர்யம் கொண்ட இவ்விரண்டு பொருட்களையும் புதிய பழைய தானியங்களையும், காய் பழம்

---

1. ஹாரித்ரகம்—'ஹரிதால' என்னும் பிரசித்தமான பறவை.

2. மந்தம்—பொரி மாவை நெய்விட்டுப் பிசிரி குளிர்ந்த நீரில் கரைத்து சிறிது கெட்டியாகச் செய்யப்படும் பானம்.

இவ்விரண்டையும் பொதுவாக ஒன்று சேர்த்து உண்ணக் கூடாது.

வெயிலில் அலைந்துவிட்டு வந்தபின் திடீரென்று குளிர்ந்த நீரில் நீராடுவது கண்களுக்கும் தோலுக்கும் கெடுதல்களை விளைவிக்கும். நாவறட்சியைத் தோற்றுவிக்கும். அதே நிலையில் பால் அருந்துவது இரத்த பித்தத்தை உண்டாக்கும். வேலை செய்து உடலில் கடுமையான களைப்பு ஏற்பட்டவுடன் புசிப்பது வாந்தி, அல்லது குன்மம் என்ற நோய்க்குக் காரணமாக ஆகும்.

அதிகம் பேசுவதனால் மிகவும் களைத்திருக்கும்பொழுது புசிப்பது குரலைக் கெடுக்கும்.

இதுவரை பெருவாரியாக நாம் பயன்படுத்தும் அன்ன பானங்களுக்குள்ள பகைமை கூறப்பட்டது.

மருந்துகளைப் பயன்படுத்துவதில் மருத்துவ சாத்திர முறையை உபதேசப்படி பின்பற்றுவது முறையாகும். இவற்றுக்கிடையேயுள்ள பகைமையைப் பற்றிக் கூறுவது விரிவாகும் என்பதனால் கூறவில்லை. அது அவ்வளவு நன்றாகவும் இராது.

மருந்துப் பொருட்களின் விரோத குணங்களைப் பற்றி நன்கு ஆராய்ந்து செயல்படுவது சிறந்த முறையாகும்.

(13—24)

2. பகைப்பொருட்களும், அவற்றினால் உண்டாகும் தீமைகளைப் போக்கும் வழிகளும்

சுருங்கக்கூறின் உடலில் உள்ள தோஷங்களை இருக்கும் இடத்திலிருந்து நெகிழவைத்துக் கிளறிவிட்டு அதை முற்றிலும் வெளிப்படுத்தாமல் தேக்கி வைக்கும் பொருள்களே பகைப்பொருட்கள் எனப்படும். அந்தப் பொருட்கள் தாதுக்களுக்கு எதிரிடையானவை. இரு உணவுப் பொருட்களின் சக்திவாய்ந்த பரஸ்பர குணங்கள் ஒன்றுக்கொன்று [1]விஷமமாயிருத்தல், [2]ஸமமாயிருத்தல், சில குணங்கள் ஸமமாகவும், சில விஷமமாகவும் கலந்திருத்தல், மேலும் செய்முறை, அளவு, தேசம், காலம், சேர்க்கை அதுபோல் இயற்கையாகவே ஒவ்வா திருத்தல் ஆகிய காரணங்களால் பகைமை ஏற்படுகிறது. பால்

1. விஷமம்—ஒன்றுக்கொன்று எதிரிடையானது.
2. ஸமம்—ஒன்றுக்கொன்று மாறுபடாத ஒரே தன்மையது.

கொள்ளுடன் விஷமகுணம் கொண்டிருப்பதால் பகையாகிறது. பால் பலாப்பழத்துடன் ஸமகுணங்களால் பகையாகிறது. பால் மீனுடன் சில விஷமமாகவும் சில ஸமமாகவுமுள்ள குண களால் பகையாகிறது.

தயிருக்கு சூடாக்குவது (செய்முறையால்) பகை குண மாகும். சமஅளவில் தேனும் நெய்யும் சேர்ப்பது (அளவால்) எதிரிடையானது. உவர்ப்பு நிலமும் நீரும் (தேசத்தால்) ஒன்றுக் கொன்று ஒவ்வாதவை. இரவில் சத்துமாவைப் புசிப்பது (காலத் தால்) தீமையானது. இதே சத்துமாவை இடைஇடையே நீர் அருந்தியும் (சேர்க்கை) உண்ணக்கூடாது. இயற்கையாகவே யவ தானியத்தைத் தனியாகப் புசித்தாலும் கேடு விளைவிக்கும். (25—28)

பகைமையுள்ள பொருட்களாலான உணவு, வைசூரி, உடல் வீக்கம், வெறி, பெரிய கட்டி, குன்மம், எலும்புருக்கி நோய், உடல் ஒளி, வலிமை, நினைவாற்றல், அறிவுப்புலன், மனோபலம், ஆகியவற்றின் அழிவு, மேலும் காய்ச்சல், இரத்தபித்தம், [1]எண்வகைப் பெருநோய்கள் ஆகியவற்றைத் தோற்றுவிக்கும். நஞ்சைப்போல் உயிரையும் மாய்க்கும்.

அந்நிலையில் அவ்வித நோய்களை நீக்குவதற்குத் தக்க மருந்துகளைப் பயன்படுத்தி, வாந்தி செய்வித்தல், பேதிக்குக் கொடுத்தல் என்னும் சோதனை மருத்துவ முறையை விரைவில் பயன்படுத்தி உடலைச் சுத்தம் செய்யவேண்டும். அல்லது அத் தகைய பகைமைப் பொருட்களுக்கு எதிரிடையான பொருட்க ளால் [2]சமன சிகிச்சை உடன்செய்வது சிறந்தது. அல்லது அந்தப் பொருட்களைக் கொண்டே முன்னதாக உடலைப் பண் படுத்த வேண்டும்.

பகைப்பொருட்களும், சிலருக்குத் தீமையை உண்டுபண்ணு வதில்லை. உடற்பயிற்சி செய்பவர்கள், எண்ணெய்ப் பசை யுண்டாக்கும் சிகிச்சை செய்து கொண்டவர்கள், சடராக்னி நன்கு வேலை செய்கின்ற நிலையிலுள்ளவர்கள், நடுப்பிராயத்தில்

---

1. எண்வகைப் பெருநோய்கள்—வாதநோய், மூலம், குஷ்டம், நீரிழிவு, பவுத்திரம், நீர்ப்பீலிகை, க்ரஹணி, நீரடைப்பு என்பன.
2. சமன சிகிச்சை—மருந்து கொடுத்து நோயைத் தீர்க் கும் முறை.

உள்ளவர்கள், நல்ல உடல் வலிமை பெற்றவர்கள் இவர்கள் விஷயத்தில் பகைப் பொருட்கள் தீங்கை விளைவிப்பதில்லை. அங்ஙனமே உடலுக்கு ஏற்ற உணவும், அளவில் குறைந்த உணவும்கூட விரோதகுணம் உள்ளதாயினும் கெடுதலைத் தருவதில்லை. *(29—31)*

எனவே தயிர், பால் போன்ற மாறுபட்ட குணமுள்ள பொருட்களின் சேர்க்கை, நோயாளியைச் சார்ந்த தாதுக்கள் (தோஷங்கள்) [1]தூஷ்யங்கள், உடற்பலம், காலம், இடம் முதலானவை, அவற்றிற்கு எதிரிடையாக இருப்பதால் நோய்கள் நீங்கி விடுகின்றன. ஆகவே பகையாவதில்லை. பகைமை குணமுள்ள பொருட்களின் சேர்க்கை வகைகளால் உடலுக்கு ஏற்றதான உணவுப் பொருட்களும் உடலுக்குத் தீங்கு விளைவிப்பதுபோல் ஒருவிதச் சேர்க்கையின் காரணமாகத் தீங்கு விளைவிக்கும் பொருட்களிடையே பகைமை நீங்கிவிடுகிறது.

3, தீங்கிழைக்கும் பொருட்களைத் துறக்க வேண்டிய முறை

தீங்கிழைக்கும் இயல்புள்ள பொருட்களை உண்ணும் பழக்கத்தை நீக்க, முன்பு உண்ட பொருளில் நாலில் ஒரு பங்கை அல்லது சிறிதுசிறிதாகக் குறைத்து அதற்குப் பதிலாக நன்மை பயக்கும் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். அப்படியே இடையில் ஒருநாள், இரண்டுநாள், மூன்று நாள் என முறையே விட்டு விட்டு பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

இம்முறையை கைக் கொள்வதால் தோஷங்கள் விலகிக் குணங்கள் வளர்கின்றன. தீங்கும் ஏற்படுவதில்லை. அவன் தன் நிலையை (உறுதியை) அடைகின்றான். *(32—35)*

4. உடலை நிலையாகப் பாதுகாக்கும் முறை

உடலை, நிலை நிறுத்துவதற்கு உணவு, உறக்கம் [2]அப்ரம்மசர்யம் இம் மூன்றும் தூண்கள் போலாம். இம் மூன்றையும் முறைப்படி பின்பற்றினால் வலிமை, நிறம், வளர்ச்சி இவை உயிருள்ளவரை நீடிக்கின்றன.

உணவு பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. மேலும் ஆங்காங்கு கூறப்படும்.

---

1. தூஷ்யங்கள்—கோளாறு அடைந்த தாதுக்கள்.
2. அப்ரம்மசர்யம்—சிற்றின்பத்தைக் கண்டபடி நாடாமல் நெறியுடன் இருத்தல்.

5. உறக்கத்தின் தோற்றம்

உலகம் தோன்றிய பொழுதே உறக்கமும் தோன்றியுள்ளது. உறக்கத்திற்குக் காரணம் [1]தமோகுணம்—அதன் மாற்றுருவம் உறக்கம் எனப்படும். தமோ குணத்தின் மிகுதியால் தோன்றும் உறக்கம் பெரும்பாலும் இரவிலேயே ஏற்படுகிறது.

6. உறக்கத்திற்குக் காரணம்

கபத்தின் மூலம் துவாரங்கள் அடைபடுவதாலும், களைப்பினால் புலன்கள் தம்தம் பொருட்களுடன் தொடர்பிலிருந்து விலகிக் கொள்வதாலும், மனிதனை உறக்கம் தழுவிக் கொள்கிறது. அப்பொழுது எல்லாப் புலன்களும் தம்தம் பொருட்களிலிருந்து விலகினாலும் மனது இந்தப் புலப் பொருட்களுடன் தொடர்பு விடாமல் இருந்து கொள்வதால் மனிதன் பல வகையான கனவுகளைக் காண்கிறான்.

7. உறக்கத்தின் இன்றியமையாமை

இன்பம், துன்பம், உடல் வளர்ச்சி, இளைப்பு, வலிவு, வலிவின்மை, சிற்றின்பத்தை நிறைவேற்றுவதற்கான நல்ல நிலைமையைப் பெறுதல், அலித்தன்மை அடைதல், அறிவு, அறிவின்மை, நீண்ட வாழ்வு, இறப்பு இவை அனைத்தும் நல்லுறக்கத்தைச் சார்ந்தவை.

தகாத காலத்தில் உறங்குவதும், மிதமில்லாமல் உறங்குவதும், உறங்காமலே இருப்பதும் [2]கால ராத்திரியைப்போல் உடல் நலத்தைக் கெடுப்பதுமன்றி ஆயுளையும் குறைத்துவிடும்.

புலனடக்கமுடையவர்களின் அறிவு, தவத்தினால் தெளிவடைவதுபோல், முறையான உறக்கம் உடலுக்குச் சுகம் தரும். ஆயுளை வளர்க்கும்.

இரவில் உறங்காமலிருப்பதால் உடலில் வறட்சி ஏற்படும். பகல் உறக்கம் கபத்தை வளர்க்கும். அமர்ந்த நிலையில் அசைந்து கொண்டே தூங்குவது அதிக வறட்சியையோ, கபத்தையோ தோற்றுவிக்காது.

---

1. தமோ குணம் - பயம், அஞ்ஞானம், தூக்கம், சோம்பல், துயரம் இவற்றிற்குக் காரணமான குணம்.
2. கால ராத்திரி - மரண பயத்தைத் தோற்றுவிக்கும் மிகக் கொடிய அடையாளங்களைக் காட்டும் காட்சிகளுடன் கூடிய இரவு.

ஆனி, ஆடி மாதங்களான கோடைகாலத்தில் வாதம் உடலில் குவிந்திருப்பதாலும், [1]ஆதான காலத்தின் இயல்பாலும், வறட்சியினாலும் இரவு நேரம் குறைவாக இருப்பதாலும் பகல் நேரத்தில் உறங்குவது நலம்.

மற்ற பருவங்களில் பகலில் உறங்குவதால் கப பித்தங்கள் வளரும்.

ஆனால் அதிகப்படி சொற்பொழிவாற்றுபவர், வாகனமேறி சவாரி செய்பவர், வழி நடப்பவர், மது அருந்துபவர், சிற்றின்பத்தில் ஈடுபடுபவர், பாரம் சுமப்பவர், மற்ற தொழிலாளி, கோபம், மனவருத்தம், அச்சம், இவற்றால் களைத்தவர், சுவாசம், விக்கல், கழிச்சல் இவற்றால் துன்புற்றவர், வயது முதிர்ந்தவர், குழந்தைகள், வலிவு இழந்தவர், இளைத்தவர், மார்பில் அடிபட்டவர், நாவறட்சி, வயிற்று வலி இவற்றால் துன்புற்றவர்,சீரணமற்றவர், ஏதேனும் காரணத்தினால் அடியுண்டு வருந்துகிறவர், பித்துப் பிடித்தவர் ஆகியோர், பகலில் வழக்கமாக உறங்குபவர் ஆகிய இவர்கள் பகலிலும் உறங்கலாம். அதனால் தாதுக்கள் சமநிலையை அடையும். கபம், வளர்ந்து உடல் உறுப்புகள் வளர்ச்சி பெறும்.

அதிக கொழுப்புள்ளவர்கள், கபச்சீற்றமுடையவர்கள், நாள்தோறும் எண்ணெய் குளிப்பவர், இவர்கள் பகலில் தூங்கக் கூடாது.

நஞ்சு தீண்டப் பெற்றவனும், தொண்டைநோய் உள்ளவனும் இரவிலும் உறங்கக்கூடாது. *(36—48)*

8. தகாத காலத்தில் உறங்குவதால் வரும் தீமைகள்

[2]ஹலீமகம் என்னும் காமாலை நோய், மயக்கம், உடல் அசைக்க முடியாமல் போதல், உடல் பளு, காய்ச்சல், தலை சுற்றல், அறிவிழத்தல், வியர்வை வெளிவராதிருத்தல், சடராக்னிக் குறைவு, வீக்கம், சுவையின்மை, மனப்பிரட்டல், நாட்பட்ட ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, தினவு, உடல் வலி, குஷ்டம், சிறுகட்டி, இருமல், சோம்பல், தொண்டை நோய், விஷம் தீண்டப்பட்டவனுக்கு விஷத்தின் செயல் அதிகரிப்பது இவை அனைத்தும் தகாத காலத்தில் உறங்குவதால் ஏற்படும் தீமைகளாம்.

---

1. ஆதான காலம் — உத்தராயணம் என வழங்கும், தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாதங்கள்.
2. ஹலீமகம் - காமாலையின் ஒரு வகை.

கபம் அதிகமாகத் தேங்கியிருப்பதால் அது சீரணிக்காமல், துவாரங்களை அடைத்து விடுகிறது. அதனால் உடல் பளுவும், சோம்பலும் உண்டாகின்றன. சோம்பலினால் உறக்கம் அதிக மாகிறது. *(49—52)*

9. அதிக உறக்கத்தை நீக்குவதற்கான சிகிச்சை

உடலையும், தலையையும் விரேசனம் என்ற முறைப்படி சுத்தப்படுத்துதல், வாந்தி எடுக்கச் செய்தல், இரத்தத்தை வெளியேற்றுதல், புகை பிடித்தல், பசி, தாகம், வலி, மகிழ்ச்சி, வருத்தம், புணர்ச்சி, அச்சம், சினம், சிந்தனை, ஆவல், இன்பம் தராத படுக்கை [1]ஸத்துவம் என்னும் நற்குணத்தின் ஏற்றம், பெருந்தன்மை, தமோ குணமின்மை, வறண்ட உணவு இவை அதிக உறக்கத்தை நீக்குபவை. மேற்கண்டவைகளே தூக்கத்தை விலக்கும் காரணங்கள் என அறிந்துகொள்க.

மேலும் காலம், பழக்கம், தாதுக் குறைபாடு, வாத பித்த வளர்ச்சிநோய் இவையனைத்தும் உறக்கத்தைத் தடுப்பவை. *(53—55)*

10. உறக்கமின்மையால் தோன்றும் நோய்கள்

உடல் வலி, தலை பளு, கொட்டாவி, அறிவு மழுங்குதல், உடல் அழற்சி, தலை சுற்றல், சீரணக் குறைவு, சோம்பல், வாத நோய்கள் இவை தூக்கமின்மையால் உண்டாகின்றன.

சிறிதளவு கபம் வாதத்தினால் தூண்டப்பட்டு இரத்தக் குழாய்களை அடைத்து உணர்வை இழக்கச் செய்கிறது. அந் நிலையில் கொடிய மோக மயக்கத்தைத் தோற்றுவிக்கும். சோம்பல் உண்டாகிறது. அதனால் கண் விழிகள் சிறிதளவு இடுங்கியும் திறந்துமிருக்கும்.

கண்விழி சற்றுக் கோணியிருக்கும். கண்ணீர் பெருகும். கண் இரப்பைகளின் மயிர்கள் குத்திட்டிருக்கும். துடிக்கும். *(56—58)*

இந்த அறிகுறிகள் உள்ள நோய் கண்ட மூன்றரை நாட் களுக்குள் சிகிச்சை செய்ய வேண்டும். அதற்குப்பின் அந்நோய்

---

1. ஸத்துவம் - உடல், வாக்கு, மனம் இவற்றின் தூய்மை, ஆஸ்திகனாயிருத்தல், சிறந்த தர்மங் களில் விருப்பம் இவற்றிற்குக் காரணமான குணம்.

சிகிச்சைக்குக் கட்டுப்படாது. ஆகவே உரிய நேரத்தில் இரவு வேளையில் உடல்நிலைக்குத் தக்கபடி உறங்க வேண்டும்.

வழக்கத்திற்கு மாறாகக் கண்விழித்தால் காலையில் உணவு உண்ணுவதற்குமுன் இரவில் தூங்கவேண்டிய நேரத்தின் பாதி யளவு உறங்கலாம்.

பால், கரும்புச்சாறு, மாமிச ரசம், நீர்ப்பாங்கான இடத்தில் வாழும் பிராணிகள், நீர் வாழும் பிராணிகள் இவற்றின் மாமிசம், வெல்லம், மாவு இவற்றால் செய்யப்பட்ட பொருட்கள், அரிசிஉணவு, போதைப் பொருட்கள், உளுந்து, சிறிதளவு பாலில் அதிகம் மோர் சேர்த்து பக்குவம் செய்யப்படும் ஒரு வகைத் தயிர், எருமைத்தயிர், எண்ணெய் குளித்தல், உடற்பூச்சு, 'சிரோவஸ்தி' என்னும் நீராடுதல்', தலையில் எண்ணெய் நிரப்பும் சிகிச்சை, காதுகளில் எண்ணெய் நிரப்புதல், கண்களுக்கு எண்ணெய் கட்டுதல், தலை, முகம் இரண்டிலும் வாசனைப் பொருட்களைப் பூசுதல், தென்றல் காற்றில் மணம் வீசும் இடத்தில் இன்பம் பயக்கும் படுக்கையில் படுத்தல், நோயாளியின் மனமறிந்து நடக்கும் வேலைக்காரர்களால் உடலுக்கு இன்பம் தரும்படி பிடித்து விடுதல் [1]ஜீவனீய கணத்தினால் காய்ச்சிய நெய், பால் பருகுதல், மனதிற்கு இனிய மனைவியின் கொடி போன்ற கரங்களைத் தழுவிக் கொள்ளுதல், செய்வன திருந்தச் செய்து அமைதியுடனிருத்தல், மனதிற்கு இயைந்த விஷயங்கள் இவை எல்லாம் குறைந்த உறக்கமுள்ளவனுக்குப் பூரண உறக்க இன்பத்தை அளிக்கவல்லன. (59–65)

பிரம்மசர்யத்தில் கருத்து வைத்துச் சிற்றின்பத்தில் விருப்பமற்ற மனமுடையவன், மனமகிழ்ச்சியினால் அமைதியுற்றவன் இவர்களுக்கு உறக்கம், காலம் தவறாது தானே வந்துவிடும்.

அளவுக்கு மீறி உறங்குபவன் மேற் கூறியவற்றை விலக்க வேண்டும்.

உறக்கம் ஏழு வகைப்படும்.

---

1. ஜீவனீய கணம்—ஜீவகம், ரிஷபகம், மேதா, மகாமேதா, பயஸ்யா, க்ஷீரகாகோலி — இவற்றிற்கு மற்றமொழிகளிலும் இதே பெயர்கள் வழங்கப்படுகின்றன.

11. உறக்க வகை

1. இயற்கை 2. நோய் 3. உள்ளம் 4. உடல் இவற்றின் துன்பங்கள் 5. கபத்தின் காரணமாக உணர்வை அழிக்கும் நாடிகள் அடைபடுதல், 6. எதிர்பாராத காரணங்கள் 7. மிகுதியான தமோ குணம் என ஏழுவகை காரணங்களைக் கொண்டு உறக்கமும் ஏழு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. (66—68)

12. புணர்ச்சிக்குத் தகுதியற்றவர்கள்

மாதவிடாய் உள்ளவள், மனதிற்குப் பிரியமில்லாதவள், அருவருப்பான செயல்களைச் செய்கிறவள், கெட்டுப்போய் சுருங்கிய மர்ம ஸ்தானத்துடன் கூடியவள், பருத்தவள், இளைத்தவள், சூலுற்றவள், ஈன்றவள், நிமிர்ந்து நேர்முகமாக இல்லாதவள், விகாரமான உடலமைப்புள்ளவள், விலைமாது, மலடி, நோயுற்ற பெண்குறியுடையவள், மனித இனத்தைச் சேராத பெண் இனம், பிறர்பெண்டிர், குறிப்பாக வயதில் முதிர்ந்தவள், குலத்தில் உயர்ந்தவள், ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவள், ஆசான், நண்பன், உறவினன், பிணியாளன் இவர்களின் மனைவி, பிரம்மசரிய விரதம் பூண்டவள் என இப்பெண்மணிகள் புணரத் தகாதவர்கள் எனக் கொள்ள வேண்டும்.

13. புணரத் தகாத இடம்

ஆலயம், முச்சந்தி, நாற்சந்தி, பூங்கா, இடுகாடு, தேவதைகள் வசிக்குமிடம், நீர் நிலை, மூலிகைத் தோட்டம், அந்தணர், ஆசான், தேவர், அரசர் இவர்களின் இருப்பிடங்கள், மாட்டுத் தொழுவம், இவ்விடங்கள் புணரத் தகாத இடங்களாகும்.

14. புணரத் தகாத காலம்

பகல், விடியற்காலே, மதியம், நள்ளிரவு (சதுர்த்தி, அஷ்டமி, பௌர்ணமி, அமாவாசை) இந்தப் பருவ நாட்களில் புணர்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். பெண்குறி தவிர மற்ற தகாத உறுப்புகளில் புணர்ச்சி செய்யக்கூடாது. தாகம் உள்ளவளுடனும், விருப்பமில்லாதவளுடனும் சேரக்கூடாது. (69)

குறிப்பாக புணர்ச்சியில் அதிகம் ஈடுபாடுள்ளவள், சூலுற்றவள், ஈன்றவள், மாதவிடாய் தோன்றியவள், சுருங்கிய அல்குல் உடையவள் என இவ்வித நங்கையருடன் விபரிதமானமுறையில்

வேறு உறுப்புகளில் முறைக்கு மாறாகப் புணர்வதும் கூடாது. புணரும்போது தலையில் அடித்துக் கொள்ளுதல், புணர்ச்சியில் வெளிவரும் விந்துவைத் தடுத்தல், இவைகளைத் தவிர்க்க வேண்டும். மனமும் உடலும் தளர்ச்சியடையாதவரைப் புணர லாம். அதற்கு மேல் புணர்வது நன்றன்று. இதைப்பற்றிய ஒரு செய்யுள் உண்டு. ''நம்பிக்கையுடன் தெளிந்த மனத்தவனாய், தனிமையில் புணரவேண்டியவளிடம் விருப்பம் கொண்டு நல் லுறுப்புகளுடன் திகழும் மனிதன், மணம்வீசும் மாலைகள் அணிந்து, சிறுநீர், மலம் நீங்கி, உடல் உறுப்புகளை அமைத்துக் கொண்டு நல்ல நிலையில் உணவு உட்கொண்டும், அதிகம் உண்ணாமலும், புணருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே ஆண்மையை வளர்க்கக்கூடிய உணவுகளை உட்கொண்டு, பெண் களுக்குரிய குணங்களில் மகிழ்ச்சியடைந்து மேற்கண்ட குணங் கள் நிரம்பிய பெண்களுடன் புணரலாம்'' என்பது இதன் கருத்து. *(70—74)*

வஸந்த ருதுவிலும் — *(சித்திரை வைகாசி மாதங்களில்)*
சரத்ருதுவிலும் — *(ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்)*

இரண்டு நாட்கள் இடைவெளிக்குப்பின் புணர வேண்டும். க்ரீஷ்மருதுவிலும் — *(ஆனி, ஆடி மாதங்கள்)* மழைக் காலத்திலும் *(ஆவணி, புரட்டாசி மாதங்கள்)*

15 நாட்கள் இடைவெளிக்குப்பின் புணரவேண்டும்.
ஹேமந்த ருதுவிலும் — *(மார்கழி, தை மாதங்கள்)*
சிசிர ருதுவிலும் — *(மாசி, பங்குனி மாதங்கள்)*

பலமுள்ளவர்கள் தன் விருப்பப்படி மனநிறைவு உண்டா கும் அளவுக்கு புணர்ச்சியில் ஈடுபடலாம்.

15. புணர்ச்சிக்குப்பின் செய்ய வேண்டியவை

புணர்ச்சியினால் களைப்புற்றவன், நீராடிவிட்டு சந்தனம், போன்ற மணம்வீசும் பொருளைப் பூசிக் கொண்டு, காற்றாட நிலாவில், இருந்து புலால், மது, பால், மாமிச ரசம், தயி ருடன் சர்க்கரை கலந்து செய்த ரஸாலா என்ற பானம் கற்கண்டினால் செய்த தின்பண்டங்கள் இவற்றை உட்கொண்டு குளிர்ந்த நீர் பருகிப் பிறகு தூங்க வேண்டும்.

புணர்ச்சியினால், நல்ல வலிவுள்ளவர்களுக்கும் உடல் பலமும் ஆண்மை பலமும் தளர்ந்து காணப்படும். மேற்கூறிய (நீராடுதல், ஸத்துள்ள உணவு, பானங்கள் பருகுதல் முதலிய) முறையைப் பின்பற்றுவதனால் உடல் பலம்பெற்று விந்து வளரப் பெற்று ஆண்மை பலம்பெற்று, விளங்குவார்கள். அப்படியின்றி அறிவின்மையால் இம்முறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு விந்து குறைந்து, பார்வையும், உடல் மினுமினுப்பும், ஓஜஸ்ஸின் பலம், ஆயுள் இவை அழிவதுடன் ஆண்குறியில் நோயும் தோன்றும்.

ஆண் கீழாகவும், பெண் மேலாகவும் இருந்து புணர்வதாலோ அல்லது விந்துவின் வேகத்தைத் தடுப்பதாலோ, விரை வீக்கம், சர்க்கரை எனும் நீரிழிவு, கல்லடைப்பு, நீரடைப்பு நோய் ஆகியவைகள் தோன்றுகின்றன.

புணர்ச்சி வேளையில் மாதர்களின் தலை முதலிய உறுப்புக்களில் அடிப்பதனால் பார்வைக்குறைவு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

16. அதிகப் புணர்ச்சியினால் வரும் தீமைகள்

தலை சுற்றல், புலன்களின் தளர்ச்சி, தொடையில் வலுவின்மை, பலம், தாதுக்கள், புலன்கள் இவற்றின் அழிவு போன்ற தீமைகள் அதிகம் புணருவதால் ஏற்படுகின்றன. குறிப்பாக அகால மரணமும் ஏற்படும். நீண்ட ஆயுளை விரும்புகிறவன் 16 வயதிற்கு முன்பும் 70 வயதிற்குப் பின்பும் மாதர்களுடன் சேர்க்கை வைத்துக் கொள்ளக் கூடாது. 16 வயதுக்கு முன்பு வளர்ச்சியடையாத தாதுக்களை உடையவன் பெண் சேர்க்கையினால் குறைவான நீர் உள்ள நீர் நிலையின் நீர் கதிரவனின் கிரணங்களால் வற்றிப் போவது போல் உலர்ந்து விடுகிறான்.

உலர்ந்த, ஈரப்பசையற்ற, பூச்சிகள் அரித்த, உளுத்துப் போன மரம் கையினால் தொட்டவுடன் சிதறுவது போல் 70 வயதிற்கு மேற்பட்ட முதியவன் பெண்ணுடன் கூடி, அழிந்து விடுகிறான்.

உடலின் மிக்க உயர்ந்த சாரமான பொருள் சுக்லம் என்பது. அது உணவுச் சத்தைவிட மேலானது. ஆகையினால் புலன்களை அடக்கி விந்துவை நன்கு காக்க வேண்டும். அதனால் சிறந்த உடலமைப்புடன் கூடி நீண்ட ஆயுள் பெற்ற பிள்ளைப் பேறு கிட்டும்.

ஆகையினால் தற்கால இன்பத்தில் அதிகம் ஈடுபடாமல் விழிப்புடன் இருந்து முடிவில் நிலையான இன்பம் பயக்கக் கூடிய பொருட்களையே நாட வேண்டும். இம்முறையே உடலுக்கு ஏற்ற தாகும்.

உடல் காக்கும் முறை தவறிப் பிழை செய்தல், உடலுக்கு ஒவ்வாத புலப் பொருள்களின் சேர்க்கை, கால மாறுபாடு இம் மூன்றும், நன்மை பயக்கும் உணவை உட்கொண்ட போதிலும், மனிதனுக்கு நோய்களைத் தோற்றுவிக்கின்றன. (75—86)

உடலுக்கு ஒவ்வாத உணவை உட்கொள்பவன் வெவ்வேறு நிலைகளில் உள்ள தாதுக்கள், வாதம் முதலான தோஷங்களின் சீற்றத்தைத் தடுக்கின்றபொழுது, தோஷங்கள் அவனை உடனே துன்புறுத்துவதில்லை.

எல்லா வகையான சிகிச்சைகளும், எல்லா நோய்களையும், எப்பொழுதும் போக்குகின்றன என்று உறுதியாகக் கூற முடியாது.

உடலுக்குப் பொருந்தாத எல்லா வகையான பொருட்களும் ஒரே விதமான தோஷங்களை உடையவை என்றும் கூற முடியாது. எல்லா தோஷங்களுமே சம வலிவு கொண்டவை என்றோ உடல்கள் எல்லாம் நோய்களைத் தாங்கும் வலிமை பெற்றவை என்றோ முடிவு கட்ட இயலாது.

எந்தப் பொருள் யாருக்குத் தீமை விளைவிக்கிறதோ அதே பொருள் அவனுக்கு ஒவ்வாதது எனக் கொள்ள வேண்டும்.

இணையான கெட்ட தாதுக்களாலே வளர்க்கப்பட்ட அபத்தியமானது மிக்க அபத்தியமாகிறது.

உடலுக்கு ஒவ்வாத பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எல்லா வகையான மலங்களும், விரைவில் நோயைத் தோற்றுவிப்பதில்லை. அப்பொழுது ஒன்றுக்கொன்று இணையில்லாத தூஷ்யம் முதலானவை இந்த மலங்கள் சீற்றமடைவதைத் தடுத்து விடுகின்றன.

எல்லா வகையான அபத்தியங்களும் எப்பொழுதும், எல்லா வகையான தோஷங்களையும் தோற்றுவிப்பதில்லை. எல்லா அபத்தியங்களும், ஒரே விதமான தோஷத்தைக் கொண்டிருப்பதில்லை.

மற்றும் எல்லா தோஷங்களுமே, ஒரே விதமான வலிவைக் கொண்டிருப்பதில்லை. மேலும் எல்லா உடல்களும், நோய்

களைத் தாங்கும் சக்தி பெற்றிருப்பதில்லை. அந்த அபத்தியம் சமமான த்ரவ்யங்கள் முதலானவற்றால் வளர்ந்து மிக்க அதிக அபத்தியமாக ஆகிவிடுகிறது.

பல காரணங்களால் ஒன்றுக்கொன்று எதிரிடையான இதே தோஷங்கள், ஒருங்கே சேர்ந்து வலிவு பெற்று நீண்ட நேரம் இருக்கின்றன.

இந்த தோஷங்கள் அனைத்தும் ஒரு சிறு காரணத்தைக் கொண்டு ஒரே சமயத்தில் சீற்றமடைகின்றன. இதயம் முத லான உயிரின் இருப்பிடங்களை தமக்குச் சார்பிடமாக்கிக் கொள்கின்றன. பிறகு ஆழமான தாதுக்களில் புகுந்து துவாரங் கள் எங்கும் பரவி தீமைகளின் விளைவிடமான உடலில் வெகு காலமாக இருந்தாலும் உடனே நோயைத் தோற்றுவிக்கின்றன.

சிலரிடம் நன்மை பயக்காத பொருள்களை உபயோகப் படுத்துவதன் பழக்கமுள்ள காரணத்தால் தீமை தரும் பொருட் களும் நன்மை அளிப்பதாகி விடுகின்றன.

இவர்களிடமுள்ள செயல், காற்று, வெயில் முதலான வற்றால் தோஷங்கள் நீங்கி விடுகின்றன.

வெவ்வேறு உணவு, வயிறு, உடலுக்கு ஏற்ற தன்மை, இயல்பு, இவையுள்ளவர்களிடமும் ஒரே சமயத்தில் வெவ்வேறு வகையான காற்று, நீர் முதலியவற்றைப் பயன்படுத்தினால் ஒரே வகையான நோய் உண்டாகும். (87—94)

கதிரவன் முதலான ஒன்பது கிரகங்களின் கோளாறுகளுக்கு ஏற்ப, காற்று, நீர், நிலம், காலம் இவற்றிற்குக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

நிலம், ஆகாயம், தேவர்உலகம், இங்குத் தோன்றும் [1]உத்பாதங்கள் கோளாறுகளுக்குக் காரணமாகின்றன.

மனித சமுதாயத்தின் முன்வினைகளே எல்லாக் கோளாறு களுக்கும் காரணம் ஆகும். (95)

17. கெட்ட காற்றின் இலக்கணம்

இவற்றைக் கபம், கொழுப்பு, பசை இளகச் செய்தல், அசை வற்று இருக்கச் செய்தல், மிகுந்த உஷ்ணம் அதிக குளிர்ச்சி,

---

1. உத்பாதங்கள்—இயற்கையாகத் தோன்றும் ஆபத்துக்கள்.

சுழற்சி, பயங்கரமான ஒலி, வறட்சி, பருவக் காலங்களுக்கு எதிரிடையாதல், வலிமையுடன் வீசுதல், எதிர்காற்றாலே திசை மாறித் தடைபட்டு மெல்ல வீசுதல், தூசி, ஆவி, புகை, நஞ்சு இவற்றுடன் கலந்த காற்றை கெட்ட காற்று என்கிறோம்.

18. கெட்ட நீரின் இலக்கணம்

அசுத்தமான தகாத இடங்களிலிருந்து தோன்றும் கெட்ட நீரில் சுவை, நிறம் முதலானவை கோளாறடைகின்றன. பறவைகள் அந்நீரை விட்டு வெளியேறுகின்றன. புழு பூச்சிகள் அதில் தோன்றுகின்றன. நீர்வாழும் இனங்கள் அதில் அழிகின்றன.

19. கெட்ட இடத்தின் இலக்கணம்

ஈக்கள், எலிகள், அரவங்கள் போன்றவைகளால் துன்பங்கள், கெட்ட இடத்தில் அதிகரிக்கும். உடலுக்குத் தீமை விளைவிக்கும் உணவுப் பொருட்கள் அங்குத் தோன்றும். அறம் அங்குக் கெடுகிறது. மூலிகைகள் அழிகின்றன.

20. கெட்ட காலத்தின் இலக்கணம்

இயற்கைக்கு மாறுன, அதிகமான அல்லது குறைந்த குணங்களுடையது காலம். இந்த குணங்கள் முறையே ஒன்றைவிட ஒன்று தவிர்க்க முடியாதவைகளாக ஆகி துன்பம் விளைவிக்கின்றன.

இவ்வாறு நீர், நிலம், காற்று ஆகியவை அதன் இயற்கைக்கு மாறான நிலையையடைந்து பயங்கரமாகச் செயல்படும்பொழுது [1]ஐவகை சிகிச்சைகளையும் ரஸாயனத்தையும் பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்ட காற்று, முதலான கொந்தளிப்புகள் தோன்றும் காலங்களில் முன்பே சேகரித்து வைத்துள்ள மருந்துகளால் உடலைப் பேணுவது நலமாகும். பிரம்மசர்யம், கருணை, ஈகை, நல்லொழுக்கத்தில் ஈடுபாடு, பொறுமை, உண்மையான ஒழுக்கம், மகான்களின் சரிதம்கேட்டல், புலனடக்கமுள்ள தேவர்கள் முனிவர்களின் வழிபாடு, இயற்கை மாறுதலடையாத வேறிடம் சேருதல், நல்லோரிணக்கம், தெய்வ வழிபாடு, நற் செய்கைகள் ஆகியவை இந்நிலையில் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களாகும்.

---

1. ஐவகை சிகிச்சை : வாந்தி பேதி, எண்ணெய் வஸ்தி, கஷாயவஸ்தி, சிரோ விரேசனம் என்ற மூக்கில் மருந்து இடுதல் மூலம் தோஷங்களை அகற்றுதல்.

ஒரு சில பருவ காலங்களில் அவற்றிற்கு எதிரிடைப் பருவ குணங்கள் தோன்றினால் அவ்விதம் தோன்றிய பருவங்களுக்குரிய முறைகளையே பின்பற்ற வேண்டும்.

உஷ்ணம், குளிர்ச்சி என்ற இரண்டுக்கும் ஏற்ற முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது பொருள். உஷ்ணம், குளிர்ச்சி, மழை முதலிய காலங்களில் உண்டாகும் தோஷங்களுக்கு தகுந்த சிகிச்சை முறைகளைச் செய்வதே ருதுசர்யை எனக் கூறப்படுகிறது. எனவேதான் ருதுசர்யா எனும் அத்தியாயத்தில் ஹேமந்தம், சிசிரம் என்ற இவ்விரண்டு பருவங்களுக்கும் ஒரே வகையான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. (96—105)

பழக்க வழக்கங்களைப் பொறுத்துத்தான் எல்லாப் பிராணிகளுடைய ஆயுளும் அமைகின்றன. ஆயுளின் நிறைவும் குறைவும் தெய்வத்தினிடமும், மனித முயற்சியிலும்தான் அடங்கியுள்ளன.

முற்பிறவியின் வினையே தெய்வம் என்றும், இப்பிறவியில் செய்வது மனித முயற்சி என்றும் சொல்லப்படுகிறது. வினைகள் உயர்ந்தது, நடுத்தரமானது, தாழ்ந்தது என மூவகைப்படும்.

உயர்ந்த முன்வினை, உயர்வுள்ள மனித முயற்சி இரண்டின் சேர்க்கை நீண்ட இன்பமயமான ஆயுளுக்குக் காரணமாகிறது.

தாழ்ந்த முன்வினை, தாழ்ந்த மனித முயற்சி இரண்டின் சேர்க்கை ஆயுட்குறைவுக்கும் துன்பத்திற்கும் காரணமாகும். இவற்றின் நடுநிலை, நடுநிலை ஆயுளுக்குக் காரணமாகிறது. இவற்றின் ஏற்றக்குறைவான சேர்க்கை நடுத்தரமான அல்லது குறைந்த ஆயுளுக்குக் காரணமாகிறது.

வலிவற்ற முன்வினை மனித முயற்சியாலும், வலிவிழந்த மனித முயற்சி வலிவுள்ள முன்வினையாலும் அழிந்து விடுகின்றன.

சிலர் முன்வினையின் வலிவைக் கொண்டு ஆயுளைத் தீர்மானிக்கிறார்கள்.

ஒரு சிறுசெயலும் அதன் (விபாக) உரிய காலத்தில் பெரும் பயனை அளிக்கிறது.

சில செயல்கள் அதன் முடிவைக் கொண்டு தீர்மானிக்க முடியாதவைகளாகக் கண்ணால் பார்த்தல், அநுமானம், யுக்தி

என்ற முறைகளால் இம்மாறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டும். (106—111)

21. இறப்பின் வகை

இறப்பு இருவகைப்படும். அது காலம், அகாலம் என்பது. எனவே ஆயுர் வேதத்தில் ஆயுள் வளர்ச்சிக்கும் அதன் குறைவிற்கும் தேவையான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. [அதர்வ வேதமறிந்தவர்கள் மரணம் 101 வகை எனக் கூறுகின்றனர். அவற்றில் ஒன்று கால மரணம், மற்றவை நூறும் அகால மரணங்கள். எதிர்பாராத வகைகளில் தோன்றுபவை.] ச்யேனம் முதலான மாந்திரிக வேள்வியினால் எதிரிகள் அழிக்கப்பட்டதை சாத்திரங்களில் காண்கிறோம். இதனால் அகால மரணம் என்று ஒன்று உண்டு என்று அறிய முடிகிறது. அவ்வாறே தீர்க்க சிரவஸ் என்ற ஸோம யாகம் தற்கொலை செய்து கொள்ளப் பயன்படுத்தப்பட்டதாக அறிகிறோம்.

[1]மித்திர விந்தா என்ற வேள்வியை ஆயுளை வளர்த்துக் கொள்ள விரும்புபவன் கடை பிடிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. எவ்வகையிலும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறது [2]ஸ்மிருதி நூல். புத்த மதத்தைத் தழுவியவர்கள் இறப்பை நால்வகை எனக் கூறுகின்றனர். (112—116)

ஆயுள் இவ்வளவுதான் என முடிவு செய்த ஒருவன், தீங்கிழைக்கும் உணவுப் பொருட்களை உண்டால் நிச்சயம் நோயுள்ளவனாக ஆகிறான்.

ஆயுள் இவ்வளவுதான் என முடிவு செய்யாதவன் தீங்கிழைக்கும் பொருட்களை உண்டால் காலத்திற்கு முன்பே இறந்து விடுகிறான்.

அகாலத்தில் ஒருவன் ஆயுதங்களினால் தாக்கப்பட்டு இறப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இப்படிப்பட்ட அகால மரணம் என்பது ஒன்று இல்லாவிடில், இங்குமங்கும் ஓடித் திரியும், சீற்றமடைந்த யானைகள், குதிரைகள், இவற்றின் தாக்குதல், கெட்ட எதிரிகள், கெட்ட காற்றுகள், துணிவான செயல்கள், தீமை விளைவிக்கும் பொருட்கள் இவற்றிலிருந்து தப்புவதற்கு முக்காலமுணர்ந்த முனிவர்கள் வழிகளை வகுத்திருப்பார்களா? தெய்வ வழிபாடுகளையும், ரசாயன சிகிச்சை முறைகளையும் கூறியிருப்பார்களா ? அதனால் அகால மரணம் உண்டு என்பது உறுதி.

---

1. மித்ர விந்தா — ஒரு வகை வேள்வி.
2. ஸ்மிருதி — தர்ம சாத்திரம், மனு முதலியவை.

மேலும் அகால மரணம் என்பது இல்லாவிடில் முனிவர்கள் தெய்வ வழிபாடு, ரசாயன சிகிச்சை இவற்றைப் பின்பற்றியிருக்க் மாட்டார்கள் அல்லவா?

மேலும் அவர்கள் விரும்பும் நீண்ட ஆயுளையும் பெற்றிருக்க மாட்டார்கள். பாம்பு, சிங்கம், யானை போன்ற தீங்கிழைக்கும் பிராணிகளிடமிருந்து அறிஞர்கள் அஞ்சமாட்டார்கள்.

கோட்டை—கொத்தளங்கள் அமைத்துத் தங்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார்களா? எதிரிகளால் தங்களை அழிப்பதற்குச் செய்யப்படும் மாந்திரீக வேள்வி, ஆயுதங்கள் இவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார்களா?

பிறருடைய மனைவியை விரும்புகிறவன் நீண்டகாலம் வாழமாட்டான் என்னும் ஆன்றோர்களின் சொல் வீணாகுமன்றோ.

வாசுகி போன்ற பெரும் பாம்புகளால் தீண்டப்பட்ட ஒருவன் மயக்கமடைகிறான். மந்திரங்கள் சொல்லி அழைத்தவுடன் பாம்புகள் வந்து அவன் உடலில் உள்ள நஞ்சை மறுபடியும் உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன என்ற பழக்கம் இருந்து வருகிறது. அகால மரணம் என்பது இல்லாவிடில் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டு பாம்புகள் வந்திருக்குமோ? மந்திரங்களால்தான் பாம்புகளை அழைத்திருப்பார்களா?

[1]ஸந்யாசம், [2]ரோகினி எனும் கொடிய நோயுற்றவனுக்குச் சிகிச்சை செய்யாவிடில் உடனே இறந்துவிடுவான் என்றோ, சிகிச்சை செய்வதால் பிழைத்துவிடுவான் என்றோ முடிவாகக் கூறும் நிலையற்ற நிலைமை ஏற்பட்டிருக்காதல்லவா?

(117—123)

ஒவ்வொரு நாளும் போரில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒருவர் ஒருவரைக் கொன்று மடிவதைக் காண்கிறோம். அதேபோல் நன்னடத்தையுடையவர்கள் இறப்பதையும் காண்கிறோம். அவர்களின் மரணத்தை ஒரேவிதமானது என்று கூறமுடியுமா?

---

1. ஸந்யாஸம் - தலைக்குள் பித்தம் அல்லது உஷ்ணம் அதிகரித்து மூர்ச்சையிழந்த நிலை.
2. ரோகிணி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் ஒரு விதத் தொண்டை நோய்.

அகால மரணம் என்பது ஒன்று இல்லாவிடில் இந்திரன் முதலானவர்கள் எதிரிகளை ஆயுதங்களால் கொன்றிருக்க மாட்டார்கள். அச்வினி தேவதைகள் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்து உயிர்ப்பித்திருக்க மாட்டார்கள்.

சூளையிலிட்டு சுடப்பட்ட மண்குடமும், சுடப்படாத மண்குடமும், முறையே நீண்டநாள் இருப்பதற்கோ, அல்லது குறைந்த காலத்தில் அழிவதற்கோ அவற்றைக் காக்கும் முறை தான் காரணமாகிறது. சித்திரத்தில் தீட்டப்பட்ட பொருட்களும் அதே நிலைதான்.

இவ்விதம் அகால மரணம், உலகிலும் சாத்திரங்களிலும், மிகத் தெளிவாகக் காணப்படுவதால் அறிவாளி இதைப் பற்றி வினா எழுப்புவதேன்?

நோயாளிக்குச் சிறந்த மருந்துடனும், பணியாட்களுடனும் சிறந்த மருத்துவர்கள் சிகிச்சை செய்த பிறகும் ஏற்படும் இறப்பு இயற்கை மரணம் என்றும், மற்றவை அகால மரணம் என்றும் கூறப்படுகிறது. (124—128)

ஒழுங்கான முறையில் உபயோகத்திலுள்ள, நன்கு காக்கப்பட்ட வண்டி மெள்ள மெள்ள அழிவதுபோல், நன்னடத்தையாலும், உணவு வகையாலும் நன்கு காக்கப்பட்ட புலனடக்கமுள்ளவனின் ஆயுளும் மெள்ள மெள்ள முறையே அழிந்து விடுகிறது. மற்றவர்களுக்கு ஏற்படும் இறப்பு அகால மரணமாகும்.

சுத்தமான எண்ணெயுடன் கூடிய விளக்கு, பூச்சிகள். காற்று இவற்றால் அணைக்கப்படாமல் நன்றாக ஒளி வீசுகிறது. விளக்கில் உள்ள எண்ணெய் தீர்ந்துவிட்டால் தானே அது அணைந்து விடுகிறது. இதே விளக்கு எண்ணெய் நிறைந்திருந்த போதிலும் அழுக்கு, பூச்சி, காற்று இவற்றின் சேர்க்கையால் நடுவில் அணைந்துவிடுகிறது. இதேபோல் மனிதனுடைய ஆயுளும், நன்மை பயக்கும் உணவு வகை, நன்னடத்தை இவற்றால் உரிய காலத்தில் தான் அழிகிறது. நல்ல விதத்தில் உடலைக் காக்காவிடில் விரைவில் அது அழிந்து விடுகிறது. ஆகையினால் மற்ற எல்லாவற்றையும் விட்டு விட்டு உடலையே பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வுடல் இல்லையென்றால் அவனுக்கு உலகில் ஒன்றுமேயில்லை.

நகரப் பாதுகாப்பாளி தன் நகரத்தையும், வண்டிக்குச் சொந்தக்காரன் தன் வண்டியையும் பாதுகாப்பதுபோல அறிவாளி தன் உடலைக் காக்கும் விஷயத்தில் கவனமாயிருக்க வேண்டும்.

உணவைச் சமைப்பது, உணவுடன் சேர்க்கும் பொருள்கள், அவற்றின் இயற்கை, குணங்கள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து நல்லவற்றையே உட்கொள்ள வேண்டும். உணவினாலல்லவா உடல் உண்டாகிறது.

அச்சம், வெட்கம், கட்டுப்பாடு, பேராசை, மகிழ்ச்சி, வருத்தம், இவற்றிற்கு அடிமையாகி, சிறுநீர், மலம் முதலிய இயற்கை வேகங்களை ஒருபொழுதும் கட்டுப்படுத்தல் கூடாது. அப்படி கட்டுப்படுத்துவது எல்லாவிதத் துன்பங்களுக்கும் நோய்களுக்கும் காரணமாகிறது.

நன்மை பயக்கும் பொருட்களை இடைவிடாமல் பயன் படுத்துகிறவர்களுக்கும், பலம், உற்சாகம், புலன்களின் வலிமை, நீண்ட ஆயுள் உள்ளவர்களுக்கும் காலமில்லாக்காலத்தில் இறப்பு ஏற்படுவதில்லை.

உடலுக்கு ஒவ்வாத உணவு வகைகளை விலக்கி, சத்துணவைப் புசித்த நல்லவர்களுக்கும் நோய் ஏற்படுமானால், தெய்வக் கோளாறே காரணமென எண்ணி அதை அவர்கள் பொருட் படுத்த மாட்டார்கள்.

தனக்கு ஏற்பட்ட நோயின் காரணத்தை எவ்விதத்திலும் போக்கிக் கொள்ள முடியாத நிலையில் அறிவாளி வருந்தக் கூடாது.

நன்மை பயக்கும் உணவு வகைகளைப் பயன்படுத்துகிற வன், நற்பழக்கம், நல்லொழுக்கமுள்ளவன், இம்மையிலும் மறுமையிலும் நலனை விரும்புகிறவன் ஆகியோருடைய வாழ்வு அமுதத்திற்கு ஒப்பானது.

சிற்றின்பத்தில் திருப்தியடையாது பேராசை கொண்டு, விருப்பத்திற்கு வசப்பட்டு நல்வழியைத் துறந்தவன், தன் கெட்ட வழியை வளர்த்துக் கொண்டு வீணாக வாழ்கிறான்.

ஆகையினால் உடலில் உள்ளதும் அருகேயுள்ளதுமான ஆசை, கோபம் முதலான எதிரிகளை வென்று நீண்ட ஆயுளை விரும்பும் அறிவாளி, விட வேண்டிய பொருள்களை விட்டுவிட வேண்டும்.

நீண்ட ஆயுளை விரும்பும் அறிவாளி, ஆத்ரேய முனிவரின் சொல்லை நினைவில் கொண்டு எக்காலத்திலும் தீய பயனைப் பயக்கும் செயலை விட்டொழிக்க வேண்டும்.

(129—142)

இத்துடன் அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில் 'விருத்தான்ன விஞ்ஞாநீயம்' எனும் ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

*அன்னபான விதி

'அன்னபான விதி' என்னும் அத்தியாயத்தை ஆத்ரேயர் முதலான மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. நீண்ட ஆயுளுக்குக் காரணம்

நீண்ட ஆயுள் நிலைப்பதற்கு முக்கியக் காரணமான, முறையான உணவு, குடிநீர் முறைகளையும், புலன்களுக்கு இதமான புலப்பொருட்களையும் கூறுகிறோம்.

ஓஜஸ் எனும் உடலிலுள்ள ஏழு தாதுக்களின் சாரம், ஒளி, தாதுக்கள், புலன்கள், பலம், மகிழ்ச்சி, வளர்ச்சி, சமயோசித அறிவு, இன்ப வாழ்வு இவற்றிற்கு உணவு, குடிநீர் முறை காரணமாகின்றன.

இம்மாதிரி முறையான எரிபொருள்களால்தான் இவ்வுடல் நிலைத்திருப்பதற்கு அடிப்படைக் காரணமான சடராக்கினி நிலைத்திருக்கிறது.

இயற்கை, சேர்க்கை, பக்குவம் செய்யும் முறை, அளவு, இடம், காலம், பயன்படுத்துதல் என்ற ஏழுவித உணவு பயன்படுத்தும் முறைகள் நோயற்ற வாழ்விற்கும், நோயுற்ற வாழ்விற்கும் காரணமாவதால் புலனடக்கம் உள்ளவன் அவற்றை நன்கு ஆராய்ந்து நலம் தருவதையே பின்பற்ற வேண்டும்.

2. இயற்கை, சேர்க்கை முதலியவற்றின் விளக்கம்

(அ) இயற்கை:- மழைநீர், செந்நிற அரிசி, அறுபது நாளில் விளையும் அரிசி, பயிறு, மானிறைச்சி, சிறு பறவைகளின் மாமிசம் இவை இலகு குணமுள்ளவை.

---

*அன்னபான விதி: உணவு, குடிநீர் பருகும் முறைகள். நீண்ட ஆயுள் நிலைப்பதற்கு முக்கிய காரணங்கள். அதாவது முறையாக உபயோகிக்க வேண்டிய உணவு, குடிநீர் வகைகளும் புலன்களுக்கு ஹிதமான பொருள்களும் விவரித்துக் கூறப்படுகின்றன.

பால், நெய், கரும்பு, நெல், உளுந்து, நீர்ப்பாங்கான இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிசம் இவை குரு குண முள்ளவை.

லகு குணமுள்ள பொருட்கள், சேர்க்கை முதலிய சிறப்பினால் குரு குணம் உள்ளவைகளாகவும், குரு குணமுள்ள பொருட்கள், இலகு குணமுள்ளவைகளாகவும் மாறுதலை அடைகின்றன. *(3—6)*

(ஆ) சேர்க்கை:- இரண்டு அல்லது பல பொருட்களின், கலப்பு சேர்க்கையெனப்படும். இந்தச் சேர்க்கைப் பொருட்கள் தமது தனித்தன்மையை விட்டு விட்டு சிறப்பான செயல்களைச் செய்கின்றன.

(இ) பக்குவம் செய்யும் முறை

நீர், நெருப்பின் சேர்க்கை, சுத்தப்படுத்துதல், கடைதல், இடம், காலம், ஊறவைத்தல், பாத்திரங்கள் ஆகியவற்றால் பொருட்களில் ஏற்படும் குணமாற்றம் ஸம்ஸ்காரமாகும்.

(ஈ) அளவு

இது இரண்டு வகைப்படும். ஒன்று பொருட்களின் கூட்டளவு, மற்றொன்று பொருட்களின் தனி அளவு.

(உ) இடம்

பொருட்கள் தோன்றுமிடம், அவற்றைப் பயன்படுத்துபவன் தோன்றிய இடம் என இது இரண்டு வகைப்படும். பயன் படுத்துபவன் நோயுள்ளவனா நோயற்றவனா என்பதையும், அவனுடைய இயற்கை உடல்நிலையையும் சோதிக்க வேண்டும். *(7—10)*

(ஊ) காலம்

பருவம், நோய், சீரணம், அசீரணம் இவற்றின் நிலையைப் பொறுத்ததாகும்.

(எ) பயன்படுத்துதல்

அசீரணத்தில் உணவு உட்கொண்டால் முன் உண்ட உணவின் மாறுபடாத (சீரணமாகாத) ரசம், பின்பு உண்ட உணவின் ரசம், இரண்டும் சேர்ந்து விரைவில் எல்லா தோஷங்களையும் சீற்றமடையச் செய்கின்றன.

3. உண்பதற்கேற்ற காலம்

முன் உண்ட உணவு சீரணித்த பின்னும், வாதம் முதலிய தோஷங்கள் தமது இடங்களை அடைந்திருக்கும்பொழுதும், வாதம் சரியான நிலையில் இருக்கும்பொழுதும், சிறு நீர், மலம் இவற்றைச் சரியாகக் கழித்த பின்பும், ஏப்பம் சுத்தமான பின்பும், இதயம், உடல் துவாரங்கள், முகம், புலன்கள் இவை தெளிவுற்றிருக்கும் பொழுதும், உடல் இலேசாக இருக்கும்பொழுதும், சடராக்னி நன்கு வளர்ந்திருக்கும் பொழுதும், பசி எடுத்த பின்பும், அருந்தும் உணவு தோஷங்களைச் சீற்றமடையச் செய்யாமல் ஆயுள், வலிவு, நிறம் இவற்றை வளர்க்கின்றது. இவ்வாறு உரிய காலத்தில் உட்கொள்ளும் உணவு உடலில் தோஷங்களைச் சீற்றமடையச் செய்யாமல் ஆயுள், உடல்வலிமை, காந்தி இவைகளை வளர்க்கிறது. இதுதான் உண்ணுவதற்கு உகந்த காலமாகும். *(11—14)*

காலம் தவறி உணவு உட்கொண்டால், வாயு தடைபெற்று விஷ்டப்தம் என்ற அசீரணம் ஏற்படுகிறது. உணவு, நேரம் கழித்துச் சீரணமாகிறது. உடலை இளைக்கச் செய்கிறது. உணவில் அருவருப்பைத் தோற்றுவிக்கிறது.

4. உண்பதற்கு முன் செய்ய வேண்டியவை

நீராடாமலோ, உடையில்லாமலோ, ஒற்றை ஆடை அல்லது அழுக்காடை உடுத்துக்கொண்டோ, இல்லாமலோ ஹோமம், ஜபம் செய்யாமல், தேவதைகள், பித்ருக்கள் இவர்களுக்குப் படைக்காமல் அக்னிக்குஇடுதல், விருந்தாளிகள், குருமார்கள், வீட்டைத் தேடி வந்தவர்கள், நாய், பறவை, சண்டாளர்கள் இவர்களுக்கு அளித்தல், தன்னைச் சேர்ந்தவர்கள், அவர்களைச் சேர்ந்தவர்கள், பறவைகள், தன் பரிவாரங்கள், இவர்களுக்கு அளித்தல் போன்ற செயல்களைச் செய்யாமல் உண்ணக் கூடாது.

சிறந்த இடம், காலம், சாதனங்கள் இவற்றுடன் கூடி, மாலை அணிந்து அலங்கரித்துக் கொண்டு நறுமணம் பூண்டு, கை கால் கழுவி முகம் கழுவி, தனக்கு வேண்டியவர்களுடன் சேர்ந்து அமர்ந்து, ரோமம், ஈ இவற்றால் கெடாத அன்னத்தை தூஷிக்காமல், மறுபடியும் சூடாக்காத, மிகச் சூடற்ற,

காந்தல் இல்லாத, நன்கு பக்குவம் செய்யப்பட்ட உணவை, அமைதியுடன் உண்ண வேண்டும்.

உடலுக்கு ஒவ்வாததும், உணவு கிடைத்த முறை இவைகளை அறியாமலும், ஸந்தி வேளைகளிலும், விடியற்காலையிலும், திறந்த வெளி, வெயில், இருட்டு இவற்றிலும், மரத்தின் கீழேயும், படுக்கையில் அமர்ந்தும், நிமிர்ந்தும், ஆள்காட்டி விரலை ஆட்டிக் கொண்டும், உடைந்த உண்கலத்தில் வைத்தும் உணவருந்தக் கூடாது.

மேற்கூறை இல்லாத இடத்திலமர்ந்து தீய சிந்தனைகளுடன் உணவை தன் எதிரில் உள்ள உயர்ந்த ஆசனத்திலும், கையிலும் வைத்துக் கொண்டும், உணவுள்ள பாத்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டும் சாப்பிடக் கூடாது.

கிழக்கு முகமாய் அமர்ந்து தூய சிந்தனைகளுடன் கூடியவனாய், சுத்தமுள்ளவன், பக்தி உடையவன், பசியற்றவன் தனக்கு ஏற்றவன் ஆகியவர்களால் கொண்டு வரப்பட்ட, நற்பயனை அளிக்கும் உணவை உட்கொள்ள வேண்டும்.

மாமிசம், ஊறுகாய், தின்பண்டங்கள் இவற்றைத் தவிர, மற்ற பொருட்களை ஓர் இரவு தங்க வைத்து உண்ணக்கூடாது.

தயிர், தேன், நெய், நீர், சத்துமாவு, சுக்தம் எனும் பானகம், பாயசம் இவற்றைத் தவிர மற்ற உணவுப் பொருட்களை மீதம் வைக்காமல் சாப்பிடக்கூடாது. எண்ணெய்ப் பசையுள்ளதும் எளிதில் சீரணமாகக்கூடியதும் சூடாயுமுள்ள உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும். தாமதமில்லாமல், மிக வேகமில்லாமல், பேசாமல், சிரிக்காமல், உணவில் மனதைச் செலுத்தி, தம்மை நன்கு கவனித்துக் கொண்டு உணவருந்த வேண்டும்.

(15—19)

எண்ணெய்ப்பசையுள்ள, எளிதில் சீரணிக்கக்கூடிய, சூடான உணவு, சடராக்னியைத் தூண்டி விடுகிறது. வயிற்றைச் சுத்தமாக்குகிறது. தாதுக்களைக் கெடுப்பதில்லை, விரைவில் சீரணிக்கச் செய்கிறது. வாதத்தை நேராக இயங்கச் செய்கிறது.

எண்ணெய்ப் பசையுள்ள உணவு, புலன்களை உறுதிப்படுத்துகிறது. உடலை வளர்க்கிறது. கிழத்தன்மையைப் போக்கு

கிறது. வலிவைக் கொடுக்கிறது. நிறத்தெளிவைத் தோற்றுவிக்கிறது.

எளிதில் சீரணிக்கக்கூடிய உணவு, இயற்கை முதலியவற்றால் உடலைக் கெடுக்காமல், தோஷங்களைச் சீற்றமடையச் செய்யாமல் சீரணமடையச் செய்கிறது. அது கெட்டிருந்தாலும் தீமைகளைச் சிறிதளவே விளைவிக்கிறது.

சூடான உணவு சுவையூட்டுகிறது, கபத்தை வற்றச் செய்கிறது.

தாமதமாகச் சாப்பிட்டால் திருப்தி ஏற்படுவதில்லை. அளவுக்கு மீறி உண்டுவிடுகிறான். அதிகம் சாப்பிட்டாலோ உணவு குளிர்ந்துவிடுகிறது. சரிவர சீரணிப்பதுமில்லை.

மிக விரைவாகவும், பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் மனதை வேறிடத்தில் செலுத்தியபடியும் உண்ட உணவு முறையே நேராகச் செல்ல வேண்டிய தாதுக்களினிடத்திற்குச் செல்லாமல் வேறு இடத்திற்குச் சென்று விடுகிறது.

சீரணம் சரியாக ஆவதில்லை. சரியான நிலையிலிருப்பதில்லை. உணவின் நன்மை தீமைகளைப் பற்றியும் அறிவு தோன்றுவதில்லை. *(20—25)*

இது எனக்குப் பொருந்தும், இந்த உணவு எனக்குப் பொருந்தாது, என்று சோம்பலில்லாமல் எப்பொழுதும் உற்று நோக்குவதுதான் தன்னை நன்கு கவனித்து உண்பது என்பதன் கருத்து.

பொருந்துவது (ஸாத்ம்யம்) என்பதற்கு பழக்கத்தின் விளைவாக தன்னுடன் ஒன்றி விடுகிறது என்றும், பொருந்தாதது (அஸாத்ம்யம்) என்பதற்கு உடலுக்கு ஒத்துக் கொள்ளாதது என்றும் விளக்கம் கூறுகின்றனர் சிலர்.

மற்றும் சிலர், இயற்கை, வயது, இடம், பருவங்கள், தோஷங்கள், நோய், இவற்றின் பிரிவுகளை ஒட்டி ஸாத்ம்யம் பலவிதம் எனக் கருதுகின்றனர். *(26—28)*

அவர்கள் [1]உபசயம் என்பதற்கு உடலுக்கு ஒத்துக் கொள்ளு தல் என்ற பொருள் கொண்டு எதிரிடையான குணமுள்ள பொருட் கள் உடலுக்கு ஏற்றுக் கொண்டதனால் விபரீத [குணமுள்ளவற் றையும் ஸாத்ம்யம் என்கிறார்கள்.

குணங்களில் ஒன்றாயிருந்தாலும் உடலுக்கு ஏற்றுக் கொள் ளாததினால் அஸாத்ம்யம் என்கின்றனர்.

5. ஸாத்ம்யம் அஸாத்ம்யம்—விளக்கம்

ஸாத்ம்யம் என்பது சிறந்தது, தாழ்ந்தது, நடுத்தரமானது என மூவகைப்படும். இவற்றில் எல்லா ரசங்களும் ஸாத்ம்யமாக உள்ளது சிறந்தது. ஒரு ரசம் மட்டும் ஸாத்ம்யமாக இருப்பின் அது தாழ்ந்தது. நடுத்தர ரசமுள்ளது நடுத்தரமானது.

அவற்றில் சிறந்த ஸாத்ம்யம், ஸமானமான தோஷங்கள் உள்ள மனிதர்களுக்கு ஏற்றது. மற்ற நன்மை பயக்காத (அஹிதம்) ஸாத்ம்யங்களையும் நான்கில் ஒரு பங்காவது பதி னாறில் ஒரு பங்காவது சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டும் என்று முன்பே எட்டாவது அத்தியாயத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

6. நன்மையும் தீமையும்

[2]ஹிதம் (உடலுக்கு நன்மை பயக்கக் கூடியது).

சுருங்கச் சொல்லின் ஸமானமான தாதுக்களைப் பின் பற்றி வளர்ப்பதும், ஏற்றத் தாழ்வான தாதுக்களை ஸமப்படுத்து வதுமான உணவு வகை ஹிதம் என வழங்கப்படுகிறது. இவற் றிற்கு எதிரிடையானதை அஹிதம் என்கிறோம். இந்த ஹிதம் [3]அஹிதம் என்பதை அளவு, சேர்க்கை, முதலியவற்றின் வேறு பாட்டைக் கொண்டு முடிவு செய்யாத நிலையில் சாத்திரங்கள் கூறியபடி, ஹிதத்தை அதிகமாகவும், அஹிதத்தைக் குறைத்தும் பயன்படுத்தவும். (29—32)

---

1. உபசயம் - மருந்து, உணவு, சேஷ்டை முதலிய்வற்றை பயன்படுத்தி உடலுக்கு நன்மை அளித்து நோயையும் குணமாக்குதல்.
2. தம் - நன்மை விளைவிப்பது.
3. அஹிதம் - தீமை விளைவிப்பது.

அவ்விதமே ஸமசனம், அத்யசனம், அமாத்ராசனம், விஷமாசனம் என்ற இவற்றை விட்டு விட வேண்டும்.

நன்மை பயக்கும் உணவு, தீமை விளைவிக்கும் உணவு இரண்டையும் கலந்து உட்கொள்வது ஸமசனம். புசித்து முடித்த பின் மறுபடியும் உடனே புசிப்பது அத்யசனம்.

[1]அமாத்ரர்சனம் பின்பு தனியாகவே விளக்கப்படும்.

அகாலத்தில் அளவுக்கு மீறியும், குறைந்த அளவிலும், ஒழுங்கீனமாகவும் உட்கொள்ளப்படும் உணவு விஷமாசனமாகும்.

புசிக்கும் பொழுது கஞ்சி, கறிகாய் போன்றவற்றை வெள்ளிப் பாத்திரத்திலும், நன்கு உலர்ந்த உணவுப் பொருள், நெய் முதலிய எண்ணெய்ப் பொருளுடன் சேர்ந்த பொருள், சூடான பால் இவற்றைத் தங்கப் பாத்திரத்திலும், மோர், கஞ்சி, ஊறுகாய், பச்சடி வகையை வெண்கலப் பாத்திரத்திலும், பழரசங்களை வைரம், வைடூர்யம், இழைத்த பாத்திரத்திலும், நெய்யை இரும்புப் பாத்திரத்திலும், குளிர்ந்த நீரை தாமிரப் பாத்திரத்திலும், குடிநீர், பானகம் இவற்றை மண் கலயத்திலும் பொன், ஸ்படிகம், கண்ணாடிப் பாத்திரங்களிலும் வைக்க வேண்டும்.

அன்னத்தை இலையிலோ, தட்டிலோ மனதிற்குப் பிடித்தமான இடத்தில் பரப்பி வைக்க வேண்டும்.

அதற்குரிய பாத்திரங்களில் வைக்க வேண்டிய பொருள்களை மாற்றி வைத்தால் அவற்றின் நிறம், மணம், சுவை இவை மாறுபட்டு உடலுக்குத் தீமை உண்டாக்கும். *(33—37)*

மேலும் தின்பண்டங்களை வலப்பக்கத்திலும், பருகும் பொருட்கள், துகையல், 'உண்டபின் சுவைக்கும் தாம்பூலம், வாயைத் தூய்மைப்படுத்தும் பொருட்கள் இவற்றை இடப் பக்கத்திலும் வைக்க வேண்டும்.

புசிக்கவேண்டிய உணவை எதிரில் வைத்துக் கொள்ள வேண்டும்.

---

1. அமாத்ராசனம் - அளவு குறைவாகவோ, அதிகமாகவோ உணவு உட்கொள்வது.

சீரணத்திற்கு ஏற்ற வகையில் முதலில் திரவப் பொருட்கள் அல்லது உலர்ந்த பொருட்களைப் புசிக்க வேண்டும். குரு குணமுள்ளதும், இனிப்புச் சுவையுடையதும், எண்ணெய்ப் பசையுள்ளதுமான பொருட்களை முன்பே உண்ண வேண்டும்.

புளிப்பு, உப்புச் சுவை கொண்ட பொருட்களை இடையிலும், காய்ந்ததும், திரவமானதும், மற்ற சுவையுள்ளதுமான பொருட்களை முடிவிலும் 'சாப்பிடவேண்டும்.

சீரண சக்தி குறைந்தவன் முதலில் சூடான திரவப் பொருட்களை அருந்த வேண்டும். அதனால் அவனது சீரணசக்தி வளர்ச்சி பெறுகிறது. உட்கொண்ட பொருட்களும் நன்கு சீரணிக்கின்றன. (38—41)

7. அநுபான முறை

[1]அநுபானத்தில் சிறந்தது நீர். அது எல்லா ரசங்களுக்கும் மூலகாரணம். பிராணிகள் எல்லாவற்றிற்கும் ஒத்துக் கொள்ளக் கூடியது, வாழ்வுக்குக் காரணமாயிருப்பது. எனவே நீர் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

தயிர், தேன், யவம் எனும் தானியம், மேலும் எரிச்சலை உண்டுபண்ணக்கூடிய எண்ணெய்ப் பண்டங்களை உண்டபின்பும், கோதுமை, மதுவகைகள் இவற்றைப் பருகியபின்பும் குளிர்ந்த நீரைத்தான் பருகவேண்டும். சரத் என்ற பருவத்திலும் (ஐப்பசி கார்த்திகை) கிரீஷ்மத்திலும் (ஆனி, ஆடி மாதங்கள்) குளிர்ந்த நீரைப் பருகுவது சிறந்தது.

மாவுப்பொருட்களை உண்ட பின்பும், சீரணிப்பதற்குக் கடினமான திண்பண்டங்களைப் புசித்த பின்பும், வெந்நீரை அநுபானமாக அருந்த வேண்டும். ஹேமந்த ருதுவிலும் (மார்கழி—தை மாதங்கள்) சுடு நீரையே பயன்படுத்த வேண்டும்.

குளிர்ந்த நீர், சுடு நீர், இவற்றைப் பயன்படுத்தும் முறையை 'திரவத் திரவிய விஞ்ஞாநீயம்' எனும் அத்தியாயத்தில் பார்க்கவும்.

---

1. அநுபானம் - உணவுக்குப் பின் தொடர்ந்து அருந்தும் நீர், பால் முதலியன.

சம்பா அரிசி, அறுபது நாளில் விளையும் அரிசி இதனால் ஆன உணவை உண்ட பின் பால் அருந்த வேண்டும். அவ்வாறே, உபவாசமிருப்பவன், வழிநடந்தவன், பேச்சாளன், சிற்றின்பத்தில் ஈடுபட்டவன், உடற்பயிற்சி செய்தவன், உடல் தளர்ந்தவன், சிறுவர்—முதியோர் இவர்கள் பால் அருந்த வேண்டும்.

க்ஷயம் என்னும் உடல் இளைப்பு நோய் உள்ளவனுக்கு மாம்சரசம் அநுபானமாகும். வாத நோயாளிக்குப் புளிப்புச் சுவையுள்ள ரசங்கள் அநுபானமாகும். பித்த நோயைத் தடுப்பதற்கு சர்க்கரை கலந்த நீர், கபம் எனும் நோயைப் போக்கவும் கண், தொண்டை நோய்களிலும் தேன் கலந்த [1]திரிபலா குடிநீர் பெரும்பாலும் அனுபானமாம்.

தயிருக்கு அனுபானம் நீர் அல்லது தெளிந்த மோர். [2]கூர்சிகா, [3]கிலாடம் இவற்றிற்கு தயிர் தெளிவு அனுபானம். கீரை வகை மட்டமான உணவு; இவற்றிற்கு [4]தான்யாம்லம், தயிர்த் தெளிவு, அல்லது மோர் இவை அனுபானங்களாகும். மாம்சங்களுக்கு மதுபானம் அனுபானமாகும், அல்லது புளிப்பான பழ ரசங்கள், பல வகையான ஆஸவங்கள் இவைகளைத் தகுந்தவாறு பிரித்துப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, கிராமத்தில் வாழ்கின்ற பிராணி மாமிசத்திற்கு மத்வாஸவத்தையும் (தேன் கலந்த ஆஸவம்), காட்டில் வாழும் பிராணி மாமிசத்திற்கு கடுமையான திரிபல்ாஸவத்தையும் அனுபானமாகப் பயன்படுத்த வேண்டும்.

விஷ்கரம் (கொத்தித் தின்னும் பறவை இனம்) எனும் பறவைகளின் மாமிசத்திற்கு ஆலம் முதலிய பழங்களால் செய்த ஆஸவங்களை அனுபானமாக அருந்தலாம். பொந்தில் வசிக்கும் பிராணி மாமிசத்திற்கும், ஆயுதங்களால் அடிபட்ட பிராணிகளின் மாமிசத்திற்கும், எருக்கு, நருவிலி, வாகை, விளா, இவற்றால் தயாரிக்கப்பட்ட ஆஸவம் அனுபானமாகிறது.

---

1. திரிபலா : கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
2. கூர்சிகா : தயிர் பால் கலந்து பக்குவம் செய்வது.
3. கிலாடம் : சிறிதளவு பாலில் அதிக மோர் சேர்த்து தயாரிக்கப்படும் தயிர்.
4. தான்யாம்லம் : ஒரு வகைக் காடி.

மாமிச உணவு உட்கொள்ளும் பிராணிகளின் மாமிசத்திற்கு புளிப்புள்ள பழங்களின் ஆஸவம் அநுபானமாகக் கூறப்படுகிறது.

நீர் வாழ் உயிரினங்களின் மாமிசம், பெரிய பிராணிகளின் மாமிசம் இவற்றிற்கு தர்ப்பைப்புல், கரும்பு, தாமரைவிதை, சிருங்காடகம் எனும் ஒருவகைக் கிழங்கு, கொட்டிக்கிழங்கு, திராக்ஷை, கருங்காலி இவற்றால் ஆக்கிய ஆஸவங்களைத் தேனுடனோ அல்லது குளிர்ந்த நீருடனோ, மோர் அல்லது தயிர்த் தெளிவுடனோ கலந்து அனுபானமாக உட்கொள்ளலாம்.

கள்ளிக்காக்கை, குருவி, குயில் முதலிய பறவைகளின் மாமிசத்திற்கும், களைப்படைந்தவன், இளைத்தவன் இவர்களுக்கும் கள் அருந்துவது அநுபானமாகும். பருத்த உடல் உள்ளவனுக்கு நீர் கலந்த தேன் அநுபானம்.

கள், மாமிசம் இவற்றை உண்டு பழகியவர்களும், சடராக்னி குறைந்தவர்களும் கள்ளை அநுபானமாகப் பருகலாம்.

சுருங்கச் சொன்னால் உண்ட உணவுவகைகளுக்கு எதிரிடையில்லாமலும், வீர்யம் முதலியவற்றால் பகையற்றதுமான அநுபானம் சிறந்ததாகும். (42— 53)

8. அநுபானங்களின் குணங்கள்

அநுபானம் நிறைவை அளிக்கிறது. உடலை வளர்க்கிறது. உற்சாகமளிக்கிறது. பருக்கச் செய்கிறது. உடலிற்குத் தேவையானவற்றை அளிக்கிறது. உண்ட உணவைத் தளர்த்தி விடுகிறது. அன்னக் கூட்டத்தைப் பிளக்கிறது. மிருதுத்தன்மையைத் தோற்றுவிக்கிறது. ஈரக்கசிவை ஏற்படுத்துகிறது. உணவை எளிதில் சீரணிக்கச் செய்கிறது. உடல் முழுவதும் பரவச் செய்கிறது

9. அநுபானத்திற்குத் தகுதியற்றவர்கள்

கழுத்தின் மேல்பாகங்களில் உண்டாகும் நோய்கள், சுவாசம், இருமல், கபம், நீர்ஊறுதல், விக்கல், குரல் கம்முதல் ரத்தக் கசிவுடன் கூடிய இருமல் ஆகிய இந்நோய் உள்ளவர்கள் அநுபானம் அருந்தக்கூடாது.

பாடகர்களும் சொற்பொழிவாளர்களும் அநுபானம் செய்வது நல்லதல்ல. ஏனென்றால் அநுபானம் அவர்களுக்கு உணவுப் பையைக் கெடுத்து, மார்பிலும், தொண்டையிலும் உள்ள உணவினால் உண்டான எண்ணெய்ப் பசையை அடைந்து அது சடராக்னியின் வலிவைக் குறைத்து வாந்தி முதலான நோய்களை ஏற்படுத்துகிறது. கபத்தைக் கிளறி விடுகிறது.
(54—56)

அநுபானம் எடுத்துக் கொண்டவர்கள், சொற்பொழிவு ஆற்றக் கூடாது. பாடக்கூடாது. வழிப்பிரயாணம் செய்வது தகாது. உறங்கவும் கூடாது.

உடல் அழற்சி, நீரிழிவு, தொண்டை, கண் இவற்றில் தோன்றும் நோய், உடற்புண், இவற்றையுடையவர்கள் நீரே அருந்தக்கூடாது.

உண்டபின் கைகழுவி, பற்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் உணவுப் பகுதிகளை மெள்ள மெள்ள வெளிப்படுத்தி சுத்தம் செய்து, வாயில் உள்ள நாற்றம், குழகுழப்பு இவற்றை அகற்றி ஆசமனம் செய்து நீரினால் கண்களைத் துடைத்து, தாம்பூலம் தரிப்பதனால் வாயைச் சுத்தமாக்கி, புகை பிடிப்பதனால் கழுத்திற்கு மேல்பகுதியில் உள்ள கப வேகத்தைக் குறைத்து, நூறு அடி நடந்து [1]இடது பக்கமாகப் படுத்துக் கொள்ள வேண்டும்.

அதிகமான திரவப் பொருட்களை உண்ட பின்பு வெகு நேரம் படுக்கக்கூடாது. உணவு உண்ட உடனே வாகனத்தில் ஏறுவதையும், நீச்சலடிப்பதையும், வாகனத்தில் செல்லுவதையும், நெருப்பின் அருகில் செல்வதையும், வெயிலில் செல்வதையும் தவிர்க்க வேண்டும்.

---

1. இடது பக்கமாகப் படுத்தல்—உண்டவுடன் இடது பக்கமாகப் படுத்துக்கொள்வதால் ஆரோக்யம் வளரும் என சாஸ்திரம் கூறுகிறது.

[1]ஊஷ்மா [2]வாயு [3]கிலேதம் [4]ஸ்நேகம் [5]காலம் [6]ஸமயோகம் என்பவை உணவை சீரணிக்கச் செய்பவை.

ஊஷ்மா (உடலில் உள்ள உஷ்ணம்) உணவை சீரணிக்கச் செய்கிறது.

ஸ்நேகம்—(எண்ணெய்ப்பசை) மிருதுத் தன்மையை உண்டு பண்ணுகிறது.

காலம்—(நேரம்) உணவை உடல் முழுவதும் பரவச் செய்கிறது.

ஸமயோகம்— மேற்கூறிய ஊஷ்மா முதலியவை சரியாக அமைதல். அது உணவைச் சீரணிக்கச் செய்கிறது. தாதுக்களை ஒழுங்குபடுத்துகிறது.

பழக்கமான நன்மை பயக்கும் உணவு, உடலைப் பேணுதல், உண்ணுதல், அசைவுகள்;! படுக்கை, மனத்தெளிவு இவை ஆறும் ஸமயோகத்திற்குக் காரணங்களாகும்.

உணவின் சீரணத்தால் உண்டாகும் உணவின் குணங்கள் உடலிலுள்ள குணங்களுக்கு விரோதத்தை ஏற்படுத்தாமல் ஸமானமாகி விடுகின்றன.

உணவின் விரோத குணங்கள் உடலின் குணங்களுக்கு விரோதிகளாக ஆவதால் உடலை அழித்து விடுகின்றன.

(57—65)

உணவு அருந்திய பின், தணலில் சூடாக்கி வறுத்த தானியங்கள், அவல், அரிசி மாவினால் ஆன பொருட்கள் இவற்றை ஒருபொழுதும் உண்ணக்கூடாது. மிகுந்த விருப்பத்திலும் பசியிலும் குறைந்த அளவே உண்ண வேண்டும்.

கீரை வகை, மட்டமான உணவு. காரம், புளிப்பு, துவர்ப்பு, உப்புச் சுவையுள்ள பொருட்கள் இவைகளை உணவில் அதிகமாக

---

1. ஊஷ்மா—உடற்சூடு.
2. வாயு— வாதம்.
3. க்லேதம்— பிசுபிசுப்பு— நீர்ப்பதம்— ஈரப்பசை.
4. ஸ்நேகம்—எண்ணெய்ப்பசை
5. காலம்—நேரம்
6. ஸமயோகம்—சமத்தன்மையுடைய சேர்க்கை

சேர்க்கக்கூடாது. ஒரே சுவையுள்ள பொருளையே பழக்கப் படுத்திக் கொள்ளக்கூடாது. குருகுணமுள்ள உலர்ந்த உணவை விலக்கவேண்டும். இந்நூலில் நிதானஸ்தானமென்னும் பகுதியில் கூறப்பட்டுள்ள எல்லாவகை தோஷங்களையும் சீற்றமடையச் செய்யும் காரணங்களான அதிகப் பசையினாலும், குரு குணத்தினாலும், உடலிலுள்ள தாதுக்களை எரிக்கச் செய்யும் குணமுள்ள பொருட்கள் (அபிஷ்யந்தி), மலம்—சிறுநீர் இவற்றைக் கட்டி வயிற்றுப் பொருமல் முதலானவற்றை உண்டாக்கும் பொருட்கள் (விஷ்டம்பி) குடலில் நன்கு சீரணமாகாமல் உள்ளே அழற்சியைக் கொடுக்கக் கூடியப் பொருட்கள் (விதாஹி), குளிர்ச்சி தரும் பொருட்கள், வறட்சியைத் தோற்றுவிப்பவை, கிலாடம், தயிர், கூர்ச்சிகா, உலர்ந்த மீன் (கருவாடு) பச்சை முள்ளங்கி, அழற்சி தரும் பொருட்கள் (க்ஷாரம்) மாவுப்பொருட்கள், முளைத்த தானியங்கள் இவை யாவையும் பயன்படுத்தக் கூடாது. (66—69)

சம்பா அரிசி, கோதுமை, யவதானியம், அறுபது நாட்களில் விளையும் அரிசி, [1]ஜாங்கலப் பிரதேசத்திலுள்ள பிராணிகளின் மாமிசம், ஆரைக்கீரை, கீரைப்பாலை, இளம் பச்சை முள்ளங்கி, சக்கரவர்த்திக்கீரை, கடுக்காய், நெல்லிக்காய், திராக்ஷை, புடல், பயறு, சர்க்கரை, நெய், மழை நீர், பால், தேன், மாதுளை, இந்துப்பு, இவற்றை உணவாகச் சேர்த்துக் கொள்ளவும்.

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய் இவற்றை தேன், நெய் இவற்றுடன் கலந்து இரவில் உண்டால் கண்கள் வலிவு பெறும்.

உடலுக்கு ஆரோக்கியமளிப்பதும், பிணிகளை அகற்றுவதுமான உணவு வகைகளை எப்பொழுதும் பயன்படுத்த வேண்டும். (70—72)

---

1. ஜாங்கலப்ரதேசம்—அதிக ஈரம், சதுப்புநிலமில்லாமலும் மரங்கள், மலைகள் அதிகமில்லாமலும் வறட்சி, உஷ்ணம், குளிர் அதிகமில்லாமலும் இருக்கும் இடம். சம சீதோஷ்ண நிலையான பூமி.

இயற்கை அளவு, சேர்க்கை அளவு போன்ற ஒன்றுக்கொன்று எதிரிடையான குணமுள்ள உணவு வகைகளை உடலுக்கு ஒவ்வாத குணமுடையதால் அவற்றை பகுத்தறிவு உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும்.

தோஷங்களின் மாறுபாட்டிற்குக் காரணமானவற்றை விலக்குவதாலும் தோஷங்களை சம நிலைக்குக் கொண்டு வரும் காரணங்களைப் பின்பற்றுவதாலும் முறையே தாதுக்கள் கேடடைந்து உடலைத் துன்புறுத்துவதில்லை. தாதுக்கள் சம நிலையை அடைகின்றன. வயிற்றில் இரு பங்கு உணவும், ஒரு பங்கு நீரும், ஒரு பங்கு காற்றும் இடம் பெற வேண்டும்.

சடராக்னி குறைந்தவன், பலமற்றவன், உடல் நலக் குறைவுள்ளவன், அரசர்கள், செல்வந்தர்கள், வாழ்க்கையை இன்பமாகக் கழிக்க விரும்புபவர்கள் ஆகிய இவர்கள் இந்த உணவு முறையை எப்பொழுதும் கடைபிடிக்க வேண்டும். மற்றவர்களுக்கு இம்முறை பின்பற்றுவது அதிகத் தேவையில்லை.

10. நன்மை தீமை பயக்கும் உணவு வகை

மிகுதியான வறண்ட உணவு, வலிவு, நிறம் இவற்றைப் போக்குகிறது. தோலில் வறட்சியைத் தோற்றுவிக்கிறது. வாதம், மலம் இவற்றைத் தடுக்கிறது. அதிக எண்ணெய்ப் பசையுள்ள உணவு, கபத்தை அதிகரிக்கச் செய்கிறது. உமிழ்நீர், மார்பில் பளு, சோம்பல், சுவையின்மை இவற்றை உண்டாக்குகிறது.

அதிக உஷ்ண குணமுள்ள உணவு, வெறி, எரிச்சல், நாவறட்சி, வலிவுக்குறைவு, தலை சுற்றல், இரத்த பித்தம் இவற்றைத் தோற்றுவிக்கிறது.

மிகுதியாகக் குளிர்ச்சி தரும் உணவு, உடல் தளர்ச்சி, சுவையின்மை, சடராக்னிக்குறைவு, மனத்தளர்ச்சி, மலக்கட்டு, மயிர்க்கூச்சல் இவற்றை ஏற்படுத்தும்.

மிகக் கடினமான உணவு, சிறுநீர், மலம் இவற்றைக் கட்டும். அதிருப்தியை உண்டாக்கும். உடல் முழுவதும் பரவாது. விரைவில் சீரணிக்காது. இருமல், ஸ்யந்தம் எனும் கண்நோய் இவற்றை உண்டாக்கும். சடராக்னியின் வலிவைக் குறைக்கும்.

மிக்க இனிப்புச் சுவையுள்ள உணவு சடராக்னியைத் தணிக்கும்.

உடலுடன் ஒன்றிப்போகாத உணவு உடல் வளர்ச்சியைத் தராது.

மிக்க உப்புச் சுவையுள்ள உணவு கண்களுக்கு நல்லதல்ல.

உவர்ப்புச்சுவையும், மிகப் புளிப்புள்ளதுமான உணவு, விரைவில் முதுமையைத் தோற்றுவிக்கும்.

முன் கூறப்பட்ட உணவு முறையைப் பின்பற்றி, உடல் வலிமைக்கேற்றவாறு உண்பவனை, சிறுநோயும் அண்டுவதில்லை. அவன் நூறாண்டுகளுக்குமேல் வாழ்கிறான். (73—80)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'அன்னபான விதி' எனும் பத்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

பதினோறாவது அத்தியாயம்

*(மாத்திராசிதீயம்)

இனி ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி மாத்திராசிதீயம் என்ற அத்தியாயத்தை விவரிப்போம். *(1—2)*

மாத்திரை என்றால் அளவை.

மனிதன் எப்பொழுதும் அளவறிந்து உணவு உட்கொள்ள வேண்டும். அளவை என்பது இருவகைப்படும். ஒன்று சடராக்னியைப் பற்றியது. மற்றொன்று உணவைப் பற்றியது.

1. அளவையின் இலக்கணம்

உணவு உட்கொள்வதனால் வயிற்றிலுள்ள சீரணப்பை கெட்டு விடக்கூடாது. இதயத்தில் ஒரு விதமான வலி உண்டாகக் கூடாது. விலாப்பக்கங்கள் புடைக்கக்கூடாது. வயிறு பருக்கக் கூடாது.

கண், காது போன்ற உறுப்புகளுக்கு வலிவு உண்டாக வேண்டும். பசி, தாகம் அடங்கவேண்டும். நிற்பது, அமருவது, தூங்குவது, நடப்பது, மூச்சையிழுப்பது, மூச்சை வெளியிடுவது, சிரிப்பது, உரையாடுவது போன்ற செயல்களைச் சுகமாகச் செய்ய வேண்டும்.

மாலையில் உண்ட உணவு காலைக்குள்ளும் காலையில் உண்ட உணவு மாலைக்குள்ளும் எளிதில் சீரணமாக வேண்டும். பலம், நிறம், சீரான உடல் வளர்ச்சி, அமைப்பு இவை அளவையின் இலக்கணமாகும்.

2. குரு இலகு பொருட்களின் அளவை

(குரு) திடப்பொருட்களை மூன்றில் ஒரு பங்கு அல்லது அரைப்பங்கு உட்கொண்டு மனநிறைவு ஏற்பட்டவுடன் நிறுத்தி விடவேண்டும்.

---

*மாத்திராசிதீயம்—மாத்திரை என்றால் அளவு. அசிதம் என்றால் உணவு. உணவு முதலியவற்றை அளவுப்படி உட்கொள்வதை விவரிக்கும் அத்தியாயம் என்பதாம்.

லேசான பொருட்களை (இலகு) மன நிறைவு ஏற்படும் அளவிற்கு உண்ண வேண்டும். வயிறு முழுவதும் நிரம்பும் வரை உண்ணக்கூடாது.

இலேசான பொருட்களில் காற்று, நெருப்பு இவற்றின் குணங்கள் அதிகமாக உள்ளன. இப்பொருட்கள் இயற்கையாகவே நெருப்பைப் போன்ற குணங்கள் கொண்டுள்ளபடியால் சடராக்னியைத் தூண்டிவிடக் கூடியவை. இப் பொருட்களை முறைப்படி உட்கொள்ளாவிடில் சிறிதளவு தீமைகள் உண்டாகும். *(3—8)*

திடப்பொருட்களில் நிலம், நீர், இவற்றின் குணங்கள் அதிக அளவில் உள்ளன. இவை நெருப்பின் எதிரிடையான குணங்களாக உள்ளவை. அதனால் இலகுப் பொருட்கள் செய்வதற்கு எதிரிடையான செயல்கள் உடையவை. அதாவது வயிற்றில் உள்ள சடராக்னியைக் குறைத்து விடுகின்றன.

இவை தினந்தோறும் உடற்பயிற்சி செய்கின்றவர்கள், அதிகமான சடராக்னி உள்ளவர்களைத் தவிர மற்றவர்களின் சடராக்னியைத் தணித்து விடுகின்றன.

அளவு இல்லாமை என்பது உணவுக் குறைவும் உணவின் மிகுதியுமாகும்.

3. உணவைக் குறைவாக உண்பதினால் ஏற்படும் தீமைகள்

குறைந்த அளவில் உண்பது, பலம், நிறம், வளர்ச்சி, மனம், அறிவு, புலன்கள் இவற்றை அழித்துவிடுகிறது. மலச்சிக்கலையும் ஏற்படுத்துகிறது. ஆண்மையையும் ஆயுளையும் குறைக்கக் கூடியது. ஓஜஸ் என்னும் தாதுவினால் உண்டாகும் உடலின் மினுமினுப்பைத் தடுக்கிறது. தோல் முதலிய எண் வகை சத்துக்களையும் அழித்து விடுகிறது. முகப்பொலிவு குறைந்து எண்பது வகையான வாத நோய்கள் அனைத்துக்கும் காரணமாகவும் ஆகின்றது.

4. உணவை அதிகமாக உண்பதனால் ஏற்படும் தொல்லைகள்

அதிக அளவில் உண்ணப்படும் உணவு எல்லாவித தோஷங்களையும் சீற்றமடையச் செய்கிறது. அதாவது வாதம், பித்தம், கபம் மூன்றையும் அதிகப்படுத்தி விடுகிறது.

அதிக அளவு உண்பதினால் வாதம், பித்தம், கபம், மூன்றும் நெருக்கப்பட்டு வயிற்றில் (ஆமாசயத்தில்) அடைபட்டு ஒருங்கே சீற்றமடைந்து சீரணிக்காத உணவுடன் கலந்து, பரவி உடல் துவாரங்களை அடைத்து, [1]அலசகம் என்ற நோயைத் தோற்றுவிக்கின்றது. அல்லது உடனே ஒரே சமயத்தில் வாந்தி பேதி (விஷூசிகா) நோயைத் தோற்றுவிக்கிறது. *(9—13)*

5. அலசகத்தின் இலக்கணம்

உட்கொண்ட உணவு மேல் நோக்கி வந்து வாந்தியும் ஆவதில்லை. கீழ்நோக்கிச் சென்று மலமாகவும் வருவதில்லை. குடலில் சீரணமும் ஆவதில்லை. சீரணப்பையிலேயே நின்று அலசகம் என்ற நிலையை அடைந்து விடுகிறது.

6. விஷூசிகா என்பதின் இலக்கணம்

உடலில் பலவகையான வேதனைகளை ஏற்படுத்தி வாதம் முதலானவற்றை மிகவும் சீற்றமடையச் செய்து உறுப்புகளை எல்லாம் ஊசிகளால் குத்துவதுபோல் துன்பம் ஏற்படுத்தும் இயல்புடையதால் இது விஷூசிகா எனக் கூறப்படுகிறது.

7. மூவகை விஷூசிகைகள்

1. வாத விஷூசிகை

சூலம், வயிற்றுப் பொருமல், உறுப்புகள் முறிதல் போன்ற வலி, வாய் உலர்ந்து போதல், உளறுதல், நடுக்கம், மயக்கம், மனக்கலக்கம், அடிக்கடி கொட்டாவி விடுதல், உடல் முறுக்கிக் கொள்ளுதல், கண்கள் பஞ்சடைதல், தலை, இதயம் இவற்றில் வலி, நரம்பு சுருட்டிக் கொள்ளுதல், உடல் விறைத்துப்போதல் இவை வாத விஷூசிகையினால் வரும் தீமைகள்.

2. பித்த விஷூசிகை

சுரம், கழிச்சல், உடலின் உட்புறத்தில் எரிச்சல், நிற மாற்றம், நாவறட்சி, மூர்ச்சையடைதல், மனக்கலக்கம், நினைவின்மை, உளறுதல் இவை பித்த விஷூசிகையினால் தோன்றக் கூடிய நோய்கள்.

---

1. அலசகம்—அசைவற்றிருத்தல்—இரைப்பையில் விழுந்த உணவு இயல்பான வகையில் சீரணமாகாமல் மந்தப்பட்டு மேல்நோக்கியோ கீழ்நோக்கியோ செல்லாமல் மந்தித்துப் போதல்.

3. கப விஷூசிகை

வாந்தி, சுவையின்மை, உமிழ்நீர் பெருகுதல், உடல் வலிவிழந்து போதல், அசீர்ணம், குளிர்சுரம், உடல் கனம் இவை கப விஷூசிகையினால் ஏற்படுபவை. *(14—16)*

8. அலசக ரோகயின் சிறப்புத்தன்மை

இளைத்திருப்பவன், சடராக்னி குறைந்தவன், மிகுந்த கபம் உடையவன், வாயு, மலம், சிறுநீர் போன்ற உணர்வு களை அடக்குபவன் என்ற இவர்களுக்கு உணவும் நீரும், வாதத்தினால் (நெருக்கப்பட்டு) கபத்தினால் வழி தடைப்பட்டு வெளி வருவதில்லை.

வாந்தி பேதியல்லாமல் மேற்கூறப்பட்ட சூலம் முதலான வாத நோயையும் அதிக அளவில் தோற்றுவிக்கிறது. இந் நிலைக்கு அலசகம் என்று பெயர்.

9. [1]தண்ட அலசகம்

தோஷங்கள் அதிகச் சிற்றமடைந்து—கெட்டுப்போன ஆமத்தின் காரணமாக வழி அடைபட்டு குறுக்கே பாய்ந்து உடலைத் தடிபோல் விறைத்து நிற்கச் செய்வதால் அதைத் தண்ட அலசகம் அல்லது அசாத்திய அலசகம் எனக் கூறுவர்.

உடலுக்குப் பொருந்தாத உணவை உண்பவன், புசித்த வுடன் புசிப்பவன், அசீர்ண நிலையில் உண்பவன் இவர்களிடம் உண்டாகும் ஆம தோஷமானது ஆம விஷம் எனப்படுகிறது.

இந்த தோஷம் நஞ்சிற்கு ஒப்பான அறிகுறிகளைக் கொண் டிருப்பதாலும் எளிதில் மருத்துவத்திற்கு கட்டுப்படாததாலும், விரைவில் உயிருக்கு அபாயம் விளைவிப்பதாலும் இதற்குச் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகள் ஒன்றுக்கொன்று எதிரிடையாக அமைவதாலும் ஆமவிஷம் என அழைக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களின் இயல்பினுல் அவற்றின் பலன்கள் வேறுபடுவதால், உணவின் அளவு ஒன்றினுலேயே அதன் முழுப் பலனையும் அடைய முடியாது. அது எப்படியெனில் குரு, வறட்சி,

---

1. தண்ட அலசகம்—தண்டம் என்றால் தடி. இந்த பிணி தடி போல் உடலை விறைத்து நிற்கச் செய்வ தால் இப்பெயர் பெற்றது.

உலர்ந்த தன்மை, குளிர்ச்சி என்ற குணங்கள் உள்ளதும், கெட்ட மலக்கட்டு உண்டாக்குகிற, எரிச்சல் ஏற்படுத்துகிற, அசுத்த மான பொருந்தாத உணவினாலும், அதிக அளவு நீர் பருகுவ தாலும், அகாலத்தில் புசிப்பதாலும், காலத்தில் உட்கொண் டாலும், ஆசை, கோபம், பேராசை, பொறாமை, வெட்கம், வருத்தம், உணர்ச்சி, எழுச்சி, பயம், பசி இவற்றால் பாதிக்கப் பட்ட நிலையில் உட்கொண்ட உணவானது ஆமதோஷத்தையே உண்டாக்கும். *(17—21)*

இவற்றில் கெட்டதும், அசைவற்றதுமான (அலஸீபூதம்) ஆமம் சிகிச்சைக்கு வசப்பட்டு இருக்குமானால் இந்துப்புடன் கூடிய சுடுநீரைப் பருகச் செய்து வாந்தி எடுக்கச் செய்ய வேண் டும்.

தோஷங்கள் உள்ளடங்கியிருப்பதனால் வாந்தி வராவிட் டால் திப்பிலி, நாகதந்தி இவற்றைக் கூட்டி அரைத்து இந்துப் புடன் கலந்த நீரைக் குடிக்கச் செய்யவேண்டும்.

அல்லது

திப்பிலி, வெண்கடுகு சேர்த்து அரைத்து மருக்காரை பழக் கஷாயத்தைப் பருகச் செய்ய வேண்டும்.

அல்லது

நீர்வாளம், திப்பிலி இவற்றின் பொடியை பேய்ப்பீர்க்குச் சாற்றில் இந்துப்புடன் கலந்து பருகச் செய்ய வேண்டும்.

அல்லது

நிலைமைக்கு ஏற்றவாறு — அதிகமாக வாந்தி எடுக்க வமன கல்பம் என்ற அத்தியாயத்தில் கூறிய கடுமையான வாந்தி முறையைப் பின்பற்ற வேண்டும்.

வாந்தி எடுத்த பின் உடலில் வியர்வை உண்டாக்கும் சிகிச்சை செய்து, மலத்துவாரத்தில் வர்த்தியைச் செருகி மலத்தை யும் தோஷத்தையும் வெளியேற்ற வேண்டும். *(22—25)*

10. பெருங்காய சூர்ணம்

அப்பொழுதே வாந்தி செய்வித்ததினாலும், மலம் வெளிப் பட்டதினாலும் நன்கு சோதனம் செய்யப்பட்ட உடலில் ஆம தோஷத்தின் உபத்திரவங்கள் குறைந்துவிடுகின்றன.

வயிற்றில் உணவு இல்லாமல் வலியுடன் கூடி இருக்கும் பொழுது – பெருங்காயம், அதிவிடயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சுவர்ச்சலம் என்ற உப்பு, வசம்பு, கடுக்காய் இவற்றை ஒரே அளவில் எடுத்துப் பொடி செய்து சுடு நீருடன் கொடுக்க வேண்டும்.

அல்லது

கண்டந்திப்பிலி, சிவதைவேர், தேவதாரு, இந்துப்பு இவற்றை ஒரே அளவில் எடுத்துத் தூளாக்கிக் கொடுக்க வேண்டும்.

அல்லது

சுக்கு, கள்ளிப்பால், இந்துப்பு, திப்பிலி, மிளகு இவற்றைத் தூளாக்கிக் கொடுக்க வேண்டும்.

அல்லது

வட்டத்திருப்பி, புளிவஞ்சி, ஸர்ஜக்ஷாரம், ஓமம், புஷ்கர மூலம் இவற்றைத் தூளாக்கி, சுடுநீரில் கலந்து குடிக்கச் செய்ய வேண்டும். (26—27)

பெருங்காயம் ஒரு பங்கு, வசம்பு இரு பங்கு, கொடிவேலி நான்கு பங்கு, கோஷ்டம் எட்டுப் பங்கு, சுவத்ஸர உப்பு பதினாறு பங்கு, பிடம் என்ற உப்பு முப்பத்திரண்டு பங்கு, ஓமம் 64 பங்கு எடுத்து எல்லாவற்றையும் தூளாக்கிச் சாப்பிடச் செய்து சுடு நீரைப் பருகச் செய்ய வேண்டும்.

இந்தச் சூர்ணம் மகோதரம், வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வாந்தி, பேதி, மூலம்,இதய நோய், குன்மம் மேல் நோக்கிச் செல்லும் வாயு இவற்றை நீக்கும்.

11. கோரைக்கிழங்கு கஷாயம்

நாவறட்சி, வயிற்றுவலி (சூலம்) ஏற்பட்டால் கோரைக் கிழங்கு, ஓமம், புங்கம், வசம்பு, சுக்கு, கொடிவேலி, தனியா, விலாமிச்சை வேர், பூலாங்கிழங்கு, வில்வம், இவற்றைக் கஷாயம் காய்ச்சும் முறைப்படி காய்ச்சி அருந்தச் செய்யவும்.

12. சீந்தில் கொடி கஷாயம்

சீந்தில் கொடி, கடம்பம், வேம்பு, மருதம்பட்டை, வெப்பாலை இவற்றைப் பொடி செய்து கொதிக்க வைத்து அதிகமான உப்புக் கலந்து அருந்தக்கூடிய சூடாக்கிப் பருகச் செய்ய வேண்டும்.

இதனால் வாந்தி, பேதி, அசிரணம், நஞ்சு நீங்கும்.

(28—30)

13. உடற் பூச்சு, தேய்த்தல், புகை போடுதல்

சித்தரத்தை, குமிழம், வசம்பு, கண்டங்கத்திரி, முள்ளுக் கத்திரி, அகில், குச்குலு, அதிவிடயம், கோஷ்டம், பச்சிலை, சிறுகண்டங்கத்திரி கோரைக் கிழங்கு இவற்றைக் காய வைத்து, தூள் செய்து, இந்தத் தூளை பசுவின் சிறு நீரில் கலந்து, அதனால் பூசவோ, அல்லது அழுத்தித் தேய்க்கவோ, புகை போடவோ வேண்டும்.

14. காலரா அலசக நோய்களின் சிகிச்சை

வயிற்று வலியோ, பொருமலோ ஏற்பட்டால் தேவதாரு, வசம்பு, கோஷ்டம், சதகுப்பை, பெருங்காயம், இந்துப்பு இவற்றைத் தூள் செய்து காடி, அல்லது புளிப்புப் பொருட்களின் சாற்றில் கலந்து சிறிதளவு சூடாக்கி வயிற்றில் பற்றுப் போடவேண்டும்.

யவம் என்ற தானியம், யவக்ஷாரம், இவற்றைத் தூள் செய்தோ, அல்லது அரைத்தோ, மோருடன் கலந்து வயிற்றில் தடவுவதால் மிகுந்த சூல நோய் விலகி விடும்.

சிறுநீர், மலம் கட்டிவிட்டால் தேவதாரு, வசம்பு, கோஷ்டம், சதகுப்பை, பெருங்காயம், இந்துப்பு இவற்றைத் தூளாக்கி ஒரு துணியில் வைத்து வர்த்தி போல் திரித்து மலம் வரும் இடத்தில் செருக வேண்டும்.

அசிரணத்தால் உடல் உறுப்புகள் சுருங்கியிருந்தால் அங்கு வியர்வைச் சிகிச்சை செய்து மருந்தைத் தடவி சூடான துணியால் சுற்றிக் கட்ட வேண்டும்.

காலரா என்னும் கொள்ளை நோய் அதிகமாயிருந்தால், குதிகால்களில் சூடு போடுவது சிறந்தது.

யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், நாட்பட்ட பிண்ணாக்கு, கோஷ்டம், சேங்கொட்டை, சித்திரமூலம், காடி, இந்துப்பு இவற்றை எண்ணெயில் பக்குவம் செய்து உடலில் தடவுவது சிறந்தது.

சாதாரண முறையில் வாந்தியோ, பேதியோ, செய்வித்து உடலில் மிகக் கொடூரமான [1]ஆயாமம் என்ற வாதத்தினால் ஏற்படும் நோய் தோன்றினால் சேராங் கொட்டை, மெழுகு, நாட்பட்ட பிண்ணாக்கு, சுக்கு இவற்றை நெய், எண்ணெய், காடி இவற்றில் பக்குவம் செய்து உடலில் பூச வேண்டும். இது வாதத்தினால் ஏற்படும், கைகால் முடக்கத்திற்கு மிகவும் சிறந்தது. இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சித்தரத்தை, அகில், முருங்கப்பட்டை, கோஷ்டம், வசம்பு, சதகுப்பை, இவற்றைக் காடியிலோ அல்லது புளிப்பான பொருட்களின் சாற்றிலோ, சேர்த்து எண்ணெய் தயார் செய்யவும். இது வாந்தி, பேதியையும், முடக்கு வாதத்தையும் போக்குகிறது.

வாந்தி பேதி எடுத்த நாளில் நோயாளியைப் பட்டினியிருக்கச் செய்து பேதிக்குக் கொடுத்தபோது கடைபிடிக்கும் முறைகளைக் கையாளவேண்டும்.

பொதுவாக வாந்தி, பேதி, அலசம் என்ற நோய்களுக்குச் சிகிச்சை கூறப்பட்டது. *(31—39)*

[2]ஆம தோஷங்களை உடைய பிணியாளிக்கு சாப்பாட்டு வேளையில், முன்பு உண்ட உணவு சீரணமான பின்பு தோஷங்களுடன் பூசிய ஆமாசயத்தின் காரணமாகச் செயலற்றவனும் கனமான வயிறுஉடையவனும், புசிப்பதில் விருப்பமற்றவனுமான மனிதனைப் பார்த்து மிகுதியுள்ள தோஷங்களைச் சீரணிக்கச் செய்வதற்கும் சடராக்னியை வளர்க்க மருந்து அருந்தச் செய்ய வேண்டும்.

இந்த நிலையில் உணவு சீரணமாகாவிடில் மருந்து கொடுக்கக் கூடாது. ஏனென்றால் ஆமதோஷத்தின் காரணமாக வலு விழந்த சடராக்னியானது ஒரே சமயத்தில் ஆமதோஷத்தையும், மருந்தையும், உணவுப் பொருளையும் சீரணிக்கத் திறமையற்றது.

மேலும், முற்கூறிய ஆமதோஷம், மருந்து, உணவு இவற்றின் குழப்பமானது வலிமை பெற்றிருப்பதனால், முன்பே

---

1. ஆயாமம் — உடலை, மார்பு, வயிறு இவற்றின் பக்கமாக வில்லைப்போல முன்பக்கமாக வளைக்கும் ஒருவித வலிப்பு. இதற்கு அந்தராயாமம் என்றும், அதேபோல உடலை, வெளிப்புறமாகவும் முதுகுப் பக்கமாய் வலித்து இசிவையுண்டுபண்ணும் வாத நோய். இதற்கு பகிராயாமம் என்பதும் பெயர். பாஹ்யாயாமம் என்றும் கூறுவர்.
2. ஆமம்— உணவு, மலம் முதலியன பக்குவமாகாததால் உண்டாகும் தோஷம்.

குறைந்த பலமுடைய சடராக்னியும், உடல் மெலிவும், நோயாளியை விரைவில் கொன்றுவிடும்.

16. ஆமதோஷத்தினால் ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை

ஆமதோஷத்தினால் உண்டாகும் நோய்களுக்கு லங்கனம் என்ற முறையில் பட்டினி போடுவதே தக்க சிகிச்சையாகும். அத்தகைய லங்கனம் மூவகைப்படும்.

[1]லங்கனம் [2]லங்கனபாசனம் [3]அவஸேசனம் என்பன.

தோஷம் குறைவாக உள்ளவர்களுக்கு லங்கனம் என்ற சிகிச்சைமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.

குறைவான நீர் உள்ள குளம் எப்படி வெயிலினாலும் காற்றினாலும் உலர்ந்து விடுகிறதோ அதுபோல் இந்த லங்கனம் என்ற உணவின்றி இருக்கும் சிகிச்சையால் மேலும் ஆமதோஷம், வளர வழியில்லாமலும் வாதமும், சடராக்னியும் வளர்ந்து குறைவாக உள்ள ஆமதோஷமும் நீங்கிவிடுகிறது.

எவ்விதம் மிகப் பெரியதல்லாத நடுத்தரமான நீர் நிலை, வெயில், காற்று, புழுதி, கல் ஆகியவற்றால் உலர்ந்து விடுகிறதோ அவ்விதம் பட்டினிபோடுதல், சீரணமாக்குதல் இவை இரண்டும் நடுநிலையில் உள்ள ஆம தோஷத்தைப் போக்கடித்து விடுகிறது.

நீர் நிறைந்த பயிர்கள் நிறைந்த நிலத்தில் உள்ள அதிக நீரை நீக்கி விட்டால் அது செழித்து வளருவது போல் தோஷங்கள் மிகுந்த உடலிலிருந்து தோஷங்களை வாந்தி செய்வித்தல் மலங் கழித்தல் போன்ற சிகிச்சைகளால் வெளியேற்றுவது உடல் வளர்ச்சிக்குக் காரணமாகும்.

---

1. லங்கன சிகிச்சை— ஆகாரம் ஒழித்துச் செய்யப்படும் சிகிச்சை.
2. லங்கன பாசன சிகிச்சை— ஆகாரத்தை ஒழித்திருப்பதோடு சேர்ந்துள்ள ஆமதோஷம் முதலியவற்றைச் சீரணிப்பதற்கு ஏற்ற சிகிச்சையும் சேர்த்துச் செய்தல்.
3. அவஸேசனம்— உடலுக்குள் குவிந்திருக்கும் தோஷங்களை வெளிக் கிளப்புதல்.

ஆசையினால் [1]ஸந்தர்ப்பணத்தினால் ஏற்படும்நோய்கள் [2]அபதர்ப்பணம் என்ற முறையில்லாமல் நீங்காது. அதுபோல் அபதர்ப்பணம் என்பதனால் ஏற்படும் நோய்கள் ஸந்தர்ப்பணம் என்ற முறையில்லாமல் நீங்காது.

ஆம தோஷத்திலிருந்து விடுபட்ட பின்பும், மீதியுள்ள ஆம தோஷம், சீரணித்த பின்பும், சடராக்னி வளர்ந்த பின்னும், முறைப்படி எண்ணெய் குளித்தல், [3]கஷாய வஸ்தி [4]எண்ணெய் வஸ்தி முறைப்படி எண்ணெய் குடித்தல், போன்றவற்றை தோஷங்கள் மருந்து வகை, நோயாளியின் நிலை இவற்றைக் கவனித்துப் பயன்படுத்த வேண்டும்.

இம்மாதிரி மற்ற நோய்களுக்கும் அவற்றிற்குரிய காரணங்களுக்கு எதிரிடையான மருந்துகளைத்தான் பயன்படுத்த வேண்டும்

எனினும் அந்நோய் தொடர்ந்து வந்தால் அந்நோய்க்கு எதிரிடையான சிகிச்சை முறையைக் கைக்கொள்ள வேண்டும். அல்லது அந்த நோயைப்போக்கக் கூடிய சிகிச்சை முறையைக் கையாளவேண்டும். இவ்வாறு வியாதியை கட்டுப்படுத்த வேண்டும்.

எந்த நோயாளியின் பற்கள், உதடுகள் கருகி விட்டனவோ நினைவு குறைந்துவிட்டதோ, எவன் வாந்தி எடுப்பதனால் துன்பப்படுகிறானோ, எவனுடைய கண்கள் உள்ளடங்கியும், சிவந்தும் உள்ளனவோ, குரல் கம்மியும் உள்ளதோ, உடலில் உள்ள எல்லா மூட்டுக்களும் தளர்ச்சியடைந்து விட்டனவோ அந்த நோயாளி பிழைக்க மாட்டான்.

சுக்கு, மிளகு, திப்பிலி, புங்கம் விதை, மஞ்சள், மர மஞ்சள் இவற்றைப் பொடி செய்து அந்த சூரணத்தை துரிஞ்சிப் பழச்

---

1. ஸந்தர்ப்பணம்— உடலுக்கும், மனத்திற்கும், உவகையூட்டும் சிகிச்சை முறை.
2. அபதர்ப்பணம்— உணவு உண்ணாமலிருத்தல், வாந்தி பேதி இவற்றின் மூலம் உடலை இளைக்கச் செய்யும் சிகிச்சை முறை.

   கஷாய வஸ்தி— கஷாயத்தைச் செலுத்துவது.
3. ஏதேனும் கருவிகள் மூலம் ஆசனவாய்வழியாக மருந்துகளைச் செலுத்தி குடலைக் கழுவுவதற்கு வஸ்தி என்று பெயர்
4. எண்ணெய் வஸ்தி— எண்ணெயைச் செலுத்துவது,

சாற்றில் ஊற வைத்து,பிறகு உலர வைத்து பின் மாத்திரையாக்கி, நிழலில் உலர்த்தி அதனுல் கண்ணில் மையிடுவதால் [1]விஷூசிகா என்னும் நோய் நீங்கும்.

வாகை மரத்தின் விதைகள், புங்கமரத்தின் விதைகள், பணஜ்ஜம் என்ற மரத்தின் விதைகள், பெருங்குறும்பைவிதைகள் த்ராயமான என்ற செடியின் விதைகள், நாயுருவி, இந்த விதைகளைப் பொடி செய்து, ஆட்டின் மூத்திரத்தில் சேர்த்து வர்த்தியாக ஆக்கி பத்துப் போடுதல், புகை போடுதல், பொடியாக உறிஞ்சுதல் மையிடுதல் இவற்றால் விஷூசிகாநோய் நீங்கும். *(40—53)*

17. அசீர்ண வகையும் நோய்களும்

அசீரணம் மூவகைப்படும்:

1. கபத்தின் சீற்றத்தினால் உண்டாகும் அசீரணம் [2]ஆமம் எனப்படும்.

அதனால் உடலில் பளு, கண்களைச் சுற்றியும், கன்னத்திலும் வீக்கம் உண்டாகும். உணவு சீரணமாகாமல் அப்பொழுது தான் சாப்பிட்டது போன்ற புளிப்பில்லாத ஏப்பம் ஏற்படும்.

2. வாதத்தின் சீற்றத்தினால் உண்டாகும் அசீரணம் [3]விஷ்டப்த்தம் எனப்படும்.

இந்த அசீரணமானது வயிற்று வலி, வயிற்றுப் பொருமல் வாதத்தினால் ஏற்படும் வேதனைகள், மலம், வாதம் வெளி வராதிருத்தல் இவற்றைத் தோற்று விக்கும்.

---

1. விஷூசிகா—பலவிதமான வேதனைகளை ஏற்படுத்தி வாயு முதலானவற்றை சீற்றமடையச் செய்து உறுப்புகளை எல்லாம் ஊசியால் குத்துவதுபோல் துன்பம் உண்டுபண்ணும் பிணி. இது, தகர்தகாரி சிகிச்சை —நோய்க்கோ நோயின் காரணத்திற்கோ எதிரிடையான குணங்களையுடையதாக இல்லாமலிருந்தாலும், இவைகளை போக்கக்கூடிய செய்கையை உண்டு பண்ணக் கூடியசிகிச்சை முறை.

   உதாரணமாக : கபதோஷத்திலுண்டான நீர் வேட்கைக்கு வென்னீர் குடிப்பதனுல்இந்த வென்னீரினுடைய சூடு கபத்தை உருக்கி வேண்டிய நீர்த் தன்மையை உடலுக்குத்தந்துவேட்கையைத் தணிப்பது.
2. ஆமம்—கபம், சீற்றமடைவதால் உணவு, சிறிதும் பக்குவமாகால் தங்கி விடுவது.
3. விஷ்டப்த்தம்—சீரணமாகக் கூடாமலும், வெளிவராமலும் குடலிலே தகையப்பட்டது.

பித்த சீற்றத்தினால் ஏற்படும் அசீரணம் [1]விதக்தம் என வழங்கப்படும்.

இந்த அசீரணத்தால் தலைசுற்றல், நாவறட்சி, மூர்ச்சை, பித்தத்தால் ஏற்படும் துன்பங்கள், புகைபோன்று வெளிவரும் புளிப்பு ஏப்பம், வியர்வை, உடல் எரிச்சல் இவை உண்டாகும்.

18. அசீர்ணங்களுக்கான சிகிச்சை முறை

ஆமாசீரணத்தில் லங்கன (பட்டினி போடுதல்) சிகிச்சையும், விஷ்டப்த அசீர்ணத்தில் வியர்வையைப் பெருக்கும் சிகிச்சையும், விதக்ததா அசீரணத்தில் வமன (வாந்தி எடுக்கச் செய்தல்) சிகிச்சையும். அல்லது அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு எவ்வித சிகிச்சை ஏற்றதோ அதைச் செய்ய வேண்டும்.

19. விலம்பிகையும் அதன் சிகிச்சையும்

ஆமாசீரணம் மிகவும் அதிகப்பட்டு அதன் குற்றம், உடலில் உள்ள தாதுக்களில் பற்றிவிட்டால் அந்நிலைக்கு [2]விலம்பிகா என்று பெயர். இதில் கபம், வாதம் இவ்விரண்டு குற்றங்களினால் ஏற்படும் அசீரணத்தின் குறிகளும் கலந்து காணப்படும். இதற்கும் அவ்வாறே அவ்விரண்டுக்கும் செய்யப்படும் சிகிச்சையைக் கலந்து பயன்படுத்த வேண்டும்.

20. இரஸசேஷா சீர்ணம்[3]

புசித்த உணவு சீரணித்த பின் மிகுதியுள்ள ரசத்தின் காரணமாகத் துவங்கும் அசீர்ணம் இரஸசேஷா சீர்ணம் எனப்படும். அந்நிலையில் உணவில் வெறுப்பும், இதயத்தில் அசுத்தமும், இதயப்பகுதியில் பளுவும் தோன்றும். அந்த நிலையில் புசிக்காமல் பகலில் தூங்கவேண்டும். பசியெடுத்தால் எளிதில் சீரணிக்கும் பொருட்களைச் சிறிதளவு புசிக்கலாம். (54—60)

---

1. விதக்தம்—பித்தத்தின் சூட்டினால் மிகவும் எரிக்கப்பட்டது
2. விலம்பிகா—விஷத்தன்மையுள்ள இரஸதாது உடல் எங்கும் பரவுவதால் குத்தல், குடைதல் ஏற்படுவது.
3. இரஸசேஷாசீர்ணம்—உண்ட உணவு சீரணித்த பின் மிகுதியுள்ள ரசத்தின் காரணமாக ஏற்படும் அசீரணம்.

உடலில் உள்ள சடராக்னி நல்ல நிலைமையில் உள்ளவன் உண்ட உணவு, நான்கு யாமத்திலும் (12 மணி) உண்ட மருந்து இரண்டு யாமத்திலும் (6மணி) சீரணமாகின்றது.

உடலில் உள்ள சடராக்னி வலுவாயிருந்தால் அவனுடைய பலம், உடல் நிலை இவற்றிற்கு ஏற்பக் கொடுக்கப் பட்ட உணவும் மருந்தும், விரைவில் சீரணமாகிவிடும். சடராக்னி குறைவாக இருந்தால் மருந்தும் உணவும் தாமதமாக சீரணக்கும்.

அதனால் உணவுடன் சேர்த்தே மருந்தைக் கொடுக்க வேண்டும். காலைவேளை உண்ணும் உணவு, உடலுக்கு ஏற்ற தாயும், எளிதில் சீரணிப்பதும், சடராக்னியை வளர்ப்பதும், உடலை வளர்க்கக் கூடியதாயுமிருக்க வேண்டும்.

காலை உண்ட உணவு சீரணிக்காவிடினும் மாலை உட்கொள்ளும் உணவினுல் தீமை உண்டாகாது. மாலை உட்கொண்ட உணவு சீரணிக்காவிடில் காலை உணவு கெடுதலை உண்டாக்கும்.

ஏனென்றால் எப்படி பகலில் கதிரவனின் கிரணங்களால் தாமரை மலர்கிறதோ அப்படி மனிதனுடைய இதயமும் பகலில் மலர்கிறது.

இதயம் வேலை செய்யத் தொடங்கிவிட்டால் உடலில் உள்ள துவாரங்கள் திறந்து கொள்கின்றன. உடற்பயிற்சி செய்வதாலும் மூளைக்கு வேலை அளிப்பதாலும் சித்தத்தின் செயற்பாட்டினாலும் மனிதனுடைய தாதுக்கள், பகலில் நீர் சேர்ந்து கெடுதியடைவதில்லை.

அதனால் இந்த தாதுக்களில் பொருந்திய உணவு அதிகம் கெடுவதில்லை.

இதற்கு உதாரணம் அதிகமாகக் காய்ச்சிக் கெட்டுப் போகாத (விதக்தம் ஆகாது) பாலில் வேறு பாலைக் கலப்பதினால் அது கெட்டுப் போவதில்லை. அது போல கெடாத காலை உணவில் கலக்கும் மாலை உணவு கெடுவதில்லை.

இரவில் உட்கொண்ட உணவு சீரணமாகாத நிலையில் மறுநாள் காலை உண்ணும் உணவு கெடுதல் உள்ளதாக ஆகிறது. ஏனென்றால் இரவில் இதயம், களைத்துப்போய் முழுஅளவில் வேலையில் ஈடுபடாததனால் வழிகள் அடைபட்டு

விடுகின்றன. அதனால் தடைபட்ட தாதுக்கள் குடலில் திரவமாக ஆகிறது. திரவமான தாதுக்களில் படிந்த சீரணமாகாத உணவு கெட்டு விடுகிறது.

காய்ச்சப்பட்டு கெட்டுப்போன பாலில் கலக்கப்பட்ட நல்ல பாலும் கெடுகிறது. ஆகையினால் இரவு வேளையில் உண்ட உணவு சீரணிப்பதற்கு முன்பு மறுநாள்காலை உணவு உட்கொள்ளக்கூடாது.

21. உணவு சீரணத்திற்கு அறிகுறிகள்

சுத்தமான ஏப்பம், உற்சாகம், சரியான முறையில் சிறுநீர், மலம் இவற்றின் போக்கு, உடல் இலேசாக இருத்தல் பசி, தாகம் ஏற்படுதல், இவை உணவு சீரணித்ததன் அறிகுறிகள்.

அநேகமாக கவனக் குறைவால் செய்யும் தவறுகளால் பலவிதமான நோய்கள் தோன்றுகின்றன. உணவில் பேராசை உள்ளவர்களுக்கே விஷூசிகா என்னும் வாந்திபேதி ஏற்படுகிறது.

பித்தம் அதிகமாயுள்ளவரிடத்தில் வாதம், கபம் இவற்றினால் தடுக்கப்பட்டு குடலில் ஒரு பகுதியில் மறைந்து, சீரணமாகாத உணவு சடராக்னி பலத்தைக் குறைப்பதில்லை. இதனால் பொய்ப்பசி ஏற்படுகிறது. அந்நிலையில் உண்ட உணவு நஞ்சாக மாறி அறிவிலிகளை மாய்த்து விடுகிறது.
(61—71)

அஷ்டாங்கசங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் ''மாத்ராசிதீயம்'' எனும் பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

*த்விவித ஔஷத விஞ்ஞாநீயம்

த்விவித ஔஷத விஞ்ஞாநீயம் என்ற அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. மருந்து வகை

மருந்து இரு வகைப்படும். ஒன்று ஊர்ஜஸ்கரம். ஆரோக்கியமான உடலுக்கு பலம் சக்தி) நிறம், வளர்ச்சி இவற்றை அளிப்பது.

மற்றொன்று ரோகக்னம் பிணியைப் போக்கவல்லது. இரு வகை மருந்துகளும் இரண்டு வித நலன்களையும் அளிக்கக்கூடியவை. அதாவது சக்தி, நிறம், வளர்ச்சி, இவற்றை அளிக்கும் மருந்துவகை பிணிகளையும் அகற்றும். பிணியை அகற்றும் மருந்து வகை சக்தி, நிறம், வளர்ச்சி போன்றவற்றையும் அளிக்கும்.

இவ்விரண்டுக்கும் உள்ள [வேறுபாடு—எந்த மருந்துவகையில் எந்தக் குணங்கள் அதிக அளவில் உள்ளனவோ அந்த மருந்து வகை அந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது.

[1]ஊர்ஜஸ்கரம், [2]இரசாயனம் [3]வாஜீகரணம் என்று இருவகைப்படும். [4]ரோகக்னம் என்பதையும், பிணியைத் தணிப்பது, பிணியை மறுபடியும் தோன்றாமலிருக்கச் செய்வது என இரு வகையாகப் பிரிக்கலாம்.

---

*த்விவித ஔஷத விஞ்ஞாநீயம்—இரு வகை மருந்துகளை விளக்குவது.

1. ஊர்ஜஸ்கரம்—உடல் நலமுள்ளவனுக்கு வலிவையும் நிறத்தையும் அளிக்கக்கூடியது.
2. இரசாயனம்—விரைவில் முதுமை உண்டாகாமலும் உடலுக்கு வலுவூட்டி நோய்களையும் போக்கக் கூடியது.
3. வாஜீகரணம்—ஆண் பெண் உறவு நன்கு பயன்தரக் கூடிய வகையில் உடலுக்கும் புலன்களுக்கும் வலிவு அளித்து 'மலடு' நீங்கவும் காரணமாகும்.
4. ரோகக்னம்—நோயைப் போக்குவது.

அதேபோல் [1]திரவியம் [2]அத்ரவியம் என மருந்துகள் இரண்டு வகைப்படும்.

நிலத்தைச் சார்ந்தது, நிலத்தைப் பிளந்து கொண்டு வருவது (மரம், செடி முதலியன) ஜங்கமம் (பிராணிகளிடமிருந்து கிடைக்கும் பொருள்கள்) என திரவியம் மூவகைப்படும்

இவற்றில் பொன் முதல் உப்பு வரை சொல்லப்படுகின்ற மருந்து வகை வெகுவாக நிலத்தைச் சார்ந்தவைகளே. வனஸ்பதி, வானஸ்பத்யம், வீருதம், ஔடதம் என நிலத்தைப் பிளந்து கொண்டு வருவனவற்றை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

இவற்றில் பழங்களை மாத்திரம் உடையது வனஸ்பதி எனச் சொல்லப்படுகிறது. மலர்கள், பழங்கள் இவற்றையுடையது வானஸ்பத்யம் ஆகும். கொடி, புதர் இவற்றைச் சார்ந்தது வீருதமாகும். பழங்கள் முற்றியபின் அழியக் கூடியதை ஔடதம் எனக் கூறலாம். பிராணிகளிடமிருந்து உண்டாகும் தேன், நெய் போன்ற பொருட்களை ஜங்கமம் என அழைக்கிறோம்.

'அத்ரவ்யம்' — உபவாசம் (பட்டினி இருத்தல்) காற்று, வெயில், நிழல், [3]மந்திரம், தேற்றுதல், பிறருக்கு அளித்தல், பயம், மிரட்டுதல், குலுக்கல், மகிழச் செய்தல், அதட்டுதல், தூங்குதல், விழித்தல் உடற்பிடித்தல் முதலியவை அத்ரவியங்கள் வகையைச் சேர்ந்தவை.

(அ) தெய்வத்தைச் சார்ந்தவை. (ஆ) யுக்தியைச் சார்ந்தவை, (இ) நற்குணத்தைச் சார்ந்தவை என மேலும் மருந்து மூவகைப்படும்.

---

1. திரவியம்—மூலிகைகள் இரஸாயனப் பொருள்கள் முதலியன.
2. அத்ரவியம்—உபவாசம் (பட்டினியிருத்தல்) முதலியவை.
3. மந்திரம்—வேதச் சொற்கள்.

(அ) மந்திரம், ஔடதம், [1]மணி, [2]மங்கலம், [3]பலி, [4]காணிக்கை, [5]வேள்வி, [6]நியமம் (கட்டுப்பாடு) பிராயச் சித்தம் (பாவத்தைக் கழிக்கச் செய்யும் சடங்கு) பட்டினி கிடத் தல், மங்கலச் சொற்கள் கூறுதல், வணங்குதல், புனிதத் தலங் களில் நீராடச் செல்லுதல் முதலியன தெய்வத்தைச் சார்ந்த மருந்து வகைகளாகும்.

(ஆ) உடல் நிலைக்கு ஏற்றவாறு தேவையான உணவு மருந்து வகைகளைப் பரிசீலித்துக் கொடுப்பது யுக்தி எனப்படும்.

தீமை விளைவிக்கக்கூடிய பொருட்களிடமிருந்து மனத்தைக் கட்டுப்படுத்துவது நற்குணத்தைச் சார்ந்த மருத்துவத்தின் பால்படும்.

மேலும் மூவகை மருந்துகள்

அபகர்ஷணம் — உடலுக்குள் உள்ள தோஷங்களை வெளி யேற்றுதல்.

ப்ரகிருதி விகாதனம் — இயற்கைக்கு எதிரிடையானது.

நிதானத்தியாகம் — காரணமின்மை.

உடலின் வெளிப்புறத்திலிருப்பது, உடலின் உள்ளே இருப் பது என அபகர்ஷணம் இருவகைப்படும்.

நரம்புச் சுருட்டல், கொப்புளம், கண்களின் கீழ்ப்பகுதி யில் தோன்றும் கட்டி, போன்றவை வெளிப்புறத்தில் தோன் றுபவை, அவற்றிற்கு கை, ஆயுதம், இவற்றால் சிகிச்சை செய்ய வேண்டும்.

உடலின் உள்ளே இருப்பது, வாந்தி பேதி இவற்றால் உண்டாகுபவை.

---

1. மணி—ஒரு வகை இரத்தினம்.
2. மங்கலம்— நற்செயல்.
3. பலி— பூசை— கிரகங்களுக்குப் பலியிடுதல்.
4. காணிக்கை— அன்பளிப்பு.
5. வேள்வி— யாகம்.
6. நியமம்— கட்டுப்பாடு.

ப்ரகிருதி விகாதனம் என்ற (வளர்ச்சியடைந்த குற்றத்திற்கு) இயற்கைக்கு எதிரிடையானது என்றால் தோஷங்களை சமநிலைப்படுத்தி குணப்படுத்துதல் என்பது பொருள். இதைச் சமனம் என்று கூறுவர்.

எண்ணெய் தேய்த்துக் குளித்தல், வியர்வை வெளிப்படுத்துதல், மேற்பூச்சு, (பற்றுப் போடுதல்) மருந்து ஊற்றுதல், உடலைப் பிடித்து விடுதல் போன்றவற்றினால் குணப்படுத்தும் முறை [1]பாஹ்யம் (உடலின் மேற்சிகிச்சை) எனப்படும். உடலுக்குள் சென்று தோஷங்களை மாறுபடச் செய்யாமல் தணிப்பது. [2]ஆப்யந்தரம் (உட்சிகிச்சை) எனப்படும். நிதானத்தியாகம் – என்ற காரணமின்மை என்பதற்கு நோய்க்குக் காரணமான குளிர், வெப்பம், ஆசனம் போடுதல், உடற்பயிற்சி இவற்றை விடுதல் எனப்பொருள். மேலும்–

எண்ணெய்ப் பசையுள்ளதும், வறட்சியை அளிக்கக்கூடியதுமான உணவுப் பொருட்களை விட்டு விடுதலுமாகும்.

இவற்றில் ஆயுதத்தால் குணப்படுத்தக்கூடிய நரம்புச் சுருட்டல் போன்றவற்றிற்கும் மருந்தை உட்கொள்ளச் செய்யலாம். ஆனால் மருந்தினால் போக்கக்கூடிய நோய்களை நீக்கும் விஷயத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்தலாகாது.
(3— 6)

இந்த மருந்து மேலும் மூன்று வகையுடையது.

அ. காரணத்திற்கு எதிரிடையானது.

ஆ. நோய்க்கு எதிரிடையானது.

இ. நோய், நோயின் காரணம் இரண்டையும் தணிக்கக் கூடியது.

1. இவற்றில் முதலாவதான காரணத்திற்கு எதிரிடையான என்ற மருந்துகள்

குருகுணமுள்ளதும், எண்ணெய்ப் பசையுள்ளதும், குளிர்ச்சியுடையதுமான பொருட்களால் உண்டாகும் நோய்களுக்கு

1. பாஹ்யம்— வெளிப்பிரயோகம்.
2. ஆப்யந்தரம்— உட்பிரயோகம்.

இலகு, வறட்சி, உஷ்ணம் இவற்றை அளிக்கும் மருந்தைக் கொடுப்பது.

இதேபோன்று இவற்றிற்கு எதிரிடையான [1]இலகு, வறட்சி, உஷ்ணம் இவற்றால் தோன்றும் நோய்களுக்கு [2]குரு, [3]ஸ்நிக்தம், குளிர்ச்சி இவற்றை அளிக்கும் மருந்தை அளிப்பது.

2. நோய்க்கு எதிரிடையான சிகிச்சை

[4]ஸ்நேகம், [5]ஸ்வேதம், [6]வமனம், [7]விரேசனம், [8]வஸ்தி என்னும் ஐவகை கர்மங்களும், புகைபிடித்தல், மையிடுதல், இளகச் செய்தல், ஒத்தடம் கொடுத்தல், உடைத்தல் ஆகிய இவையும் நோய்க்கு எதிரிடையான சிகிச்சை முறைகளாகும்.

மேற்கூறிய வகையில் தோஷங்களைத் தணித்துக்கொண்டே மற்ற சில விஷயங்களையும் பின்பற்ற வேண்டும்.

எடுத்துக்காட்டாக காய்ச்சலில் கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், கஞ்சி வகை உணவும் சிறந்தவை.

நீரழிவு நோயில் மஞ்சளும், யவம் எனும் தானியத்தால் செய்யப்பட்ட உணவும் முக்கியமானவை.

மேல் நோக்கிச் செல்லும் ரத்தபித்தம் எனும் நோயில் மலம் கழிக்கச் செய்தலும், கீழ்நோக்கிச் செல்லும் ரத்த பித்த நோயில் வாந்தி செய்விப்பதும் மேலானது.

---

1. இலகு, 2. குரு—திரவியங்களுக்கு, இலகு, குரு என்று இரண்டு குணங்கள் உண்டு. அவற்றுள் குடல் முதலியவற்றிற்குத் துன்பத்தைத் தராமல் எளிதில் சீரணமாகக்கூடிய பொருட்கள் இலகு குணமுள்ளவை. சிறிது அல்லது மிகுந்த முயற்சியினால் நீண்ட நேரத்திற்குப்பின் சீரணமாகக்கூடிய அல்லது சீரணமாகாத பொருட்கள் குரு குணம் உள்ளவை.
3. ஸ்நிக்தம்—எண்ணெய்ப் பசையுடன் கூடிய தன்மை அல்லது வறட்சியில்லாத் தன்மை.
4. ஸ்நேகம்—உடலில் எண்ணெய்ப் பசையுண்டுபண்ணக் கூடியது.
5. ஸ்வேதம்— மருந்து மூலம் வியர்வை உண்டாக்குதல்.
6. வமனம்— வாந்தியெடுக்க மருந்து கொடுப்பது.
7. விரேசனம்— மலங்கழிக்க மருந்து கொடுப்பது.
8. வஸ்தி— ஆசனவாயின் வழியாக மருந்தைச் செலுத்துதல்.

3. நோய், நோயின் காரணம், இரண்டையும் குணப்படுத்துவது

இது தெய்வத்தைச் சேர்ந்த மணி, மந்திரம், போன்றவைகளும், நோயின் தன்மைக்கு எதிரிடையாக ஆகாமல் நோயைக் குணப்படுத்தலுமாகும்.

அவ்வாறே வாந்தி எடுக்கும்போது வாந்தி எடுக்கும் மருந்தைக் கொடுப்பது, பேதி ஏற்படும்பொழுது, பேதி மருந்து அளிப்பது.

கள் வெறியில், உயர்ந்த மதுவகைகளை மேலும் அளிப்பது. தீயினால் சுட்டு குணமாக்கவேண்டிய நோயில் நன்றாகச் சூடு இடாமல் போன நிலையில் மறுபடியும் முறையாகச் சூடு வைத்தல், பித்தம் உள்ளே மறைந்திருந்தாலும், வழி தவறிச் சென்றிருந்தாலும், வியர்வை உண்டாக்கும் முறை, கசப்பு, புளிப்பு, உப்பு, கடுமை, தீக்ஷ்ணம், உஷ்ணம் இவைகளை அளிக்கும் உணவு வகைகளை அளிப்பது. அதன்மூலம் பித்தத்தை வெளிப்படுத்துவது அல்லது தன்வழிச் செலுத்துவது.

தாதுக்களில் ஆழ்ந்து கபம் மறைந்திருந்தாலும், தடைப்பட்டிருந்தாலும் அதை அகற்ற வெளிப்புறத்தில் குளிர்ந்த தான சிகிச்சை முறைகளைச் செய்தல் வேண்டும், இந்தக் குளிர்ச்சியான பணிவிடையால், உடலின் பிறபாகங்களிலுள்ள வெப்பம் வெளிவராமல் நெருக்கப்பட்டு உள்ளே சென்று கபத்தை உருக்கி விடுகிறது.

இம்மாதிரி, நோய்க்கும் நோயின் காரணத்திற்கும் எதிரிடையில்லாத மருந்துகளும் செய்கைகளும்கூட இவ்ற்றிற்கு எதிரிடையான நிலையை ஏற்படுத்தி நல்ல மருந்தாக வியாதியை குணப்படுத்துகின்றன. *(7— 9)*

தாக்குண்டு துன்புறுதல், நீரில் மூழ்குதல் முதலான மருந்தல்லாதது என்பதும் பாதனம், அநுபாதனம் என இரு வகைப்படும்.

1. பாதனம் என்றால் உடலுக்குத் தீங்கிழைத்து உடனே உயிரைப் போக்கக்கூடியது.

2. அநுபாதனம் என்பது உடலுக்குத் தீங்கு விளைவிப்பதால் நாளடைவில் உயிரை மாய்ப்பது. *(10)*

இதன் பிறகு சுவை, வீரியம் முதலிய வேற்றுமைகளைக் கொண்டு பொதுப்படையாக மருந்துகளின் ஒரு பகுதியை எடுத்துக் கூறுவோம்.

4. தங்கத்தின் குணங்கள்

தங்கம் உடலுக்கு வலுவைத் தரும். பசையுள்ளது. சுவையிலும் சீரணித்த பின்பும் இனிப்புச் சுவையளிக்கும். நஞ்சை நீக்கும். குளிர்ச்சியை அளிக்கிறது. சிறிதளவு துவர்ப்புச் சுவையுடையது. விரைவில் முதுமையுண்டாகாமல் உடலுக்கு வலுவூட்டி நோய்களைப் போக்கவல்லது.

5. வெள்ளியின் குணங்கள்

வெள்ளி பசையுள்ளது. அதில் துவர்ப்புச் சுவையிருக்கும். புளிப்பானது. மலத்தை இளக்கச் செய்யும். சீரணித்த பின்பு இனிப்புச் சுவையையளிக்கும். முதுமையைத் தடுத்து நீண்ட ஆயுளைத் தரும். குளிர்ச்சியை உண்டாக்கும். கபம் முதலியவற்றைக் கல்லி வெளிப்படுத்தும். வாதம், பித்தம் இவற்றைப் போக்கும்.

6. தாமிரத்தின் குணங்கள்

சிறிது கைப்பும், இனிப்பும் துவர்ப்பும் அதிலிருக்கும். இலகுவானது, தோஷங்களைக் கல்லி வெளிப்படுத்தும். வயிற்றில் சீரணமாகும்போது அது கார்ப்பாக மாறும். கபம், பித்தம் இவற்றாலுண்டாகும் கோளாறுகளை நீக்கி குளிர்ச்சியைத் தரும். புண்களை ஆற்றும்.

7. வெண்கலத்தின் குணங்கள்

இது கசப்புச்சுவையும் துவர்ப்புத் துணைச் சுவையுமுடையது. கண்களுக்கு தெளிவைத் தரும். வறட்சியானது. பித்தம், கபம் இரண்டையும் போக்கும். இலகுகுணமுள்ளது. தெளிவைத் தரும்.

8. பித்தளையின் குணங்கள்

சிறிதளவு கசப்பும், உப்புச் சுவையும் இதிலுண்டு. மலத்தை இளக்கும், பாண்டுநோய், கிருமிகள், வாதம் இவற்றை அழிக்கும். உடலிலுள்ள தாதுக்களையாவது மலங்களையாவது கல்லி வெளிப்படுத்தும். சிறிதளவு பித்தத்தைத் தரும்.

9. ஈயம், காரீயம்

இவையும் பித்தளையின் குணங்களையே கொண்டவை.

10. கருநிற இரும்பின் குணங்கள்

கண்களுக்கு இதம் அளிக்கக்கூடியது. துவர்ப்பு, இனிப்பு, கசப்புச் சுவையுடையது. உடலிலுள்ள மலங்களை வறளச்

செய்து வெளியேற்றுவது, வாதத்தை வளர்க்கக்கூடியது. குளிர்ச்சியானது. கிருமி, குஷ்டம், கபம் இவற்றைக் குறைக்கக்கூடியது. உடல் தளர்ச்சியையும் நரையையும் தர வல்லது. பாண்டு நோயையும் உடல் இளைப்பையும் வீக்கத்தையும் தணிக்கவல்லது.

11. எஃகு இரும்பின் குணங்கள்

கருநிற இரும்பின் குணத்தையே இதிலும் காணலாம். ஆனால் மூட்டுக்களை நெகிழச் செய்து ஓஜஸ் எனும் வீர்யத்தைத் தாதுக்களிலிருந்து விலக்கும் குணமுள்ளது. எளிதில் சிரணமாகாதது. *(11—16)*

12. இரத்தினங்களின் வகை

பத்ம ராகம், மகா நீலம், புஷ்பராகம், வைடூர்யம், முத்து, பவழம், வஜ்ரம், இந்த்ர நிலம், கோமேதகம், ஸ்படிகம் என இவை இரத்தினங்கள் எனப்படும்.

இவை மலத்தை இளகச் செய்து குளிர்ச்சியைத் தரக் கூடியவை. துவர்ப்பு, இனிப்புச் சுவையுடையவை. உடலிலுள்ள மலங்களை வறளச் செய்து வெளிப்படுத்தும் குணமுடையவை.

இவற்றை அணிவதால் கண்பார்வை அதிகரிக்கும். பாவம் விலகும். வறுமை அகலும். நஞ்சு நீங்கும். அதிர்ஷ்டத்தை அளிக்கும். வீர்யத்தை அளித்து ஆயுளை வளர்க்கும். உள்ளத்திற்கு உவகையளித்து நன்மையைப் பயக்கும். *(17—20)*

அதில் சிறிதளவு க்ஷாரகுணமும், வெப்பத்தை அளிக்கும் தன்மையும் உள்ளன. காசம் என்ற உப்பைக் கண்களுக்கு மையாகத் தீட்டிக் கொண்டால் பார்க்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

13. சங்கு, கடல் நுரை இவற்றின் குணங்கள்

இவை குளிர்ச்சியானவை. துவர்ப்புச் சுவையுடன் இலகு குணமுள்ளவை. உடலில் உள்ள மலத்தை வறளச் செய்து வெளிப்படுத்துவதிலே சிறந்தவை.

14. மயில் துத்தம்

காரம், சிறிதளவு க்ஷார குணமும் அதிலிருக்கும். துவர்ப்பானது. தெளிவானது. இலகு குணமுள்ளது. உடலில் உள்ள

மலத்தை வறளச் செய்து வெளிப்படுத்தும் தன்மை அதிலுள்ளது. மலத்தை வெளிப்படுத்தி பார்வையை அதிகரித்து கிருமிகள், அரிப்பு, நஞ்சு இவற்றை விலக்கி நன்மையைத் தரும்.

15. பொன் சிலாசத்து

தெளிவு, எண்ணெய்ப்பசை, துவர்ப்புக் கலந்த இனிப்பு, குளிர்ச்சி இவைகள் இதிலுள்ளன.

16. மனோ சிலை

கபத்தைப் போக்கி, துவர்ப்பும், உறைப்பும் கொண்டு உடலில் உள்ள மலத்தை இளகச் செய்து, காரகுணம் கொண்டு எண்ணெய்ப் பசையுடன் விளங்குகிறது.

17. அரிதாளம்

துவர்ப்புச் சுவை. காரகுணம், நஞ்சை நீக்கும் தன்மை, எண்ணெய்ப்பசை ஆகியவற்றுடன் விளங்குகிறது. இது.

(21—24)

18. [1]ஸ்ரோதோஞ்சனம், [2]ஸௌவீராஞ்சனம்

துவர்ப்பு, இனிமை, குளிர்ச்சி, மலத்தை வெளிவரச் செய்தல், எண்ணெய்ப்பசை இவைகளுடன் கூடியன. இரத்த பித்தம், நஞ்சு, வாந்தி, விக்கல் இவற்றைப் போக்கும். பார்வையைத் தூய்மைப்படுத்தும். இந்த அஞ்சனங்களில் (மை) [1]ஸ்ரோதோஞ்சனம் உயர்ந்தது. இதற்கு அடுத்ததாக [2]ஸௌவீராஞ்சனம் கருதப்படும்.

19. ரஸாஞ்சனம்

கபத்தைப் போக்கி, கசப்புக் கலந்த உவர்ப்புச் சுவையுடன் கூடி, பிளக்கும் தன்மை கொண்டு சிறிதளவு சூடாக விளங்கும் இது. கண்களுக்கு நன்மை ஏற்படும். சரியாகச் சீரணமாகும். உடலுக்கு உஷ்ணத்தைத் தரும்.

20. ஸௌவர்ச்சலம் என்ற உப்பு (வளையல் உப்பு)

இலேசானது, மனதிற்குகந்தது, நறுமணமுள்ளது, சுத்தமான ஏப்பத்தை உண்டுபண்ணக்கூடியது. சீரணமான பின் உவர்ப்புள்ளது. மலக்கட்டை நீக்குவது. சடராக்னியைத் தூண்டிவிடக் கூடியது. சுவை அளிக்கக் கூடியது.

---

1. ஸ்ரோதோஞ்சனம்—நீல நிறமுள்ள அஞ்சனக்கல்.
2. ஸௌவீராஞ்சனம்—சிறிது வெண்மையான ஒருவித அஞ்சனக்கல்.

21. பிடம் என்னும் உப்பு

வாய், ஆசனவாய் இரண்டின் வழியாகவும் கபவாயுவை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தது. சடராக்னியைத் தூண்டி விடக்கூடியது. மலக்கட்டு, வயிற்றுப் பொருமல், உடல் பருமன் இவற்றை அகற்றும்.

22. கடலுப்பு

முடிவில் இனிப்பானது. குரு குணமுள்ளது. கபத்தை வளர்க்கும் தன்மையது.

22. அஉவர்ப்பு உப்பு

சிறிது கசப்பானது. கார குணமுள்ளது. எரிக்கக்கூடியது. கொடுமையானது. வழவழப்பைத் தரக்கூடியது.

23. கரு நிற உப்பு

இந்த உப்பில் வளையல் உப்பில் உள்ள குணங்கள் யாவும் உள்ளன. ஆனால் இதற்கு மணம் கிடையாது.

24. உவர் மண்ணுப்பு

தூசியிலிருந்து தயாரிக்கப்பட்டது. இலேசானது. கொஞ்சம் க்ஷார குணமுள்ளது. கபத்தை உண்டுபண்ணக் கூடியது. கனமான பொருள்.

பொதுவாக உப்பு என்றால் இந்துப்பையே பயன்படுத்த வேண்டும். *(25—35)*

25. யவ க்ஷாரம்

குன்மம், க்ரஹணி, பாண்டு, மண்ணீரலில் ஏற்படும் நோய், வயிற்றுப் பொருமல், தொண்டை நோய், சுவாச நோய், மூலம், கபம், வாதம் இவற்றால் தோன்றும் நோய் இவற்றைப் போக்கடிப்பது.

26. சிலாசத்து

இனிப்பானது, விக்கலைத் தணிக்கும். இருமல், சிறுநீர் தொடர்புள்ள நோய், காசநோய், இவற்றைப் போக்கும். கபத்தை விலக்கும். உஷ்ண வீர்யமுடையது. உவர்ப்புச் சுவையுள்ளது. சிறந்த [1]ரசாயனப் பொருள். கசப்பானது. பிளக்கும் தன்மை வாய்ந்தது.

---

1. ரசாயனம்—முதுமையையும் நோய்களையும் நீக்கும் பொருள்.

எந்தப் பொருளுடன் சேர்த்தாலும் தன் குணத்தை விடாமல் அவற்றின் குணத்தை எடுத்துக் கொள்ளும் தன்மையுடையதால் எல்லா வகை நோய்களையும் அழிக்கக்கூடிய திறமை வாய்ந்தது.

குறிப்பாக நீர்ச்சுருக்கு, சிறுநீர் தொடர்பான நோய், மூலநோய், சோகை, வீக்கம், கபம் இவற்றை நீக்கும் தன்மையுடையது.

27. மூங்கில் உப்பு

துவர்ப்புக் கலந்த இனிப்புச் சுவையுடையது. வறட்சித் தன்மை வாய்ந்தது. இருமல் நோயைப் போக்கும்.

28. குகை நீர்

காசம், சுவாசநோய், இருமல் இவற்றைப் போக்க வல்லது. இனிமையானது. குளிர்ச்சி பூண்டது.

29. எல்லாவித உப்புகள்

உருகும் தன்மையுடையவை. நுண்ணியவை. மலத்தை வெளிப்படுத்துபவை. மிருதுவானவை, வாதத்தைப் போக்க வல்லவை. சீரணத்தை உண்டுபண்ணக்கூடியவை. உஷ்ணமானவை. சுவையைக் கூட்டுபவை. கபத்தையும் வாதத்தையும் விலக்கக் கூடியவை.

30. இந்துப்பு

சிறிதளவு சுவையுடையது. ஆண்மையை வளர்ப்பது. மனதிற்கு நல்லது. வாதம், பித்தம், கபம் மூன்றையும் போக்க வல்லது. இலேசானது, சிறிதளவு உஷ்ண குணமுள்ளது.

31. ஸ்வர்ஜ க்ஷாரம்

யவக்ஷாரத்தைக் காட்டிலும் குணத்தில் குறைவானது. ஆனால் எரிக்கும் தன்மை அதிகமாகக் கொண்டது. க்ஷாரங்களுள் இது மிகவும் உக்ரமானது. உஷ்ணமானது. புழுக்களை அழிக்கக் கூடியது. இலேசானது.பித்த இரத்தத்தைக் கெடுக்கக் கூடியது. சீரணிக்கச் செய்வது. மனதிற்குகந்தது. பிளக்கக் கூடியது. உடைக்கக் கூடியதும்கூட.

உவர்ப்பு ரசமுள்ள உப்புகள், சுக்லம், ஓஜஸ், கேசம், கண்கள் இவற்றிற்கு நல்லதல்ல. (36—38)

32. கடுக்காயின் குணங்கள்

துவர்ப்புச் சுவையும், சீரண மானபின் இனிப்புச் சுவையும் இதில் இருக்கும். உப்பைத் தவிர மீதமுள்ள ஐந்து சுவைகளுடன் கூடியது. இலேசானது. சடராக்னியை வளர்க்கும். சீரணத்தை அளிக்கும். அறிவை வளர்க்கும், குறிப்பாக இளமையை நிலைநிறுத்தும். உஷ்ணமான வீர்யம், இளகச் செய்யும் தன்மை, ஆயுளை வளர்க்கும் தகுதி ஆகியவைகளைக் கொண்டது. அறிவு, புலன்கள் இவற்றிற்கு சக்தியளிக்கவல்லது.

குஷ்டத்தினால் வரும் உடலின் நிறமாற்றம், குரல் மாறுபாடு, பழமையான முறைக்காய்ச்சல், தலை, கண்கள் இவற்றில் ஏற்படும் நோய்கள் இவற்றைப் போக்கும்.

இதய நோய், காமாலை, க்ரஹணி, இளைப்பு, வீக்கம், பேதி, நீரழிவு, சிறுநீர் தொடர்பான நோய், வாந்தி, கிருமிகள், இழுப்பு, இருமல், வாயிலிருந்து கபநீர் ஒழுகுதல், மூலம், மண்ணீரலில் தோன்றும் நோய், வயிற்றுப் பொருமல், மஹோதரம் இவற்றை நீக்கும் தன்மையை இதில் காணலாம்.

தொடை தூணைப்போல் பருத்திருத்தல், பசியில்லாமை, என்ற இவ்வித பிணிகளை அகற்றும். கபம், வாதம் இவற்றால் தோன்றும் நோய்களையும் கடுக்காய் தணித்துவிடுகிறது. உடல் துவாரங்களின் அடைப்பை நீக்கும். (39—43)

33. நெல்லிக்காயின் குணங்கள்

நெல்லிக்காயும் கடுக்காயைப் போன்ற குணமுள்ளது. ஆனால் குளிர்ச்சியான வீர்யம் உடையதாலும், இனிப்புள்ளதாலும், குறிப்பாகப் பித்தத்தைப் போக்குவதில் சிறந்தது.

சீரணமானபின் உவர்ப்புக் குணம் கொண்டதால் கபத்தையும், புளிப்பினால் வாயுவையும் குணப்படுத்துகிறது. குரலைச் சீர்ப்படுத்தும். நல்ல பார்வையை அளிக்கும். இதயத்திற்கு இதமானது. நெருப்புப் பறக்கும் காய்ச்சலைத் தணிக்கும்.

34. தான்றிக்காயின் குணங்கள்

நெல்லிக் கனியைக் காட்டிலும் குறைவான குணமுள்ளது. துவர்ப்பும், இனிப்புச் சுவையுமுடையது. குளிர்ச்சியான வீரியமுடையது. இருமல், இழுப்பு, தொண்டைநோய், கபம்,

பித்தம், கண் நோய் இவற்றைப் போக்கும். கூந்தலை வளர்க்கும். இலேசானது.

இந்தக் காயின் விதையினுள்ளே இருக்கும் பருப்பைக் கொண்டு கண்ணுற்கு மை தீட்டினால் கண்ணில் பூ விழுதலைத் தவிர்க்கலாம்.

35. [1]திரிபலா ரஸாயனம்

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இம்மூன்றையும் சமஅளவு எடுத்துத் தூள் செய்து வைத்துச் செய்யும் மருந்து 'திரிபலா ரஸாயனம்' எனப்படும். இது கண்நோய்களை அகற்றும். காயத்தை ஆற்றும். தோல் வியாதியைத் தூக்கி எரியும். பிசுபிசுப்பு, கொழுப்பு, நீரிழிவு, கபம் இவற்றைப் போக்கும். இரத்தத் தொடர்பான நோயை அகற்றும். (44—47)

36. [2]த்ரிஜாதகம்

ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி மூன்றும் சேர்ந்து தயாராகும் மருந்து 'த்ரிஜாதகமாகும்'. இதற்கு 'த்ரிசுகந்தி' என்ற பெயரும் உண்டு. கபம், வாதம் இவற்றால் உண்டாகும் நோய்களை அகற்றும்.

37. சிறுநாகப்பூ

இரத்தத்தினால் உண்டாகும் நோய், இருமல், நஞ்சு, பித்தம், கபம் இவற்றால் தோன்றும் நோய் அனைத்தையும் இது போக்கும்.

38. [3]சதுர் ஜாதகம்

சிறுநாகப்பூவுடன், ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி மூன்றையும் சேர்த்துப் பொடி செய்து தயாராகும் மருந்து 'சதுர்ஜாதகம்' எனப்படும். இது மிக்க குளிர்ச்சியுமன்று, மிக்க உஷ்ணமுமன்று.

39. மிளகின் குணங்கள்

பித்தத்தைச் சீற்றமடையச் செய்யும். தீஷ்ண குணமும், உஷ்ண வீர்யமும் உடையது. வறட்சியை அளிக்கும். சுவையை

---

1. த்ரிபலா—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
2. த்ரிஜாதகம்—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம்.
3. சதுர்ஜாதகம்—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம்.

உண்டு பண்ணக்கூடியது. சடராக்னியை வளர்க்கும். சுவையிலும், சீரணத்திலும் உவர்ப்புக் குணமுள்ளது. கபத்தால் தோன்றும் நோயை அகற்றுவது. இலேசானது.

40. பச்சைத் திப்பிலியின் குணங்கள்

கபத்தை வளர்க்கும். இனிமையானது. குளிர்ச்சியான வீரியமுடையது. எண்ணெய்ப் பசையுள்ளது. குருகுணமுள்ளது.

41. உலர்ந்த திப்பிலியின் குணங்கள்

இந்த உலர்ந்த திப்பிலி பச்சைத் திப்பிலிக்கு எதிரிடையானது. ஆண்மையை வளர்க்கும். காரகுணமுடையது. சீரணத்தபின் இனிக்கும். வாதம், கபம், இருமல், சுவாசநோய் இவற்றைப் போக்கும். மலத்தை இளக்கக்கூடியது.

[1]ரசாயன முறையைத் தவிர திப்பிலியை வேறு ஒன்றிலும் அதிகமாகப் பயன்படுத்தலாகாது. *(48—52)*

42. சுக்கின் குணங்கள்

சடராக்னியை வளர்க்கும். ஆண்மையைப் பெருக்கும். மனதிற்குகந்தது. மலக்கட்டை விலக்கும். சுவையைத் தரும். இலேசானது, சீரணித்தபின் இனிப்பானது, பிசுக்கானது. உஷ்ணம், கபம், வாதம் இவற்றால் தோன்றும் நோய்களைப் போக்கவல்லது.

43. இஞ்சியின் குணங்கள்

சுக்கைப் போன்ற குணமுடையது.

44. [2] திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் கூட்டைத் 'திரிகடுகம்' என்கிறோம். இது உடல்பருமனைக் குறைக்கிறது. சடராக்னிக் குறைவு, சுவாச நோய், இருமல், யானைக்கால், முற்றிப்போன ஜலதோஷம் இவற்றைக் குணப்படுத்துகிறது.

45. செவியம்

இது கண்டந்திப்பிலி, மிளகு இவற்றைவிடக் குறைவான குணமுடையது.

---

1. ரசாயன முறை—விரைவில் முதுமை உண்டாகாமல் உடலுக்கு வலுவூட்டி நோய்களைப் போக்கக் கூடிய முறை.
2. திரிகடுகம்—சுக்கு, மிளகு, திப்பிலி.

46. கொடிவேலி

இது நெருப்பைப் போன்று சீரணிக்கச் செய்யும். வீக்கம், இருமல், கிருமிகளைப் போக்கவல்லது. குஷ்டத்தை அகற்றும்.

47. [1]பஞ்சகோலம்

மிளகைத்தவிர, அரிசித் திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு இவற்றின் கூட்டு 'பஞ்சகோலம்' எனப்படுகிறது. இது குன்மம், மண்ணீரல் தொடர்பான நோய்கள், மகோதரம், வயிற்றுப் பொருமல், வயிற்றுளைச்சல் இவற்றைப் போக்கும். சீரணக்கும் சக்தியை அதிகரிக்கச் செய்யும் தனித்தன்மை இதற்கு உண்டு. (53—56)

48. மகாபஞ்சமூலமும் அதன் குணங்களும்

வில்வம், பெருங்குமிழ், பெருவாகை, பாதிரி, சிறுவழுதுணை இவ்வைந்தின் சேர்க்கைக்கு 'மகாபஞ்சமூலம்' எனப் பெயர். இது துவர்ப்பும், கைப்பும் கலந்த சுவையுடையது. உஷ்ணவீர்யமுள்ளது. கபவாதக் கோளாறுகளையும் அகற்றும்.

49. சிறுபஞ்சமூலமும் அதன் குணங்களும்

கண்டங்கத்திரி, சுத்திரி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, நெருஞ்சில் இவ்வைந்துக்கும் 'இலகு சிறு பஞ்சமூலம்' எனப் பெயர். இதன் சுவையும் விபாகமும் இனிப்பானது. அதிக உஷ்ண வீர்யமுள்ளது. அதிக சீத வீர்யம் இல்லாமல் நடுத்தர குணமுடையது. எல்லா தோஷங்களையும் போக்க வல்லது.

50. நடு பஞ்சமூலமும் அதன் குணங்களும்

சிற்றாமுட்டி, சாறடை, ஆமணக்கு, நரிப்பயிறு, காட்டு உளுந்து, இவ்வைந்தும் ஒருமிக்க சேர்ந்தால் அக்கூட்டு 'நடு பஞ்சமூலம்' எனப்படும். இது கப வாதத்தைப் போக்கும். மலமிளக்கும் தன்மையுடையது. பித்தத்தைச் சிறிது வளர்க்கும், இலகு குணமுள்ளது.

---

1. பஞ்ச கோலம்— திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு.

51. ஜீவந பஞ்ச மூலமும் அதன் குணங்களும்

தண்ணீர்விட்டாங்கிழங்கு, *ஜீவந்தி ஜீவகம் ரிஷபகம், மேதா என்னும் இவ்வைந்தின் சேர்க்கை 'ஜீவநபஞ்ச மூலம்' என்று வழங்கப்படும். கண்களுக்கு நலனைக் கொடுக்கக் கூடியதும், ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் தன்மையும், பித்தத்தையும், வாதத்தையும் போக்கும் குணமும் இதற்கு உண்டு.

52. திருண பஞ்ச மூலமும் அதன் குணங்களும்

தர்ப்பம், ஞாழல், கரும்பு, பேய்க்கரும்பு, சம்பாத்தாள், இவ்வைந்தும் சேர்ந்து 'திருணபஞ்சமூலம்' என்று பெயர் பெறுகிறது. இது பித்தத்தைப் போக்கவல்லது.

53. வல்லி பஞ்ச மூலமும் அதன் குணங்களும்

ஆடு தீண்டாப்பாளை, மஞ்சள், வெண்குப்பாளைக் கிழங்கு, நன்னாரி, சீந்திற்கொடி, இவ்வைந்தும் சேர்ந்து 'வல்லி பஞ்சமூலம்' எனப் பெயர் பெறும்.

54. கண்டக பஞ்ச மூலமும் அதன் குணங்களும்

கண்டங்கத்திரி, தண்ணீர்விட்டாங்கிழங்கு, நெரிஞ்சில், ஜடாமாம்ஸி, கரமந்தம் என இவ்வைந்தும் சேர்ந்து 'கண்டக பஞ்சமூலம்' எனப்பெயர் பெறும். இது வாதம், பித்தம், கபம், மூன்றினாலும் ஏற்படும் தோஷங்களை அகற்றும். (57— 62)

கருஞ்சீரகம், ஓமம், மடல், துத்தம், கொத்தமல்லி, வாய்விடங்கம், இவை உணவின் மணத்தை அழித்து விடுகின்றன. சுவையைக் கூட்டி வைப்பன, சடராக்னியை வளர்ப்பன, கபம், வாதம் இவற்றால் தோன்றும் நோய்களை அகற்றக் கூடியன.

55. பெருங்காய மரஇலையின் குணங்கள்

இது கொடுமையானது. துவர்ப்புச் சுவையுள்ளது, உஷ்ண வீர்யமுள்ளது. கிருமிகளையும், கபத்தால் தோன்றும் நோய்களையும் போக்கவல்லது.

---

*ஜீவந்தீ, ஜீவகம், ரிஷபகம் மேதா எனும் பொருட்களுக்கு மற்ற மொழிகளில் பெயர் கிடைக்கவில்லை.

56. கருப்புக் கடுகின் குணங்கள்

இது பெருங்காய இலையின் குணங்களையுடையது. பூதம், பிரேதம் போன்ற கிரகங்களை விரட்டக்கூடியது. சடராக்னியை நன்கு வளர்ப்பது. வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், இவற்றைப் போக்கக் கூடியது. சுவையை அளிப்பது.

57. ஓமத்தின் குணங்கள்

வயிற்றினுள்ளே உள்ள உறுப்புகளில் தோன்றும் நோய்களைக் கண்டிக்கும்.

58. வெள்ளைக் கடுகின் குணங்கள்

பெருங்காய இலையின் குணத்தைப் போன்ற குணமுடையது. எண்ணெய்ப் பசையுள்ளது. இதயத்திற்கு நல்லதல்ல. (63— 65)

59. பெருங்காயத்தின் குணங்கள்

பெருங்காயம், வாத கபங்களின் கோளாறுகளையும், வயிற்றுளைச்சலையும் வயிற்றுப்பொருமலையும் போக்கும்.

பித்தத்தைச் சீற்றமடையச் செய்யும். சுவையிலும், சீரணித்தலிலும் உவர்ப்புச் சுவையுடையது, சுவையூட்டக் கூடியது. சடராக்னியைத் தூண்டி சீரணக்கச் செய்வது. இலேசானது, பித்தத்தையும் இரத்தத்தையும் சீற்றமடையச் செய்யும்.

காபுல் தேசத்துப் பெருங்காயம் உயர்ந்தது. மற்ற இடங்களில் கிடைக்கும் பெருங்காயம் குணக்குறைவானது. இது உணவுக்கிடவும் புகைபோடவும் பயன்படுகிறது.

சதகுப்பை, கோஷ்டம், தகரவிதை, தேவதாரு, ரேணுகம், ஏலம், வாலுளுவை, ஸாலமரம், புங்குமரம், வச்சோதம், இவை இலகு குணமுள்ளவை. உஷ்ணவீர்யமுடையவை. சீரணத்தபின் உவர்ப்புச் சுவையுடையவை. கபம் வாதம் இவற்றின் கோளாறுகளைப் போக்க வல்லவை.

60. முள்குறிஞ்சி

கசப்புக் கலந்த இனிப்புச்சுவையுடையது. எண்ணெய்ப் பசையுள்ளது. உஷ்ண வீர்யமுடையது. கபம், பித்தம் இவற்றால் தோன்றும் கோளாறுகளையும் விலக்கும்.

61. நெரிஞ்சில்

சிறுநீர்ப்பையில் தங்கியுள்ள சிறுநீர்தட்டுப்பாட்டைப் போக்கி, ஆண்மையை வளர்க்கக் கூடியது. குளிர்ச்சியானது.

(66— 69)

62. இருவகை அதிவிடயம்

கசப்பு, இனிப்புச்சுவையுள்ள அதிவிடயம் சீரணக்கச் செய்கிறது. கபம், பித்தம் இவற்றை விலக்குகிறது. கசப்புச் சுவையுடையது, குளிர்ச்சியானது.

63. கோரைக் கிழங்கு

கபத்தைப் போக்கவல்லது. கசப்பு, உவர்ப்புச் சுவை யுடையது. மலத்தைக் கட்டுகிறது. சீரணக்கச் செய்கிறது.

64. சீந்தில் கொடி

கசப்பான சுவை கொண்டது. கபம், வாதம், பித்தம் என்ற மூன்று தோஷங்களையும் அழிக்கவல்லது. மலக்கட்டை ஏற்படுத்தும். உஷ்ண வீர்யமுள்ளது. முதுமையையும், நோய்களையும் போக்க வல்லது. சடராக்னியை வளர்ப்பது. காய்ச்சல், தாகம், வெப்பம், காமாலை இவற்றைப் போக்கும் தன்மை வாய்ந்தது. வாதம், இரத்தக்கோளாறு இவற்றை விலக்கும்.

65. நிலவேம்பு, பர்ப்பாடகம்

கசப்பானவை, குளிர்ச்சியான வீர்யமுடையவை. குஷ்டம், கிருமிகள், பித்தம், கபம், இவற்றைப் போக்குபவை. துவர்ப்புச் சுவையும் இவற்றில் உண்டு.

66. வேம்பு

குளிர்ச்சியான வீர்யமுடையது. குஷ்டம், புழுக்கள், பித்தம், கபம் இவற்றைப் போக்குவது.

67. மலைவேம்பு

மலத்தை அதிகமாகக் கட்டக்கூடியது. துவர்ப்புச் சுவை கொண்டது. வறட்சியை அளிப்பது. குளிர்ச்சியானது.

(70— 73)

68, குக்கில்

தொட்டால் பிசுக்குத்தன்மை தெரியும். உட்கொண்டால் உடலில் உள்ள துவாரங்களைச் சுத்தப்படுத்தும். உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, இனிப்புச் சுவைகளை அதில் காணலாம். முதுமையையும் நோயையும் போக்க வல்லது. புண்களை ஆற்றக் கூடியது. குரலைச் சரிசெய்யக் கூடியது.

சீரணித்த பின் உவர்ப்புச் சுவை தெரியும். வறட்சியை அளிக்கும். நுட்பமாக வேலை செய்யும். சடராக்னியை வளர்க்கும். வியர்வை, கொழுப்பு, வாயு, கபம், கழுத்தைச் சுற்றி வரும் வீக்கம், நீரிழிவு, ராஜப்பிளவை என்னும் முதுகில் வரும் கட்டி, புழுக்கள், நரம்புச்சுருட்டல், வீக்கம் இவற்றை அழிக்கும். நெகிழ்விக்கும் தன்மையும் உஷ்ணவீர்யமும் இலகு குணமும் கொண்டது.

69. சங்கு புஷ்பம்

மலமிளக்கும் தன்மையும், கசப்பும், பரிசுத்தமும் கொண்டது. புழுக்கள், நஞ்சு இவற்றை அழிக்கவல்லது.

70. அகில் கட்டை

உவர்ப்புச்சுவையுடன் கசப்பும் கலந்து உஷ்ணவீர்யத்துடன் கூடியது. இலேசானது, எண்ணெய்ப் பசையுள்ளது. வாதம், கபம், இவற்றைப் போக்கும் தன்மை உடையது. இரத்தத்தில் உண்டாகும் நோய், நாவறட்சி, எரிச்சல், களைப்பு இவற்றைப் போக்கக்கூடியது. குருகுணமுள்ளது. வறட்சியானது. (74—77)

71. சந்தனம்

வெண் சந்தனம், செந்நிறச் சந்தனம் என இரு வகை கொண்டது. வெண் சந்தனம் சிறிதளவு கைப்பும், இனிப்புச் சுவையும் உடையது. மிகக் குளிர்ச்சியானது.

செந்நிறச் சந்தனமும், விலாமிச்சைவேரும் இலகுவானவை. சீரணிக்கச் செய்பவை. காய்ச்சல், கழிச்சல், வாந்தி இரத்த பித்தம், காயம் இவற்றைப் போக்கக் கூடியவை.

72. அதிமதுரம்

இரத்த பித்தத்தைப் போக்கும். புண்களைச் சுத்தம் செய்து ஆற்றும் தன்மையுடையது. குரு குணமுள்ளது.

இனிப்புச் சுவையுடையது. குளிர்ச்சியான வீர்யமுடையது. ஆண்மையை வளர்க்கும். கண்களுக்குச் சிறந்தது. குரல், நிறம் இவற்றை அளிப்பது. *(78-79)*

73. மஞ்சள்—மர மஞ்சள்

இரண்டும் உவர்ப்பு, கைப்புச்சுவையுடையவை. நீரிழிவு, குஷ்டம், பித்தம், கபம், இவற்றைப் போக்கவல்லவை. அரிப்பு, வீக்கம், அழுகியபுண், நஞ்சு இவற்றிற்குப் பூசினால் அவை நீங்கிவிடும்.

74. நாமக் கரும்பு

கண்களுக்குச் சிறந்தது, குளிர்ச்சியான வீர்யம் உடையது. புண்களை ஆற்றும். துவர்ப்ப, கைப்பு, இனிப்புச் சுவையுடையது. இரத்த பித்தத்தைச் சுத்தப்படுத்துவது. *(80—81)*

75. சித்தாமுட்டி, பேராமுட்டி, மகாபலா

இம்மூன்றும் இனிப்புச்சுவையுடையவை. ஆண்மையை வளர்ப்பவை. எண்ணெய்ப் பசையுள்ளவை. குளிர்ந்த வீர்யம் பெற்றவை. வலுவை அளிப்பவை.

நாகபலா என்ற பேராமுட்டி வலுவை அளிப்பது. காயம் பட்டவருக்கும் வலிவிழந்தவருக்கும் சிறந்தது. குருகுணமுடையது.

76. தாம்பூலம்

உவர்ப்புச் சுவையுடையது. க்ஷாரகுணமுடையது. சுவையளிப்பது. உஷ்ண வீர்யம் உடையது. கபத்தைக் கண்டிப்பது. *(82—83)*

77. கொட்டைப் பாக்கு

மலத்தைப் பிளக்கச் செய்யும், மயக்கத்தைத்தரும். இனிப்பு, துவர்ப்புச் சுவையுடையது. சுவையை உண்டு பண்ணும்.

78. சாதிப்பத்திரி, சாதிக்காய், கிராம்பு, தக்கோலம்

இவை இலகு குணமுள்ளவை. வறட்சியைப் போக்குபவை. மனதிற்குகந்தவை. வாயில் ஏற்படும் கெட்ட நாற்றத்தைப் போக்கவல்லவை.

79. கற்பூரம்

இனிப்பும், கசப்பும் கலந்தது. வறட்சியை நீக்குவது, மலத்தைப் பிளக்கக்கூடியது. குளிர்ச்சியானது.

80. லதாகஸ்தூரிகா

கற்பூரத்தைப் போன்ற குணமுடையது. வாய் உலர்தலைத் தடுக்கும்.

81. தாமரை

துவர்ப்பும், இனிப்பும் கலந்த சுவையுடையது. பித்தம், கபம், இரத்ததோஷம் இவற்றைப் போக்குவது. குளிர்ந்த வீர்யம் உள்ளது.

மகிழம்பூ, சிறுநாகப்பூ, அல்லி, சருநெய்தல், ரோஜா இவற்றில் தாமரை மலருக்குள்ள குணங்களைப் போன்ற குணங்களைக் காணலாம். (84—86)

82. செண்பக மலர்

தாமரை மலரைக் காட்டிலும் குணங்களில் சிறிதளவு குறைந்தது.

83. கோரண்டகம் முதலிய மலர்கள்

கோரண்டகம், பலாசபுஷ்பம், சாதிப்பூ, மல்லிகை மலர், வாயுவைப் போக்கவல்லவை.

84. **சிறுநாகப்பூ** நொச்சி இவற்றிலும் மேற்கண்ட குணங்களைக் காணலாம்.

85. **தாழம்பூ** கபத்தைப் போக்கவல்லது. கைப்புச் சுவையுடையது.

86. **அகத்திப்பூ**. நஞ்சை நீக்கவல்லது.

வாதத்தைப் போக்கவல்லது. துவர்ப்புச் சுவையுடையது. கபம், பித்தம் இவற்றைப் போக்கவல்லது. இந்தப் பூவை முகர்ந்து பார்த்தால் நான்காம்நாள் முறைக்காய்ச்சல் நீங்கிவிடும்.

87. **வேங்கைப்பூ** கபத்தைப் போக்குவது. மலத்தைக் கட்டுவது.

88. காட்டுமுல்லை மேற்கண்ட குணங்களைக் கொண்டது. (87—90)

89. குங்குமப்பூ

கபத்தைப் போக்கும். உஷ்ணவீர்யமுள்ளது. புண்களை ஆற்றும்.

90. கார்போக அரிசி, தகரவிதை

இவ்விரண்டும் இடுப்பு வலி, கபம், வாதம் இவற்றைப் போக்கும். இளைப்பாற்றும். நிறமளிக்கும். கபத்தையும் கொழுப்பையும் அதிகரிக்கச் செய்யும். அழகைத் தோற்றுவிக்கும்.

மேலும் சுகமாக நடமாடுவது, திரிவது, உழைப்பது, வழி நடப்பது, சடராக்னி, பலம், நீண்ட ஆயுள் இவற்றை உண்டு பண்ணுகிறது. வாயுவைச் சரிப்படுத்துகிறது. குதிகால் வாயு, இரு தொடைகளும் தூணைப் போல் பருத்துவிடுவது, களைப்பு இவற்றைப் போக்கவல்லது. (91—93)

91. காலணி. செருப்பு

கால்களைக் காப்பாற்றுவது. பலம், பார்வை, விந்து இவற்றைக் காக்கும் தன்மையுடையது.

92. குடை

நிறத்திற்கு நல்லது. கண்களுக்கு நல்லது. காற்று மழை வெயில் இவற்றிலிருந்து காக்கிறது.

93. எதிர்க்காற்று

வறட்சி, நிறமாறுபாடு, அசையாமலிருக்கச் செய்தல், இவற்றை ஏற்படுத்துகிறது. எரிச்சல், நாவறட்சி, தலை சுற்றல், களைப்பு, சடராக்னி, மூர்ச்சை இவற்றை அழிக்க வல்லது. பின்பக்கத்திலிருந்து வீசும் காற்று இதற்கு எதிரிடையான செய்கையுள்ளது.

கீழ்த்திசையிலிருந்து வீசும் காற்று சூடானது. கபத்தை ஏற்படுத்தும். தோலில் ஏற்படும் நோய், மூலம், நஞ்சு, கிருமிகள், சன்னிபாத சுரம், சுவாசநோய், ஆம வாயு இவற்றைச் சீற்றமடையச் செய்யும் தன்மை பெற்றது.

94. மேற்கத்திக் காற்று

குளிர்ச்சி, மூர்ச்சை, எரிச்சல், நாவறட்சி, நஞ்சு இவற்றை விலக்கும்.

95. தென்திசைக் காற்று

கண்களுக்கு நலமளிப்பது. உடல் உறுப்புகளுக்கு பலத்தை அளிப்பது. இரத்த பித்தத்தைத் தணிக்கும். வாதத்தைச் சீற்ற மடையச் செய்யாது.

96. வடதிசைக் காற்று

எண்ணெய்ப் பசையுள்ளது. மிருதுவானது. இனிமையானது. கடைசியில் துவர்ப்புச் சுவை ஏற்படுத்துவது. குளிர்ச்சியானது. தோஷங்களைச் சீற்றமடையச் செய்வதில்லை.

(94—98)

97. வெயில்

தலை சுற்றல், நாவறட்சி, வியர்வை, எரிச்சல், மூர்ச்சை, நிறமாற்றம், இவற்றை ஏற்படுத்தும். சடராக்னியை வளர்ப்பது. இரத்த பித்தத்தை வளர்ப்பது.

98. நிழல்

மேற்கண்டவற்றைத் தணிக்கச் செய்வது.

99. இருட்டு

துவர்ப்பு, உவர்ப்புச் சுவையுடையது.

100. நிலவு

இனிமை, குளிர்ச்சி பொருந்தியது. *(99—100)*

உலகில் உள்ள பொருட்களில் மருந்துக்கு பயன்படாதது ஒன்றுமில்லை. ஆகையினால், சுவை, வீர்யம், விபாகம், பிரபாவம், இவற்றின் வேறுபாட்டினால் மருந்துகளுடைய ஒரு பகுதி இங்கு உதாரணமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் இம்மருந்துகளைப் பற்றி அறிந்து கொள்ள, காட்டில் வாழ்பவர்கள், அல்லது முனிவர்கள் இவர்களை நாடலாம். *(101)*

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில்
'ஔஷத விஞ்ஞாநீயம்' எனும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றாம் அத்தியாயம்

*அக்ரிய ஸங்க்ரஹணீயம்

'அக்ரிய ஸங்க்ரஹணீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேய மாமுனிவர் கூறியபடி விவரிப்போம். (1—2)

1. சிறந்த பொருள்களின் விளக்கம்

வேட்கை, களைப்பு இவற்றிற்கு ஆறுதல் அளித்தல் தோஷ தாதுக்களைக் கட்டுப்படுத்தல். ஈரத்தன்மை இவற்றை உண்டாக்கும் பொருட்களில் சிறந்தது நீர்.

களைப்பை நீக்கும் பொருட்களுள் உயர்ந்தவை நீராடுதல், கள் அருந்துதல்.

உயிரளிக்கும் பொருட்களில் உயர்ந்தது பால்.

மாமிசம், உடலைப் பருக்கச் செய்யும் பொருட்களுள் சிறந்தது.

தாதுக்களுக்கு ஊட்டமளித்து மகிழ்ச்சியுறச் செய்யும் பொருட்களில் சிறந்தவை மாம்ச ரசமும், மாம்பழச் சாறும் ஆகும்.

உணவுக்கு சுவையளிக்கும் பொருட்களில் சிறந்தது உப்பு.

தின்பண்டங்களில் சுவையின்மையைத் தோற்றுவிக்கும் பொருட்களில் சிறந்தது தும்பிப் பழம்.

இதயத்திற்கு இன்பமளிக்கும் பொருட்களில் உயர்ந்தது புளிப்புச் சுவை.

வலிவு அளிக்கும் பொருட்களில் உயர்ந்தது கோழி மாமிசம்.

வாதம், கபம் இவற்றை தணிப்பவற்றில் உயர்ந்தது எள்— எண்ணெய்.

வாதம், பித்தம் இவற்றைத் தணிப்பவைகளில் மேலானது நெய்.

பித்தம், கபம் இவற்றைத் தணியச் செய்யும் பொருட்களில் சிறந்தது தேன்.

---

*அக்ரியம் என்பதற்கு உயர்ந்தது என்பது பொருள். உடலில் பலவிதமான செயலைச் செய்வதில் உயர்ந்தவை பற்றி விவரிப்பதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெற்றது.

உடலுக்கு மிருதுத் தன்மையளிப்பதில் சிறந்தது வியர்வை உண்டு பண்ணும் முறை.

உடலை உறுதிப்படுத்தும் செயல்களில் சிறந்தது உடற் பயிற்சி.

ஆண்மையை அழிப்பனவற்றில் மேலானது க்ஷாரம்.

தொண்டைக்கு இதமளிக்காத பொருட்களில் சிறந்தது விளாங்காய்.

இதயத்திற்குத் தீங்கு விளைவிப்பவைகளில் உயர்ந்தது செம்மறியாட்டின் நெய்.

உறக்கம் தரும் பொருட்களில் மேலானது எருமைப்பால்.

உடலில் உள்ள கபம் வஸை முதலான— தாதுக்களை இளகச் செய்யும் பொருட்களில் சிறந்தது [1]பாதி உறைந்த தயிர். [2](அபிஷ்யந்தி)

சிறுநீரை அதிகம் தோற்றுவிக்கும் பொருட்களில் சிறந்தது கரும்பு.

மலத்தை உண்டு பண்ணுவதில் சிறந்தது யவம் எனும் தானியம்.

வாதத்தைத் தோற்றுவிப்பவைகளில் நாவற்பழம் சிறந்தது.

அம்லபித்தம் என்னும் நோயை விளைவிப்பவைகளில் சிறந்தது கொள்ளு.

பித்தம், கபம் இவற்றை ஏற்படுத்துவதில் உளுந்து, எள்ளுடன் கலந்த கோதுமை மாவினால் செய்யப்பட்ட தின்பண்டம், செம்மறி ஆட்டின் பால் இம்மூன்றும் முதன்மையானவை.

பித்தத்தையும் கபத்தையும் வற்றச் செய்பவைகளுள் சிறந்தது சிறுகாஞ்சேரி.

சுரத்தைப் போக்கவல்லவைகளுள் சிறந்தது உபவாசம்.

ரத்தபித்தம் என்ற நோயைக் கண்டிப்பவைகளில் சிறந்தது ஆடாதொடை.

---

1. பாதி உறைந்த தயிர்— மந்தகம் எனப்படும்.
2. அபிஷ்யந்தி— அதன் பிசுபசுப்பு, கனம், இளகும்தன்மை இவைகளை (கபத்தையும் ரஸம், மாம்ஸம் முதலிய) தாதுக்களை அதிகப்படுத்தி உடலில் அவைகளின் துவாரங்களை அடைப்பது.

இருமலைக் கண்டிப்பனவற்றில் கண்டங்கத்திரி சிறந்தது. அப்பொழுதே அடிபட்ட உட்காயங்களை ஆற்றுவதில் சிறந்தது கொம்பரக்கு.

எலும்புருக்கி நோய், மார்பிலிருந்து இரத்தம் கசியும் இருமல் நோய் இவற்றிற்குச் சிறந்தது பேராமுட்டி.

விக்கல், சுவாசம், இருமல், பக்க சூலை இவற்றைப்போக்கு வதில் சிறந்தது புஷ்கர மூலம்.

உடலுருக்கி நோயைப் போக்குவதற்கும், தாய்ப்பாலை வளரச் செய்வதற்கும் ரத்தப் போக்கைத் தடுப்பதற்கும் சிறந்தது வெள்ளாட்டின் பால்.

அதிகவாந்தி, நாவறட்சி இவற்றைத் தணிப்பதில் மேலானது மண், கல் இவைகளைச் சூடாக்கி சூடான கொதிக்கும் நீரில் தோய்த்து—குளிர்ந்தபின் வடிகட்டி எடுத்த நீர்.

வறண்ட மூலம் எனும் நோயைத் தணிப்பவற்றில் சிறந் தவை சேராங்கொட்டையும், கொடிவேலியுமாம்.

ரத்த மூலப்பிணியைப் போக்குவதில் உயர்ந்த பொருள் வெப்பாலை.

வாந்தியை நிறுத்துவதில் சிறந்தது நெல்பொறி.

மல மிளக்குவதிலும், சீரணிக்கச் செய்வதிலும் மூலநோயை நீக்குவதிலும் உயர்ந்தது யவக்ஷாரம்.

மூலம் எனும் நோய், வீக்கம், கிரஹணி எனும் பிணி, எண்ணெய்ச் சிகிச்சை முறையில் நெய் அதிகமாகக் குடிப்பதால் தோன்றியநோய், இவற்றைத் தணிப்பதில் மேலானது மோர்.

மூலநோய், உடலை இளைக்கச் செய்யும் பிணி, கிரஹணி என்னும் வியாதி இவற்றைப் போக்குவதில் சிறந்தது மாமி சத்தை உண்ணும் பிராணிகளின் மாமிசம். மலத்தை இறுகச் செய்தல், சடராக்னியின் வளர்ச்சி, சீரணிக்கச் செய்வது இவற் றிற்குச் சிறந்தது கோரைக்கிழங்கு.

மலத்தை இறுகச் செய்தல், சீரணிக்கச் செய்தல், மற்ற எல்லா தோஷங்களையும் வெளிப்படுத்தல் இவற்றிற்குச் சிறந்தது அதிவிடயம்.

மலத்தை இறுகச் செய்தல், சடராக்னி வளர்ச்சி, வாதம் கபம் இவற்றைத் தணிக்கும் பொருட்களில் வில்வம் சிறந்த தாகும்.

நோயைத் தணிப்பதிலும், சடராக்னி வளர்ச்சியிலும், பேதியைக் கட்டுப்படுத்துவதிலும் உயர்ந்த பொருள் விலாமிச்ச வேர்.

மலக்கட்டு, சடராக்னி வளர்ச்சிக்குப் பொருத்தமானவற்றில் உயர்ந்தது காட்டாத்தி.

கபம், பித்தம், இரத்தம், மலக்கட்டு, உடல் வறட்சி இவற்றிற்கு மேலான பொருள் வெப்பாலைப்பட்டை.

மலக்கட்டு, இரத்தபித்தம், இவற்றைத் தணிப்பதில் சிறந்தவை நெய்தல், கரு நெய்தல், இவற்றின் பூவிதழ், நன்னாரி.

ரத்தத்தைக் கட்டுவதிலும், இரத்த பித்தத்தைக் குறைப்பதிலும் மேலானவை பெருங்குமிழம்பழம்.

இரத்தம், பித்தம் இவற்றின் அதிகப் பெருக்கத்தைக் குணப்படுத்துவதில் உயர்ந்த பொருள் வாசனை ஞாழல்பூ.

இரத்தத்தைக் கட்டுதல், சடராக்னி வளர்ச்சி, சீரணித்தல், வாதத்தைப் போக்குதல், ஆண்மை வளர்ச்சி இவற்றிற்கு உயர் வகைப் பொருள் சிறுமல்லி.

ஆண்மையின் வளர்ச்சி, மற்றும் மூன்று தோஷங்களையும் நீக்க வல்லனவற்றில் மேலானது பெருமல்லி.

மலக்கட்டை அகற்றுவதிலும், வலிவை அளிப்பதிலும் வாதத்தைப் போக்குவதிலும் நிகரற்றது சித்தாமுட்டி.

சீரணிக்கச் செய்தல், சடராக்னியை வளர்த்தல், வயிற்றுப் பொருமலைத் தணித்தல் இவற்றிற்குப் பயன்படும் பொருட்களுள் மேலானது கண்டந்திப்பிலி.

ஆசன வாயில் ஏற்படும் வீக்கம், குத்தல் வலி இவற்றைப் போக்குவதிலும் சடராக்னியை வளர்ப்பது, சீரண சக்தியை அதிகப்படுத்துவது இவற்றிலும் சிறந்தது கொடிவேலி வேர்.

நீர்ச்சுருக்கு, வாதத்தைக் கண்டித்தல் இவற்றிற்கு சிறந்தது நெருஞ்சில்.

நீரிழிவு நோயைக் கண்டிக்கும் பொருட்களில் உயர்ந்தது மஞ்சள்.

பெருங்கட்டி, அக்கி, சிறுகட்டி, கண்டமாலை நோய் இவற்றைக் குணப்படுத்துவதில் சிறந்தது உடலிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்துவது.

கெட்ட ரத்தத்தை வெளிப்படுத்துதல், தொடைச்சந்தில் ஏற்படும் சிறுகட்டி, குன்மம், வாயு, குற்றல் வலி இவற்றை நீக்கும் பொருட்களில் சிறந்தது ஆமணக்கு எண்ணெய்.

குன்மம், வாயு இவற்றைப் போக்குவதில் உயர்ந்தது பூண்டு.

உடலிலுள்ள தோஷங்களைச் சிதறச் செய்தல், சடராக்னியை வளர்த்தல், நேர் நிலைப்படுத்தல், வாதம், கபம் இவற்றைத் தணித்தல், இவற்றிற்கு மேலானது பெருங்காயம்.

சிதறச் செய்தல், சடராக்னியை வளர்த்தல், நேர் நிலைக்குக் கொண்டு வருதல், வாதம், கபம் இவற்றைக் குறைப்பதற்கு சிறந்தது புளிவஞ்சிக்கொடி.

பெருவயிறு, வயிற்று வீக்கம் இவற்றைத் தணிப்பதற்கு ஒட்டகத்தின் பால் சிறந்த மருந்து.

ரத்த சோகைக்கு உகந்தது இரும்புத் தூள்

குஷ்டத்தைப் போக்கவல்ல பொருட்களில் மேலானது கருங்காலி.

உடலில் உள்ள பூச்சிகளை அழிப்பதில் வாயுவிடங்கம் சிறந்த மருந்துப் பொருள்.

வாதத்தைத் தணிப்பதில் சித்தரத்தை சிறப்பானது.

ஆண்மை வளர்ச்சிக்கும், வாதத்தை நீக்கவும், தலைசிறந்த பொருள் ஆமணக்குவேர்.

கொழுப்பு, வாதம் இவற்றை விலக்குவதில் குக்குலுஉயர்ந்த பொருளாகும்.

மலக்கட்டு, சடராக்னி அதிகரித்தல், வாதம், கபம் இரத்தம் மலபந்தம், இந்நோய்களைத் திர்க்கவல்ல மருந்து வகைகளில் உயர்வானது சீந்தில் கொடி.

வாந்தி, கஷாய வஸ்தி, எண்ணெய் ஸ்தி இவற்றில் பயன் படுத்துவதற்கு மலங்காரக்காய் மேலான பொருள்.

எளிதில் மலம் வெளி வரச் செய்வதில் சிறந்து விளங்குவது சிவதை வேர்.

கஷ்டப்படாமல் மலம் கழிக்கச் செய்வதில் உயர்ந்தபொருள் சதுரக்கள்ளி.

அதிகம் மலக்கழிச்சலுக்குக் கொடிக்கள்ளி சிறந்ததொன்று.

[1]சிரோவிரேசனத்திற்குச் சிறந்தது நாயுருவி, பார்வையை மறைக்கும் நோயைப் போக்குவதில் உயர்ந்தவை, கடுக்காய் நெல்லிக்காய், தான்றிக்காய். இம்முக்கூட்டிற்கு திரிபலா என்று பெயர். காயங்களை ஆற்றும் பொருட்களில் சிறந்தவை, திரிபலாவும் குக்குலுவும் ஆகும்.

நஞ்சை நீக்கும் பொருட்களில் [2]வாகை சிறந்தது.

தாதுக்களுக்குப் பலமளித்து ஆயுளை நிலை நிறுத்துவதற்குச் சிறந்த பொருள் நெல்லிக்கனி.

பத்தியமான பொருட்களில் உயர்ந்தது கடுக்காய்.

இரசாயன முறையில் நெய்யும் பாலும் மேலானவை எனக் கருதப்படும்.

ஆண்மையை வளர்ப்பதற்கும் [3]உதாவர்த்தம் எனும் பிணியைப் போக்குவதற்கும் நெய்யுடன் சமஅளவு சத்துமாவைக் கலந்து உண்பது சிறந்த முறையாகும்.

ஆண்மையை வளர்ப்பது, விந்துவை வெளிப்படுத்துவது, பெண் ஆசையை அதிகப்படுத்துவது இவற்றுக்கான பொருட்களில் உயர்ந்தது புலனடக்கமும் முதலையின் வீர்யமும். (விந்து) ஆண்மையை இழக்கச் செய்வதில் மனக்குழப்பம் மேலான காரணமாகும்.

பற்களுக்கு உறுதியளிப்பதிலும், சுவையூட்டுவதிலும் எண்ணெய்க் கொப்பளித்தல் சிறந்த வழியாகும்.

எரிச்சலைத் தணிக்கச் செய்யும் பூச்சுப் பொருட்களில் உயர்ந்தவை சந்தனமும் அத்தியுமாகும்.

குளிர்ச்சியை நீக்கும் பூச்சுப் பொருட்களில் சித்தரத்தை, அகிற்கட்டை சிறந்த மருந்துகளாகும்.

---

1. சிரோவிரேசனம்— கழுத்துக்கு மேற்பட்ட உறுப்புகளில் உண்டாகும் நோயை நீக்க மூக்கின் வழியாக மருந்தைச் செலுத்தும் முறை.
2. வாகை— ஒரு வகை மரம்.
3. உதாவர்த்தம்— மேல் நோக்கிச் செல்லும் வாயு.

எரிச்சல், தோல் வியாதி, வியர்வை இவற்றை நீக்கும் பூச்சுப் பொருட்களில் விலாமிச்சவேரும் வெட்டிவேரும் உயர்ந் தவை.

வாதத்தை நீக்கும் எண்ணெய் நீராடுதல், பற்றுப்பூசி வியர்த் தல் போன்ற பொருள்கள் தயாரிப்பதில் சிறந்தது [1]கோஷ்டம்.

கண், ஆண்மை, கூந்தல் வளர்ச்சி, குரல் வளம், வலிவு, நிற வளர்ச்சி, உடல் மினுமினுப்பு, காயமாற்றுதல் இவற்றிற்கு பயன்படுத்தும் பொருட்களில் அதிமதுரம் சிறந்தது.

[2]க்ரஹணி எனும் உடலுறுப்பைக்கெடுப்பனவற்றில் அசீர்ண உணவு தலை சிறந்தது.

அறுவறுப்பான நோய்களைத் தோற்றுவிப்பவை ஒன்றுக் கொன்று எதிரிடையான வீர்யமுள்ள உணவு வகைகளாகும்.

அசீரணத்துக்குக் காரணமானவற்றுள் குரு குணமுள்ள உணவு முதன்மையானது.

ஆமம் என்ற ஆசீரணத்தைத் தோற்றுவிக்கும் காரணங்களில் அளவு கடந்து உண்ணுதல் முக்கியமானது.

சடராக்னியைத் தூண்டுவதற்கு, அதன் பலத்திற்கேற்ப உணவு உண்பது நல்லதாகும்.

உடலுக்கு பழக்கத்தில் ஒத்துக்கொள்ளும் உணவும், பழக்க வழக்கங்களும் பின்பற்ற வேண்டியவைகளில் உயர்ந்தவை.

ஒரே இடத்தில் அமர்ந்து உண்பது, நன்ருகப் படுத்து உறங்கு தல், உண்ணும் உணவு நன்கு சீரணமடையச்செய்வதில் சிறந்தன.

சடராக்னியைக் கெடுக்கும் பொருட்களில் மாறுபட்ட உண வும், மாறுபட்ட வேளைகளில் உண்பதும் உயர்ந்தவை.

உடலின் ஆரோக்யத்திற்கு ஏற்ற வகைகளில் குறிப்பிட்ட காலத்தில் உண்பது முதன்மையானது.

நல்ல உணவைக்காண்பது, உண்பதில் ஆர்வம் விளைவிப்பன வற்றில் சிறந்தது.

---

1. கோஷ்டம்— கோட்டம் என்ற மருந்து திரவியம்.
2. க்ரஹணி— இரைப்பைக்கும் உணவு சீரணமாகும் இடத் திற்கும் இடையில் அமைந்துள்ள பகுதி.

சிறுநீர், மலம் இவற்றைப் போன்ற இயற்கை வேகங்களை அடக்குதல், உடல் நலமின்மையைத் தோற்றுவிப்பனவற்றில் முதன்மையானது.

உணவினால் ஏற்படும் குணங்களில் போதும் என்ற எண்ணம் மேலானது. உண்ணாமலிருத்தல் ஆயுளை அழிக்கும் வழிகளுள் உயர்வானது.

மனிதனை இளைக்கச் செய்வதில் மிகக்குறைந்த அளவோடு புசித்தலும், காட்டுக் கோதுமை உணவும் சிறந்தவையாகும். வறட்சியைத் தோற்றுவிக்கும் வகையில் (நருவ்லி) 'தேன் கலந்த உணவு மேலானது.

மகிழ்ச்சி தருவனவற்றில் மது வகை சிறந்தது. அறிவு, தைரியம், நினைவு இவற்றைப் போக்கும் பொருட்களில் உயர்ந்தது கள் வெறி.

அளவுமீறி பெண் சேர்க்கை' உடலை உலர்த்தும் நோய்களுக்கு முக்கிய காரணமாகிறது.

மனிதனுக்கு அலித்தன்மையை அளிப்பனவற்றில் விந்துவின் வேகத்தைத் தடுத்து நிறுத்துவதே தலைசிறந்த காரணமாகும்.

கால்களில் மருந்து பொடியைப் பூசுதல் உணவில் ஆர்வத்தைத் தோற்றுவிப்பதில் உயர்ந்தது.

பிராணி வதை செய்யும் இடங்களைப் போன்ற அருவருப்பான காட்சி, உணவில் ஆர்வத்தை இழக்கச் செய்வனவற்றில் மிகச் சிறந்தது.

பிணிகளுக்கான காரணங்களில் காலம், புலப்பொருள், செயல் இவற்றின் தகாத சேர்க்கையும் உடல்வலிவின்மை, பொலிவின்மை உண்டாவதற்கு காரணங்களில் மாதவிடாய் கொண்ட பெண்களின் சேர்க்கையும் குறிப்பிடத்தக்கவை.

ஆயுளை வளர்ப்பதில் பிரம்மசரியமும், ஆயுளை அழிப்பதில் பிறர்பெண்டிரின் சேர்க்கையும் காரணங்களாகும்.

தன் வலிவிற்கு மீறிய செயல்களைச் செய்தல் உயிரிழக்கச் செய்யும் காரணங்களில் முக்கியமாகக் கருதப்படும்.

நோயை வளர்க்கும் பொருட்களுள் வருந்துதல் குறிப்பிடத்தக்க காரணமாகும்.

இன்பம் பயப்பனவற்றில் மகிழ்ச்சியும், உடலிலுள்ள ரசம், இரத்தம், தாதுக்கள் இவற்றை இளைக்கச் செய்வனற்றில் வருத்தமும் முக்கியமானவை.

உடலைப் பருக்கச் செய்வதில் கவலையின்மை குறிப்பிடத் தக்க காரணமாகும்.

வலிவை அளிப்பனவற்றில் (அமைதிப்படுத்தலும்) இளைப் பாறுதலும் உறங்க செய்வனவற்றில் உடல் நலமும் முக்கிய மானவை.

சோம்பலை வளர்ப்பதில், தூக்கமும், வலிவை உண்டாக்குவ தில் அறு சுவையுள்ள அன்னத்தைப் பயன்படுத்தலும் காரணமாம்.

வலிவின்மை, ருசியின்மை, தோஷங்களில் ஒன்றை சீற்ற மடையச் செய்தல் இவற்றிற்கு ஒரே சுவையைப் பழக்கத்தில் கொண்டு வருதல் காரணமாகின்றது.

[1]ஆமம் என்ற அசீரணத்தினால் வயிற்றில் ஏற் படும் தடைபட்டுப் போதல், குளிர்ச்சி, குத்தல் வலி, ஆடுசதையில் முறுக்குவது போன்ற வலி இவற்றை நீக்குவனவற்றிலும் சட ராக்னி சிறந்த சாதனமாகும்.

[2]கர்ப்பசல்யம்—போக்க வேண்டிய நோய்களுள் முக்கிய மானது.

மிருதுவான மருந்தை அருந்தச் செய்வதில் சிறுவர்கள் முக்கியமானவர்கள். தீராத நோய்களுக்கு மருந்தைக்கொடுத்து காலத்தைக் கழிக்க வேண்டியவர்களுள் முதியவர்கள் முக்கியமான வர்கள்.

கடுமையான மருந்து, புணர்ச்சி, உடற்பயிற்சி, இவற்றிற்கு விலக்கானவர்களில் முக்கியமானவர்கள் சூலுண்டவர்கள்.

அமைதியான மனநிலையே கரு நிலைத்திருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

---

1. ஆமம்—கபத்தினால் ஏற்படும் அசீர்ணம். அது விஷத் திற்கு ஒப்பானது.
2. கர்ப்பசல்யம்—கர்ப்பப்பையில் உண்டாகும் கட்டி போன்ற வியாதிகள். சல்யம் உடலுக்குள் சிதைவை உண்டு பண்ணும் கூர்மையான ஆணி, முள் போன்றவை.

சிகிச்சைக்குக் கட்டுபடாத பிணிகளுள் குறிப்பிடத்தக்கது, [1]ஸன்னிபாதம்.

உடன் வரக்கூடிய நோய்களில் காய்ச்சலும், நீடித்த நோய்களில் குஷ்டமும், பிணிக்கூட்டங்களில் எலும்புருக்கி நோயும் முதன்மையானவையாகும்.

தொடர்ந்து இருக்கக் கூடியவற்றில் நீரிழிவு நோயும், தீமை விளைவிக்காத மருத்துவ ஆயுதங்களில் அட்டைப் பூச்சியும், சிகிச்சைக்குரிய கருவிகளில் [2]வஸ்தியும் முதன்மையானவை.

மூலிகைகள் விளையும் இடங்களில் சிறந்தது இமயமலை.

மூலிகைகளிலும் [3]சோமலதா உயர்ந்தது. உடல் நலம் விளைவிக்கும் இடங்களில் பாலைவனம் மேலானது. தீமை விளைவிக்கும் இடங்களில் ஈரப்பசையுள்ள இடம் சதுப்பு நிலம் குறிப்பிடத்தக்கது.

நோயாளிக்குள்ள குணங்களுள் மேலானது மருத்துவர் சொற்படி நடத்தல்.

நோயாளிக்குள்ள மரணத்தைக் குறிக்கும் தீய குணங்களுள் மருத்துவர் சொற்படி நடவாமை முக்கியமானது.

மருத்துவ அங்கங்களில் சிறந்தவர் வைத்தியர்.

மருத்துவ முறைகளில் உயர்ந்தது நோயைக் குணப்படுத்துதல்.

ஒதுக்கத்தக்கவர்களில் கடவுளை மறப்பவனும், (நாஸ்திகன்) துன்புறுத்துவனவற்றில் அற்ப ஆசையும், பிறர்க்கு

---

1. ஸன்னிபாதம்— மூவகை தோஷங்களின் (சேர்க்கையின்) சீற்றத்தினால் ஏற்படும் நோய்.
2. வஸ்தி— ஆஸனத்துவாரத்தின் வழியாக உடலுக்குள் மருந்தைச் செலுத்தும் பீச்சாங்குழல் போன்ற கருவி.
3. சோமவதா—ஒருவகைக் கொடி. அதன் சாறு அமுதத்திற்கு ஒப்பானது. ஆயுளை வளர்க்கக்கூடியது.
4. ஒன்றுக்கொன்று எதிரிடையான சிகிச்சை முறைகளை கையாளவேண்டிய நோய்களில் முக்கியமானது ஆமதோஷம்.

மகிழ்ச்சியளிப்பதில் தன்னைப்போல் நினைத்தலும், வாதம் புரிவதற்குத் தேவையானவற்றில் சாஸ்திரத்துடன் கூடிய யுக்தியும் முக்கியமானவைகளாகும்.
ஒரு செயலைத் தானே நேரில் கண்டறிந்து, தானே செயல்படுத்தியும் உண்டான தெளிந்த அறிவு, சந்தேகங்களை நீக்குபவைகளில் முக்கியமானது. அச்சமளிக்கும் செயல்களில் திறமையின்மை முக்கியமானதாகும்.

அறிவு வளர்ப்பதில் ஒரே விதமான தன்னை ஒப்ப கல்வி கற்றவர்களுக்கிடையே நடக்கும் உரையாடல் ஆகியவை முக்கியமானவை.

சாஸ்த்ரீயமான அறிவை அளிப்பவர்களுள் ஆசாரியர் முக்கியமானவர்.

அமுதத்தைப் போன்ற குணங்களுள்ள பொருட்களில் சிறந்தது ஆயுர்வேத சாஸ்திரம்.

கடைபிடிக்க வேண்டியவற்றில் சிறந்தது சான்றோர் வாக்கு.

உடலுக்கு உயிர், உணர்ச்சி, அறிவு அளிப்பவைகளில் முக்யமானது வாதம். உயிர் நீங்கச் செய்பவனவற்றில் சிறந்தது மருத்துவரிடம் உள்ள வெறுப்பு. இன்பம் பயப்பனவற்றில் மேலானது பற்றற்ற நிலை.

நீர், நெருப்பு, சுட்ட ஓடு, அல்லது கல் போடப்பட்டு சூடாக்கித் தெளிவடைந்த தண்ணீர், மோரைப் பழக்கத்தில் கொண்டுவருதல், ஆமணக்கு எண்ணெயை பழக்கப்படுத்துதல், ஒட்டகத்தின்பால், மலங்காரக்காய், கள்ளைத்துறத்தல், ஒரே சுவையுள்ளவற்றைப் பழக்கத்தில் கொண்டுவருதல் இவற்றைத் தனியாகவும் பிறபொருட்களுடன் சேர்த்தும் பயன்படுத்தலாம்.

இம்முறை கருவுற்றவர்களுக்கும் பொருந்தும். புஷ்கர மூலம் முதலிய மூலிகைகளைப் பிறபொருட்களுடன் சேர்த்தே கொடுக்கவேண்டும்.

இவ்வத்தியாயத்தில் நூற்று ஐம்பத்து ஐந்து சிறந்த பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் நன்மை, தீமைகளைத் தீர்மானிப்பதில் இந்த விளக்கம் சிறிதளவேயாகும்.
(1— 5)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் 'அக்ரியஸங்கிரகம்' எனும் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்

*சோதானாதி கண சங்கிரகம்

'சோதனாதி கண சங்கிரகம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1— 2)*

1. வாந்தி எடுக்கச் செய்யத் தேவையான பொருட்கள்

மலக்காரக்காய், தேவதாளி, சுரை, புடல், பேய்ப்புடல் இவற்றின் பழங்கள், மலர்கள், இலைகள்,

வெட்பாலை, புங்கு, கசப்பு வெள்ளரி, கடுகு, திப்பிலி, வாயுவிடங்கம், ஏலரிசி, நாயுருவி, அரேணுகம், இங்குபத்திரி, தனியா, தகரச்செடி இவற்றின் சரத்ருது (ஐப்பசி—கார்த்திகை)வில் உண்டான பழங்கள்.

பேய்ப்புடல், மலை அத்தி, வெண்நொச்சி, வேம்பு, அமுக்கராக்கிழங்கு, கடம்பை, கருநொச்சி, வில்வம், கோவை, உச்சித்திலகம் எனும் மரம், அருகம்புல், கடுகுரோகிணி, வசம்பு, ஆமணக்கு, கொடிவேலி, காட்டுவெள்ளரி, கருஞ்சீரகம், கொன்னை, சிறிய நெருஞ்சில், வட்டத்திருப்பி, பாதிரி, குன்றி மணி, அதிமதுரம், பெரும் குறும்பை, ஏழிலம் பாலை, வெள்ளைக் கருங்காலி, சிவப்புக் கொடிவேலி, முருங்கை, இருவாட்சி, ஜாதிப்பத்திரி, ஓமம், வெள்ளச் சாரடை, சிவப்புச் சாரடை, காட்டு உளுந்து, காட்டுப்பயிறு, கரும்பு, மஞ்சஷ்டி, கண்டந்திப்பிலி, செவியம், சடாமாம்சி, விலாமிச்சம்வேர், நன்னாரி இவற்றின் வேர்கள்.

இலவம், கொங்குமரம், கும்மளம் மரம், ஐராவணி, முள்ளங்கி, நருவிலி, தணுகு மரம், ரசாஞ்சனம், முருக்க மரம், எலியாலி, நன்னாரி, அடவதி மரம் இவற்றின் பிசின்.

ஞாழல்பூ, தாளிச பத்திரி, மஞ்சள் கிழங்கு, இஞ்சிக் கிழங்கு, இலுப்பை, மரமஞ்சள் இவற்றின் கட்டைகள்.

---

*சோதனாதிகண சங்கிரகம்— உடலில் சேரும் தோஷங்களை வெளிப்படுத்தும் குணமுடைய பொருட்களின் கூறுகளையும், மற்ற மருந்துச் சரக்குகளின் வகுப்புகளையும் தொகுத்துக் கூறுவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

தகரவிதை, சீந்திற்கொடி, தேன், தேன்பாகு, பால், க்ஷாரம், உப்பு என முறையே கூறிய இவை யாவும் வாந்தி எடுக்கச் செய்யத் தேவைப்படும் பொருட்கள். (3)

2. மலங்கழிக்கச் செய்யத் தேவையான பொருட்கள்

கருஞ்சிவதை, வெண்சிவதை, நேர்வாளம், எலிச்செவி, சங்கமலர், டாதிரி, ஓமம், ஆடு தீண்டாப்பாளை, வசம்பு, பேய் தும்மட்டி, ஆட்டுக்குடல், பிரும்மதண்டு, கொடிவேலி, வெண் நாயுருவி, ஓரிலை, மூவிலை, கண்டங்கத்தரிவேர், முள்ளங்கத்தரி, நெருஞ்சில், வெள்ளச்சாரடை, சிகப்புச் சாரடை, வாஸ்துக மரம், தேக்கு, முரளமரம் இவற்றின் வேர்கள்.

பாச்சோரத்தி, கசப்புப் பேய்ப்புடல், கம்பிப்பாலை, பாதரி இவற்றின் பட்டைகள்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், உவகை, முரளம், சீமை இலந்தை, இலந்தை, காட்டு இலந்தை, குமிழம், ஈச்சை, திராக்ஷை, அவிரி, அதிமதுரம், புங்கு, வாயுவிடங்கம், பாக்கு, ஆமணக்கு இவற்றின் விதைகள்.

காட்டுக்கொன்றையின் இலை, பழம், மணிபுங்கின் பட்டை, பழம், இலை, சதுரக்கள்ளி, ஏழிலம்பாலை, வாலுளுவை இவற்றின் பால்.

பால், தெளிந்த மோர், கள், தான்யாம்லம், சிறுநீர்கள் என இவை யாவும் மலங்கழிக்கச் செய்யத் தேவையான பொருட்கள் (4)

3. வாந்தி-பேதி எடுக்கச் செய்யத் தேவையான பொருட்கள்

கசப்புப் பேய்ப்புடல், தேன், பால், பாதிரி, பாகல் இவற்றை நன்கு அரைத்துப் பிழிந்த சாறு.

எருக்கம் பால், வென்னீர் இவை யாவும் வாந்தி—பேதி இரண்டையும் உண்டாக்கும்.

நோயின் நிலையை ஒட்டி, வஸ்தி சிகிச்சைக்குப் பயன்படும் பொருட்கள் எண்ணற்ற வகையாயிருப்பதால் இங்கு கூறப் படவில்லை.

இந்தப் பொருட்களை வாதம் முதலான தோஷங்களால் தோன்றும் நோய்கள் இவற்றை ஒட்டி, ரஸபேதியம் எனும்

பதினெட்டாம் அத்தியாயத்தில் பிரித்துக் கூறப்போகிறோம். அதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

4. [1]கஷாய வஸ்திக்குப் பயன்படும் பொருட்கள்

மரக்காரைக்காய், வெப்பாலை, தேவதாளி, சுரை, புடல், பேய்ப்புடல், கசப்பு வெள்ளரி, கடுகு, சதகுப்பை இவற்றின் விதைகள்.

சித்தாமுட்டி, வில்வ வேர், பெருவாகை வேர், குமுழம் வேர், பாதரிவேர், முன்னைவேர், ஓரிலை, மூவிலை, கண்டங்கத்தரி, முள்ளங்கத்தரி, நெரிஞ்சில், ஆமணக்கு, கருஞ்சிவதை, வெண் சிவதை, அதிமதுரம், கோஷ்டம், சித்தரத்தை, மூக்கரட்டை, காவாட்டம் புல் இவற்றின் வேர்கள்.

வெண் சிவதை, தேவதாரு, கொட்டக்கரந்தை, பெருங் காயம், ரஸாஞ்சனம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஜாதிப்பத்திரி, ஏலரிசி, சிந்திற்கொடி, யவஅரிசி, இலந்தை, கொள்ளு, வெல் லம், உப்பு, மோர்த்தெளிவு, தான்யாம்லம், சிறுநீர், எண்ணெய், தேன், பால் என இவை யாவும் கஷாயவஸ்திக்குத் தேவை யான பொருட்களாகும். (5)

5. தலையில் உள்ள உறுப்புகளில் தோன்றும் தோஷங்களை சுத்தப்படுத்தும் பொருட்கள்

நாயுருவி, வாயுவிடங்கம், மிளகு, திப்பிலி, வாகை, வில்வம், ஓமம், சீரகம், கத்தரி, கருஞ்சீரகம், ஏலரிசி, அரே ணுகம் இவற்றின் விதைகள்,

தாளிசபத்ரி, மாவிலங்கை, முன்னை, ஹரீதக இனத்தில் கூறிய பொருட்கள், இவற்றின் இலைகள், கடுகுச் செடியின் பழங்கள், இலைகள், முருங்கை விதை, இலை, பட்டை,

மஞ்சள், முள்ளங்கி, பூண்டு, சுக்கு இவற்றின் கிழங்கு களும், இலைகளும், அதிவிடயத்தின் கிழங்கு, கோஷ்டம், வசம்பு, சிறுதேக்கு, வெண்நாயுருவி, கருங்கடம்பை, நேபா ளம், வாலுளுவை, சாகோட மரம், கடுக்காய் மரம், தேள் கொடுக்கி, கோவை, புங்கு இவற்றின் வேர்கள்,

---

1. கஷாய வஸ்தி— கஷாயங்களை ஆசனத் துவாரத் தின் வழியாகச் செலுத்தி மலங்களை வெளிப் படுத்தல்.

எருக்கு, அலரி, தூதுவளை இவற்றின் பூக்களும், வேர்களும், பாச்சோத்தி, மறுக்காரை, ஏழிலம்பாலை, வேம்பு, உவகை இவற்றின் விதைகள்,

நார்த்தங்காய், துருஞ்சி, இலவங்கம் இவற்றின் பூக்கள்,

அகில், தேவதாரு, கொன்றை, ஆனைவணங்கி, கருத்த இலவம், வேங்கை, ரசாஞ்சனம், பெருங்காயம், கொம்பரக்கு இவற்றின் பிசின்கள்,

மாவிலங்கை, முரள மரம், பனை, இலுப்பை, மரமஞ்சள் இவற்றின் முற்றிய வைரம் பாய்ந்த கட்டைகள்,

வாலுளுவை, ஆடு தீண்டாப்பாளை, இலவங்கம், ஓடமரம், கண்டங்கத்தரி, முள்ளங்கத்தரி இவற்றின் பட்டைகள்,

முருங்கை விதைகளின் உள்ளேயிருக்கும் சோறு, தேன், எல்லா வகை உப்புகள், கள் வகைகள்,

பசு, வெள்ளாடு, செம்மறி ஆடு, எருமை, யானை, குதிரை, ஒட்டகம், கழுதை இவற்றின் சாணநீர், சிறுநீர், பித்த நீர் இவை போன்றவைகளும்,

புலன்களுடைய தோஷங்களைத் தணிக்கச் செய்கின்ற மற்ற பொருட்கள், எண்ணெய் வகை, பால், இரத்தம், மாமிசரசம், தானிய ரசம், நீர் என இவை யாவும் தலைகளில் உள்ள உறுப்புகளில் தோன்றும் தோஷங்களை வெளியேற்றக்கூடிய பொருட்கள். (6)

6. பிராயோகிகம் எனும் புகை சிகிச்சைக்குரிய பொருட்கள்

அதிமதுரம், பதிமுகம், மஞ்செட்டி, நன்னாரி, கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், சிறுநாகைப்பூ, ஏலாவாலுகம், வெண்சந்தனம், இலவங்கப்பட்டை, ஜாதிபத்திரி, பேரேலம், அரேணுகம், கொம்பரக்கு, சதகுப்பை, ஆனைவணங்கி, சர்க்கரை, மரக்காரக்காயின் மரத்தின் பழம், கற்பூரத்துளசி, ஆலமரம், அத்தி, அரசு, இத்தி, பாச்சோத்தி இவற்றின் பட்டைகள்,

தாமரை, நெய்தல், இவற்றின் பூக்கள், கோஷ்டம், தகரவிதை நீங்கலாக மணமுள்ள எல்லாப்பொருட்கள் என இவை யாவும் மேற்கண்ட புகைசிகிச்சைக்குப் பயன்படுபவை. (7)

7. எண்ணெய்ப்பசையை உண்டாக்கும் புகைப்பொருட்கள்

அகில், குக்கில், ஆனைவணங்கி, சடாமாம்சி, வெட்டி வேர், நன்னாரி, அரேணுகம், விலாமிச்சைவேர், கோரைக் கிழங்கு, வாசனைப்புல், இலவங்கப்பட்டை, திருவட்டப்பிசின், தூவியாங்கம் எனும் வாசனைப் பொருள், பெருங்கோரைக் கிழங்கு, குந்துருகம் எனும் மணம் வீசும் பொருள், குங்குலியம், அதிமதுரம், பலசாரம் எனும் வாசனைப் பொருள், எண்ணெய், தேன்மெழுகு வில்வப்பழச்சோறு, யவ அரிசி, எள்ளு, உளுந்து, குங்குமப்பூ, கொழுப்பு, எலும்புக்குள் உள்ள சோறு, நிணநீர், நெய் என இவை யாவும் எண்ணெய்ப் பசையுண்டாக்கும் புகைச் சிகிச்சைக்கான பொருட்கள் (8)

8. கடுமையான புகை சிகிச்சைக்குரிய பொருட்கள்

[1]சிரோவிரேசனத்திற்குக் கூறப்பட்ட பொருள்கள், வாசனைப் பொருட்கள், கடுமைக்குணமுள்ள வாசனைப் பொருட்கள், மனோசிலை, அரிதாளம், என இவை கடுமையான புகை சிகிச்சைக்குரிய பொருட்கள். (9)

9. வாத நோயை நீக்கும் பொருட்கள்

தேவதாரு, கோஷ்டம், தகர விதை, மாவிலங்கை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, கருநிற மலர் உள்ள குறிஞ்சி, சிறு காஞ்சோரி, வட்டத்திருப்பி, கழக்கோடி, சீந்தில் கொடி, எருக்கு, வெள்ளெருக்கு, தேத்தாங்கொட்டை, சிறு தேக்கு, செம்பருத்தி, இங்குடம் எனும் பொருள், நீர்த்திப்பிலி என இவைகளும்,

'விதார்யாதி கணம்' எனும் பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பொருட்களும், 'வீரதராதி' கணத்தில் கூறப்பட்டுள்ள எல்லாப்பொருட்களும், ஏழுவகை பஞ்சமூலங்களில் த்ருண பஞ்ச மூலம் நீங்கலாக மற்ற அறுவகைப் பஞ்ச மூலப் பொருட்களும் வாதத்தை நீக்கும் பொருட்களாகும். (10)

---

1. சிரோவிரேசனம்— தலையிலுள்ள கண், காது, மூக்கு தொண்டை முதலிய உறுப்புகளில் சேரும் தோஷங்களை நஸ்யம் எனும் மருந்தை மூக்கினுள் செலுத்தி காது, மூக்கு, தொண்டை வழியாக வெளிப்படுத்துவது.

10. பித்த நோயை நீக்கும் பொருட்கள்

அருகம்புல், நன்னாரி, இலவம்பிசின், மஞ்செஷ்டி, பெருங் கோரைக் கிழங்கு, கருஞ்சிவதை, செஞ்சந்தனம், வாழை, தாமரைக்கிழங்கு, க்ஷீரகாகோலி, பூனைக்காலி, தேங்காய், பேரீச்சை, திராக்ஷை, முதுக்கன்கிழங்கு, இலந்தை, சிற்றா முட்டி, பேராமுட்டி, சிறுநாகப்பூ, தண்ணீர் முட்டாங்கிழங்கு, ஓரிலைவேர், கருநிறப்பூவுள்ள முள் குறிஞ்சி, தாழம்பூ, ஓரிலை, மூவிலை, நிலவேம்பு, வேம்பு, ஆடுதொடா இலை, அழிஞ்சல், நாவல், காட்டாத்திப்பூ, வெண்கருங்காலி, தணுகு மரம், ஸ்யந்தனம் எனும் மரம், கருங்காலி, கரு வேலம், முரளம் மரம், பனை, மருது, ஆச்சாமரம், தினிச மரம், பெருமருது, கோரைக்கிழங்கு, நீர்வஞ்சி, ரோஜா, கோஷ்டம், தாமரை விதை, தாமரைத்தண்டு ,அல்லி, கரு நெய்தல், கருநிறமுள்ள ஆம்பல், வெண்தாமரை, செந் தாமரை, பாசி, செங்கழுநீர்ப்பூ, காகோலி, தாமரைக்கிழங்கு, ஜாதிக்காய், சிருங்காடகம் எனும் கிழங்கு, நீர் கோரைக் கிழங்கு, தாமரை வளையம், இவைகளும் சீத வீர்யம் உள்ள பொருட்களும், பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட 'ஸாரிவாதி' இனப்பொருட்களும், பத்மகாதி இனம், 'படோ லாதி இனம்' 'நியக்ரோதாதிகணம்', எரிச்சலை அடக்கக்கூடிய மகாகஷாயம், திருணபஞ்சமூலம் ஆகியவைகளும் பித்தத்தைப் போக்கக் கூடியவை. (11)

11. கபத்தைத் தணிக்கச் செய்யும் பொருட்கள்

கற்பூரம், சதகுப்பை, ஸரளமரம், தேவதாரு, சித்தரத்தை, இங்குடமரம், காய் துராய் செடி, சாதிமல்லி, வெண்குன்றி மணி, கலப்பைக் கிழங்கு, புரசு, சாலாமிச்ரி, விலாமிச்சை வேர் முதலானவைகளும்,

பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட 'ஆரக்வாதி கணம்', 'அஸநாதி கணம்', 'அர்க்காதி கணம்', 'ஸுரஸாதி கணம்', 'முஷ்ககாதிகணம்', 'வத்ஸகாதி கணம்', 'முஸ்தாதி கணம்' 'இந்த ஏழு கணங்களில் கூறப்பட்டுள்ள பொருட் களும், குளிர்ச்சியை நீக்கும் மகாகஷாயமும், வல்லீபஞ்சமூலம், கண்டக பஞ்சமூலம் இவற்றில் கூறிய பொருட்களும் கபத்தைத் தணிக்கக் கூடியவை. (12)

உணவு வகை, பழக்கவழக்கங்கள் இவற்றால் கட்டுப்பாட்டுடன் தன்னை வசப்படுத்தியவர்கள், [1]தோஷம், [2]தூஷ்டம் இவற்றை நன்கு ஆராய்ந்து பயன்படுத்துவதற்காக மேற்கண்ட பொருட்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு ஆராய்ந்து பயன்படுத்துவதனால் எல்லா வகையான நோய்களும் தீர்ந்துவிடுகின்றன. (13)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'சோதனாதிகணம்' எனும் பதினான்காவது அத்தியாயம்
முற்றிற்று.

1. தோஷங்கள்— வாதம், பித்தம், கபம் என்பவை.
2. தூஷ்யங்கள்— ரசம், ரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்புக்குள் உள்ள சோறு, எலும்பு, விந்து.

பதினைந்தாவது அத்தியாயம்

*மகா கஷாய சங்கிரகம்

'மகா கஷாயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

மூலிகைகளும், நோய்களும் கணக்கற்றபடியால் கஷாயங்களும் எண்ணற்றவை. இந்தக் கஷாயங்கள் பெரும்பாலும் பழக்கத்திலிருப்பதும் சிறந்தவைகளுமானவைகளே, ஜீவனீயம், பிரும்மணீயம் முதலான பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கஷாயக் கூட்டிலும் பத்து வகையான மருந்துகள் சேர்ந்திருப்பதால் நாற்பத்தைந்து வகை மகா கஷாயங்கள் எனக் கூறப்படுகின்றன.

குறைந்த அறிவுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த நாற்பத்தைந்து வகையான கஷாயங்கள் கூறப்பட்டுள்ளன. அறிவாளிக்கோர் எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளோம். [1]ஜீவந்தி போன்ற பொருட்களில் உள்ள பொதுவான இனிப்புச் சத்து, சீத வீர்யம், எண்ணெய்ப்பசை, முதலிய குணங்களையும், பால், கரும்பு, திராக்ஷை, மலை ஊவக்காய், முருக்கன் கிழங்கு இவற்றில் அவற்றிற்கு ஸமானமான குணங்களையும் ஆராய்ந்து அறிவாளிகள் ஜீவநீயம் போன்ற பொருட்களில் கண்டுகொள்வார்கள், குறைந்த அறிவுள்ளவர்கள் சொல்லியவற்றைப் பின்பற்றுவதுதான் சரியான முறை.

அந்த நாற்பத்தைந்து கஷாய கணங்கள், தனித்தனியாகப் பிரிவதால் அவை 450 கஷாயங்களாக அதே பெயர்களுடன் அழைக்கப்படுகின்றன. ஒரேபொருள் பலவகையான செயல்களைச் செய்தாலும் ஒரேவிதப் பொருட்கள் பலவித கஷாயங்களில் சேர்வதாலும் அவை பெயர் மாற்றம் அடைவதில்லை.

உப்புச்சுவை நீங்கலாக மற்றச் சுவையுள்ள பொருட்களைச் சேர்த்துச் செய்யும் ஒருவகைத் திரவமான மருந்து கஷாயம்

---

*பலவகையான மூலிகைகளை ஒன்றாகச் சேர்த்து கஷாயமாகச் செய்யப்படுவதை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. ஜீவந்தி—கீரைப்பாலை.

எனப்படுகிறது. மற்ற ஐந்து சுவைகளுள்ள பொருள்கள் கஷாயத்திற்குக் காரணமாயுள்ளன. உப்பைக் கொண்டு கஷாயம் செய்யும் முறை கிடையாது. மேலும் உப்பைத் தனியாகவும் பயன்படுத்த முடியாது. பயன்படுத்தியும் பயனில்லை. *(3— 5)*

1. ஜீவனீய கணப் பொருட்கள் *(உயிரை நிலை நிறுத்தும் பொருட்கள்)*

கீரைப்பாலை, காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மகாமேதா, காட்டுஉளுந்து வேர், காட்டுப் பயிறு வேர், ரிஷபகம், ஜீவகம், அதிமதுரம் இவற்றின் கூட்டிற்கு ஜீவனீயகணம் எனப்பெயர்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் ஆயுள் வளர்ச்சியடைகிறது.

2. பிரும்மணீய கணப்பொருட்கள் — *(உடலை வளர்க்கும் பொருள்கள்)*

பேராமுட்டி, சித்தாமுட்டி, பால் முதுக்கன் கிழங்கு, காகோலி, க்ஷீரகாகோலி, கரும்பு, அமுக்கரான் கிழங்கு, அம்மான் பச்சரிசி, ராஜக்ஷவகம், காட்டுப்பருத்தி இந்த பத்துப் பொருட்களும் பிரும்மணீய கணத்தைச் சார்ந்தவை.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் செய்து பருகச் செய்தால் உடல் வளர்ச்சியடைகிறது.

3. லேகனீய கணப்பொருட்கள் — *(உடல் பருமனைக் கரைக்கக் கூடிய பொருள்கள்)*

கடுக்காய், புங்கு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், வசம்பு, மஞ்சள், மரமஞ்சள், கொடிவேலி, கடுகுரோகிணி, அதிவிடயம் இவை லேகனீய கணத்தைச் சார்ந்த பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் செய்து பருகச் செய்தால் உடல் பருமன் கரைந்து விடும்.

4. பேதனீய கணப்பொருட்கள் — *(உடலில் உள்ள மலங்களைப் பிளந்து வெளியேற்றச் செய்யும் பொருட்கள்)*

எருக்கு, ஆமணக்கு, நேர்வாளம், கொடிவேலி, புங்கு, சங்கம்குப்பி, வெண்சிவதை, பிரும்மதண்டு, சடுகுரோகிணி, வன்னிமுகி இவை பேதனீய கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் செய்து பருகச் செய்தால் உடலில் உள்ள மலங்கள் வெளியேறிவிடும்.

5. ஸந்தானநீய கணப்பொருட்கள் – *(முறிந்த எலும்புகளைக் கூட்டிவைக்கும் பொருள்கள்.)*

தேன், அதிமதுரம், மூவிலை வேர், குமிழ், பாச்சோத்தி, ஞாழல், காட்டாத்திப்பூ, வட்டத்திருப்பி, தொட்டால் சுருங்கி, இலவம் பிசின் இந்தப் பத்துப் பொருட்களும் ஸந்தானநீய கணப் பொருட்களாம்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் முறிந்த எலும்புகள் கூடிவிடும். *(6— 10)*

6. தீபனீய கணப்பொருட்கள் – *(சடராக்னியைத் தூண்டும் பொருள்கள்)*

பெருங்காயம், மிளகு, புளிவஞ்சி, ஓமம், சேராங் கொட்டை; பிரண்டை, திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு (பஞ்சமூலம்) இவை தீபனீய கணப் பொருட்கள்.

இவற்றைத் தூள் செய்து கஷாயம் தயார் செய்து நோயாளியைப் பருகச் செய்தால் சடராக்னியை அது தூண்டிவிடும்.

7. பல்ய கணப்பொருட்கள் – *(வலிவை அளிக்கக் கூடிய பொருள்கள்)*

பேய் தும்மட்டி, தண்ணீர் விட்டாங்கிழங்கு, அம்மான் பச்சரிசி, பூனைக்காலி, ஓரிலை வேர், சித்தாமுட்டி, பேரா முட்டி, அமுக்கராங்கிழங்கு, சடுகுரோகிணி, ரிஷபகம் இவை பல்ய கணப்பொருட்களாகும்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்து பருகச் செய்தால் உடலுக்கு வலிவு ஏற்படும்.

8. வர்ண்ய கணப்பொருட்கள்–*(நிறத்தை அளிக்கும் பொருள்கள்)*

சந்தனம், குங்குமப்பூ, க்ஷீரகாகோலி, வெள்ளருகம் புல், ஞாழல், அதிமதுரம், பத்மகோஷ்டம், விலாமிச்சம் வேர்

மஞ்சிஷ்டி, நன்னாரி, இந்தப் பத்துப் பொருட்களும் வர்ண்ய கணப்பொருட்களாகும்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்து பருகச் செய்தால் நல்ல நிறம் ஏற்படும்.

9. கண்ட ஜனனப் பொருட்கள் — (குரலை உண்டாக்கும் பொருள்கள்)

சிறுபாலை, கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, திராக்ஷை, நன்னாரி, கரும்பு வேர், தேக்கு மரம், அதிமதுரம், திப்பிலி, முதுக்கன் கிழங்கு இவை கண்ட ஜனன கணப்பொருட்கள். (11—14)

இப்பொருட்களைத் தூள் செய்து, கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் நல்ல குரல் உண்டாகும்.

10. ஹ்ருதய கணப்பொருட்கள் — (இதயத்திற்கு உகந்த பொருள்கள்)

புளிஇலந்தை, மாதுளை, பேரிலந்தை, மா, எரிப்பு மா, எலுமிச்சை, புளிப்பு திராக்ஷை, துருஞ்சி, புளிவஞ்சி, இந்த பத்துப் பொருட்களும் ஹ்ருதய கணப் பொருட்கள்.

இப்பொருட்களைத் தூள் செய்து கஷாயமாக்கி பருகச் செய்தால் அது இதயத்திற்கு உகந்ததாக ஆகும்.

11. திருப்திக்ன கணப்பொருட்கள் — (கபதோஷத்தினால் உண்டாகும் உணவில் அருசி என்பதைப் போக்கும் பொருள்கள்)

சுக்கு, செவியம், கொடுவேலி, வாயுவிடங்கம், பெருங்குரும்பை, சிந்திற்கொடி, வசம்பு, கோரைக்கிழங்கு, திப்பிலி, பேய்ப்புடல் இந்தப் பத்துச் சரக்குகளும் திருப்திக்ன கணப் பொருட்களாகும்.

இவற்றைத் தூள்செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் கபதோஷத்தினால் உண்டாகும் அருசியைப் போக்கடிக்கும்.

12. அர்சோக்ன கணப்பொருட்கள் — (மூலநோயை நீக்கக் கூடிய பொருள்கள்)

வெப்பாலை அரிசி, வில்வம், கொடிவேலி, சுக்கு, அதிவிடயம், வசம்பு, செவியம், சிறுகாஞ்சோறி, கடுக்காய், மரமஞ்சள் இவை அர்சோக்ன கணப்பொருட்களாகும்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் மூல நோய்கள் நீங்கிவிடும்.

13. குஷ்டக்ன கணப்பொருட்கள் – *(குஷ்ட நோயைப் போக்கக்கூடிய பொருள்கள்)*

கருங்காலி, நெல்லி, சேராங்கொட்டை, மஞ்சள், கடுக்காய், ஏழிலம்பாலை, அலரி, கொன்றை, வாயுவிடங்கம், ஜாதிமல்லித்தளிர், இப்பத்தும் குஷ்டக்ன கணத்தைச் சேர்ந்தவை.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் குஷ்டநோய் நீங்கும்.

14. கண்டூக்ன கணப்பொருட்கள் – *(அரிப்பை நீக்கக் கூடிய பொருள்கள்)*

வெட்டிவேர், கொன்றை, சந்தனம், வெள்ளைக்கடுகு, கோரைக்கிழங்கு, வேம்பு, வெப்பாலை, அதிமதுரம், மரமஞ்சள், புங்கு, இப்பத்துச் சரக்குகள் கண்டுக்ன கணத்தைச் சேர்ந்தவை.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்து பருகச் செய்தால் அரிப்பு நீங்கும்.

15. க்ரிமிக்ன கணப்பொருட்கள் – *(புழுக்களை அழிக்கக் கூடிய பொருள்கள்)*

முருங்கை, மிளகு, கேம்புகம், வாயுவிடங்கம், சதுரக்கள்ளி, நாயுருவி, நொச்சி, நெரிஞ்சில், அதிவிடயம், எலிச்செவி இப்பத்தும் கிரிமிக்ன கணப் பொருட்கள்.

இவற்றைத் தூளாக்கி கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் புழுக்கள் அழியும். *(15—20)*

16. விஷக்ன கணப்பொருட்கள் – *(நஞ்சை நீக்கும் பொருள்கள்)*

மஞ்ஜிஷ்டி, நருவிலிமரம், மஞ்சள், கருநொச்சி, வாகை, கருஞ்சிவதை, ஏலம், சந்தனம், தேத்தாங்கொட்டை, நொச்சி இப்பத்துப் பொருட்கள் விஷக்ன கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் நஞ்சு நீங்கும்.

17. ஸ்தன்ய ஜனன கணப்பொருட்கள் –(*தாய்ப்பாலை வளர்க்கும் பொருள்கள்*)

சம்பாப்பயிர், தர்ப்பை, நாணல், அறுபதாம் குருவைப் பயிர், விலாமிச்சை, தர்ப்பைப்புல், இக்ஷுவாலிகா, கரும்பு, கோரைக்கிழங்கு வேர், லவங்க வேர் இப்பத்துப் பொருட்களும் ஸ்தன்ய ஜனன கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் தாய்ப்பால் வளரும்.

18. ஸ்தன்ய சுத்திகர கணப் பொருட்கள் – (*தாய்ப்பாலைச் சுத்தப் படுத்தும் பொருள்கள்*)

வட்டத்திருப்பி, சுக்கு, தேவதாரு, கோரைக்கிழங்கு, சீந்தில் கொடி, நன்னாரி, வெட்பாலை, பெருங்குரும்பை, கடுகு ரோகிணி, நிலவேம்பு, இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் செய்து பருகச் செய்தால் தாய்ப்பால் சுத்தமாகும்.

19. சுக்ர ஜனன கணப்பொருட்கள் – (*விந்துவை உற்பத்தி செய்யும் பொருள்கள்*)

மேதா, மகாமேதா, காகோலி, க்ஷீரககோலி, பால் முதுக்கன் கிழங்கு, ஜீவகம், ரிஷபகம், சிட்டுக்குருவி, ஜடா மாம்சி, காட்டுப் பயிறு வேர், இப்பத்தும் சுக்ரஜனன கணப் பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் விந்து வளரும்.

20. சுக்ர சோதன கணப்பொருட்கள் – (*விந்துவைத் தூய்மை யாக்கும் பொருள்கள்*)

கோஷ்டம், ஏலாவாலுகம், குமிழ், நீர்முள்ளி, கரும்பு, கடல் நுரை, விலாமிச்சைவேர், வெட்டிவேர், இக்ஷுரகம், கடம்ப மரப்பிசின் இவை சுக்ரசோதன கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூள் செய்து கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் விந்து தூய்மைப்படும்.

21. ஸ்நேஹோப கணப்பொருட்கள் – (உடலுக்கு மென்மை தரும் பொருள்கள்)

திராக்ஷை, காகோலி, க்ஷீரகாகோலி, சீந்தில்கொடி, அதிமதுரம், ஜீவகம், முதுக்கன் கிழங்கு, கீரைப்பாலை, மூவிலை வேர், மேதா இவை ஸ்நேஹோப கணப் பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் உடலுக்கு மென்மை ஏற்படும். *(21—26)*

22. ஸ்வேதோப கணப்பொருட்கள் – (வியர்வை உண்டாக்கும் பொருட்கள்)

முள் முருங்கை, மூக்கரட்டை, தேள் கொடுக்கி, கொள்ளு, உளுந்து, இலந்தை, யவம் என்னும் அரிசி, எள்ளு, எருக்கு, ஆமணக்கு இவை ஸ்வேதோப கணப் பொருட்கள்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் வியர்வை உண்டாகும்.

23. வமி நிக்ரக கணப்பொருட்கள் – (வாந்தியை நிறுத்தும் பொருட்கள்)

நெல்பொரி, மா, இலந்தை, மாதுளை, யவஅரிசி, அறுப தாம் குறுவை நெல், குறிஞ்சிக்காய், வெட்டிவேர், நாவல் தளிர், மாந்துளிர், மண் இவை மேற்கண்ட கணத்தைச் சேர்ந் தவை.

இவற்றைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் வாந்தி நிற்கும்.

24. த்ருஷாஹர கணப்பொருட்கள் – (நாவறட்சியை நீக்கும் பொருள்கள்)

சுக்கு, காஞ்சோரி, வெட்டிவேர், பர்ப்பாடகம், சந் தனம், சீந்திற்கொடி, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, பேய்ப் புடல், கொத்தமல்லி விதை இவை மேற்காணும் கணத்தைச் சார்ந்த பொருட்கள்.

இவற்றைத் தூள் செய்து கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் நாவறட்சி நீங்கும்.

25. ஹித்மாகர கணப்பொருட்கள் — (விக்கலைத் தணிக்கும் பொருள்கள்)

கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், புல்லுருவிச் செடி, புஷ்கர மூலம், கடுக்காய், திப்பிலி, கடுக்காய்ப்பூ, பூலாங் கிழங்கு, காஞ்சோறி, இலந்தைக்கொட்டை இவை மேற்கண்ட இனத்தைச் சார்ந்தவை.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் ஆக்கி பருகச் செய்தால் விக்கல் தணியும்.

26. விட்க்ரஹண கணப்பொருட்கள் — (மலக்கட்டை உண்டு பண்ணும் பொருள்கள்)

ஞாழல், நன்னாரி வேர், சிறுதேக்கு, பெருவாகை, தாமரை கேஸரம், பாச்சோத்தி, காட்டாத்திப்பூ, தொட்டால் சுருங்கி, இலவம் பிசின், மாம்பருப்பு இவை விட்க்ரஹண கணப் பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் மலக்கட்டு ஏற்படும்.

27. விட்விரஜன கணப்பொருட்கள் — (மலமிளகச் செய்யும் பொருள்கள்)

நாவல், ஆனை வணங்கி, அதிமதுரம், நீலோத்பலம், காஞ்சோறி, எள்ளு, வில்வப் பிஞ்சு, சுட்ட மண், க்ஷீரகாகோலி, இலவம்பிசின் இவை விட்விரஜன கணப் பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் மலமிளகும்.

28. மூத்ரக்ரஹ கணப்பொருட்கள் — (சிறுநீரைக் கட்டும் பொருள்கள்)

நாவல், மா, ஒதியன் ஆல், புரசு, ஆலம்பட்டை, இத்தி, அச்மந்தகம், சேங்கொட்டை, வெள்ளைக் கருங்காலி இவை மூத்ரக்ரஹ கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் அதிகம் சிறுநீர் கழிப்பவர்க்குச் சிறுநீர்க் கட்டு ஏற்படும்.

29. மூத்ர விரஜன கணப்பொருட்கள் – *(சிறுநீர் சுத்தம் செய்யும் பொருட்கள்)*

தாமரை, செந்தாமரை, ஆம்பல், அதிமதுரம், செங் கழுநீர்ப்பூ, காட்டாத்திப்பூ, ஞாழல் பூ, நீலோற்பலம் ரோஜாப்பூ, வெண்தாமரை இவை மேற்கண்ட கணப்பொருட் களாகும்.

இவற்றைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் சிறுநீர் சுத்தமடையும்.

30. மூத்ர விரேசன கணப்பொருட்கள் – *(சிறுநீர் கழிக்கச் செய் யும் பொருள்கள்)*

புல்லுருவிச்செடி, நெருஞ்சில், தர்ப்பை, இக்கடம், எருக்கு, நாயுருவி, தர்ப்பைப்புல், நாணல், கோரைக்கிழங்கு, சிறு பீளை இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் சிறுநீர் கழிவு ஏற்படும்.

31. காஸக்ன கணப்பொருட்கள் – *(இருமலைப் போக்குககூடிய பொருள்கள்)*

திராக்ஷை, நெல்லிக்கனி, மூக்கரட்டை, தேள்கொடுக்கி, காஞ்சோரி, கடுக்காய், திப்பிலி, கர்க்கடக சிருங்கி, கீழா நெல்லி, கண்டங்கத்திரி இவை மேற்கண்ட கணப் பொருட் கள்.

இவற்றைத் தூள் செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் இருமல் நீங்கும்.

32. சுவாஸ சமன கணப்பொருட்கள் – *மல் மூச்சைத் தணிச் கும் பொருட்கள்)*

கருங்கச்சோலம், புளிவஞ்சி, பூலாங்கிழங்கு, கீழாநெல்லி, துளசி, பெருங்காயம், சிறுபாளை, புஷ்கரமூலம், ஏலம், அகில் கட்டை இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் மேல்மூச்சுத் தணியும்.

33. ஜ்வர சமன கணப்பொருட்கள் – *(காய்ச்சலைத் தணிக்கச் செய்யும் பொருட்கள்)*

திராக்ஷை, உவகைச்செடி, சிற்றீச்சை, மஞ்சேஷ்டி, நன்னாரி, சீந்திற்கொடி, வட்டத்திருப்பி, கடுக்காய், நெல்லிக் காய், தானிக்காய் இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இவற்றைத் தூளாக்கிக் கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் காய்ச்சல் தணியும்.

34. ச்ரம நாசக கணப்பொருட்கள் – *(களைப்பை நீக்கும் பொருள்கள்)*

மாதுளை, பேயத்திவேர், சிற்றீச்சை, முரள், யவதானி யம், அறுபதாம் குறுவை, கரும்பு, இலந்தை, திராக்ஷை, பேரீச்சை இவை மேற்கண்ட கணப்பொருள்களாம்.

இவற்றைத் தூளாக்கி கஷாயம் தயாரித்து பருகச் செய் தால் களைப்பு நீங்கும்.

35. தாக சாமக கணப்பொருட்கள் – *(எரிச்சலைத் தணிக்கக் கூடிய பொருள்கள்)*

பத்மகோஷ்டம், நெல் பொரி, வெட்டி வேர், அதி மதுரம், தாமரை, நன்னாரி, சர்க்கரை, விலாமிச்சைவேர், குமிழம் பழம், சந்தனம் இவை மேற்கண்ட கணப்பொருட் கள்.

இவற்றைத் தூள் செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் எரிச்சல் தணயும்.

36. சீத சாமக கணப்பொருட்கள் – *(குளிர்ச்சியைத் தணக்கும் பொருள்கள்)*

தகரவிதை, சுக்கு, அகிற்கட்டை, வசம்பு, கொத்தமல்லி விதை, திப்பிலி, கண்டங்கத்திரி, நிலவேம்பு, பெருவாகை, முன்னை இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் குளிர்ச்சி தணயும்.

37. உதர்த்த சாமக கணப்பொருட்கள் – *(செந்நிறத் தழும்பு களைப் போக்கும் பொருள்கள்)*

தும்பைச் செடி, முரள், வேங்கை, ஏழிலைப்பாலை, கருங்காலி, வெண்கருங்காலி, இலந்தை, கருவேலம், கருப்பு

மருத மரம், வெண் மருதமரம் இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் செந்நிறத் தழும்புகள் மறையும்.

38. அங்க மர்த சமன கணப்பொருட்கள் – (உடல் வலியைத் தணிக்கச் செய்யும் பொருள்கள்)

கானேரிலி, ஏலம், வெட்டிவேர், கண்டங்கத்திரி, மூவிலை வேர், ஓரிலைவேர், மிளகு, சந்தனம், அதிமதுரம், ஆமணக்கு இவை மேற்கண்ட கணப்பொருள்கள்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்து பருகச் செய்தால் உடல்வலி தணியும்.

39. சூலக்ன கணப்பொருட்கள் – (வயிற்றுவலியைப் போக்கும் பொருட்கள்)

ஓமம், மிளகு, சீரகம், கடுகு, கருஞ்சீரகம், திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு இவை மேற்கண்ட கணங்களைச் சேர்ந்த பொருட்கள்.

இவற்றைப் பொடி செய்து கஷாயம் தயாரித்து பருகச் செய்தால் வயிற்று வலி நீங்கும்.

40. சோபக்ன கணப்பொருட்கள் – (வீக்கத்தைத் தணிக்கும் பொருட்கள்)

வில்வவேர், பெருவாகைவேர், குமிழம்வேர், பாதிரி வேர், முன்னை வேர், ஓரிலை வேர், மூவிலை வேர், கண்டங்கத்திரிவேர், முள்ளுக் கத்திரிவேர், நெரிஞ்சில் முள் இவை மேற்கண்ட கணப் பொருட்கள்.

இவற்றைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் வீக்கம் தணியும்.

41. ருதிர ஸ்தாபன கணப்பொருட்கள் – (இரத்தப் போக்கை நிறுத்தும் பொருட்கள்)

தேன், அதிமதுரம், நெல் பொரி, காவி, ஞாழல், இலவம் பிசின், மண், செங்கல் ஓடு, சர்க்கரை, பாச்சோத்தி, இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூள் செய்து கஷாயம் தயாரித்துப் பருகச் செய்தால் இரத்தப்போக்கு நிற்கும்.

42. வேதனா ஸ்தாபன கணப்பொருட்கள் – (வேதனையை நீக்கும் பொருட்கள்)

சிலாசத்து, முசுமுசுக்கை, குமிழ், இலவம்பிசின், அசோக மரம், பத்மகோஷ்டம், வாகை, சுரக்கொன்றை, கடம்பை, நீர்நொச்சி இவை மேற்கண்ட கணப்பொருள்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் வேதனை நீங்கும்.

43. ஸம்ஞாகரண கணப்பொருட்கள் – (மயக்கத்தைத் தெளிவடையச் செய்யும் பொருள்கள்)

மலைவேம்பு, பெருங்காயம், கோரகம், குக்குலு, அசோக மரம், கடுகுரோகிணி, கடுக்காய், கருவேலம், ஜடாமாம்சி, அருகம்புல், வசம்பு, இவை மேற்கண்ட கணப்பொருட்கள்.

இப்பொருட்களைத் தூள் செய்து கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் மயக்கம் தெளியும்.

44. கர்ப்பஸ்தாபன கணப்பொருட்கள் – (கருவைக் கரையாமல் நிறுத்தி வைக்கும் பொருள்கள்)

பேரேலம், அருகம்புல், பாதிரி, ஞாழல், நெல்லிக்காய், கடுக்காய், அரிஷ்டா, வல்லாரை, மூக்கரட்டை, தண்ணீர் விட்டான் கிழங்கு இவை மேற்கண்ட கணப் பொருள்கள்.

இப்பொருள்களைப் பொடி செய்து கஷாயம் தயார் செய்து பருகச் செய்தால் கருவைத் தக்க வைக்கும்.

45. வயஸ்தாபன கணப்பொருட்கள் – (ஆயுளை நிலைநிறுத்தச் செய்யும் பொருள்கள்.)

சீந்திற்கொடி, கடுக்காய், நெல்லிக்காய், கீரைப்பாலை, ஆனைத்திப்பிலி, மூவிலைவேர், ஓரிலை வேர், வல்லாரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, சாரடை இவை மேற்கண்ட் கணப் பொருள்கள்.

இப்பொருட்களைத் தூளாக்கி கஷாயம் தயார் செய்து யருகச் செய்தால் ஆயுள் நீளும்.

இவ்விதம் பலவகையான நோய்களைத் தணிப்பதற்காக இவை கூறப்பட்டன.

இவற்றை நோய்களுக்கும் நோய்கண்டவர்களுக்கும் ஏற்றவாறு கற்பனை செய்து புரிந்துகொள்ள வேண்டும். (27—50)

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தனாத்தில் 'மகாகஷாய சங்கிரகம்' என்னும் பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறாவது அத்தியாயம்

*விவிதகண சங்கிரகம்

'விவிதகண சங்கிரகம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேய மாமுனிவர் கூறிய விதம் விவரிப்போம். (1—2)

1. [1]**விதார்யாதிகணம்** என்பது நிலப்பனங்கிழங்கு, ஆமணக்கு, ஆடு தீண்டாப்பாளை, மூக்கரட்டை, தேவதாரு, நரிப்பயிறு, பெருவீடு கொள்ளு (மாஷபர்ணி) காஞ்சோறி, [2]ஜீவன பஞ்சமூலம், [3]லகு பஞ்ச மூலம், நன்னாரி, செருப்படை, இவற்றின் சேர்க்கையாகும்.

இந்தக் கூட்டுப் பொருள் இதயத்திற்கு நல்லது. உடலைப் பருக்கச் செய்யும். வாதத்தையும், பித்தத்தையும் நீக்கும். உடலுருக்கும் நோய், குன்மம், உடலில் உண்டாகும் ஒருவித வேதனை, மேல்மூச்சு, இருமல் இவற்றைத் தவிர்ப்பவை. (3—4)

2. [4]**ஸாரிவாதிகணம்**

நன்னாரி, விலாமிச்சைவேர், குமிழம், இலுப்பை, வெண் சந்தனம், செஞ்சந்தனம், அதிமதுரம், பேரீச்சை இவற்றின் கூட்டை ஸாரிவாதிகணம் என்கிறோம்.

இக்கூட்டுப் பொருள், அழற்சி, பித்தம், இரத்த பித்தம், நாவறட்சி, காய்ச்சல் இவற்றை விலக்கும் தன்மையுடையது. (5)

3. [5]**பத்மகாதி கணம்**

பதிமுகம், தாமரைக்கிழங்கு, ருத்தி, மூங்கிலுப்பு, விருத்தி, கர்க்காடக சிருங்கி, சிந்தில் கொடி, ஜீவனிய கணத்தைச் சேர்ந்த பத்துச் சரக்குகள் இவற்றின் கூட்டு பத்மகாதிகணம் எனப்படும்.

---

*விவிதகண சங்கிரகம்—பலவித மருந்துப் பொருட்களின் சேர்க்கையைத் தொகுத்துக் கூறுவதன் சுருக்கம்.

1. விதாரி—நிலப்பனங்கிழங்கு.
2. ஜீவன பஞ்ச மூலம்—தண்ணீர் விட்டாங் கிழங்கு, காகோலி, கீரைப்பாலை, ஜீவகம், ரிஷபகம் இவ்வைந்தும்.
3. லகுபஞ்ச மூலம்—கண்டங்கத்திரி, கத்திரி, நெரிஞ்சில், சிறுமல்லிகை, பெருமல்லிகை.
4. ஷாரிவா — நன்னாரி.
5. பத்மகம் — ஒரு வகை மரம்.

இக்கூட்டு தாய்ப்பாலை வளர்க்கும். வாதம், பித்தம், இரண்டு தோஷங்களையும் அகற்றவல்லது. திருப்தியை உண்டாக்கும். ஆயுளை வளர்க்கும். உடலைப் பருக்கச் செய்யும். ஆண்மையை வளர்க்கும். (6)

4. பருஷகாதிகணம்

[1]பருஷகாதிகணம் என்றால் பேரீச்சை, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், (த்ரிபலா) திராக்ஷை, தேக்கு, தேத்தாங் கொட்டை, கொன்றை, மாதுளை, முறுங்கை, இந்தக் கூட்டுட் பொருள்களின் சேர்க்கையாகும்.

இக்கூட்டு நாவறட்சி, சிறுநீர் நோய், வாதநோய் இவற்றை ஆற்றும் குணமுடையது. (7)

5. [2]அஞ்சனாதிகணம்

ஸௌவீராஞ்சனம், ஞாழல், ஜடாமாம்சி, தாமரை, நெய்தல், இரஸாஞ்சனம், ஏலம், அதிமதுரம், சிறுநாகப்பூ இவற்றின் கூட்டுக்கு அஞ்சனாதிகணம் என்று பெயர்.

இது நஞ்சை நீக்குவதுடன் உள் அழற்சியையும் பித்தத்தையும் அகற்றும். (8)

6. [3]படோலாதிகணம்

பேய்ப்புடல், கடுகுரோகிணி, வெண்சந்தனம், சிறுபாலை, சீந்திற்கொடி, வட்டத்திருப்பி இவற்றின் சேர்க்கை படோலாதிகணம் என்று பெயர் பெறும்.

இக்கூட்டுப் பொருட்கள் கபம், பித்தம், குஷ்டம், காய்ச்சல், நஞ்சு, வாந்தி, ருசியின்மை, காமாலை இவற்றை விலக்குவதுடன் சடராக்னியையும் வளர்க்கும். (9)

7. [4]குடூச்யாதிகணம்

சீந்தில்கொடி, அல்லிக் கிழங்கு, வேம்பு, கொத்தமல்லி, செஞ்சந்தனம் இவற்றின் கூட்டு குடூச்யாதிகணம் எனக் கூறப்படுகிறது.

---

1. பருஷம்—பேரீச்சை.
2. அஞ்சனம்—அஞ்சனக்கல்.
3. படோலா—பேய்ப்புடல்.
4. குடூசி—சீந்தில் கொடி.

இது பித்தம், கபம் இவற்றால் உண்டாகும் நோய்களையும், காய்ச்சல், வாந்தி, அழற்சி, நாவறட்சி இவற்றையும் நீக்குவதுடன் சடராக்னியையும் வளர்க்கும். (10)

8. [1]ஆரக்வதாதிகணம்

கொன்றை, வெப்பாலரிசி, பாதிரி, நாய்வேளை, வேம்பு, சிந்தில், பெருங்குரும்பை, கருமுறுக்கை, வட்டத்திருப்பி, நில வேம்பு, மருதோன்றி, பேய்ப்புடல், புங்கு, மணிப் பூங்கு, ஏழிலம் பாலை, சித்திர மூலம், பாகல், கருங்குறிஞ்சி, கமுகு இப்பொருள்களின் சேர்க்கை ஆரக்வதாதிகணம் எனக் கூறப் படுகிறது.

இக்கூட்டுப் பொருட்களைப் பயன்படுத்துவதால் வாந்தி, குஷ்டம், நஞ்சு, காய்ச்சல், கப நோய், சொறி சிரங்கு, நீரழிவு இவை நீங்கும். இவை நாட்பட்ட புண்களையும் ஆற்ற வல்லவை. (11—12)

9. [2]அஸநாதிகணம்

வேங்கை, தினிசை, பூவரசம்பட்டை, மருதமரம், புங்கை, கருங்காலி, வெண் கருங்காலி, காட்டு வாகை, சிம்சுபா, ஆடு தீண்டாப்பாளை, வெண் சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள், பனை, முறுக்கை, அகில், முருங்கை, ஆச்சாமரம், கமுகு, படு கரணை, வெப்பாலரிசி, யக்ஷ தூபம் எனும் ஒருவகைப் பிசின், மராமரம் இவற்றின் தொகுப்பு அஸநாதிகணம் என வழங்கப் படுகிறது.

இக்கூட்டுப் பொருட்கள், வெண்குஷ்டம், குஷ்டம், கபக் கோளாறு, கிருமி நோய், பாண்டுநோய், நீரழிவு, கொழுப்பு அதிகரிப்பதனால் உண்டாகும் நோய் இவற்றைப் போக்கும். (13—14)

10. [3]வரணாதிகணம்

மாவிலங்கை, செங்குறிஞ்சி, கருங்குறிஞ்சி, தண்ணீர் விட்டான் கிழங்கு, கொடிவேலி, பெருங்குரும்பை, வில்வம், ஆடு தீண்டாப்பாளை, கத்திரி, கண்டங்கத்திரி, புங்கை, மணப்புங்கை, பெருங்கடுக்காய், பிஞ்சுக் கடுக்காய், முறுங்கை,

---

1. ஆரக்வதம்—கொன்றை.
2. அஸனம்—வேங்கை.
3. வரணம்—மாவிலங்கை.

தர்ப்பை, கோஷ்டம், இப்பொருட்களின் சேர்க்கை வரணாதி கணம் எனப்படுகிறது.

இக்கணப் பொருட்கள் கப நோய், கொழுப்பினால் தோன்றும் நோய், சடராக்னிக் குறைவு, கம்பத்தைப்போல் தொடை பருத்திருக்கும் நோய், தலைவலி, குன்மம், உடலுக்குள் ஏற்படும் கட்டி இவற்றை நீக்கும் தன்மையுடையவை. *(15—16)*

11. [1]ஊஷகாதிகணம்

முள்ளங்கி, மயில் துத்தம், பெருங்காயம், அன்னபேதி, புஷ்பக அன்னபேதி, இந்துப்பு, சிலாசத்து, இவற்றின் சேர்க்கைக்கு ஊஷகாதிகணம் எனப்பெயர். இவை நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு, குன்மம், கொழுப்பினால் தோன்றும் நோய், கபத்தின் மாறுபாடுகள் இவற்றை விலக்கும் தன்மை கொண்டவை. *(17)*

12. [2]வீரதராதிகணம்

வெட்டிவேர், முன்னை, ஈச்வரமல்லி, கன்று போட்டவுடன் கறக்கும் பால், கல்லுருவி, பெருவாகை, கருங்குறிச்சி, நெட்டுக்கோரை, தர்ப்பம், பெரும்புல், காவட்டம்புல், மூங்கில், பெருவாகை, பெருங்குறும்பை, செங்குறிச்சி, உத்தாமணி, மருதை இக்கூட்டுப் பொருள் வீரதராதிகணம் எனப்பெயர் பெறும்.

இக்கணத்தின் பொருட்கள் சிறுநீர்ப்பையில் கல்லடைப்பையும், சர்க்கரை எனும் சிறுநீர் நோயையும், நீர்ச்சுருக்கு, நீர் கட்டிப்போதலையும் தவிர்ப்பவை. *(18—19)*

13. [3]ரோத்ராதிகணம்

வெள்ளலொத்தி, உதியன், முருக்கன், கருத்த இலவம், தேவதாரு, தேக்கு, கடம்பு, வாழை, அசோகம், சிற்றேலம், பெருங்கோரைக் கிழங்கு, இலவம், இவை ரோத்ராதிகணத்தைச் சார்ந்த பொருள்களின் கூட்டு.

---

1. ஊஷகம்— முள்ளங்கி
2. வீரதரம்— வெட்டிவேர்.
3. ரோத்ரம்— வெள்ளலொத்தி

இவை கொழுப்பினால் தோன்றும் நோய்கள், கபத்தினால் ஏற்படும் பிணிகள், பெண் குறியில் உண்டாகும் வியாதிகள், நஞ்சினால் ஏற்படும் மாறுபாடு இவற்றை அகற்றும் தன்மையுடையவை. [1]ஸ்தம்பனம், [2]வர்ண்யம் எனும் குணங்களையுடையன. (20—21)

14. [3]அர்க்காதிகணம்

எருக்கு, அலரி, விஷமூங்கில், நீர்திப்பிலி, சிறு தேக்கு, சிற்றரத்தை, தேள்கொடுக்கு மரம், புங்கு, நாயுருவி, பிரும்மதண்டு, மணிப்புங்கு, சிவதை, கருஞ்சிவதை, இங்குண மரம், இவற்றின் சேர்க்கை அர்க்காதிகணம் என வழங்கப்படுகிறது.

இப்பொருட்களின் சேர்க்கை கபநோய்கள், கொழுப்புப் பிணிகள், நஞ்சின் மாறுபாடுகள், கிருமிகள், குஷ்டம் இவற்றை விலக்கும் தன்மையுடையது. குறிப்பாகப் புண்களைச் சுத்தி செய்ய வல்லது. (22—23)

15. [4]சுரஸாதிகணம்

துளசி, கருந்துளசி, கிடாரை, படுகரணை, வாய்விடங்கம், மறுக்காரை, மருவகம், எலிச்செவி, தேக்கு, பொன்னாவிடை, தூதுவளை, தும்புருப்பத்திரி, சிறுதேக்கு, புங்கு, மணத்தக்காளி, ஒருவகைச்சுரை, எட்டி, புல், ஜடாமாம்சி, இவற்றின் சேர்க்கைக்கு சுரஸாதிகணம் எனப்பெயர்.

இக்கணப் பொருட்கள், கபநோய்கள், கொழுப்பு நோய்கள், கிருமிகள், நாட்பட்ட முற்றின ஜலதோஷம், சுவையின்மை, சுவாச நோய், இருமல் ஆகிய நோய்களை அகற்றக்கூடியவை. புண்களைச் சுத்தி செய்யக்கூடியவை. (24—25)

---

1. ஸ்தம்பனம்— வாதத்தை வளர்க்கும் குணம்.
2. வர்ண்யம்— உடல் நிறத்தைச் சிறப்பிக்கும் தன்மை.
3. அர்க்கம்— எருக்கு.
4. சுரஸம்—துளசி

16. [1]முஷ்ககாதிகணம்

காட்டுப்பருத்தி, கள்ளி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், புலியுகிர் எனும் பூண்டு, முருக்கன், கருங்காலி, சிம்சுபா, இவற்றின் சேர்க்கை முஷ்ககாதி கணம் ஆகும்.

இவை குன்மம், நீரிழிவு, சிறுநீரில் கல்லடைப்பு, பாண்டு, கொழுப்பினால் தோன்றும் நோய்கள், மூலநோய், கபரோகங்கள், விந்துதோஷம் இவற்றைப் போக்கடிக்கும். (26)

17. [2]வத்ஸகாதிகணம்

வெட்பாலை, பெருங்குறும்பை, ஏலம், வசம்பு, பெருவாகை, மிளகு, கடுகு, கடுகுரோகிணி, பெருங்காயம், சிறுதேக்கு, மகா கஷாயத்திற்குரிய ஓமம் முதலிய பத்து பொருட்கள் வத்ஸகாதிகணம் எனப்படுகிறது.

இப்பொருட்கள், வாத நோய்கள், கபத்தினால் தோன்றும் நோய்கள், கொழுப்பால் உண்டாகும் பிணிகள், சுவையின்மை, நாட்பட்ட ஜலதோஷம், வலி, மூலநோய், காய்ச்சல், குன்மம் இவற்றை நீக்கும் தன்மையுடையவை.
சடராக்னியை அதிகப்படுத்தி சிரணிக்கச் செய்யும். (27—28)

18-19. [3]வசாதிகணமும், [4]ஹரித்ராதிகணமும்

வசம்பு, கோரைக்கிழங்கு, தேவதாரு, சுக்கு, அதிவிடயம், கடுக்காய், இக்கூட்டுப் பொருள்களை வசாதிகணம் எனக் கூறுவர்.

மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம், பெருமல்லிகை, வெட்பாலை அரிசி, இவற்றின் சேர்க்கை ஹரித்ராதிகணம் என அழைக்கப்படும்.

இவ்விரண்டு கணப் பொருட்களுக்கும் அசீர்ணக் கழிச்சலைப் போக்கும் குணம் உண்டு. கொழுப்பினால் தோன்றும் நோய்கள், கபநோய்கள், ஊருஸ்தம்பம், தாய்ப்பால் தொடர்பான தோஷங்கள் இவற்றையும் இவை போக்கும். (29—30)

---

1. முஷ்ககம்—காட்டுப்பருத்தி.
2. வத்ஸகம்—வெட்பாலை.
3. வசம்—வசம்பு.
4. ஹரித்ரம்— மஞ்சள்.

20. ¹பிரியங்க்வாதிகணமும், ²அம்பஷ்டாதிகணமும்

தினை, புஷ்பாஞ்சனம், ஸௌவீராஞ்சனம், ஓர் இலைத் தாமரை, தாமரையின் தாது, மஞ்ஜஷ்டி, அருகம்புல், இலவ மரம், இலவம் பிசின், வறம்கண்டி, சுரப்புன்னை, சந்தனம், காட்டாத்திப்பூ இப்பொருட்களின் சேர்க்கை பிரியங்க்வாதி கணம் என வழங்கப்படும்.

புளியாரை, அதிமதுரம், மஞ்ஜஷ்டி, நந்தியாவர்த்தம், முருக்கை, காஞ்சொறி, வெள்ளலொத்தி, காட்டாத்திப்பூ, வில்வப்பழத்தின் உட்சதை, பெருவாகை, தாமரைத்தாது, இவற்றின் சேர்க்கை அம்பஷ்டாதிகணம் எனப் பெயர் பெறும்.

இக்கணப் பொருட்கள் ³ஆமநிலையிலுள்ள பேதியை பக்குவ நிலைக்குக் கொண்டுவரும். மலத்தைக் கட்டும். பித்தத்திற்கு நலம். புண்களை ஆற்றும். *(31—33)*

21. ⁴முஸ்தாதிகணம்

கோரைக்கிழங்கு, வசம்பு, கொடிவேலி, மஞ்சள், மர மஞ்சள், கடுகுரோகிணி, நிலவேம்பு, சேங்கொட்டை, வட்டத் திருப்பி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெண் நாபி, கோஷ்டம், வெண்நொச்சி, வெண்வசம்பு, இக்கணப் பொருட்கள் முஸ்தாதிகணம் எனப்படும்.

இப்பொருட்கள் பெண் குறியில் தோன்றும் நோய்களை யும், தாய்ப்பாலைப்பற்றிய நோய்களையும் அகற்றும். சீரணமாகாத தோஷங்களையும் சீரண நிலைக்குக் கொண்டு வரும். *(34)*

22. ந்யக்ரோதாதிகணம்

ஆல், அரசு, அத்தி, வெள்ளலொத்தி, உதியன், சிறுநாவல், பெருநாவல், மருதை, நீர்வஞ்சி, வெண் கருங்காலி, பூவரசு, மா, புளிவஞ்சி, முரளஞ்செடி, முருக்கன், நந்தியாவர்த்தம்,

---

1. பிரியங்கு—தினை.
2. அம்பஷ்டம்—புளியாரை.
3. ஆமம்—கபதோஷத்தினால் ஏற்படும் அசீரணம்.
4. முஸ்தா—கோரைக்கிழங்கு.

இலந்தை, கடம்பு, தும்பை, அதிமதுரம், இலுப்பை இக்கூட்டுப் பொருட்கள் [1]ந்யக்ரோதாதிகணம் எனப்படும்.

இவை இரணங்களை ஆற்றக்கூடியவை, மலத்தைக் கட்டக் கூடியவை. முறிந்துபோன எலும்பு முதலியவற்றை மீண்டும் ஒருமிக்கச் சேர்க்கும் குணமுடையவை.

கொழுப்பினால் தோன்றும் நோய்கள், பித்த நோய்கள், இரத்தபித்தம், நாவறட்சி, இவற்றைப் போக்கும் தன்மை யுடையவை.

இவை உடல் அழற்சியையும், பெண்குறியில் தோன்றும் நோய்களையும் நீக்கும் தன்மை வாய்ந்தவை. *(35—36)*

23. [2]ஏலாதிகணம்

ஏலம், சிற்றேலம், மட்டிப்பால், கோஷ்டம், வாசனைப் புல், ஜடாமாம்சி, வெட்டிவேர், காவட்டம் புல், சிறு நாகப் பூ, கச்சோரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கிரந்தி தகரம், சாமந்தி, கரிய கோளம், புலியுகிர் எனும் வாசனைப் பொருள், தேவதாரு, அகில், சரளமரம், குங்குமப்பூ, கருங்கச் சோரம், குங்குலியம், ஸர்ஜரசம், குந்துருகம் எனும் மணம் வீசும் பொருள், சரக்கொன்றை, சிறுநாகப்பூ இவற்றின் சேர்க்கை ஏலாதி கணம் எனக் கூறப்படும்.

இது வாத, கபங்களின் கோளாறுகளையும், வாத விகா ரத்தையும், நஞ்சையும் போக்கும் தன்மையுடையது.

உடல் நிறத்தைத் தெளிவுறச் செய்யும். சொறி, சிறுகட்டிகள் கோடம் எனும் தழும்புகள் இவற்றையும் விலக்கும். *(37—38)*

24. [3]சியாமாதிகணம்

கரும் சிவதை, நேபாளம், எலிச்செவி, கமுகு, வெண் சிவதை, செங்கங்குப்பி, பொன்னால மரம், பிரும்மதண்டு, பேய் தும்மட்டி, நாயுருவி, மஞ்சள், சீந்தில், புங்கை, ஆடு

---

1. ந்யக்ரோதம்—ஆலமரம்.
2. ஏலம்— ஏலக்காய்.
3. சியாமம்—கருஞ்சிவதை.

திண்டாப்பாளை, பச்சிலை, கரும்பு, ஊவக்காய் இவற்றின் கூட்டுக்கு சியாமாதிகணம் என்று பெயர்.

இப்பொருட்கள், குன்மம், நஞ்சு, சுவையின்மை, இடு விஷக்கோளாறு, இதயத்தைப் பற்றிய பிணிகள், நீர்ச்சுருக்கு, இவற்றை நீக்கும் தன்மை வாய்ந்தவை. (39)

25. [1]பிப்பல்யாதிகணம்

திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு, மிளகு, ஆனைத்திப்பிலி, அரேணுகம், ஏலம், ஓமம், வெப்பாலை அரிசி, வட்டத்திருப்பி, சீரகம், கடுகு, மலைவேம்பு, ஜாதிக்காய், பெருங்காயம், சிறுதேக்கு, வசம்பு, கோரைக் கிழங்கு, பெருங்குரும்பை, அதிவிடயம், வாய்விடங்கம், கடுகு ரோகிணி, இவற்றின் கூட்டு பிப்பல்யாதி கணம் எனப்படும்.

இது கபத்தை நீக்கும். முற்றின ஜலதோஷம், வாத நோய், சுவையின்மை இவற்றைப் போக்குவதுடன் சடராக்னியை வளர்க்கும். குன்மம், குத்தல் வலி இவற்றைப் போக்கும். ஆமாசிரணத்தைப் பக்குவம் செய்யும். (40—41)

இவ்வாறு இருபத்தைந்து மருந்து கணங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் கிடைக்காத பொருட்களுக்கு அவற்றிற்கு ஒப்பான குணமுள்ள பொருட்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில் தேவையான குணமில்லாதவற்றை விலக்கிவிடலாம். (42)

26. மருந்து கணங்களைப் பயன்படுத்தும் முறை

மேற்கூறிய மருந்துச் சரக்குகளின் வரிசைகளை தோஷங்கள், தாதுக்கள் இவற்றின் நிலைமைக்கு ஏற்றவாறு [2]கல்கம், [3]க்வாதம், [4]ஸ்நேகம், [5]லேஹ்யம் முதலியவற்றுள் எந்த முறைப்படியாவது தயார் செய்து அருந்தச் செய்யவும்.

இக்கணங்களில் உள்ள பொருட்களை நஸ்யம் இடவும், எண்ணெய் வஸ்தி செய்யவும், பூசிக்கொண்டு எண்ணெய்குளியல் முதலியவற்றால் உள்ளும், புறமும், வேறு வேறுவகையில் உபயோகித்து வந்தால் மிகவும் தவிர்க்க முடியாததான நோய்களையும் போக்கலாம். (43)

இத்துடன் அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் விவிதகண ஸங்கரகம் எனும் பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. பிப்பலி—அரிசித்திப்பிலி.
2. கல்கம்—பொருட்களை கல்லில் அரைப்பது.
3. க்வாதம்—கஷாயம்.
4. ஸ்நேகம்—எண்ணெய்.
5. லேஹ்யம்—கஷாயம் முதலியவற்றை மறுபடியும் காய்ச்சி பக்குவப்படுத்துவதால் வரும் கனமான பகுதி.

பதினேழாவது அத்தியாயம்

*திரவ்யாதி விஞ்ஞாநீயம்

'திரவ்யாதி விஞ்ஞாநீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் முதலிய மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. திரவியத்தின் விளக்கம்

ஐந்து மகாபூதங்களின் கூட்டுத் தன்மையே திரவியமாகும். அது பிருத்வி (நிலம்) எனும் பூதத்தை அடிப்படையாக வைத்துத் தோன்றுகிறது. அது பொருளின் உருவில் வெளிவருவதற்கு அப்பு (நீர்) எனும் பூதம் மூல காரணமாயிருக்கிறது. இவ்விரண்டும் ஆகாயம், வாயு, தேஜஸ் என்னும் மூன்று பூதங்களுடைய பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டு அவற்றின் ஆதாரத்தை அடைந்து, அதற்கேற்ற தனித்தன்மையையும் பெறுகிறது.

இவை நிலத்தைச் சேர்ந்தவை, இவை காற்றைச் சேர்ந்தவை, இவை நெருப்பைச் சேர்ந்தவை என திரவியங்களைப் (பொருட்களை) பிரித்துக் கூறுவதற்கு, குறிப்பிட்ட பொருட்களில் குறிப்பிட்ட பூதத்தின் அளவை மற்ற பூதங்களைவிட மிகுதியாகக் கலந்திருப்பதையே ஆதாரமாகக் காண்கிறோம்.

பஞ்ச மகாபூதங்களின் சேர்க்கையினால் திரவியம் தோற்றுவிக்கப்படுவதால் அது ஒரே சுவையுள்ளது அன்று. அதே போல் வெவ்வேறு நோய்களும், ஒரே தோஷத்தினால் ஏற்பட்டவை அல்ல என முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. *(3)*

---

* திரவ்யாதி விஞ்ஞாநீயம்—மருந்துகளுக்குப் பயன்படுகின்ற பொருட்களை திரவியம் என்கிறோம். ஆதி என்ற சொல்லால் குறிப்பிடப்படுவன இரசம், வீர்யம், விபாகம், பிரபாவம் என்பவை. இவற்றைப் பற்றி விளக்கும் காரணத்தால் இவ் வத்தியாயம் திரவ்யாதி விஞ்ஞாநீயம் எனப்படுகிறது.

2. சுவையும், துணைச்சுவையும்

பொருட்களில் நிலைத்துள்ள பல சுவைகளுள், முதலில் தெளிவாக அறியப்படுவதையே ரசம் அல்லது சுவை என்கிறோம்.

சுவைக்கும்பொழுது முதலில் அறியப்படாமலிருந்து முடிவில் சற்றுத் தெளிவாக அறியப்படுவதுபோல் தோன்றும் சுவை துணைச்சுவை (அநுரசம்) ஆகும்.

3. ரஸங்களின் செயலும், சிறப்பும்

ரசத்திற்கு [1]சேதனம் (சிற்றமடைந்த தோஷங்களை உடலிலிருந்து பிரித்து விலக்கும் தன்மை) [2]உபசமனம் (தோஷங்களைக் கோளாறடையச் செய்யாமல் தணிக்கச் செய்தல்) என இரண்டு செயல்கள் உண்டு.

ஹிதம் (நன்மை), அஹிதம் (தீமை) என இரண்டு சிறப்புக்களுமுண்டு.

திரவியங்களில் தோன்றும் குரு, இலகு முதலிய குணங்கள், ரசங்களுக்கும் ஆதாரமாயுள்ள நிலம், நீர் முதலான பூதங்களையே சார்ந்திருக்கின்றன. ஆனால் குணங்களும் அவற்றிற்கேற்ப ரசங்களும் [3]ப்ரகிருதி [4]விக்ருதி, [5]விசாரம், [6]தேசம், [7]காலம் இவற்றின் காரணமாக ஒன்றோடொன்று பொருட்களில் ஒருமிக்கக் கலந்திருப்பதைக் கருதி அக்குணங்கள் ரசங்களுக்குத் தொடர்புடையனவாக விவரிக்கப்படுகின்றன. (4)

---

1. சேதனம் — கோளாறடைந்த தோஷங்களை உடலிலிருந்து தனியாகப் பிரிக்கும் தன்மை.
2. உபசமனம்—தோஷங்களைக் கோளாறடையச் செய்யாமல் தணிக்கச் செய்தல்.
3. ப்ரகிருதி—இயற்கைக் குணம்.
4. விக்ருதி—மாறுபட்டநிலை.
5. விசாரம்—அசைவு—இயங்குதல்.
6. தேசம்—இடம், உடல்.
7. காலம்—நேரம்.

4. நிலத்தைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்

[1]குரு, [2]கடினம், [3]விசதம், [4]மந்தம், [5]ஸாந்த்ரம், [6]ஸ்தூலம், [7]ஸ்திரம், [8]கந்தம் இக்குணங்கள் அதிகம் உள்ளவை நிலத்தைச் சார்ந்த பொருட்கள்.

[9]உபசயம், [10]கௌரவம், [11]ஸங்காதம், [12]ஸ்தைரியம் இவை நிலத்தைச் சார்ந்த பொருள்களின் செயல்களாகும்.

5. நீரைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்

பெருகுதல் (த்ரவம்), ஒட்டுதல் (அ) ஒன்று சேர்த்தல், குளிர்ச்சி, பளு, மந்த குணம், மென்மை, நெருக்கம், நெகிழ்ச்சி, பிசுபிசுப்புத்தன்மை, அதிகச் சுவையூட்டுதல் இவை நீரைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்.

கடினமான பொருளைத் தன் தொடர்பால் இளகச் செய்தல், எண்ணெய்ப்பசை உண்டாக்குதல், இளைத்தல், இறுக்குதல், தளர்ந்து பெருகுதல், மென்மை, மனக்களிப்பை யுண்டாக்குதல் இவை நீரைச் சேர்ந்த பொருட்களின் செயல்களாகும்.

---

1. குரு—எளிதில் சீரணமாகாதது.
3. கடினம்—கெட்டியானது.
3. விசதம்—துல்யம் அல்லது தனித்த நிலை.
4. மந்தம்—மெதுவாக இயங்குதல்.
5. ஸாந்த்ரம்—நெருக்கமானது.
6. ஸ்தூலம்—பருத்தது.
7. ஸ்திரம்—நிலையானது.
8. கந்தம்—மணம்.
9. உபசயம்—வளர்தல்.
10. கௌரவம்—விசேஷ பளுவுள்ளது.
11. ஸங்காதம்—கபம் முதலிய பளுவான பொருள்களை அளிக்கவல்லது.
12. ஸ்தைரியம் – திடத்தன்மை.

6. நெருப்பைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்

கடுமையான உஷ்ணம், வறட்சி, நுண்மை, இலேசான தன்மை, தெளிவு, உருவம், ஒளியுடைமை இவை நெருப்பைச் சார்ந்த பொருட்களின் குணங்களாகும்.

எரித்தல், பக்குவப்படுத்தல், ஒளி வீசுதல், காந்தி, நிறம் இவற்றை அதிகப்படுத்துதல் இவை நெருப்பைச் சார்ந்த பொருட்களின் செயல்களாகும்.

7. காற்றைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்

வறட்சி, நுண்மை, இலேசான தன்மை, தெளிவு, உடலைத் தளரச்செய்தல், பரவும் தன்மை, குளிர்ச்சி, சொற சொறப்பு, தொடுதலால் அறியும் இயல்பு இக்குணங்களை விசேஷமாக உடையவை காற்றைச் சேர்ந்த பொருட்களாகும்.

எண்ணெய்ப்பசையின்மை, இலேசான தன்மை, தெளிவு படுத்தல், உடல்வாட்டம், மனக்கவலை இவை காற்றைச் சார்ந்த பொருட்களின் செயல்களாகும்.

8. ஆகாயத்தைச் சார்ந்த பொருட்களின் குணங்கள்

மென்மை, நுண்மை, இலேசான தன்மை, தெளிவு, மழமழப்பு, துரிதமாகப் பரவும் தன்மை, பிரித்தல், மிக்க ஒலி இக்குணங்கள் உடைய பொருட்கள் ஆகாயத்தைச் சார்ந்தவை. மென்மை, துவாரங்களைத் தோற்றுவித்தல், இலேசான தன்மையுண்டாக்கல் இவை ஆகாயத்தைச் சார்ந்த பொருட்களின் செயல்களாகும். (5)

9. பொருட்கள் எல்லாம் மருந்தே

பொருள்கள் அநேக வகைகளில் பயன்படுத்தப்படுவதால் உலகில் மருந்துக்குப் பயன்படாத பொருள் ஒன்றுமே கிடையாது. (6)

10. மேல் நோக்கிச் செல்லும் பொருட்களின் குணங்கள்

நெருப்பு, காற்று இவ்விரண்டைச் சார்ந்த பொருள்கள் பெரும்பாலும் மேல்நோக்கிச் செல்லும் தன்மையுடையவை.

நெருப்பும், காற்றும், இலகு குணமுடையதாயும், நெருப்புக்கு மேல்நோக்கிச் செல்லும் தன்மையிருப்பதாலும், காற்று பறக்கும் தன்மையைக் கொண்டிருப்பதாலும், நெருப்பு, காற்று

இவை அதிகம் கலந்திருக்கும் பொருட்கள் [1]மேல்நோக்கி இயங்கும் செயல்களில் ஈடுபடும் இயல்பைப் பெற்றிருக்கின்றன.

11. கீழ் நோக்கிச் செல்லும் பொருட்கள்

நிலத்தின் குணம் பளு, நீரின் குணம் கீழ்நோக்கிச் செல்லுதல். ஆகையால் நீர், நிலம் இவ்விரண்டும் அதிகமாகக் கலந்திருக்கும் பொருட்கள் [2]கீழ்நோக்கி இயங்கும் செயல்களைச் செய்பவை. மேல்நோக்கிச் செல்லும் பொருட்கள், கீழ்நோக்கிச் செல்லும் பூதங்கள் இரண்டும் கலந்தால் அவை இரண்டு வேலைகளையும் செய்யத்தக்கவை. (7)

தோஷ குணங்களுக்கு எதிரிடையான குணங்கள் உள்ளவை சமனம் என்று முன்பு கூறப்பட்டுள்ளது. மேல் நோக்கிச் செல்லும், கீழ்நோக்கிச் செல்லும் பொருட்களின் சேர்க்கையில் எந்தப் பொருள் அதிகமுள்ளதோ அது அச்செயலைப் பெரும்பாலும் செய்கிறது.

அதனால் காற்றின் குணங்கள் அதிகமுள்ள பொருட்களில் [3]மலத்தை இறுக வைக்கும் தன்மை ஏற்படுகிறது.

நெருப்பின் குணங்கள் அதிகமுள்ள பொருட்கள் சடராக்னியை வளர்த்து சீரணிக்கச் செய்கின்றன.

காற்று, நெருப்பு இவ்விரண்டின் குணங்கள் உள்ள பொருட்கள் [4]தோஷங்களை சுரண்டிப் பிரிக்கும் செயலைச் செய்கின்றன.

நிலம், நீர், இவற்றின் குணமுள்ள பொருட்கள் [5]உடலைப் பருக்கச் செய்கின்றன. (8)

---

1. மேல்நோக்கி இயங்கும் செயல்—வாந்தி செய்தல், இருமல் முதலியன—(ஊர்த்வகாமி எனப்படும்.)
2. கீழ்நோக்கி இயங்கும் செயல்—மலம் சிறுநீர் வெளிப்படுத்தல், பேதி – 'அதோகாமி' எனப்படும்.
3. மலத்தை இறுகவைத்தல்—கிராஹி எனப்படும்.
4. தோஷங்களை (கபம் முதலியன) சுரண்டிப் பிரித்தல்— 'லேகனம்.'
5. உடலைப் பருக்கச் செய்வது – 'பிரும்ஹணம்'

12. இரசங்களின் குண இயல்பு

அந்தப் பொருட்களில் உவர்ப்பு, புளிப்பு, உப்பு இச் சுவையுள்ளவை ஒன்றுக்கு ஒன்று மேன்மேலும் அதிக உஷ்ண வீர்யம் உடையவை.

கைப்பு, துவர்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் மேன்மேலும் சீதவீர்யம் உடையவை.

கைப்பு, காரம், துவர்ப்புச் சுவையுள்ள பொருட்கள் வறட்சித் தன்மையை அளிப்பவையாகும். மேலும், மலம், சிறு நீர், வாதம் இவற்றைக் கட்டும் குணம் உடையவை.

உப்பு, புளிப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் எண்ணெய்ப் பசையுள்ளவை. மலம், சிறுநீர், வாதம் இவற்றை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தவை.

உப்பு, துவர்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் குரு குணம் உள்ளவை. அவ்வாறே புளிப்பு, உவர்ப்பு, கைப்புச் சுவையுள்ள பொருட்கள் இலகு குணம் உள்ளவை. சிலர் உவர்ப்புச் சுவை, குரு, இலகு, எண்ணெய்ப்பசை, வறட்சித் தன்மை கொண்டது எனக் கருதுகின்றனர். (9—10)

13. வீர்யம்

சிலர், குரு, இலகு, ஸ்நிக்தம், ரூக்ஷம், தீக்ஷ்ணம், மந்தம், சீதம், உஷ்ணம் என்ற பாகுபாட்டைக் கொண்டு வீர்யம் எட்டு வகையானது எனக் கூறுகின்றனர். (11)

14. மற்றும் சிலரின் கூற்று

எந்த இயல்பின் உதவியைக் கொண்டு பொருட்கள் தம் வேலையைச் செய்கின்றனவோ, அது வீர்யம் எனச் சொல்லப் படுகிறது. வீர்யத்தின் உதவியின்றி பொருள் ஒரு வேலையை யும் செய்யும் திறமையுடையதன்று. அதனால் எல்லாச் செயல்களும் வீர்யத்தையே அடிப்படையாகக் கொண்டவை. வீர்யமே சக்தி எனப்படுவது. (12)

அந்த எட்டு குணங்களில்தான் ரசம், விபாகம், குணங் கள் இவை முற்றிலும் அடங்கியிருப்பதாலும், சிறந்த குணங் களை உடையதாலும், இந்த எட்டு குணங்களே வீர்யம்

எனப்படுகிறது. மேலும் பொருட்களைப் பற்றிப் பேசும் இடங்களிலும் பொருள்களில் உள்ள (வீர்யத்தை) சிறப்புச் செய்கையைக் கொண்டே அவை குறிப்பிடப்படுகின்றன.

ஆகையினால் பொருள்களைக் காட்டிலும், பொருட்களில் உள்ள **வீர்யமே** மேலானது எனத் தெரிய வருகிறது. இந்த வீர்யம், அல்லது சக்தி எல்லாம் பொருள்களைச் சார்ந்தனவேயன்றி ரசத்தைச் சார்ந்தனவல்ல. அதனால் இந்த எட்டுக் குணங்களே **வீர்யம்** என முடிவாகிறது என்பது அவர்களுடைய கொள்கையாகும்.

குரு முதலான குணங்கள் சூடு, குளிர்ச்சி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாலும், ஆதான காலம், விஸர்க காலம் என காலத்தை இருவகையாகப் பிரித்து இருப்பதாலும், வீர்யத்தை உஷ்ண வீர்யம், சீத வீர்யம் என இரு வகையாகப் பிரித்துள்ளனர் சிலர். இதைப் பற்றிய ஒரு செய்யுள்:-

உலகில் உள்ள பொருட்கள் அநேக விதத்தில் தோன்றினாலும் கண்களுக்குத் தோன்றுபவை, தோன்றாதவை என இரண்டு வகையாக அவற்றைப் பிரிப்பதுபோல், பொருட்களில் எல்லா குணங்கள் இருந்தாலும் உலகில் அக்னியும் தண்மையுமே பலமாயிருப்பனபோல் சீத வீர்யம், உஷ்ண வீர்யம் இரண்டையும் பொருட்கள் ஒரு பொழுதும் கடப்பதில்லை. *(13–15)*

15. உஷ்ண வீர்யத்தின் செயல்கள்

எரித்தல், பக்குவம் செய்தல், வியர்த்தல், உருக்குதல், வாதம், கபம் இவற்றைத் தணித்தல் ஆகியவை உஷ்ண வீர்யத்தின் செயல்களாகும்.

16. சீத வீர்யத்தின் செயல்கள்

மகிழ்ச்சியளித்தல், வியர்வையைத் தடுத்தல், உயிரைக் காத்தல், இரத்தத்தையும் பித்தத்தையும் சுத்தம் செய்தல், இவை சீத வீர்யத்தின் செயல்களாம். *(16)*

17. விபாகம்

உண்ணப்பட்ட சுவையுள்ள பொருட்கள் சடராக்னியின் சேர்க்கையினால் சீரணமடைந்தபின் ஏற்படும் சுவை மாறுதல் விபாகம் எனப்படும்.

இனிப்பு, உப்புச்சுவைகள், விபாகத்தினால் இனிப்புச் சுவையாக மாறுகின்றன. புளிப்புச்சுவை புளிப்பாகவே இருக்கும். மிகுதியுள்ள உறைப்பு, கைப்பு, துவர்ப்பு இவை உறைப்புச் சுவையாக மாறுதலடைகின்றன.

விபாகத்தினால் மாறுதலடையும் சுவைகளும் சாதாரணச் சுவைகளுக்குள்ள பயனையே அளிக்கும். (17)

சுவையின் குறைவு, நடுத்தரமாதல், அதிகமாதல் இவற்றைப் பொருட்களில் உள்ள குணங்களின் ஏற்றத்தாழ்வின் நிலையை ஒட்டித் தெரிந்துகொள்ள வேண்டும். (18)

18. பராரருடைய கொள்கை

ரசங்களின் விபாகம் மூவகைப்பட்டது. புளிப்புச்சுவை புளிப்பாகவும், உறைப்புச்சுவை உறைப்பாகவும், மற்ற இனிப்பு, உப்பு, துவர்ப்பு, கைப்பு இந்நான்கும் இனிப்பு ரசமாகவே மாறுகின்றன. கலப்படச்சுவைகள் கலப்படமாகவே விபாகத்தில் மாறுகின்றன என்பது.

உறைப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவைகள், உறைப்புச் சுவையாக மாறினால் அவற்றால் பித்தத்தை எப்படி கண்டிக்க முடியும்? இனிப்புச் சுவைதானே பித்தத்தைக் கண்டிக்க வல்லது. (19— 20)

சுவை, விபாகம், இரண்டில் இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் சீத வீர்யம் உள்ளவை. புளிப்புச் சுவையுள்ள பொருட்கள் உஷ்ணவீர்யம் உள்ளவை. உறைப்புச் சுவையுள்ள பொருட்கள் உஷ்ண வீர்யம் உடையவை.

---

1. விபாகம்— உட்கொள்ளப்படும் பொருட்களில் அடங்கிய (ரசங்கள்) அறுசுவைகள் குடலில் சடராக்னியின் சேர்க்கையினால் பக்குவம் அடைந்த பின்பு இனிப்பு, புளிப்பு, உறைப்பு இம்மூன்று சுவைகளில் ஒரு மாற்றுச் சுவையாக மாறுவது.

இவ்வாறு பக்குவமாகும் மூவிதப் பொருள்கள், தம் சுவையின் குணங்களுடைய ஏற்றத்தாழ்வினால் முறையே, தோஷங்களைச் சீற்றமடையவோ குறைக்கவோ செய்கின்றன.

எடுத்துக்காட்டாக பால், குணத்தால் இனிப்புச் சுவை யுள்ளது. விபாகத்தினாலும் இனிப்புச் சுவை கொண்டது. சீத வீர்யமுள்ளது. அதனால் அந்தப்பால் கபத்தைச் சீற்ற மடையச் செய்து பித்தம், வாதம் இவற்றைத் தணிக்கிறது.

19. மற்றோர் உதாரணம்

கள் புளிப்புச் சுவையுள்ளது. அதற்கு விபாகத்திலும் புளிப்புச் சுவையும், உஷ்ண வீர்யமும் உண்டு. அதனால் வாதத்தைத் தணித்து, கபத்தையும் பித்தத்தையும் அது சீற்ற மடையச் செய்கிறது.

அவ்வாறே மிளகு உறைப்புச் சுவை கொண்டது. விபா கத்தில் அது உறைப்புச் சுவையுடன் உஷ்ண வீர்யமும் பெறு கிறது. அதனால் அது கபத்தைத் தணித்து வாத பித்தத்தைச் சீற்றமடையச் செய்கிறது.

20. ரச வீர்ய விபாகங்களின் தனிமையான செயல்கள்

தேன் இனிப்புச் சுவையுடையதாயினும், விபாகத்தில் அது உறைப்புச் சுவையாக மாறுவதால் கபத்தைத் தணிக்கச் செய்கிறது. அதே தேன், உறைப்புச்சுவை, வறட்சி, சீத வீர்யம், இவற்றைக் கொண்டிருப்பதால் வாதத்தைத் தோற்று விக்கிறது.

யவதானியத்தின் செயலையும் இவ்வாறே கண்டு கொள்வது.

நீர் நிறைந்த இடங்களில் வாழும் பிராணிகளின் மாமி சம், குளிர்ச்சியாயிருந்தாலும், உஷ்ணவீர்யத்தின் காரணமாக பித்தத்தைத் தோற்றுவிக்கிறது.

அதேபோல் எண்ணெய், விபாகத்தால் உறைப்புச் சுவை யைப் பெறுவதால் அந்த விபாகம் மலம், சிறுநீர் இவற்றைத் தடுக்கிறது.

புளிப்புச் சுவையுள்ள [1]காடி, வறட்சித்தன்மை, உஷ்ண வீர்யம்இவற்றைக் கொண்டிருப்பதால் கபத்தைப் போக்குகிறது.

விளாம்பழம் வறட்சித் தன்மையுடையதாயிருந்தாலும், சீத வீர்யத்தைப் பெற்றிருப்பதனால் பித்தத்தைத் தணிக்கிறது.

நெல்லிக்கனி, சீத வீர்யம் உடையதாலும், விபாகத்தில் அதற்கு இனிப்புச் சுவை ஏற்படுவதால், பித்தத்தையும், வறட்சி, இலகு இவற்றின் மூலம் கபத்தையும் தணிக்கச் செய்கின்றது.

ஆனால் குளிர்ச்சி, வறட்சி, இலகு இவையிருப்பதால் அது வாதத்தை அகற்றுவதில்லை.

இந்துப்பு, விபாகத்தில் இனிப்புச் சுவையுள்ளதாக இருப்பதால் பித்தத்தையும், இலகு குணத்தினால் கபத்தையும் போக்குகிறது.

சுக்கும், அரிசித் திப்பிலியும், உறைப்புச்சுவை கொண்டிருந்த போதிலும், எண்ணெய்ப்பசை, உஷ்ண வீர்யம், விபாகத்தில் இனிப்புச் சுவை, இவற்றைக் கொண்டிருப்பதால் வாதத்தை அழிக்கிறது.

பூண்டும் வெங்காயமும், எண்ணெய்ப்பசை, உஷ்ண வீரியம், குருகுணம், இவற்றால் வாதத்தைப் போக்குகின்றன. இதே பூண்டு எண்ணெய்ப்பசை, குருகுணம் இவற்றால் கபத்தைத் தோற்றுவிக்கிறது.

முதிர்ந்த முள்ளங்கி விபாகத்தில் இனிப்புச் சுவையைப் பெறுவதால் கபத்தை உண்டு பண்ணுகிறது.

---

1. 'காடி' — அரிசி கழுவிய நீர் மற்றும் நெல், யவதானியம், கேழ்வரகு, வரகு போன்ற தான்யங்களையும் ஊறவைத்து ஆஸவம் செய்வதுபோல் பானையிலிட்டு, சீலை மண் செய்து 15நாள் அல்லது 30 நாள் புளிக்கவைத்து பின்பு வடிகட்டி எடுப்பது காடி.

கண்டங்கத்திரி, நிலப்பனை, எருக்கு, அகில் இவை உஷ்ண வீர்யத்துடன் கூடியிருப்பதால் பித்தத்தை உண்டாக்கு கின்றன.

மகா பஞ்சமூலம், துவர்ப்பு, கைப்புச் சுவையுடையதா யிருப்பதால் வாதத்தைத் தணிக்கிறது. உஷ்ண வீர்யம் கொண் டிருப்பதால் பித்தத்தைத் தணிக்கச் செய்வதில்லை.

கொள்ளு, இயற்கையில் துவர்ப்புச் சுவையையும், விபா கத்தில் புளிப்புச் சுவையையும் உடையதால் வாதத்தைத் தணிக்கச் செய்கிறது. உஷ்ண வீர்யத்தினால் பித்தத்தைத் தணியச் செய்வதில்லை. (21—22)

ஆகையால் பொருட்கள், சுவையாலும், செயலாலும், வீர்யத்தினாலும், குணத்தினாலும், விபாகத்தினாலும் பிர பாவத்தினாலும் தமக்குரிய செயலைச் செய்கின்றன. (23)

சுவை, வீர்யம், விபாகம், பிரபாவம் உள்ள பொருட் களில் எது அதிகமுள்ளதோ அது மற்றவற்றைப் போக்கி தன் செயலைச் செய்கிறது.

பகைமைக் குணங்கள் பொருந்திய பொருட்களின் அதிக பலமுள்ள குணம், குறைந்த பலமுள்ள குணத்தை வெல்கிறது. (24)

சுவை, [1]வீர்யம், [2]விபாகம், [3]பிரபாவம் இவை ஒரே அளவில் இருந்தால் சுவையை விபாகம் விஞ்சிவிடுகிறது. சுவையையும் விபாகத்தையும் வீர்யம் விஞ்சிவிடுகிறது. சுவை, வீர்யம், விபாகம் மூன்றையும் பிரபாவம் வென்று விடுகிறது. சுவை முதலியவை சமஅளவில் இருக்கும்போது இப்படி செய லுறுவது அவற்றின் இயல்பான பலமாகும். (25)

---

1. வீர்யம்—திரவியங்களில் ஊடுருவிச் சார்ந்திருக்கும் குணம்.
2. விபாகம்—உட்கொள்ளப்படும் பொருட்களின் மாற் றம்.
3. பிரபாவம்—ரசம், வீர்யம், விபாகம் மூன்றின் செயல்களைக் காட்டிலும் தனியாக வேறு ஒரு செயலைச் செய்வது.

சுவை, வீர்யம், விபாகம், பிரபாவம் இவை ஒன்றுக் கொன்று எதிரிடையான குணங்கள் பெற்றிருந்தாலும், தனியே செயலாற்றும்போது, ஒன்று மற்றொன்றிற்கு இடையூறு செய் வதில்லை.

(ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற எதிரிடையான இம் மூன்று குணங்களும் மனிதனிடத்தில் செயல்படும் போது ஒன்று மற்றொன்றுக்குத் தடையாக இருப்பதில்லை.) அதுபோல் பகைமை கொண்ட வாதம், பித்தம், கபம் என்ற இம்மூன்று தோஷங்களும் நோயைத் தோற்றுவிப்பதில் ஒன்றுக் கொன்று எதிரியாக ஆவதில்லை. (26)

பொருட்களில் சுவை, வீர்யம், விபாகம் இவை ஒரே அளவிலோ கூடக் குறைவாகவோ இருப்பதற்குக் காரணம் இவை களில் நிலம், நீர், முதலியவற்றின் சேர்க்கை, உயர்வு, தாழ்வு களேயாகும்.

இனிப்பு, குளிர்ச்சி, பிசுபிசுப்பு, எண்ணெய்ப்பசை, குருத் தன்மை, மென்மை, இக்குணங்கள் பாலில் ஒருங்கே சேர்ந்து இருப்பதுபோல், நீர்ப்பாங்கான இடங்களிலும், நீரில் வாழும் பிராணிகளின் மாமிசத்திலும் இருப்பதில்லை. அதனால் அம்மாமிசத்தில் பாலைப்போன்ற குணங்கள் இருப்பதில்லை.

திரவியத்தைச் சார்ந்த குணங்களே உடலிலும், தோஷங் களிலும் இருக்கின்றன. எனவே திரவியத்தைப் பொறுத்தே உடல், இருக்கை, வளர்ச்சி, குறைவு இவை ஏற்படுகின்றன. (27—29)

பொருளை வாயில் போட்டவுடன் ஏற்படும் சுவையே அந்தப் பொருளின் சுவையாகும். நாக்கில் பொருளை வைத்த வுடன் அதன் குளிர்ச்சி, உஷ்ணம் இவற்றை அறிந்து கொள்வ தாலும், பொருள் உடலின் உள்ளே சென்று சிறிது நேரத்தில் மிருதுத் தன்மை முதலியவற்றை ஏற்படுத்துவதாலும், பொரு ளின் வீர்யத்தை இவ்வாறு இருவகையாகக் கண்டு கொள்ள லாம்.

திரவியத்தின் விபாகத்தை உடலின் வளர்ச்சி, இளைப்பு இவற்றைக் கொண்டு அறிந்து கொள்ள வேண்டும். (30)

21. ரசத்தின் பிரிவுகள்

சுவை அறுவகையானது எனக் கருதப்படுகிறது. அது சரி யல்ல என்பது ஒரு சிலர் கருத்து. ஏனென்றால் நாக்கு ஒன்றா லேயே சுவை சுவைக்கப்படுவதால் சுவை ஒன்றேதான் என்றும் கூறலாம். நெய், எண்ணெய், வெல்லம், திராக்ஷை முதலிய இனிப்பு வகையைச் சேர்ந்த பொருள்களில் உள்ள இனிப்புச் சுவையும், அவற்றின் குணமும் வெவ்வேறாகக் காணப்படு கின்றன. எனவே எண்ணற்ற பொருட்களில் உள்ள சுவை களும் எண்ணற்றவைகளே எனக் கருதலாம் என்பது மற்றும் சிலர் கருத்து.

ஆனல் நிலம் முதலான மகாபூதங்களின் உயர்வு, தாழ்வு இவற்றின் காரணமாகக் காணப்படும் சிறு வேற்றுமை அவை சேரும்பொழுது காண்பதில்லை. பயனில் மட்டும் ஒற்றுமை காணப்படுவதால் இதைத் தனியாகச் சொல்ல முடியாது. ஒவ் வொரு பொருளிலும் காணப்படும் குரு முதலான வேற்றுமைப் பொருள் சேர்க்கையில் தன் குணத்தை விடுவதில்லை. அதா வது குரு குருவாகவே, லகு லகுவாகவே இருக்கிறது. ஆகை யினால் இனிப்புச் சுவையுள்ள பொருட்களில் சுவை மாறு பட்டாலும், ஒரே இனத்தைச் சேர்ந்ததால் இனிப்புச்சுவை ஒன்றுதான் என்று முடிவு செய்ய வேண்டும். அதாவது பொருளை வாயில் போட்டதும் ஏற்படும் கொழகொழப்பு முதலிய குணங்கள் நெய் போன்ற இனிப்புப் பொருட்களில் இருப்பதால் இனிப்புச்சுவை ஒன்றுதான் உண்டு. மாதுளை, உப்பு போன்றவற்றில் இவை காணப்படுவதில்லை. இந்த ஆறு சுவைகளைத் தவிர்த்து வேறு சுவையில்லை. ஆகையால் சுவை ஆறுவிதமே. மேலும் ஒரு சுவையைப்பற்றியோ, பல சுவைகளைப் பற்றியோ விவாதம் நடைமுறையில் கிடையாது. (31—33)

22. வீர்யத்தின் விளக்கம்

பொருட்களில் அதிக வலிவு பெற்றிருக்கும் குரு முதலான எட்டு குணங்களை வீர்யம் என்கிறோம். வலிவு பெறாத அதே எட்டு குணங்களை குணங்கள் என்றே அழைக்கிறோம்.

எட்டுக் குணங்களைத் தவிர மற்ற பன்னிரண்டு குணங்களும் பொருட்களில் வலிவு பெறாதிருந்தால் அவைகளையும் குணங்கள் என்றே சொல்ல வேண்டும். வீர்யம் எனச் சொல்வதில்லை.

பல ஆசிரியர்கள் ஆறு சுவைகளைக் கொண்டு விபாகத்தையும் ஆறு விதமாகக் கருதுகின்றனர். அது சரியல்ல. காரணம், இனிப்புச் சுவையுள்ள நெய் விபாகத்தில் புளிப்பாக மாறுவதும், புளிப்புச் சுவையுள்ள மாதுளை விபாகத்தில் இனிப்பாக மாறுவதும், எண்ணெய் விபாகத்தில் உறைப்புச் சுவையாக மாறுவதும் ஏன்?

அரிசித் திப்பிலி, விபாகத்தில் உறைப்புச் சுவையாக மாறாதது ஏன்?

அதாவது சுவையைப் போன்றே விபாகமும் இருக்குமானால் மேற்கண்ட மாறுதல்கள் தோன்றாதல்லவா? அதனால் சுவையின் எண்ணிக்கையை வைத்து விபாகமும் ஆறு வகைப்படும் என்று கருதுவது சரியல்ல.

யவதானியம் இனிப்புச் சுவையும் குரு குணமும் உடையதாயிருந்தபோதிலும் வாதத்தைத் தோற்றுவிக்கிறது.

சீத வீர்யமுள்ள நெய் சடராக்னியை வளர்க்கிறது.

[1]வசை உஷ்ண வீர்யமுள்ளதாயினும் சடராக்னியைக் குறையச் செய்கிறது. விபாகத்தில் உறைப்புச் சுவையுள்ள பயறு பித்தத்தைப் போக்குகிறது.

விபாகத்தில் இனிப்புச் சுவையுள்ள உளுந்து பித்தத்தை அதிகரிக்கச் செய்கிறது. விபாகத்தில் இனிப்புச் சுவையும், குரு குணமுள்ளதும், எண்ணெய்ப் பசையுள்ளதும், உஷ்ண வீர்யமுள்ளதுமான தேன்பாகு வாதத்தை உண்டு பண்ணுகிறது.

இனிப்புச் சுவையைப் போலவே மற்ற சுவைகளும் விபாகத்தில் மாறுபடுவதைக் காண்கிறோம்.

தான்றிக்காய் புளிப்பாக இருந்தபோதிலும் வாதத்தைப் போக்குகின்றது. கபத்தையும், பித்தத்தையும் நீக்குகிறது.

தயிரும் குரு குணம் உள்ளதால் சடராக்னியை வளர்க்கிறது.

ஆனால் புறாவின் இறைச்சி குரு குணம் உள்ளதாயினும் சடராக்னியை வளர்ப்பதில்லை. விளாம்பழமும், மாதுளம் பழமும் புளிப்புச் சுவையுடையதாயினும் மலக்கட்டை ஏற்படுத்து

1. வசை—நிணநீர்

கின்றன. ஆனால் நெல்லிக்கனி புளிப்புச் சுவையுடையதாயிருந் தும் மலக்கட்டை ஏற்படுத்துவதில்லை. காட்டாத்திப்பூ, துவர்ப்புச் சுவையும், சீதவீர்யமும் உடையதாயினும் மலக்கட்டைத் தோற்றுவிக்கிறது. கடுக்காய் அவ்வாறு இயங்குவதில்லை.

ஆகையினால் தனிப்பட்ட முறையில் பொருட்களில் காண் கின்ற சுவை முதலியவை முக்கியமானவையல்ல. சுவை, வீர்யம், விபாகம், இவைகளுடன் பிரபாவம் என்னும் தனிச் சிறப்புச்சக்தி திரவியங்களைச் சார்ந்ததாகையால் பொருட்களுக்குத்தான் சிறப்பு. *(34—43)*

23. பிரபாவத்தின் சிறப்பு

சுவை, வீர்யம், விபாகம் இவை சமமாக இருந்தபோதிலும், இவை எல்லாவற்றையும் மீறி, ஒரு சிறந்த காரியத்தை பிர பாவம்தான் செய்கிறது. அந்த பிரபாவம் திரவியத்தில் இருக்கிற தனித்தன்மையுள்ள சக்தியேயாகும்.

நேர்வாளமும், கொடுவேலியும், சுவை, வீர்யம், விபாகம் இவற்றில் சமானமாக இருந்தும் நேர்வாளம் மலத்தை வெளிப் படுத்துகிறது. கொடிவேலி அவ்வாறல்ல.

அதிமதுரம், திராக்ஷை, இவ்விரண்டும் சுவை முதலியவற்றில் சமமாக இருந்த போதிலும் திராக்ஷை மலத்தை வெளிப்படுத்து கிறது. அதிமதுரம் அவ்வாறில்லை.

நெய்யும், பாலும் சுவை போன்றவற்றில் ஒன்றாயிருந்த போதிலும் நெய் சடராக்னியை வளர்க்கிறது. பால் அப்படி செய்வதில்லை.

பூண்டு சுவையிலும், விபாகத்திலும் உறைப்புச்சுவையையும், எண்ணெய் பசையையும், குருகுணத்தையும் கொண்ட போதிலும் கபவாதத்தைக் கண்டிக்கிறது. வாதத்தையும் கபத்தையும்தோற்று விக்கிறதில்லை.

யவம் எனும் தானியம், லோகிதம் எனும் செந்நிற அரிசி இவை சுவை, வீர்யம், விபாகம் இவற்றில் சமமாக இருந்த போதிலும், செந்நிற அரிசி வாதம் முதலான தோஷங்களை நீக்குகிறது. யவதானியம் வாத பித்த தோஷங்களை உண்டாக்கு கிறது. இவை அனைத்தும் பொருட்களில் உண்டான பிரபா வத்தின் செயல்களேயாம்.

வாகை முதலியவை நஞ்சை அகற்றுகின்றன. தூக்கமும், மேக மூட்டமும், நஞ்சை வளர்க்கின்றன. இதுவும் பிரபாவத்தின் செயல்களாகும். மண், மந்திரம், ஔடதம் இவற்றின் பலவித சிறப்புச் செயல்கள் பிரபாவத்தினாலேயே ஏற்படுகின்றன.

உடலில் சிக்கிய ஆயுதங்கள் உடலுக்கு ஒவ்வாத விஷம் முதலிய சிறு பகுதியை வெளிக்கொணர்தல், ஆண் குழந்தை யின் பிறப்பு, காப்பு, பிறரைத் தன் வசப்படுத்துதல், நஞ்சை அகற்றவல்ல மகா மூலிகைகள், மகான்களின் பார்வையினால் விஷம் இறங்குவது போன்றவை பிரபாவத்தின் செயல்களேயாம். விந்துவை விரைவில் வெளிப்படுத்துவதும், வளர்ப்பதும், திரவி யத்தின் பிரபாவச் செயல்களேயாகும்.

மேல் நோக்கியும், கீழ்நோக்கியும் செல்லும் வாந்தி, பேதி இவற்றைப் போக்கும் குணமுடைய பொருட்கள் அவற்றிலுள்ள பிரபாவச் செயல்களே ஆகும்.

மாத்ராசிதீயம் என்னும் அத்தியாயத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ள அனைத்தும் பிரபாவத்தின் செயல்களே என அறிந்து கொள்ளவும். அது மனதிற்கு அப்பாற்பட்டது. பொருட்களின் சுவை, வீர்யம், குணம், விபாகம் இவற்றால் ஏற்படும் செயல்கள் அப்பொருட்களின் பிரபாவத்தின் காரணமாக அச்செயல்களுக்கு எதிரிடையாகவும் மாறிவிடுகின்றன. அந்த மாறுபட்டிற்குக் காரணத்தைக் கண்டு கொள்ள முடியாது. (44—52)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'திரவியாதி விஞ்ஞாநீயம்' எனும் பதினேழாவது
அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது அத்தியாயம்

*ரஸபேதீயம்

'ரஸபேதீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேய மாமுனிவர் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. சுவையின் தோற்றம்

ரசம் (சுவை) நீரிலிருந்து தோன்றியது. அது முதலில் தனிப்பட்ட முறையில் அறியப்படாத ஒரு பொருள். வருடம் என்ற காலம், ஆறு ருதுக்களாகப் (பருவங்கள்) பிரிக்கப்பட்டிருப்பதாலும் பஞ்ச மகா பூதங்களான நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் இவற்றின் குணங்களின் ஏற்றத்தாழ்வின் கலப்பினாலும் ரசம் என்பது இனிப்பு முதலான ஆறு தனித்தனிச் சுவையாகத் தோற்றம் அடைகிறது. *(3)*

அவற்றில் நிலம், நீர் இவற்றின் அதிகமான சேர்க்கையினால் இனிப்புச்சுவை உண்டாகிறது. நிலம், நெருப்பு இவற்றின் அதிகச் சேர்க்கையினால் உண்டாகும் சுவை, புளிப்பு; நீர், நெருப்பு, இவற்றின் அதிகச் சேர்க்கையினால் ஏற்படும் சுவை உப்பு; வாயு, ஆகாயம் இவற்றின் அதிகச்சேர்க்கையினால் தோன்றும் சுவை கைப்பு; வாயு, நெருப்பு இவற்றின் அதிகச் சேர்க்கையினால் ஏற்படும் சுவை உறைப்பு; வாயு, நிலம் இவற்றின் அதிகச் சேர்க்கையினால் தோன்றும் சுவை துவர்ப்பு. *(4)*

2. சுவைகளின் செயல்கள்

அவற்றுள் இனிப்புச்சுவையைச் சுவைக்கும்பொழுது வாயில் குழகுழப்பு உண்டாகிறது. புலன்களைத் தெளிவுறச் செய்கிறது. உடலுக்கு மகிழ்ச்சி தருகிறது. வண்டுகள் எறும்புகளுக்கு மிகவும் பிடித்தமானது.

புளிப்புச்சுவை நாக்கில் உணர்ச்சி மிகுதியால் விறுவிறுப்பை உண்டாக்குகிறது. மார்பிலும், தொடையிலும் எரிச்சலை ஏற்படுத்துகிறது. உமிழ் நீரைச் சுரக்கச் செய்கிறது. கண்களையும் ,புருவங்களையும் சுருங்கச் செய்கிறது. பார்வையிலேயே மயிர் அரும்புதலைச் செய்கிறது.

---

* ரஸபேதீயம்—அறுசுவைகளை வகுத்து அவற்றின் செயல்களை விரிவாக விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெற்றது.

உப்புச்சுவை உமிழ்நீரைப் பெருகச் செய்கிறது. தொண்டையையும் தாடைகளையும் எரிக்கிறது. உணவிற்குச் சுவையூட்டுகிறது.

கைப்புச்சுவை வாயைத் தூய்மைப்படுத்துகிறது. குரலை தெளிவுபடுத்துகிறது. நாக்கின் பிற சுவைகளை அறியும் ஆற்றலை அழிக்கிறது.

உறைப்புச்சுவை, உண்டவுடன் நாக்கின் நுனியில் விறுவிறுப்பையும், எறும்பு ஊறுவது போன்ற உணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. தொண்டையிலும், தாடையிலும் நீரைப் பெருகச் செய்கிறது. வாய், கண், மூக்கு இவற்றில் அதிகம் நீரைச் சுரக்கச் செய்கிறது. உடலில் எரிச்சலை உண்டாக்குகிறது.

துவர்ப்புச்சுவை, நாக்கை மறத்துப் போகச் செய்கிறது. தொண்டைக்கட்டை உண்டாக்குகிறது. இதயத்தை அழுத்துகிறது. (5)

3. இனிப்புச் சுவையின் நன்மை தீமைகள்

சுவைகளுள் இனிப்புச்சுவை பிறவியிலிருந்து உடலுக்கு ஒத்துக் கொள்வதால் தாதுக்களை வளர்ப்பது, ஆயுளை நீடிக்கச் செய்வது, சிறுவர், முதியோர், காயமுற்றவர், மார்பில் அடிபட்டு இளைத்தவர், வலிவற்றவர் இவர்களுக்கு நன்மை பயப்பது.

நிறம், புலன்கள், தோல், கேசம், தொண்டை இவற்றிற்கு நலம் விளைவிப்பது, மகிழ்ச்சியூட்டுவது, உடலைப் பருக்கச் செய்வது, ஆயுளை வளர்ப்பது, தாதுக்களுக்கு நிறைவு உண்டாக்கி உடலை உறுதிப்படுத்துகிறது. அதை நிலை நிறுத்துகிறது. தாய்ப்பாலை வளர்ப்பது, வாதம், பித்தம், நஞ்சு, உடல் எரிச்சல், மயக்கம், நாவறட்சி இவற்றைத் தணிக்கவல்லது. எண்ணெய்ப்பசையுடன் சீதவீர்யமுள்ளது. குரு, மென்மை என்ற குணங்களை உடையது.

இவ்வளவு குணமுள்ள இனிப்புச் சுவையை அதிகம் பயன்படுத்தினால், உடல்பருமன், சடராக்னிக்குறைவு, உடல் பளு, சோம்பல், அதிக உறக்கம், சுவாசம் என்னும் நோய், நீரிழிவு, தொண்டைநோய், உணர்வின்மை, வாயில் இனிப்புச் சுவை, கண் நோய், கட்டி, கண்டமாலை, வாந்தி, தழும்பு நோய், தலைவலி, இருமல், நாட்பட்ட ஜலதோஷம், கிருமி

நோய், யானைக்கால், காய்ச்சல், வயிற்றுநோய், எச்சில் துப்புதல் ஆகிய தீமைகளைத் தோற்றுவிக்கும். (6—8)

4. புளிப்புச் சுவையின் நன்மை தீமைகள்

இது வாதத்தை அகற்றுகிறது. அதை தணிக்கிறது. வயிற்றில் எரிச்சலைத் தோற்றுவிக்கிறது. இரத்த பித்தத்தை உண்டுபண்ணுகிறது. உஷ்ண வீர்யமுள்ளது. உணர்வில் குளிர்ச்சியைத் தருகிறது. புலன்களுக்கு உணர்ச்சி ஊட்டுகிறது. சுவையை அளிக்கிறது. சீரண சக்தியைத் தருகிறது. சடராக்னியைத் தூண்டுகிறது. உடலைப் பருக்கச் செய்கிறது. தாதுக்களுக்குப் பலம் தருகிறது. மகிழ்ச்சியளிக்கிறது. ஈரப் பசையை உண்டாக்குகிறது. உடல் முழுவதும் துரிதமாகப் பரவும் தன்மையுடையது. இலகு குணமுள்ளது. எண்ணெய்ப் பசையுள்ளது. இதயத்திற்கு நன்மையளிப்பது.

இச்சுவையை அதிகம் பயன்படுத்தினால் அது உடலைத் தளர்ச்சியடையச் செய்கிறது. கபத்தை இளக்குகிறது. தினவு, சோகை நோய், பார்வை இழத்தல், காயத்தினால் ஏற்படும் தோலில் பரவும் நோய், இரத்த பித்தம், நீர் குடிப்பதில் அவா, இளைத்தவர்களுக்கு உடல் வீக்கம், உஷ்ண வீர்யமுள்ளதால் தலைசுற்றுதல் இவற்றை உண்டாக்கும். (9—10)

5. உப்புச் சுவையின் நன்மை தீமைகள்

இச்சுவை, தோஷதாதுக்களை அசைவற்றிருக்கச் செய்தல், பிணைத்தல், ஒன்றோடொன்று சேர்த்தல், இளகச் செய்தல், இவற்றையுண்டாக்கும் தன்மையுடையது. இது சுவைகள் அனைத்துக்கும் எதிரிடையானது. சடராக்னியைத் தூண்டுவது. சுவையை உண்டுபண்ணுவது. உணவைச் சீரணிக்கச் செய்வது. ஈரப்பசையை உண்டாக்குவது, இளைக்கச் செய்வது, எண்ணெய்ப் பசையைத் தோற்றுவிப்பது, வியர்க்கச் செய்வது. உடைக்கும் தன்மையுடையது. உடலில் தோஷங்களையும், மலங்களையும் பிளந்து பிரித்துவிடுவது, மலத்தை இளகச் செய்வது. உடல் முழுவதும் பரவுவது. நெகிழச் செய்வது. வாயுவைக் கண்டிப்பது. கபத்தை இளகச் செய்வது. உடலிலுள்ள துவாரங்களைச் சுத்தப்படுத்துவது. அதிக குருகுணம் அற்றது. எண்ணெய்ப் பசையுடன் கூடியது. தீக்ஷ்ணகுணமும், உஷ்ண வீர்யமும் உடையது.

இச்சுவையை அதிகம் பயன்படுத்தினால் உண்டாகும் தீமைகள், தலைவழுக்கை, நரை, நாவறட்சி, உடல் எரிச்சல், மயக்கம், தோலின்மேல் பரவும் நோய்கள், வீக்கம், கிடிபம் என்னும் ஒருவகை குஷ்டநோய், உடலில் சிவப்பும் வெளுப்பும் கலந்த வட்டமான தழும்புகள், [1]ஆக்ஷேபம் என்னும் வாதநோய், இரத்த பித்தம் எனும் நோய் ஆகிய தீமைகளை உண்டுபண்ணுகிறது இச்சுவை.

காயம், நஞ்சு, போதை இவற்றை வளர்க்கிறது. வாதரத்தம் எனும் நோயைத் தோற்றுவிக்கிறது. பலம், உடற்சத்து இவற்றைக் குறைக்கிறது. *(11—12)*

6. கைப்புச் சுவையின் நன்மை தீமைகள்

கைப்புச்சுவை இயற்கையாகவே சுவைக்க விரும்பப்படாத தன்மையுடையது. அருசியைப் போக்கும். நஞ்சு, கிருமி, மயக்கம், வயிற்றுப் பிறட்டல், காய்ச்சல், எரிச்சல், நாவறட்சி, குஷ்டம், அரிப்பு இவற்றைப் போக்கும். பிசுபிசுப்பு, கொழுப்பு, நிணநீர், எலும்பின் உட்புறமுள்ள சோறு, மலம், சிறுநீர், பித்தம், கபம் இவற்றை உலரச் செய்கிறது.

சடராக்னியைத் தூண்டுவது, சீரண சக்தியை உண்டு பண்ணுவது, தோஷங்களையும், மலங்களையும் கல்லி வெளிப் படுத்துவது, தாய்ப்பால், தொண்டை இவற்றைச் சுத்தப் படுத்துவது, அறிவுக்கு நலனைக் கொடுப்பது, அதிக வறட்சியற்றது. சீதவீர்யமும், இலகு குணமும் உடையது. அளவுக்கு மீறிப் பயன்படுத்தப்படும் இச்சுவை, தாதுக்கள், வலிவு இவற்றைக் குறைத்தல், மயக்கம், சோர்வு, தலைசுற்றல், வாதநோய், வரட்டுத் தன்மை, சொரசொரப்பு, பசையற்ற தன்மை, வறட்சி இவற்றை உண்டாக்கும்.

(13—14)

7. உறைப்புச் சுவையின் நன்மை தீமைகள்

உறைப்புச்சுவை, அலசகம் எனும் அசீரணத்தால் தோன்றும் பிணி, வீக்கம், தழும்பு, பருமன் [2]அபிஷ்யந்தம்,

---

1. ஆக்ஷேபம்—உடல், கைகால்களில் உண்டாகும் 'இசிவு' அல்லது வலிப்பு நோய்.
2. அபிஷ்யந்தம்—பசைத் தன்மையால் தோஷங்களை இளகச் செய்யும் தன்மை.

கிருமி நோய், தொண்டை நோய், நஞ்சு, குஷ்டம், அரிப்பு இவற்றைத் தணிக்கும் குணமுடையது.

புண்களை ஆற்றக்கூடியது. எண்ணெய்ப்பசை, ஈரப்பசை இவற்றை உலரச் செய்கிறது. சுவையை அளிக்கிறது. சீரணிக்கச் செய்கிறது. சடராக்னியைத் தூண்டுவது. தோஷ தாதுக்களைச் சுரண்டி கரைக்கும் தன்மை கொண்டது. சுத்தப்படுத்துவது. உணவில் நீரை அகற்றுகிறது. புலன்களைத் தெளிவுறச் செய்கிறது. உறைந்த ரத்தத்தை உடைத்துப் பெருகச் செய்கிறது. கட்டுகளை விடுவிக்கிறது. உடலிலுள்ள துவாரங்களை விரித்து விடுகிறது. கபத்தைக் குறைக்கிறது. இலகு, வறட்சி, கடுமை இக்குணங்களையுடையது. உஷ்ண வீர்யமுள்ளது.

இந்தச் சுவையை அதிகமாக உபயோகப்படுத்தினால், நாவறட்சி, மூர்ச்சை, வெறி, வாந்தி, மயக்கம், உடல்அழற்சி ஆகிய தீமைகள் உண்டாகும்.

பலம், விந்து, தொண்டை இவற்றை உலர்த்தும். நடுக்கம், தலைசுற்றல், சூடு, சோர்வு, உடலை இளைக்கச் செய்தல் இவற்றை ஏற்படுத்தும். கைகால்கள், விலாப்பக்கங்கள், பின்பாகம் இவற்றில் வாதத்தின் சிற்றத்தைக் கடுமையாக உண்டுபண்ணும். இச்சுவையில் வாதத்தின் குணம், நெருப்பின் குணம் அதிகமாக இருப்பதால் இது உடலில் சுருக்கம், குத்தல் வலி, உடைப்பது போன்ற வலி இவற்றை ஏற்படுத்துகிறது. *(15—17)*

8. துவர்ப்புச் சுவையின் நன்மை தீமைகள்

இந்தச் சுவை, கபம், பித்தம், இரத்தம் இவற்றினால் ஏற்படும் தீமைகளை அழிக்கிறது. மலத்தைக் கட்டுகிறது. அதிக வறட்சியைத் தருகிறது. குரு குணமுள்ளது. தோலின் நிறத்தைச் சரி செய்கிறது. ஈரத்தை உலர்த்துகிறது. குளிர்ச்சியானது. மகிழ்ச்சி தரக்கூடியது. புண்களை ஆற்றக் கூடியது. மலதோஷங்களைச் சுரண்டி வெளிப்படுத்தும் தன்மை கொண்டது.

இந்தச் சுவையுள்ள பொருள்களை அதிக அளவில் உபயோகித்தால் விந்து வெளிப்படுவதைத் தடுக்கும். நாவறட்சி, வயிற்றுப்பொருமல், கைகால்கள் கம்பத்தைப் போல் தடித்து (ஊருஸ்தம்பம்) அசைக்க முடியாமலிருப்பது, விஷ்டம்பகம் எனும் நோய், இளைப்பு, துவாரங்களை அடைத்தல், மலக்

கட்டு, சிறுநீர் அடைப்பு, பாரிசவாயு, ஆக்ஷேபம் முதலிய வாத நோய்களையும் தோற்றுவிக்கும். (18—19)

9. இனிப்புப் பொருள்களின் இனம்

நெய், தேன், எண்ணெய், பால், மேதஸ் (கொழுப்பு) மஜ்ஜை (எலும்பின் உட்புறமுள்ள சோறு), கரும்பினாலான பொருட்கள், திராட்சை, அக்ரோட்பழம், பேரீச்சம்பழம், வாழைப்பழம், தேங்காய், பலாப்பழம், ஆப்பிள், முரளஞ் செடி, முருக்கம்பழம், ஈச்சம்பழம், பனம்பழம், குமிழம்பழம், இலுப்பை, சிற்றிஞ்சில், கீழாநெல்லி, நிலப்பனங்கிழங்கு, முதுக்கன் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, மூங்கிலுப்பு, ஜீவகம், ரிஷபகம், வெளுத்த இரளி, பெரும்குரும்பை, பூனைக் காலி, சித்தாமுட்டி, பேராமுட்டி, நாகபலா, ஸஹதேவி எனும் மரம், சிறுமல்லிகை, நரிப்பயிறு, பெருமல்லிகை, பெருவீடுகொள்ளி, வாடாகுறிஞ்சி, (மகாஸஹா), சிறுவாடா குறிஞ்சி, ருத்ர விருத்தி, ச்ராவலி, மகாச்ராவலி, வாசனைப் புல், மற்றொரு வகைப்புல், பூனைக்காஞ்சொறி, அமுக்கராங் கிழங்கு, நெரிஞ்சில், தாமரைத் தண்டு, புஷ்கரமூலம், ச்ருங் காடகம், கொட்டிக்கிழங்கு, தேத்தாங்கொட்டை, பொன், கோவை, நிலத்தாமரை, ஜீவனீய கணத்தில் கூறப்பட்டவை, திருணபஞ்சமூலம் இவை இனிப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை. (20)

10. புளிப்புச் சுவையுள்ள பொருட்களின் இனம்

புளிப்பு மாதுளை, நெல்லி, மா, எரிப்புமா, துரிஞ்சிக் காய், கொடுக்காய்ப் புளி, காட்டு மாமரம், புளிகரணைக் கிழங்கு, புளிவஞ்சி, எலுமிச்சை, துமுகிச் செடி, கிச்சிலி, புளிப்புத் திராக்ஷை, கருங்காலி, தணுகுமரம், இலந்தை, நார்த்தங்காய், விளா, எலுமிச்சை, புளியரத்தை, கிடாரங் காய், திலகண்டகம் எனும் செடி, வெள்ளி, தயிர், மோர்த் தெளிவு, மோர், புளிப்புக்காடி, கள், தான்யாம்லம் என்னும் ஒருவகைக் கள் இவை புளிப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை.

11. உப்புச் சுவையுள்ள பொருட்களின் இனம்

இந்துப்பு முதலாக க்ஷாரம் வரையில் கூறப்பட்ட உப்பு வகைகளும், துத்தநாகம், வெள்ளீயம், காரீயம் போன்றவை

களும் உப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை.

12. கைப்புச் சுவையுள்ள பொருட்களின் இனம்

அகில், தகரவிதை, விலாமிச்சை வேர், வெட்டிவேர், சந்தனம், ஜடாமாம்சி, நிலவேம்பு, புங்கு, நாயுருவி, மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, பெருங்குரும்பை, மரக்காரக்காய், ஆடுதீண்டாப்பாளை, பனங்கிழங்கு, கடுக்காய், கடுகுரோகிணி, நிலவேம்பு, பாகல், பேய்த்தும்மட்டி, கருஞ்சீரகம், அதிவிடயம், காஞ்சோரி, வாலுளுவை, வட்டத்திருப்பி, முருங்கை, எருக்கு, மணத்தக்காளி, வசம்பு, மாவிலங்கை, வெப்பாலை, முன்னை, நொச்சி, ஏழிலைப்பாலை, வெண்கருங்காலி, இருவாக்ஷி, வெண்கலம், இரும்பு போன்றவைகளும், பேய்ப்புடல் ([1]படோலாதிசணம்) முதல் கடுகுரோகிணி வரை கூறப்பட்டுள்ள கீரை வகைகளும் கைப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை.

13. உறைப்புச் சுவையுள்ள பொருட்களின் இனம்

மிளகு, பெருங்காயம், வாலுளுவை, ஆனைத்திப்பிலி, வாயுவிடங்கம், சேராங்கொட்டை, பிரண்டை, கடுகு, பூண்டு, வெங்காயம், புங்கு, மனோசிலை, அரிதாளம், தேவதாரு, கோஷ்டம், ஏலம், துளசி, தக்கோலம், காட்டுமிளகு, சிறுநீர் வகை, பித்தம் முதலியவைகளும் ஹரித கணத்தைச் சேர்ந்த குடேரம் (துளசி) முதலான பொருட்களும் [2]பஞ்சகோலமும் உறைப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை.

14. துவர்ப்புச் சுவையுள்ள பொருட்களின் இனம்

கடுக்காய், ஞாழல், அருகம்புல், தேன், பாச்சோத்தி, குமிழ், கருங்காலி, கடம்பை, நெல்லிக்கனி, காட்டாத்திப்பூ, சிறுதேக்கு, தாமரைக் கிழங்கு, தாமரை மலர், சிறு நாகப்பூ, நெய்தல், நீலோத்பலம், சுரக்கொன்னை, தும்பை, கடம்பு,

---

1. படோலாதிகணம்—விளக்கம் 17-ம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.
2. பஞ்சகோலம்—திப்பிலி, கண்டந்திப்பிலி, செவியம், கொடிவேலி, சுக்கு இவ்வைந்தின் கூட்டு.

அத்தி, நாவல், மா, ஒதியன், ஆல், தானிக்காய், முருங்கை, நாவற்கொட்டை, மாங்கொட்டை, விளாங்காய், அரசமரம், இலவம், மஞ்ஜஷ்டி, வெண் கருங்காலி, ஏழிலம்பாலை, தினிச மரம், வேங்கை, ஆனைவணங்கி, ஆச்சாமரம், பனை மரம், முரளஞ்செடி, முசுமுசுக்கை, கோரைக்கிழங்கு, இலந்தை, கருங்காலி, வெண்கருங்காலி, கருவேலம், தர்ப்பை, கொட்டிக்கிழங்கு, மூங்கில், சிலாசத்து, அசோக மரம், வாகை, சிம்சுபா, புரசு, வன்னிமரம், நாணல், சங்க நாபி எனும் கிழங்கு, ஆடு தீண்டாப்பாளை, பேரீச்சங்காய், தும்பைச்செடி, பூவரசு, மருத மரம், அஜகர்ணம், மாவிலங்கை, முரளஞ்செடி, முத்து, அஞ்சனக்கல், பூங்காலி, தாமரைத் தண்டு, தாமரைநூல் இவை துவர்ப்புச் சுவையுள்ள பொருட்களின் இனத்தைச் சார்ந்தவை.

15. தோஷங்களை ஆக்க—அழிக்கவல்ல ரசங்கள்

இதுவரை கூறப்பட்ட சுவைகளுள் இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் கபத்தைத் தோற்றுவிப்பவை. ஆனால், நாட்பட்ட அரிசி, யவதானியம், கோதுமை, பயறு, தேன், சர்க்கரை, வறட்சியான நிலங்களில் வாழும் பிராணிகளின் மாமிசம் இவை இனிப்புச் சுவையுடையதாயிருந்தபோதிலும் கபத்தைத் தோற்றுவிப்பவை அல்ல.

மாதுளை, நெல்லிக்கனி, இவற்றைத் தவிர மற்ற புளிப்புச் சுவையுள்ள பொருட்கள் பெரும்பாலும் பித்தத்தை உண்டுபண்ணும். இந்துப்பு தவிர மற்ற உப்பு வகை கண்களுக்குக் கெடுதல் விளைவிப்பவை.

சிந்தில் கொடி, பேய்ப்புடல், சுக்கு, திப்பிலி, பூண்டு இப்பொருட்களைத் தவிர மற்ற கைப்பு, உவர்ப்புச் சுவையுள்ள பொருட்கள் வாதத்தைத் தோற்றுவிப்பதுடன் ஆண்மையை அழிக்கும் தன்மை வாய்ந்தவை. (21—26)

கடுக்காயைத் தவிர மற்றத் துவர்ப்புச் சுவையுள்ள பொருட்கள், குளிர்ச்சி, மலத்தைக் கட்டும் தன்மை உடையவை.

இவ்விதம் பொதுப்படையாக நாள்தோறும் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான பொருட்களின் சுருக்கம் தரப்பட்டது.

16. ஒவ்வொரு சுவையிலும் சிறந்த பொருட்கள்

மேற்கூறிய அறுசுவை இனங்களில் கூறிய பொருட்களுள் இனிப்புச் சுவையில் நெய் உயர்ந்தது.

புளிப்புச் சுவையில் மேலானது நெல்லிக்கனி.

உப்புச் சுவையில் இந்துப்பு உயர்வானது.

கைப்புச் சுவையில் சிறந்தது பேய்ப்புடல்.

உறைப்புச் சுவையில் சுக்கு மேலானது.

துவர்ப்புச் சுவையில் கடுக்காய் தலை சிறந்தது.

(27—28)

17. இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் தோன்றுமிடம்

குளிர்ந்த காற்று வீசுமிடம், மலைப்பிரதேசம், அடர்த்தியான காடு, ஆறுகள், குளங்கள், குட்டைகள், கிணறுகள் நிறைந்த இடங்கள், தாமரை, அல்லி, நெய்தல் மலர்கள் மலிந்த நிலங்கள், எப்பொழுதும் மனதிற்கு இன்பம் தரக்கூடியதும், அழகு தவழும் செழிப்பான நிலங்கள், பசும்புற்கள் நிறைந்த இடம், வெகுதூரம் பரவியுள்ள கொடிகள் அதிகமுள்ள இடம், இளந்தளிர்களால் நிழலைத்தரும் மரங்கள் நெருக்கமாயிருக்குமிடம், பலவித தானியங்கள் விளையுமிடம், பாம்புகள், பறவைகள் அதிகமாக வாழுமிடம், கபம், பித்தம், இவை அதிகமாகத் தோன்றும் நிலப்பகுதி, மூலிகைகளும், நீரும் குருகுணமுள்ளதான இடம், யானைக்கால் நோய், தொண்டை நோய், |'அபசி' என்ற கட்டி, காய்ச்சல் முதலிய நோய் பரவியுள்ள தேசம், நீர்ப்பாங்கான பூமி, ஆகியவை இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் அதிகம் தோன்றுமிடங்களாம்.

18. உறைப்புச் சுவையுள்ள பொருட்கள் தோன்றுமிடம்

மேடு பள்ளமுள்ள இடம், மணற்பாங்கான இடம், அதிக ஆழமான இடத்தில் கடுப்பான நீர் கிடைக்கும் இடம், கடின உழைப்பைப் பொறுத்துக் கொள்ளும் மக்கள் வாழுமிடம், நீண்ட ஆயுளும் நோயற்ற உடல் நலமும் பெற்ற மக்களின் உறைவிடம், வறட்சி தரும் பகுதி, இவை உறைப்புச் சுவையுள்ள பொருட்கள் தோன்றுமிடமாகும்.

19. உப்பு, புளிப்புச் சுவையுள்ள பொருட்கள் தோன்றுமிடம்

மேற்கூறிய நீர்ப்பாங்கான இடம், வறண்ட நிலப்பகுதி இரண்டும் கலந்துள்ள இடம், சாதாரண இடம் எனப்படுகிறது. அந்த இடத்தை [1]ஆநூப சாதாரணம், [2]ஜாங்கல சாதாரணம் என இருவகையாகப் பிரித்துக் கூறலாம். அவற்றில் உப்புச்சுவை, புளிப்புச்சுவை நிறைந்துள்ள பொருட்கள் தோன்றும் இடம் ஆநூப சாதாரணம் என்றும், கைப்பு, துவர்ப்புச் சுவையுள்ள பொருட்கள் அதிகம் காணக் கிடைக்கின்ற இடம் ஜாங்கல சாதாரணம் என்றும் வழங்கப்படும்.

இந்த அறுவகைச் சுவையுள்ள பொருட்களின் சேர்க்கை எழுபத்தைந்து வகையாகப் பிரிவடைகிறது.

20. சுவைகளின் சேர்க்கை

சுவைகள் தனித்தனியாக ஆறு. இனிப்புச் சுவையின் சேர்க்கையில் இரண்டு சுவைகளின் சேர்க்கையினால் ஐந்து.

1. இனிப்பும் புளிப்பும் கலந்தது.
2. இனிப்பும் உப்பும் சேர்ந்தது.
3. இனிப்பும் கைப்பும் சேர்ந்தது.
4. இனிப்பும் உவர்ப்பும் கலந்தது.
5. இனிப்பு துவர்ப்பின் சேர்க்கை.

புளிப்பும் உப்பும் கலந்து உண்டாகும் சுவைகள் நான்கு.

1. புளிப்பு, உப்பு கலந்தது.
2. புளிப்பு, கைப்பு சேர்ந்தது.
3. புளிப்பு, உவர்ப்பு கலந்தது.
4. புளிப்பு, துவர்ப்பு கலந்தது.

உப்பும், கைப்பும் சேர்ந்த முறையில் மூன்று

1. உப்பு, கைப்பு கலந்தது.
2. உப்பும், உவர்ப்பும் சேர்ந்தது.
3. உப்பும், துவர்ப்பும் கலந்தது.

கைப்பும், உறைப்பும் சேர்ந்து தோன்றுவது இரண்டு.

1. கைப்பு, உறைப்பு சேர்ந்தது.
2. கைப்பும், உவர்ப்பும் கலந்தது.

உறைப்பின் சேர்க்கையினால் ஒன்று.

1. உறைப்பும், துவர்ப்பும்.

---

1. ஆநூபம்— நீர்ப்பாங்கான இடம்.
2. ஜாங்கலம்— வறட்சிப்பகுதி – நீர்ப்பாங்கு குறைவான இடம்.

இம்மாதிரி இனிப்புச் சுவையுடன் புளிப்புச் சுவையைச் சேர்த்து மூன்று மூன்றாகக் கணக்கிட நான்குவகை.

உப்புச்சுவையுடன் சேர்ந்து மூன்று மூன்றாகக் கணக்கிட மூன்று.

கைப்புச் சுவையுடன் இணைந்து மூன்று மூன்றாகக் கணக்கிட இரண்டு.

உறைப்புச் சுவையுடன் கலந்து மூன்று மூன்றாகக் கணக்கிட ஒன்று.

புளிப்புச் சுவையுடன் இனிப்பைத் தவிர மற்ற சுவைகளின் சேர்க்கையினால் மூன்று மூன்றாகச் சேர்ப்பதனால் ஆறுவகை.

உப்புச்சுவையுடன் புளிப்பு, இனிப்புச் சுவைகளைத் தவிர மற்ற சுவைகளுடன் மூன்று மூன்றாகக் கணக்கிட்டால் மூன்று வகை.

கைப்புச் சுவையுடன் இனிப்பு, புளிப்பு, உப்பு இச்சுவைகளைத் தவிர்த்து மும்மூன்றாகக் கணக்கிட ஒன்று.

இனிப்பு, புளிப்பு இச்சுவைகளுடன் மற்ற சுவைகளைச் சேர்த்து நான்கு நான்காகக் கணக்கிட ஆறு.

இனிப்பு, புளிப்பு இச்சுவை நீங்கலாக, உப்புச் சுவையுடன் மற்ற சுவைகளைச் சேர்த்து நான்கு நான்காகக் கணக்கிட மூன்று.

இனிப்பு, புளிப்பு, உப்பு இச்சுவைகளைத் தவிர்த்து கைப்புச் சுவைகளுடன் மற்ற சுவைகளைக் கலந்து நான்கு நான்காகக் கணக்கிட மூன்று.

புளிப்புச் சுவையுடன் இனிப்பு நீங்கலாக மற்ற சுவைகளுடன் சேர்த்து நான்கு நான்காகக் கணக்கிட நான்கு.

உப்பு, இனிப்பு இச்சுவைகளை விலக்கி மற்ற சுவைகள் சேர்ந்து ஒன்று.

உறைப்புச் சுவை சேராமல் இனிப்புச் சுவையும் மற்ற சுவைகளும் சேர்ந்து ஐந்து ஐந்தாகக் கணக்கிட ஆறு.

எல்லாச் சுவைகளும் ஒருமிக்கச் சேர்ந்து ஒன்று.

இவ்வாறு ஆறுவகைச் சுவைகளும், மற்ற சுவைகளுடன் ஒன்றோடொன்று கூடி, சுவைகள் என்றும், துணைச்சுவைகள்

என்றும், ஏற்றத்தாழ்வுகளின் மாறுபாடுகள் என்றும், பல வகைப் பாகுபாட்டைப் பெற்றிருப்பதால் இச்சுவைகளின் சேர்க்கை கணக்கிலடங்காதவை. மற்றும், எண்ணற்ற வகையில் சேர்க்கப்பெறும் சுவைகளையுடைய பொருட்களை, தோஷங்களை ஒட்டியும் மருந்துகளின் தன்மைகளை ஒட்டியும் பயன்படுத்த வேண்டும். *(29— 38)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ரஸபேதீயம்' எனும் பதினெட்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

பத்தொன்பதாவது அத்தியாயம்

*தோஷாதி விஞ்ஞாநீயம்

'தோஷாதி விஞ்ஞாநீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர் கூறியபடி விவரிப்போம். *(1— 2)*

(வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்கள் இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், (கொழுப்பு) மஜ்ஜை (எலும்புக்குள் இருக்கும் ஒருவகைச் சோறு), அஸ்தி (எலும்பு), வீர்யம் என்ற தாதுக்கள், (மலம், சிறுநீர், வியர்வை என்ற) மலங்கள் இவை யாவும் உடலுக்கு ஆதாரமானவை. எனவே அவற்றின் இலக்கணங்களைக் கூறுவோம்.)

1. உடலுக்கு வாதம் செய்யும் நன்மை

வெளிவிடும் மூச்சு, உள்ளிழுக்கும் மூச்சு, செயல்படுவதில் ஆர்வம், அவயவங்களின் அசைவு, புலன்களின் திறம், மலம், சிறுநீர் முதலியவற்றின் வேகத்தை வெளிப்படுத்தல் போன்ற செயல்களால் வாதம் உடலுக்கு உதவி புரிகிறது.

2. உடலுக்குப் பித்தம் செய்யும் நன்மை

உண்ட உணவை சீரணிக்கச் செய்தல், உடலுக்குத் தேவையான வெப்பம், விருப்பம், பசி, தாகம், ஒளி, தெளிவு, பார்வை, நினைவாற்றல், திறமை, மென்மை போன்ற செயல்களைச் செய்து பித்தம் உடலுக்கு நன்மை புரிகிறது.

3. உடலுக்குக் கபம் செய்யும் நன்மை

உடல் உறுதி, எண்ணெய்ப்பசை, எலும்பு மூட்டுகளின் இணைப்பு, ஆண்மை, பொறுமை, அறிவு, தைரியம், வலிவு, சபலம்—(புலப் பொருள்களை நுகர அதிக ஆசை) இவை போன்றவற்றைத் தோற்றுவிப்பதின் மூலம் கபம் உடலுக்கு நலனைத் தருகிறது. *(3)*

---

*தோஷாதி விஞ்ஞாநீயம்—வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்கள், ஏழுவகை தாதுக்கள், மலங்கள் இவற்றின் தன்மைகளை விளக்குவதனால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

4. தாதுக்கள் செய்யும் நலன்கள்

(அ) ரஸம் எனும் தாது

மனமகிழ்ச்சி, உடலின் ஏனைய தாதுக்களுக்கு ஊட்ட மளித்தல் – இரத்த வளர்ச்சி, இவற்றை ரசம் உடலுக்கு அளித்து உதவி புரிகிறது.

(ஆ) இரத்தம்

உயிரை நிலை நிறுத்தல், நிறத்தூய்மை, மாமிசத்தின் வளர்ச்சி இவற்றை அளித்து இரத்தம் உடலுக்கு நன்மை புரி கிறது.

(இ) மாமிசம்

உடலை உருவகப்படுத்தி மலத்தையும் கொழுப்பையும் வளர்க்கிறது.

(ஈ) மேதஸ் (கொழுப்பு)

கண்கள், உடல் இவற்றிற்கு எண்ணெய்ப்பசை, உடலில் நைப்புத்தன்மை, அங்கங்கள் பருத்து உறுதியாக இருத்தல், இவற்றைக் கொடுப்பதுடன், எலும்புகளுக்கு வளர்ச்சியையும் தருகிறது.

(உ) அஸ்தி (எலும்பு)

உடலை நிலைநிறுத்தி மஜ்ஜையை (எலும்புக்குள் இருக்கும் மென்மையான ஒருவகைச் சோறு) வளர்த்தல் இதன் செயல்.

(ஊ) மஜ்ஜை (எலும்புக்குள் இருக்கும் மென்மையான ஒரு வகைச் சோறு)

உடலின் எண்ணெய்ப்பசை, வலிவு, எலும்புகளின் உள்ளே இடைவெளியை நிரப்புதல், விந்துவை வளர்த்தல் இவை மஜ்ஜையின் செயல்களாகும்.

(எ) சுக்ரம் (விந்து)

மகிழ்ச்சி, வலிவு, கருத்தோற்றம் இவற்றைக் கொடுப்ப தன் மூலம் சுக்ரதாது உடலுக்கு உதவி செய்கிறது. (4)

(ஏ) மலம்

உடலுக்கு தாதுக்களின் பலம் நிலைத்திருக்கும் சக்தியை அளித்து வாதம், சடராக்னி இவற்றின் திறமையை நிலைக்கச் செய்கிறது.

(ஐ) சிறுநீர்

உணவு தண்ணீர் இவை சீரணமடைவதாலுண்டாகும் நீர், ஈரப்பசை இவற்றை அகற்றுகிறது.

(ஒ) வியர்வை

உடலில் ஈரப்பசை, தோலுக்கு எண்ணெய்ப்பசை இவற்றை நிலைக்கச் செய்வதுடன் ரோமங்களை நிலைத்திருக்கச் செய்கிறது.

மேற்கூறப்பட்டவை கோளாறடையாத இயற்கை நிலையிலிருக்கும் தோஷம், தாது, மலம் இவற்றின் செயல்கள். (5)

5. இயற்கைக்கு மேல் வளர்ந்த தோஷ தாதுக்களின் செயல்கள்

(அ) வாதம்

உடல் மெலிதல், கரிய நிறம் தோன்றல், உடல் நடுக்கம், துடிப்பு, சூடான உணவு, சுற்றுப்புற நிலைகளில் விருப்பம், உணர்ச்சியின்மை, உறக்கமின்மை, பலக்குறைவு, புலன்கள் செயற்படாமை, எலும்புகளில் குத்தல் வலி, மஜ்ஜை உலர்ந்து போதல், மலக்கட்டு, வயிற்று உப்புசம், வயிற்றுப் பொருமல், மயக்கம், இயலாமை, அச்சம், பிதற்றல் இவற்றைத் தோற்றுவித்து வளர்ச்சியடைந்த வாதம் உடலுக்கு இடையூறு செய்கிறது.

(ஆ) பித்தம்

தோலில் மஞ்சள் நிறம் உண்டாதல், சோர்வு, புலன்களுக்கு வலிவின்மை, ஓஜஸ் சிதைவதால் சக்திக் குறைவு, குளிர்ச்சியில் விருப்பம், எரிச்சல், வாயில் கைப்புச் சுவையை ஏற்படுத்துதல், நாவறட்சி, மூர்ச்சை, தூக்கக்குறைவு, கோபம் இவற்றை வளர்ச்சியடைந்த பித்ததோஷம் ஏற்படுத்துகிறது.

(இ) கபம்

வெண்மை நிறத்தைத் தோலில் ஏற்படுத்துதல், குளிர்ச்சி, உடற்பருமன், சோம்பல், உடல் பளு, உடல் தளர்ச்சி, துவாரங்கள் அடைபட்டுப் போதல், மூர்ச்சை, சுறுசுறுப்பின்மை, உறக்கம், சுவாச நோய், இருமல், வாயில் நீர் ஊறுதல், இதய வேதனை, சடராக்னிக் குறைவு, பூட்டுகளில் தளர்ச்சி இவற்றை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்த கபம் உடலுக்குத் துன்பம் தருகிறது. (6)

6. இயற்கைக்கு மேல் வளர்ந்த தாதுக்களின் செயல்கள்

(அ) இரசதாது

வாயில் நீர் ஒழுகுதல், சுவையின்மை, வாய் உலர்தல், இதய வேதனை, துவாரங்களின் அடைப்பு, இனிப்புச் சுவையில் வெறுப்பு, உடலில் அழற்சி, இவையும் கபம் அதிகப்படுவதனால் ஏற்படும் தீமைகளும் வளர்ந்த இரசம் எனும் தாதுவினுல் உண்டாகின்றன.

(ஆ) இரத்தம் (தாது)

குஷ்டநோய் போன்ற தோலின்மேல் பரவும் நோய்கள், சிறுகட்டிகள், இரத்தப்பெருக்கு, கண், வாய், ஆண்குறி, ஆசனவாய், இவ்விடங்களில் எரிச்சல், மண்ணீரல் நோய், குன்மம், பெரும் கட்டி, வங்கு, காமாலை, சடராக்னி அழிவு, கண் பஞ்சடைதல், கண், உடல் சிவப்பு நிறமாக மாறுதல், வாத—பித்த நோய், இவை தவிர பித்தம் அதிகரிப்பதனால் ஏற்படும் நோய்களையும் அதிகம் வளர்ச்சி பெற்ற இரத்தம் தோற்றுவிக்கிறது.

(இ) மாமிசம் (தாது)

கலகண்டம் எனும் தொண்டை நோய், கண்டமாலை, புரைகுழல், சிறுமுடிச்சுகள், தாடை, நாக்கு, தொண்டை இவற்றில் தோன்றும் நோய்கள், பின்தட்டு, நெஞ்சு, உதடு, கை, வயிறு, தொடை, ஆடுசதை இவற்றின் வளர்ச்சியும், பளுவும் ஏற்படுவதுடன், கபம், இரத்தம் இவற்றின் மிகுதியால் தோன்றிய நோய்களையும் அதிகம் வளர்ந்த மாமிச தாது உண்டுபண்ணி உடலைக் கெடுக்கிறது.

(ஈ) மேதஸ் (கொழுப்பு)

நீரழிவு நோயின் முற்குறிகள், (பிரமேக நிதானத்தில் கூறியவை) உடல் பருமனால் ஏற்படும் துன்பங்கள், கபம், இரத்தம், மாமிசம் இவற்றின் மிகுதியால் ஏற்பட்ட நோய்கள் இவற்றை அதிகம் வளர்ந்த மேதஸ் எனும் தாது தோற்றுவிக்கிறது.

(உ) அஸ்தி (எலும்பு)

அதிக எலும்பு வளர்ச்சி, அதிகப் பற்கள் தோன்றுதல், வளர்ச்சி இவை அதிகம் வளர்ந்த எலும்பினால் உண்டாகும்.

(ஊ) மஜ்ஜை

கண்கள், உறுப்புகள் இவற்றில் செந்நிறத்தையும், பளுவையும் ஏற்படுத்துவதுடன், உடற் பூட்டுகளில் பருமனையும் விரைவில் புண்கள் ஏற்படும் நிலையையும் அதிகம் வளர்ந்த மஜ்ஜை ஏற்படுத்துகிறது.

(எ) விந்து

பெண் சேர்க்கையில் எல்லையில்லா விருப்பம், விந்து கட்டிப் போய் சிறுநீர்வழி அடைத்துக் கொள்ளுதல், இவற்றை அதிகம் வளர்ந்த விந்து உண்டுபண்ணுகிறது. (7)

7. இயற்கைக்கு மேல் வளர்ந்த மலங்களின் செயல்கள்

(அ) மலம்

வயிற்று வலி, வயிற்றுப்பொருமல், உடல் பளு இவற்றை அதிகம் வளர்ந்த மலம் தோற்றுவிக்கும்.

(ஆ) சிறுநீர்

சிறுநீர்ப்பையில் குற்றல், வலி, சிறுநீர்ப்பை உப்புசம் இவை அதிகம் வளர்ந்த சிறுநீரினால் ஏற்படக் கூடியவை.

(இ) வியர்வை

அரிப்பு, உடல் நாற்றம் இவை இரண்டையும் அதிகம் வளர்ந்த வியர்வை தோற்றுவிக்கிறது.

(ஈ) அதிகம் வளர்ந்த மற்ற மலங்கள்

மற்ற மலங்களான, கண்கள், காதுகள், பற்கள், மூக்கு இவற்றின் மலங்கள் அதிகம் வளர்ந்ததனால் ஆங்காங்கு மலம் அதிகரித்தல், இளகிப் போதல், அரிப்பு, அவ்விடங்களில் பளு இவை ஏற்படுகின்றன. (8)

8. இயற்கைக்குக் குறைவான தோஷங்களின் செயல்கள்

(அ) வாதம்

வாயில் உமிழ்நீர் சுரத்தல், சுவையின்மை, இதய வேதனை, உணர்வற்றுப் போதல், பேச்சுக்குறைவு, குறைந்த செயல்கள், மகிழ்ச்சியின்மை, செயலாற்றுவதில் ஆர்வக்குறைவு, சடராக்னி நிலை மாறுபடுதல் இவை குறைவான வாதத்தின் செயல்களாகும்.

(ஆ) பித்தம்

செயலற்றிருப்பது, குளிர்ச்சி, விட்டு விட்டு ஏற்படும் உடல்வலி, குத்தல், சுவையின்மை, அசீரணம், உடலில் சொர சொரப்பு, நடுக்கம், பளு, நகம், கண் இவை வெளுத்துப் போதல் இவை குறைவான பித்தத்தினால் ஏற்படுபவை.

(இ) கபம்

தலை சுற்றல், உடலைத் திருகுதல் போன்ற வலி, உறக்கமின்மை, உடல் வலி, தோலில் சிறிது எரிச்சல், குற்றல் வலி, கண் எரிச்சல், கொப்புளங்கள், நடுக்கம் உண்டாதல், புகைச்சல், மூட்டுக்களின் தளர்ச்சி, இதயத்துடிப்பு, கபம் இருக்க வேண்டிய இடங்களில் இல்லாதது போல் தோன்றல் முதலியவை குறைவான கபத்தினால் தோன்றுபவை. (9)

9. இயற்கைக்குக் குறைவாயுள்ள தாதுவின் செயல்கள்

(அ) இரசதாது

ஒலியைப் பொறுக்க முடியாமை, மனத்தளர்ச்சி, உடல் நடுக்கம், உலர்ந்து போதல், வேதனை, இருளடைந்த நிலை, துடிப்பு, மனக்குழப்பம், சிறிதளவு உழைத்தாலும் ஏற்படும் சோர்வு, தாகம் இவை குறைவாயுள்ள இரசதாதுவின் செயல்களாகும்.

(ஆ) இரத்தம்

தோலில் வறட்சி, புளிப்பு, குளிர்ச்சி இவற்றின் விருப்பம், நரம்புகள் தளர்ச்சி இவை குறைவாயுள்ள இரத்த தாதுவினால் ஏற்படக்கூடியவை.

(இ) மாமிசம் (தாது)

இடுப்பின் பின் பக்கம், தாடை இவை சுருங்கிப் போதல், குத்தல் வலி, வறட்சித் தன்மை, புலன்களின் அழற்சி, மூட்டுக்களில் கொப்புளம், நாடித்தளர்ச்சி இவை குறைவாயுள்ள மாமிச தாதுவினால் ஏற்படும் செயல்களாகும்.

(ஈ) கொழுப்பு (மேதஸ் தாது)

மண்ணீரல் வளர்ச்சி, இடுப்பு உணர்ச்சியற்றுப் போதல், மூட்டு வலவலத்துப்போதல், உறுப்புகளில் வறட்சி, இளைப்பு, சோர்வு, உலர்தல், மாமிசத்தில் அதிக விருப்பம், மாமிசக்

குறைவினால் ஏற்படும் பிணிகள் இவை குறைவாயுள்ள மேதல் (கொழுப்பு) தாதுவினால் தோன்றும் செயல்களாகும்.

(உ) எலும்பு (தாது)

பல், நகம், ரோமம், தலைமுடி இவை உதிர்தல், வறட்சித் தன்மை, சொரசொரப்புத் தன்மை, மூட்டுத் தளர்ச்சி, எலும்புகளில் வேதனை, எலும்புகளில் தங்கியிருக்கும் மாமிசத்தை உண்ணுவதில் விருப்பம், இவை குறைவாயுள்ள எலும்பு தாதுவினால் தோன்றுபவை.

(ஊ) மஜ்ஜை (தாது)

எலும்பில் துவாரம், குத்தல் வலி, வலிவுக்குறைவு, தலை சுற்றல், கண் பஞ்சடைதல் இவை குறைவாயுள்ள மஜ்ஜை தாதுவினால் ஏற்படுபவை.

(எ) விந்து (தாது)

சோர்வு, வலிவுக்குறைவு, வாய் உலர்ந்து போதல், பார்வையில் புகை போன்ற தோற்றம், உடல் வலி, வெளுத்துப் போதல், செயலில் உற்சாகமின்மை, அலித்தன்மை, விறைகளில் குத்தல் வலி, ஆண் குறியில் எரிச்சல், பெண் சேர்க்கையில் நேரம் கழித்து விந்து வெளிவருதல், அல்லது ரத்தம் கலந்து விந்து வெளிவருதல் இவை குறைவாயுள்ள விந்து தாதுவினால் தோன்றுபவையாகும். *(10)*

10. இயற்கைக்குக் குறைவாயுள்ள மலங்களின் செயல்கள்

(அ) மலம்

காற்று ஒலியுடன் வயிற்றில் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றுதல், பெருங்குடலில் காற்று (அபான வாயு) சுற்றுதல், இதயம், விலாப்பக்கம் இவற்றைத் துன்புறுத்தல், மலம் அளவில் குறைந்து போதல் இவை குறைவாயுள்ள மலங்களின் செயல்கள்.

(ஆ) சிறுநீர்

சிறுநீர்ப் பையில் குத்தல் வலி, வாய் உலர்தல், நீர்ச் சுருக்கு, நீர்க்குறைவு, நீர் நிறம் மாறுதல், இரத்தம் கலந்த சிறுநீர் கழித்தல் இவை குறைவாயுள்ள சிறுநீரினால் ஏற்படுபவை.

(இ) வியர்வை

ரோமங்கள் குத்திடுதல், முடி உதிருதல், தோலில் பிளவுகள் தோன்றல், தோலில் உணர்ச்சியற்ற தன்மை, சொரசொரப்பு, வியர்வை வெளிவராதிருத்தல், இவை குறைவாயுள்ள வியர்வை யினால் ஏற்படும் செயல்களாகும்.

(ஈ) மற்ற மலங்கள்

மற்ற மலங்களின் இருப்பிடத்தில் வறட்சி, ஒன்று மில்லாததுபோல் காணுதல், இலேசான தன்மை இவற்றைக் கொண்டு மலங்களின் குறைவுகளை அறிந்து கொள்ள வேண் டும். (11)

11. தோஷங்கள் முதலியவற்றின் வளர்ச்சி, குறைவுகளை அறிந்து கொள்வது

தோஷங்கள், தாதுக்கள் இவற்றின் எதிரிடையான குணங் கள் உடலில் குறைந்து காணப்படும்பொழுது தோஷங்கள், தாதுக்கள் இவை வளர்ச்சியடைந்துள்ளன என்றும், எதிரிடை யான குணங்கள் உடலில் அதிகம் காணப்படும்போது தோஷங் கள், தாதுக்கள் இவை குறைந்துள்ளன எனவும் அறிந்து கொள்ள வேண்டும்.

மலம் வெளியில் செல்லாமல் குவிந்திருப்பதால் மலம் வளர்ந்திருப்பதையும், மலம் அதிகம் வெளிச் செல்வதனால் மலம் குறைந்திருப்பதையும் கண்டு கொள்க. உடலில் மலம் அதிகம் தங்குவதனால் ஏற்படும் இன்னல்களைவிட மலம் அதிகம் வெளியாவதால் ஏற்படும் துன்பம் அதிகமானது. மலம் அதிகம் வெளிவருவது உடலுக்கு அவ்வளவு ஏற்றதல்ல. அதாவது உடலில் எப்பொழுதும் சிறிதளவு மலம் தங்கியிருப்பது இயற்கைக்கு ஏற்றது. (12)

12. தோஷம் முதலானவை தங்குமிடம்

எலும்பில் இருப்பது வாதம். இரத்தத்திலும் வியர்வை யிலும் தங்கியிருப்பது பித்தம். தாதுக்களிலும், மலங்களிலும் தங்கியிருப்பது கபம். ஆகையினால் இவற்றுள் ஒன்றின் வளர்ச் சிக்கும், குறைவிற்கும் கொடுக்கப்படும் மருந்து, முறையே, அது தங்கியிருக்கும் தாது முதலானவற்றின் வளர்ச்சிக்கும், குறை விற்கும் தானாகவே காரணமாகிறது.

ஆனால் இதற்கு வாதம் விதி விலக்கு. அதாவது வாதம் வளர்வதற்கும், குறைவதற்கும் அளிக்கப்படும் மருந்தினால்

முறையே எலும்பின் வளர்ச்சியோ வளர்ச்சிக் குறைவோ ஏற்படுவதில்லை. அதற்குக் காரணம் பெரும்பாலும் எல்லா வளர்ச்சியும் பிரும்மணம் எனும் சிகிச்சையை அடிப்படையாகக் கொண்டது. அந்த வளர்ச்சி கபத்தினாலேயே தோன்றுகிறது.

குறைவுக்குக் காரணம் லங்கன சிகிச்சை. அது பொதுவாக வாதத்தைப் பின்பற்றி வாததோஷத்தை வளர்க்கும். எனவே வளர்ச்சி, குறைவு இவற்றால் ஏற்படும் நோய்களைப் பொதுவாக லங்கனம், பிரும்மணம் என்ற சிகிச்சையைக் கொண்டு முறையே தணியச் செய்வதையோ, வளர்ப்பதையோ செய்ய வேண்டும்.

வாதத்திலோ முறையே வளர்ச்சி, குறைவு இவற்றால் தோன்றும் நோய்களைப் பிரும்மண சிகிச்சையால் தணிக்கச் செய்ய வேண்டும். லங்கன சிகிச்சை இவற்றை அதிகப்படுத்தும்.

பொதுவாக மற்ற தோஷங்களில், தாதுக்கள், மலங்கள் இவற்றின் வளர்ச்சிக்கு, திரவியம், குணம், செயல் இவற்றைக் கொண்டும் இவற்றிற்கு மாறுபட்டதும், விரோதமில்லாததுமான குணம், செயல் உள்ள திரவியங்களைக் கொண்டும் இவற்றிற்கு சமமான குணம், செயல் பொருந்திய சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

13. தாதுக்களின் வளர்ச்சிக்கும் குறைவிற்கும் காரணம்

உடலிலுள்ள தாதுக்களுக்கு, அந்த தாதுக்களுக்குப் பொருத்தமான குணமுள்ள பொருட்களாலும், அதிக குணமுள்ள உணவு நடைமுறைகளாலும் வளர்ச்சி ஏற்படுகின்றது.

அதேபோல் தாதுக்கள் தனக்கு எதிரிடையான குணங்களுள்ள பொருட்களாலும் எதிரிடையான குணங்கள் அதிகமுள்ள உணவு, நடைமுறை இவற்றாலும் குறைவடைகின்றன.

அவ்வாறே உடலில் உள்ள மாமிசம், கபம் முதலான குரு குணமுள்ள தாதுக்கள், சமமான குருகுணமுள்ள வெளிப் பொருட்களால் வளர்ச்சி பெறுகின்றன.

எதிரிடையான இலகு குணமுள்ள தாதுக்கள் இதேபோன்ற இலகு குணமுள்ள வெளிப்பொருட்களால் குறைவடைகின்றன.

மற்ற பொருட்களாலும், தாதுக்கள் வளர்ச்சியடைகின்றன. உதாரணமாக இரத்தத்தைப் பருகுவதனால் இரத்தமும், புலாலை உண்பதால் புலாலும், கொழுப்பை உண்பதால் கொழுப்பும், முற்றாத எலும்பைச் சாப்பிடுவதனால் எலும்பும், மஜ்ஜையை உண்பதால் (எலும்புகளுக்குள் உள்ள சோறு) மஜ்ஜையும், விந்துவினால் விந்துவும், வளர்ச்சியடையாத (ஆமகர்ப்பம்) கருவினால் கருவும் வளர்ச்சி பெறுகின்றன.

வளர்ச்சியடைவதற்கான பொருட்கள் கிடைக்காமலோ, கிடைத்தும் அவை மனதிற்குப் பிடிக்காமலோ, விரோத குணமுள்ளவைகளாலும், சுவையின்மையாலும், வேறு காரணங்களாலும் உண்ண முடியாமலோ போகுமிடத்தில் அதற்கு ஈடான குணமுள்ள உணவுப் பொருட்களையும் நடைமுறைகளையும் பின்பற்றுவது சிறந்ததாகும்.

உதாரணமாக விந்துக் குறைவு உண்டாகில், பாலையும், நெய்யையும் பயன்படுத்துவதுடன், இனிப்புச் சுவை, எண்ணெய்ப் பசையுள்ள பொருட்கள், குளிர்ந்த வீர்யமுள்ள மற்ற பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது நலம். (14)

எந்தச் செயல் எந்தத் தாதுவிற்குப் பொருத்தமான குணங்களையுடையதோ, அந்தச் செயலைச் செய்வதால் அந்த தாது வளர்ச்சியடைகிறது. ஆகையினால் குறிப்பிட்ட தாதுவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறவன் குறிப்பிட்ட தாதுவுக்கு ஒப்பான குணமுள்ள செயல்களைச் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட தாதுவைக் குறைத்துக்கொள்ள விரும்புகிறவன் அந்தத் தாதுவிற்கு எதிரிடையான குணங்களுள்ள செயல்களைச் செய்ய வேண்டும். உதாரணமாக இரத்த வளர்ச்சியினால் ஏற்படும் நோய்களைப் போக்க இரத்தத்தை வெளிப்படுத்துதல், இரத்தத்தைச் சுத்தமாக்குதல், அல்லது பேதிக்குக் கொடுத்தல் போன்ற இம்முறைகளைக் கையாளலாம்.

மாமிச வளர்ச்சியினால் ஏற்படும் புண்களைப் போக்க வாந்தி, பேதிக்குக் கொடுத்தல், ஆயுத சிகிச்சை, [1]க்ஷார சிகிச்சை—அக்னி சிகிச்சைகளைப் பின்பற்றலாம்.

---

1. க்ஷாரசிகிச்சை—உறைப்பும், உப்பும் அதிகமுள்ள, உடலைக் கெடுக்கும் குணம் உள்ள மருந்தைப் பயன்படுத்துதல்.

கொழுப்பின் வளர்ச்சியினாலோ, குறைவினாலோ தோன்றும் நோயில், கொழுப்பு அதிகம் உள்ள இடத்தில் கொழுப்பைக் குறைப்பது, கொழுப்பு குறைந்த இடத்தில் கொழுப்பை அதிகப்படுத்துவது என்ற முறையைக் கடைபிடிக்கலாம்.

ரசம் எனும் தாதுக் குறைவினால் ஏற்படும் நோய்களை மாமிச ரசம், கள், பால் இவற்றால் சிகிச்சை செய்து போக்கலாம்.

எலும்புக் குறைவினால் தோன்றும் பிணிகள் நீங்க, வஸ்தி சிகிச்சையும், கைப்புச்சுவையுள்ள பொருட்களால் செய்யப்பட்ட பால் [1]வஸ்தி என்னும் சிகிச்சையும் சிறந்தவை.

உடலில் மலம் அதிகம் குவிந்து விடுவதால் உண்டாகும் நோய்களை நீக்க மலக்கழிச்சலுக்குக் கூறப்பட்ட சிகிச்சையைக் கடைபிடிக்க வேண்டும்.

மலக்குறைவினால் உண்டாகும் பிணிகளைப் போக்க யவம் எனும் தானியம், உளுந்து, மொச்சைப்பருப்பு, ஆட்டின் மாமிசம், மது அருந்துதல் இவற்றைக் கொண்டு சிகிச்சை செய்யலாம்.

சிறுநீர் அதிகம் தேங்கி விடுவதாலோ, குறைவதாலோ ஏற்படும் நோய்களைப் போக்க முறையே நீரிழிவிற்குச் செய்யும் சிகிச்சையும், நீர்சுருக்குக்கு கையாளப்படும் சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டும்.

வியர்வைக் குறைவினால் ஏற்படும் பிணிகள் விலக, எண்ணெய் குளித்தல், உடற்பயிற்சி, கள், உறக்கம், காற்றோட்டமுள்ள இடங்களில் வசிப்பது, வியர்வை உண்டாக்கும் சிகிச்சை இவற்றைப் பின்பற்றுதல் தகுந்தது. (15)

தாதுக்களில் வளர்ச்சி, குறைவு இவற்றிற்கு மற்றொரு காரணத்தையும் உணர வேண்டும்.

சடராக்னியின் எந்தப்பகுதி, ரசம், இரத்தம் போன்ற தாதுக்களில், தாத்வக்னியின் உருவத்தில் மிகவும் நுட்பமாக உளதோ அந்தப் பகுதி குறைவடைவதால், தாதுக்களின் வளர்ச்சி ஏற்படுகிறது. அந்தப் பகுதியின் மிகுதியால் தாதுக்களின் குறைவு ஏற்படுகிறது. அதற்கு ஓர் உதாரணம், காட்டுத்

1. வஸ்தி சிகிச்சை—ஆசனத்துவாரத்தின் மூலம் மருந்தைச் செலுத்தி குடலைச் சுத்தம் செய்தல்.

142265

தீ தங்குதடையின்றி காடுகளை எரித்துக் கொண்டிருக்கும் போது பெரிய மரத்தில் பற்றிய தீ, தீவிரத்தன்மை அடைகிறது. சிறிய மரம் அல்லது செடியில் பற்றிய தீயின் வேகம் குறைந்துவிடுகிறது. அதுபோல, தாதுக்களின் அமைப்பில் உணவு ரசமாகிற எரிபொருள் இடைவிடாமல் சுரப்பதால் தாதுக்கள் வளர்ச்சி பெறுகின்றன.

உணவு இரச சுரக்கக் குறைவினால், தாதுக்களின் வளர்ச்சிக் குறைவும் ஏற்படுகின்றது.

உடலில் உள்ள தாதுக்களுடைய குணங்களும், நாம் உபயோகிக்கும் வெளிப்பொருட்களில் உள்ள குணங்களும் ஒரே வகையைச் சேர்ந்திருந்தாலும் அது மிகச் சிறந்ததாக இருந்தாலும் வெகு விரைவில் தாதுக்களை வளர்க்கிறது.

இக்குணங்கள் மாறுபட்டிருந்தால் தாதுக்களின் வளர்ச்சிக் குறைவை உண்டுபண்ணுகிறது. *(16—18)*

14. கெட்டுப்போன தோஷங்கள், தாதுக்கள், மலங்கள் இவற்றால் தோன்றும் தீமைகள்

முதலாவதான இரசதாது, தான் வளர்ச்சியடைந்து தனக்குப் பின்புள்ள தாதுவை வளர்க்கிறது. அதே ரசதாது, தான் குறைந்த நிலையை அடைந்தபொழுது இதன் பின்னால் உள்ள இதன் சத்துக்களைக் கொண்டு வளர்ச்சியடைய வேண்டிய தாதுவைக் குறைக்கிறது.

உணவில் உள்ள சுவைகளினால் கெட்டுப் போன வாதம் முதலான தோஷங்கள், இரசம் முதலான தாதுக்களைக் கெடுக்கின்றன.

கெட்டுப்போன தோஷங்களும் கேடடைந்த இரசம் முதலிய தாதுக்களும் மலங்களைக் கெடுக்கின்றன. கேடடைந்த மலங்கள், சிறுநீர் துவாரம், மலம் வெளிவரும் துவாரம், இரு மூக்குத் துவாரங்கள், இரு கண் துவாரங்கள், இரு காதுகளின் துவாரங்கள், வாய் ஆக தலையில் உள்ள ஏழு துவாரங்கள், வியர்வை தோன்றுமிடமான மயிர்த்துவாரங்கள், மலம் தங்குமிடங்கள், முதலியவற்றிலும் கேடு விளைவித்து இவற்றில் நோய்களைத் தோற்றுவிக்கின்றன.

இவற்றில் வாதத்தினால் தோன்றும் நோய்களை 'வாத ரோக நிதானம்' எனும் அத்தியாயத்தில் சொல்லப் போகிறோம்.

தோலில் உள்ள பித்தம் [1]விஸ்போடகம் (பெரிய கொப்புளங்கள்) [2]வசூரிகா (சாதாரண அம்மை) போன்ற சிறிய கொப்புளங்கள், முளைகள் இவற்றை உண்டு பண்ணு கிறது. இரத்தத்தில் உள்ள பித்தம், அக்கி போன்ற தோலின் மேல் பரவும் புண்கள், எரிச்சல் இவற்றைத் தோற்றுவிக்கிறது.

மாமிசத்தில் உள்ள பித்தம், மாமிசத்தைக் கெடுத்து அதை அழுகச் செய்கிறது.

[3]மேதஸ் (கொழுப்பு) என்னும் தாதுவில் உள்ள பித்தம், எரிச்சலுடன் கூடிய சிறு சிறு முடிச்சுகளை உண்டு பண்ணுகிறது. மிகுதியான வியர்வையையும், வாந்தி, அதிக தாகம் இவற்றைத் தோற்றுவிக்கிறது. எலும்பில் உள்ள பித்தம் எரிச்சலை ஏற்படுத்துகிறது. [4]மஜ்ஜை (எலும்புக் குள் உள்ள சோறு)யில் உள்ள பித்தம், நகங்கள், கண்கள் இவற்றில் மஞ்சள் நிறத்தை உண்டாக்குகிறது.

விந்துவில் கலந்துள்ள பித்தம், அதில் கெட்ட நாற்றத் தையும் மஞ்சள் நிறத்தையும் தோற்றுவிக்கிறது.

இரத்தக்குழாய், நரம்பு இவைகளில் உள்ள பித்தம் கோபத்தையும், பிதற்றலையும் ஏற்படுத்துகிறது.

தசைநாரில் உள்ள பித்தம், தாகத்தை உண்டுபண்ணு கிறது. வயிற்றின் உள் உறுப்புகளில் உள்ள பித்தம், போதை, வறட்சி, எரிச்சல், உடல் முழுவதும் பரவும் தன்மையுள்ள பித்தம், இரத்த பித்தம் போன்ற பிணிகளைத் தோற்றுவிக் கும்.

தோலில் தங்கியிருக்கும் கபம், சடத்தன்மையையும் வெண்ணிறத்தையும் உண்டு பண்ணுகிறது.

இரத்தத்தில் கலந்துள்ள கபம், பாண்டு நோயைத் தோற்றுவிக்கிறது. மாமிசத்தில் உள்ள கபம், புரை குழல்,

---

1. விஸ்போடகம்—பெரியம்மை.
2. வசூரிகா—சாதாரண அம்மை.
3. மேதஸ்—உடலில் தசை முதலிய தாதுக்களுடன் சேர்ந்து தங்கியிருக்கும் ஒருவகைக் கொழுப்பு.
4. மஜ்ஜை—எலும்புக்குள் உள்ள சோறு போன்ற தாதுப்பொருள்.

பெரும் கட்டிகள் இவற்றை ஏற்படுத்துவதுடன், உடல் மீது ஈரத்தோலைப் போர்த்தியது போன்ற உணர்ச்சியையும், உடல் பளுவையும் தோற்றுவிக்கிறது.

மேதஸ் எனும் தாதுவில் உள்ள கபம், உடல் பருமன், நீரிழிவு இவற்றை ஏற்படுத்துகின்றது.

எலும்பில் உள்ள கபம், அதில் [1]சடத்தன்மையை உண்டாக்குகிறது.

மஜ்ஜையில் (எலும்புக்குள் உள்ள சோறு) உள்ள கபம், கண்களில் வெளுப்பு நிறத்தை தோற்றுவிக்கிறது.

விந்துவில் உள்ள கபம், விந்துவை வெளியேற்றாமல் தேக்கி வைக்கும் தன்மையுடையது. விந்துவைக் கட்டுகிறது. பளுவைக் கூட்டி வைக்கிறது.

இரத்தக்குழாய், நரம்பு இவைகளில் கலந்துள்ள கபம், உடலை அசைவற்ற நிலையில் வைக்கிறது.

தசை நாரில் சேர்ந்துள்ள கபம், மூட்டுக்களில் குத்தல் வலியை ஏற்படுத்துகிறது.

வயிற்றின் உட்பகுதியில் உள்ள கபம், வயிறு பருத்தல், சுவையின்மை, உணவு சீரணமடையாதிருத்தல், மற்றும் கபத்தினால் ஏற்படும் நோய்கள் இவற்றை ஏற்படுத்துகிறது.

மலம், சிறுநீர் இவற்றில் கலந்துள்ள கபம், அவை தங்குமிடங்களில் உள்ள கபம், இவ்விரண்டினால் தோன்றும் பிணிகளைப் பற்றி 'மூத்ராகாதம் (சிறுநீர் அடைப்பு) எனும் அத்தியாயம் 'அதிசாரம்' எனும் அத்தியாயம் இவற்றில் கூறுவோம்'.

இந்த வாதம் போன்ற தோஷங்கள் மலங்கள், இவை புலன்களில் பரவும்போதுதான் அந்தந்தப் புலன்களுக்கு இருப்பிடமான கண்கள், காதுகள் போன்றவற்றில் சிறிதளவு துன்பத்தையோ அல்லது அழிவையோ ஏற்படுத்துகின்றன. மலங்கள் குறைவாகவோ, துன்பம் அதிகமாகவோ இருந்தால் அழிவும் ஏற்படுகின்றது. (19—29)

1. சடத்தன்மை—உணர்ச்சிக்குறைவு, அசைவுக்குறைவு இவற்றினால் அவயவங்களின் இயற்கை, குணம் செயல் இவை தடைப்பட்ட நிலைமை.

15. தோஷங்கள் உடலின் உட்பகுதி முதலிய இடங்களில் பரவுதல்

உடற்பயிற்சி, உடலில் உள்ள உஷ்ணம், தீஷ்ணத் தன்மை, உடலுக்கு ஒவ்வாத உணவு, நடைமுறைகள், வாயுவுக்கு இயற்கையாயுள்ள வேகத்தன்மை இவற்றால் தோஷங்கள் வயிற்றின் உட்பகுதியிலிருந்து இரசம், தோல், (சாகைகள்) என்னும் கிளைகளிலும், எலும்புகளிலும், இரத்தம், எலும்புப் பூட்டுகளிலும், மர்மங்களிலும் பரவுகின்றன.

கண், காது போன்ற துவாரங்களை நன்கு சுத்தம் செய்வதனாலும், தோஷங்களின் வளர்ச்சியினாலும், அபிஷ்யந்தம் எனும் முறையைக் கடைபிடிப்பதனாலும், பக்குவமடையாத தோஷங்களைப் பக்குவப்படுத்துவதாலும், வாயுவை அடக்குவதனாலும், தோஷங்கள் (சாகா என்னும் கிளைகளிலிருந்து (கோஷ்டத்தை) வயிற்றின் உட்பகுதியை வந்தடைகின்றன.

அந்தக் கோஷ்டத்திலும் [1]சாகைகளிலும் எலும்புகள், பூட்டுகள் [2]மர்மங்கள் இவற்றில் உள்ள தோஷங்கள் வளர்ச்சியடைவதற்கான காரணங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. அவை இடம், காலம், தாதுக்கள், இயற்கை, உடலுக்கு ஒவ்வாத உணவுகள் இக்காரணங்களால் மற்ற தோஷங்களின் இருப்பிடங்களுக்கும் பரவிச் சீற்றமடைகின்றன.

தோஷங்கள் தன்னிடத்திலிருந்து மற்ற தோஷங்களின் இடங்களுக்குச் சென்று, பரவி நோய் உண்டாக்கும் நிலையில்—அந்த இடத்திற்கு தோஷம், பலம் பெற்றிருந்தால் முதலில் அந்த இடத்தின் தோஷத்திற்குரிய சிகிச்சை செய்து பிறகு அங்கு சென்ற தோஷத்தின் சிகிச்சையையும் செய்ய வேண்டும்.

அந்த இடத்திற்குரிய தோஷம் பலம் குன்றியிருந்தால் அங்கு சென்ற தோஷத்திற்குரிய சிகிச்சையை முதலில் செய்ய வேண்டும். பிறகு அங்கு வந்த தோஷத்தின் சிகிச்சையையும் செய்ய வேண்டும்.

---

1. இரசம் இரத்தம் முதலிய தாதுக்களும் தோலும் ''சாகா'' என்று குறிப்பிடப்படும். இதுபுறநோய் வழி என்று கூறப்படும்.

2. எலும்புகள். எலும்பு பூட்டுகள் ''மர்மங்கள்'' இவைகள் நடுத்தரநோய் வழி. ''மத்யமரோக மார்கம்'' என்றும் கூறப்படும்.

இந்த இரண்டு நிலையிலும் அந்த இடத்தின் தோஷத்திற்குரிய சிகிச்சை (ப்ரதிக்ரியா) செய்துகொண்டு அங்கு வந்தடைந்த தோஷத்திற்கு சிகிச்சை செய்யவேண்டும். *(30—33)*

16 **ஓஜஸ்** *(உடலிலுள்ள எல்லா தாதுகளின் சாரம்)*

ஓஜஸ் என்பது உடலில் உள்ள தாதுக்களின் சாரமாகும். அது மென்மையானது, குளிர்ச்சியானது, தெளிவானது, சிறிது செந்நிறம் கலந்த மஞ்சள் நிறமுடையது. கருத்தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருப்பதால் இந்த ஓஜஸ் இரசம் எனவும் அழைக்கப்படுகிறது. இது உடல் எங்கும் பரவும் தன்மை பெற்றிருந்தாலும் இதயத்தையே முக்கிய இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

ஓஜஸ் என்பது உடலின் சாரமான தேஜஸ் எனப்படும். எண்ணெய்ப் பசையுள்ளது. அதில் உயிர் நிலைத்திருக்கிறது. அது அழிவுற்றால் உடலுக்கு அழிவு ஏற்படுகிறது. அது நிலை பெற்றிருந்தால் உடல் நிலை பெற்றிருக்கும். இது இருப்பதனால்தான் மக்கள் எல்லா தாதுக்களுடைய பலமும் நிலையும் பெற்று மகிழ்ச்சியடைகின்றனர். இது இதயத்தை முக்யமான தங்குமிடமாகக் கொண்டிருப்பினும் உடல் முழுவதும் பரவியிருக்கிறது. இது உயிர் வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று.

கோபம், பசி, ஒன்றைப்பற்றி சிந்தித்தல், வருத்தம், களைப்பு போன்றவைகளினால் ஓஜஸ் எனும் தாது குறைவடைகிறது. அதனால் மனிதன் பயப்படுகிறான். வலுவிழக்கிறான். இடைவிடாமல் சிந்தனையில் ஆழ்கிறான். அவனுடைய புலன்கள் தளர்ச்சியடைகின்றன. உடல் நிறமாற்றம் பெற்று ஒளி இழக்கிறது. மனக்குழப்பம் ஏற்படுகிறது. உடலில் வறட்சியும், இளைப்பும் தோன்றுகின்றன. ஓஜஸ் குறைவினால் ஏற்படும் நோய்களைப் போக்க ஜீவனீய கணத்தில் கூறப்பட்ட பால், மாமிச ரசம் இவை சிறந்த மருந்துகளாகும். ஓஜஸின் வளர்ச்சியினால் உடல் பூரிப்பு, வளர்ச்சி, வலிவு இவை உண்டாகின்றன. *(34—39)*

தோஷங்களின் வளர்ச்சி, அதன் தேய்வு இவைகளால் ஏற்படுகின்ற நோய்களை வெறுக்கும் உணவை நீக்கி, தோஷங்களுக்கு எதிரிடையில்லாத, விரும்பும் உணவை உட்கொண்டு போக்கிக் கொள்ளலாம்.

தோஷங்கள் வளர்ச்சியடைந்தால் தோஷ குணங்களுக்கு எதிரிடையான குணங்களுள்ள உணவில் விருப்பமும், தோஷங்கள் குறைந்திருந்தால் குறைந்த தோஷங்களுக்கு ஸமானமான குணமுடைய உணவில் விருப்பமும் ஏற்படுகின்றன.

இதை நன்கறியாதவர்கள் அறிந்து கொள்வதில்லை. வளர்ச்சியடைந்த தோஷங்கள் அவற்றின் தன்மையை நன்கு வெளிப்படுத்தும். குறைந்த தோஷங்கள் அவற்றின் இயற்கைத் தன்மையைக் குறைத்துவிடும். ஸமானமாக இருந்தால் தம் செயல்களைச் செவ்வனே செய்யும்.

உடல் வளர்ச்சிக்குக் காரணமாக ஆகின்ற கோளாறு அடையாத வாதம், பித்தம் போன்ற தோஷங்கள் கோளாறு அடைந்தால், இவை உடல் அழிவுக்குக் காரணமாகின்றன. ஆகையினால் நன்மை பயக்கும் செயல்களினால் உடலைப் பேணி தோஷங்களின் வளர்ச்சியினாலும், குறைவினாலும் தோன்றுகின்ற பிணிகளைப் போக்கிக்கொள்வது சாலச் சிறந்தது.

(40—43)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'தோஷாதிவிஞ்ஞாநீயம்' எனும்
பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபதாவது அத்தியாயம்
*தோஷபேதீயம்

'தோஷபேதீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. வாதம் பித்தம் இவற்றின் தோற்றமும், இருப்பிடமும்

வாதம்

நம் உடலில் உள்ள வாதம், ஐம்பெரும் பூதங்களில் காற்று, ஆகாயம் இவ்விரண்டின் சேர்க்கையால் உண்டானது.

பித்தம், நெருப்பு எனும் பூதத்திலிருந்து தோன்றியது.

கபம், நீர், நிலம் இவற்றின் கலப்பினால் ஏற்பட்டது.

அவற்றில் வாதம் சிரணப்பை, இடுப்பு, தொடைகள், கால்களின் எலும்புகள், காதுகள், தோல் இவற்றைத் தன் உறைவிடமாகக் கொண்டிருக்கிறது. இதற்கு குறிப்பாகச் சிரணப்பை முக்கியமான இடம்.

பித்தம்

தொப்புள், இரைப்பை, வியர்வை, நிணநீர், இரத்தம், கண்கள், தோல் இவற்றை இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

குறிப்பாகப் பித்தம் தொப்புள் அருகிலுள்ள உறுப்புகளில் அதிகமாக உள்ளது.

கபம்

மார்பு, தொண்டை, தலை [1]க்லோம என்ற உடலின் உட்பகுதியில் உள்ள ஓர் உறுப்பு, மூட்டுகள், இரைப்பை, ரசம் எனும் தாது, கொழுப்பு, மூக்கு, நாக்கு இவற்றைத் தங்குமிடமாகக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக மார்பு கபத்திற்கு முக்கிய இருப்பிடமாம்.

---

*தோஷங்களுக்குள் ஒன்றுக்கொன்று ஏற்படும் பிரிவுகளைப் பற்றியும், மற்றும் தோஷங்களைப் பற்றியும் விவரிப்பதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெற்றது.

1. க்லோம—தொண்டையின் அடிப்பகுதியும் அதைத் தொடர்ந்துள்ள உணவு, நீர் செல்லும் குழாயுமாகும்.

வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் முறையே உடலின் மேற்பகுதி, நடுப்பகுதி, கீழ்ப்பகுதி இவற்றில் தங்கி, தூண்கள் வீட்டைத் தாங்குவது போல் உடலைத் தாங்குகின்றன.

இம்மூன்று தோஷங்கள் உடலை நிலைநிறுத்தச் செய்வதால் தூண்கள் எனப் பெயர் பெறுகின்றன.

உடலைத் தாங்குவதால் தாதுக்கள் என அழைக்கப்படுகின்றன.

உடலை அசுத்தப்படுத்துவதாலும், உணவுடன் தாதுக்களிலும் மலத்திலும் வளர்ச்சி பெறுவதாலும் 'மலம்' என்ற பெயரும் இவற்றிற்கு உண்டு.

இவைகளே சீற்றமடைந்து உடலைக் கோளாறடையச் செய்வதால் தோஷங்கள் எனப் பெயர் பெறுகின்றன. (3)

2. வாதத்தின் பிரிவுகளும்; செயல்களும்

வாதம், பித்தம், கபம் இவை ஒவ்வொன்றும் அவற்றின் இடம், செயல்களைப் பொறுத்து ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

வாதம்

பிராணம், உதானம், வியானம், ஸமானம், அபாநம் என வாதம் ஐவகைப்படும்.

(அ) பிராணம் என்ற வாதம், தலையைத் தங்குமிடமாகக் கொண்டது. தொண்டையிலும், மார்பிலும் உலவுகின்றது. அறிவு, புலன்கள், இதயம், மனம், நாடிகள் இவற்றை நிலை நிறுத்தச் செய்கிறது.

துப்புதல், தும்மல், ஏப்பம், உள்ளிழுக்கும் மூச்சு, வெளிவிடும் மூச்சு, உணவை உட்செலுத்துதல் ஆகியவை இதன் செயல்களாகும்.

(ஆ) உதானம் மார்பில் இருந்துகொண்டு தொண்டை, மூக்கு முதல் தொப்புள் வரை உலவும்.

பேசுதல், செயலில் முயற்சி, புஷ்டி, வலிவு, நிறம், துவாரங்களைத் தெளிவுபடுத்துதல், அறிவு, தைரியம், நினைவு சக்தி, மனத்திற்கு உணர்வுகளைத் தெரிவித்தல் ஆகியவை உதானம் என்ற வாதத்தின் செயல்களாகும்.

(இ) வியானம் இதயத்தை முக்கியமான தங்குமிடமாகக் கொண்டு உடல் முழுவதும் உலவுகிறது. அதிவிரைவில் செல்

லும் ஆற்றல் உடையது. இடம்விட்டு இடம் செல்லுதல், கைகால்முதலிய உடலின் உறுப்புகளை விரிவடையச் செய்தல், மடக்கச் செய்தல், உயர்த்துதல், தாழ்த்துதல், கண்களை மூடவும் திறக்கவும் செய்தல், கொட்டாவிவிடுதல், உணவின் சுவையறிதல், உடல் துவாரங்களைச் சுத்தப்படுத்தல், வியர்வை, இரத்தம் இவை உடலில் பரவுதல் முதலிய செயல்களை வியானம் எனும் வாயு செய்கிறது.

மேலும் பெண்குறியில் விந்துவைச் செலுத்துகிறது. உணவை, சத்து, மலம் எனத் தெளிவாகப் பிரித்து சத்தினால் தாதுக்களை வளர்க்கச் செய்கிறது.

(ஈ) ஸமானம்: இது சடராக்னிக்கு அருகிலிருந்து கொண்டு அதைத் தூண்டுகிறது. சீரணப்பை, இரைப்பை, தோஷங்கள், மலங்கள், விந்து,(சுக்ரம்) மாதவிடாய் இவற்றைச் செயல்படுத்தும் நரம்புக்குழாய்களில் உலாவுகிறது.

இதன் உதவியால் உணவை ஏற்றுக்கொள்ளுதல், சீரணிக்கச் செய்தல், உணவைப் பிரித்தல், மலத்தைக் கீழ்நோக்கிச் செலுத்துதல் ஆகிய செயல்கள் நடைபெறுகின்றன.

(உ) அபானம் – இது இடுப்பின் கீழ்ப்பகுதியில் தங்கி, நீர்ப்பை, இடுப்பின் பின்பக்கம், ஆண்குறி, விதைகள், தொடை இடுக்குகள், தொடைகள் இவற்றில் உலவுகின்றது.

மலம், சிறுநீர். விந்து, மாதவிடாய், கரு இவை உடலில் உறைதல் இவற்றை வெளிப்படுத்துதல் போன்ற செயல்களைச் செய்கிறது. *(4)*

3. பித்தத்தின் பிரிவுகளும், செயல்களும்
பித்தம்

இது பாசகம், ரஞ்சகம், ஸாதகம், ஆலோசகம், ப்ராஜகம் என ஐந்து வகைப்படும். இவற்றில் :-

(அ) பாசகம் எனும் பித்தம்

இரைப்பை, சீரணப்பை இவற்றின் நடுவில் இருந்து கொண்டு ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பட்டிருந்தபோதிலும், இதனிடம் நெருப்பின் குணம் அதிகமாக இருப்பதாலும், நீரின் குணங்கள் குறைவாயிருப்பதாலும், தன் திரவ குணத்தை விட்டுவிட்டு தன்னைச் சார்ந்த வாயு, ஈரத்தன்மை இவற்றின் காரணமாக உடலுக்கு உதவி செய்கிறது. அதாவது உடலுக்கு

உஷ்ணத்தையும், சீரணத்தலையும் செய்கிறது. அதனால் அக்னி என வழங்கப்படுகிறது. அந்த பாசகம் எனும் பித்தம், உணவைச் சீரணக்கச் செய்கிறது. உணவுச்சத்திலிருந்து சத்தையும், மலத்தையும் பிரிக்கிறது. மற்ற இடங்களில் உள்ள பித்தங்களுக்கு தன்னிருக்கையிலிருந்துகொண்டே ஊட்டம் அளிக்கிறது. இந்தப் பிரிவு பாசகபித்தம் என்று குறிப்பிடப்படுகிறது.

(ஆ) ரஞ்சக பித்தம்

இது இரைப்பையை உறைவிடமாகக்கொண்டு அங்கு உள்ள உணவின் ரசத்திற்கு நிறத்தை அளிப்பதால் ரஞ்சக பித்தம் எனப்பெயர் பெறுகிறது.

(இ) ஸாதக பித்தம்

இது இதயத்தைத் தங்குமிடமாகக் கொண்டு அறிவு, நுண்ணறிவு தந்நிறைவு, செயல்படுவதில் ஊக்கம் இவைகளை அளித்து தனக்கு விருப்பமான புலப்பொருள் அடைதல், செயல் இவற்றின் ஈடுபாட்டினால் அதை நிறைவேற்றிக் கொள்ளுதல் இவற்றால் ஸாதகபித்தம் என வழங்கப்படுகிறது.

(ஈ) ஆலோசக பித்தம்

இது கண்களில் தங்கி அவற்றிற்குப் பார்க்கும் சக்தியை அளிக்கிறது.

(உ) ப்ராஜக பித்தம்

சருமத்தை உறைவிடமாகக் கொண்டு சருமத்திற்கு ஒருவித ஒளியைக் கொடுத்து அதை நன்கு விளங்கச் செய்வதால் இது இப்பெயர் பெறுகிறது. இது எண்ணெய் குளித்தல், நீராடுதல், மேற்பூச்சு இவற்றைப் பக்குவப்படுத்தி ஊட்டமளித்து ஒளியை வெளிப்படுத்துகிறது. (5)

4. கபத்தின் பிரிவுகளும், செயல்களும்

கபம்

இது அவலம்பகம், க்லேதகம், போதகம், தர்ப்பகம், ச்லேஷகம் என ஐவகைப்படும்.

(அ) அவலம்பகம்

மார்பில் தங்கியுள்ள கபம், தன் சக்தியினால் பிடரி எனும் கழுத்தின் பின்புறப் பகுதிக்கும் முதுகெலும்புப் பகுதிக்கும் உணவின் வீர்யத்தினால், இதயத்திற்கும் பரவி, மற்ற கபம் உள்ள

இடங்களுக்கும், தன்னிடத்தில் தங்கியபடியே நீர்த்தன்மை அளிக்கும் செயலினால் அவற்றுக்குப் பற்றுக்கோடாக இருப்பதால் 'அவலம்பகம்' எனப்பெயர் பெறுகிறது.

(ஆ) க்லேதகம்

இரைப்பையில் உள்ள இந்த கபம், உணவுக் கூட்டிற்கு ஈரப்பசையை அளிப்பதால் இது இப்பெயரை அடைகிறது.

(இ) போதகம்

நாக்கில் உள்ள இந்த கபம், சுவையை நன்கு தெளிவு படுத்துவதால் இப்பெயரால் வழங்கப்படுகிறது.

(ஈ) தர்ப்பகம்

இது தலையில் இருந்துகொண்டு கண் முதலான புலன் களுக்கு தந்நிறைவை அளிப்பதால் 'தர்ப்பகம்' எனப்படுகிறது.

(உ) ச்லேஷகம்

மூட்டுகளில் உள்ள இந்த கபம், எலும்பு மூட்டுகளைச் சேர்த்து வைத்து எண்ணெய்ப் பசையையும் அளிப்பதால் 'ச்லேஷ கம்' என வழங்கப்படுகிறது. (6)

வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் உடல் முழுவதும் பரவி யிருந்த போதிலும் கோளாறு அடையாத நிலையில் மேற்கூறப் பட்ட இடங்களில் அதிகமாக உள்ளன.

வாதம், பித்தம், கபம் இவற்றால் தோன்றும் நோய்களின் வளர்ச்சிக்கான காரணத்தை 'நிதானம்' என்னும் அத்தியாயத் தில் கூறப் போகிறோம். பொதுவாக தோஷங்களின் வளர்ச்சி, குறைவு, இவற்றிற்கான அறிகுறிகள் 'தோஷாதி விஞ்ஞாநீ யம்' எனும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. (7)

5. தோஷங்களின் வளர்ச்சி; சீற்றம், தணிவு

தோஷங்கள் வளர்ச்சி, அளவை என இரு வகையில் ஏற்படு கின்றன. ஒன்று (சயம்) தோஷங்கள் அவற்றின் இடங்களில் குவிந் திருப்பது. மற்றொன்று சீற்றமடைந்து, மற்ற இடங்களுக்குப் பரவுவது

இவற்றில் வாதம், தன்னுடைய வறட்சித்தன்மை, குளிர்ச்சி, லகுகுணம், சொரசொரப்பு, நுட்பம் என்ற ஐந்து குணங்கள் தன் எதிரிடையான உஷ்ண குணத்துடன் சேரும் பொழுது (ஸஞ்சயம்) கூடுதலை அடைகிறது.

இதே வறட்சித்தன்மை போன்ற குணங்கள், உஷ்ண குணத்துடன் சேராமல் குளிர்ச்சி எனும் குணத்துடன் சேர்ந்து வாதத்தைச் சீற்றமடையச் செய்கின்றன. உஷ்ணம், வறட்சித் தன்மை போன்ற குணங்களின் எதிரிடையான எண்ணெய்ப்பசை, உஷ்ணம் போன்ற குணங்கள் வாதத்தைத் தணிக்கின்றன.

இவ்வாறே பித்தத்தின் தீக்ஷ்ணம் போன்ற குணங்கள் தன் எதிரிடையான குளிர்ச்சி போன்ற குணங்களுடன் சேர்ந்து, பித்தத்தின் (ஸஞ்சயம்) கூட்டத்தை ஏற்படுத்துகின்றன. இவைகளே உஷ்ண குணங்களைச் சேர்ந்தால் பித்தத்தைச் சீற்றமடையச் செய்கின்றன. மந்தம், குளிர்ச்சி போன்ற குணங்களினால் பித்தம் தணிகிறது.

குளிர்ச்சி போன்ற குணங்களுடன் சேர்ந்த எண்ணெய்ப் பசை போன்ற கபத்தின் குணங்கள், கபத்தை (ஸஞ்சய)சேர்த்து வைக்கின்றன. உஷ்ண குணங்களுடன் சேர்ந்தால் சீற்றமடைகின்றன. உஷ்ண குணத்துடன் சேர்ந்த வறட்சி போன்ற குணங்கள் கபத்தைத் தணியச் செய்கின்றன. *(8)*

தோஷங்கள் தங்களுடைய இடத்திலேயே வளர்ச்சி பெறுவதை சயம் (கூடுதல்) என்கிறோம். தோஷங்கள் கூடுதல்பெற்றபின் தோஷங்களை வளர்க்கும் காரணங்களில் வெறுப்பும் அதன் எதிரிடையான குணங்கள் உள்ள ஆகாரம் போன்றவற்றில் விருப்பமும் ஏற்படுகிறது.

தோஷங்கள் வளர்ந்து தன் இடத்தை விட்டு வேறு இடம் செல்லுதல் சீற்றம் அல்லது கோபம் எனப்படுகிறது. கோபமடைந்த தோஷங்கள் தனது அறிகுறிகளைத்தோற்றுவிக்கின்றன. அவை உடலுக்கு ஆரோக்கியமின்மையையும், பிணிகளையும் தோற்றுவிக்கின்றன.

தன்னிடத்தில் உள்ள தோஷங்களை ஸமானமான நிலையில் இருக்கச் செய்வதும் நோய் தோன்றாதிருத்தலும், 'ப்ரசமம்' எனப்படுகிறது. சீற்றமடையும் தோஷங்கள் வாயுவின் காரணமாக உடல் முழுவதிலுமோ உறுப்புகளிலோ, பாதி உடலிலோ நோய்கள் உண்டாகின்றன. ஆகாயத்தில் உள்ள காற்றினால் மேகம் அடித்துச் செல்லும் இடத்தில் மழை பொழிவது போல், இந்த தோஷங்கள் சிலசமயம், உடல் முழுவதிலும், மற்றொரு சமயம் உடலின் பாதியிலும், வேறொரு சமயம், உடலின் ஓர் உறுப்பிலும் பரவி நோயை உண்டாக்குகின்றன. *(9—11)*

சீற்றமடைந்த வாதம் முதலான தோஷங்கள் பலவகையான நோய்களால் உடலைத் துன்புறுத்துகின்றன. இந்நோய்களுள் வாதத்தினால் தோன்றும் நோய்கள் முக்கியமாக எண்பது வகையாகப் பிரிகின்றன. பித்தத்தினால் ஏற்படும் நோய்களில் நாற்பது குறிப்பிடத் தக்கவை. கபத்தினால் உண்டாகும் பிணிகளில் முக்கியமானவை இருபது. *(12)*

6. வாதத்தினால் தோன்றும் நோய்களின் பட்டியல்

1. நகம் பிளத்தல்
2. உள்ளங்கால், உள்ளங்கை வெடித்தல்
3. கால்களில் குத்தல் வலி
4. கால்களின் தடுமாற்றம்
5. கால்கள் மரத்துப்போதல்
6. கணுக்கால்களின் பிடிப்பு
7. ஆடு சதையை முறுக்குவது போன்ற வேதனை
8. நரம்புக் குடைச்சல்
9. முழங்கால் பிளப்பது போன்ற வலி
10. முழங்கால் மூட்டு நழுவுதல்
11. தொடைகள் தூண்போல் பருத்து அசைவற்றிருத்தல்.
12. தொடை விலவிலத்துப் போதல்
13. கால் முடமாவது
14. மலத்துவாரம் வெளிவருதல்
15. மலத்துவாரத்தில் கடுப்பு
16. விதை மேல் இழுத்துக் கொள்ளுதல்
17. ஆண்குறி அசையாமை—விறைத்து போதல்
18. தொடைகளின் இடுக்குகளில் வீக்கம்.
19. பின்பாகத்தில் பிளப்பது போன்ற வேதனை
20. மலம் அதிகம் இளகுதல்
21. வாதம் மேல் நோக்கிக் கிளம்புதல்
22. தாங்கித் தாங்கி நடத்தல்
23. முதுகெலும்பு வளைந்து போதல்.
24. கூனல் வளர்ச்சியடையாமை
25. முள்ளந்தண்டின் அடிப்பகுதியில் பிடிப்பு
26. முதுகுப் பிடிப்பு
27. விலாப் பிடிப்பு வலி
28. வயிற்றைச்சுருட்டி இழுத்தல்
29. இதயம் இயங்காமை
30. இதயத் துடிப்பு அதிகரித்தல்
31. இதயத்தை உரைப்பது போன்ற வலி

32. மாரடைப்பு
33. மார்பில் குத்தல் வலி
34. கைகள் உலர்ந்து போதல்
35. கழுத்தை அசைக்க முடியாத வலி
36. கழுத்து நரம்புகள் அசைக்க முடியாமல் போதல்
37. கழுத்தைப் பிளப்பது போன்ற வேதனை
38. தாடை அசைவற்றிருத்தல்
39. உதட்டைப் பிளப்பது போன்ற வலி
40. தாடையைப் பிளப்பது போன்ற வலி
41. பற்களைப் பிளப்பது போன்ற வலி
42. பல் ஆட்டம் காணுதல்
43. பேசமுடியாமை
44. குரலடைப்பு
45. பிதற்றல்
46. வாயில் துவர்ப்புச் சுவை
47. வாய் உலர்ந்து போதல்
48. சுவையறியாமை
49. நுகரும் தன்மை இழத்தல்
50. காதுகளில் குத்தல் வலி
51. காது இரைச்சல்
52. பேரொளி மட்டும் கேட்டல்
53. செவிடு (காது கேளாமை)
54. இமைகள் அசையாதிருத்தல்
55. இமைகள் சுருங்கிப்போதல்
56. கண் மறைப்பு
57. கண்களில் குத்தல் வலி
58. கண்கள் பிதுங்குதல்
59. புருவம் உயர்தல்
60. பொட்டில் பிளப்பது போன்ற வலி
61. நெற்றியில் பிளப்பது போன்ற வலி
62. தலைவலி
63. தலையிலுள்ள தோல் வெடிப்பு
64. பக்கவாதம்
65. தலையில் ஒரு பக்கத்தில் மட்டும் வலி (அ) உணர்ச்சி யின்மை.
66. உடல் முழுவதும் வலி
67. நடுக்க வாதம்
68. உடல் விறைத்தல்
69. களைத்துப் போதல்

70. மயக்கம்
71. நடுக்கம்
72. கொட்டாவி விடுதல்
73. அயர்வு
74. உற்சாகமிழத்தல்
75. வறட்சித்தன்மை
76. உடலில் சொர சொரப்பு
77. உடல் கரு நிறமாதல்
78. உடல் செந்நிறமடைதல்
79. உறக்கமின்மை
80. மனஅமைதி இழத்தல்

7. பித்தத்தினால் தோன்றும் நோய்கள்

1. உடல் முழுவதும் நெருப்பின் அருகில் உள்ளது போன்ற வியர்வையுடன் கூடிய எரிச்சல்.
2. உடலின் ஒரு பகுதியில் வியர்வை ஏற்படாமல் உஷ்ணம் தோன்றல்
3. உடலில் காட்டுத் தீ போன்ற எரிச்சல்
4. கண் முதலிய பொறிகளில் எரிச்சல்
5. முகம், உதடுகள், வாயில் மேல் பாகம் இவற்றில் எரிச்சல்
6. உடலின் உள் எரிச்சல்
7. தோலில் தோன்றும் எரிச்சல்
8. தோளில் எரிச்சல்
9. புகைவது போல் ஏப்பம் விடுதல்
10. புளித்த ஏப்பம்
11. கடுமையான உஷ்ணம்
12. அதிகமாக வியர்த்தல்
13. உடல் நாற்றம்
14. புலன்களின் அழற்சி
15. இரத்தம் கருத்து நீற்றுப் போதல்
16. மாமிசம் கருநிறமடைந்து கெட்ட நாற்றம் வீசுதல்
17. தோல், அதனுள் உள்ள மாமிசம் இவற்றின் பிளவு
18. தோலின் உள்ளும், புறமும் வெடிப்பு
19. இரத்தக்கட்டி
20. எரிச்சலுள்ள இரத்தக் கொப்புளம்
21. தோலின் மேல் உண்டாகும் வட்டமான தடிப்பு
22. இரத்த பித்தம்
23. உடலிலோ, மலத்திலோ பச்சை நிறம் ஏற்படுதல்
24. உடலில் மஞ்சள் நிறம் தோன்றுதல்

25. இரத்தம் நீலநிறமாக மாறுதல்
26. கக்கம், தோல், விலா இவற்றில் தோன்றும் வேதனை யளிக்கும் கொப்புளம்
27. மஞ்சள் காமாலை
28. வாயில் கைப்புச்சுவை
29. வாயில் இரத்தத்தின் நாற்றம்
30. வாயில் கெட்ட நாற்றம்
31. தாகம் அதிகரித்தல்
32. உணவில் போதுமென்ற எண்ணம் தோன்றாமை
33. வாய் வேக்காடு
34. தொண்டைக்குள் வேக்காடு
35. கண் நோய்
36. மலத்துவாரத்தில் வேக்காடு
37. ஆண்குறியில் வேக்காடு
38. உயிருக்கு ஆதாரமான இரத்தம் வெளிவருதல்
39. இருண்டு போதல்
40. கண், சிறுநீர், மலம் இவை பசுமை கலந்த மஞ்சள் நிறமாகுதல்

3. கபத்தினால் தோன்றும் நோய்களின் விவரம்

1. எப்பொழுதும் சாப்பிட்டது போன்ற உணர்ச்சி
2. மயக்கத்துடன் கூடிய சோம்பல்
3. அதிக உறக்கம்
4. உடல் திமிர்த்துப் போதல்
5. உடல் பருத்து பளுவாதல்
6. சக்தி இருந்தும் செயலில் ஆர்வமின்மை
7. வாயில் இனிப்புச் சுவை
8. வாயில் உமிழ்நீர் சுரத்தல்
9. அடிக்கடி கபம் வெளிப்படுதல்
10. மலம் அதிகமாதல்
11. கபம் அதிகரித்தல்
12. இதயத்தில் பூசியது போன்ற அடைப்பு
13. தொண்டையில் குழகுழப்பு
14. நரம்புகள்,இரத்தக் குழாய்கள் நிறைந்திருப்பதுபோன்ற உணர்வு
15. கழுத்தில் தோன்றும் ஒரு வகைக் கட்டி
16. உடல் அளவு கடந்து பருத்தல்
17. உடல் குளிர்ச்சி
18. மார்பில் அரிப்பும், குத்தலோடு கூடிய வீக்கமும்

19. உடல் வெளுத்தல்
20. கண்கள், சிறுநீர், மலம் இவை வெளுத்தல்

(13—15)

9. அரும்பத விளக்கம்

(அ) தாகம்—உடல் முழுவதும் பரவியுள்ள கடுமையான உஷ்ணத்திற்கு தாகம் எனப் பெயர்.

(ஆ) ஓஷம்—இதே தாகம் வியர்வையைத் தோற்றுவித்து மயக்கமடையச் செய்தால் 'ஓஷம்' எனப்படும்.

(இ) ப்லோஷம்—உடலின் ஒரு பகுதியில் வியர்வை தோன்றாமல் தணல்போல் உஷ்ணத்தை உண்டாக்குவது 'ப்லோஷம்'.

(ஈ) தவம்—முகம், உதடுகள், தாடைகள் இவற்றில் எரிச்சல் ஏற்படுத்துவது 'தவம்'.

(உ) தவது—கண் முதலிய புலன்களில் எரிச்சலை உண்டாக்குவது 'தவது' எனப் பெயர் பெறுகிறது.

(ஊ) விதாஹம்—கை, கால், தோள்பட்டை, இவற்றில் பல விதமான எரிச்சலை உண்டாக்குவது 'விதாஹம்.'

(எ) அந்தர்தாஹம்—வயிற்றின் உள் உறுப்புகளில் எரிச்சலை உண்டாக்குவது அந்தர்தாஹம்.

(ஏ) தூமகம்—தலை, கழுத்து, தொண்டை, தாடை இவற்றில் புகைவது போல் தோன்றுவது தூமகம்.

(ஐ) அம்லகம்—உள் எரிச்சலுடன், இதயத்தின் வலியுடன் கூடிய ஏப்பம் 'அம்லகம்'.

(ஒ) இரத்த க்லேதம்—இரத்தம் கருநிறமடைந்து கெட்ட நாற்றம் பெற்று நீற்றுப்போதல் 'இரத்த க்லேதம்'.

(ஓ) மாம்ச க்லேதம்—மாமிசம் கருத்து, கெட்ட நாற்றமடைதல் 'மாம்சக்லேதம்'.

(ஔ) சர்ம கோதம்—வெளித்தோல் அழுகிப்போதல் 'சர்ம கோதம்'.

(ஃ) திருப்தி—வயிற்றின் பளுவால் எப்பொழுதும் சாப்பிட்டது போல் உணவில் விருப்பம் ஏற்படாதிருத்தல் 'திருப்தி'.

(க) அரோசகம்—உணவு பிடிக்காமலிருக்கும்போது வயிறு நிறைந்தது போன்ற உணர்ச்சி ஏற்படுவது 'அரோசகம்'.

(கா) தந்த்ரா—உறக்கம் வருவது போன்று மயக்கத்துடன் கூடி செயலில் ஈடுபடாதிருத்தல் 'தந்த்ரா'.

(கி) ஸ்தைமித்யம்—உடல் திமிர்ந்துப்போதல் 'ஸ்தைமித்யம்'. இதை சிலர் 'பிரமீலகம்' எனக் கூறுகின்றனர்.

(கீ) உபலேபம்—உடலின்மேல் மண் பூசியதுபோல் தோன்றுவது 'உபலேபம்'.

(கு) ப்ரதிசயம்—இந்த உபலேபம் அதிகமானால் 'ப்ரதிசயம்' அல்லது 'அதிபூரணம்' என வழங்கப்படுகிறது.

(கூ) சைத்யம்—சடராக்னி மிகக்குறைவடைதல் 'சைத்யம்'.

(கெ) உதர்தம்—கபம், மலம் இவற்றின் மிகுதியால் மார்பில் அரிப்பு, குத்தலோடு கூடிய வீக்கம், 'உதர்தம்'. குளிர்ச்சியினால் உடலில் ஏற்படும் நடுக்கத்தை உதர்தம் எனச் சிலர் கருதுகின்றனர்.

மற்றும் சிலர், குளிர் காலத்தில் குளிர்ந்த நீரைத் தொடுவதால் ஏற்படும் அரிப்புடன் கூடிய சிவந்த வீக்கத்தை உதர்தம் என்கின்றனர். இது கபத்தினால் ஏற்படக்கூடியது.
(16—17)

காய்ச்சல், குன்மம் போன்ற பெரிய நோய்களைப் பற்றி நிதானஸ்தானத்தில் (நோய் உண்டாவதற்குக் காரணம் எனும் பகுதி) தக்க இடத்தில் கூறுவோம்.

சிறு நோய்கள், அவை ஏற்படும் உறுப்புகளின் பெயரைக் கொண்டே அழைக்கப்படுகின்றன. உதாரணமாக நகத்தைப் பிளப்பது போன்ற வலியை 'நகபேதம்' என்றும், பொட்டு (நெற்றியின் இரு பக்கங்கள்)களில் பிளப்பது போன்ற வலியை 'சங்க பேதம்' என்றும், நெற்றியில் பிளப்பது போன்ற வலியை 'லலாடபேதம்' (லலாடம்—நெற்றி) என்றும், உள் எரிச்சலை, 'அந்தர்தாகம்' எனவும், கழுத்தில் உள்புரத்தில்—பூசியிருப்பது போல் தோன்றுவதை 'கண்டோபலேபம்' (கண்டம்—கழுத்து) என்றும்; இதயத்தில் பூசியிருப்பதுபோல் தோன்றுவதை 'ஹ்ருதயோபலேபம்' (ஹ்ருதய—இதயம்) எனவும் கூறுகின்றோம். ஆகையினால் சிறு நோய்கள் தோன்றுமிடங்களைக் கொண்டு தனித்தனிப் பெயர் பெறுகின்றன. (18)

மேற்கூறப்பட்டதைத் தவிர்த்து கூறப்படாத நோய்கள் கணக்கற்றவைகளாக இருப்பதனால், உடல் முழுவதும் பரவும்

வாதம் முதலான தோஷங்களின் இலக்கணமும் தெளிவாக ஆங்காங்கு காணப்படும் நோய்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றின் செயல்களும், சிகிச்சைகளும், முன்னமே எடுத்துரைக்கப் பட்டன.

வாதம் முதலானவற்றின் இலக்கணம் 'ஆயுஷ்காமீயம்' எனும் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளது. *(19)*

10. வாதத்தின் செயல்கள்

கை, கால்கள் போன்ற இடங்களில் உள்ள மூட்டுகளை நெகிழச் செய்தல், விரிவுபடுத்தல், அசைக்க முடியாமல் தடுத்தல், தளர்ச்சி, உடைப்பது போன்ற வலி, குத்தல் வலி, மயிர்கூச்சல், மகிழ்ச்சி—வேட்கை, உடல்வலி, உடல் நடுக்கம், வேதனை, முறுக்குதல் போன்ற வலி, உடைத்தல் போன்ற வலி, ஈட்டியினால் குத்துவது போன்ற வலி, உலர்த்தல், உணர்ச்சியின்மை, சொர சொரப்பு, துவாரங்களைத் தோற்றுவித்தல், சுருக்குதல், துடிப்பு இவை வாதத்தின் செயல்களாகும்.

இது துவர்ப்புச் சுவையுடன் கூடியது. வெண்கருப்பு அல்லது செந்நிறத்தை ஏற்படுத்தக்கூடியது.

11. பித்தத்தின் செயல்கள்

எரிச்சல், உஷ்ணம், பக்குவம் செய்தல், வியர்வை, ஈரத் தன்மை, அழுகும் தன்மை, பெருகும் தன்மை, சிவந்த தன்மை இவை பித்தத்தின் செயல்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

கார்ப்பு, புளிப்புச் சுவைகளைத் தோற்றுவிக்கும் வெண்மை, வெண்மை கலந்த செந்நிறம் இவற்றை விலக்கி மற்ற நிறங்களை உடலில் உண்டாக்கக் கூடியது.

12. கபத்தின் செயல்கள்

அரிப்பு, உறுதிப்பாடு, கனத்தன்மை, பூசுதல், எண்ணெய்ப் பசை, குளிர்ச்சி, கட்டுதல், நேரம் கழித்து தன் செயலைச் செய்தல் இவை கபத்தின் செயல்களாம்.

இது இனிப்பு, உப்புச் சுவைகளை உண்டாக்கும் தன்மையுடையது. உடலில் வெண்ணிறத்தைத் தோற்றுவிப்பது. **(20)**

கபிலர் எனும் ஆசாரியர் இந்த தோஷங்களின் இலக்கணங்களைச் சுவையின் மூலமாகவே விளக்குகிறார்.

பித்தத்திற்குக் கார்ப்பு, புளிப்பு, உப்பும்; கபத்திற்கு இனிப்பு, புளிப்பு, உப்பும்; வாதத்திற்கு துவர்ப்பு, கைப்பு, கார்ப்பும் இன்றியமையாத குணங்களாக உள்ளன.

இந்தச் சுவைகளைக் கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும் அநுமானத்தால் கண்டறிந்திருக்கிறார்கள்.

இந்த வாதம் முதலானவை தமக்கு ஈடான சுவையால் வளர்கின்றன. எதிரிடையான சுவையால் குறைகின்றன.
(21—22)

13. சுச்ருதர் கூற்று

பித்தம் பக்குவமடையும் நிலையில் புளிப்புத் தன்மையை அடைகிறது. கபம் பக்குவமடையும் நிலையில் உப்புத்தன்மையைப் பெறுகிறது. இதேபோல் வாதம் போன்றவற்றின் இலக்கணம், செயல்கள் இவற்றை மிகுந்த கவனத்துடன், சாத்திரமுறைப்படியும், புலன்களால் அறிந்தும், அநுமானத்தினாலும், சிறந்த முறையில் அறிந்துகொள்ள வேண்டும்.

வாதம் முதலியவற்றின் இலக்கணத்தையும், செயல்களையும் அறிந்தபின் இடம், காலம், அளவு போன்றவற்றினால் தீர்மானித்து விரைவிலேயே சிகிச்சை செய்ய வேண்டும். (23)

இனி தோஷங்களின் வளர்ச்சி, குறைவு இவற்றினால் ஏற்படும் பிரிவுகளைக் கூறப்போகிறோம்.

இயற்கை நிலையிலிருந்து தனித்தனியாக வளர்ச்சியடைந்த தோஷங்கள் மூன்று. வளர்ச்சியடைந்த தோஷங்களுக்கு மூவகைச் சேர்க்கை உண்டு. அவற்றுள் ஒரே அளவாக வளர்ச்சியடைந்த தோஷங்கள் மூன்று. ஒரு தோஷம் மட்டும், மற்ற தோஷங்களைவிட அதிகமாக வளர்ச்சியடைந்தால் அந்த வகையில் ஆறு. ஆகவே சேர்க்கையினால் ஏற்படுவது ஒன்பது வகைப்படும். மூன்று தோஷங்களும் வளர்ச்சியடைந்தால் அதில் பதின்மூன்று வகைகளைக் காணலாம். அதன் விளக்கமாவது:

ஒரு தோஷம் குறைவாகவும், இரண்டு தோஷங்கள் அதிகம் வளர்ச்சியடைவதால் மூன்றாகப் பிரிகின்றன. ஒரு தோஷம்

மட்டும் அதிகம் வளர்ச்சி பெறுவதால் மூன்றாக ஆகிறது. ஆக ஆறுவகைகளும், மூன்றும் ஒரே அளவில் வளர்ச்சியடைந்தால் ஒன்றும், ஏற்றத்தாழ்வின் கற்பனையினால் ஆறும் உண்டாகின்றன.

இவ்விதம் தோஷங்கள் வளர்ச்சியடையும் முறையைக் கொண்டு இருபத்தைந்து விதமான பிரிவுகளுண்டு. தோஷங்கள் இயற்கை நிலையிலிருந்து குறைவடைவதால் அவற்றிற்கும் இவ்விதமே இருபத்தைந்து பிரிவுகளைக் கற்பித்து, இதே முறைப்படி பகுத்துக் கூட்டலாம்.

மூன்று தோஷங்களுள் ஒன்று மட்டும், வளர்ச்சியடைந்தும், ஒன்று சமநிலை மாறுபடாமலும், மற்றொன்று குறைவடைந்தும் இருந்தால் அப்பொழுது ஆறு பிரிவுகளைக் கற்பனை செய்யலாம். இவ்வாறு 62 பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதுபற்றி மூன்றாவது கற்பனை ஒன்று. இது உடல் நலத்திற்குக் காரணமாகும். (24—27)

பிணியுற்ற நிலையில் தோஷங்களின் மிகுதி, குறைவு, சமநிலை இவற்றை ஒரே சமயத்தில் அறிந்து கொள்வது கடினம். ஆகையினால் இந்த ஆறு கூட்டுகளை நோய்கள் மூலமாகக் கூறுவோம்.

வளர்ச்சியடைந்த வாதம், கபம் குறைந்திருக்கும்போது இயற்கை நிலையில் உள்ள பித்தத்தை உடலின் தனித்தனி உறுப்புகளில் பரவச் செய்கிறது. அப்பொழுது அந்தந்த இடங்களில் நிலையற்ற பிளப்பது போன்ற வலியையும், எரிச்சலையும் உண்டாக்குவதுடன் வலிக்குறைவையும், களைப்பையும் தோற்றுவிக்கிறது.

வளர்ச்சியடைந்த வாதம், பித்தம் குறைந்த நிலையில் இயற்கையாக உள்ள கபத்தைத் தன் இடத்திலிருந்து உடலின் எந்தப் பகுதிக்கு எடுத்துச் செல்கிறதோ அவ்விடங்களில், குளிர்ச்சி, அசைவற்ற நிலை, பளு இவற்றைத் தோற்றுவிக்கும். வளர்ச்சியடைந்த பித்தம், கபம் குறைந்த நிலையில் இயற்கையாவுள்ள வாதத்தை எங்கு தடுத்து நிறுத்துகிறதோ அங்கு எரிச்சலையும், குத்தல் வலியையும் உண்டாக்குகிறது.

வளர்ச்சியடைந்த பித்தம், வாதம் குறைந்திருக்கையில், இயற்கையாகவுள்ள கபத்தைத் தடுத்துவிடுகிறது. அப்பொழுது கபம் தடுக்கப்பட்ட இடத்தில், உறக்கம் வருவது போன்ற

மயக்கத்துடன் கலந்த சோம்பல், பளு, காய்ச்சல் இவற்றை ஏற்படுத்தும்.

வளர்ச்சியடைந்த கபம், பித்தம் குறைவாயுள்ளபோது இயற்கையாகவுள்ள வாதத்தை தடைபடுத்துமிடங்களில் குளிர் காய்ச்சல், பளு இவற்றை உண்டாக்கும்.

வளர்ச்சியடைந்த கபம், வாதம் குன்றியிருக்கும்பொழுது இயற்கையாகவுள்ள பித்தத்தை தடைப்படுத்திவிடும். அப்பொழுது சடராக்னிக்குறைவு, தலைக்கனம், தூக்கம், சோம்பல், பூசுதல் போன்ற தோற்றம், இதயநோய், உடல் பளு, பித்தத்தையும், கபத்தையும் வெளியே துப்புதல், நகம், சிறுநீர், கண்கள் இவற்றில் மஞ்சள் நிறத்தையும் தோற்றுவிக்கிறது. *(28—36)*

வாதம் முதலான தோஷங்களின் வளர்ச்சியினாலும், குறைவினாலும் ஏற்படும் மாறுதல்கள் முன் அத்தியாயத்தில் தனியாகக் கூறப்பட்டுள்ளன.

அதே மாறுதல்களை மற்ற தோஷங்களின் பிரிவுகளையும், அவற்றின் வளர்ச்சிக் குறைவு இவற்றை ஒட்டியும், கற்பித்துக்கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்ட வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்களுக்கு ரசம், இரத்தம், மாமிசம் போன்றவற்றுடன் வெவ்வேறு விதத்தில் தொடர்பு ஏற்படுவதாலும்,

தோஷ தாதுக்களுக்கு உண்டாகக்கூடிய குறைவு, சமநிலை, வளர்ச்சி என்ற பாகுபாடுகளாலும்,

அவற்றிற்கே ஏற்றக்குறைவினைக் கற்பிப்பதாலும், அவை கணக்கில் அடங்காதவைகளாகும், அதற்குள்ள அறிகுறிகளை நன்கு கவனத்துடன் அறிந்து கொள்ளுதல் சிறந்ததாகும். *(37—38)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'தோஷபேதீயம்' எனும் இருபதாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தொன்றாவது அத்தியாயம்

*தோஷோபக்ரமணீயம்

'தோஷோபக்ரமணீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். *(1–2)*

1. வாத தோஷத்திற்குச் சிகிச்சை முறை

எண்ணெய்ச் சிகிச்சையும், வியர்வை உண்டாக்கும் சிகிச்சையும் வாத தோஷத்தைப் போக்கும் சிகிச்சைகளில் சிறந்தவை. மென்மையானதும், எண்ணெய்ப் பசையுள்ளதும், உஷ்ணவீர்யம் உள்ளதும், இனிப்புச்சுவை, புளிப்புச்சுவை, உப்புச் சுவைகளுள்ளதுமான பொருட்களைப் பேதிக்கும், வாந்திக்கும் கொடுக்க வேண்டும்.

இதேமாதிரிக் குணமுள்ள பொருட்களை உணவாகவும், பயன்படுத்திக் கொடுக்க வேண்டும். எண்ணெய்க் குளித்தல், ஒத்தடமிடுதல், துணி அல்லது கயிற்றினால் கட்டுப் போடுதல், கையினால் பிடித்து விடுதல், வாதத்தை நீக்கும் பொருட்களின் திரவத்தை ஊற்றுதல், வாதத்தைப் போக்கும் பொருட்கள் நிறைந்த நீரில் அமிழ்ந்து இருத்தல், கையினால் மெள்ளத் தடவி விடுதல், அமுக்குதல், பயமுறுத்துதல், உலுக்குதல், இனிய சொற்களால் வலியை மறக்கச் செய்தல், மாவினாலும், வெல்லத்தினாலும் செய்த மது வகைகளை அருந்தச் செய்தல், சடராக்னியைத் தூண்டிவிடுவதும், சீரணத்தை உண்டுபண்ணக் கூடியதும், வாதத்தை நீக்குபவையும், மலங்களைக் கழிக்கச் செய்வதுமான பொருட்களால் பல முறைகளில், நூறுமுறை, ஆயிரம் முறை மடக்கிக் காய்ச்சிய பலவித எண்ணெய்கள், நெய் முதலியவை உபயோகித்தல், வாதத்தை அகற்றக்கூடிய எல்லாவித கஷாய வஸ்திகள், வஸ்தி சிகிச்சைக்குரிய கட்டுப்பாடுகளைக் கடைபிடித்தல், ஆகிய இவை யாவும் வாத தோஷத்தைத் தணிக்கும் செயல்களாகும்.

---

*தோஷோபக்ரமணீயம்—கோளாறடைந்த வாத — பித்த—கபங்களுக்குச் சிகிச்சை செய்யும் முறைகளைக் கூறுவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

குறிப்பாக எண்ணெய், மாமிசரசம், எண்ணெய் வஸ்தி, அமைதியான வாழ்வு, புணர்ச்சியை நீக்கி ஹேமந்த ருது (மார்கழி—தை)வில் கடைபிடிக்க வேண்டிய முறைகள் ஆகிய இவற்றைப் பின்பற்ற வேண்டும். (3)

2. பித்தத்திற்குப் பொதுவான சிகிச்சை முறை

நெய் அருந்தச் செய்தல், நெய்யினால் எண்ணெய்ப்பசை உண்டாக்குதல், மலம் கழிக்கச் செய்தல், தோஷங்களை வெளிப்படுத்துதல் ஆகிய முறைகளைச் செய்ய வேண்டும்.

இனிப்பு, கைப்பு, துவர்ப்பு இச்சுவைகளடங்கிய மருந்துப் பொருட்களை மலங்கழிக்கச் செய்வதிலும், உணவு வகையிலும் பயன்படுத்த வேண்டும்.

ருதுவானதும், மணமுள்ளதும், சீதவீர்யம் கொண்டதும், மனதிற்கு உகந்ததுமான பொருட்களை உபயோகிப்பதோடு மிகக் குளிர்ந்த மணமுள்ள நீரில் மூழ்கி இருத்தல் வேண்டும்.

மனதிற்குப் பிடித்தமானதும், தொடுவதால் இன்பம் பயக்கக் கூடியதுமான முத்து, மணி, வைடூரியம், மரகதமணி, புஷ்பராகம், சங்கு, பத்மராகம், சந்திர காந்தக்கல் இவற்றால் செய்த பளபளவென்று ஒளிவீசும் மணி மாலைகளையும் சாமரங்களால் அசைகின்ற தாமரை மலர், கரு நெய்தல், வாழை இலை, புதிதான இருவாக்ஷி, குறுக்கத்திமலர், ஜாதி மல்லி போன்ற பலவித மணம்வீசும் மலர்களைக் கொண்டு தொடுத்த மாலையையும் மார்பில் அணிய வேண்டும்.

அடிக்கடி மேன்மையான செஞ்சந்தனம், ஞாழல், மலய மலையில் உண்டான சந்தனம், தாமரைத்தண்டு, பச்ச கற்பூரம் முதலியவற்றின் சேர்க்கையினால் மணம் வீசும், குளிர்ச்சி பொருந்திய, மிகத் தெளிவான நீர் இவற்றாலும், தாமரை அல்லி, ஆம்பல் இவற்றாலும், பித்த நோய் உள்ளவன் தங்கியிருக்கும் அறையின் தரையிலும், கதவுகளிலும், சன்னல்களிலும், மாடியிலும், சுவற்றிலும் தெளிக்க வேண்டும்.

காதிற்கு இனிமையாகவும், மிருதுவாகவும், மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடியதுமான இன்னிசை, பொன்மொழிகள் இவற்றையும் கேட்க வேண்டும்.

தனக்கு ஏற்ற நண்பர்களுடன் கூடியிருக்க வேண்டும். அமுதத்திற்கு ஒப்பாகப் பேசுகிறவர்களும், இயற்கையாகவே விளையாட்டுத் தன்மையுடையவர்களும், மணம் வீசும் முகம் உடையவர்களும், குண்டலம் அசைந்தாடும் காதுகளையுடையவர்களும், இயற்கையாகவே இனிமையாகப் பேசுகின்றவர்களும் மழலைச் சொற்கள் பேசுகின்றவர்களும், அன்பு உடையவர்களுமான குழந்தைகளை அன்புடன் அணைத்துக் கொள்ள வேண்டும்.

மிக்க மெல்லிய, அழகான மணம் வீசும் ஆடை அணிந்து, மல்லிகை மொட்டுப் போன்ற முத்துக்களால் ஆக்கிய அணிகலன்களைப் புனைந்து, தன் பேடையின் இனிமையான குரலைக் கேட்பதில் ஆர்வமுள்ள அன்னப்பறவை, பேடையைப் பின் தொடர்வது போல, காலின் சதங்கை, இடுப்பின் ஒட்டியாணம் இவற்றில் அசைந்தாடும் மணிகளின் ஓசை முன் ஒலிக்க, பின்செல்லும், இனிமையான, மயக்கும் மிருதுவான சொற்கள், நன்கமைந்த அழகான பின்தட்டு உடையவளும், நெருக்கமான மார்பகத்தின் சுமையாலும் அதன்மேல் அணிந்து கொண்டிருக்கும் அணிகலன்களின் சுமையாற் பெருமூச்சு விடுகிறவளும், பாதி மூடிய அழகான கண்களை உடையவளும், யௌவனப் பருவத்தை எட்டிப் பிடித்தவளும், காதலனைத் தழுவிக் கொள்வதால் தோன்றும் மகிழ்ச்சியால், இடை, ஆடை தளர, வெட்கம், கவர்ச்சி, திறமை, பயம், மகிழ்ச்சி, வருத்தம், ஆச்சரியம், புன்சிரிப்பு, கோபம், அமைதி இவை ஒரே சமயத்தில் தோன்றியதாலும், உடல் முழுவதும் சிலிர்ப்பதனாலும், நிறம் மாறியவளும், தொடுவதினால் இன்பத்தைப் பெருக்கக்கூடியவளும், பார்ப்பதனால் இதயம் தளரச் செய்பவளும், மெலிந்த உடற்கட்டு அமைந்திருப்பதால் மன்மதனின் படை போலும், காமதேவனின் வலிமை பெற்றவளும், மனதை மயக்கும் சேஷ்டைகள் புரிகிறவளுமான பெண்ணை அணைத்துக் கொள்ள வேண்டும்.

நிலா வீசும் குளிர்ந்த தரை, நீர் விளையாட்டு விளையாடக்கூடிய குளக்கரை என இவற்றில் உலாவ வேண்டும்.

வெண்ணிறமான கொழுந்து மணல் பரப்புடைய, உலவுவதற்குத் தகுந்த தரையுடையதும், பலவித உருவங்களாலான யந்திரங்களால் அமைக்கப்பட்டதுமான நீர்வீழ்ச்சிகளால் சூழப்பட்ட வீடுகளில் தங்கியிருத்தல் வேண்டும்.

கடல்போல் ஒலி எழுப்பும், நீர் நிறைந்த குளக்கரையில், முளைத்துப் பூத்துக் குலுங்கி வானளாவி நிற்கும் பலவித மரங்களின் நெருக்கமான நிழலில் அமர வேண்டும்.

வெண்மை, சிவப்பு, நீலம் இந்த நிறமுடைய தாமரைத் தாதுக்கள் நிறைந்த, நீர் நிரம்பிய குளக்கரையில், அசைந் தாடும் வண்டுகள் மொய்ப்பதும், தாமரை மலராகிய பாத் திரத்தில் விழும் பனித்துளிகள், துள்ளி விழும் நீர்ப் பெருக் கினால் மணம் வீசும் மண் மணம் உள்ளதும், நாவல், மா, கடம்பம், மூங்கில், நொச்சி இவற்றின் தழைகள், பழக் கொத்துகள் இவற்றால் செய்ததுமான ஓலைவேய்ந்த குடிசை யில் வசிக்க வேண்டும்.

அடிக்கடி சந்தன நீர் தெளிப்பதால் உண்டாகும் மணத் துடன், துள்ளிவிழும் நீர்த்திவலைகள், தரையில் விழுந்தும் முத்துப்போல் பளபளக்கும் நீர்த்துளிகள், வானளாவி நிற்ப தும், தங்கு தடையின்றி காற்று வீசுவதும், இடைவிடாமல் நீர் தெளிப்பதனால் குளிர்ந்ததும், தாபத்தைத் தணிப்பதும், மோகம், களைப்பு, வறட்சி இவை நீங்கியதால், கண்கொள்ளா அழகு, குளிர்ச்சி இவற்றால் இமயமலையுடன் போட்டியிடு வதும், மழைக்கால விளையாட்டையும், அவமதிக்கக்கூடியது மான வீட்டில் வசிக்க வேண்டும்.

மலர்ந்த தாமரை, நீலோத்பலம், வெண்தாமரை, செங் கழுநீர்மலர், செந்நெய்தல், ரோஜா இவற்றின் தாதுக்களி னால் சிவந்த, நீர் வாழும் புள்ளினக் கூட்டங்களின் இனிய ஒலியால் அழகான இடமுடைய குளங்களிலும்,

தேனைப்பருகும் பேராசையால் மறைந்து கிடக்கும் வண்டுகள் அசைந்தாடுவதால், கொடிகளிலிருந்து உதிர்ந்த மலர்களால் ஆக்கப்பட்ட படுக்கை, இன்பக்காற்றுவீசும் தோட் டங்கள் இவற்றைப் பயன்படுத்தி பித்தத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக நெய் அருந்துவது, மலம் கழித்தல், மனதிற்கு இன்பம் தரும் பொருட்கள், கிரீஷ்மருது (ஆனி—ஆடி மாதங் கள்)வில் கடைபிடிக்க வேண்டிய முறைகள் ஆகியவற்றைக் கடைபிடித்து பகலில் தூங்காமல் இருந்து பித்தத்தைத் தணித்துக்கொள்ளலாம். (4)

3. கபத்திற்குப் பொதுவான சிகிச்சை முறை

கபத்தைத் தணிக்கச் செய்ய மருத்துவநூலில் கூறியுள்ள தீக்ஷ்ணப் பொருட்களால் வாந்தி எடுக்கச் செய்யவேண்டும். வறட்சியளிப்பதும், கார்ப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவை உள்ளதும், தீக்ஷ்ணமானதும், பழமையானதும், இதயத்திற்கு நன்மை பயக்கக் கூடியதுமான உணவு வகைகளையும், மது வகைகளையும் உண்ணவும், பருகவும் செய்யவேண்டும்.

ஓடுதல், தாவுதல், நீந்துதல், விழித்திருத்தல், குஸ்தி சண்டையிடுதல், புணருதல், உடற்பயிற்சி செய்தல், வறட்சியுண்டாக்கும் பொருட்களால் உடலில் தேய்த்தல் ஆகிய முறைகளைச் செய்ய வேண்டும்.

வறட்சியான இடம், வறட்சித்தன்மை கொடுக்கக்கூடிய போர்வை இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக தேன், கஞ்சி, வாந்தி செய்வித்தல், முழுப் பட்டினி இருத்தல், புகைபிடித்தல், தீக்ஷ்ணப் பொருட்களால் ஆன திரவங்களால் வாய் கொப்பளித்தல், உடலுக்கு சுகமளிக்கும் செயல்களைவிட்டு கொழுப்பைப் போக்கி இன்பம் பெறுதல், வசந்தருது (சித்திரை, வைகாசி மாதங்கள்)வில் கடைபிடிக்க வேண்டிய முறையைப் பின்பற்றுதல் என இவை யாவும் கபதோஷத்தை நீக்கக்கூடிய செயல் முறைகள்.

ஒவ்வொரு தோஷத்திற்கும் தனித்தனியாகக் கூறியுள்ள சிகிச்சையை, இரண்டு தோஷங்களின் கூட்டிலும், மூன்று தோஷங்களின் சேர்க்கையிலும், அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை முறையை ஊகித்து அறிந்துகொள்ள வேண்டும்.

வாதம், பித்தம் இரண்டும் சேர்ந்திருக்கும் தோஷத்தில் கிரீஷ்ம ருதுவில் (ஆனி, ஆடி மாதங்கள்) செய்யக்கூடிய குளிர்ச்சியான சிகிச்சை முறையைக் கையாள வேண்டும்.

கபம்—வாதம் இவ்விரண்டு தோஷங்களின் கலப்பில், வசந்தருதுவில்—(சித்திரை, வைகாசி) செய்ய வேண்டிய வறட்சியுண்டாக்கும் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

வாதம் யோகவாஹி எனும் குணமுடையது. அதாவது வாதம் எந்த தோஷத்துடன் சேர்கிறதோ அந்த தோஷத்தின் தன்மையைப் பெற்று தன் தனித்தன்மையை விட்டுவிடுவதால் அதனுடன் கூடியிருக்கும் தோஷத்திற்கு சிகிச்சை செய்ய வேண்டும் என்பது பொருள்.

கபம், பித்தம் இவ்விரண்டு தோஷங்களும் சேர்ந்திருந்தால், சரத்ருதுவில் (ஐப்பசி—கார்த்திகை) கடைபிடிக்க வேண்டிய முறையைக் கையாள வேண்டும்.

வாதம், சீற்றம் பெற்றிருந்தால் உப்பு, புளிப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

பித்தம் சீற்றமடைந்திருந்தால் முதலில் கைப்பு, பிறகு இனிப்பு, பின் துவர்ப்பு இச்சுவையுள்ள பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

கபம் சீற்றமடைந்திருந்தால் முதலில் கார்ப்பு, பிறகு கைப்பு, பிறகு துவர்ப்பு இச்சுவையுள்ள பொருட்களைச் சேர்த்து உபயோகப்படுத்த வேண்டும். *(5— 8)*

4. தோஷங்கள் குவிதல், சீற்றமடைதல், தணிதல் இவற்றின் காலம்

வாதம் கிரீஷ்மருதுவில் (ஆனி—ஆடி) ஒரே இடத்தில் குவிகிறது. மழைக்காலத்தில் (ஆவணி—புரட்டாசி) சீற்றமடைகிறது. சரத்ருதுவில் (ஐப்பசி—கார்த்திகை) தணிகிறது.

பித்தம் மழைக்காலத்தில் (ஆவணி—புரட்டாசி) அதன் இடத்தில் குவிகிறது. சரத்ருதுவில் (ஐப்பசி—கார்த்திகை) சீற்றமடைகிறது. ஹேமந்தருதுவில் (மார்கழி—தை) தணிவடைகிறது.

கபம் சிசிர ருதுவில் (மாசி, பங்குனி) குவிந்து, வசந்த ருதுவில் (சித்திரை, வைகாசி) சீற்றம் பெற்று, கிரீஷ்ம ருதுவில் (ஆனி, ஆடி) தணிவடைகிறது. *(9)*

கிரீஷ்ம ருதுவில் (ஆனி, ஆடி) மூலிகைகள் வறட்சித் தன்மையும், இலகு குணமும் உடையதாயிருப்பதாலும் உடலும் உணவும் அவ்வாறே அமைவதாலும், வாதம் அதனிடத்தில் குவிகிறது. சீற்றமடைவதில்லை. இயற்கையாக காலம் உஷ்ணமாக இருப்பதே அதற்குக் காரணமாகும்.

அவ்வாறே நீரும், மூலிகைகளும் மழைக்காலத்தில் (ஆவணி, புரட்டாசி) புளிப்புச் சுவை பெறுவதால் பித்தம் குவிதலடைகிறது. இயற்கையாக குளுமையான காலத்தில் பித்தம் சீற்றமடைவதில்லை.

சிசிர ருதுவில் (மாசி, பங்குனி) நீரும் மூலிகைகளும் எப்பொழுதும் ஈரத்தன்மை பெற்றிருப்பதால் கபம் குவிதலடை

கிறது. இயற்கையாகவே காலமும், உடலும் கபத்திற்குச் சமமான குணங்களைக் குளிர்ச்சியாயிருந்தாலும், அதிகக் குளிர்ச்சியால் கபம் உறைந்துவிடுகிறது. அதனுல் கபம் சீற்றமடைகிறதில்லை. இது காலத்தின் இயற்கைக் கோலம்.

காலத்தைக் காட்டிலும் உணவு வகையினால் தோஷங்கள் உடனடியாகவே குவிதல், சீற்றமடைதல், தணிதல் இவற்றை அடைகின்றன. உடனே உள்ளங்கால் முதல் உச்சித் தலை வரையிலும் பரவுகின்றன.

மழையினால் ஏரியில் விரைவில் நிரம்பியுள்ள நீர் கதிரவனின் உஷ்ணத்தினால் சிறிது சிறிதாகக் குறைவதுபோல் உடல் முழுவதும் பரவியுள்ள தோஷங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுகின்றன. (10—15)

எனவே தோஷங்கள் குவிதல் அடைந்திருக்கும்பொழுதே சிகிச்சை செய்ய வேண்டும். அவை சீற்றமடைந்திருந்தால் மற்ற தோஷங்களினால் இடையூறு ஏற்படாமல் சிகிச்சை செய்ய வேண்டும்.

எல்லா தோஷங்களும் சீற்றம் பெற்றிருக்கும் நிலையில் அதிக அளவு சீற்றமடைந்துள்ள தோஷத்திற்கு, மற்ற தோஷங்களுக்கு விரோதமில்லாமல் முதலில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

ஒரே சமயத்தில் தோஷங்கள் ஒரே அளவில் சீற்றமடைந்திருந்தால் முறையே வாதத்திற்கும், பித்தத்திற்கும், கபத்திற்கும் சிகிச்சை செய்ய வேண்டும். அதற்குக் காரணம் இயற்கையாக கபத்தைக் காட்டிலும் பித்தம் வலுவுள்ளது. பித்தத்தைவிட வாதம் வலிமை பெற்றிருக்கிறது. (16)

இக்கருத்தையே பராசர முனிவரும் வலியுறுத்துகிறார். படைத் தலைவன் இறந்துவிட்டால் படை தோல்வி அடைவதுபோல் வாதம் தணிந்தவுடன் பித்தமும் கபமும் தாமாகவே தணிந்து விடுகின்றன. (17—18)

5- தோஷங்களின் உறைவிடங்களையொட்டி சிகிச்சை

(அ) உடலின் முக்கியப் பகுதி தலை. அதை முக்கியமாக வைத்துக் கொண்டு முதலில் கபத்திற்குச் சிகிச்சை செய்ய வேண்டும். ஏனென்றால் கபம், தலை, தொண்டை, மார்பில் சூழ்ந்திருக்கிறது. அதனால் உணவில் சுவை ஏற்படாது. பிறகு உணவு

அருந்த விருப்பம் தோன்றாது. அதனால் தோஷங்களை எப்படி நீக்க முடியும்? கபம்தான் உடலில் உள்ள துவாரங் களுக்குத் தாழ்ப்பாள் போல் அமைந்துள்ளது. எனவே சீற்ற மடைந்த கபத்தை முதலில் நீக்க வேண்டும். கபத்தை நீக்கி னால்தான் உடல் வேலை செய்யும். முதலில் கபத்தை நீக்கி உடலின் நடுப்பகுதியில் உள்ளதும், விரைவில் செயல்படுவதும், வாதத்திற்குத் தோழனுமான பித்தத்தைத் தணிக்கச் செய்ய வேண்டும். பிறகு வாதத்தைத் தணிக்கச் செய்ய வேண்டும் என சில ஆசிரியர் கூறுகின்றனர்.

(ஆ) மற்றும் சிலர், முதலில் பித்தம், பிறகு வாதம், முடிவில் கபம் (பித்த—வாத—கபம்) என்று வரிசைப்படுத்தி முறையே சிகிச்சை செய்ய வேண்டும் என்கின்றனர்.

(19—22)

6. ஸுச்ருதர் கருத்து

(அ) மேற்கண்ட பித்த வாத கபம் என்ற முறை எல்லா இடங்களிலும் பொருந்தாது என்கிறார் ஸுச்ருதர். காய்ச்சல், கழிச்சல் இந்நோய்களில் முதலில் பித்தத்தையும், பிறகு கபத் தையும், கடைசியாக வாதத்தையும் தணிக்க வேண்டும். எல்லா வகைக் காய்ச்சலிலும், சூடு முதலில் ஏற்படுவதால் பித்தம் அதிகமாகிறது.

கழிச்சலில் பித்தத்தின் காரணமாகவே மலப்போக்கு ஏற் படுகிறது. மலப்பை மிருதுவாகிவிடுகிறது.

இந்தப் பித்தத்தின் உதவியாளனான கபம் தோன்றுவ தால் உடலில் பளு, உணவு சீரணிக்காமை, சுறுசுறுப்பின்மை ஏற்படுகின்றன.

''பித்தமும் கபமும் தணிந்தபின் வாயு வளர்ச்சி பெறு கிறது. ஆகையால் வாதத்தைத் தணிக்கச் செய்யவேண்டும். அதனால் பித்த வாத கபம் என்னும் முறை சரியாகாது'' என்பது சுச்ருதர் கருத்து. *(23—25)*

(ஆ) மற்றும் சிலர் தோஷங்களைத் தணிக்கும் முறையில் காய்ச்சல், கழிச்சல் நோய்களிலும் முதலில் கபத்தையும், பிறகு பித்தத்தையும், கடைசியாக வாதத்தையும் தணிக்கச் செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடில், பித்தத்தினாலும் கபத்தி னாலும், காய்ச்சலும், கழிச்சலும் மேலும் அதிகமாகிவிடும். ஏனென்றால் பித்தம் இரைப்பையில் நீரைச் சுரக்கச் செய்து

தோஷத்தைக் கிளப்பிவிடுவதால், பித்தத்தைத் தணிப்பதற்காகக் கொடுக்கப்படும் குளிர்ச்சியான மருந்து, கபத்தை அதிகப்படுத்தி இரைப்பையை அதிகம் துன்புறுத்தும். அதனால் இந்த காய்ச்சல், கழிச்சல் இவற்றினால் வளர்ந்துள்ள தோஷங்களை அவை தங்கள் இடத்திலிருக்கும்போது முறையாக முதலில் கபத்தையும், பிறகு பித்தத்தையும், கடைசியாக வாதத்தையும் தணிக்கச் செய்ய வேண்டும்.

தன்னுடைய இடத்தில் சீற்றமடைந்த தோஷங்கள், விரைவில் செய்கைகளைச் செய்யும் பலத்தை அதிகம் பெற்றிருக்கிறது.

தோஷங்களுடைய செயல்களின் பலத்திற்குத் தக்கவாறு, தோஷங்களின் வளர்ச்சியை அறிந்து பலமடைந்த தோஷத்திற்கு ஏற்றவாறு முதலில் மருந்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஏதாவது ஒரு முறைதான் சிறந்தது என்று திட்டவட்டமாகக் கைக்கொள்ளக்கூடாது.

குறிப்பிட்ட நோய்க்குச் செய்யும் சிகிச்சை அந்த நோயைத் தணிக்கச் செய்வதுடன் மற்றொரு நோயை உண்டாக்கி விட்டால், அது சரியான முறை அல்ல. எவ்வித சிகிச்சை அதற்குண்டான நோயை விலக்கி மற்ற நோய்களையும் வராமல் தடுக்கிறதோ அதுவே சிறந்த சிகிச்சை முறையாகும்.

(26—29)

ஒரு தோஷம் சீற்றமடைந்து மற்ற இரு தோஷங்கள் சமநிலையில் இருந்தால் அவை சீற்றமடைந்த தோஷத்தைத் தணிக்கச் செய்யும் சக்தியற்றவை.

தோஷங்கள் சமமாக இருந்தபோதிலும், அவை இயற்கையாகவே தோஷத்தை உண்டுபண்ணும் தன்மையையே பெற்றிருப்பதால், சீற்றமடைந்த தோஷத்தைத் தணிக்கவல்லதல்ல. அவற்றிற்குள் ஒன்றுக்கொன்று தணிக்கும் குணம் இயற்கையாகவே கிடையாது.

தோஷங்களுக்குக் கெடுதலை விளைவிக்கும் தன்மை இயற்கை. தோஷங்கள் குளிர்ச்சி, திரவம், புளிப்புச்சுவை, உப்புச்சுவை, கார்ப்புச்சுவை, போன்ற குணங்கள் இவை எல்லாம் ஒன்றுக்கொன்று சமானமான குணங்கள் பெற்றிருக்கின்றன. ஆகையால் ஒரு தோஷம் மற்றொரு தோஷத்தைப் போக்குகிறதில்லை. உதாரணமாக, வாதம், கபம் இரண்டு

தோஷங்களும் சீத குணம் உள்ளவை. வாதத்தை வளர்க்கிற சீதகுணம் கபத்தையும் வளர்க்கிறது.

திரவம் கபத்திற்குக் காரணமாவதுடன் பித்தத்தையும் தோற்றுவிக்கிறது. புளிப்பு, உப்பு, கார்ப்புச் சுவையுள்ள பொருட்கள் வாதத்திற்கும், பித்தத்திற்கும் காரணமாகின்றன.

ஆகையால் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாக இருந்தபோதிலும் ஒரே காலத்தில் உலகைப் படைப்பதற்கு மூலகாரணமாக ஆவதுபோல் தோஷங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாக இருந்தாலும், அவை ஒன்றன் சீற்றத்தை மற்றொன்று தணிக்கும் சக்தியுடையனவல்ல. *(30—32)*

7. சீரணமாகாத உணவுடன் சேர்ந்த தோஷங்களின் அறிகுறிகள்

வாதம் சீரணமாகாத உணவுடன் சேர்ந்திருந்தால் வயிற்றில் வலி, வயிற்று உப்புசம் ஏற்படும். வாதம் அசைவற்றிருக்கும்.

பித்தம் சீரணமாகாத உணவுடன் சேர்ந்திருந்தால் உணவில் கெட்ட நாற்றத்தை உண்டுபண்ணும். எரிச்சலுடன் கூடிய ஏப்பம் ஏற்படும். குழகுழப்பும், பளுவும் உண்டாகும்.

கபம் சீரணமாகாத உணவுடன் கலந்திருந்தால், உணவு அழுக்கடைந்தும், நூல் போன்றும், கெட்டியாகவும், பிசுபிசுப்பாகவும், ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையதாகவுமிருக்கும்.

வாதம் சீரணமான உணவுடன் கலந்திருந்தால், சீரணமாகாத உணவுடன் வாதம் சேர்ந்திருப்பதால் உண்டாகும் வாதத்திற்கு எதிரிடையான அறிகுறிகள் தென்படும்.

பித்தம் சீரணமான உணவுடன் சேர்ந்திருந்தால் உணவு செப்பு நிறமாகவும் பல நிறங்களுடன் மஞ்சள் நிறமாகவும் ஆகிறது.

கபம் சீரணமான உணவுடன் சேர்ந்திருந்தால் உணவு சுத்தமாகவும், கெட்டியாகவும், தெளிவாகவும், நுரையுடன் கூடியதாகவும், வெண்மை நிறமுள்ளதாகவும், இனிப்புச்சுவை உடையதாகவும் இருக்கும். *(33—35)*

8. உணவு சீரணமாகாமையின் அறிகுறிகள்

சடராக்னிக் குறைவினால், இரைப்பையில் உணவும், உணவின் முதல் தாதுவான ரசம் முழுவதும் சீரணமாவதில்லை. சீர்கேடடைந்த இந்த ரசம் இரைப்பையையும், மற்ற தாதுக்களையும் அடையும்பொழுது அந்த ரசத்தை ஆமம் என்கிறோம்.

ஆமத்தின் தோற்றத்தை வேறு விதமாகக் கூறுகிறார்கள். பல்வேறு காரணங்களால் அதிகம் கேடடைந்த வாதம் முதலான தோஷங்கள் உடலில் ஒன்றுக்கொன்று சேருவதனால் இவைகளிலிருந்தே இடம், காலம் இவற்றினால் கேழ்வரகு தானியத்தில் நஞ்சு தோன்றுவதுபோல் ஆமம் தோன்றுகிறது. இந்த ஆமதோஷத்தினால் கேடடைந்த வாதம் முதலான தோஷங்கள், இரத்தம் போன்ற தூஷ்யங்கள் ஆகியவை ஆமத்துடன் கலந்து இந்த ஆமத்துடன் சேர்வதனால் உண்டாகும் நோயை ஸாமம் என்கிறோம்.

(36—37)

இவ்வாறு ஆம தோஷத்துடன் கலந்த தோஷங்கள் ரசம் முதலான தாதுக்களில் உள்ளடங்கி உடல் முழுவதும் பரவி நெகிழ்ச்சிபெறும் நிலையில் அப்படியே சோதநங்களால் அவைகளை வெளிப்படுத்தக்கூடாது. இதனுல் பழுக்காத காயைப் பிழிவதனால் சாறு வெளிப்படாததுடன் அதற்கு அழிவும் ஏற்படுவதுபோல் தோஷங்களும் வெளியேற்றப்படாமல் தோஷங்களுக்கு ஆதாரமான தாதுக்களும் அதன்மூலம் உடலும் அழிந்துவிடும்.

ஆகையினால் ஆமத்துடன் கலந்த தோஷங்களைச் சீரணிக்கச் செய்தல், சடராக்னியை வளர்த்தல், தீக்ஷ்ண உஷ்ண குணமுடைய மருந்துகளால் தயாரித்த எண்ணெய் வகை வியர்வைச் சிகிச்சை இவற்றால் ஆமத்தை சீரணிக்கச் செய்து அதாவது ஆமதோஷமற்றதாகச் செய்து, அதை இளகச் செய்து தோஷத்தின் பலத்திற்குத் தகுந்தவாறு அவை உடலில் முகம் அல்லது ஆசனவாய் முதலான துவாரங்கள் இவைகளில் எதற்கருகில் உள்ளதோ அவற்றின் மூலமாக முறையாக வாந்தி எடுக்கவும், மலம் கழிக்கவும் மருந்து கொடுத்து தோஷங்களை வெளிப்படுத்த வேண்டும். (38—40)

வாயில் இடப்பட்ட வாந்தி செய்விக்கும் மருந்து இரைப்பையில் உள்ள தோஷங்களை விரைவில் வெளிப்படுத்துகிறது.

மூக்கின் வழியாக இடப்பட்ட மருந்து கழுத்துக்குமேல் உள்ள உறுப்புகளில் உள்ள தோஷங்களை வெளிக் கொண்டு வருகிறது.

ஆசனவாயினால் செலுத்தப்பட்ட வஸ்தி போன்ற மருந்து சீரணப்பையிலுள்ள தோஷங்களை விரைவில் வெளிப்படுத்துகிறது. (41)

வாய் வழியாகவோ, மூக்கின் வழியாகவோ, ஆசனவாய் வழியாகவோ, தானாகவோ வெளிக் கிளம்பிச் செல்லுகிற ஆமதோஷங்களை மருந்து கொடுத்து தடுக்கக்கூடாது.—'ரோகானுத்பாதநீயம்' எனும் ஐந்தாவது அத்தியாயத்தில் கூறிய அதிகப் பருமன் போன்ற நோய்களை அது தோற்றுவிக்கும்.

தானாக வெளிக் கிளம்பிய தோஷங்களை முதலில் பொருட்படுத்தக்கூடாது. பிணியாளிக்கு தோஷங்களுக்கு ஏற்றவாறு உணவு வகைகளை அளித்து ஆமதோஷம் வெளியேறும் வரை தடை மருந்தைக் கொடுக்கக் கூடாது.

தோஷங்கள் சிறிதளவு வெளிப்பட்டபின் சீரணமளிக்கக் கூடிய அந்தந்தப் பொருட்களால் சீரணமடையச் செய்வதையோ, தோஷங்களை வெளிப்படுத்துவதையோ செய்ய வேண்டும். (42—43)

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில்
'தோஷோபக்ரமணீயம்' எனும்
இருபத்தொன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது அத்தியாயம்

*ரோகபேதீயம்

''ரோகபேதீயம்'' என்னும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். *(1–2)*

பிறவியிலேயே ஏற்படுவது, கருவில் ஏற்படுவது, பிறந்த பின் ஏற்படுவது, காயம் போன்றவற்றால் தோன்றுவது, பருவங்களால் உண்டாவது, தெய்வக்குற்றம், ஆசிரியரின் புன்மொழி இவற்றால் விளைவது, பசி, தாகம் போன்ற இயற்கைக் குணங்களால் ஏற்படுவது என பிணி ஏழு வகைப்படும். அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக இருவகைப்படும்.

1. அ. பிறவிலேயே ஏற்படும் நோய்கள்

சுக்ரம் (ஆண் விந்து) சோணிதம் – (பெண் விந்து) இவற்றின் தோஷங்களால் ஏற்படக்கூடிய நோய்கள், குஷ்டம், மூலநோய், நீரிழிவு போன்றவைகளாகும்.

ஆ. கருவளர்ச்சியில் ஏற்படும் நோய்கள்

தாய் கருவுற்றிருக்கும்பொழுது உண்ணும் தவறான உணவினாலும் நடவடிக்கையினாலும் உடல் ஊனமுற்றல், நொண்டி, நிறமாற்றம், வெண்குஷ்டம் போன்ற பிணிகள் தோன்றுகின்றன. உணவினால் ஏற்படும் ரசக்கோளாறும், கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் தாயின் மனக்குறையும் இதற்குக் காரணமாகும்.

இ. பிறந்தபின் ஏற்படும் நோய்கள்

குழந்தை பிறந்தபின் அதன் உடலுக்கும் உள்ளத்திற்கும் உவகையூட்டும் தகாத உணவாலும் அதற்குத் துன்பம் விளைவிக்கும் செயலாலும் நோய்கள் தோன்றுகின்றன. [1]ஸந்தர்ப்பணம் [2]அபதர்ப்பணம் என இரண்டும் அதற்குக் காரணம்.

---

*ரோகபேதீயம் — நோய்களுக்குள் ஒன்றுக்கொன்றுள்ள வேற்றுமைகளைக் கூறுவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. ஸந்தர்ப்பணம்—உடலுக்கும் மனதிற்கும் உவகை அளிப்பதும் உடல் வளர்ச்சிக்கும் காரணமானஉணவு முதலியன.
2. அபதர்ப்பணம்—உடல் வளர்ச்சிக் குறைவுக்கு காரணமான உணவு, செயல்கள் முதலியன.

ஈ. காயம் போன்றவற்றால் ஏற்படும் நோய்கள்

இந்நோய்கள் அடிபடுதல், எலும்பு முறிதல் போன்ற உடல் சிதைவு ஏற்படுதல் ஒருவகை. சினம், துன்பம், பயம் போன்றவை மனதில் தோன்றுவன என இருவகைப்படும்.

உ. பருவங்களால் ஏற்படும் நோய்கள்

பருவக் கோளாற்றினால் ஏற்படும் காய்ச்சல், கழிச்சல் போன்றவை ஒரு வகை. காற்று, நீர், கேடடைந்த உணவு வகைகளின் உபயோகத்தினால் ஏற்படுபவை. இவை இரண்டாவது வகையைச் சேர்ந்தவை. தவிர்க்க முடியாதவைகளாகவும் ஆகும்.

ஊ. தெய்வக்குற்றம், ஆசிரியரின் புன்மொழி இவற்றால் தோன்றும் நோய்கள்

தெய்வத்தின் கட்டளையை மீறுவதாலும், ஆசிரியரின் சாபத்தாலும் ஏற்பட்டது முதலாவது வகை. அதர்வண மறையில் கூறிய சூன்யம், ஏவல் இவற்றால் தோன்றும் காய்ச்சல், பிசாசு முதலியவற்றால் உண்டாகும் நோய்கள் இரண்டாவது வகை.

எ. பசி, தாகம் போன்ற இயற்கையினால் ஏற்படும் நோய்கள்

உடலை நன்கு காப்பாற்றியும் ஏற்படும் நோய், காலத்தினால் ஏற்படும் முதல் வகை நோய். உடலை நன்கு பேணாததினால் தோன்றும் நோய், காலத்தினாலல்லாது தான் செய்யும் குற்றங்களினுல் ஏற்படுவது இரண்டாவது வகை. (3)

2. நோயின் வகைகள்

மேற்கண்ட நோயின் ஏழு பிரிவுகளும் சுருக்கமாக மறுபடியும் இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

ஒன்று இவ்வுடலினால் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்டது. மற்றொன்று, முன் பிறவிகளில் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்டது. அறிந்தோ, அறியாமலோ நல்லோர் கட்டளையை மீறுவதாலும், அவர்களால் தடுக்கப்பட்ட செயல்களைச் செய்வதினாலும் ஏற்படும் நோய்கள் இவ்வுடலினால் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்படும் நோய்களெனக் கருதப்படும்.

முன்பிறவியில் செய்த வினைப்பயனால் ஏற்பட்ட நோய்கள் பற்றி 'விருத்தான்ன விஞ்ஞாநீயம்' எனும் ஒன்பதாம்

அத்தியாயத்தில் 'தைவம்' என்னும் பெயரால் நியதம், அநியதம் என விளக்கப்பட்டுள்ளன.

வெளிப்படையாகத் தெரியும் காரணங்களால் தோன்றும் நோய்கள் இவ்வுடலினால் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்டவை என்றும், காரணம் தெரியாமல் ஏற்படும் நோய்களை முன்பிறவிகளின் வினைப்பயனால் ஏற்பட்டவை எனவும் சுருக்கமாகத் தெளிவுற வேண்டும்.

சிறு காரணங்களால் மிகுந்த துன்பமுண்டாக்கும் நோய்கள், இப்பிறவியிலும், முற்பிறவிகளிலும் செய்யப்பட்ட வினைப் பயன்கள் இவை இரண்டின் சேர்க்கையால் உண்டானவை எனக் கண்டு கொள்ள வேண்டும். (4)

இவற்றில் இவ்வுடலினால் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்ட நோய்களின் காரணத்தை அறிந்து அதற்கு எதிரிடையானதும், நோய்க்கு எதிரிடையானதுமான சிகிச்சைகளைச் செய்வதால் தணிகின்றன. முன்பிறவிகளில் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்ட நோய்கள் சிகிச்சையினாலும், வினைப்பயன்கள் நீங்கச் செய்யும் செயல்களினாலும் தான் நீங்கும். (5)

இப்பிறவி, முற்பிறவி இவற்றின் வினைப்பயன்களாலும், இரண்டின் சேர்க்கையினாலும் தோன்றும் நோய்கள் சிகிச்சையாலும், வினைகள் நீங்குவதாலும் நீங்குகின்றன.

மற்றும் சிலர் பிறரால் செய்யப்பட்ட ஏவல், பில்லி சூன்யம் போன்றவற்றையும் இவ்வுடலினால் செய்யப்பட்ட வினைப்பயனால் ஏற்பட்டவை எனக் கூறுகின்றனர். தன் செய்கையினாலேயே எல்லாம் நடப்பதாயிருந்தால் அறிவாளி, பிறர் செய்த உதவியினால் மகிழவும், தீங்கினால் வருத்தமடைந்து அவர்களிடம் விரோதம் பாராட்டவும் மாட்டான் அல்லவா ?

ஆகையினால் இப்பிறவியில் இவ்வுடலினால் ஏற்பட்ட வினைப்பயன் காரணமாகத் தோன்றியவை, முன்பிறவிகளின் வினைப்பயன்களால் ஏற்பட்டவை என்று இருவகையினாலும், பிறர் செய்கையினுலும் ஏற்பட்டவை என்பதுடன் சேர்த்து நோய்களை மூவகையாகப் பிரிக்க வேண்டும் என்பது சிலர் கருத்து. (6)

வாதத்தினால் தோன்றியவை, பித்தத்தினால் தோன்றியவை, கபத்தினால் தோன்றியவை, வாதம்—பித்தம் இரண்டின் சேர்க்கையினால் ஏற்பட்டவை, வாதம்—கபம் இவற்றினால் தோன்றியவை; பித்தம்—கபம் இரண்டின் சேர்க்கையினால் தோன்றியவை; வாதம்—பித்தம்—கபம் இம்மூன்றின் சேர்க்கையினால் தோன்றியவை என தோஷங்கள் மூலம் ஏற்படும் நோய்கள் ஏழுவகையாகப் பிரிகின்றன. (7)

எல்லா நோய்களுக்கும் சிகிச்சை ஆயுர் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் கூறியவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். விதிவசமாக தக்க காரணத்தினால் ஏற்படுகிற நோயும் நீடித்த ஆயுள் உள்ளவனுக்கும் மருத்துவர் கூறியபடி நடப்பவனுக்கும் தீவிரமாக உண்டாவதில்லை. அப்படி உண்டானாலும் பொறுத்துக் கொள்ளும் நிலையில் ஏற்படுகிறது.

எந்த நோய்க்கும் சிகிச்சை செய்யாவிடில் அது நோயாளிக்கு மரணத்தை உண்டுபண்ணுகிறது. தெய்வாதீனமாக மிகக் குறைந்த காரணங்களினால் உண்டான நோய் துன்பத்தை அளிப்பதில்லை. தானுகவேகூடத் தணிந்துவிடுகிறது.

ஆயுர்வேத நூலில் கூறியபடி பதினாறு குணங்களுடன் கூடிய மருத்துவத்தால் சிகிச்சை செய்யப்பட்ட நோய் விரைவில் குணமடைகிறது.

தெய்வபலம் உள்ளவனுக்கு உடலுக்கு உகந்த இதமான உணவு செயல்முறைகளைக் கடைபிடிப்பதால் நோய் அவனை அணுகுவதற்கே சந்தர்ப்பமில்லாமல் போய்விடுகிறது.

ஆகையால் தன்னிறைவும், புலனடக்கமுமுள்ளவன் நன்மை தீமை பயக்கும் செயல்களை எப்பொழுதும் சமமான பலன்களையே தரவல்லது என்ற எண்ணம் உடையவனாக இருக்கக் கூடாது. அதனால் ஆரோக்கியமாக வாழ விரும்புபவன், அதற்கான முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். நோயுற்றிருக்கும் நிலையில் அதற்கான சிகிச்சைகளைச் செய்து கொள்ள வேண்டும். (8)

நோய்கள் குறைவானது, நடுத்தரமானது, அதிகமானது என மூவகைகளாகவும் பிரிக்கப்படுகின்றன.

முறையே நோய்க்குள்ள அறிகுறிகள் குறைந்த அளவில் காணப்பட்டால் அந்நோய் குறைவான பலமுள்ளது என்றும், நோய்க்குறிகள் குறைவாகவோ, அதிகமாகவோ இல்லாமல்

நடுத்தரமாக இருந்தால் அது நடுத்தரமான பலமுள்ளது என்றும், நோயின் அறிகுறிகள் அதிகம் காணப்பட்டால் அது அதிகமான பலம் பெற்றது என்றும் அறிய வேண்டும்.

எளிதில் சிகிச்சை செய்யக்கூடியவை, ஆயுதத்தினால் சிகிச்சை செய்ய வேண்டியவை, மருந்தை அளித்து காலம் கடத்தக்கூடியவை, சிகிச்சைக்கு அடங்காதவை என நோய்கள் நான்கு விதமாக முன்பே கூறப்பட்டுள்ளன.

நோய்களின் பலவிதப்பிரிவுகளும் நிஜம், ஆகந்துகம் என்ற இரு பிரிவுகளுக்குள்ளேயே அடங்கி விடுகின்றன.

நிஜம் என்பது உடலைப்பற்றிய வாதம் முதலிய தோஷங் களால் ஏற்படுபவை. அவற்றில் முதலில் வாத—பித்த—கபங்கள் கோளாறடைந்து பிறகு நோய்களை உண்டாக்குகின்றன.

வெளித்தாக்குதல் காரணங்களால் ஏற்படுபவை, 'ஆகந் துகம்' எனப் பெயர் கொண்டவை. அவற்றில் உடலில் நோய்கள் முன்புண்டாகி பிறகு தோஷங்கள் கோளாறடை கின்றன.

தோஷங்களின் கோளாறுகளினாலேயே பலவித நோய்கள் உண்டாகி வளர்கின்றன. அதனால் தோஷங்களில்லாமல் நோய்கள் தோன்றுவதில்லை என அறியவேண்டும். நிஜம், ஆகந்துகம் என்ற இரு வகைகளிலும் தோஷங்களின் சீற்றம் நோயின் முன்பின் ஏற்படுவதுதான் விசேஷம் என்பதே ஆகும். ஆகையினுல் நோய்கள் உடல்வலியுண்டாக்குதலிலும், தோற்ற மளிப்பதிலும் ஒரே வகையைச் சேர்ந்தவை.

அல்லது

நோயின் காரணம், இடம் (உடல்), லக்ஷணம் (அறிகுறி கள்), நிறம், பெயர், வேதனை, நோயின் சக்தி, சிகிச்சை இவற்றின் வேறுபாட்டினால் நோய்கள் பெருமளவில் கணக் கற்றவைகளாகப் பேசப்படுகின்றன.

இவற்றுள் மிக முக்கியமான நோய்கள் அந்தந்த இடங் களில் சொல்லப்படும். நுட்பமான நோய்கள் கணக்கிலடங் காதபடியால் அவைகளைப் பற்றிச் சொல்ல முடியாது. இந் நோய்களை வாதம் முதலான தோஷங்களின் அறிகுறிகளைக் கொண்டு பிரித்து, அவைகளுக்கு ஏற்றவாறு சிகிச்சையைப் பிரித்துக்கொள்ள வேண்டும். (9)

3. தோஷங்களே நோய்க்கு முக்கிய காரணம்

வாதம், பித்தம், கபம் என்ற இந்த தோஷங்கள்தான் எல்லா நோய்களுக்கும் காரணமாகும். பறவைகள், கடல், ஆறு, மலை போன்ற இடங்களிலும், நாற்புறங்களிலும், நாள் முழுவதும் பறந்தாலும் தன் நிழலைவிட்டுப் பிரிவதில்லை. இவ்வுலகில் உள்ள எல்லா மாறுபாடுகளும், உலகம் முழுவதும் பரவியிருந்த போதிலும் ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களை விட்டுப்பிரிவதில்லை.

அதுபோல் நோய் வகைகள் எல்லாம் வாதம்—பித்தம்—கபம் என்ற இம்மூன்று தோஷங்களிலிருந்து தனித்துப் பிரிவது கிடையாது.

வானத்தில் எப்பொழுதும் இருக்கும் மின்னல், மழை, வானவில் போன்றவை காரணமில்லாமல் வெளிப்படுவதில்லை. காரணம் ஏற்படும்போது அவசியம் வெளியில் தென்படுகின்றன.

நீரில் அலைகளும், குமிழ்களும் எப்பொழுதும் இருந்தாலும் காரணமில்லாமல் அவை வெளிப்படுவதில்லை. காரணமிருந்தால்தான் ஏற்படுகின்றன.

அதுபோல் உடலில் தோஷங்கள் எப்பொழுதும் கலந்து இருந்தாலும், காரணமில்லாமல் அவை நோய்களாக புலப்படுவதில்லை. (10)

நோய்களுக்கான காரணங்களை [1]அஸாத்ம்ய இந்திரியார்த்த ஸம்யோகம், [2]பிரக்ஞாபராதம், [3]பரிணாமம் என மூவகையாகப் பிரிக்கலாம். இம்மூன்றிலும் ஒவ்வொரு காரணமும் அதியோகம், அயோகம், மித்யாயோகம் என்ற பிரிவுகளால் மூவகையாகப் பிரிகின்றது.

---

1. அஸாத்ம்ய இந்திரியார்த்த ஸம்யோகம்— புலன்களுக்கொவ்வாத செயலில் புலப்பொருள்களை அனுபவிப்பதில் ஈடுபடுத்தல்.
2. பிரக்ஞாபராதம்—அறிவு, உணர்வு, நினைவு இவைகளின் நழுவலால் உடல், சொல், மனம் இவற்றால் செய்யப்படும் தீமை விளைவிக்கும் செயல்கள்.
3. பரிணாமம்—காலத்தினால் ஏற்படும் மாறுபாடு.

கண் முதலிய புலன்களுக்கு தங்கள் பொருட்களுடன் அதிக அளவில் (அல்லது) அதிக சக்திவாய்ந்த பொருள்களுடன் சேர்க்கையோ ஏற்பட்டால் அச்சேர்க்கை அதியோகமாகும்.

புலன்களுக்கும், பொருட்களுக்கும் சிறிதளவு சேர்க்கையோ, குன்றிய குணங்களுடைய பொருள்களின் சேர்க்கையோ அல்லது முற்றிலும் சேர்க்கையோ ஏற்படாவிட்டால் அது அயோகம் எனப்படும்.

மிகவும் நுட்பமானதோ, வெகுதொலைவிலோ, அருகில் உள்ளதோ, மிகவும் பளபளப்பான, மிகப்பயங்கரமான, வெறுபபான, விகாரமுள்ள பொருட்களைப் பார்ப்பதோ முதலியன கண்களின் மித்யாயோகமாகும்.

வெறுக்கப்பட்ட ஒலி, மிக உறத்த ஒலி, பயங்கரமான ஒலி, பயமுறுத்துகின்ற சொற்களைக் கேட்பது காதுகளின் மித்யாயோகம் எனப்படும்.

துர்நாற்றமுள்ள, தூய்மையற்ற, மிக தீக்ஷ்ணமாயும், உக்ரமாயும் மனதிற்குப் பிடிக்காததுமான மணத்தை நுகர்வது மூக்கின் மித்யாயோகமாகும்.

இயற்கை, சேர்க்கை, எண்ணம், பாத்திரம், அளவு போன்ற உணவுகளின், உடலுக்கு ஒவ்வாத பற்பலவிதமான கற்பனையும், எதிரிடையான சுவையுள்ள பொருட்களை உண்பதும் நாக்கின் மித்யாயோகம் எனப்படும்.

அதிகநேரம் நீரில் நீராடல், மிகுந்த குளிர்ச்சி, உஷ்ணம் உள்ள பொருட்களைத் தொடுவது, பொருட்களை நன்கு பயன்படுத்தாதது, தூய்மையற்ற காற்று, வஸ்துக்களால் தொடுதல், பூதங்களால் தாக்குதல், நஞ்சு கலந்த காற்று இவற்றின் தொடுதல் சர்மத்தின் மித்யாயோகம் எனப்படும். (11)

அறிவு, உணர்வு, நினைவு இவை நழுவுவதால் ஏற்படும் உடல், சொல், மனம் இவைகளால் செய்யப்படும் பலவகையான தீமை விளைவிக்கக் கூடியதுமான செயல்கள் பிரக்ஞாபராதமாகும்.

இவற்றின் உடல், சொல், செயல் இவற்றால் அதிக வேலை செய்வது இவற்றின் அதியோகமாகும்.

சிறிதளவு அல்லது எல்லா வகையிலும் செய்யாமலிருத்தல் இவற்றின் அயோகமாகும்.

மலம், சிறுநீர், முதலான இயற்கை வேகத்தைத் தடுப்பது, தகாதமுறையில் நிமிர்தல், குனிதல் போன்ற உடல்நல விரோதமான செயல்களைச் செய்வது, வழுக்கி விழுவது, சொறிவது, காயம்படுவது, முறையில்லாமல் மூச்சை அடக்குவது, பிராணாயாமம் செய்வது, பசி, தாகங்களை அடக்குவது, பாதி உண்கிறபொழுது பேசுவது, பயம், வருத்தம், அசூயைப்படுதல், பொறாமைப்படுதல் போன்ற பத்து வகையான தகாத செயல்கள் முறையே உடல், சொல், மனம் இவற்றின் மித்யாயோகங்கள் எனப்படும். *(12)*

இயற்கையின் மாறுபாடு காலம் எனப்படுகிறது. அதாவது காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. இந்த மாற்றம், குளிர்ச்சி, உஷ்ணம், மழை என்ற மூவகையுடையது.

இவற்றில் தன் இயற்கையான அறிகுறிகளைக் காட்டிலும் அதிக அளவில் அறிகுறிகள் இருப்பது காலத்தின் அதியோகமாகும்.

தனது லக்ஷணங்களுக்குக் குறைவானது அயோகமாகும். தனது லக்ஷணங்களுக்கு எதிரிடையாக உள்ளது மித்யாயோகம் எனப்படுகிறது.

இந்த அதியோகம், அயோகம், மித்யா யோகம் என்ற இம்மூன்றும் பொதுவாக உடலுக்கு ஒத்துக் கொள்ளாதவை. இம்மூன்றையும் விடாமலிருத்தல் பிரக்ஞாபராதமாகும். புலன்களின் பொருட்கள், அறிவுடன் கூடிய செயல்கள், சீதம், உஷ்ணம், மழை என்ற பருவங்கள் அதனதன் இயற்கைக் குணங்களுடன் விளங்கி இவற்றை நன்றாகப் பயன்படுத்தல் உடல் நலனுக்குக் காரணமாகிறது. இவற்றில் நாக்கின் சுவை நீங்கலாகக் கண், காது, மூக்கு, தோல் இந்நான்கு புலன்களுக்குள்ள பொருட்களின் அதியோகம், அயோகம், மித்யா யோகம் அந்தந்தப் புலன்களுக்குக் கேடு விளைவிக்கும். இவற்றை நன்முறையில் பயன்படுத்தல் புலன்களுக்கு நலன் அளிப்பதாகும்.

மற்ற சுவை, செயல்கள், காலம் இவற்றின் அதியோகம், அயோகம், மித்யாயோகம் ஆகியவை உடலுக்குத் தீமை விளைவிக்கக்கூடியவை. *(13)*

திரவியம், குணம், செயல், இவற்றின் இருக்கை, இல்லாமை (உண்மைநிலை), (அழிவு) இது தவிர்த்து அவற்றிற்கு ஏற்படும் இடம், காலம், செயல் இவற்றின் சேர்க்கையாலும், சேர்க்கையில்லாமையாலும், அதிகச் சேர்க்கை, குறைவான சேர்க்கை இவற்றாலும் நோய்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறே [1]நிதானம், தோஷம், தூஷ்யம் இவைகளுக்கும் உண்மை நிலை (இருக்கை) அழிவு இல்லாமை என்ற நிலைகள் உள்ள இம்மூன்றின் சேர்க்கையே எல்லா நோய்களுக்கும் காரணமாகின்றது. இவற்றின் சேர்க்கையில்லாவிடில் நோய்களே உண்டாகாது.

நிதானம், தோஷம், தூஷ்யம் என இம்மூன்றும் ஒன்றுக்கொன்று சேராத நிலையிலும் அல்லது சிறிதளவே சேருகிற நிலையிலும் நோய் உருவாவதில்லை. அப்படி உருவானாலும் அவை பலமற்றவைகளாக — அல்லது தாமதமாக உருவாகின்றன. அல்லது நுட்பமாக இருக்கின்றன என்பது பொருள். அல்லது நோய்களுக்குக் கூறிய எல்லாக் குறிகளும் தோன்றாது.

இதற்கு மாறான நிலையில் நிதானம், தோஷம், தூஷ்யம் இம்மூன்றும் நன்கு ஒன்றுடன் ஒன்று பலமான நிலையில்— சேர்வதால் நோய்கள் தோன்றுகின்றன. (14)

நோய்களுக்கு உடலில் பாஹ்யம்—(புற பாகங்கள் என்னும் உறுப்புகளில் தோன்றக்கூடியது) மத்யம் — (நடுப்பகுதியில் தோன்றக்கூடியது) ஆப்யந்தரம் — (உட்பகுதியில் தோன்றக்கூடியது) என மூன்று வழிகள் உண்டு.

வெளிப்படையாகத் தோன்றும் நோய்களுக்கு இரத்தம் மாமிசம் முதலிய தாதுக்கள், தோல் இவை இடமாகும். இதை [2]புற உறுப்புகள் அல்லது கிளை என்று கூறுகின்றோம். இதையொட்டி கழுத்தில் வரும் கட்டி, சிறு கட்டிகள், சிலந்தி, அபசி என்ற கட்டி, தோலில் முள் போன்று உண்டாகும் முளை, புரைகுழல், மாமிச வளர்ச்சி, உளுந்து போன்று தோலில் தோன்றும் தழும்பு, வங்கு, வீக்கம், மூலம், குன்மம், அக்கி, பெருங்கட்டிகள் ஏற்படுகின்றன.

---

1. நிதானம்—நோய் உண்டாவதற்குக் காரணம்.
2. இரத்தம், மாமிசம், முதலிய ஆறு தாதுக்கள். தோல் இவை கிளைகள்—புற உறுப்புகள்—அல்லது 'சாகைகள்' என்று அழைக்கப்படும். இவை வெளிப்படையாகத் தோன்றும் நோய்களின் வழிகள்.

[1]நடுப்பகுதி, தலை, இதயம், சிறுநீர்ப்பை, மர்மங்கள், எலும்புக்கூடுகள், தசைநார், நரம்புகள், தசை நார்களை எலும்புகளுடன் கட்டும் தசை நார். இவற்றில் தோன்றும் நோய்களான: பக்கவாதம், பக்கப் பிடிப்பு, அசைவற்று ஒலியுடன் கீழே விழச் செய்யும் ஒருவித வலி, ஒரு பக்கமாக முகம், கை, கால்கள் கோணிப்போதல், காசநோய், எலும்பு களிலும் பூட்டுக்களிலும் வலி, ஆசனவாய் வெளி வருதல், தலையில் தோன்றும் நோய்கள்.

[2]உட்பகுதியில்–தொண்டையிலிருந்து ஆசனவாய் வரை செல்லும் நீண்ட ஒரே குழாய். இந்த குழாய்க்கு மகாஸ் ரோதஸ், சரீரமத்யம், மகாநிம்னம், ஆமாசயாச்ரயம், பக்வா சயாச்ரயம், அந்தக்கோஷ்டம் என்ற ஆறு பெயர்கள் உண்டு. இதில் தோன்றும் நோய்கள்; காய்ச்சல், கழிச்சல், வாந்தி, அசீரணம், வாந்தி–பேதி, பெருமூச்சு, இருமல், விக்கல், வயிறு உப்புசம், மகோதரம், மண்ணீரல் நோய், உட்பகுதியில் வீக்கம், மூலநோய், கட்டி, குன்மம் போன் றவை. (15)

இந்நோய்கள் தானே தோன்றக்கூடியன, மற்ற நோய்களைப் பின்பற்றி ஏற்படக்கூடியன என இருவகைப் படும். தானே தோன்றக் கூடியதற்கு 'அநநுபந்தம்' எனப் பெயர். மற்றொரு நோயைத் தொடர்ந்து ஏற்படக் கூடிய தற்கு 'அனுபந்தம்' என்று பெயர்.

தானே தோன்றக்கூடிய நோய்களின் அறிகுறிகள் தெளி வாகத் தென்படுபவை. அவற்றிற்குரிய காரணங்களால் தோன் றும் இந்நோய்களுக்குக் கூறப்பட்ட சிகிச்சைகளைச் செய் தால் தணியக் கூடியவை.

மற்ற நோய்களைப் பின்பற்றி ஏற்படக்கூடிய நோய் களில் அதன் அறிகுறிகள் தெளிவாகத் தென்படுவதில்லை. அவைகளுக்குரிய காரணங்களாலேயே ஏற்படுபவையல்ல. எந்த நோயைப் பின்பற்றுகிறதோ அந்நோய்களுக்குச் செய்யும் சிகிச்சைகளால் தணியக் கூடியவை.

அதே போல், தோஷங்களையும் ஸ்வந்திரமானவை, பரதந்திரமானவை என இரு வகைகளாக அறிந்து கொள்ள வேண்டும்.

---

1. 'நடுப்பகுதி' என்று குறிப்பிடும் 'உறுப்புகள்' 'மத்யம ரோகமார்க்கம்' எனப்படும்.

2. 'உட்பகுதி' என்பதில் குறிப்பிடும் 'உறுப்புகள் 'ஆப்யந்தரரோகமார்கம்' எனப்படும்.

பரதந்திரமான நோய்களும், சுதந்திர நோய்க்கு முன்னால் ஏற்படக்கூடியவை, பின்பு ஏற்படக்கூடியவை என இரு வகைப்படும். முன்னால் ஏற்படக் கூடியவற்றிற்கு முன் அறிகுறி என்றும், பின்னால் ஏற்படக்கூடியவற்றிற்கு [1]உபத்திரவம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இவற்றைப் பற்றி மேலே கூறப்படும். அதை அங்கு அறிந்து கொள்ளலாம்.

இந்த பரதந்திர நோய்கள், ஸ்வதந்திர நோய்கள் தணிந்தவுடன் தானாகவே தணிந்து விடுகின்றன. தணியாவிடில் ஸ்வதந்திர நோய்கள் தணிந்தபின் அவற்றிற்குச் சிகிச்சை செய்ய வேண்டும்.

அல்லது

ஸ்வதந்திர நோயைக் காட்டிலும், பரதந்திர (உபத்திரவம்) நோய், மிக்க வலிமை பெற்றிருந்தால் ஸ்வதந்திர நோய்க்கு விரோதமில்லாமல் அதற்கு முதலில் சிகிச்சை செய்ய வேண்டும்.

நோயினால் துன்புற்றவனுக்கு இந்த வலிமை பெற்ற உபத்திரவங்கள் சர்க்கரை நீரிழிவு நோயில் பிறகு ஏற்படும் கட்டிகள் போல மேலும் துன்பத்தைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறு ஒரு நோய், மற்றொரு நோய் உண்டாவதற்குக் காரணமாக ஆகிறது. உதாரணமாக காய்ச்சல் எனும் நோய் ரத்த பித்தத்தையோ, ரத்தபித்தம் காய்ச்சலையோ உண்டாக்குகிறது.

இந்தக் காய்ச்சல், இரத்த—பித்தம் என்ற இரண்டும் சுவாசம் (இழுப்பு) எனும் நோயைத் தோற்றுவிக்கிறது. அதே போன்று மண்ணீரல் நோய் மகோதரத்திற்கும், மகோதரம் உடல் வீக்கத்திற்கும் காரணமாகின்றன.

மூல நோய், குன்மம், மகோதரம், கழிச்சல், கிரஹணி எனும் நோய்களுக்கும், ஜலதோஷம், இருமலுக்கும், காய்ச்சலுக்கும் காரணமாகின்றன. அந்தக் காய்ச்சலும், இருமலும் எலும்புருக்கி நோய்க்குக் காரணமாகின்றன. அந்த எலும்புருக்கி நோய் உடலுருக்கும் நோய் (தாதுக்களின் அழிவு)க்குக் காரணமாகிறது.

---

1. உபத்திரவம்—பரதந்திரத்தின் ஒரு பிரிவு—பிரதான நோய் தோன்றியபின்பு உண்டாகும் நோய்.

ஒரு நோய் ஒரு காரணத்தினால் தோன்றுகிறது. பல காரணங்களால் பல நோய்கள் உண்டாகின்றன. ஒரு நோய்க்கு ஒரே அறிகுறி.

இதேபோல் ஒரு நோய் தணிவதற்குக் காரணமாவது மற்ற நோயின் சீற்றத்திற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. இதனால் கவனத்துடன் மருத்துவ நூல்களை ஆராய்ந்து பரிசோதனை செய்ய வேண்டும். (16)

4. மருத்துவர்களுக்கு அறிவுரை

ஆயுர்வேத நூலில் கூறியபடி, நோய் எத்தகையது? எதனால் சீற்றமடைந்தது? நோய் உண்டாவதற்குக் காரணம் யாது? நோய்களின் அறிகுறிகள் யாவை? நோய் உண்டாயிருக்குமிடம், நோயினால் ஏற்படும் துன்பம், நோயின் உருவம், ஒலி, மணம், சுவை, ஸ்பரிசம் ஆகிய இவை எத்தகையவை? முற்குறிகள், உபத்திரவங்கள் யாவை? தோஷங்கள் வளர்ச்சியடைந்திருக்கும் இடம், குறைவு பெற்றிருக்கும் இடம், இடத்தின் நிலை, நோயின் பயன், நோயின் பெயர் ஆகிய இவற்றை நன்கு ஆராய வேண்டும்.

குறிப்பிட்ட நோய்க்கு எவ்வித சிகிச்சை செய்யலாம்; எதைச் செய்யக்கூடாது என்பதை அறியவேண்டும்.

மருத்துவர், நோயாளியின் அந்தந்தப் புலன்களின் வழியாக நிறம், அறிகுறி, அளவு, வளர்ச்சி, நிழல், மலம், சிறுநீர், அதிகமான வாந்தி, குடலிரைச்சல், விரல் போன்ற மூட்டுக்களில் சொடுக்குதல், உடல் அழுக்கு, காயத்தின் நாற்றம், உணர்ச்சியின்மை, குளிர்ச்சி, உஷ்ணம், அசையாமை, துடிப்பு, வழுவழுப்பு, சொறசொறப்பு, ஆகிய இவற்றை நோயாளியிடமிருந்து நேர்முகமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் நோயாளியின் இயற்கை நிலை, செயற்கை நிலை, உணவு வகை, நாவின் சுவை, நன்கு வாந்தியெடுத்தது, எடுக்காதது, மலப்போக்கு, கடினமாகவோ, எளிதாகவோ, தூக்கம், பார்வை, மனோநிலை, பிறவி நோய், ஜன்ம நக்ஷத்திரம், எந்த விஷயம் பிடிக்கும், எது பிடிக்காதது, இன்பம், துன்பம், வயது இவை யாவற்றையும் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உடலில் சீலைப்பேன் ஊறுவதனால் உடலின் வேறுபாட்டையும்; ஈக்கள் மொய்ப்பதனால் இனிப்புச் சுவையையும், சீரண சக்தியினால் சடராக்னியின் நிலைமையையும், உடல்

பயிற்சியினால் வலிமையையும், உள்ளடங்கியுள்ள நோயை உபசயம், அநுபசயம் என்ற முறையினாலும், தோஷங்களின் அளவுகளை மருந்து, உணவு, செயல்கள் முதலான பண்விடைகளாலும், ஆயுட்குறைவை மரணக் குறிகளாலும் ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இயற்கை நிலை, மனோ நிலை, வீர்யம், ஸாத்ம்யம், பலம் இவற்றை அருகில் இருந்தே தெரிந்துகொள்ள வேண்டும். (17)

முக்காலம் உணர்ந்தவர்களைப்போல் எந்த மருத்துவன் தன் விஞ்ஞானம் என்ற விளக்கை எடுத்துக்கொண்டு நோயாளியின் நெருக்கமான மன இருளில் நுழையவில்லையோ அவனை சிறந்தவனாயிருந்தும் சிகிச்சை செய்யும் திறமையற்றவன் என உணர வேண்டும்.

நோயின் நிலை நன்கு புலப்படாவிடில் மருத்துவருக்கு நோயாளி இருவிதத்தில் காணப்படுகிறான். ஒருவன் மிகக் கடினமாக நோயினால் துன்பப்பட்டபோதிலும், தன் உடல், மனம், வலிவு இவற்றின் காரணமாக அவன் சிறுநோயினால் துன்பப்படுபவன் போல் காணப்படுகிறான். மற்றொருவன் சிறு நோயினால் துன்புற்ற போதிலும் உடல், மனம் இவற்றின் வலிவின்மையால் கடுமையான நோயினால் துன்பப்படுபவன் போல் தோற்றமளிக்கிறான்.

அறிவிற்குறைந்த மருத்துவன் வெளிப்படையாகத் தோன்றும் நோயாளியின் அறிகுறிகளைக் கொண்டு மனக்கலக்கமடைகிறான். அதனால் கடுமையான நோயுள்ளவனுக்கு குறைந்த வீர்யமுள்ள மருந்தையும், சிறுநோயுள்ளவனுக்கு மிகுந்த வீர்யமுள்ள மருந்தையும் மாற்றிக் கொடுத்து, பத்திய முறைகளையும் மாற்றி நோயாளியைக் கொன்று விடுகிறான். (18—19)

ஒரு பொருளின் முழு அறிவு, சிற்றறிவினால் கண்டு கொள்ளக்கூடியதல்ல. ஆகையினால் ஆயுர்வேத நூலைத் தெளிவுற ஆராய்ந்து அதில் கூறியபடி கவனத்துடன் நன்கு ஆலோசித்து அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். இடைவிடாது எப்பொதும் நன்கு ஆராய்ந்து சிகிச்சை செய்யும் அறிவாளியான மருத்துவர் கடினமான நோயைப் புரிந்து கொள்வதிலும் ஒரு பொழுதும் தவறமாட்டான்.

தோஷங்களின் வெளிப்படையான காரணங்களால் தோன்றும் நோய், தோஷத்தால் வளர்ந்துள்ள உடலில் உள்ள நோயைப் பின்பற்றுகிறது. இதேபோல் வளர்ந்துள்ள உடலில் உள்ள நோய் வெளிப்படையான காரணங்களால் தோன்றும் நோயைப் பின்பற்றுகிறது. இவற்றுள் முக்கிய நோயையும் அதைப் பின் பற்றி வந்த நோயையும் நன்கு அறிந்தபின் சிகிச்சையைத் தொடர வேண்டும்.

(20—24)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ரோகபேதீயம்' எனும் இருபத்திரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்துமூன்றாவது அத்தியாயம்

*பேஷஜாவசாரணீயம்

இனி 'பேஷஜாவசாரணீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். (1—2)

1. மருத்துவரின் கடமை

மருத்துவம் செய்வதற்கு முன்பு நோயாளியைப் பரிசோதிக்க வேண்டும். நோயாளி எந்த நாட்டில் பிறந்தான்? எங்கு வளர்ந்தான்? எங்கு நோயுற்றான்? என்பதை அறிந்து, அந்நாட்டில் வாழும் மக்களின் உணவு வகை, பழக்கவழக்கங்கள், அவர்களுடைய உடல் வலிவு, குணம், சுவை ஆகிய இவை எத்தகையவை என்பதை முதலில் அறிய வேண்டும்.

அங்கு எவ்வித நோய்கள் தோன்றுகின்றன? அங்குள்ளவர்களுக்கு, நன்மையளிப்பது எது? தீமை விளைவிப்பது எது? என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பாலும் சிகிச்சை செய்து கொள்ள வந்திருக்கும் நோயாளிக்கு எந்த காரணத்தினால் வாதம்—பித்தம்—கபம் என்ற தோஷங்கள் சீற்றமடைந்துள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு தோஷம் சீற்றமடையப் பல காரணங்கள் உண்டு. ஆகையால் தோஷங்களுடைய குறிகளாலும், செயல்களாலும் தோஷங்கள் இத்தகையவை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக வாதம் எனும் தோஷம், உணவு, நடவடிக்கை, வறட்சி, லகு குணம், குளிர்ச்சி, சக்திக்கு மீறிய செயல்கள், மலம், சிறுநீர் இவற்றின் வேகங்களை அடக்குதல், பயம், வருத்தம் இவற்றுள் எதனால் சீற்றமடைந்திருக்கிறது என்பதை அறியவேண்டும்.

---

*பேஷஜாவசாரணீயம்—மருந்து கொடுக்கும் முறையை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

பிறகு தோஷத்திற்கு எதிரிடையான மருந்தைப் பயன் படுத்துவதால் விரைவில் அது குணமடைகிறது.

இனிப்பு, புளிப்பு, உப்பு என்ற இம்மூன்று சுவைகளும், உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு என்ற மூன்று சுவைகளுக்கும் எதிரிடையானவை.

ஒரு நோய்க்குக் காரணம் பொதுவாக இருப்பினும் குறைவானது, நடுத்தரமானது, அதிக அளவில் உள்ளது என்ற மூவகை காரணங்களுக்குள் நோய் எதனால் உண்டாயிருக்கிறது என்று சோதிக்க வேண்டும்.

காரணம் ஒன்றாக இருப்பினும் நோய்கள் பலவகைப்படுகின்றன.

காரணம் ஒன்றாக இருந்தபோதிலும், தோஷங்களில் உள்ள குறைவானது, நடுத்தரமானது, அதிகமானது என்ற மூன்றிலும் எதன் சேர்க்கையினால் நோய் உண்டாகியிருக்கிறது என்பதை அறிந்து அதன் வழியாக நோயின் பலாபலத்தை அறியவேண்டும்.

எல்லா நோய்களிலும் எல்லா தோஷங்களும் இருக்கின்றன. மருந்துகளும் எல்லாச் சுவைகளுடன் கூடியவை. எனவே நோயின் வலிவு, அதைத் தணிக்கச் செய்வதற்கான மருந்தின் வலிவு ஆகியவற்றை ஆராய்ந்து நோய்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டும்.

ஆனால் இது எல்லா இடங்களிலும் பொருந்தாது.

செயற்கையில் விரோதமாகச் சேர்ந்திருக்கும் மருந்திலும், நோயிலும் மேற்கூறியது பொருந்தாது. ஏனென்றால், மருந்துகளைச் செயற்கை முறையில் தயாரிக்கும்போது காரணத்தை ஒட்டிப் பொருட்கள் சேர்க்கப்படுவதில்லை. அவற்றில், சுவையின் குணங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கின்றன. மருந்து தயாரிக்கும் முறைகள் கல்கம், ஸ்வரசம் போன்ற பலவகை உண்டு. இவ்விதம் செயற்கையில் தகாத முறையில் சேர்ந்திருக்கிற மருந்துகளில் ஒவ்வொரு சுவைக்கும் கூறியுள்ள குணங்களை வைத்துக்கொண்டு ஒன்றாய்ச் சேர்த்துத் தயாரித்த மருந்தில் சிறந்த குணத்தைக் காண முடியாது.

அதேபோல் மாறுபாடான ஒன்றுக்கொன்று எதிரிடையான தோஷங்களின் சேர்க்கையினால் உண்டான நோய்களில் ஒவ்

வொரு தோஷத்தின் சிறந்த குணத்தை வைத்துக் கொண்டு சமுதாய குணங்களைக் கண்டுபிடிக்க முடியாது.

இம்மாதிரியான மாறுபாடான, விரோதமான செய்கையால் உண்டான மருந்திலும், நோயிலும், சுவை, தோஷம் இவற்றைத் தனித்தனியாக கவனிக்காமல், சமுதாயச் சேர்க்கையைக் கொண்டு மருந்தின் சிறப்பைத் தீர்மானிக்க வேண்டும். *(3)*

குறிப்பிட்ட நோயும், தோஷங்களும் எந்த இடத்தில் இருப்பதால் உண்டானவை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். சீற்றமடைந்த தோஷங்கள் தன்னுடைய இடத்திலிருந்து நோயைத் தோற்றுவித்தனவா? அல்லது வேறு தலை முதலான இடங்களுக்குச் சென்று நோயைத் தோற்றுவித்து சிகிச்சைக்கு அடங்காமலிருக்கின்றனவா என்பதை அறியவேண்டும். அதன் பின் தோஷங்கள் இருக்குமிடத்திற்கு ஏற்றவாறு மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். *(4)*

நோய் உண்டாயிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்ட பின்பு, குறிப்பிட்ட நோய் எந்த மருந்துக்குத் தகுந்தது. குறிப்பிட்ட நோயாளி எந்த மருந்துக்குத் தகுந்தவன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நோய்க்கும், நோய் உடையவன் சக்திக்கும் ஏற்றவாறு மருந்தின் வீரியமும் தோஷங்களைப் பின்பற்றித்தான் ஏற்படுகிறது. *(5)*

2. ஆராயாமல் கொடுக்கப்படும் மருந்தினால் ஏற்படும் விளைவு

[1]சம்சோதனம், [2]சம்சமனம் என மருந்துகள் இரு வகைப்படும். சம்சோதனமும் **தீக்ஷ்ண** குணமுள்ளது, **தீக்ஷ்ண** குணமற்றது என இருவகைப்படும். **தீக்ஷ்ண** குணமுள்ள சம்சோதனம் என்ற மருந்து நெருப்பு, வாயு இவற்றின் தத்துவத்தை சேர்ந்தது. **தீக்ஷ்ண** குணமற்ற சம்சோதனம் எனும் மருந்து நீர், ஆகாயம், நிலம் இவற்றின் தத்துவத்தைச் சேர்ந்தது. **தீக்ஷ்ண** குணமுள்ள சம்சோதன மருந்தை ஆலோசிக்காமல் அதிக அளவில் பலமற்றவனுக்குக் கொடுத்தால் அது அவனை உடனே கொன்றுவிடும்.

அதேபோல் சூடுபோடும் சிகிச்சை, க்ஷாரசிகிச்சை, ஆயுத சிகிச்சை இவற்றை அதிக அளவில் பலமற்றவனுக்குச் செய்தால், அச்சிகிச்சை அவன் இறப்பிற்குக் காரணமாகிறது.

---

1. சம்சோதனம்—வாந்திக்கும் பேதிக்கும் கொடுத்து குடலைச் சுத்தம் செய்வது.
2. சம்சமனம்—நோயைத் தணிக்கச் செய்வது.

சம்சமனம் என்ற தீக்ஷ்ணகுணமற்ற மருந்தை ஆலோசிக்காமல், நோய், நோயாளி, சடராக்னி இவற்றின் சக்திக்கு மீறி அதிக அளவில் கொடுத்தால் அம்மருந்து அந்நோயைத் தணித்து அதே உடலில் மற்றொரு நோயை உடனே தோற்றுவிக்கிறது.

உடலின் சக்தியை மீறிக் கொடுத்த சம்சமனம் எனும் மருந்து, சோர்வு, மூர்ச்சை, மதமதப்பு, மயக்கம், வலிவுக் குறைவு இவற்றைத் தோற்றுவிக்கும்.

குறைந்த சடராக்னி உள்ளவனுக்குக் கொடுக்கும் சம்சமனம் எனும் மருந்து சோர்வு, சடராக்னியின் அழிவு இவற்றிற்குக் காரணமாகிறது. (6)

பருத்த உடலுள்ளவன், மிக மெலிந்தவன், வலிவிழந்தவன், தளர்ந்த மாமிசம், இரத்தம், எலும்பு, உடலுறுப்புகள் இவற்றை உடையவன், சடராக்னி குறைந்தவன், குறைவான உணவு உண்பவன், தகாத உணவு உண்பவன், வேகாத உணவு உண்பவன், வீரியமிழந்தவன் ஆகிய இவர்கள், நோயின் கொடுமைகளைப் பொறுக்க முடியாதவர்கள். அப்படியுள்ளவர்களால் மருந்தின் வேகத்தை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?

ஆகையால் மேற்கண்டவர்களுக்கு, உடலுக்குத் தீமை விளைவிக்காததும், மிருதுவானதும், சுகத்தைத் தரக்கூடியதும், குருகுணம் உள்ளதும், தோஷங்களைத் தூண்டி விடாமலிருக்கக் கூடியதுமான மருந்துகளால் சிகிச்சை செய்ய வேண்டும்.

குறிப்பாகப் பெண்களுக்கு மிருதுத்தன்மை வாய்ந்ததும், துன்பம் தராததுமான மருந்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் உறுதியற்றவர்கள், பயந்த குணமுடையவர்கள், மெலிந்தவர்கள், அழகானவர்கள், பிறரை அண்டிப் பிழைப்பவர்கள்.

பெண்களைக் காட்டிலும், குழந்தைகள் மிகவும் மிருதுவானவர்கள், பயந்த குணமுடையவர்கள், இன்பமாக வாழ்கிறவர்கள், பிறரை அண்டிப்பிழைப்பவர்கள்.

அவர்களுக்குப் பெண்களைவிட மிகக் கவனத்துடன் மருத்துவம் செய்யவேண்டும். அவ்வாறு பலமான நோயிலும், பலமான நோயாளிகளிடத்தும் அளிக்கப்படும் குறைந்த சக்தி வாய்ந்த மருந்து ஒன்றும் வேலை செய்யாது. மேலும் தோஷங்களைக் கிளப்பிவிட்டு நோய்களை அதிகரிக்கச் செய்யும். (7)

3. தகுந்த மருந்தின் சோதனை

மருந்தின் தகுதியை ஆராய வேண்டும். சுவை, வீர்யம், பரிணாமம் இவற்றில் மருந்து எத்தகையது? இதன் குணம், பொருள், செயல், சிறப்புச்செயல் ஆகியவை எப்படிப்பட்டவை? எத்தகைய இடத்தில் இது உண்டாயிற்று ? எந்தப் பருவத்தில் தோன்றியது? எக்காலத்தில் எடுக்கப்பட்டது? எவ்வாறு வைக்கப் பட்டது? செய்யப்பட்டது? எந்நிலையில் தவிர்க்கப்பட்டது. எத்தனை சிறப்புடையது, எத்தகைய சேர்க்கையுடையது. எவ்வாறு எந்த அளவில் கொடுத்தால் எவ்வித மனிதனுக்கு எந்த நோயை, எத்தனை நேரத்தில் போக்கும் தன்மை வாய்ந் தது? அல்லது தணிக்கச் செய்கிறது ஆகிய எல்லாவற்றையும் அறியவேண்டும்.

முன்பே இம்மாதிரியான மருந்து இருந்தது. அது குறிப் பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட அளவில் கொடுக்கப்பட்டது. அதன் விளைவு இப்படிப்பட்டது என்பதையும் அறிய வேண் டும்.

தோஷம், மருந்து, தூஷ்யம், இடம், நேரம், வலிவு, சடராக்னி, சத்துணவு, உடலுக்கு உகந்தது. பிரகிருதி, குணம், வயது, ஆகிய இவை மிக நுட்பமாக அறியத் தக்கவை. அவற் றின் நிலையை உற்றுக் கவனிக்காமல் கொடுக்கப்பட்ட மருந்து நோயாளியைக் கொன்றுவிடும்.

முன்கூறிய தோஷம் முதலானவற்றை மிக நுட்பமாக அறிந்து கவனித்து மருத்துவம் செய்தாலும் அறிவாளியே கலக்கமடைகிறான். அந்நிலையில் அறிவு குறைந்தவர்களைப் பற்றி என் சொல்வது?

ஆகையால் அடிக்கடி ஆயுர்வேத நூல்களைப் படித்தும் அதன் கருத்தையும், மருத்துவத்தையும் தெரிந்து கொண்டு, அறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஆயுர்வேத நூலில், சிகிச்சைக்கு உட்பட்ட நோய் எது? உட் படாத நோய் எது? என்று கூறப்பட்டுள்ளது. அறிவாளியான மருத்துவன் அந்நோய்களில் தோஷங்களின் எளிமை, கொடுமை இவற்றை நன்கு அறிந்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். (8)

நேரமும் மருந்தின் குணத்தை அதிகப்படுத்துகிறது. இந்த காலம், வினாடி, லவம், முகூர்த்தம் என்ற பிரிவினாலும், நோயாளியின் நிலையின் வேறுபாட்டினாலும் இரண்டு வகை என முன்பு கூறப்பட்டுள்ளது.

4. வாந்தி-பேதிக்கு மருந்து கொடுக்கத் தகாத காலங்கள்

இதே காலம், குளிர் காலம், உஷ்ண காலம், மழை காலம் என மூவகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வக் காலங்களில் அதனதன் அறிகுறிகள் தோன்றும். இவற்றில் குளிர்காலம், உஷ்ணகாலம் இவற்றின் நடுவில் இருப்பது வசந்த காலம், மழைக்காலம், குளிர்காலம் இவற்றின் நடுவில் இருப்பது சரத்காலம் அல்லது சாதாரண காலம். மழை காலத்தில் மழை துவங்கும் காலம் 'பிராவிருட்' எனவும் பிரிக்கப்படுகிறது.

அவற்றின் குளுமை, உஷ்ணம், மழை இவற்றின் அறிகுறிகள் கொண்ட மூன்று பருவங்கள் ஹேமந்தம், கிரீஷ்மம், வர்ஷம் எனப்பெயர் பெறுகின்றன.

வசந்தம், சரத், பிராவிருட் என்ற பருவங்கள் சாதாரண காலம் என அழைக்கப்படுகின்றன. அக்காலங்களில் வாந்தி முதலியனவற்றிற்கு மருந்து கொடுக்க வேண்டும். மிகுதியான குளிர்ச்சி, உஷ்ணம், மழை காலங்களில் வாந்தி முதலானவற்றிற்கு மருந்து கொடுக்கக்கூடாது. (சாதாரண காலமோவெனில் குறைந்த குளிர்ச்சி, குறைவான சூடு, குறைந்த மழை இவற்றை உடையதாயிருப்பதால், உடலுக்கும் மருந்துக்கும் எவ்வித தீமையையும் தோற்றுவிப்பதில்லை. இன்பத்தையும் அளிக்கிறது.)

மற்ற குளிர்காலம், உஷ்ண காலம், மழைக்காலம் இவற்றில் மருந்து திக்ஷ்ணகுணம் பெறுவதனாலும், கேடுகளைத் தோற்றுவிப்பதாலும், உடலுக்கும், மருந்துக்கும் தீமைகளை ஏற்படுத்துகிறது.

ஆகையால் பங்குனி, சித்திரை, மாதங்கள் வசந்த காலம் எனவும், ஆனி, ஆடி மாதங்கள் பிராவிருட் எனவும், கார்த்திகை, மார்கழி மாதங்கள் சரத் பருவம் எனவும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது.

இக்காலங்களில் வாந்தி முதலியவற்றிற்கு மருந்து கொடுக்கலாம். மற்ற காலங்களில் அயோகம், அதியோகம் என்பவற்றை உண்டாக்குவதால் வாந்தி முதலியவற்றிற்கு மருந்து கொடுக்கக் கூடாது. மற்ற பருவங்கள் தீமை விளைவிப்பவை. (9)

குளிர் காலத்தில் அதிகக் குளுமையினால் உடல் அதிகம் குளிர்ச்சியடைகிறது. அதனால் வாதம் தடைபடுகிறது. இவற்

றால் உடலில் உள்ள துவாரத்தின் வழிகள் அடைபடுகின்றன. தோஷங்களும் வளர்ச்சி பெறுகின்றன.

இந்நிலையில் சம்சோதனத்திற்குக் கொடுக்கப்பட்ட உஷ்ண வீரியமுள்ள மருந்து குளுமையினால் தடைபட்டு தன் சக்தியை இழந்துவிடுகிறது. அயோகத்தின் அறிகுறிகள் தென்படுகின்றன.

குளுமை வாதநோய்க்குக் காரணமாகிறது. மழை காலங்களில் நாற்புறங்களிலும், மிகவும் நெருக்கமான, மிகப் பெரிய அளவில் மேகங்கள் ஆகாயத்தில் பரவி கதிரவனின் ஒளியை மறைப்பதனாலும்,

அதிக அளவில் தேங்கி நிற்கும் தண்ணீரால் தரை, சேறு சகதிகளால் நிறைந்து காணப்படுவதனாலும், உடலில் சடராக்னி குறைவதாலும், மலங்கள் அதிகம் குவிந்திருப்பதனாலும், ஆதான காலமாயிருப்பதனாலும் மனிதனுடைய வலிமை குறைவடைகிறது.

மழைக்காலத்தில் இடைவிடாமல் மழை பொழிவதனால் மரம், செடி, கொடிகள், வேர்கள் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. கிளைகள் இளந்தளிர்களால் நிரம்பி விடுகின்றன. மூலிகைகள் இளம் நிலையில் இருப்பதால் குறைந்த வீரியமுடையதாகின்றன. அம்மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து தன் சக்தியை முழுவதும் பெறுவதில்லை. அப்படிப்பட்ட மருந்தைப் பயன்படுத்துவதனால் உடலில் அழற்சி ஏற்படுகிறது.

பறவைகள், பிராணிகள், பாம்புகள் முதலிய ஊர்பவைகள், பிணம், இரத்தம் முதலிய தாதுக்கள், சிறுநீர், மலம், கெட்டுப்போன நீர், நீர்த்துளிகளால் குளிர்ச்சியடைந்த காற்று, உஷ்ணக்குறைவு, மாறுபாடு இல்லாம ஆகிய இவற்றால் கேடடைந்த பூமி தன்னிடம் உண்டாகும் மூலிகைகளுக்கு சக்தியை ஏற்படுத்துவதில்லை. ஆதலால் மழைக்காலம் மற்ற காலங்களைக் காட்டிலும், மருந்து கொடுக்கத் தகாத காலமாகிறது.

முன்பே சேர்த்து வைக்கப்பட்டுள்ள மருந்தும், மேகத்தின் நீர்த்துளிகள் கலநத காற்றினால் கெட்டு விடுகிறது. எனவே மழைக் காலத்தில் வாந்தி முதலியவற்றிற்கு மருந்து

கொடுப்பது சிகிச்சையை நன்கு நிறைவேற்றாது என்பது திண்ணம். (10)

கிரீஷ்ம பருவத்தில் (ஆனி—ஆடி) பூமியிலுள்ள சக்தி கதிரவனின் கிரணங்களால் இழுக்கப்படுவதால் உடல் உஷ்ணம் வறட்சி, வாதம், வெயில் இவற்றால் தளர்ந்து விடுகிறது. வியர்வை, அதிகம் வெளிப்படுகிறது. உடல் தளர்ச்சியால் தோஷங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

உஷ்ண வீர்யமில்லாத மருந்தும், கதிரவனின் தீக்ஷ்ணமான உஷ்ண கிரணங்களால் தீக்ஷ்ண குணமுள்ளதாகவும், உஷ்ண வீர்யம் உடையதாகவும் ஆகிவிடுகிறது. அந்த மருந்தைப் பயன்படுத்தினால் அதியோகம் என்ற மருந்தை அளவுக்கு மீறி பயன்படுத்துவதால் ஏற்படும் தீமை ஏற்படுகிறது. உடலில் எரிச்சல், தலை சுற்றல், உறுப்புகளுக்கு ஓய்ச்சல் ஏற்படுகின்றன.

தவிர்க்க முடியாத நோய் நீங்கலாக மற்ற நோய்களுக்குச் சாதாரண காலமான சரத் (கார்த்திகை, மார்கழி) வசந்தம் (பங்குனி, சித்திரை), பிராவிருட் (ஆனி, ஆடி) என்ற காலங்களில் வாந்தி முதலானவற்றிற்கு மருந்து கொடுக்க வேண்டும்.

அவசியம் தேவைப்படுமானால் குளிர்காலம், வெயிற்காலம், மழைக்காலம் இவற்றிலும், அந்தந்த பருவத்திற்கு உள்ள குணத்திற்கு எதிரிடையான செயற்கைக் குணங்களை, அதாவது சேர்க்கை, மேன்மையுண்டுடண்ணுதல், அளவு இவ்வகையில் மருந்துகளைச் சேர்த்துக் கவனித்து வாந்தி முதலியவற்றிற்குக் கொடுக்கலாம். (11)

நோயாளியின் நிலையை ஒட்டியும், காலம், அகாலம் என்ற சொல் வழங்கப்படுகிறது. நோயாளிக்கு இந்த நிலையில் இந்த மருந்தைக் கொடுக்கலாம்; இந்த நிலையில் இந்த மருந்தைக் கொடுக்கக்கூடாது என்பதுதான் காலம், அகாலமென்பதின் பொருளாகும்.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்போ, பின்போ கொடுக்கப்படும் மருந்து பயனளிப்பதில்லை. ஆகையால் மருந்து கொடுப்பதற்கான காலத்தை பதினொரு வகையாகப் பிரித்துள்ளார்கள். அவை யாவன:

5. மருந்து அருந்தும் காலங்கள்

1. அபக்தம்—வயிற்றில் உணவு இல்லாத நிலையில் கொடுப்பது.
2. ப்ராக்பக்தம்—மருந்து அருந்தியவுடன் உணவு கொள்வது.
3. மத்ய பக்தம்—பாதி உண்டபின் மருந்தை அருந்தி பிறகு பாதி உணவைச் சாப்பிடுவது.
4. அதோபக்தம்—உணவு அருந்தி முடித்தவுடன் மருந்து உண்பது.
5. ஸமபக்தம்—சமைக்கும் சோற்றிலோ, சமைத்தபின் சோற்றிலோ மருந்தைக் கலந்து உண்பது.
6. அந்தரபக்தம்—முற்பகல் உணவு சீரணித்தபின், நடுப்பகலில் மருந்து அருந்துவது.
7. ஸாமுத்கம்—மருந்து அருந்தியவுடன் உணவு சாப்பிடுவது.
8. முஹுர்முஹு :—அடிக்கடி மருந்து அருந்துவது.
9. ஸக்ராஸம்—ஒவ்வொரு பிடிச்சோற்றுடன் மருந்தைக் கலந்து உண்பது.
10. க்ராஸாந்தரம்—இரண்டு பிடிச் சோற்றுக்கிடையில் மருந்து உண்பது.
11. இரவு—இரவு வேளையில் மருந்து உண்பது.

(12)

அ. அபக்தம்

இவற்றில் அபக்தம் என்பது மாலையில் உணவு சீரணித்தபின், உணவு அருந்தாமல் மருந்து கொடுப்பது. இக்காலத்தில் கொடுக்கப்படும் மருந்து வயிற்றில் உணவு இல்லாதிருப்பதினால் மிக்க பயனை அளிக்கிறது.

இக்காலத்தில் கபம் அதிகரிப்பதனால் இரைப்பையும், துவாரங்களும் திறக்கப்படுகின்றன. பலசாலியான நோயாளிக்கு காலையில் கதிரவன் தோன்றும்போது மருந்தைக் குடிக்கச் செய்ய வேண்டும்.

மற்ற பலமில்லாதவனை, ப்ராக்பக்தம் போன்ற பதினொரு காலங்களிலும் உணவுடன் கலந்து அருந்தச் செய்ய வேண்டும். உணவுடன் கலந்த மருந்து அதிகத் துன்பத்தை அளிக்காது (13).

ஆ. ப்ராக்பக்தம்

மருந்து அருந்தியவுடன் உணவு எடுத்துக் கொள்வது ப்ராக்பக்தம் எனப்படும். இப்படி அருந்திய மருந்து கீழ்நோக்கிச் செல்லும் வாதக் கோளாறுக்கும், இடுப்பிற்குக் கீழே உள்ள உறுப்பிற்கு வலுவூட்டவும் பயன்படுகிறது. இதனால் உடலின் கீழ்ப்பகுதியில் உள்ள நோய்களுக்கும், உடல் மெலிவதற்கும் இம்மருந்தைக் கொடுக்க வேண்டும். (14)

இ. மத்ய பக்தம்

பாதி உணவு உண்டபின் மருந்தை அருந்தி பிறகு மீதி உணவைச் சாப்பிடுவது மத்ய பக்தமாகும்.

இது ஸமான வாயு விகாரமடைந்தாலும், கோஷ்டம் என்ற வயிற்றுள் உள்ள உறுப்புகளில் தோன்றும் நோய்களிலும், பித்தக் கோளாறுள்ள நோய்களிலும் கொடுக்கக்கூடியது. (15)

ஈ. அதோபக்தம்

உணவு அருந்தி முடித்தவுடன் மருந்து உண்பது அதோ பக்தமாகும்.

வியான வாயுவின் (இதயத்தில் உள்ள வாயு) கோளாற்றில், காலை உணவுக்குப்பின்பும், உதானவாயுவின் (மார்பில் உள்ள வாயு) கோளாற்றில் மாலை உணவிற்குப் பின்பும் மருந்தை உபயோகிக்க வேண்டும்.

தொப்புளுக்குமேல் மார்பு, தொண்டை முதலிய உறுப்பு களுக்கு வலிவு அளிப்பதற்கும் அல்லது மார்பில் உண்டாகும் நோய்களுக்கும், கபத்தினால் தோன்றும் நோய்களுக்கும், உடல் பருமனாவதற்கும் அக்காலத்தில் மருந்தைப் பயன்படுத்த வேண்டும். (16)

உ. ஸமபக்தம்

சோறு சமைக்கும்போது மருந்தை அதில் கலந்தோ, அல்லது சமைத்த பிறகு அதில் கலந்தோ உண்பது ஸமபக்த மாகும். இம்மருந்தை இக்காலத்தில் சிறுவர்கள், இன்பமாகக் காலம் கழிப்பவர்கள், மருந்து உண்பதில் வெறுப்புற்றவர்கள், சுவையற்றவர்கள், உடல் முழுவதும் பரவிய நோயுடையவர் கள் ஆகிய இவர்களுக்கு இம்முறையில் கொடுப்பது நலமாகும். (17)

ஊ. அந்தரபக்தம்

முற்பகல் உணவு சீரணித்தபின், நடுப்பகலில் மருந்து அருந்துவது அந்தர பக்தமாகும். இம்மருந்து சீரணமான பின் மாலையில் உட்கொள்வது, மாலையில் உணவு உண்டபின் இரண்டு மணி நேரத்திற்குப்பின் மருந்து அருந்தி மறுநாள் காலையில் உணவு அருந்துவது என்பது முறையாகும். இக் காலத்தில் சடராக்னி வளர்ச்சியடைந்தவர்கள் வியானவாயு கோளாறடைந்தவர்கள் ஆகிய இவர்களுக்கு ஏற்பட்ட நோய்களில் இம்முறையைக் கையாள வேண்டும். *(18)*

எ. ஸாமுத்கம்

மருந்து அருந்தியவுடன் உணவு அருந்துவது. உணவு உண்டபின் அதே மருந்தை உண்பது, ஸாமுத்கம் எனப்படும். எளிதான உணவு, நீர், கஷாயம், லேகியம், சூரணம் ஆகிய வயிற்றைப் பிறட்டும் மருந்துகளை, விக்கல், நடுக்கம், பார்சுவ வாயு, கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் உள்ள பிணிகள், இடுப்புக்குக் கீழே உள்ள உறுப்புக்களில் தோன்றும் நோய்கள் இவற்றிற்கு ஸாமுத்கம் எனும் காலத்தில் மருந்து கொடுக்க வேண்டும். *(19)*

ஏ. முஹுர்முஹு :

உணவு உண்டாலும், உண்ணாவிடினும் அடிக்கடி மருந்து உண்ணும் முறை. இம்முறை சுவாசம், இருமல், விக்கல், தாவறட்சி, வாந்தி, நஞ்சினால் ஏற்பட்டநோய் இவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. *(20)*

ஐ, ஒ. ஸக்ராஸம், க்ராஸாந்தரம்

ஒவ்வொரு பிடிச்சோற்றுடன் மருந்தைக் கலந்து உண்பது ஸக்ராஸம் என்ற முறையாகும். க்ராஸாந்தரம் என்பது ஒரு பிடிச் சோற்றுக்கும், மற்றொரு பிடிச் சோற்றுக்கும் நடுவில் மருந்து அருந்தும் முறை. இந்த இரு முறைகளும், பிராண வாயுவின் கோளாற்றினால் ஏற்பட்ட நோய்களுக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

ஸக்ராஸம் என்ற முறைப்படி சூர்ணம், லேகியம், வடகம் இவற்றை சடராக்னியின் வளர்ச்சிக்குப், ஆண்மை வளர்ச்சிக்கும் கொடுக்க வேண்டும்.

க்ராஸாந்தரம் என்ற முறையில் மருந்தை இதயநோய், வாந்தி, புகைபிடிப்பு இவற்றிற்குப் பயன்படுத்தவேண்டும்.

ஓ. இரவில்

கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் தோன்றும் நோய்களுக்கு இம்முறையைப் பயன்படுத்தவும். (21)

முற்கூறிய மருந்துண்ணும் காலங்களில் முதலாவதான அபக்தம் எனும் காலத்தில் நாவறட்சியுள்ளவன், குளிர்ந்த நீர் பருகியவன், அசீர்ணமுள்ளவன், பசித்தவன், வலிவற்றவன் இவர்கள் உணவு உண்ணாமல் மருந்து பருகக் கூடாது.

மற்ற காலங்களில் இதயத்திற்குப் பிடிக்காத, ஒத்துக் கொள்ளாத. அதிக தீஷ்ண குணமுள்ள, மிகச்சூடான, நெடியடிக்கும் மணமுள்ள, அதிக அளவுள்ள மருந்தைக் கொடுக்கக் கூடாது. (22)

சிகிச்சை தொடங்குமுன், நோய்க்குக்காரணம், முற்குறிகள், குறிகள், ஒத்துக்கொள்ளும் அல்லது ஒத்துக் கொள்ளாததை சோதிக்கும் முறை, நல்லோர் சொல், இந்த ஐந்து உபாயங்களால் பிணியைப் பரிசோதிக்க வேண்டும்.

பிறகு தகுதி, தகுதியின்மை என்ற முறையில் மருந்தை ஆராயவேண்டும். நோய், மருந்து இவற்றைப் பரிசோதனை செய்தபின் மருத்துவர் அறிவுடன் சிகிச்சையைச் செய்ய வேண்டும். (23)

இவ்வாறு மருத்துவம் செய்யாவிடில் குணமடைந்த நோய், மிகுதியுள்ள வாதம் முதலான தோஷங்கள் உடலில் இடம் பெற்று, சிறு காரணங்களால் அந்நோய் மறுபடியும் திரும்பி வந்துவிடுகிறது. (சிறு நெருப்புப் பொறியும் சிறுஉதவி பெற்று வளர்ந்துவிடுவது போல்)

ஆகையால் திரும்பிய நோயை சித்தி பெற்ற முன்னோர்களுடைய மருந்துகளை நன்கு யோசித்து உறுதியுடன் தீமை விளைவிக்காத மருந்தினால் குணமடையச் செய்ய வேண்டும். (24—25)

இடைவிடாமல் பயன்படுத்துவதாலும் அல்லது பிடிக்காததினாலும் உடலுக்கு ஏற்ற பொருள்களிலும் வெறுப்பு உண்டாகிறது. அப்பொழுது சேர்க்கை, செய்யும் முறை இவற்றினால் நோயாளிக்குப் பிடிக்கும்படி செய்ய வேண்டும். (26)

மனதிற்கு உகந்த பொருட்களால் மகிழ்ச்சி, வலிவு, உற்சாகம், சுவை, இன்பம் இவை ஏற்படுகின்றன. இவற்றால் நோயின் துன்பமும் நீங்குகிறது. (27)

உணவில் அவா, தோஷங்களின் குறைவு, நிலையற்ற நோய், இவற்றால் தோன்றுகிற சுவையின்மைக்கு, பத்தியம், அபத்தியம் இவற்றை அறிந்த மருத்துவர், அந்நிலைகளில் உடலுக்குத் தீமை விளைவிக்காத சோறு அல்லது தின்பண்டங்களைக் கலந்து மருந்தைக் கொடுக்கவேண்டும். (28)

குளிர்காலத்தில் வந்து குவிந்த கபத்தை சித்திரை மாதத்திலும், வெயிற்காலத்தில் சேர்ந்த வாதத்தை ஆவணி மாதத்திலும், மழை காலத்தில் ஒன்று சேர்ந்த பித்தத்தை கார்த்திகை மாதத்திலும் விரைவில் மருத்துவம் செய்து நீக்க வேண்டும். (29)

அல்லது

பிராவிருட் (ஆனி—ஆடி), சரத் (கார்த்திகை—மார்கழி), வசந்தம் (பங்குனி—சித்திரை) இப்பருவங்கள் உள்ள மாதங்களில் தோஷங்களை நீக்க வேண்டும்.

தோஷங்களை மூன்று மாதங்கட்கு ஒருமுறை வெளியேற்ற வேண்டும். வாததோஷத்தை ஆவணியிலும், பித்தத்தை கார்த்திகையிலும், கபத்தை சித்திரையிலும் நீக்க வேண்டும். (30)

இம்முறை நோயற்றவனுக்குக் கடைப்பிடிக்க வேண்டியது. நோயுற்றவனுக்கு குளிர்காலம், வெயிற்காலம், மழைக்காலம் இவற்றில் அப்பருவங்களுக்கு எதிரிடையான நிலையைத் தோற்றுவித்து தோஷங்களை நீக்க வேண்டும். தவிர்க்க முடியாத நோயைக் காலத்தை எதிர்பாராமல் உடன் சிகிச்சை செய்து போக்க வேண்டும். (31)

மருத்துவம் தொடங்கி, நாட்கள் ஏழு கழிந்த பின்பும் குணம் தெரியாவிடில் முதலில் தொடங்கிய சிகிச்சைக்குப் பதிலாக வேறு சிகிச்சை தொடங்க வேண்டும்.

முதலில் கொடுக்கப்பட்ட மருந்தின் வேகம் தணிவதற்கு முன் மற்றொரு மருந்தைச் சேர்த்துக் கொடுக்கக் கூடாது.

முன் கொடுக்கப்பட்ட மருந்து சிறிதளவு குணத்தை மட்டும் ஏற்படுத்தினால், முழு அளவு குணம் ஏற்பட அதே மருந்தை மேலும் தொடர்ந்து கொடுக்க வேண்டும். (32)

6. அரசர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து

இம்மருந்து மனதிற்கு இன்பம் அளிப்பதும், அளவில் குறைந்தும், தீமையற்றதும், சுத்தமானதும், மருத்துவ நூலில் கூறப்பட்டதாயும், அதிக குணம் விளைவிப்பதாயும், பல தடவைகள் நோய்களுக்குக் கொடுக்கப்பட்டு வெற்றி பெற்றதாயும் இருக்க வேண்டும்.

மருத்துவர் அம்மருந்தைத் தானும் உண்டு, சேவகர்களையும் உண்ணச் செய்து, கவனத்துடன் மந்திரி, ஆசிரியர் இவர்களின் உத்தரவு பெற்றுக் கொடுக்க வேண்டும். (33—34)

7. மருந்தின் சிறப்பு

நோயாளி ஓரிடத்தில் பிறந்து மற்றொரு இடத்தில் வசித்தாலும், பிறந்த இடத்தின் சூழ்நிலைக்குத் தகுந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும். ஒரு சமயம், அம்மருந்து கிடைக்காவிடில், அம்மருந்துக்கு ஈடான வசிக்கும் இடத்தில் கிடைக்கும் மருந்தைக் கொடுக்க வேண்டும். (35)

நல்ல சக்தி வாய்ந்த, பிறந்த இடம், வசிக்குமிடம், இவற்றில் தோன்றிய பொருட்களை ஊறவைத்து லகு, சுவை, நிறம், பக்குவம், மணம் இவை நிரம்பியதாய் தயார் செய்து தகுந்த காலத்தில் உணவு சீரணித்த பின், அளவுடன் ஒரே மனத்துடன் கொடுக்கப்பட்ட மருந்து அமுதத்திற்கு ஈடாக ஆகிறது. (36—37)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'பேஷஜாவசாரணீயம்' எனும் இருபத்துமூன்றாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்துநான்காவது அத்தியாயம்

*த்விவிதோபக்ரமணீயம்

'த்விவிதோபக்ரமணீயம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். *(1–2)*

1. இருவகை மருத்துவம்

மருத்துவம் செய்து கொள்ள வேண்டிய நோயாளிகள் இருவகைப்படுவர். அதனால் மருத்துவமும் இருவகைப்படும். ஒன்று ஸந்தர்ப்பணம் (உடலுக்கு வலிமையையும், மனதிற்கு களிப்பையும் உண்டுபண்ணுவது)

மற்றொன்று அபதர்ப்பணம் (உடலை இளைக்கச் செய்வது. மனதிற்குத் துன்பத்தைத் தருவது)

ஸந்தர்ப்பணத்திற்கு [1]பிருஹ்மணம் என்றும், அபதர்ப்பணத்திற்கு [2]இலங்கனம் என்றும் வேறு பெயர்களும் உண்டு.

உடலுக்கு வலிமையளிப்பது பிருஹ்மணம். உடலை இளைக்கச் செய்வது இலங்கனம்.

இவ்விரண்டும் பெரும்பாலும் நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், என்ற ஐம்பெரும் பூதங்களால் ஆனவை. அதிலும் பிருஹ்மணம், நிலம், நீர் இவற்றின் சேர்க்கையாலும், இலங்கனம், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றின் சேர்க்கையினாலும் உண்டாகின்றன. *(3—4)*

---

* த்விவிதோபக்ரமணீயம்—பிருஹ்மணம், இலங்கனம் என்ற இருவித சிகிச்சையை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. பிருஹ்மணம்—உடலுக்கு வலிமையளிப்பது.
2. இலங்கனம்—உடலை இளைக்கச் செய்வது.

[1]ஸ்நேகனம், [2]ரூக்ஷணம் [3]ஸ்வேதனம் [4]ஸ்தம்பனம் என்ற மருத்துவ முறைகள் பிருஹ்மணம், இலங்கனம் என்ற இருவகைகளிலேயே அடங்கி விடுகின்றன. ஐம்பெரும் பூதங்களும், உஷ்ணத்தை உண்டாக்குதல், குளிர்ச்சியைத் தருதல் என்ற இரு பிரிவுகளில் அடங்கி விடுகின்றன. ஆகையினால் ஸ்நேகனம், ஸ்தம்பனம் என்ற இரண்டும், குளிர்ச்சியைத் தரக்கூடியதாலும், பிருஹ்மணத்திலும், ரூக்ஷம், ஸ்வேதனம் இரண்டும் உஷ்ணத்தை அளிக்கக் கூடியதாலும் இலங்கனத்திலேயே அடங்கி விடுகின்றன. (5)

இலங்கனம் என்பது சோதனம், சமனம் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. இவற்றில் கோளாறடைந்த வாதம், பித்தம், கபம் முதலான தோஷங்களை உடலிலிருந்து வெளிப்படுத்தும் மருத்துவ முறை சோதனம் எனப்படும்.

2. சோதன சிகிச்சை ஐந்து வகை கொண்டது

கஷாய வஸ்தி, வாந்தி எடுக்கச் செய்தல், உடலுக்குள் உள்ள தோஷங்களை நீக்குதல், கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புக்களில் உள்ள தோஷங்களை வெளியேற்றுதல், இரத்தத்தை வெளிப்படுத்தல் என அது ஐவகைப்படும்.

3. சமன சிகிச்சை ஏழுவகை கொண்டது

சீற்றமடைந்த தோஷங்களை வெளிப்படுத்தாமலும், சமமான தோஷங்களை சீற்றமடையச் செய்யாமலும், கோளாறடைந்த தோஷங்களை மாத்திரம் தணிக்கச் செய்யும் சிகிச்சை முறை சமன சிகிச்சை எனப்பெயர் பெறும்.

அச்சிகிச்சை [5]பாசனம், [6]தீபனம், பசி, தாகம், உடற்பயிற்சி, வெயில், காற்று என ஏழு வகைப்படும்.

---

1. ஸ்நேகனம்—எண்ணெய்ப்பசை உண்டாக்குவது.
2. ரூக்ஷணம்—வறட்சித் தன்மையை உண்டாக்குவது.
3. ஸ்வேதனம்—வியர்வையை உண்டாக்குவது.
4. ஸ்தம்பனம்—நிறுத்தச் செய்வது.
5. பாசனம்— உணவைப் பக்குவம் செய்யக் கூடியது.
6. தீபனம்— சடராக்னியை வளர்ப்பது.

வாதம் கோளாறடைந்திருந்தால் பிருஹ்மண சிகிச்சையும், வாதம்–பித்தம் இரண்டும் கோளாறடைந்திருந்தால் சமன சிகிச்சையும் செய்யவேண்டும். (6—9)

4. பிருஹ்மண சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்

நோய், மருந்து, கள், பெண் சேர்க்கை, வருத்தம், இவற்றால் இளைத்தவன், சுமை தூக்குவதாலும், வழி நடப்பதனாலும் இளைத்தவன், இரத்தக் கசிவுடன் கூடிய இருமல் உடையவன், வலிவு குறைந்தவன், வறட்சித் தன்மையுடையவன், மெலிந்தவன், வாத நோயுற்றவன், கருத்தரித்தவள், ஈன்றவள், சிறுவர், முதியோர், ஆகிய இவர்கள் பிருஹ்மண சிகிச்சைக்கு ஏற்றவர்கள்.

இவர்கள் நீங்கலாக மற்றவர்களுக்கு கிரீஷ்ம பருவத்தில் (ஆனி–ஆடி) பிருஹ்மண சிகிச்சை செய்யலாம்.

5. பிருஹ்மண சிகிச்சைக்குரிய பொருட்கள்

புலால், பால், கற்கண்டு, நெய், இனிப்புப்பொருட்கள், எண்ணெய்ப் பொருட்களால் வஸ்தி கொடுப்பது, தூக்கம், இன்பம் தரும் படுக்கை, எண்ணெய்க் குளித்தல், மன அமைதியுடன் இருக்கச் செய்தல், மனமகிழ்ச்சி உண்டாக்குதல் ஆகிய இவற்றினால் பிருஹ்மண சிகிச்சை செய்யலாம். (10—11)

6. இலங்கன சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்

மேக ரோகம், ஆமதோஷம் உள்ளவன், அளவு கடந்த எண்ணெய்ப்பசை உள்ளவன், காய்ச்சல் கண்டவன், தொடை இரண்டும் கம்பத்தைப்போல் பருத்திருப்பவன், குஷ்டம், அக்கி, கட்டி, மண்ணீரல் நோய், தலை நோய், தொண்டைநோய், கண்களில் தோன்றும் நோய் இவற்றால் துன்புற்றவன், மிகப் பருத்தவன் ஆகிய இவர்கள் இலங்கன சிகிச்சைக்குத் தகுந்தவர்களாகின்றனர்.

இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு சிசிர பருவத்தில் (மாசி–பங்குனி) இலங்கனச் சிகிச்சை செய்யலாம். (12—13)

7. சோதன சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்

பருத்தவன், வலிமை, பித்தம், கபம் இவற்றை அதிகம் பெற்றவன், அசீரண நிலையில் உள்ளவன், காய்ச்சல் கண்டவன், வாந்தி எடுப்பவன், கழிச்சல் எடுப்பவன், இதய நோய் உள்ளவன், மலக்கட்டு உள்ளவன், உடலில் பளு உள்ளவன்,

ஏப்பம் விடுபவன், மனப்பிரட்டல் உள்ளவன் ஆகிய இவர்களுக்கு சோதன சிகிச்சை செய்ய வேண்டும்.

மேற்கண்ட நோய்கள் நடுநிலையில் உள்ளவர்களுக்குப் பெரும்பாலும், முதலில் பாசனம், தீபனம் என்ற முறைகளில் மருத்துவம் செய்ய வேண்டும்.

உடல் வலிவிழந்தவனுக்கு மேற்கண்ட நோய்கள் இருந்தால் பசி, தாகங்களைத் தடைப்படுத்திக் குணப்படுத்தலாம்.

வாதம்—பித்தம்—கபம் என்ற தோஷங்கள் நடுநிலையில் இருந்து உடல் வலிவு பெற்றவனுக்கு காற்று, வெயில், உடற் பயிற்சி என்ற முறையில் இலங்கன சிகிச்சை செய்ய வேண்டும். குறைந்த பலம், தோஷம் உள்ளவர்களுக்கு இலங்கன சிகிச்சை அவசியம். *(14— 15)*

இலங்கன சிகிச்சை செய்யத் தகுதியற்றவர்களுக்கு ப்ருஹ்மண சிகிச்சை செய்தல் கூடாது. ஆனால் பிருஹ்மண சிகிச்சை செய்யத் தகுதியுற்றவர்களுக்கு மிருதுவான இலங்கன சிகிச்சை செய்யலாம். முறைப்படி கலந்தும் செய்யலாம். ஒருசமயம் இலங்கனச் சிகிச்சை செய்யத் தகுந்தவர்களுக்கு பிருஹ்மணச் சிகிச்சை செய்ய நேரிட்டால், இடம், காலம், இவற்றின் நிலையைக் கவனித்து மருத்துவம் மேற்கொள்ள வேண்டும். *(16— 17)*

8. பிருஹ்மண சிகிச்சையினால் ஏற்படும் நோய்கள்

பிருஹ்மண சிகிச்சையினால் உடலில் வலிவும், வளர்ச்சியும் ஏற்படுகின்றன. நோய்கள் நீங்குகின்றன. இலங்கனச் சிகிச்சை நன்கு நிறைவேற்றப்பட்டால் புலன்களின் தெளிவு, மலம், சிறுநீர் போன்றவை சரியாக வெளிப்படுதல், உடல் லேசாக ஆதல், உணவில் சுவை, பசி, தாகம் இவை ஒரே சமயத்தில் தோன்றுதல், மனத்தெளிவு, நல்ல ஏப்பம், தொண்டை சுத்தமாயிருத்தல், நோய் தணிதல், உடலில் மிருதுத்தன்மை, உற்சாகம், சோம்பலின்மை ஆகிய இவை ஏற்படுகின்றன. *(18— 19)*

அளவு போன்ற முறைகளைக் கடைபிடிக்காமல் பிருஹ்மணம், இலங்கனம் என்ற சிகிச்சையைச் செய்யலாகாது.

தவறிச் செய்யும் பிருஹ்மணச் சிகிச்சையினால் அதிகப் பருமன் போன்ற நோய்களும், இலங்கன சிகிச்சையினால்

உடல் மெலிவு போன்ற நோய்களும் ஏற்படுகின்றன. அதிகப் பருமன், உடல் மெலிவு போன்ற நோய்களின் விளக்கமும், அதற்கான மருந்துகளும் இதே அத்தியாயத்தில் கூறப்படும்.

உடல் பருமனாயிருத்தல், மெலிவாக இருத்தல் ஆகிய இவற்றைக் கொண்டு பிருஹ்மணச் சிகிச்சையும் இலங்கனச் சிகிச்சையும் அதிகமாகச் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு கொள்ளலாம். (20—21)

அளவு கடந்து செய்யப்பட்ட பிருஹ்மண சிகிச்சை யினால் ஏற்படும் அதிகப்பருமன் போன்ற நோய்கள் முன்பே கூறப்பட்டன. குருகுணம் போன்ற குணமுள்ள பொருட் களைப் பயன்படுத்துவதால் வளர்ந்தும், உள்ளடங்கியுமுள்ள கபம், உணவு ரசத்துடன் கலந்து பக்குவமடையாமல் இரத்தம் முதலான தாதுக்களை கெட்டியாகச் செய்து, அதிகப் பருமனை உண்டாக்குகிறது. அதனால் பசி, தாகம், வியர்வை, மேல் மூச்சு, தூக்கமின்மை இவை அதிகரிக்கும். கடின உழைப்பைப் பொறுக்க முடியாத நிலை, உடலின் சுருக்கங்கள், சுறுசுறுப் பின்மை, ஆயுட் குறைவு, பலக்குறைவு, உற்சாகமின்மை, உடலில் நாற்றம், திக்குதல் ஆகிய இவைகளும் உண்டாகும். (22—24)

உடலில் கொழுப்பு அதிகம் வளர்ச்சி பெறுவதனால், துவாரங்கள் அடைபடுகின்றன. அப்பொழுது வாயு வயிற்றுக் குள் அதிகம் பரவி சடராக்னியை அதிகம் தூண்டிவிடச் செய் கிறது. அதனால் பசி, தாகம் அதிகப்படுகிறது.

மரத்தின் பொந்தில் உள்ள நெருப்பு, காற்றுடன் சேர்ந்து வளர்ந்து மரத்தையே எரிப்பதுபோல், வயிற்றுக்குள் உள்ள சடராக்னியும் (ஒருவித கனல்) வாயுவுடன் சேர்ந்து வளர்ந்து உடல் பருமன் உள்ள மனிதனை எரித்து விடுகிறது.

வியர்வையைப் பெருக்கும் நரம்புகள் கொழுப்பிற்கு இருப்பிடமாகையாலும் கொழுப்பு உருகும் தன்மையுடைய தாலும், கபத்துடன் கலந்திருப்பதாலும், அதிகப்பருமன் உள்ளவனின் உடலிலிருந்து வியர்வை அதிகம் வெளிப்படு கிறது. (25—26)

அதிகப் பருமனான மனிதனுடைய உடல் துவாரங்கள் அடை படுவதனால், வயிற்றில் உள்ள உணவு ரசம், உடல் முழு வதும் பரவுவதில்லை. கொழுப்பு அதிகரிக்கிறது. கொழுப்பில்

மிஞ்சிய மற்ற உணவு ரசம், சிறிதளவே இருப்பதனால் இரத்தம் போன்ற தாதுக்களை வளர்ப்பதற்குப் போதுமானதாக அது ஆவதில்லை. (27— 28)

வாதம் போன்றவை சமமாக வளர்ச்சி பெற்றிருந்த போதிலும், முன்பே வளர்ச்சியடைந்த கொழுப்பு மற்றவைகளைக் காட்டிலும் அதிகம் வளர்ந்து விடுகிறது. இதனால் இரத்தம் போன்ற தாதுக்களில் தீமைகள் ஏற்படுகின்றன.

கொழுப்பினால் பருத்த மனிதர்களுக்கு மேல்மூச்சு போன்ற நோய்கள் விரைவில் தோன்றுகின்றன. காய்ச்சல், மகோதரம், பவுத்திரம், நீரிழிவு, கம்பத்தைப் போன்று தொடைகள் பருத்திருப்பது, சிறுகட்டிகள், பெருங்கட்டிகள் போன்ற நோய்களையும் அது ஏற்படுத்துகின்றது. (29— 30)

9. அதிகப்பருமன் உள்ளவனின் அறிகுறிகள்

அளவுக்கு மீறி உடல் பருமனாவதால், உற்சாகமின்மை, பின்தட்டு, வயிறு, மார்பகம் இவற்றின் அசைதல் போன்றவை ஏற்படும்.

பருமனாய் உள்ளவனுக்கு வாதத்தையும், கொழுப்பையும், கபத்தையும் நீக்குபவைகளான முழு உணவு வகைகளைக் கொடுக்க வேண்டும்.

கொள்ளு, காராமணி, யவஅரிசி, கம்பு, மொச்சை,பயறு போன்ற தானியங்களை உணவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

அரிஷ்டம், தேன் கலந்த நீர், தெளிந்த மோர், தீக்ஷ்ண குணமும், உஷ்ண வீர்யமும், வறட்சியைத் தோற்றுவிக்கக் கூடியதும், பிளக்கும் தன்மை உடையதுமான மருந்து ஆகியவற்றை அருந்தச் செய்ய வேண்டும்.

கவலைப்படுதல், புணர்தல், உடற்பயிற்சி, வாந்தி—பேதிக்குக் கொடுத்து உடலைச் சுத்தம் செய்தல், குறைவாகத் தூங்குதல் போன்றவைகளை உடலுக்கு ஏற்றவாறு கடைபிடிக்க வேண்டும். இதேபோல், வறட்சியளிக்கக்கூடிய பூச்சைப் பூசி நீராடச் செய்ய வேண்டும். (31— 33)

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றின் தூளைத் தேனில் கலந்து பருகச் செய்ய வேண்டும்.

சீந்திற்கொடி, கடுக்காய், கோரைக்கிழங்கு, ரசாஞ்சனம், வில்வவேர், பெருவாகை வேர், குமிழம் வேர், பாதரிவேர், முன்னைவேர் இவற்றைத் தூள் செய்து, குக்குலுவுடனோ, சிலாசத்து அல்லது முன்னை இவற்றுடன் கலந்து உபயோகிப்பது சிறந்தது.

வாயுவிடங்கம், சுக்கு, யவக்ஷாரம், காந்த பஸ்மம் இவற்றைத் தேனில் கலந்து அருந்தச் செய்யவும். இதேபோல் யவஅரிசி, நெல்லிக்காய் இவற்றின் சூர்ணத்தைத் தேனில் கலந்து கொடுத்தால் அது அதிகப்பருமனைக் குறைக்கும். (34—36)

10. மலக்கார சூர்ணம்

மருக்காரைக் காய், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோரைக்கிழங்கு, ஏழிலம் பாலை, வேம்பு, மோர்த் தெளிவு, வட்டத்திருப்பி, சரக்கொன்னை ஆகிய இப்பொருட்களை சம எடையில் எடுத்து கஷாயம் தயாரித்துப் பருகினால் [1]அதிபிருஹ்மணத்தினால் ஏற்படும் நோய்கள் நீங்கும்..

11. வெட்பாலை சூர்ணம்

வெட்பாலை, சரக்கொன்னை, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, கருங்காலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வேம்பு, சிறு நெருஞ்சில் ஆகிய இவற்றைக் கஷாயமாக்கிப் பருகினாலும், தூள் செய்து உடலில் பூசி, நீராடினாலும் பருமன் குறையும்.

12. பெருங்காய சூர்ணம்

பெருங்காயம், கோமேதகம் என்ற கல், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், க்ரௌஞ்சப் பறவையின் எலும்பு, சிறு நெருஞ்சில், ஏலம், ஆடுதொடா இலை, வசம்பு, ஓமம், சிறு பீளை ஆகிய இவற்றைப் பொடி செய்து மோர் அல்லது தயிர்த்தெளிவு, அல்லது இலந்தைப் பழச்சாறு இவற்றில் ஏதாவது ஒன்றுடன் கலந்து பருகினால் நீர்ச் சுருக்கு, கிருமி நோய்கள், பிரமேகம், பருமன் இவைகள் நீங்கும். (37—40)

13. வாயுவிடங்காதி சூர்ணம்

வாயுவிடங்கம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், எண்ணெய், சத்துமா, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் ஆகிய இவற்றைச் சமஎடையில் எடுத்துப் பொடி செய்து, இரும்புப்

---

1. அதிபிருஹ்மணம்— அதிகப் பருமன்.

பாத்திரத்தில் காய்ச்சித் தயார் செய்த [1]மந்தம் என்பதுடன் இதைக் கலந்து அருந்தினால் அதிகப் பருமனால் உண்டான நோய்கள் விலகும்.

14. சுக்கு, மிளகு, திப்பிலி சூர்ணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகிணி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முருங்கை, வாயுவிடங்கம், அதிவிடயம், ஓரிலை, பெருங்காயம், சுவர்ச்சலம் எனும் உப்பு (கரி உப்பு), சீரகம், ஓமம், தனியா, கொடிவேலி, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்தரி, முள்ளங்கத்தரி, கொட்டைக்கரந்தை, வட்டத்திருப்பி, பாக்கு மரவேர் என்ற இருபத்து நான்கு சரக்குகளையும், சமஅளவு எடுத்துத் தூள் செய்யவும். இதைத் தேன், நெய், எண்ணெய் இவற்றுடன் சம அளவில் சேர்த்து 16 மடங்கு சத்துமாவில் கலந்து உட்கொண்டால், அதிகப்பருமனால் உண்டாகும் நோய்கள் விலகிவிடும்.

மேலும் இதய நோய், காமாலை, வெண்குஷ்டம், சுவாசம், இருமல், தொண்டைக்கட்டு ஆகிய நோய்களும் நீங்கும்.

இது அறிவு, சமயோசித அறிவு, நினைவு இவற்றை உண்டுபண்ணும். குறைந்த சடராக்னியை வளர்க்கும்.

அதிகப் பருமனால் தோன்றும் நோய்களில், நோய்க்குத் தகுந்தவாறு வியர்வைச் சிகிச்சையும் இரத்த எடுப்பும் செய்ய வேண்டும். (41—46)

15. அதிகப் பட்டினிச் சிகிச்சையால் தோன்றும் தீமைகள்

அதிக அளவில் இலங்கனச் சிகிச்சை செய்வதனால், உடல் மெலிவு, தலை சுற்றல், இருமல், அதிக நாவறட்சி, சுவையின்மை இவை உண்டாகின்றன.

எண்ணெய்ப்பசை, சடராக்னி, தூக்கம், பார்வை, காது, விந்து, உடல்ஒளி, பசி, குரல் ஆகிய இவற்றிற்கு அழிவும் ஏற்படுகிறது.

சிறு நீர்ப்பை, இதயம், தலை, பின்பாகம், தொடை, புட்டம், விலாப்பக்கம் இந்த ஏழு இடங்களில் வலி உண்டாகும்.

---

1. மந்தம்— நெய்யில் பிசைந்த சத்துமாவை குளிர்ந்த நீரில் கலக்கி வைத்துக்கொள்வது.

காய்ச்சல், பிதற்றல், வாதம் மேல்நோக்கிச் செல்லுதல், உடல்வாட்டம், வாந்தி, பூட்டுக்களில் வலி, எலும்பு முறிவது போன்ற வலி ஆகிய இவையும் உண்டாகும். மலம், சிறுநீர் தடைப்படும்.

மிக்க இளைத்திருப்பவனால் உழைப்பு, மழை, குளிர்ச்சி, உஷ்ணம், பசி, தாகம், போதும் என்ற உணர்வு, நோய், மருந்தின் வீர்யம் ஆகிய இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாது. வலி குறைவாக இருப்பதனால் சுவாசம், இருமல், உடலுருக்கி நோய், மண்ணீரல் நோய், குன்மம், மூலம், சடராக்னிக் குறைவு, இரத்தம், பித்தம் ஆகியவை இவற்றால் உண்டாகும் காய்ச்சல் இவை ஓடிவந்து பிடித்துக் கொள்கின்றன. (47— 50)

16. மெலிந்திருப்பதன் மேன்மை

பருமனாயிருப்பதைவிட மெலிந்திருப்பது மேலானது. பருமனாயிருப்பதற்கு மருந்து அரிது. பருமனைக் குறைக்க பிரும்ஹணச் சிகிச்சையும், இலங்கனச் சிகிச்சையும் போதுமானதல்ல. பருமனைக் குறைக்க கொழுப்பு, சடராக்னி, வாதம் இவற்றை அழிக்கக்கூடிய மருந்து தேவைப்படுகிறது.

இலங்கனத்தினால் கொழுப்பு அழிகிறது. அதேசமயம் சடராக்னியும், வாதமும் அழிவதில்லை.

பிரும்ஹணச் சிகிச்சையால் சடராக்னியும், வாதமும் தணிகிறது. அதேசமயம் கொழுப்பு அழிவதில்லை.

இனிப்புச்சுவை, எண்ணெய்ப்பசை இவற்றுடன் கூடிய பொருட்களைப் போதுமளவு உண்பதனாலும், உழைக்காததினாலும் உடல் மெலிவு நீங்கி விடுகிறது.

மிகவும் எதிரிடையான கைப்பு, உவர்ப்பு, துவர்ப்புச் சுவை மிகுந்ததும், ரூக்ஷ குணமுள்ளதுமான உணவு வகைகளையும், மருந்தையும் பயன்படுத்துவதனால் பருமன் குறைகிறது. (51— 52)

17. மிகவும் மெலிந்திருப்பவரின் அறிகுறிகள்

பின்பாகம், வயிறு, கழுத்து இவை உலர்ந்திருக்கும். விரல்களின் கணுக்கள் பருத்திருக்கும். நரம்புகள் வெளியில் காணப்படும். இக்குறிகள் உள்ளவன் மிக மெலிந்தவன் எனப்படுகின்றான்.

இதைப் போக்க முன்பு கூறிய பிரும்ஹண சிகிச்சையைச் செய்ய வேண்டும். இதேபோல் அமுக்கராங் கிழங்கு, முருக்கன் கிழங்கு ஆண்மையை வளர்க்கும். அத்துடன் உணவு வகைகள் மருந்துகள் கொடுப்பது நலம்.

கவலைப்படாமல், மகிழ்ச்சியுடன் இடைவிடாது பிரும் மணச் சிகிச்சையைச் செய்துகொண்டு நன்கு தூங்குவதனால் மிகவும் இளைத்திருப்பவன் பன்றிபோல் பருத்துவிடுகிறான். (53— 55)

அதிகம் இளைக்கச் செய்வதனால் உண்டான நோய் களை நன்கு நீக்கும் தன்மையுடையதும் உடலுக்கு வலிவு தரக்கூடியதுமான மருந்தை உபயோகப்படுத்த வேண்டும்.

திடீர் என்று இளைத்தவன், உடனே செய்யும் பிரும்ஹண சிகிச்சையினால் வலிவு பெறுகிறான். மேலும் சிறிது சிறிதாக இளைத்துக் கொண்டு வருபவன், பிரும்ஹண சிகிச்சையை இடைவிடாமல் கடைபிடிப்பதனால் பருத்துவிடுகிறான். ஆகை யால் இருவித பிரும்ஹணச் சிகிச்சைகளையும் உடல், அளவு, சடராக்னி, வலிவு இவற்றை நன்கு ஆலோசித்து பயன்படுத்த வேண்டும். (56—57)

18. புலாலின் சிறப்பு

உடலுக்கு வலிவை அளிக்கக்கூடியவற்றில் புலாலைப் போல் வேறு ஒரு பொருளும் இல்லை. அவற்றில் இறைச்சி உண்ணாத பிராணிகளின் மாமிசத்தைவிட இறைச்சி உண்ணும் பிராணிகளின் மாமிசம் சிறந்தது. இறைச்சி உண்டு வாழும் பிராணிகளின் உடல் இறைச்சியைக் கொண்டே வளர்ந்திருக் கிறது என்பதுதான் அதன் காரணம். ஆகையினால் அவ்வித பிராணிகளின் புலால் இளைத்தவனுக்கு சிறப்பான வலிவைத் தரக்கூடியது. அந்தப் புலாலுடன் உப்புக் கலந்து இலங்கனத்தி னால் ஏற்பட்ட நோய்களுக்குக் கொடுக்க வேண்டும்.

இதேபோல் காற்று மிகுதியாயுள்ள இடங்களில் வாழும் பிராணிகள், பறவைகள், இவற்றின் புலாலை, மசாலாவுடன் சேர்த்து நெய், போன்றவற்றினால் பக்குவம் செய்தோ, பக்குவம் செய்யாமலோ உண்ணலாம்.

மாமிசரசம், பால் போன்ற உடலுக்கு வலிவு அளிக்கக் கூடிய பொருட்களால் பிரும்ஹண சிகிச்சை செய்ய வேண் டும்.

இளைத்தவன், காய்ச்சல் உள்ளவன் இருமல் நோயுடையவன், நீர்ச் சுருக்கு உள்ளவன், நாவறட்சி உள்ளவன், கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் தோன்றும் வாத நோயாளி, வாதம் தடைபட்டுத் தோன்றும் நோய்கள் உள்ளவன், மலக்கட்டு உடையவன் ஆகிய இவர்களுக்கு பிரும்ஹண சிகிச்சை செய்ய வேண்டும். (58—61)

19. உடனடியாக வலிவைத் தரக்கூடியவை

அரிசித்திப்பிலி, கற்கண்டு, எண்ணெய், தேன் இவை சம அளவு, இதைவிட இருமடங்கு சத்துமா இவற்றின் கலப்பிற்கு [1]மந்தம் எனப்பெயர். இதை மெலிந்தவனுக்கும், காய்ச்சல் தோன்றிய நோயாளிக்கும் பயன்படுத்தலாம்.

கற்கண்டு, தேன், கள், சத்துமா இவற்றைக் கலந்து கொடுக்கலாம். தேன்பாகு, சத்துமா, நெய், தயிர்த்தெளிவு புளிக்காடி இவற்றால் செய்த மந்தத்தைக் கொடுப்பதனால் நீர்ச் சுருக்கு, வயிற்று உப்புசம், வாதம், மேல்நோக்கிச் செல்லும் நோய் ஆகிய இவை நீங்கும்.

பேரீச்சங்காய், திராக்ஷை, புளிவஞ்சி, புளி மாதுளம், ஈச்சம்பழம், நெல்லிக்காய் இவற்றால் செய்த மந்தம், நாவறட்சி முதலிய நோய்களை உடனடியாக நீக்கும்.

இனிப்பு, புளிப்புச் சுவையுள்ள பொருட்களால் நீரில் செய்த மந்தத்தை எண்ணெய் அல்லது நெய்யுடன் கலந்தோ, கலக்காமலோ கொடுப்பதினால் உடனே உடல் வலிவு பெறும். உடற்கட்டு, நிறம், வலிவு இவற்றை அளிக்கும். (62—65)

20. பருமனாயுள்ளவன், மெலிந்தவன் இவர்களின் சிகிச்சையில் வேறுபாடு

பருத்தவனுக்கு குரு குணமுள்ளதும், உடலை இளைக்கச் செய்வதுமான உணவுவகை, மருந்து வகை ஆகிய இவற்றை அளிக்க வேண்டும்.

இளைத்தவனுக்கு இலகு குணமுள்ளதும், வலிமை அளிக்கக் கூடியதுமான உணவு வகையைக் கொடுக்க வேண்டும்.

பருமனாக உள்ளவனுக்கு யவதானியத்தையும், மெலிந்தவனுக்கு கோதுமையையும் பக்குவம் செய்து கொடுக்கலாம்.

---

1. மந்தம்—நெய்யில் பிசைந்த சத்துமாவை, குளிர்ந்த நீரில் கலக்கி வைத்துக் கொடுப்பது.

இயற்கையாகவே பருத்தவனுக்கும், மெலிந்தவனுக்கும் இம் முறையையே கையாளலாம். இயற்கையாக பருமனாயிருப்ப தும், இளைத்திருப்பதும் நோயே ஆகும். அதற்கும் பிருஹ் மணம், இலங்கனம் என்ற சிகிச்சையைத் தக்கபடி பிரித்துச் செயல்படுத்த வேண்டும். 66—67)

21. முடிவுரை

பிருஹ்மணம், இலங்கனம் எனும் சிகிச்சையை முறையாகச் செய்வதினால் சமானமான தாதுக்கள், சடராக்னி, உடற் கட்டு, உறுப்புகளில் உறுதி, வலிவு, இவற்றை நோயாளி பெறுகிறான். துன்பம், வெயில் இவற்றால் அவன் துன்புறுவ தில்லை.

வாதம் போன்ற தோஷங்களின் போக்கிற்கு ஏற்றவாறு சிகிச்சையும், மலத்தைக் கட்டுவது, மலத்தை வெளிப்படுத்து வது போன்ற பல வகைகளாக ஆகின்றது. இப்படி சிகிச்சை பலவிதமாக இருப்பினும், பிருஹ்மணம், இலங்கனம் என்ற சிகிச்சைக்கு அது வேறுபட்டதன்று. (68—69)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'த்விதோ பக்ரமணீயம்' எனும் இருபத்துநான்காவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தைந்தாவது அத்தியாயம்

*ஸ்நேக விதி

'ஸ்நேக விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். (1—2)

எண்ணெய் வகைச் சிகிச்சை செய்வதற்கு முன்பு அதற்குத் தேவையான பொருட்கள், அதனால் ஏற்படும் தீமைகளைத் தவிர்ப்பதற்கான பொருட்கள் இவற்றைத் தயார் செய்து கொள்ள வேண்டும். (3)

1. எண்ணெய்ப் பசை உண்டாக்கும் பொருட்கள்

குரு குணம், குளிர்ச்சியான வீரியம், இளகச் செய்யும் தன்மை, எண்ணெய்ப் பசை, மந்த குணம், நுண்ணிய துவாரங்களிலும் பரவும் தன்மை, மிருது, திரவம் என இப்படிப் பட்ட தன்மையுடைய மருந்துகள் பெரும்பாலும் எண்ணெய்ப் பசையை யுண்டாக்குபவை. இவற்றிற்கு எதிரிடையான இலகு, உஷ்ணம், உறுதி, வறட்சித்தன்மை, தீக்ஷ்ணம், பளு, கடினம் ஆகிய தன்மையுடைய பொருட்கள் பெரும்பாலும் வறட்சித் தன்மையை உண்டாக்குபவை.

2. எண்ணெய்ப் பசையுள்ள பொருட்கள்

எண்ணெய்ப் பசை தரும் பொருட்களில் நெய், மஜ்ஜை (எலும்புக்குள் உள்ள சோறு) வஸை, (நிணநீர்) எண்ணெய் ஆகியவை சிறந்தவை. இந்நான்கிலும் மிக உயர்ந்தது நெய். தன்னிடம் சேரும் பொருளின் தன்மையை ஏற்றுக்கொண்டு தன் குணத்தை விடாமலிருப்பது, இனிப்புச் சுவையுடையது, எரிச்சல் உண்டாக்காதது, பிறவியிலேயே ஒத்துக் கொள்வதனாலும் நெய் சிறந்ததாகும்.

---

*ஸ்நேக விதி—நெய், எண்ணெய், கொழுப்பு முதலியவற்றிற்குப் பொதுவாக ஸ்நேகம் எனப்பெயர். அப்பொருட்களை உடலின் உள்ளும் புறமும் செலுத்தி எண்ணெய்ப் பசையுள்ளதாகச் 'செய்யும் முறைகளைக் கூறுவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெற்றது.

இந்நான்கு எண்ணெய்ப் பசையுள்ள பொருட்களும் பொதுவாக பித்தத்தைத் தணிக்கக் கூடியவை. அவற்றுள் எண்ணெயைவிட வஸை, வஸையைவிட மஜ்ஜை, மஜ்ஜையை விட நெய் மிகச் சிறந்தது.

அதேபோல் வாத—கபத்தைப் போக்குவதில் நெய்யைக் காட்டிலும் மஜ்ஜை சிறந்தது. மஜ்ஜையைவிட வஸையும், வஸையைவிட எண்ணெயும் மிக்க சிறந்தவை.

நெய், எண்ணெயைவிட குருகுணமுள்ளது. எண்ணெயை விட வஸையும், வஸையைவிட மஜ்ஜையும் மிக்க குரு குண முள்ளவை.

இரண்டு வகை எண்ணெய் சேர்க்கைக்கு யமகம் என்றும், மூன்றுவகைக் கூட்டிற்கு த்ரிவிருதம் என்றும், நான்கு வகைக் கூட்டிற்கு மகா ஸ்நேகம் என்றும் பெயர்.

எண்ணெய் வகைகளுக்குத் தயிர், பால், மாமிசம், எலும்பு, விதைகள், கட்டைகள் இவை இருப்பிடமாகின் றன.

3. எண்ணெய்ச் சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்

வியர்வைச் சிகிச்சைக்குத் தகுதியுள்ளவர், வாந்தி—பேதி மருந்து கொடுக்க உகந்தவர்கள், கள் அருந்துவதில் விருப்ப முள்ளவர்கள், புணர்ச்சியில் ஈடுபடுபவர்கள், உடற்பயிற்சியில் ஆர்வம் கொண்டவர்கள், நன்கு ஆலோசனை செய்பவர்கள், முதியோர்கள், சிறுவர்கள், வலிவற்றவர்கள், மெலிந்தவர்கள், வறட்சித் தன்மையுடையவர்கள், விந்து, இரத்தம் குறைந் தவர்கள், வாத நோயால் பீடிக்கப்பட்டவர்கள், அபிஷ்யந்தம் என்ற கண் நோய் உடையவர்கள், பார்வைக் குறைவுள்ளவர் கள், கஷ்டப்பட்டு கண் இமையைத் திறக்கக்கூடியவர்கள் ஆகிய இவர்கள் எண்ணெய்ச் சிகிச்சைக்குத் தகுந்தவர்களா வர்.

4. எண்ணெய்ச் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

குறைந்த சடராக்னி உள்ளவர், மிக்க சடராக்னி உள்ள வர், அதிகம் பருத்தவர், வலிவற்றவர், கம்பத்தை போல் தொடை பருத்திருப்பவர், கழிச்சல் அதிகம் உடைய வர், தொண்டை நோய், இடுவிஷம், மகோதரம், மூர்ச்சை, வாந்தி, சுவையின்மை, கபம், நாவறட்சி, கள் இவற்றால் துன்புற்றவர், கருச்சிதைவு பெற்றவர், மருந்தை மூக்கிலிடும்

சிகிச்சை, வஸ்தி சிகிச்சை, வாந்தி—பேதிக்குக் கொடுக்கும் சிகிச்சை பெற்றவர் ஆக இவ்வனைவரும் எண்ணெய்ச் சிகிச்சைக்குத் தகாதவர்கள். (4—11)

5. எண்ணெய் வகையின் சிறப்புக்கள்

அறிவு, நினைவாற்றல், அறிவுத்திறன், சடராக்னி வளர்ச்சி ஆகியவற்றை விரும்புகிறவர்களுக்கு எண்ணெய்ச் சிகிச்சையில் நெய்யைப் பயன்படுத்த வேண்டும்.

நரம்புச்சுருட்டல், கிருமி நோய், கப நோய், கொழுப்பு, வாதம் இவற்றால் உண்டான நோய்களுக்கும், உடல் இலேசாக இருப்பதையும், உறுதியாக இருப்பதையும் விரும்புகிறவர்கள், கல்குடல் உள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கும் எண்ணெய்ச்சிகிச்சையில் எண்ணெய் சிறந்தது.

வாதநோய், வெயில், வழிநடப்பு, சிற்றின்பத்தில் மிக்கப் பற்று, உடற்பயிற்சி, வலிவிழந்த தாதுக்கள், வறண்ட உடல், துன்பங்கள் பொறுக்காமை, மிக்க சடராக்னி, வாதத்தினால் அடைபட்ட துவாரங்கள் என இவற்றை உடையவர்களுக்கு எண்ணெய்ச் சிகிச்சை முறையில் வஸையும் மஜ்ஜையும் சிறந்தவை.

பூட்டுக்கள், எலும்பு, மர்ம ஸ்தானங்கள், வயிற்றின் உள் உறுப்புகள், இவற்றின் வேதனையிலும், சுட்ட புண், அடிபட்ட காயம், பெண்குறி நழுவிப்போதல், கண், தலை இவற்றில் உண்டாகும் நோய்கள் ஆகிய இவற்றிற்குச் செய்யும் எண்ணெய் சிகிச்சையில் வஸை மிகச் சிறந்தது. (12—14)

ஆவணி மாதத்தில் எண்ணெயும், கார்த்திகை மாதத்தில் நெய்யும், சித்திரை மாதத்தில் வஸையும் மஜ்ஜையும், எண்ணெய்ச் சிகிச்சையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

சித்திரை, கார்த்திகை, ஆவணி மாதங்களில் கதிரவன் நன்கு ஒளி வீசும்போது எல்லோருக்கும் எல்லாவகை எண்ணெய்ச் சிகிச்சையும் செய்யலாம்.

தோஷங்கள் சமநிலையில் உள்ளபோதும், வாதம், கபம் இரண்டும் சேர்ந்து சமநிலையில் இருந்தபோதிலும், கபம் தனித்திருந்து சமநிலையில் இருந்தபோதிலும், கோளாறு அடைந்த போதிலும், பகலில் எண்ணெய்ச் சிகிச்சை செய்ய வேண்டும்.

இதேபோல் தனியாக பித்தம் சமநிலையில் இருந்தபோதிலும், பித்தவாயு, பித்த கபம் இரண்டின் சேர்க்கையில் சமநிலையில் இருந்தபோதிலும், கோளாறு அடைந்தபோதிலும் இரவில் எண்ணெய்ச் சிகிச்சை செய்ய வேண்டும். *(15—16)*

நோயாளிக்கு எண்ணெய்ச் சிகிச்சை செய்யும்படி நேரிட்டால் குளிர்காலத்தில் தோஷங்களின் நிலையைக் கவனித்து பகலிலும் எண்ணெயைப் பருகச் செய்யலாம். அதேபோல் உஷ்ண காலத்தில் எண்ணெய் வகையைப் பருகும்படி நேரிட்டால் நோய்களின் நிலையைக் கவனித்து இரவிலும் நெய்யைப் பருகச் செய்யலாம்.

இதற்கு மாறாக பகலில் நெய்யையும், இரவில் எண்ணெயையும், பருகச்செய்தால் முறையே வாத கபத்தினால் உண்டாகும் நோய்களையும், பித்தத்தால் உண்டாகும் நோய்களையும் தோற்றுவிக்கும். *(17—18)*

6. எண்ணெய் கொடுக்கும் முறை

அளவு, காலம், செயல், இடம், உடல், தோஷம், இயற்கை, இவற்றை ஆராய்ந்து தின்பண்டம், உணவு, லேகியம், கஞ்சி இவற்றுடன் கலந்து எண்ணெயைப் பருகச் செய்யலாம்.

வஸ்தி, மூக்கில் மருந்திடும் சிகிச்சை, எண்ணெய்க் குளித்தல், வாய் கொப்பளித்தல், தலையில் எண்ணெய் கட்டுதல், காதில் எண்ணெய் நிரப்புதல் கண்களில் எண்ணெய் கட்டுதல் இவற்றிலும் எண்ணெய் கூட்டிப் பயன்படுத்தலாம். *(19)*

''ரசபேதீயம்'' எனும் அத்தியாயத்தில் சுவையின் வகை, அறுபத்திமூன்று எனக் கூறப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு சுவையும் எண்ணெயுடன் கூட்டுச் சேர்வதினால் கூட்டு எண்ணெய் அறுபத்து மூன்றாகிவிடும். கூட்டுச் சேராமல் தனியாக இருப்பது ஒன்று. ஆக மொத்தம் அறுபத்து நான்காகிறது.

தின்பண்டம் போன்றவைகளின் சேர்க்கையாலும், வீர்யத்தைக் குறைத்தும், குறைந்த அளவில் கொடுப்பதாலும், எண்ணெயின் கூட்டுகள் கணக்கற்றவையாகிவிடுகின்றன. *(20)*

7. கூட்டுச்சேரா எண்ணெய் (அச்சபேயா)

கூட்டுச் சேரா எண்ணெயில் முன் சொன்ன பொருட்களின் சேர்க்கை இல்லாததனால் இது இப்பெயர் பெறுகிறது.

கூட்டுச் சேரா எண்ணெய் கொடுப்பது மிகச் சிறந்தது. இது எண்ணெய் வகைச் சிகிச்சையில் விரைவில் பயனை அளிக்கிறது. *(21)*

8. எண்ணெயின் அளவு

இரண்டு ஜாமங்களில் (ஆறு மணி நேரத்தில்) சீரணமாகக் கூடிய அளவு குறைந்த அளவு.

நான்கு ஜாமங்களில் (12 மணி) சீரணமாகக்கூடிய அளவு நடுத்தர அளவு.

எட்டு ஜாமங்களில் (24 மணி) சீரணமாகக் கூடிய அளவு உயர்ந்த அளவு.

தோஷம், மருந்து, இடம், நேரம்,வலிவு, உடலின் இயற்கை யமைப்பு, உடலுக்கு ஒத்துக் கொள்ளுதல், குணம், உணவு இவற்றை ஆராய்ந்து நோயாளியின் குடல் நிலையை அறியாத மருத்துவன் முதலிலேயே மிகக் குறைந்த அளவிலேயே எண்ணெய் பருகச் செய்ய வேண்டும். அறியாமல் அதிக அளவில் கொடுத்தால் நோயாளியின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். *(22—23)*

9. குறைந்த அளவு

வலிவு குறைந்தவர், சடராக்னி குறைந்தவர், சிறுவர், முதியவர், இன்பவாழ்வு வாழ்பவர், உணவுக் கட்டுப்பாடற்றவர், காலியான வயிறு உடையவர், காய்ச்சல், கழிச்சல், இருமல் இவற்றை உடையவர் இவர்களுக்குக் குறைந்தஅளவில் எண்ணெய்ப் பருகச் செய்ய வேண்டும். இம்முறை துன்பத்தை அளிக்காதது. உணவு வகையில் கட்டுப்பாடு அற்றது, தாமதித்து வலிவு அளிக்கக்கூடியது, இம்முறை நடுவில் ஏதோ ஒரு காரணத்தினால் நிறுத்தப்பட்டாலும் ஒரு கெடுதலையும் தோற்றுவிப்பதில்லை. *(24—25)*

10. நடுத்தர அளவு

மேகநோய், தொடை தூண்போல் பருத்து அசையாமலிருக்கச் செய்யும் நோய், நீரழிவு நோயினால் ஏற்படும் சிறு கட்டிகள், குஷ்டம், வாதரத்தம், மிருதுவான குடல் நிலை, இவற்றை உடையவர்களுக்கு நடுத்தர அளவு எண்ணெய் பருகச் செய்வது சிறந்ததாகும். இம்முறை எளிதில் எண்ணெய்ப் பசையை உண்டாக்குகிறது. வலிவைக் குறைப்பதில்லை. தீமை

களை அதிகமாக ஏற்படுத்துவதில்லை. குடலைச் சுத்தம் செய்வதற்குப் போதுமானது. (26)

11. உயர்ந்த அளவு

உடல் பருமன் உள்ளவன், சடராக்னி அதிகம் உள்ளவன், அதிக வலிவுள்ளவன், மிகுந்த பசி தாகமுள்ளவன், துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவன், குன்மம், வயிற்று உப்புசம், அக்கி, இந்நோயுடையவன், பாம்பு கடித்தவன், பைத்தியம் பிடித்தவன், நீர்ச்சுருக்கு உடையவன் இவர்களுக்கு அதிக அளவில் எண்ணெய் பருகச் செய்ய வேண்டும். இம்முறை உடலில் உள்ள எல்லா துவாரங்களிலும் ஊடுருவிப் பரவி விரைவில் நோய்களை நீக்குகிறது. (27—28)

முதல் நாள் உண்ட உணவு சீரணித்தபின் கூட்டுச்சேரா எண்ணெயை அதிக அளவில் வாந்திக்கும் பேதிக்கும் பயன் படுத்தவும்.

நோயைத் தணிப்பதற்கு முதல் நாள் உண்ட உணவு சீரணித்த பின், பசி எடுத்தபிறகு உணவு உண்ணாமல், வயிறு காலியாயிருக்கும்போது நடுத்தர அளவில் கூட்டுச்சேரா எண்ணெயைக் கொடுப்பது சிறந்தது. (29)

உடல் வலிவு பெற புலாலின் ரசம், கள் இவற்றை உணவுடன் சிறிதளவு கலந்து கூட்டுச் சேரா எண்ணெயைக் குறைந்த அளவில் கொடுக்க வேண்டும்.

சிறுவர், முதியவர், நாவறட்சியுள்ளவன், எண்ணெய்ப் பருகுவதில் வெறுப்புள்ளவன், கள் குடிக்கும் பழக்கமுள்ளவன், ஒவ்வொரு நாளும் புணருபவன், தினமும் எண்ணெய் குளிப்பவன், சடராக்னிக்குறைவுள்ளவன் இன்ப வாழ்வு வாழ்பவன், துன்பத்தைக் கண்டு நடுங்குகிறவன், மெதுவான குடல் பெற்றவன், குறைந்த தோஷங்களை உடையவன், மெலிந்தவன் இவர்களுக்கு கோடை காலத்தில் குறைந்தஅளவு கூட்டுச் சேரா எண்ணெயைப் பருகச்செய்வது நன்மையளிப்பதாகும்.

உணவு உண்பதற்கு முன்பு கொடுக்கப்பட்ட எண்ணெய், தொடை, பின்பாகம், இடுப்பு இவற்றிற்கு வலிவை அளிக்கும். மலம், சிறுநீர், கீழ்நோக்கிச் செல்லும் வாயு, இவற்றை நேராகச் செலுத்தும். ஆரோக்கியத்தை அளிக்கும். தொப்புளுக்குக் கீழ் உள்ள உறுப்புக்களில் தோன்றும் நோய்களைத் தணிக்கும்.

உணவுக்கு நடுவில் கொடுக்கப்படும் கூட்டுச்சேரா எண்ணெய், உடலுக்கு வலிவையும், சடராக்னிக்கு வலிவையும் கொடுக்கிறது. வலிவை நிலை நிறுத்துகிறது. வயிற்றுவலியைத் தணிக்கிறது.

உணவு உண்டபின் கொடுக்கப்படும் கூட்டுச் சேரா எண்ணெய், உறுப்புகளின் உறுதியை ஏற்படுத்துகிறது. கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் தோன்றும் நோய்களைத் தணிக்கிறது. (30—33)

வாதம் அதிகரித்திருந்தால் உப்புடன் கலந்த நெய், பித்தம் அதிகமாயிருந்தால் தனித்த நெய், கபம் அதிக அளவிலிருந்தால், யவக்ஷாரம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றுடன் கலந்த நெய் இவற்றை மருத்துவன் நோயாளிக்குப் பருகக் கொடுக்க வேண்டும். (34)

12. மருந்துடன் பருகும் பொருள்

கூட்டுச் சேரா எண்ணெய் பருகச் செய்தபின் அது எளிதில் சீரணமாவதற்குச் சுடுநீரை அருந்தச் செய்ய வேண்டும். சுடுநீர் பருகுவதால் வாயில் உண்டாகும் குழகுழப்பு நீங்கும்.

நீரடிமுத்து எண்ணெய், சேராங்கொட்டை எண்ணெய் இவற்றைப் பருகச் செய்தபின், சுடுநீரை அருந்தக் கொடுக்கக் கூடாது. சுடு நீரும் மேற்கண்ட எண்ணெய்களும், உஷ்ண வீர்யம் உடையவை. ஆதலால் சுடு நீரைப் பருகச் செய்யக் கூடாது. (35—36)

நீர் பருகச் செய்தபின் எண்ணெய் சீரணமாகும் வரை நோயாளியின் உடலைக் கெட்டியான போர்வையால் மறைத்து, காற்றில்லாத இடத்தில் படுக்கச் செய்யவும். நடுவில் தாகம் எடுத்தால் சிறிதுசிறிதாக சுடு நீரைப் பருகச் செய்யவும்.

தலைவலி, தலை சுற்றல், காறித்துப்புதல், மூர்ச்சை, களைப்பு, வெறுப்பு, சோர்வு இவை ஏற்பட்டால் மருந்து சீரணமாகிக் கொண்டிருக்கிறது என அறியவும்.

மேற்கண்டவை தணிந்துவிட்டால், உடலில் இலேசான தன்மை ஏற்பட்டிருந்தால் மருந்து சீரணித்துவிட்டது எனத் தெரிந்து கொள்ளவும்.

மருந்து சீரணித்தபின், வாயு நேராகச் செல்லும், ஆரோக்கியம் உண்டாகும், பசி தாகம் அடங்கும். ஏப்பம் சுத்தமாக வெளிவரும். (37—38)

மருந்து சீரணித்துவிட்டதா இல்லையா என சந்தேகம் ஏற்படுமாகில் மறுபடியும் சுடுநீரைப் பருகச் செய்யவும். அத னால் ஏப்பம் சுத்தமடையும். உணவில் சுவையும், உடலில் இலேசான தன்மையும் ஏற்படும். (39)

எண்ணெய் வகையைப் பருகப்போகிறவன், முதல் நாள் பருகியவன், அன்று பருகியவன் ஆக மூவரும், சூடான திரவப் பொருளையும், கபத்தை உண்டாக்காத அதிக எண்ணெய்ப் பசையற்ற, கலப்படமற்ற உணவையும் உட்கொள்ள வேண்டும். (40)

எண்ணெய் வகையைப் பருகியவன், நீராடவும், குடிக்க வும் சுடுநீரையே பயன்படுத்த வேண்டும். புலனடக்கத்துட னிருக்க வேண்டும். பகலில் தூங்கக் கூடாது. இரவிலேயே தூங்க வேண்டும். சிறுநீர், மலம் இவற்றின் வேகத்தைத் தடுக்கக்கூடாது.

உடற்பயிற்சி, வருத்தம், மழை, குளிர், வெயில், எதிர்க் காற்று, தேர், குதிரை போன்ற வாகனங்களில் சவாரி செய் தல், அதிகம் பேசுதல், பிரயாணம் செய்தல், நீண்டநேரம் அமர்ந்திருத்தல், மிகத் தாழ்வாகவோ அல்லது மிக உயர மாகவோ தலையணை வைத்துக் கொள்ளுதல், பகலில் தூங்கு தல், புகை, புழுதி இவற்றின் அருகே இருத்தல் ஆகிய இவற்றை விலக்க வேண்டும்.

எண்ணெய் வகை பருகப்படும் நாட்களில் எண்ணெய் பருகியபின் மேற்கண்ட பத்திய முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். இதே முறையை எல்லாவகைச் சிகிச்சையிலும், நோய் தணிந்தவர்களும் பின்பற்றலாம். நோயைத் தணிக்கச் செய்யும் எண்ணெய் முறைச் சிகிச்சையில் வாந்தி—பேதிக்குக் கூறிய கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். (41— 44)

எண்ணெய் வகையைப் பருகச் செய்வதற்குமுன் சட ராக்னியை நன்கு வளர்க்கக்கூடியதும், மலக்குடலுக்கு இலே சான தன்மையை உண்டாக்கக் கூடியதுமான மிருதுவான உணவை உட்கொள்ளச் செய்ய வேண்டும். (45)

கூட்டுச்சேரா எண்ணெயை, மிருதுவான மலக்குடல் உள் ளவனுக்கு மூன்று நாட்களும், கற்குடல் உள்ளவனுக்கு ஏழு நாட்களும் கொடுக்க வேண்டும். அல்லது எண்ணெய்ப் பசை உண்டாக்கும் வரை கொடுக்க வேண்டும்.

அதற்குமேல் பருகச் செய்தால் எண்ணெய் உடலுடன் ஒன்றி விடுகிறது, அதனால் உடலிலுள்ள மலங்களை வெளிப் படுத்துகிறதில்லை. அல்லது அதிக அளவில் பயன்படுத்துவ தால் உண்டான நோய்களைத் தோற்றுவிக்கிறது.

ஏரியில் நிறைந்துள்ள நீர், கரையை உடைத்துக் கொண்டு மண்ணுடன் வெளிவருவது போல் அதிக அளவில் பயன்படுத் திய எண்ணெய் வகை சடராக்னியை அணைத்து உடலுக்குத் துன்பத்தை விளைவிக்கிறது. (46—48)

13. நன்கு நிறைவேறிய எண்ணெய்ப் பருகும் சிகிச்சையின் அறிகுறிகள்

வாதம் தன் நிலைக்கு வருதல், உணவைச் சீரணிக்கும் சக்தி மிகுதியாதல், மலம் இளகி எண்ணெய்ப் பசையோடு சேர்ந்திருத்தல், உறுப்புகள் மிருதுவாகவும், எண்ணெய்ப் பசை யுள்ளதாகவும் இருத்தல் ஆகியவை தோன்றும்.

களைப்பு, எண்ணெய் வகையில் வெறுப்பு உண்டாதல், உடலில் மிருதுத்தன்மை, புலன்களின் தெளிவு இவைகளும் ஏற்படும். எண்ணெய்ப் பருகும் சிகிச்சை நன்கு நிறைவேறா விடில் முற்கூறிய அறிகுறிகளுக்கு எதிரிடையான குறிகள் காணப்படும்.

அதிகம் எண்ணெய் பருகச் செய்வதனால், பாண்டு நோய், சுறுசுறுப்பின்மை, மூக்கு, வாய், ஆசனத்துவாரம், இவற்றிலிருந்து நீர் ஒழுகுதல், ஆசன வாயில் எரிச்சல், சுவை யின்மை, வாந்தி, மூர்ச்சை, நாவறட்சி, சீதபேதி, எரிச்ச லுடன் கூடிய ஏப்பம், தலைசுற்றல், சுவாசம், இருமல் ஆகி யவை தோன்றும். (49—51)

அளவில்லாமல், வாத—பித்த கபங்களின் நிலையைக் கவனிக்காமல், காலமில்லாக் காலத்தில், முறைகேடான உணவு, பழக்க வழக்கங்களைப் பின்பற்றியபின், எண்ணெய் பருகச் செய்வதால் வீக்கம், மூலம், சோம்பேறித்தனம், தூக்கம், உணர்வின்மை, அரிப்பு, குஷ்டம், காய்ச்சல், பிறட் டல், வலி, வயிற்று உப்புசம், வலிவுக்குறைவு, வயிற்றுக்குள் உள்ள உறுப்புக்களில் மெலிவு, சுறுசுறுப்பின்மை, சீரணியாமை, அசைவற்றிருத்தல், பேச்சுத் தடைபடுதல், கட்டுப்பாடின்மை யால் வாதம் முதலான தோஷங்களால் ஏற்படும் நோய்கள், அதிகம் பருகுவதால் ஏற்படும் பாண்டு போன்ற நோய்கள் ஆகியவை ஏற்படும்.

மேற்படி நோய்கள் நீங்க, பசி, தாகம் இவற்றை அடக்குவதும், வாந்தி எடுக்கச் செய்தல், வியர்வை உண்டாக்குதல், வறட்சித் தன்மையுண்டாக்கும் உணவு, நீர், மருந்து இவற்றைப் பயன்படுத்தலும் இம்முறையைக் கடைபிடித்தலும் வேண்டும். மோர், அரிஷ்டம், கஞ்சிவகை, சம்பா அரிசி, கம்பு என்ற தானியம், கேழ்வரகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தேன், மற்றும் பசுவின் சிறுநீர், குக்குலு போன்ற இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

ஆங்காங்கு ஒவ்வொரு நோய்க்கும் சொல்லப்பட்டுள்ள சிகிச்சையையும் இங்குப் பயன்படுத்தலாம். (52—55)

இலங்கனச் சிகிச்சை நன்கு நிறைவேறியதன் அறிகுறிகளே வறட்சித்தன்மை உண்டாக்கும் சிகிச்சையின் அறிகுறிகளாகும். இலங்கனச் சிகிச்சை அதிகம் செய்வதனால் உண்டாகும் அறிகுறிகளே அதிக ரூக்ஷண சிகிச்சையின் அறிகுறிகள் எனவும் அறிந்து கொள்ளவும்.

வறட்சித் தன்மையை உண்டாக்கும் சிகிச்சை நன்கு நிறைவேறாததனால் ஏற்படும் அறிகுறிகளே எண்ணெய்ப் பசை உண்டாக்கும் சிகிச்சை நன்கு நிறைவேறாததன் அறிகுறிகளாம். (56)

இயற்கையாகப் பித்த ப்ரகிருதியான மனிதனுக்கு எண்ணெய் அதிகம் பயன்படுத்துவதால் சடராக்னி மிகவும் அதிகரிக்கிறது. அதனால் எண்ணெய் விரைவில் சீரணமாகி ஓஜஸ் எனும் தாதுவை உடல் முழுவதும் பரவச் செய்கிறது. அதனால் காய்ச்சல், மயக்கம் இவற்றுடன் உயிரை இழக்கச் செய்யும் தாகம் ஏற்படுகிறது. இதற்குக் குளிர்ந்த நீரை உடனே பருகச் செய்ய வேண்டும். இல்லாவிடில் உயிருக்கு அழிவு ஏற்படும். இந்தச் சமயத்தில் குளிர்ந்த நீரை ஊற்றுவதோ அல்லது மூழ்கவோ செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடில் அறையில் தடைபட்ட நல்ல பாம்பு கோபத்தின் காரணத்தினால் தன்னுடைய நஞ்சினாலேயே இறந்துவிடுவது போல், அதிகத் தாகத்தினாலே பீடிக்கப்பட்ட மனிதன் தன் சடராக்னியின் அதிக வளர்ச்சியினால் இறந்து விடுகிறான். (57—59)

பித்தப் பிரகிருதியான மனிதனுக்கு எண்ணெய் பருகுவதனால் ஏற்பட்ட அசிரணத்தினால் அதிக தாகம் ஏற்பட்டால் அவனுடைய தலை, முகம் இவற்றைக் குளிர்ந்த நீரால் நனைக்க வேண்டும். எண்ணெய் வாந்தி செய்விக்க வேண்டும். அப்படி வாந்தி செய்தும் தாகம் அடங்காவிடில் குளிர்ந்த நீரைக் குடிக்கச் செய்து, வறட்சியான உணவை உண்ணச் செய்து மறுபடியும் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

கபம்—பித்தம் அதிகம் உள்ள மனிதனுக்குத் தாகம் அதிகம் ஏற்பட்டால் எண்ணெயை முழுவதும் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

வாதம்—பித்தம்—கபம் இவை சமநிலை உள்ளவனுக்கு தாகம் அதிகம் ஏற்பட்டால் சுடுநீரால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும். பிறகு தோஷம் முதலானவற்றின் வலிவை ஆலோசித்து உணவு வகையை முன்கூறிய முறையில் கொடுக்க வேண்டும். *(60—61)*

பித்தம் அதிகமுள்ள மனிதனுக்கு கூட்டுச் சேரா நெய்யைக் கொடுக்கக்கூடாது. குறிப்பாக சீரணமாகாத பித்த நிலையிலும் கூட்டுச்சேரா நெய்யைக் கொடுக்கக் கூடாது.

பித்தத்தில் குடிக்கப்பட்ட நெய் பித்தத்துடன் கலந்து உடல் முழுவதும் பரவி, நோயை மேலும் வளர்க்கிறது.

பக்குவமாகாத பித்த நிலையில் குடிக்கப்பட்ட கூட்டுச் சேரா நெய், பக்குவமாகாத பித்தத்துடன் கலந்து உடல்களின் துவாரங்களை அடைத்து, நினைவு இழக்கச் செய்து உயிரை மாய்த்துவிடுகிறது. *(62)*

எண்ணெய் குடிக்கச் செய்தபின் வாந்திக்குக் கொடுக்காமலேயே மலம் கழிக்கச் செய்ய வேண்டுமானால் மூன்று நாட்களுக்குப் பிறகு மலம் கழிக்க மருந்து கொடுக்கவும். இம் மூன்று நாட்களில் எண்ணெய்ப்பசை, திரவம், உஷ்ண வீர்யமுள்ளதுமான காற்று நிரம்பிய இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிச ரசத்தை அருந்தச் செய்து வியர்வை சிகிச்சை செய்து மூன்று நாட்களுக்குப்பின் மலம் கழிக்க மருந்து கொடுக்க வேண்டும்.

அப்படி வாந்தி எடுக்கச் செய்ய வேண்டுமானால், எண்ணெய் குடித்த பிறகு முதல்நாள், எண்ணெய்ப்பசையுள்ள

தும், திரவமானதும், உஷ்ண வீர்யமுள்ளதுமான காற்றோட்டமுள்ள இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிச ரசத்தை அருந்தச் செய்து, இரண்டாவது நாள் எள்ளு, உளுந்து, தயிர், பால், வெல்லம், மீன், மாமிச ரசம் போன்ற கபத்தை வெளியேற்றக்கூடிய பொருட்களைக் கொடுத்து கபத்தை வெளிப்படுத்தியபின் வாந்தி எடுக்க மருந்து கொடுக்க வேண்டும். (63—64)

மாமிசம் அதிகமுள்ளவன், கொழுப்பு அதிகரித்தவன், கபம் அதிகம் உடையவன், சடராக்னி ஒரே நிலையில் இல்லாதவன், எண்ணெய் குடிப்பதற்குத் தகுதியுள்ளவன் ஆகிய இவர்களுக்கு எண்ணெய் சிகிச்சை செய்வதற்கு முன், வறட்சித் தன்மையை உண்டாக்க வேண்டும். அதன் பிறகு எண்ணெய் குடிக்கச் செய்து, வாந்தி எடுக்கவும், மலம் கழிக்கவும் செய்விக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் எண்ணெய்ச் சிகிச்சையினால் தோன்றும் நோய்கள் ஏற்படா.

அப்படியே வறட்சி உண்டாக்கியபின் எண்ணெய்ச் சிகிச்சை செய்வதனால் எண்ணெய் உடலில் ஒன்றிப் போகாததனால் அந்த எண்ணெய் மலங்களை வெளிப்படுத்தப் போதுமான சக்தியுடையதாக ஆகிறது. (65—66)

சிறுவர்கள், முதியவர்கள், எண்ணெய்ச் சிகிச்சைக்கு உண்டான கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க முடியாதவர்கள் ஆகிய இவர்களுக்கு குமட்டல் தோற்றுவிக்க, உடன் எண்ணெய்ப் பசை உண்டாக்கக்கூடிய அடியிற் கண்ட மருந்து முறைகளைக் கையாள வேண்டும்.

அதிகமான புலாலின் ரசத்தை எண்ணெயில் தாளித்துத் தயார் செய்த கஞ்சி, எள்ளுப்பொடி, நெய்யுடன் கலந்த தேன் பாகு, நெய்யுடன் கலந்த மசாலா, நீர்ப்பாங்கான, காற்றோட்டமுள்ள இடங்களில் வாழும் உயிரினங்களின் மாமிசத்தைக் கொதிக்க வைத்த ரசம், அல்லது நெய்யில் தாளித்த கஞ்சியுடன் கூடிய மேற்கண்ட மாமிச ரசம் ஆகியவற்றை அருந்தச் செய்ய வேண்டும்.

அதிகம் நெய் கலந்த எள்ளுப் பொடியினால் ஆகிய கஞ்சியையும், நெய் அதிகம் கலந்த சூடான கஞ்சியையும் பாலில் கலந்து, கற்சண்டு, நெய் உள்ள பாத்திரத்தில் கறந்த பால், அல்லது நெய், உப்புக் கலந்த பால், அல்லது மாமிச நிணநீர், எண்ணெய், நெய், எலும்புக்குள் உள்ள சோறு,

அரிசி இவற்றை எட்டுத்தோலா அளவில் எடுத்துத் தயார் செய்த கஞ்சி இவற்றைக் குடிக்கச் செய்ய வேண்டும். இது உடனே உடலில் எண்ணெய்ப் பசையை உண்டாக்கும்.
(67—71)

அல்லது பாலில் தயார் செய்த, அதிக எண்ணெய் வகை கலந்த உளுந்து சேர்த்து அரிசியினால் செய்த பாயசத்தை, எண்ணெய், சுக்கு, வெல்லம் இவற்றைக் கள் தெளிவுடன் அல்லது தயிருடன் சேர்த்துக் குடிக்கச் செய்யவும். இது சீரணமான பின் மாமிசரசம் கலந்த உணவைப் புசிக்கச் செய்யவும். அல்லது தயிர் ஏட்டை வெல்லத்துடன் கலந்து உண்ணச் செய்யலாம்.

இவ்வாறு பன்றியின் நிணநீரை, நெய், திப்பிலி, உப்பு, எள்ளுடன் சேர்த்துப் புசிக்கச் செய்யலாம். நெய், எண்ணெய், நிணநீர், மஜ்ஜை என்ற நான்கு எண்ணெய் வகை பொருள்களை திப்பிலி, உப்பு, தயிர்த்தெளிவு இவற்றுடன் கலந்து உண்ணச் செய்யலாம்.

திராக்ஷை, நெல்லிக்கனி இவற்றின் சாற்றில் தயிர், சுக்கு, மிளகு, திப்பிலி, நெய் கலந்து பக்குவம் செய்து பருகச் செய்யலாம். யவம் என்ற அரிசி, கொள்ளு, இலந்தை இவற்றின் கஷாயம், யவக்ஷாரம், பால், கள், தயிர் ஆகிய இவற்றைத் தயார் செய்து, அதற்குச் சமஅளவு நெய் சேர்த்துப் பருகச் செய்வது உடனே உடலில் எண்ணெய்ப் பசை உண்டாக்குவதன் சிறந்த முறையாகும்.

இலந்தை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றின் ரசத்தில் நெய், எண்ணெய், நிணநீர், மஜ்ஜை இந் நான்கு பசையுள்ள பொருட்களைப் பக்குவம் செய்து, பருகச் செய்தால் பெண்குறியில் உண்டாகும் நோய், விந்துவில் உண்டாகும் நோய் ஆகிய இவை நீங்கும். அது உடனே எண்ணெய்ப் பசையைத் தோற்றுவிக்கும்.

உப்புடன் கலந்த எண்ணெய் வகை, மனிதனுக்கு உடனே எண்ணெய்ப் பசையை உண்டாக்குகிறது.

அது உடல் துவாரங்களிலிருந்து நீரைப்பெருகச் செய்வது, வறட்சியற்றது, மிக நுண்ணிய துவாரங்களில் செல்லும் தன்மையுடையது. உடல் முழுவதும் பரவும் தன்மையுடையது. ஆதலால் அது உடல் முழுவதும் பரவிச் சீரணமடைகிறது.
(72—77)

குஷ்டம், வீக்கம், நீரிழிவு இந்நோய்களில் வெல்லம், நீர் வாழும் பிராணிகளின் மாமிசம், பால், எள்ளு, உளுந்து, கள், தயிர் இவற்றை எண்ணெய்ப்பசை உண்டாக்குவதற்குச் சேர்க்கக்கூடாது. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், திப்பிலி, குக்குலு இவற்றை எண்ணெய் வகையில் பக்குவம் செய்து மேற்கண்ட நோயுள்ளவர்களுக்குக் கொடுக்கலாம். நோயினால் துன்புற்று பலம் குன்றியவர்களுக்கு சடராக்னி யைத் தூண்டுவதற்காக மேற்கூறியவற்றைப் பயன்படுத்தலாம். *(78—79)*

14. எண்ணெய்ச் சிகிச்சை செய்வதன் பயன்

எண்ணெய்ச் சிகிச்சையைத் தொடர்ந்து செய்து கொள் கிறவனுக்கு சடராக்னி வளர்கிறது. குடல் சுத்தமாக ஆகிறது. தாதுக்கள் எப்பொழுதும் புதிதாக ஆகின்றன. வலிவு, நிறம் இவை நன்கு ஏற்படுகின்றன. புலன்கள் வலிவடைகின்றன. கிழத்தன்மை நாட்பட்டு ஏற்படுகிறது. நூறு ஆண்டுகள் மனிதன் வாழ்கிறான். *(80)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ஸ்நேக விதி' எனும் இருபத்தைந்தாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தாறாவது அத்தியாயம்

*ஸ்வேதவிதி

'ஸ்வேத விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். *(1–2)*

நெருப்பினால் வியர்வை உண்டாக்குவது, நெருப்பு அல்லாத மற்ற பொருட்களினால் வியர்வை உண்டாக்குவது என வியர்வை உண்டாக்கும் முறை இருவகைப்படும்.

நெருப்பினால் வியர்வை உண்டாக்குவதும் நான்கு வகைப்படும். அவை (1) தாபஸ்வேதம், (2) உபநாஹ ஸ்வேதம், (3) திரவஸ்வேதம், 4) ஊஷ்மாஸ்வேதம்.

1. தாப ஸ்வேதம்

கை, வெண்கலப் பாத்திரம், இரும்புச் சட்டம், மணல், துணி, மண்பாண்டம் இவற்றைச் சூடாக்கி நோயாளிக்கு நோயுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுப்பது தாபஸ்வேதம் எனப்படும்.

2. உபநாஹ ஸ்வேதம்

மணம் வீசும் பொருட்கள், தனியா, கடுகு, பிண்ணாக்கு, வசம்பு, தேவதாரு, சித்தரத்தை, ஆமணக்குவேர், அதிமதுரம், சதகுப்பை, கள், காடியின் வண்டல், வாத நோய்களைக் கண்டிக்கும் பொருட்களின் தூள், யவம் எனும் தானியம், கோதுமை இவற்றின் தூள், நீர் நிறைந்த இடங்களில் வாழும் பிராணிகளுடைய இரத்தம், பித்தம், தலை, கால், மாமிசம் ஆக இவற்றை நன்றாக இடித்துக் கொதிக்க வைத்து துணியிலிட்டு ஒத்தடம் கொடுத்து வியர்வையை உண்டாக்கும் முறை உபநாஹ ஸ்வேதம் எனப்படும்.

வாதம் கபத்துடன் சேர்ந்திருக்குமானால் ஸுரஸாதி கணத்தில் கூறப்பட்டுள்ள (அத்தியாயம் 16) பொருட்களால் ஒத்தடம் கொடுத்து வியர்வை உண்டாக்கலாம்.

---

* ஸ்வேத விதி—நோயாளிக்கு வியர்வையை உண்டாக்கிச் சிகிச்சை செய்யும் முறையை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

வாதம், பித்தத்துடன் சேர்ந்திருக்குமாகில் பத்மகாதி கணத்தில் (அத்தியாயம் 16) கூறப்பட்டுள்ள பொருட்களைக் கொண்டு ஒத்தடம் கொடுத்து வியர்வை உண்டாக்க வேண்டும்.

வாதம் தனித்திருக்குமாகில் பால், காடி, தானியாம்லம், உப்பு, மோர்த்தெளிவு இவற்றை தனித்தனியாகவோ அல்லது சேர்த்தோ, கெட்டியாக அறைத்து எண்ணெய் வகை கலந்து, இளஞ் சூடாகச் செய்து, நோயுள்ள இடத்தில் பத்துப் போட வேண்டும். இதேபோல் ஸால்வனாதி கணத்தில் கூறப்பட்டுள்ள பொருட்களைக் கொண்டு அடிக்கடி பத்துப் போட வேண்டும்.

அதன்மேல் உஷ்ண வீர்யமுள்ளதும், நாற்றம் அற்றதும், வழவழப்பானதுமாய் உள்ள மயிரடர்ந்த தோலினால் கட்டுப் போட வேண்டும். தோல் கிடைக்காவிடில், கெட்டியானதும், வாதத்தை நீக்குவதுமான இலைகள், செம்மறியாட்டுத் தோல், பட்டு இவற்றால் கட்டுப்போடலாம். கட்டுப்போட்ட இடம் பழுக்காமலிருப்பதற்காகப் பகலில் கட்டுப் போட்டால் இரவிலும், இரவில் கட்டுப்போட்டால் பகலிலும், இடம், காலம், தோஷம் இவற்றிற்கு ஏற்றவாறு கட்டை அவிழ்த்துவிடவேண்டும். (3—5)

3. திரவஸ்வேதம்

இது ஊற்றுதல், மூழ்குதல் என இருவகைப்படும்.

கல்யாண முருங்கை, மாவிலங்கை, எரிப்பு மாமரம், முள்ளங்கி, கடுகு, துளசி, வெள்ளைக் காஞ்சாங்கோரை, ஆடா தொடை, மூங்கில், மலை அகத்தி, அசோகம், வாகை, எருக்கு, புங்கு, ஆமணக்கு, சாதிமல்லியின் இலை, அபின், நிலவேம்பு,

வில்வம், பெருவாகை, குமிழம், பாதரி, முன்னை, ஈரிலை, மூவிலை, கண்டங்கத்தரி, முள்ளங்கத்தரி, நெருஞ்சில் என்ற பத்துப் போடும் பொருட்கள், வாதத்தை நீக்கும் பொருட்கள், தயிர்த்தெளிவு, தண்ணீர், கள், பால், காடி, வாசனைப் பொருட்கள் ஆகிய இவற்றைத் தூளாக்கி, தோஷங்களுக்கு ஏற்றவாறு தனித்தனியாகவோ, அல்லது எல்லாப் பொருட்களையும் சேர்த்தோ கலயம் அல்லது திரவம் வடிக்கக் கூடிய குழாய் உள்ள பாத்திரம் இவற்றின் ஒன்றில் கொதிக்க வைத்து கஷாயம் தயாரிக்க வேண்டும்.

பிறகு நோயாளியின் உடலில் வாதத்தைத் தணிக்கும் எண்ணெயை பூசி, அல்லது பூசாமல், பாய் அல்லது மேடையில் அமரச் செய்து, அவன் உடலில் ஓர் உறுப்பையோ அல்லது முழு உடலையோ துணியால் மூடி, நோயுள்ள இடத்தில் கஷாயத்தை ஊற்ற வேண்டும்.

இதே கஷாயத்தைப் பெரிய கொப்பறை அல்லது தொட்டியில் நிரப்பி அதில் மூழ்கச் செய்ய வேண்டும். (6)

4. ஊஷ்மாஸ்வேதம்

இம்முறை பிண்டம், ஸம்ஸ்தரம், நாடி, கனாச்மா, கும்பீ, கூபம், குடீ, ஜேந்தாகம் என எண் வகைப்படும். (7)

(அ) பிண்டஸ்வேதம் (உருண்டையாகச் செய்து ஒத்தடம் கொடுப்பது)

ஓடு, கல், மண்ணாங்கட்டி, இரும்பு உருண்டை, இவற்றை நன்றாக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி, இடுக்கியால் பிடித்து எடுத்து, நீரிலோ அல்லது காடியிலோ நனைக்க வேண்டும். பிறகு மேற்கூறிய பொருள்களில் ஒன்றை ஈரமான கம்பளியில் சுற்றி, கபம், கொழுப்பு நிறைந்த வலிவுடன் கூடிய உறுப்பிலோ, அல்லது, நரம்புச் சுருட்டலிலோ, வைத்து வியர்வை உண்டாக்க வேண்டும்.

இதேபோல் தூசி, மணல், பசு, குதிரை, யானை இவற்றின் சாணம், தானியங்களின் தண்டு, சோற்றுக்கஞ்சி, இறைச்சி, ஆகிய இவற்றை புளிப்புச் சுவையுள்ள பொருட்களில் கொதிக்க வைத்து முன்போல் கம்பளியில் சுற்றி ஒத்தடம் கொடுத்து வியர்வையை உண்டாக்க வேண்டும்.

பசு, யானை, குதிரை இவற்றின் ஈரச்சாணத்தை எடுத்து உருண்டையாகச் செய்து உபநாஹஸ்வேத சிகிச்சைக்குரிய பொருட்களை உருண்டையாக்கி, எள்ளு, அரிசி இவற்றால் செய்த கஞ்சி அல்லது மாம்ச ரசத்தில் போட்டு ஒத்தடம் கொடுத்து வாத நோய் உள்ளவனுக்கு வியர்வைச் சிகிச்சை செய்வது பிண்டஸ்வேதம் என்பதாகும். இதையே ஸங்கரஸ்வேதம் எனவும் கூறுகின்றனர். (8)

(ஆ) ஸம்ஸ்தரஸ்வேதம்

தோஷங்களுக்கு ஏற்றவாறு ஆமணக்கு வேர் போன்ற வியர்வை உண்டாக்கும் பொருட்களை ஒரு பானையிலிட்டு வாயைமூடி நன்கு கொதிக்கவைத்து, காற்றோட்டமில்லாத

அறையில் கனமுள்ள பாயில் அப்பொருட்களைப் பரப்பி, அதன்மேல், கம்பளி, அல்லது பட்டுத்துணி, அல்லது வாதத்தைத் தணிக்கும் ஆமணக்கு இலைகளைப் பரப்பி நோயாளியை அதன்மேல் படுக்கச் செய்து கம்பளியால் மூடி வியர்வை வெளிவரும்படி செய்ய வேண்டும். இம்முறைக்கு ஸம்ஸ்தர ஸ்வேதம் எனப்பெயர். (9)

(இ) நாடீ ஸ்வேதம்

ஒரு பானையில் வியர்வை உண்டாக்கும் பொருட்களையிட்டு நீர் நிரப்பி அதன் வாயை மடக்கினால் மூட வேண்டும். அந்த மடக்கில் ஆவி வெளிவருவதற்காக துளையிட வேண்டும். அந்த மடக்கின்மேல் வேறு ஒரு பானையைக் கவிழ்த்து மூடவேண்டும். இரண்டு பானைகள் சேருமிடத்தை மாவினால் மறைக்க வேண்டும். மேல் கவிழ்க்கப்பட்ட பானையில் ஒரு துளையிடவும். அந்தத் துளையில், நாணல் தண்டு, மூங்கில் இலை, துவாரமுள்ள ஒருவகை புல்தண்டு, புங்கன் இலை இவற்றுள் ஏதாவது ஒன்றினால் குழல்போல் செய்து அதில் பொருத்த வேண்டும். அதே குழல் யானையின் துதிக்கை போல் அடிப்பகுதி பருத்தும், நுனிப் பகுதி வரவர மெலிந்தும் இருக்க வேண்டும். அந்தக்குழல், ஒன்று அல்லது ஒன்றரை பாகம் (பாகம்—மார்பளவு) நீளமுள்ளதாக இருக்க வேண்டும். அதன் நுனிப்பகுதியின் சுற்றளவு அடிப் பகுதியைவிட அரை மடங்கு குறைந்திருக்க வேண்டும். அந்தக் குழலின் வாயை வாதத்தைத் தணிக்கும் ஆமணக்குப் போன்ற இலைகளால் மூடவேண்டும். அந்தக்குழல் இரண்டு மூன்று இடங்களில் வளைந்திருக்க வேண்டும்.

நோயாளியின் உடலில் எண்ணெயைப் பூசி, பானையின் அருகில் சுகமாக அமரச் செய்து அவன்மேல் குழாயிலிருந்து வெளிவரும் ஆவி படும்படியாகச் செய்து வியர்வையை வெளிப்படுத்த வேண்டும். அந்தக்குழல் இரண்டு மூன்று இடங்களில் வளைந்திருப்பதனால், ஆவி நேராக வெளிவராது. வேகமும் குறைந்திருக்கும். அதனால் நோயாளியின் தோலை எரிக்காமல் வியர்வையை எளிதில் வெளிப்படுத்தும் சிகிச்சை முறைக்கு நாடீஸ்வேதம் எனப்பெயர். (10)

(ஈ) கனாச்ம ஸ்வேதம்

மனித உருவத்துக்கு ஈடான பாறை அல்லது தரையை வாதத்தைத் தணிக்கும் இலைகளால் எரித்து நாற்புறங்களி

லும் நன்கு சூடாக்கவும். பிறகு நெருப்பை நீக்கிவிட்டுக் காடி அல்லது சுடுநீர் இவற்றை அதன்மேல் தெளிக்க வேண்டும்.

பிறகு ஸம்ஸ்தர ஸ்வேதம் என்னும் வியர்வைச் சிகிச்சையில் கூறியபடி கம்பளியை அதன்மேல் பரப்பி, நோயாளியைக் கம்பளியால் உடலை மூடி அதனருகில் அமரச் செய்து ஆவியைப் பிடிக்கச் செய்து வியர்வையை வெளிப்படுத்தும் முறைக்கு கனாச்ம ஸ்வேதம் என்று பெயர். *(11)*

(உ) கும்பீ ஸ்வேதம்

நாடீஸ்வேதத்தைப் போல் வியர்வை உண்டாக்கும் பொருட்களைப் பானையிலிட்டு தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைத்து, அதனருகில் பிணியாளியை அமரச் செய்து இதன் ஆவியை அவன்மேல் படும்படியாகச் செய்ய வேண்டும். இது ஒரு வகை.

பொருட்களையிட்டுக் கொதிக்கவைத்த பானையைத் தரையில் புதைத்து அதன்மேல் கட்டில் அல்லது இருக்கையை வைத்து அதன் நாற்புறங்களிலும் ஆவி வெளியில் செல்லாமலிருப்பதற்கு மெல்லிய துணியைக் கட்ட வேண்டும். அதன் பின் நோயாளியை கட்டில் அல்லது இருக்கையில் அமரச் செய்து, நோயாளியையும் பானையையும், சேர்த்துத் துணியால் மூடவும். இரும்பு உருண்டை அல்லது கற்களைச் சூடுசெய்து பானையில் போடவேண்டும். அந்தப்பானையிலிருந்து வெளிவரும் ஆவியைப் பிடிக்கச் செய்து நோயாளிக்கு வியர்வை உண்டாக்கவும். இம்முறை கும்பீஸ்வேதத்தின் வேறு ஒரு முறை. *(12)*

(ஊ) கூப ஸ்வேதம்

மனிதன் படுக்குமளவுக்கு இருமடங்கு குழி தோண்டி அதன்மேல் வாதத்தைத் தணிக்கும் விறகுகளையிட்டு எரிக்கவும். புகை அடங்கியபின் அதன்மேல் படுக்கையை விரித்து நோயாளியை அமரவோ படுக்கவோ செய்து, ஆவியைப் பிடிக்கச் செய்தல் கூபஸ்வேதம் என்னும் வியர்வை பிடிக்கச் செய்யும் முறையாகும். *(13)*

(எ) குடீ ஸ்வேதம்

மிக உயரம், மிக அகலம், கோணங்கள் இல்லாத ஒரு குடிசையின் சுவரில் வியர்வை உண்டாக்கக்கூடிய பொருட்களை அறைத்துப்பூசி, சுவரின் அருகில் புகையில்லாத நெருப்புத் துண்டங்கள் நிறைந்த அடுப்பு அல்லது கும்மட்டி

களைச் சுற்றி வைக்க வேண்டும். குடிசையின் நடுவில் பாயில் அமர்த்தி அங்கு வெளிவரும் ஆவியை நோயாளியைப் பிடிக்கச் செய்வது குடீஸ்வேத முறையாகும். (14)

(ஏ) ஜேந்தாக ஸ்வேதம்

இந்த வியர்வைச் சிகிச்சை செய்ய விரும்பும் மருத்துவர் முதலில் இடத்தைச் சோதித்துப் பார்க்கவேண்டும். கிழக்கு அல்லது வடக்குத் திசையில் சிறந்த இடத்தில் கருப்பு அல்லது பொன் நிறமுள்ள மண் உள்ள இடத்தில் அகழி, குளம் அல்லது நீர் நிறைந்த இடத்தில், தெற்கு அல்லது மேற்குக் கரையில் சிறந்த சமதளமான நிலத்தில், தண்ணீரிலிருந்து ஏழு அல்லது எட்டுக் கை அளவு பின்புறம் தள்ளி ஒரு குடிசை அமைக்க வேண்டும்.

அந்தக் குடிசையின் உயரமோ, அகலமோ பதினாறு கை அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. குடிசையின் நுழை வாயில் நீர்நிலைக்குக் கிழக்கு அல்லது வடக்குப் பார்த்து இருக்க வேண்டும். அந்தக் குடிசை, நான்கு புறங்களிலும் வட்டமாக வும், மண்ணால் பூசப்பட்டும், சன்னல்கள் நிறைந்ததாகவும், அமைய வேண்டும்.

அந்தக் குடிசையின் நடுவில் சுவரோடு ஒரு கை அளவு உயரம், சுற்றிலும் கதவு வரையில் மேடை கட்ட வேண்டும். அந்தக் குடிசையின் நடுவில், நெருப்பு வைப்பதற்காக, பந்தின் உருவம் போல் உருண்டையான மண்ணால் செய்த மூடியுள்ள தூண் ஒன்று அமைக்க வேண்டும்.

இந்தத் தூண், இரண்டு மனிதர்களின் உயரத்திற்குச் சமானமான ஏழுகை அளவு உயரமாகவும், மிகநுண்ணிய துவாரங்கள் உடையதாகவும் இருக்க வேண்டும். அந்தத் தூண் மேடையிலிருந்து நான்கு கை தூரத்திற்கப்பால் இருத்தல் வேண்டும். அத்தூணில் கருங்காலி, மருதமரம் இவற்றின் விறகுகளையிட்டு எரிக்க வேண்டும். விறகுகள் எரிந்து புகை அடங்கியபின், நெருப்பினால் குடிசை முழுவதும் சூடு நிரம்பிய பின், வியர்வை உண்டாக்குவதற்குத் தேவையான சூடு உள்ளதா என்பதை அறிய வேண்டும்.

பிறகு நோயாளியின் உடலை வாதக்கோளாறுகளை நீக்குகின்ற எண்ணெயால் தடவி, துணியினால் போர்த்தி, குடிசைக்கு அழைத்து வர வேண்டும்.

நோயாளியைப் பார்த்து மருத்துவர் பின்கண்டவாறு அறிவுரை வழங்க வேண்டும். நீ உயர் நலத்தையும், நல்வாழ்வையும் விரும்புகிறவனாய் இக்குடிசையில் நுழைவாயாக. ஒவ்வொரு மேடையாக மாறி சுகமாகப் படுத்துக் கொள். அவசரத்தினாலோ, வியர்வையினால் ஏற்பட்ட மூர்ச்சையினாலோ, உடலில் மூச்சு உள்ளவரை மேடையை விட்டு வெளி வரக்கூடாது. வெளிவர முயற்சித்தால் வெளிவரும் வழி புரியாமல் திணறி இறக்க நேரிடும். ஆகையினால் இந்த மேடையைவிட்டு ஒரு பொழுதும் இறங்கக் கூடாது.

உடலிலிருந்து கபம் வெளிச் சென்றதையும், வியர்வையின் பிசுபிசுப்புப் பெருகியதையும், துவாரங்கள் எல்லாம் மலர்ந்து விட்டதையும், உடல் இலேசானதையும், அடைப்புகள் நீங்கி விட்டதையும், உடலில் சுறுசுறுப்பின்மை, உணர்ச்சியின்மை, பளு இவை நீங்கிவிட்டதையும் அறிந்தபின் மேடையின் வழியாக கதவுப் பக்கமாக வெளிவர வேண்டும்.

அதிகம் வியர்வை ஏற்பட்டிருந்த போதிலும் கண்களைக் காக்க உடனடியாக குளிர்ந்த நீரில் நீராடக்கூடாது. நன்றாக வியர்வை உலர்ந்தபின், சூடு, களைப்பு, நீங்கியபின், சிறிது நேரம் தாமதித்து விருப்பப்படி சுடு நீரில் நீராடிவிட்டு உண்ண வேண்டும்.

இம்முறையில் வியர்வை உண்டாக்குவதற்கு ஜேந்தாக ஸ்வேதம் எனப் பெயர். (15)

இந்நான்கு முறை வியர்வை உண்டாக்கும் சிகிச்சையில் தாபஸ்வேதம், ஊஷ்மாஸ்வேதம் இரண்டையும் கபக்கோளாறு அதிகமிருந்தால் பின்பற்றலாம். வாதக் கோளாறுகள் அதிகமாயிருந்தால் உபநாஹம் என்ற முறையையும், கபமும், வாதமும் சிறிதளவு பித்தத்துடன் சேர்ந்திருந்தால் திரவ ஸ்வேத முறையையும் பின்பற்றலாம். (16)

5. அநக்னிஸ்வேதம் (சூடு உண்டாக்காமல் வியர்வையைத் தோற்றுவித்தல்.)

வாதம், கொழுப்பு அல்லது கபத்துடன் சேர்ந்திருந்தால் அநக்னிஸ்வேதம் என்ற முறையைக் கையாள வேண்டும். காற்றோட்டமில்லாத வீடு, முரடான கம்பளியால் போர்த்துதல், கள் குடித்தல், அதிக உடற்பயிற்சி, வெயிலில் நிற்பது, குஸ்தி பழகுவது, வழிநடப்பது, பளு சுமப்பது, சினம், பயம் இம்

மாதிரியான செயல்களைச் செய்விப்பதன் மூலம் வியர்வையை உண்டாக்கலாம்.

வாதம் பித்தத்துடன் கலந்திருந்தால் உபநாஹ ஸ்வேதம் என்ற முறைக்குக் கூறிய பொருட்களைக் கொண்டு நெருப்பிலிடாமல் கல்கமாகச் செய்து உடலில் பூசிக் கட்ட வேண்டும். (17)

6: வியர்வை உண்டாக்கும் முறை

உண்ட உணவு சீரணித்தபின், நோயாளியின் உள்ளும், புறமும் எண்ணெய்ப் பசை உண்டாக்கி காற்றோட்டமில்லாத இடத்தில் அமரச்செய்து, வியர்வை வரவழைக்கும் மருந்தைக் கொடுக்க வேண்டும். நோய், நோயாளி, அவன் வசிக்குமிடம், பருவங்கள் இவற்றிற்கு ஏற்றவாறு உயர்வு, நடுநிலை, குறைவு என்ற மூவகையில் ஏதாவது ஒன்றைப் பின்பற்ற வேண்டும்.

கபக் கோளாற்றினால் துன்புறுகிறவன், உடலை வறட்சியாகச் செய்துகொண்டு எண்ணெய்ப் பசையற்ற பொருட்களால் வியர்வைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்.

கபம் வாதம் இவற்றினால் வருந்துபவன், முதலில் வறட்சி தரும் பொருட்களாலும் பிறகு எண்ணெய்ப் பசை ஏற்படுத்தும் பொருட்களாலும் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

வாதம் இரைப்பையை அடைந்திருந்தால் முதலில் எண்ணெய்ப் பசையற்ற பொருட்களாலும், பிறகு எண்ணெய்ப் பசையுள்ள பொருட்களினாலும் வியர்வைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

கபம் சீரணப்பையை அடைந்திருந்தால் முதலில் எண்ணெய்ப் பசையுள்ள பொருட்களாலும், பிறகு எண்ணெய்ப் பசையற்றப் பொருட்களாலும் வியர்வையை உண்டாக்க வேண்டும்.

இவ்வாறு தோஷங்கள் முடங்கியிருக்கும் இடத்திற்கு ஏற்ற வகையில் வியர்வைச் சிகிச்சையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது முறையாகும்.

தொடை இடுக்குகளில் சிகிச்சை செய்ய வேண்டுமானால் குறைந்த அளவில் செய்யவேண்டும்.

கண்கள், விதை, இதயம் இவற்றிற்கு வியர்வைச் சிகிச்சை செய்ய வேண்டுமாகில் சிறிதளவே செய்ய வேண்டும். தொடை, கண்கள், விதை இம்மூன்று இடங்களில் வியர்வைச் சிகிச்சை செய்யாமலே இருக்கலாம். அப்படி செய்ய நேரிட்டால் தாமரை, அல்லி முதலிய குளிர்ச்சி தரும் இலைகளால் அல்லது

சத்துமாவின் உருண்டையால் கண்களை மூடி வியர்வையை உண்டாக்கவும்.

இதயத்திற்கு வியர்வைச் சிகிச்சை செய்ய வேண்டுமானால் குளிர்ந்த முத்துமாலை, தாமரை, ஆம்பல், நெய்தல் இவற்றின் இலைகளாலும், ஈரக்கையினாலும், வெண்கலம் போன்ற குளிர்ச்சி தரும் பாத்திரத்தினாலும் தடவிக்கொள்ள கொடுக்க வேண்டும். *(18—21)*

7. வியர்வைச் சிகிச்சை நன்கு நிறைவேறியதன் அறிகுறிகள்

உடலில் உள்ள குளிர், வலி இவை நீங்கி, உறுப்புக்கள் யாவும் மிருதுத்தன்மை அடைந்திருந்தால் சிகிச்சை நன்கு நிறைவேறியது என அறிந்து கொள்ளலாம்.

இச்சிகிச்சை முடிந்தபின் நோயாளியின் உடலை மெள்ளப் பிடித்துவிட்டு எண்ணெய்ப் பசை உண்டாக்கும் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

வியர்வைச் சிகிச்சை அதிக அளவில் செய்யப்பட்டிருந்தால் பித்தம், இரத்தம், இவை சீற்றமடையும். நாவறட்சி, மூர்ச்சை, குரல் கம்முதல், உடல் இளைத்தல், தலை சுற்றல், பூட்டுக்களில் வேதனை, காய்ச்சல், கறுப்பு, சிவப்பு நிறமுள்ள தழும்புகள் எதிரில் தென்படுதல் ஆகிய இவை தோன்றும். இதைப் போக்க வாந்தி எடுக்கச் செய்து, வாதத்தை வளர்க்கும் மருந்தைக் கொடுக்க வேண்டும்.

நஞ்சு, க்ஷாரச் சிகிச்சையினால் உண்டாகும் நோய், சுடு சிகிச்சையினால் தோன்றும் நோய், கழிச்சல் அதிகமாவதால் தோன்றும் நோய், வாந்தி எடுப்பதனால் உண்டாகும் நோய், மூர்ச்சை ஆகிய இவற்றை வாதத்தை வளர்க்கும் மருந்து போக்கும். *(22—24)*

8. ஸ்வேதனம் [1]ஸ்தம்பனம் இவற்றிற்கான பொருட்கள்

குருகுணம், தீக்ஷணத்தன்மை, உஷ்ண வீர்யம் உள்ள பொருட்கள் வியர்வையை உண்டாக்கக் கூடியவை.

லகுகுணம், மந்தகுணம், சீதவீர்யம் உள்ள பொருட்கள் ஸ்தம்பனச் சிகிச்சைக்கு உகந்தவை.

---

1. ஸ்தம்பனம்—வாதத்தை வளர்க்கும் மருந்து.

மேலும் திரவம், கெட்டித்தன்மை, இளகும் தன்மை, எண்ணெய்ப்பசை, வறட்சித்தன்மை, நுட்பத்தன்மை இக் குணங்களை உடைய மருந்து வியர்வையை உண்டாக்கக் கூடியது. வழவழப்பு, வறட்சி, நுட்பம், இளகும் தன்மை, திரவம் இக்குணங்களை உடைய மருந்து ஸ்தம்பனச் சிகிச்சைக் குப் பயன்படுவது.

இதேபோல் கைப்பு, துவர்ப்பு, இனிப்பு இச்சுவையுள்ள பொருட்கள் பெரும்பாலும் ஸ்தம்பனச் சிகிச்சைக்கு ஏற்றவை.

9. ஸ்தம்பனம் நிறைவேறியதன் அறிகுறிகள்

உடலில் வலிவு உண்டாகும். குறிப்பிட்ட பிணிகள் நீங்கும். ஸ்தம்பனச் சிகிச்சை அதிகம் செய்யப்பட்டிருந்தால், உறுப்புகளை அசைக்க முடியாமல் போதல், தோலிலும் நரம் பிலும் சுருக்கம் ஏற்படுதல், உடல் நடுக்கம், மார்புப் பிடிப்பு, பேச முடியாமல் போதல், முகவாய்கட்டைப் பிடிப்பு, கால், உதடு, தோல், கை இவை கருநிறமடைதல் போன்றவை கள் ஏற்படும். (25—28)

10. வியர்வைச் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

அதிகப் பருமன் உள்ளவர், உடலில் எண்ணெய்ப் பசை யற்றவர்கள், வலிவற்றவர், மயக்கமுள்ளவர், ஸ்தம்பனச் சிகிச்சைக்கு உரியவர், இரத்த காசநோயினால் வருந்துபவர், மெலிந்திருப்பவர், கள் குடிப்பதனால் தோன்றும் கோளா றுடையவர், கண் மறைவு உள்ளவர், மகோதரம் என்ற வயிற்று நோயுடையவர், அக்கி, குஷ்டம், உடலுருக்கும் நோய், வாத ரத்தத்தினால் உண்டாகும் நோயுடையவர், பால், தயிர், எண்ணெய், கள் இவற்றைக் குடித்தவர்கள், மலம் கழிக்க மருந்து உட்கொண்டவர்கள், ஆசனவாய் நெகிழ்ந்து வெளிப்பட்டோ அழற்றிக்கொண்டோ துன்பப்படு கிறவர், உடல் வாட்டமுடையவர், சினந்தவர், வருந்துபவர், பயந்தவர், பசி, நாவறட்சி, காமாலை, பாண்டு, நீரிழிவு, இவற்றாலும் பித்தக் கோளாறுகளாலும் துன்பப்படுகிறவர், கருதரித்தவள், மாதவிடாய் கொண்டவள், ஈன்றவள் என இவர்கள் அனைவரும் வியர்வைச் சிகிச்சைக்குத் தகாதவர்கள். இவர்களுக்கு இச்சிகிச்சை செய்ய நேரிடின் மிருதுவான வியர்வைச் சிகிச்சையைக் கையாளலாம். (29—31)

சுவாசம், இருமல், நாட்பட்ட ஜலதோஷம், விக்கல், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல், குரல் கம்முதல், வாத

நோய்கள், பக்கவாதம், வாதத்தினால் ஏற்படும் இசிவுநோய், உடல் வலி, இடுப்பில் பிடிப்பு, விலாப்பிடிப்பு, புட்டப்பிடிப்பு, வயிறு, முகவாய்க்கட்டைப்பிடிப்பு, விதை பருத்தல், கலவீ என்னும் வாதநோய், ஆயாமம் எனும் வலிப்பு நோய், வாத கண்டகம் எனும் நோய், நீர்ச்சுருக்கு, புறைகுழல், நரம்பு முடிச்சு, விந்து வெளிவராமல் தடைபடுதல், வாத இரத்தம், நடுக்கம், வீக்கம், உணர்ச்சியற்ற நிலை, அசைவற்ற தன்மை, கொட்டாவி, உடல் பளு, காதுவலி, மென்னியில் வலி, தலை, குடல், ஆடு சதை, கால்கள், தொடை இவற்றில் வேதனை, என்ற இந்நோய்கள் உடையவர்கள் வியர்வைச் சிகிச்சை செய்து கொள்ளத் தகுந்தவர்கள்.

இந்நோய்களுக்குத் தகுந்த முறையில் வியர்வைச் சிகிச்சை அளிக்க வேண்டும். சிகிச்சை செய்த பின், பத்தியமான உணவைத் தோஷத்திற்கும் நோய்க்கும் தக்கவாறு அருந்த வேண்டும்.

உடல் முழுவதும் வியர்வைச் சிகிச்சை செய்து கொண்ட நாளில் உடற்பயிற்சி செய்யக் கூடாது. *(32—36)*

12. வியர்வைச் சிகிச்சையின் நலம்

சடராக்னி வளர்ச்சி, உடலில் மிருதுத்தன்மை, தோலில் சுருக்கமில்லாமை, உணவில் அவா, துவாரங்களின் அடைப்பு நீங்குதல், சோம்பலின்மை, சுறுசுறுப்பு, அசைவற்ற பூட்டு களுக்கு அசைவூட்டுதல் ஆகிய இவை யாவும் ஏற்படும். *(37)*

வயிற்றுக்குள் உள்ள உறுப்புகள், தாதுக்கள், துவாரங் கள், கைகால்கள், எலும்பு இவற்றில் உள்ளடங்கிப் பரவியிருக் கும் வாதம் போன்ற தோஷங்கள், எண்ணெய்ச் சிகிச்சை யினால் உருகி வியர்வைச் சிகிச்சையினால் குடலுக்குள் வந் தடைகின்றன. அவை வாந்திக்கும், பேதிக்கும் மருந்து கொடுப் பதனால் வெளிவருகின்றன. *(38)*

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில்
'ஸ்வேத விதி' எனும்
இருபத்தாறாவது அத்தியாயம் முற்றிற்று

இருபத்தேழாவது அத்தியாயம்

*வமந விரேசன விதி

'வமந விரேசன விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். (1—2)

உடலின் மேல் பகுதியிலிருந்து வாய் வழியாக தோஷங்களை வெளிப்படுத்தும் வாந்தி வமநம் எனப்படும். உடலின் கீழ்ப்பகுதியில் உள்ள தோஷங்களை ஆசனவாய் வழியாக வெளிப்படுத்துவது விரேசனம் (மலம் கழித்தல்) எனப்படும்.

வாயின் வழியாகவும், ஆசன வாய் வழியாகவும் உடலில் உள்ள தோஷங்களை வெளிப்படுத்துவதனால் பொதுவாக வமநம், விரேசனம் இரண்டிற்கும் விரேசனம் என்றே பெயர் வழங்கப்படுகிறது. (3)

உஷ்ண வீர்யம், தீக்ஷ்ணகுணம் உள்ளதும், நுட்பமானதும், [1]வியவாயி, [2]விகாஸி என்னும் குணமுடையதுமான மருந்துகள் தம் சக்தியினால் இதயத்தை அடைந்து, உடலில் உள்ள நுண்ணிய துவாரங்களில் ஊடுருவிச்சென்று, உடல் எங்கும் பரவி, சிரணமடைந்து உடலில் உள்ள நாடிகளில் சென்று, எண்ணெய்ப் பசையுள்ள காரணத்தினால் உடலில் மிருதுத்தன்மையை உண்டுபண்ணுகின்றன.

ஈரமுள்ள விறகைச் சூடாக்குவதால் அதில் உள்ள நீர் வெளிவருவது போல வியர்வைச் சிகிச்சையின் சூட்டினால் பெரிய, சிறிய துவாரங்களிலிருந்து உருகி, பெருகி வருகிற தோஷங்களை மருந்துகள் தம் சூட்டினால் மேலும் உருகச் செய்து வெளிப்படுத்துகின்றன.

தீக்ஷ்ணம், விகாஸி என்னும் குணங்களை உடைய அந்த மருந்துகள் தோஷங்களைத் துண்டுதுண்டாகப் பிரிக்கின்றன.

---

*வமநம் — வாந்தி எடுக்கச் செய்தல், விரேசனம் - மலம் கழிக்கச் செய்தல். இவற்றை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. வியவாயி — உடல் எங்கும் பரவி சிரணமாவது.
2. விகாஸி — மூட்டுக்களை நெகிழச் செய்வது.

எண்ணெய்ப் பசையுள்ள பாத்திரத்தில் நீர் ஒட்டாதது போல, தோஷக் கூட்டத்திலிருந்து பெருகி வருகிற கெட்ட நீர், துண்டு துண்டாகப் பெருகி இரைப்பையில் செல்கிறது. அங்கிருந்து [1]உதான வாயுவினால் தூண்டப்பட்டு, நெருப்பு, வாயு இவ்விரண்டு முக்கிய குணம் அதிகமுள்ள மருந்துகள் மேல்நோக்கி தோஷங்களை வெளிப்படுத்தும் சக்தி பெற்றிருப்பதால் வாய் வழியாக தோஷங்களை வெளிப்படுத்துகின்றன. (வாந்தி எடுக்கச் செய்கின்றன.)

நிலம், நீர் இவ்விரண்டு முக்கிய குணமுள்ள மருந்துகள், கீழ்நோக்கி தோஷங்களை வெளிப்படுத்தும் தன்மை பெற்றிருப்பதால் மலத்துவாரம் வழியாக வரும் காற்றினால் தூண்டப்பட்டு ஆசனவாயின் வழியாக கீழ்நோக்கி தோஷங்களை வெளிப்படுத்துகின்றன. (மலத்தை வெளிப்படுத்துகின்றன.)

சில மருந்துகள் கீழ்நோக்கியும் மேல் நோக்கியும் செலுத்தும் திறமை பெற்றிருப்பதால் வாய், ஆசனவாய் இரண்டு-வழிகளாலும் தோஷங்களை வெளிப்படுத்துகின்றன.

வாய் வழியாக தோஷங்கள் வெளிப்படுவதற்கு வமநம் (வாந்தி) என்றும் ஆசனவாயின் வழியாக தோஷங்கள் வெளிப்படுவதற்கு விரேசனம் (மலம் கழித்தல்) என்றும் பெயர். (4)

1. வாந்தி, பேதி எடுத்துக் கொள்ளத் தகுந்தவர்கள்

கபம் அதிகம் சேர்ந்திருந்தாலும், கபத்துடன் சிறிதளவு பித்தம் சேர்ந்திருந்தாலும், வாந்திக்குக் கொடுக்க வேண்டும்.

கபம் இருக்குமிடத்தில் பித்தம் அல்லது வாயு வந்து சேர்ந்திருந்தாலும் அல்லது கபம் அளவுக்கு மீறிப் பெருகி இருந்தாலும் வாந்திக்குக் கொடுக்கலாம்.

இவ்வாறு பித்தம் தனித்திருந்தாலும், பித்தம் கொஞ்சம் கபத்தோடு சேர்ந்திருந்தாலும் பேதிக்குக் கொடுக்கவேண்டும்.

பித்தம் இருக்குமிடத்தில் கபம் வந்து சேர்ந்திருந்தாலும், அல்லது பித்தம் மிதமிஞ்சி வளர்ந்திருந்தாலும், பேதிக்குக் கொடுக்க வேண்டும். அல்லது கபம் இருக்குமிடத்தில் பித்தம்

---

1. உதான வாயு — மார்பில் சூழ்ந்திருக்கும் வாயு.

அளவுக்கு மீறிச் சேர்ந்திருந்தால் அப்பொழுதும் பேதிக்குக் கொடுக்க வேண்டும். (5)

2. வாந்தி மருந்துக்குத் தகுந்தவர்கள்

விஷம் குடித்தவன், பாம்பு கடிக்குள்ளானவன், நஞ்சு பூசிய அம்பினால் அடிபட்டவன், தகாத உணவு உண்டவன், அசீர்ணமாயிருக்கும்பொழுது உண்டவன், புதிதாகத் தோன்றிய காய்ச்சலை உடையவன் ஆகிய இவர்கள் வாந்தி மருந்து கொடுக்கத் தகுந்தவர்கள்.

மேலும் க்ஷயம், கழிச்சல், கீழ் நோக்கிச் செல்லும் இரத்த பித்தம், காலரா, அசீரணத்தால் தோஷங்கள் உடலில் அசையாமலிருக்கச் செய்யும் நோய், உணவு பக்குவமின்மை, சுவையின்மை, சிறுகட்டிகள், நரம்பு முடிச்சுகள், புறைகுழல், யானைக்கால், அதிகக் கொழுப்பினால் உண்டாகும் பிணிகள், இடுவிஷம், பித்துப்பிடித்தல், காக்காய் வலிப்பு, சுவாசம், இருமல், மனப்பிறட்டல், அக்கி, நீரிழிவு, குஷ்டம், பாண்டு, கண் இரைப்பையில் தோன்றும் நோய், முகத்தில் தோன்றும் நோய், தலை உச்சியில் வரும் பிணி, காதில் உண்டாகும் நோய், வீக்கம், தாய்ப்பால் அருந்துவதால் உண்டாகும் நோய், கபக்கோளாற்றினால் உண்டாகும் பிணிகள், தோஷ பேதீயம் என்னும் இருபதாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட கபத்தினால் உண்டான பிணிகள் ஆகிய இவற்றிற்கு வாந்திக்கு கொடுக்க வேண்டும்.

பாதி முற்றிய தானியங்களையுடைய விளை நிலத்திலி லிருந்து தண்ணீரை வெளியேற்றிவிட்டால் அந்தப் பயிர் அழிந்து விடுவதுபோல தோஷங்களை வாந்தியினால் வெளி யேற்றிவிட்டால் நோய்கள் விலகி விடும். (6)

3. வாந்திக்கு மருந்து கொடுக்கத் தகாதவர்கள்

கர்ப்பம் தரித்தவள், இன்ப வாழ்வு வாழ்பவன், வேறு செயலில் மனதைச் செலுத்தியவன், வறட்சி கொடுக்கக் கூடிய உணவு உண்பவன், வறட்சியான உடற்கட்டுள்ளவன், அதிகம் சடராக்னி வளர்ச்சி பெற்றவன், தினந்தோறும் பளு சுமப்ப வன், தினமும் கால்களால் வழிநடப்பவன், எப்பொழுதும் வேலை செய்பவன், களைத்தவன், அடிபட்டதனால் வலிவிழந்தவன், அதிகப்பருமன் உள்ளவன், மிகவும் மெலிந்தவன், முதியவன், சிறுவன், பலமற்றவன், தலைசுற்றல், பயம், துயரம், சினம், கொழுப்பு, மூர்ச்சை, பசி, தாகம் இவற்றால் துன்பப்படு

கிறவன் ஆகிய இவர்களுக்கு வாந்திக்கு மருந்து கொடுக்கக் கூடாது.

மேலும் பட்டினி கிடத்தல், புணருதல், உடற்பயிற்சி, படித்தல், கவலைப்படுதல் போன்ற இவற்றில் எப்பொழுதும் மூழ்கிக் கிடப்பவன், வாந்தி, இரத்தபித்தம், மேல்நோக்கிச் செல்லும் வாதம், கஷாய வஸ்தி, எண்ணெய் வஸ்தி என்னும் சிகிச்சை செய்து கொண்டவன், மூடிய குடலுடையவன், மிகவும் துன்பப்பட்டு வாந்தி எடுப்பவன், இதய நோயுள்ளவன், மேல்நோக்கிச் செல்லும் தோஷம் உள்ளவன், நீர் அடைப்புள்ளவன், மண்ணீரல் நோயுடையவன், குன்மம், மகோதரம், ஒருவித குன்ம ரோகம், மூல நோய், குரல் கம்முதல், கண் மறைப்பு, தலைசுற்றல், வாதநோய், முகவாய்க்கட்டை ஒருபக்கமாகக் கோணிப்போதல், நடுக்கம், கண்வலி, தலைவலி, பொட்டில் வலி, காதில் வலி, பக்கச் சூலை, கிருமி நிறைந்த குடல், கஷாய வஸ்தி எடுத்துக் கொள்ளாமை போன்ற பிணியாளர்கள் என இவ்வனைவரும் வாந்தி சிகிச்சைக்குத் தகாதவர்கள்.

உணவு சீரணமாகாத நிலை, செயற்கை நஞ்சு, சாதாரண நஞ்சு, உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவு ஆகிய இவை விரைவில் உடலைக் கெடுக்கக்கூடியவை. இந்நோய் உள்ளவர்களுக்கு வாந்திக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

இவர்கள் நீங்கலாக மேற்கண்ட மற்ற பிணியாளர்கள் வாந்தி சிகிச்சைக்குத் தகாதவர்கள்.

கருத்தரித்திருப்பவளுக்கு வாந்திக்குக் கொடுப்பதினால் கருவுக்குத் தீமை, கருச்சிதைவு, கடினமான நோய் இவை ஏற்படுகின்றன.

இன்ப வாழ்வு வாழ்கிறவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பதினால், இதயநோய், மேலே வாய் வழியாகவும், கீழே ஆசன வாய் வழியாகவும் இரத்தம் வெளிப்படுதல் என இவை ஏற்படும்.

வேறு செயல்களில் ஈடுபட்டவனுக்கு வாந்திக்குக் கொடுப்பதினால், மருந்து பயன் அளிப்பதில்லை. அல்லது கஷ்டப்பட்டு வாந்தி எடுப்பவனுக்கு, வாந்திக்குக் கொடுத்தால் வாந்திக்குக் கொடுத்தும் நீங்காத நோய்கள் உண்டாகும்.

வறட்சியான உடல் கொண்டவனுக்கு வாந்திக்குக் கொடுத்தால், வாதத்தினால் உடலில் பிடிப்பு ஏற்படும்.

பெரும்பாலும் எண்ணெய்ப் பசையற்ற உணவை உண்ப வனுக்கு வாந்திக்குக் கொடுத்தால் வாதக்கோளாறினால் சக்தி யற்றவனாக அவன் ஆகி விடுகிறான்.

அதிகமாக சடராக்னி வளர்ச்சியுள்ளவன், எப்பொழுதும் சுமை சுமப்பவன், எப்பொழுதும் வழி நடப்பவன், எப்பொழு தும் அலைவதினால் களைப்புற்றவன், இரத்தத்துடன் கபம் வெளிவரும்படி இருமுகிறவன் என இவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பதனால் துன்பத்தை உண்டாக்கி, இரத்தத்தைப் பெருகச் செய்கிறது.

வலிவற்றவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பதினால், மருந் தின் சக்தியைத் தாங்க முடியாமல் அது உடலின் வலிவைக் குறைத்துவிடுகிறது, [1]உரக்ஷதம் எனும் பிணியை உண்டாக்கு கிறது.

இடைவிடாமல் வாந்தியிலும், மேல் நோக்கி வாய் வழி யாக வருகிற இரத்தபித்தத்திலும், வாந்திக்குக் கொடுப்பது உதான வாயுவை மேலுக்குக் கிளப்பி, உயிருக்குத் தீங்கை விளைவிக்கிறது; அல்லது இரத்தத்தை அதிகமாக வெளியில் பெருக்குகிறது.

மேல்நோக்கிச் செல்லும் வாத நோயுள்ளவன், கஷாய வஸ்தி செய்து கொண்டவன், எண்ணெய் வஸ்தி செய்து கொண்டவன் இவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பதால் மேல் நோக்கிச் செல்லும் வாதத்தை அது அதிகப்படுத்துகிறது.

அடைபட்டிருக்கும் குடல் உடையவனுக்கு வாந்திக்குக் கொடுத்தால் நன்கு வாந்தி எடுக்காததினாலும், அதிகம் முக்குவதாலும், குடலுக்குள் உள்ள தோஷங்கள் சீற்றமடைந்து அக்கி, அசையாமை, சுறுசுறுப்பின்மை, உடல் அழற்சி, இவை அல்லது சாவு ஏற்படும்.

இதய நோயுள்ளவனுக்கு வாந்திக்குக் கொடுப்பது இதயத்தை அடைத்துவிடுகிறது.

---

1. உரக்ஷதம்—இரத்தத்துடன் கபம் வெளிவரும்படி இருமுதல்.

தோஷங்கள் மேல்நோக்கிச் செல்லும் நோயினால் வருந்துகிறவன், பக்க வாத நோயினால் துன்புறுகிறவன் என இவர்களுக்கு வாந்திக்குக் கொடுப்பதினால், அந்தந்த நோய் மேலும் அதிகமாகிறது. சாவும் ஏற்படுகிறது.

கிருமிக்குடல் உள்ளவனுக்கு **கஷாய** வஸ்தி சிகிச்சை செய்யாததினால், கிருமிகள் ஆசனவாயின் வழியாகச் செல்லாமல், அதிகமாவதால், அவனுக்கு வாந்திக்குக் கொடுத்தால் இதயம் தடைபட்டு அதிகமான வாந்தியை எடுக்கச் செய்கிறது. (7)

4. வாந்திக்கும், மற்ற சிகிச்சைகளுக்கும் தகுதியற்றவர்கள்

தலைப்பு மூன்றில் ''கர்ப்பம் தரித்தவள்'' என்று தொடங்கி, எப்பொழுதும் கவலையில் மூழ்கிக்கிடப்பவன்'' என்பது வரை உள்ளவர்களுக்கு வாந்தி, கழிச்சல், கஷாய வஸ்தி, எண்ணெய் வஸ்தி, சிரோவிரேசனம் (தலையிலிருக்கும் தோஷங்களை மூக்கின் வழியாக வெளிப்படுத்துதல்) புகை பிடித்தல் போன்ற இந்தச் சிகிச்சைகளைச் செய்யக் கூடாது.

அசிரணமுள்ள நோயாளிக்கு வாந்திக்குக் கொடுப்பதைத் தவிர்த்து மற்ற எவ்வித சிகிச்சைகளையும் செய்யக்கூடாது. அசிரணமுள்ள நோயாளிக்கு சடராக்னியின் சக்தி குறைந்திருக்கிறது. அதற்கு மருந்தைச் சீரணிக்கும் சக்தி கிடையாது. ஆகையால் அவனுக்கு வாந்திக்குக் கொடுப்பது நீங்கலாக மற்ற சிகிச்சைகளைச் செய்யக்கூடாது.

புதிதாகக் காய்ச்சல் ஏற்பட்டவனுக்குச் செய்யும் மலம் கழித்தல் போன்ற சிகிச்சைகள், தோஷங்களை அசைவற்று நிற்கச் செய்து விடுவதால், வாந்திக்குக் கொடுப்பதைத் தவிர வேறு மலம் கழித்தல் போன்ற சிகிச்சைகளைச் செய்யக் கூடாது. (8)

5. மலம் கழிக்கச் செய்யும் சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்

நாட்பட்ட காய்ச்சல், மேல் நோக்கிச் செல்லும் இரத்த பித்தம், குன்மம், கட்டி, மண்ணீரல் நோய், மூல நோய், பவுத்திரம், மகோதரம், கிருமிக்குடல், சிறுநீர் அடைப்பு, விந்துவில் ஏற்படும் நோய், பெண்குறியில் உண்டாகும் பிணி, வாத இரத்தம், முற்றின காமாலை நோய், கண் மறைப்பு, வங்கு, காசம் எனும் கண்நோய், கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர்வடிதல், கண் அழற்சி, க்ஷாரத்தி

னால் சுட்ட புண், நெருப்பினால் சுட்ட புண், அழுகிப் போன புண், தலைவலி, சீரணப்பையில் ஏற்படும் வலி, சிறுநீர், மலம் இவற்றின் வேகத்தை அடக்குவதால் தோன்றும் பிணி, மலக்கட்டு, வாந்தி, அம்மை ஆகிய இந்நோயுள்ளவர்கள் வாந்திச் சிகிச்சைக்குத் தகுந்தவர்கள்.

காலரா, உணவு குடலில் பக்குவமாகாமல் அடைபட்டு வெளிவரமுடியாமல் உண்டாகும் வயிற்றுப்பொருமல், சீரணமாகாத நிலை, தோஷபேதீயம் என்னும் இருபதாம் அத்தியாயத்தில் கூறப்பட்ட பித்தக் கோளாற்றினால் உண்டான நோய்கள் ஆகிய இவை பேதிக்குக் கொடுக்கும் சிகிச்சையினால் நீங்குபவை.

எரிகின்ற வீட்டில் நெருப்பை நீக்கிவிட்டால் அந்த வீட்டின் சூடு நீங்குவிடுவதுபோல் உடலில் உள்ள பித்தத்தை பேதிக்குக் கொடுத்து நீக்கிவிட்டால் உடலில் தோன்றும் நோய்கள் நீங்கி விடுகின்றன. (9)

6. மலம் கழிக்கச் செய்யும் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

புதிதாகத் தோன்றிய காய்ச்சல் உடையவன், கழிச்சல், கீழ் நோக்கிச் செல்லும் இரத்த பித்த நோயுள்ளவன், ஆசனவாயில் அடிபட்டவன், உடல் இளைக்கச் செய்யும் இலங்கனச் சிகிச்சை செய்து கொண்டவன், இரவில் கண்விழிப்பவன், கஷாய வஸ்தி சிகிச்சை செய்து கொண்டவன், சடராக்னி குறைந்தவன், எலும்புருக்கி நோய், மிதமிஞ்சிய கள் அருந்துவதால் உண்டாகும் பிணி, வயிற்றுப்பொருமல், ஆயுதங்களினால் அடிபடுதல், காயம்படுதல், அதிகமாகப் பசையுள்ளவன், மிகக் கடினக்குடல் உடையவன் ஆகிய இவர்கள் மலம் கழிக்கச் செய்யும் மருத்துவத்திற்குத் தகாதவர்கள்.

இவர்களுள் புதிதாகக் காய்ச்சல் உண்டானவனுக்கு தோஷம் பக்குவமடையாததால், அவனுக்கு மலம் கழிக்கக் கொடுக்கும் மருந்து மலத்தை வெளியில் கொண்டுவருவதில்லை. மேலும் வாதத்தைச் சீற்றமடையச் செய்கிறது.

அதிசாரம் உள்ளவன், கீழ்நோக்கிச் செல்லும் இரத்த பித்தம் எனும் நோயுள்ளவன் இவர்களுக்கு மலம் கழிக்கக் கொடுக்கும் மருந்து அந்தப் பிணியை அதிகமாக்கிக் கொன்று விடுகிறது.

ஆசனவாயில் அடிபட்டவனுக்கு மலம் கழிக்கக் கொடுக்கும் மருந்து இறக்கும் தறுவாயில் உண்டாகும் துன்பத்தைத் தருகிறது.

இலங்கனம் எனும் சிகிச்சையை மேற்கொண்டவன், மலம் கழிக்கவும் மருந்து உண்டால் அந்த மருந்தின் சக்தியை ஏற்றுக் கொள்ளும் வலிவு அவனிடமிருப்பதில்லை.

க்ஷய நோயுள்ளவனுடைய தாதுக்கள் வலிவிழந்து விடுகின்றன. மலம்மட்டும் அவனுக்குச் சக்தியை அளிக்கிறது. அவனுக்கு மலம் கழிக்க மருந்து கொடுப்பதினால் மலம் உடலில் அடியோடு இல்லாமற் போய்விடுகிறது. அதனால் மேலும் சக்திக் குறைவு ஏற்பட்டு உடலுக்குத் துன்பம் உண்டாகிறது.

அளவுக்கு மீறிக் கள் குடிப்பதனால் உண்டாகும் வெறி எனும் [1]மதாத்யயம் உள்ளவனுக்கு, கள்ளினால் வலிவு குறைந்து இருப்பதால் அச்சமயம் மலம் கழிக்கக் கொடுத்தால் வாதவிகாரங்களால் உயிருக்கு அழிவு ஏற்படும்.

வயிற்றுப் பொருமல் உள்ளவனுக்கு மலம் கழிக்க மருந்து கொடுப்பதனால், முன்பே மலக்குடலில் குவிந்திருக்கிற வாயு மேலும் அதிகமாகி, பரவித் தாங்கமுடியாத வயிற்றுப் பொருமலை உண்டாக்கி, உயிருக்கு ஆபத்தைத் தோற்றுவிக்கிறது.

ஆயுதத்தினால் அடிபட்டவனுக்கு மலம் கழிக்கக் கொடுப்பதனால் வாதம், அடிபட்ட இடத்தில் வந்து சேர்ந்து உயிருக்குத் தீங்கை இழைக்கிறது.

அதிக எண்ணெய்ப் பசையுள்ளவனுக்கு மலம் கழிக்கக் கொடுப்பதால் அதியோக (அளவுக்கு மீறி அல்லது அளவு கடந்த காலத்திற் செய்வது)த்தினால் உண்டாகும் தீமை ஏற்படுகிறது.

கடினமான மலக்குடல் உள்ளவனுக்கு மலம் கழிக்கக் கொடுத்தால் சீற்றமடைந்த தோஷம், வெளியில் வராமல், இதயத்தில் வலி, மூட்டுக்களில் வலி, வயிற்றுப்பொருமல், வாந்தி, மூர்ச்சை, சோர்வு இவற்றை உண்டாக்கி, உயிருக்குத் தீமையை ஏற்படுத்துகிறது.

சூல் உற்றவளுக்கு மலம் கழிக்கக் கொடுப்பதனால் வாந்திக்குக் கொடுப்பதனால் ஏற்படக்கூடிய தீமைகள் ஏற்படும். (10)

---

1. மதாத்யயம்—மிதமிஞ்சிய கள் குடிப்பதனால் ஏற்படும் நோய்.

7. வாந்திக்குக் கொடுக்கும் மருந்தைப் பயன்படுத்தும் முறை

வசந்தம்–(சித்திரை, வைகாசி) சரத்–(ஐப்பசி, கார்த்திகை), சிசிரம் (மாசி, பங்குனி) இப்பருவங்களில் முறை தவறாமல் எண்ணெய்ச் சிகிச்சையும், வியர்வைச் சிகிச்சையும் செய்து கொள்ள வேண்டும்.

மனதில் எவ்விதக் கலக்கமுமின்றி, மறுநாள் வாந்தி எடுக்கும் மருத்துவத்திற்குத் தயாராக உள்ள நோயாளியை நீர்ப்பாங்கான இடங்களிலும், நீரிலும் வாழ்கின்ற உயிரினங்களின் புலால் ரசத்தை,

தயிர், பால், உளுந்து, எள்ளு, பிண்ணாக்கு, கீரை போன்ற பொருட்களால் தயார் செய்த நீர் நிறைந்த உணவுடன் கலந்து பருகச் செய்து, கபத்தைக் கிளறிவிட்டு இரவில் நன்கு உறங்கச் செய்ய வேண்டும்.

மறுநாள் காலை உணவு நன்கு சீரணமானபின், நீராடச் செய்து சந்தனம் பூசி, பூமாலை அணிவித்து, மார்பில் ஆடை இல்லாமல், தேவதை, நெருப்பு, அந்தணர், ஆசிரியர், முதியவர் இவர்களை வணங்கச் செய்து, (பூசை செய்து) மங்களகரமான ஹோமம், பலி, பிராயச்சித்தம் (பாவத்தைக் கழிக்கும் செயல்) ஸ்வஸ்திவாசனம் (நன் மொழிகள்)இவற்றைச் செய்விக்க வேண்டும்.

பிறகு துணி விரிக்காத முழங்கால் அளவு பின்பக்கத்தில் தலையணையை முட்டுக்கொடுத்து உயரம் உள்ள இருக்கையில் அமரச் செய்து, உணவு உட்கொள்ளாமல், கஞ்சியுடன் நெய்யைக் கலந்து பருகச் செய்ய வேண்டும்.

பயந்தவன், மெலிந்தவன், சிறுவன், முதியவர், மிருதுவான உடல் அமைப்புள்ளவர் என இவர்களுக்கு தோஷங்களுக்குத் தகுந்த விதத்தில் பால், மோர், கஞ்சி, கரும்புச் சாறு, புலாலின்ரசம், கள் [1]துஷோதகம், கஞ்சி, வண்டல் இவற்றில் ஏதாவது ஒன்றை வேண்டிய அளவு (தொண்டை வரை) பருகச் செய்ய வேண்டும்.

சிறந்த விண்மீன், திதி, கரணம், நேரம் இவற்றுடன் கூடிய நல்ல நேரத்தில், நேரம், தோஷம், தூஷ்யம் இவற்றின்

1. துஷோதகம்—யவதானியங்களை உடைத்து உமியுடன் நீரில் வைத்து தரையில் புடம் வைத்த நீர்.

தன்மைகளுக்கு ஏற்றவாறு, பக்குவம் செய்யப்பட்டதும், தேன், இந்துப்பு இவற்றுடன் கூடியதுமான வாந்தி மருந்தை பொறுக்கும்படியான சூட்டில் அளவுப்படி, அந்தணர்களின் வாழ்த்துக்களால் ஜபிக்கச் செய்து, நோயாளியின் முகத்தை கிழக்கு அல்லது வடக்குப் பக்கமாக வைத்துப் பருகச் செய்ய வேண்டும்.

8. அந்தணர் கூற வேண்டிய மந்திரம்

பிரும்மா (படைக்கும் கடவுள்) தக்ஷன், அச்வினி தேவதைகள் (தேவ மருத்துவர்கள்), சிவன் (அழிக்கும் கடவுள்), இந்திரன், (தேவர்களுக்கு அரசன்) பூமி, சந்திரன், கதிரவன், நெருப்பு, காற்று, முனிவர்கள், எல்லா வகை மருந்துகள், எல்லாவித பூதங்கள் இவர்கள் அனைவரும் உன்னைக் காப்பாற்றட்டும்.

முனிவர்களுக்கு [1]ரசாயனம், தேவதைகளுக்கு அமிர்தம், பாம்புகளுக்கு அமுதம் எவ்வாறு சிறந்ததோ, அவ்வாறு இந்த மருந்து உனக்குச் சிறந்ததாக ஆகட்டும்.

மந்திரம்

''நமோ பகவதே பைஷ்ஜ்ய குரவே வைதூர்ய ப்ரபராஜாய ததாகதாயார்ஹதே ஸம்யக்ஸம்புத்தாய''

''ஓம் பைஷ்ஜ்யே மகாபைஷஜ்யே பைஷஜ்ய ஸமுத்கதே ஸ்வாஹா.''

இம்மந்திரங்களை அந்தணர்களைக் கொண்டு கூறச் செய்து வாந்திக்குக் கொடுக்கும் மருந்தைப் பருகச் செய்ய வேண்டும். (11—14)

9. வாந்தியெடுக்கும் முறை

வாந்தியெடுக்கச் செய்யும் மருந்தை உட்கொண்ட பிணியாளி, இரண்டு கைகளையும் முழங்கால்களின் மேல் வைத்துக் கொண்டு, வாந்தி எடுப்பதிலேயே மனதைச்செலுத்தி, நெருப்பில் கைகளைச் சூடாக்கி உடலைத் தடவிக்கொண்டு சிறிது நேரம் மருந்து அருந்தியதால் வாந்தியாகப் போகிறது என்று எதிர் பார்த்தவண்ணம் இருக்க வேண்டும்.

உடலில் வியர்வை தோன்றினால் தோஷங்கள் உருகுகின்றன என்றும், உடலில் மயிர்க்கூச்சல் ஏற்பட்டால், தோஷங்கள் தங்கள் இடத்தை விட்டு வெளியேறுகின்றன என்றும்,

1. ரசாயனம் — முதுமையையும், நோயையும் நீக்க வல்ல மருந்து.

வயிற்றில் பொருமல் ஏற்பட்டால், தோஷங்கள் வயிற்றில் வந்து சேர்ந்தன என்றும், இதயத்தைத் துன்புறுத்தி, குமட்டல், வாயிலிருந்து நீர் ஒழுகுதல் இவை ஏற்பட்டால் தோஷங்கள் மேல்நோக்கி வருகின்றன என்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

வரப்போகும் வாந்தியை அறிந்ததும், பல இடங்களில் பிடித்துக் கொண்டும், பக்கங்களையும், தலையையும் அழுத்திக் கொண்டும், முதுகை மேல்நோக்கித், தடவியும் தொப்புளை அழுத்தியும் செயல்பட வேண்டும்.

உதடு, தாடை, தொண்டை இவற்றைத் திறந்து, அதிக வேகமில்லாமல், தானாக வருகிற வாந்தியை வெளியில் வர வழைக்கவும்.

தானாக வெளிவந்த வாந்தியை முயற்சியினால் வெளியில் கொண்டுவரக்கூடாது.

தானாக வெளிவருகிற வாந்தியை மேலும் அதிகம் வெளியில் கொண்டுவருவதற்காகச் சுத்தமான நகங்களைக் கொண்ட இரண்டு விரல்கள், அல்லது தாமரை, அல்லி இவற்றின் தண்டு, அல்லது ஆமணக்குச் செடியின் குச்சி இவற்றில் ஏதாவது ஒன்றை உள்ளே செலுத்தி, வாந்தி எடுக்கச் செய்யவும்.

தலையை உயர்த்தி, அல்லது கீழே தாழ்த்தி, அல்லது ஒரு பக்கமாக வைத்துக் கொண்டு வாந்தி எடுக்கலாகாது.

தலையை உயர்த்தி வாந்தி எடுப்பதனால் முதுகு, இதயம் இவற்றில் வலி உண்டாகும்.

தலையைத் தாழ்த்தி வாந்தி எடுத்தால் வயிற்றினுள் உள்ள உறுப்புகளில் வேதனை உண்டாகும்.

தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து வாந்தி எடுத்தால் வயிற்றின் உள்உறுப்புகளிலும், கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புக்களிலும், இதயத்திலும் வலி உண்டாகும். (15)

10. தோஷங்களுக்கேற்ற வாந்தி மருந்துகளும், வாந்தியின் அளவும்

கபநோயில் தீக்ஷ்ணகுணமுள்ளதும், உவர்ப்புச் சுவை, உஷ்ண வீர்யம் உள்ளதுமான பொருட்களால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

பித்தக் கோளாறடைந்த நோயில், இனிப்புச் சுவையும், குளிர்ந்த வீர்யம் உள்ளதுமான பொருட்களால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

வாதத்துடன் கூடிய கப நோயில் எண்ணெய்ப் பசையுள்ளதும், புளிப்புச் சுவையுள்ளதுமான பொருட்களினால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

வெளிவரும் வாந்தியில் பித்தம் தோன்றும்வரை, கபம் முற்றிலும் வெளியாகும் வரை, அல்லது வாந்தி எடுக்கக் கொடுக்கப்பட்ட மருந்து வெளியாகும்வரை, வாந்தி எடுக்கச் செய்வது முறையாகும். *(16)*

11. குறைந்த அளவு வாந்தியும், அதற்கான சிகிச்சையும்

வேண்டிய அளவு வாந்தி எடுக்காமற்போனால் திப்பிலி, நெல்லிக்காய், வெண்கடுகு, உப்புநீர் இவற்றைக் கொடுத்து வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

வாந்தி அதிகமாக எடுக்கச் சக்தியற்றவனுக்கு இரண்டு அல்லது மூன்று நாள் இடைவெளி விட்டு வாந்திக்குக் கொடுக்கவும்.

முற்றிலும் சக்தியற்றவனுக்கு மனதிற்குப் பிடிக்காததும், அறுவறுப்பு உண்டாக்குவதும், பார்க்கப் பிடிக்காததும், கெட்ட நாற்றம் வீசுவதுமான பொருட்களைக் கொண்டு வாந்தி எடுக்கச் செய்யலாம்.

மனதிற்குப் பிடித்ததும், அறுவறுப்பு உண்டாக்காததும், பார்க்கப் பிடித்ததுமான நறுமணம் வீசும் பொருட்களைப் பேதியாவதற்குப் பயன்படுத்தலாம்.

கபத்தை இளகச் செய்வதற்கு வாந்திக்குக் கொடுக்கும் மருந்துடன், இந்துப்பும், கபத்தைப் பிரிப்பதற்குத் தேனும் கலந்து கொடுக்க வேண்டும்.

வாந்தி எடுக்கும்போது வெளிவரும் கபத்தின் அளவைக் கொண்டு வாந்தியின் வேகத்தை அறிந்து கொள்ளலாம். *(17)*

12. சிகிச்சை நன்கு நிறைவேறாததின் அறிகுறிகள்

மருந்து கொடுத்தும் வாந்தி வராமல் இருத்தல், தோஷங்கள் வெளிப்படாமலேயே உட்கொண்ட மருந்து வெளிவருதல், வாந்தி தடைபடுதல் அல்லது சிறிது சிறிதாக வாந்தி எடுத்

தல் ஆகியவை வாந்திக்குக் கொடுக்கும் சிகிச்சை நன்கு நிறை வேறாததன் அறிகுறிகளாம்.

இதனால் சுவையின்மை, உடலில் பளு, வயிற்றுப் பொரு மல், அரிப்பு, கொப்புளம், பெருங்கட்டி, சோர்வு, வயிற்று வலி, நாட்பட்ட ஜலதோஷம், மயிர்க்கூச்சல், உமிழ் நீர் பெருகுதல், வீக்கம், குளிர்க்காய்ச்சல் இவை ஏற்படும். *(18)*

13. சிகிச்சை நன்கு நிறைவேறியதன் அறிகுறிகள்

வாந்திக்குக் கொடுக்கும் சிகிச்சை நன்கு நிறைவேறி யிருந்தால் கபம், பித்தம், வாதம் என்ற தோஷங்கள் முறையே ஒன்றன் பின் ஒன்றாக தங்கு தடையில்லாமல் வெளிவந்துவிடும். வேதனை குறையும். வாந்தி தானாகவே நின்றுவிடும். நல்ல நிலை, நோயின்மை, மனத்தெளிவு, இனிமையான குரல், உடலில் பளு இன்மை, வயிற்றின் உள்ளுறுப்புகள் இலேசா யிருத்தல், வாய் சுத்தமாதல் போன்ற அடையாளங்கள் ஏற் படும். *(19)*

14. அளவுக்கு மீறிய சிகிச்சையின் அறிகுறிகள்

அளவுக்கு மீறி வாந்தி சிகிச்சை செய்யப்பட்டிருந்தால் அப்பொழுது வெளிவரும் வாந்தி, நுரை, இரத்தம் இவற் றுடன் கலந்ததாயிருக்கும். அதில் பல நிறங்கள் தென்படும். மேலும் இளைப்பு, குரல் கம்மல், உடலில் எரிச்சல், தொண்டை உலர்ந்து போதல், தலை சுற்றல், மதி இழத்தல், பைத்தியம், மூர்ச்சை, தலையில் ஒன்றும் இல்லாதது போன்ற உணர்வு, இதயத்திலிருந்து புகையுடன் கூடிய ஏப்பம், உடலில் வேதனை, உணர்வற்றுப்போதல், நாவறட்சி, வாதம் மேல்நோக்கிச் செல்லு தல், வாயு சீற்றமடைதல், செவி நோய், முகவாய்க்கட்டை ஒரு பக்கமாக இழுத்துக் கொள்ளுதல், குரல் தடைபடுதல், தாடையில் பிடிப்பு, நாக்கு வெளிவருதல் அல்லது உள்ளே இழுத்துக் கொள்ளுதல், கண் திரும்புதல், உணர்ச்சியின்மை, தூக்கமின்மை, வலிக்குறைவு, சடராக்னிக்குறைவு போன்ற இவை உண்டாகும்.

உயிருக்கு உயிராக இருக்கும் இரத்தம் வெளிப்படுவதால் இறக்க நேரிடும். இந்நோய்களுக்குச் சிகிச்சை கல்பனாஸ்தா னத்தில் வமன விரேசன வியாபத்ஸித்தி என்னுமிடத்தில் சொல்லப்படும். *(20)*

15. வாந்தி எடுத்தபின் செய்ய வேண்டியவை

முறைப்படி நன்கு வாந்தி செய்வதாயின் கை, கால், முகம் இவற்றைக் கழுவச் செய்து, சிறிது நேரம் களைப் பாறச் செய்து, எண்ணெய்ப் பசையுள்ள புகைப்பிடிப்பு, நடுத்தரமான புகைப்பிடிப்பு, தீக்ஷ்ணமான புகைபிடிப்பு என இம்மூன்றினுள் ஏதாவது ஒன்றைப் பிடிக்கச் செய்து (நோயாளியின் நிலைமைக்கு ஏற்றவாறு) பிறகு கை, கால், முகம் இவற்றைக் கழுவச் செய்ய வேண்டும்.

நறுமணமுள்ள தாம்பூலத்தைப் போட்டுக் கொள்ளச் செய்து, காற்றில்லாத வீட்டில் இருக்கச் செய்து 'ஸ்நேக சிகிச்சை' எனும் இருபத்தைந்தாவது அத்தியாயத்தில் கூறிய முறைகளைப் பின்பற்றச் செய்ய வேண்டும். (21)

பிறகு நோயாளியின் சடராக்னியைச் சோதித்து அவனுக்குப் பசி ஏற்பட்டிருந்தால் அன்று மாலையிலேயே இளஞ் சூடான நீரில் நீராடச் செய்து, பழைமையான சிவப்புச் சம்பா அரிசியினால் செய்யப்பட்ட உணவை, எண்ணெய், உப்பு, கார்ப்புச்சுவை இல்லாமல், அல்லது சிறிதளவு சேர்த்து அதிக நீர் கலந்து சூடு செய்து காலை, மாலை இரு வேளைகளிலும் உண்ணச் செய்ய வேண்டும்.

முழுஅளவு, நடுத்தரம், குறைந்த அளவு என்ற மூன்று முறைகளிலும் சுத்தம் செய்யப்பட்ட நோயாளியை முறைப்படி கஞ்சியை அருந்தச் செய்ய வேண்டும்.

முழுஅளவு சுத்தம் செய்யப்பட்ட நோயாளிக்கு தினமும், காலை, மாலை, இரு வேளைகளிலும் கஞ்சி கொடுக்க வேண்டும். மறுநாள் ஒரு வேளை நீர் அதிகம் கலந்த கஞ்சியையும், மற்றொரு வேளை கெட்டியான கஞ்சியையும் கொடுக்க வேண்டும். மூன்றாவது நாள் இரு வேளைகளிலும் கெட்டியான கஞ்சியை அருந்த அனுமதிக்க வேண்டும்.

நான்காவது நாள் ஒரு வேளை சுக்கு, உப்பு இவற்றால் பக்குவம் செய்யாத கஞ்சி அல்லது புலால் ரசத்தையும் மற்றொரு வேளையில் சுக்கு, உப்பு, இவற்றால் பக்குவம் செய்யப்பட்ட கஞ்சி அல்லது மாமிச ரசத்தையும் பருகச் செய்ய வேண்டும்.

இவ்விதம் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது நாட்களில் இருவேளைகளிலும் பக்குவம் செய்யப்பட்ட, செய்யப்படாத

கஞ்சி, மாமிச ரசம் இவற்றைப் பருகச்செய்து எட்டாவது நாளில் அவனுக்குப் பழக்கமான உணவை உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

நடுத்தரம், குறைவு இவற்றிலும் இதே முறையைக் கடைபிடிக்க வேண்டும். (22—23)

16. [1]பேயா எனும் கஞ்சியின் பயன்

உலர்ந்த சிறிய புற்கள், உலர்ந்த சாணம், விறகு முதலிய வற்றால் தூண்டப்பட்டு மிகவும் நுட்பமான நெருப்பு,வளர்ந்து பெரியதாகவும், கொழுந்துவிட்டு எரியக்கூடியதாகவும், பிறகு எல்லாப் பொருட்களையும் எரித்துவிடத் தகுதி பெற்று கொஞ் சம் கொஞ்சமாகப் பெரிதாவதுபோல்,

வாந்தி முதலியவற்றால் சுத்தியான மனிதனுடைய மந்த நிலைமையில் உள்ள சடராக்னி, பேயா முதலிய உணவு வகை களால் முறையாகச் சிறிது சிறிதாக வளர்ந்து, உறுதிப்பட்டு, பிறகு பலவித உணவையும் சீரணம் செய்யக்கூடியவாறு சிறந்த சக்தியைப் பெற்று விடுகிறது. (24)

17. வாந்தி, மலம் கழித்தல் இவற்றின் உயர்நிலை, நடுநிலை, தாழ்ந்த நிலை

வாந்தி செய்விக்கும் மருத்துவத்தில் நான்கு முறை வாந்தி யானால் அது தாழ்ந்த நிலை எனவும், ஆறுமுறை வாந்தி எடுத்தால் அது நடுநிலை எனவும், எட்டுமுறை வாந்தி எடுத் தால் அது உயர்நிலை எனவும் கருதப்படும்.

மலங்கழிக்கும் மருத்துவத்தில் பத்துமுறை மலம் கழித் தால் அது தாழ்ந்தநிலை எனவும், இருபது தடவை மலம் கழிந்தால் அது நடுநிலை எனவும், முப்பதுமுறை மலம் கழித் தால் அது உயர்நிலை எனவும் கருதப்படும்.

வாந்தியில் வெளிவரும் தோஷம், ஒரு பிரஸ்தம் (16 பலம்) என்ற அளவு கொண்டதனால் அது தாழ்ந்த நிலை எனவும், இரண்டு பிரஸ்தம் (32 பலம்) அளவானால் நடு நிலை எனவும், நான்கு பிரஸ்த (64 பலம்) அளவானால் அது உயர்ந்த நிலை எனவும் கருதப்படுகிறது.

---

1. பேயா எனும் கஞ்சி—சிறிதளவு அரிசியைப் பக்கு வம் செய்து கஞ்சியைப்போல் வரும்போது அதில் மோரையும், மாதுளம்பழச் சாற்றையும் சேர்த்து பக்குவம் செய்யப்படும் ஒருவகைக் கஞ்சி.

மலம் கழித்தலிலும் இதே முறையைப் பின்பற்ற வேண்டும். (25)

மற்றும் சிலர் பித்தம் வெளிவரும்வரை வாந்தி செய்வதே உயர்நிலை வாந்தி என்றும், கபம் வெளிவரும் வரை மலம் கழிப்பதே உயர்நிலை விரேசனம் என்றும் கூறுகின்றனர். மலம் கழிப்பதில் வெளியாகும் தோஷங்களில் பாதியளவு தோஷங்கள் வாந்தி எடுப்பதில் வெளிவந்தால் அது வாந்தியின் தாழ்ந்த நிலையாகும். ஒரு பங்கு வெளிவந்தால் அது வாந்தியின் நடுத்தர நிலையாகும். இரு மடங்கு வெளிவந்தால் அது வாந்தியின் உயர்நிலையாகும்.

மலம் வெளிவரும் முறைகளைக் கணக்கிடும்போது முதலில் மலத்துடன் கூடி மூன்று தடவைகள் செல்லும் மலக் கழிச்சல்களை விட்டு, பிறகு எண்ண வேண்டும்.

வாந்தியின் முறைகளைக் கணக்கிடும்போது குடித்த மருந்து வெளிவந்தபின் எடுக்கும் வாந்தியைக் கொண்டே கணக்கிட வேண்டும்.

18. வாந்தி கொடுக்கும் மருத்துவத்திற்குப் பின் பேதிக்குச் செய்ய வேண்டியவை

முறைப்படி நன்கு வாந்திச் சிகிச்சை செய்து கொண்டவனுக்கு மறுபடி எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை இவற்றைச் செய்வித்து, மறுநாள் இவனுக்கு மலம் கழித்தலுக்குச் சிகிச்சை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்து அன்று எளிதில் சீரணிக்கக் கூடியதும், கபத்தை உண்டு பண்ணாததும், எண்ணெய்ப் பசையுள்ள பொருட்கள், புளிப்புச் சுவையுள்ள பழங்கள் இவற்றால் செய்ததுமான சூடான உணவை, காற்றடைந்த இடங்களில் வாழும் உயிரினங்களின் மாமிச ரசத்துடன் கலந்து அருந்தச் செய்ய வேண்டும். அதன் பிறகு சுடுநீரைப் பருகச் செய்ய வேண்டும்.

இரவில் நன்கு தூங்கியபின் வாந்தி முறையில் கூறியுள்ள கபம் வளர்வதற்கான நேரம் கடந்து விட்டபின் உணவு கொடுக்காமல், நோயாளியின் மலக்குடலின் வலிவை அறிந்து அதன் சக்திக்கு ஏற்றவாறு பேதி மருந்தை அளவோடு கொடுக்க வேண்டும்.

வாந்திக்குக் கொடுக்காமல் பேதிக்குக் கொடுக்கக்கூடாது. மிகக்கடினமான மலக்குடல் உள்ளவனுக்கு வாந்திக்குக் கொடுக்காமலேயே பேதிக்குக் கொடுக்கலாம். (26—27)

வாந்திச் சிகிச்சை செய்விக்காமல் மலம் கழித்தலுக்குக் கொடுக்கப்படும் மருந்து, கபத்தை நீக்கிவிட்டு மேல் நோக்கி தொண்டையைக் கட்டி மார்பில் அடைத்துக் கொள்கிறது. பிறகு மலம் கழிக்கச் செய்யும் மருந்து பயனற்றதாகிவிடுகிறது.

நன்றாக மலம் கழிந்திருந்தாலும், கபம், கிரஹணியை மறைத்து உடலில் பளு, சீதபேதி இவற்றை ஏற்படுத்துகிறது. ஆனால் இயற்கையில் வாத உடல் அமைப்புள்ளவனுக்கு மிகக் கடினமான மலக்குடல் இருப்பதால், வாந்தி செய்விக்காததினால் மேற்கண்ட நோய்கள் உண்டாவதில்லை. (28)

கபகாலத்தில் (விடியற்காலையில்) கொடுக்கப்பட்ட மலம் கழிக்கும் மருந்து, வாந்திக்குக் கொடுக்காததால் உண்டாகும் நோய்களை உண்டுபண்ணுகிறது.

வாந்தியின் காரணமாக உடலில் வலிவு குறைந்த பின், கபகாலத்தில் கொடுக்கப்படும் மலம் கழிக்கச் செய்யும் மருந்து வயிற்றுவலி, வயிற்று உப்புசம், உடல் பளு இவற்றை ஏற்படுத்தி, மதியம் அல்லது இரவில் மலத்தைக் கழிக்கச் செய்யும்.

அவ்வாறே உணவு நிறைந்த குடலில் கொடுக்கப்பட்ட மலம் கழிப்பதற்கான மருந்து இரவில் மலத்னதக் கழிக்கச் செய்கிறது.

மலம் கழிக்கச் செய்யும் உணவினால் சூழ்ந்திருக்கின்ற குடலில் மருந்து கொடுத்தால் வாந்தியைத் தோற்றுவிக்கும்.

மலம் கழியாவிட்டால் கபகாலத்தில் நோயாளிக்கு உணவு அளிக்காமல் வாந்திக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

உணவோடு மலம் கழிக்கச் செய்யும் மருந்து சூழ்ந்து கொண்டால் பிறகு தோஷங்களை எளிதில் வாய் வழியாக வெளியில் கொண்டு வரமுடியும். (29)

19. மலக்குடலின் வகை

மிருது, கடினம், நடுநிலை என மலக்குடல் மூவகைப்படும். பித்தம் அதிகரித்திருந்தால் அது மிருதுக் குடல் ஆகும். அவ்வகைக் குடல் உள்ளவர்கள் பால், கரும்புச்சாறு, புளிப்புச் சுவையுள்ள பொருட்கள், மோர், தயிர்த்தெளிவு, வெல்லம், ஒருவகைக்கஞ்சி, நெய், புதிய கள், சுடுநீர், உவகைப்பழம்,

திராக்ஷை, கொட்டைப்பாக்கு இவற்றில் ஏதாவது ஒன்றைக் கொடுத்தால் பேதி எளிதில் ஆகிவிடும்.

குடலில் வாதம் அதிகரித்திருந்தால் அது கடினக்குடல் எனப்படும். நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், பாச்சோத்தி, சிவதை, அவுரி இவற்றைக் கொடுத்தாலும் கடினக் குடல் உள்ளவனுக்கு கஷ்டப்பட்டுத்தான் மலம் வெளிப்படுகிறது.

கபம் அதிகரித்தும், தோஷங்கள் சமநிலையிலும் உள்ள குடல் நடுநிலைக் குடலாகும். சாதாரணக் குடல் என்றும் இது வழங்கப்படுகிறது.

கூட்டுச் சேரா எண்ணெயைக் கொடுத்த மூன்று நாட்களில் எண்ணெய்ப் பசையைப் பெறுகின்ற குடல் மிருதுவான குடல் ஆகும். ஏழு நாட்களில் எண்ணெய்ப் பசை அடைகின்ற குடல் கடினக்குடலாகும். ஐந்து நாட்களில் எண்ணெய்ப் பசை உண்டாகும் குடல் நடுத்தரக்குடலாகும். *(30)*

20. தோஷங்களுக்கு ஏற்றவாறு மலம் கழிக்கச் செய்யும் பொருட்கள்

பித்தக் கோளாறினால் தோன்றும் நோய்களுக்கு துவர்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்களால் மலம் கழிக்கச் செய்ய வேண்டும்.

கபக் கோளாறினால் ஏற்படும் நோய்களுக்கு உவர்ப்புச் சுவை, உஷ்ணவீர்யம் உள்ள பொருட்கள், பசுவின் சிறுநீர் இவற்றால் மலம் கழிக்கச் செய்ய வேண்டும்.

வாதத்தினால் உண்டாகும் நோய்களுக்கு எண்ணெய்ப் பசை, உஷ்ண வீர்யம், உப்புச்சுவை உள்ள பொருட்களால் மலம் கழிக்கச் செய்ய வேண்டும்.

மலம் கழிந்தவுடன் வாந்தி தோன்றாமலிருப்பதற்காக நோயாளியின் முகத்தைக் குளிர்ந்த நீரால் கழுவச் செய்ய வேண்டும்.

பிறகு சுடுநீரால் வாயைக் கொப்பளிக்கச் செய்து, நறுமணமுள்ள ஈரமண், துருஞ்சி, எலுமிச்சம்பழம், இருவாட்சி, மனத்திற்குகந்த நறுமணப் பொருட்கள் இவற்றை முகரச் செய்யவும்.

காற்றில்லாத இடத்தில் படுக்சையை விரித்துச் சுகமாக அமரச் செய்ய வேண்டும்.

மலக்கட்டு ஏற்படாதிருக்கச் சிறிது சிறிதாக சுடுநீரைத் தொண்டை நனைகிறவரை பருகச் செய்ய வேண்டும்.

மலத்தை அடக்காமல், அதிலேயே மனத்தைச் செலுத்தியவனாய், படுக்கையிலமர்ந்து, அல்லது மலம் கழிக்கும் பாத்திரத்தில் மலம் கழிக்கச் செய்ய வேண்டும். சுடுநீரால் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

வாந்தி எடுப்பதில் வியர்வை பெருகுதல், மருந்து, கபம், பித்தம், வாதம் இவை முறையாக வெளிவருவது போலவே, மலம் கழிப்பதில் கீழ்நோக்கிச் செல்லும் காற்று, சிறுநீர், மலம், பித்தம், கபம் இவை வெளிவருகின்றன. கடைசியாக வாதம் வெளிவருகிறது.

உடலின் தோஷங்களின் அமைப்புதான் இந்த மாறுபாட்டிற்குக் காரணம். வாந்தியால் தோஷங்கள் மேல்நோக்கிச் செல்கின்றன. அதனால் முதலில் வியர்வைப் பெருக்கம், மருந்து, . கபம், பித்தம், வாதம் என்ற முறையில் வெளி வருகின்றன.

மலம் கழிப்பதில் தோஷங்கள் கீழ்நோக்கிச் செல்வதால் முதலில் கீழ்நோக்கிச் செல்லும் காற்று, சிறுநீர், மலம், பித்தம், கபம், கடைசியில் வாதம் என்ற முறையில் தோஷங்கள் வெளிவருகின்றன. (31)

21. மலம் கழிக்கும் மருந்து வேலை செய்யாவிடில் அதற்கான வழி வகை

மலம் கழிக்க மருந்து கொடுத்தும், மலம் வெளிப்படாவிட்டால் மருந்தைத் தூண்டுவதற்காகச் சுடுநீரை அருந்தச் செய்ய வேண்டும். கைகளில் சூடு உண்டாக்கி வயிற்றின் மேல் கையால் ஒற்றடம் கொடுக்கச் செய்யவும்.

சடராக்னி வலிவுள்ளவன், எண்ணெய்ப் பசை உண்டாக்கப்பட்டவன், அதிகம் அல்லது குறைந்த தோஷம் உள்ளவன் இவர்களுக்கு கொடுக்கப்பட்ட மருந்து மலத்தை வெளிப்படுத்தாமலோ அல்லது கொஞ்சமாக வெளிப்படுத்தினாலோ, அன்று கொடுத்த மருந்து சீரணமான பின், மருந்தின் வீர்யத்

தை உணர்ந்து மறுமுறை அளவுப்படி மருந்தைக் கொடுக்க வேண்டும்.

ஆனால் முதலில் கொடுத்த மருந்து சீரணமாகாதிருக்கும் நிலையில் மறுபடியும் மருந்து கொடுக்கக்கூடாது. கொடுத்தால் அதியோகத்தைத் தோற்றுவிக்கும்.

அல்லது அன்றைய தினம் உணவைக் கொடுத்து மறு நாள் மீண்டும் மருந்தைப் பருகச் செய்ய வேண்டும். அல்லது எண்ணெய்ப் பசை அதிகம் இல்லாவிடில், பத்து இரவுகளுக்குப் பின் எண்ணெய்ப் பசையை உண்டாக்கிக் கவனத்துடன் பிறகு மருந்து கொடுக்க வேண்டும். (32)

பெண்கள், அரசரின் பணியாட்கள், வியாபாரிகள் இவர்கள் பெரும்பாலும் முறையே வெட்கம், பயம், பேராசை இவற்றின் காரணமாக இயற்கையாக வெளிவரும் மலம், சிறு நீர் இவற்றின் வேகத்தைத் தடுக்கும் குணம் உடையவர்கள். வேகத்தைத் தடுப்பதனால் வளர்ந்த வாதம் காரணமாக இவர்கள் எப்பொழுதும் கஷ்டப்பட்டே மலம் கழிக்க நேரிடும். இவர்களுக்கு நன்கு எண்ணெய்ப் பசை உண்டாக்கி மலம் கழிக்க மருந்து கொடுக்க வேண்டும். (33)

மற்றும் சிலர் தகாத காலத்தில் மலம், சிறுநீர் இவற்றைக் கழித்தல், அலைதல், தகாத செயல்களைச் செய்தல், தகாத காலத்தில் உணவருந்துதல் போன்ற செயலால் எப்பொழுதும் நோயாளியாகவே வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் சிறு நோயும், பொறுக்க முடியாததாக ஆகிறது. இவர்களுக்கான மருத்துவத்தை உத்தரதந்திரத்தில் ஸ்நேக வியாபத் ஸித்தியில் கூறுவோம். (34)

22. மலம் கழிக்கச் செய்யும் மருத்துவம் நன்கு நிறைவேறாததின் அறிகுறிகள்

மருந்து கொடுத்தும் சரியாக மலம் வெளிப்படாவிடில் மருத்துவம் நன்கு நிறைவேறவில்லை என அறிய வேண்டும். இச்சிகிச்சை நிறைவேறாவிடில் நோயாளியின் வயிறும், இதயமும் சுத்தமாக இராது. அதனால் வயிறும், இதயமும் உணர்ச்சியற்று விடுகிறது. வயிற்றில் உப்புசம் காண்கிறது. உணவு முதலியவற்றில் வெறுப்பு உண்டாகிறது. வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகுதல், கபம், பித்தம் இவை கிளர்ச்சியடைதல், வாந்தி, மனக்கலக்கம், அரிப்பு, கொப்புளம், வயிற்றிலும்

மார்பிலும் எரிச்சல், பளு, சடராக்னிக்குறைவு, சோம்பல், அசைவற்ற தன்மை, குளுமை நோய் ஆகிய இவை ஏற்படு கின்றன. கீழ்நோக்கிச் செல்லும் காற்று, மலம், சிறுநீர், இவை கட்டி விடுகின்றன. (35)

23. மலம் கழிக்கச் செய்யும் மருத்துவம் நன்கு நிறைவேறியதின் அறிகுறிகள்

இந்த மருத்துவம் நன்கு நிறைவேறியிருந்தால் மலம் நன்கு வெளியேறிவிடும். மருத்துவம் நன்கு நிறைவேறாததற் கான அறிகுறிகளுக்கு எதிரிடையான அறிகுறிகள் தென்படும். அதனால் நோயாளியின் வயிறு, இதயம் இவை சுத்தமாக இருத்தல் போன்றவை தென்படும். (36)

24. மருத்துவம் அதிகம் நிறைவேறியதின் அறிகுறிகள்

மருத்துவம் அதிகம் நிறைவேறியிருந்தால் கப—பித்த சம்பந்தமில்லாத நீர், அல்லது ரத்தம் மட்டும் வெளிவரும். அந்த நீர் மாமிசம் கழுவிய நீருக்குச் சமமாகவோ, கரு நிற மாகவோ தென்படும். அதிஸாரம், இதயத்தில் அமுக்குவது போன்ற வலி, மலத்துவாரம் வெளிப்படுதல், கண்கள் குழி விழுதல், உடலில் எறும்புகள் ஊறுவது போன்ற உணர்வு ஏற்படும். (37)

மலக்கழிவு நன்கு ஏற்பட்டபின் புகை பிடிக்கும் சிகிச் சைக்குப்பின் செய்ய வேண்டியதை விலக்கி மற்ற வாந்திக்குப் பின் செய்ய வேண்டிய முறைகளைக் கடைப்பிடிக்க வேண் டும். பிறகு வாந்தி எடுத்தவனைப் போல் முறையாக நன்கு மலம் கழித்தவனுக்கு வழக்கமான உணவைக் கொடுக்கலாம். (38)

இதைப் பற்றிய செய்யுள் :

முதல்நாள் உண்ட உணவு சீரணித்தபின் வாந்திக்குக் கொடுக்க வேண்டும். கபம் சீரணித்தபின் மலம் வெளிவர மருந்து கொடுக்க வேண்டும்; மருந்து அருந்தியபின் சடராக்னிக் குறைவு, குடல் சுத்தமாக ஆகாதிருத்தல், தோஷங்கள் வெளி வராமல் இருத்தல் போன்றவை ஏற்பட்டால் அன்று நோயாளி யைப் பட்டினி இருக்கச் செய்ய வேண்டும்.

அருந்திய மருந்து சீரணமானபிறகு எண்ணெய்ச்சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை, மருந்து ஆகியவற்றால் உண்டாகும் குடல் பிரட்டல் நோய் நோயாளியைத் துன்புறுத்தாது. (39—40)

வாந்தி—பேதி, இரத்த எடுப்புச் சிகிச்சை, எண்ணெய்ச் சிகிச்சை, பட்டினி கிடத்தல் இவற்றால் சடராக்னியின் சக்தி குறைந்துவிடுகிறது. அப்பொழுது கஞ்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும். சிறிதளவு பித்தம், கபம், வெளிவந்திருக்கும் நோயாளி, கள் குடித்தவன், இயற்கையாகவே வாத—பித்த உடல் அமைப்புள்ளவன் ஆகிய இவர்களுக்கு கஞ்சி முறையை (பேயாதி முறை) பின்பற்றக்கூடாது. அதற்குப் பதிலாக நெல் பொறியில் தயார் செய்த சத்துமாவை உடல் வலிவுக்காகக் கொடுக்கலாம். (41—42)

வாந்திக்குக் கொடுக்கப்பட்ட மருந்து சீரணமாகும் வரையில் மருத்துவன் காத்துக்கொண்டு இருக்கலாகாது.

பேதிக்குக் கொடுக்கப்பட்ட மருந்து சீரணமாகும் வரையில் காத்துக் கொண்டிருக்கலாம்.

பேதிக்கு அருந்திய மருந்து சீரணமாகாமல் தோஷங்களை வெளிப்படுத்துகிறதில்லை.

வாந்திக்குக் கொடுக்கப்பட்ட மருந்து சீரணமாகாமலே தோஷத்தை வெளியில் கொண்டு வந்துவிடுகிறது. ஆகையால் வாந்தி எடுக்கச் செய்யும் சிகிச்சையில் மருந்து சீரணமாகும் வரை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். (43)

ஏதோ ஒரு காரணத்தினால் வாந்தி கொடுக்கும் மருந்தினால் பேதி ஏற்பட்டால் நோயாளியின் கால்களைச் சுடுநீராலும், தலையைக் குளிர்நீராலும் நனைக்க வேண்டும்.

பேதிக்குக் கொடுக்கும் மருந்தினால் வாந்தி ஏற்பட்டால், கால்களைக் குளிர்நீராலும் தலையைச் சுடுநீராலும் நனைக்க வேண்டும். (44)

வலிவுக்குறைவு உள்ளவன், அதிக தோஷமுள்ளவன் இவர்களுக்கு தோஷங்கள் பக்குவமடைந்து தானாகவே பேதியானால் அதற்கு பேதியை நிறுத்தக்கூடிய, அல்லது பேதிக்கு மேலும் போகக்கூடிய மருந்தைக் கொடுக்கக்கூடாது. மலத்தைப் பிளக்கும்படியான உணவு வகைகளையே கொடுத்துப் பேதி வரும்படி செய்ய வேண்டும். (45)

வலிவு குறைந்தவன், முன்பே வாந்தி, பேதி சிகிச்சை செய்துகொண்டவன், சிறிதளவே தோஷங்கள் உள்ளவன் என இவர்களுக்கு நோயாளியின் மலக்குடலைப் பற்றி அறியாத

நிலையிலும், மிருதுவாயும், அளவில் கொஞ்சமாகவும் உள்ள மருந்தை அருந்தச் செய்ய வேண்டும். இந்த மிருதுவான மருந்தை அடிக்கடி பருகுவது நல்லது. அதேசமயம் ஒரே முறையில் அதிக அளவில் பருகுவதும் நல்லதல்ல. பருகினால் உயிருக்கே ஆபத்து உண்டாகலாம்.

கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி அருந்தும் மருந்து அதிகமாகச் சுழன்றுகொண்டிருக்கும் தோஷங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் கொண்டுவருகிறது.

வலிவு குறைந்தவனுக்குக் குறைந்த அளவில் உள்ள தோஷங்களை மிருது வீர்யமுள்ள பொருட்களாலே தணிக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் வெளிவராத தோஷம், நோயாளிக்கு வெகு நாட்கள் வரை துன்பத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். அல்லது கொன்று விடும். *(46—48)*

சடராக்னிக் குறைவுள்ளவன், கற்குடல் உடையவன் ஆகிய இவர்களுக்கு க்ஷாரம், உப்பு, நெய் இவற்றைக்கொடுத்து சடராக்னியை வளர்க்க வேண்டும். கபத்தையும், வாதத்தையும் தணிக்கச் செய்ய வேண்டும். பிறகு மலம் கழிக்கச் செய்ய வேண்டும். *(49)*

வரண்ட உடல் உள்ளவன், அதிக அளவில் வாதம்உள்ளவன், கற்குடல் உடையவன், நாள்தோறும் உடற்பயிற்சி செய்பவன், வலிவுள்ள சடராக்னி உள்ளவன் ஆகிய இவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்து, பேதி ஆகாமலேயே சீரணம் அடைந்து விடுகிறது. இவர்களுக்கு முதலில் கஷாய வஸ்தியைக் கொடுக்க வேண்டும். பிறகு எண்ணெய்ப் பசையுள்ள மருந்தினால் பேதிக்குக் கொடுக்க வேண்டும்.

அல்லது பல வர்த்திகளால் மலத்தை சிறிது வெளிவரச் செய்து, பிறகு எண்ணெய்ப் பசையுள்ள மருந்தினால், பேதிக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நோயாளிக்குத் துன்பம் ஏற்படாமல் மலம் மிக எளிதில் வெளிவந்துவிடும். *(50—52)*

நஞ்சு, காயம், சிறிய கட்டிகள், குஷ்டம், வீக்கம், அக்கி, காமாலை, பாண்டு, நீரிழிவு இந்நோய் உடையவர்களுக்கு சிறிதளவு எண்ணெய்ப் பசையை உண்டாக்கிய பிறகு வாந்தி, பேதிக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

எண்ணெய் வகையினால் எண்ணெய்ப் பசை உள்ளவனுக்கு வறட்சி தரக்கூடிய மருந்தினால் மலம் கழிக்கச் செய்ய வேண்டும். வறண்ட குடல் உள்ளவனுக்கு எண்ணெய்ச் சிகிச்சை செய்தபின், மலம் கழிக்க மருந்து கொடுக்க வேண்டும். (53)

வாந்தி போன்ற சிகிச்சைகளில் இடையிடையே எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச்சிகிச்சை இவற்றைச் செய்ய வேண்டும். கடைசியில் உடலுக்கு வலிவு தருவதற்காக எண்ணெய் வஸ்தியைப் பயன்படுத்த வேண்டும். (54)

உவர்மண்ணினால் துணியின் அழுக்கு நீங்குவது போல் உளுந்து, எள்ளு இவற்றால் எண்ணெய்ச் சிகிச்சை வியர்வைச் சிகிச்சை செய்வதனால் மலங்கள் எளிதாக நீங்கி விடுகின்றன. எந்த நோயாளி எண்ணெய்ச் சிகிச்சை வியர்வைச் சிகிச்சை செய்து கொள்ளாமல் வாந்திபேதிக்கு எடுத்துக்கொள்கிறானோ அவனுடைய உடல் உலர்ந்த கட்டை வளைந்தபோது ஒடிவது போல் வீணாகி விடுகிறது. (55—56)

25. தீக்ஷ்ண குணமுள்ள மருந்தின் அறிகுறிகள்

பேதி, கஷாய வஸ்தி இவ்விரண்டினாலும், சுகமாகவும், விரைவாகவும் மிக வேகமாகவும், உடலில் சிக்கிக் கொள்ளாமலும், அதிகம் களைப்பை உண்டாக்காமலும், இதயம், மலத்துவாரம் இவற்றில் வேதனை உண்டாக்காமலும் உடல் உறுப்புகளில் சேர்ந்திருக்கும் தோஷங்கள் வெளிப்படுமானால் தீக்ஷ்ணமான மருந்து கொடுத்ததின் விளைவு இது எனத் தெரிந்து கொள்ள வேண்டும். (57—58)

2 . மருந்தில் தீக்ஷ்ணத்தன்மை உண்டாவதற்குக் காரணம்

எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை செய்து கொண்டவனிடத்தில் நீர், நெருப்பு, பூச்சிகள் இவற்றால் தொடாததாலும், நல்ல இடத்திலும் நல்ல காலத்திலும் தோன்றியதாலும், அநேக குணங்களைப் பெற்றிருப்பதாலும், புதிதாயும், அளவில் அதிகமாயும், தனக்குச் சமானமான வீர்யம் உள்ள பொருட்களுடன் கலந்து ஊற வைப்பதாலும், மருந்து தீக்ஷ்ணத் தன்மை பெறுகிறது.

இந்தக் குணங்களுக்கு எதிரிடையான மருந்துகள் மந்த குணமுள்ளவை. (59—60)

நோயின் எல்லா அறிகுறிகளுடன் கூடியது தீக்ஷ்ணம், நடுத்தர அறிகுறிகள் உள்ளது மத்தியமம். குறைந்த அறி குறிகள் உள்ளது மிருது என நோய்கள் மூவகைப்படும்.

ஆகையால் அந்நோய்களின் வலிவுக்கு ஏற்றவாறு மருந்து களையும், தீக்ஷ்ணம், மத்தியமம், மிருது என்ற வகையில் பயன்படுத்த வேண்டும். (61)

உடலுக்கு உணவு போல ஒன்றிப்போயிருக்கிற மருந்துப் பொருட்களை பேதிக்கோ, வாந்திக்கோ கொடுக்கக்கூடாது. அது மலத்தை வெளிப்படுத்தாமல் தான் சீரணம் அடைந்து விடுகிறது. (62)

வாந்தியெடுக்கும் சிகிச்சை, மலக்கழிப்புச் சிகிச்சை இவற்றை ஆயுர்வேத நூலில் கூறிய முறைப்படி செய்யா விடில் அவை நஞ்சு போல் உடலுக்குத் தீங்கை உண்டாக்கும். ஆயுர்வேத முறைப்படி செய்வது அமுதத்திற்கு ஈடாகும்.

மேற்கூறிய சிகிச்சைகளைக் கட்டாயமாகச் செய்ய வேண் டிய நிலை ஏற்பட்டால், அக்காலத்திலும் அதற்குத் தகுந்த வாறு ஆராய்ந்த பின்பே மருந்துகளைக் கொடுக்க வேண்டும். (63)

வாந்தியெடுக்கும் சிகிச்சை, மலக்கழிப்புச் சிகிச்சை இவற்றை முறைப்படி செய்தால் அறிவுத் தெளிவு, புலன் களுக்கு வலிவு, தாதுக்களுக்கு உறுதி, சடராக்னி வளர்ச்சி, கிழத்தன்மையைத் தாமதித்து வரச் செய்தல் போன்ற நலன் கள் உண்டாகும். (64)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'வமன விரேசன விதி' எனும் இருபத்தேழாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தெட்டாவது அத்தியாயம்

*வஸ்தி விதி

1. வஸ்தி விதியின் விளக்கம்

'வஸ்தி விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். *(1—2)*

குறிப்பாக வாதக் கோளாற்றினால் உண்டாகும் நோய்களுக்கு இச்சிகிச்சை செய்யப்படுகிறது. வஸ்தி என்றால் சிறுநீர்ப்பை. ஆடு, பசு, எருமை, மான் போன்ற பிராணிகளின் சிறுநீர்ப்பை வழியாக நோயாளிக்கு மருந்து செலுத்தப்படுவதால் அதற்கு வஸ்தி என்ற பெயர் வழங்கப்படுகிறது. செலுத்தப்படும் மருந்து முதலில் சிறுநீர்ப் பையில் போய்ச் சேருவதாலும் வஸ்தி எனப் பெயர் பெற்றது.

இந்த வஸ்தி சிகிச்சை மற்ற சிகிச்சைகளைவிட மிகவும் சிறந்தது. வெகுவிரைவில் உடலுக்கு வலிவை அளிக்கிறது. கோளாறடைந்த வாத நோய்களைப் பிளந்து வெளியேற்றி விடுகிறது.

வாதம் எல்லா தோஷங்களுக்கும் தலையாயது. எல்லா தோஷங்களையும் இழுத்துச் செல்லும் தன்மையுடையது. தனித்திறமை பெற்றது. உடலில் தோன்றும் செயல்கள் யாவற்றிற்கும் வாதமே முக்கிய காரணமாக ஆகின்றது.

இந்த வாதம், பிராண, அபான, ஸமான, உதான, வியான என்ற ஐந்து உருவங்களில் உடலில் உள்ள தலை போன்ற உறுப்புகளிலும், கண், காது, விரல்கள் போன்ற உறுப்புகளிலும் பரவியிருக்கிறது.

---

*வஸ்திவிதி—வஸ்தியென்று சிறுநீர்ப்பைக்குப் பெயர். அதைக் கருவியாகக் கொண்டு செய்யப்படும் சிகிச்சையும் வஸ்தி என்றே சொல்லப்படுகிறது. அதை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

இந்த வாயு மரம் போன்ற வெளிப்பொருட்களுக்கும், உடலைச் சார்ந்த ஆன்மீகச் செயல்களுக்கும் முக்கிய காரண மாகிறது. இது மட்டுமல்ல. ஆக்கல், நிலைத்தல், அழித்தல் என்ற இம்மூன்றுக்கும் காரணமாகிறது. (3)

உடலில் உள்ள உள்ளுறுப்புகள், வெளி உறுப்புகள், நடு உறுப்புகள் என இம்மூன்று இடங்களிலும் ஏற்படும் நோய் களுக்கு இந்த வாதம்தான் காரணமாகிறது.

2. வஸ்தி சிகிச்சையின் பயன்

வஸ்தி சிகிச்சை சுகத்தை அளிக்கக்கூடியது. எனவே சிறுவர், முதியவர், இளைத்தவர், பருத்தவர், தாதுக்களின் வலிவு குறைந்தவர், புலன்களின் வலிவிழந்தவர், வாத தோஷத் தின் சேர்க்கையால் மகப்பேறு இல்லாத மாதர், அல்லது மிகத் துன்பத்துடன் மகப்பேறு அடைந்தவர் ஆக இவர்கள் எல்லோருக்கும் பயன்படுத்தும்படி அறிவுரை கூறப்படுகிறது.

மேலும் சடராக்னி, பலம், நிறம், அறிவு, குரல், ஆயுள், இன்பம் இவற்றை அளிக்கிறது. வயதை நிலைநிறுத்துகிறது.

நொண்டி, தொடை பருத்து அசைவற்று இருக்கும் தூண்போல் உள்ள நோய், எலும்பு முறிவு, வாதம் தடை படுதல், வயிறு உப்புசம், வயிற்றுவலி, சுவையின்மை, தோஷங்கள் மேல்நோக்கிச் செல்லுதல், வயிற்றில் கத்தரி என்ற கருவியால் அறுப்பது போன்ற வேதனை இவை போன்ற நோய்களில் வஸ்தி சிகிச்சை நன்மை அளிக்கவல்லது. (4)

3. வஸ்தியின் வகை

இந்த வஸ்தி ஆஸ்தாபனம் (கஷாய வஸ்தி), அநுவாசனம் (எண்ணெய் வஸ்தி), உத்தர வஸ்தி (பெண் குறியின் வழியாக மருந்தைச் செலுத்துவது) என மூவகைப்படும். அவற்றில் கஷாய வஸ்தி தோஷங்கள், தூஷ்யங்கள் இவற்றிற்கு ஏற்ற வாறு பலவகைப் பொருட்களைச் சேர்த்துச் செய்யப்படுகிறது.

4. கஷாய வஸ்தி

இது 1. உத்க்லேசனம் (தோஷங்களைக் கிளப்பி விடக் கூடியது), 2, சம்சோதனம் (தோஷங்களை மலத்துவாரத்தின் வழியாக வெளியில் கொண்டுவருவது), 3. சம்சமனம் (சீற்ற மடைந்த தோஷங்களைத் தணித்து மற்ற தோஷங்களைக்

கிளறிவிடாமல் நோயை நீக்குவது), 4. லேகனம் (தோஷங்களைக் கல்வி வெளியில் கொண்டு வருவது) 5. பிருஹ்மணம் (வலிவைக் கொடுக்கக் கூடியது), 6. வாஜீகரணம் (ஆண்மையைக் கொடுக்கக் கூடியது), 7. பிச்சாவஸ்தி (உடலில் உள்ள தாதுக்களுக்கு களிப்புத் தன்மையை உண்டாக்கும் வஸ்தி) 8. மாது தைலிக வஸ்தி (தேன், எண்ணெய் இவற்றை முக்கியமாகக் கொண்ட வஸ்தி) என எட்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

மாதுதைலிக வஸ்திக்கு யாபநம், யுக்தரதம், தோஷஹரம், ஸ்நிக்த வஸ்தி என்ற பெயர்களும் உண்டு. இந்த வஸ்திகளின் பெயர்களாலேயே இவற்றின் இலக்கணம் சொல்லப் பட்டிருக்கிறது. (5)

ஆயுளை நிலை நிறுத்துவதாலும், தோஷங்களை அடக்குவதாலும் கஷாய வஸ்திக்கு ஆஸ்தாபனம் என்ற பெயர் ஏற்பட்டது. இதற்கு நிரூஹம் என்ற பெயரும் உண்டு. இந்த வஸ்தி உடலில் அபூர்வமான புதிய சக்தியை உண்டாக்குகிறது. தோஷங்களை வெளிப்படுத்துகிறது. எண்ணற்ற வீர்யம், சிறப்புத் தன்மை வாய்ந்தது. இந்த வஸ்தி எண்ணிலாப் பெருமை பெற்றிருப்பதால், கேள்வி—பதிலுக்கு இடமின்மையை வைத்து நிரூஹம் எனப் பெயர் பெறுகிறது. (6)

5. எண்ணெய் வஸ்தி (அநுவாசன வஸ்தி)

தோஷங்களுக்கும், நோய்களுக்கும் தகுந்தவாறு எண்ணெய்ப் பசை உண்டாக்க எண்ணெய் வகையில் தயாரிப்புக்கு அநுவாசனம் எனப்பெயர். இது ஸ்நேக விதி அத்தியாயத்தில் நெய், எண்ணெய், வசை, கொழுப்பு என நான்கு விதமாகக் கூறப் பட்டுள்ளது. (7)

மாத்ரா வஸ்தி என்பது எண்ணெய் வஸ்தியின் ஒரு பிரிவாகும். குடிக்கக் கொடுக்கும் எண்ணெய் வகையில் கூறியுள்ள குறைந்த அளவு இது சேர்க்கப்படுகிறது.

மாதுதைலிக வஸ்தியைப் போல, சிறுவர், முதியவர், வழி நடப்பவர், பளு சுமப்பவர், வாகனத்தில் செல்பவர், உடற் பயிற்சி செய்பவர், கவலையுள்ளவர், நாள் தவறாமல் புணர்பவர், மாதர், அரசர், செல்வந்தர், மிருதுவான உடல் அமைப்புள்ளவர், வலிவு குறைந்தவர், வாத நோயுற்றவர், எலும்பு முறிந்தவர், சடராக்னி குறைந்தவர் ஆக இவர்

களுக்கு ஏற்படும் நோய்களை இது நீக்கவல்லது. இந்தச் சிகிச்சைக்கு ஒருவிதக் கட்டுப்பாடும் கிடையாது.

மேலும் இந்த மாத்ரா வஸ்தி இன்பத்தை அளிக்க வல்லது. வலிவை உண்டாக்குவது. சுகத்தை அளிப்பது. அழகைத் தருவது. தோஷங்களை உடலிலிருந்து வெளியில் போக்குவது. தோஷங்களை அழிப்பது. இவ்விதச் சிறப்புகள் கொண்டது இந்த மாத்ராவஸ்தி. இவ்விதச் சிறப்புப் பெற்றிருந்தாலும் அநுவாசன வஸ்தி, மாத்ரா வஸ்தி இவ்விரண்டையும், அசிரணத்திலும், பகலில் தூங்கும் வழக்கம் உள்ளவர்களுக்கும் கொடுக்கலாகாது.

இது உடலில் தங்கிவிட்டாலும் கெடுதலை உண்டாக்குவதில்லை. தினந்தோறும் பயன்படுத்தலாம். ஆகையால் இதற்கு அநுவாசன வஸ்தி எனப் பெயர். (அநுவாசனம்—தினந்தோறும்) (8)

எண்ணெய்ப் பசை உண்டாக்குவதற்காக அநுவாசன வஸ்தியைப் போல உத்தரவஸ்தியைக் கொடுக்கலாம்.

சிலர் மலத்தைச் சுத்தப்படுத்துவதற்காக கஷாய வஸ்தியைப் போல் உத்தரவஸ்தியைக் கொடுக்கலாம் எனக் கருதுகின்றனர்.

கஷாய வஸ்தி கொடுத்த பிறகு இதைக் கொடுப்பதால் இது உத்தரவஸ்தி என்று பெயர் பெற்றது. (உத்தரம்—பிறகு) அல்லது சிறுநீர் வருமிடம், அல்லது பெண்குறி இவற்றின் வாயிலாகக் கொடுக்கப்படுவதால் இதற்கு உத்தரவஸ்தி எனப் பெயர். (9)

6. கஷாயவஸ்திக்கு உகந்தவர்கள்

குன்மம், மண்ணீரல் நோய், உப்புசம், வயிற்றுவலி, சாதாரணக் கழிச்சல், நாட்பட்ட காய்ச்சல், முற்றின ஜல தோஷம், தூண் போன்று பருத்து அசைவற்றிருக்கும் தொடைகள், இதயம், வயிறு, விலாப்பக்கம், இவற்றில் பிடிப்பு, மூட்டுக்களில் எரிச்சல், விலாப்பக்கங்களில் வலி, பெண் குறியில் வலி, உறுப்புக்களில் உணர்ச்சியின்மை, தாதுக்களில் வலிவுக் குறைவு, நடுக்கம், பளு, மிக இலேசான தன்மை, குடலில் ஓசை, மலம், சிறுநீர், விந்து இவை தடைபடுதல், கல்லடைப்பு, நீர், மணல் மாதிரி இறங்குதல், விரை வீக்கம், விந்து, மாதவிடாய், தாய்ப்பால் நின்றுவிடுதல், மாதர்களுக்கு

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்தப்போக்குக் குறைதல், பைத்தியம், குடலில் கிருமி இருத்தல், சடராக்னி ஒரே நிலையில் இல்லாமை, சிறிது சிறிதாக கீழ்நோக்கிச் செல்லும் காற்று கெட்ட நாற்றத்துடன் வெளிவருதல், தோஷபேதீயம் எனும் அத்தியாயத்தில் கூறிய வாத நோய்கள் என்ற இவற்றிற்குக் கஷாய வஸ்தியைப் பயன்படுத்தலாம்.

வேருடன் வெட்டிய மரம் அடியோடு அழிவது போல் குறிப்பாக இந்த நோய்கள் வஸ்தி சிகிச்சை செய்வதால் நீங்குகின்றன. *(10)*

7. கஷாய வஸ்திக்குத் தகாதவர்கள்

அதிகம் எண்ணெய் குடித்தவன், தோஷங்கள் சீற்றம் பெற்றிருப்பவன், மார்பில் அடிபட்டவன், மிக மெலிந்தவன், வயிற்றில் உணவு இல்லாதவன், வாந்தி, பேதி, மூக்கிலிடும் மருந்து இவற்றைச் செய்து கொண்டவன், வாந்தி எடுப்பவன், துப்பிக் கொண்டே இருப்பவன், இருமல், சுவாசம், விக்கல், மூல நோய், [1]க்ஷதோதரம் [2]பத்தோதரம் [3]உதகோதரம் (நீர், பீலிகை), வயிற்றுப் பொருமல், அலசகம், காலரா, அசீரணக் கழிச்சல், சுவையின்மை, சடராக்னிக் குறைவு, ஆசனவாயில் வீக்கம், குஷ்டம், சர்க்கரை நீரிழிவு இவற்றால் துன்புறுகிறவன், எட்டாவது மாதத்தை அடையாத கருத்தரித்தவள் ஆகிய இவர்களுக்கு கஷாய வஸ்தியைப் பயன்படுத்தலாகாது.

அதிகமாக எண்ணெய் குடித்தவன், தோஷங்கள் சீற்றலைப் பெற்றவன் என்ற இருவர்களுக்கும் கொடுக்கப்பட்ட கஷாய வஸ்தி தோஷங்களைச் சீற்றமடையச் செய்து, விரைவில் உடலுக்கு ,வேதனையை உண்டாக்குகிறது.

வயிற்றில் உணவில்லாதவனுக்குக் கஷாய வஸ்தி கொடுப்பதைப் பற்றி பின்பு கூறப்படும்.

---

1. க்ஷதோதரம்—குடலில் அடிபட்டு மலம் வெளிவராமல் உள்ளுக்குள்ளேயே தங்கி அடைபட்டு வீக்கம் உண்டாதல்.
2. பத்தோதரம்—மலம் முதலியவை வெளிப் போகாமல் குடலும் மலத்துவாரமும் அடைபட்டுப் போதல்.
3. உதகோதரம்—குடலில் நீர் தங்கிப் போதல்.

வாந்தி, பேதி சிகிச்சை செய்துகொண்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கஷாய வஸ்தி, அடிபட்ட காயத்தில் காரப்பொருட்களை இடுவதினால் எரிப்பதுபோல உணவு இல்லாத உடலை எரித்துவிடும். அவ்வாறு வாந்தி, பேதி இவ்விரண்டிற்கும் மருந்து எடுத்துக் கொண்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட எண்ணெய் வஸ்தி, உடனே சடராக்னியை அணைத்துக் கப நோய்களைத் தோற்றுவிக்கும்.

மூக்கிலிடும் மருந்துச் சிகிச்சை செய்து கொண்டவனுக்கு கஷாய வஸ்தி கொடுப்பதினால் அது மேலுள்ள துவாரங்களுக்குச் சென்று பரவிவிடுகிறது. அதனால் அவனுடைய முகம் நழுவிவிடும்.

அவனுக்குக் கொடுக்கும் எண்ணெய் வஸ்தி தோஷங்களைக் கிளறி விடுகிறது.

வாந்தி எடுக்கிறவன், மற்றும் துப்புதல், இருமல், சுவாசம், விக்கல் இந்நோய் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் கஷாய வஸ்தி, எண்ணெய் வஸ்தி இரண்டும், வாதத்தை மேல்நோக்கி இழுத்துச் செல்கின்றன. மூல நோயுள்ளவனுக்கு கொடுக்கப்பட்ட கஷாய வஸ்தி, முளையின் காரணமாக மலத் துவாரம் அடைபடுவதால், தங்கியோ, அல்லது துன்பத்தை விளைவித்தோ உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது.

மேற்கண்டவனுக்குக் கொடுக்கப்படும் எண்ணெய் வஸ்தி கபத்தைப் பெருக்கி வயிற்றில் உப்புசத்தை உண்டாக்குகிறது.

[1]பத்தகுதோதரம் [2]க்ஷதோதரம், நீர்பீலிகை, வயிற்று உப்புசம், இந்நோய் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வஸ்தி மேலும் வயிற்றில் உப்புசத்தை உண்டாக்கி உயிரை மாய்த்து விடுகிறது. [3]அலசகம், காலரா, அசிரணபேதி இவற்றையுடையவனுக்குக் கொடுக்கப்பட்ட வஸ்தி மேலும் [4]ஆமத்தை வளர்க்கும்.

---

1. பத்தகுதோதரம்—மலம் முதலியவை வெளிப்போகாமல் குடலும் மலத்துவாரமும் அடைபட்டுப் போதல்.
2. க்ஷதோதரம்—குடலில் அடிபட்டு மலம் வெளிவராமல் உள்ளுக்குள்ளேயே தங்கி அடைபட்டு வீக்கம் உண்டாதல்.
3. அலசகம்—உண்ட உணவு வாந்தியாகவோ, மலமாகவோ வெளிவராமலும் சிரணமாகாமலும் இரைப்பையில் தங்குவதனால் உண்டாகும் நோய்.
4. ஆமம்— உணவு, மலம் இவை பக்குவமாகாததால் உண்டாகும் தோஷம்.

சுவையின்மை, சடராக்னிக் குறைவு, ஆசனவாய் வீக்கம், குஷ்டம், சர்க்கரை நீரிழிவு இந்நோய் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வஸ்தி அந்தந்த நோய்களை அதிகப்படுத்தி விடுகிறது.

கரு தரித்தவளுக்கு வஸ்தி கொடுப்பதினால் கருச்சிதைவு ஏற்படும். (11)

8. எண்ணெய் வஸ்திக்குத் தகுந்தவர்கள்

கஷாய வஸ்திக்குத் தகுந்தவர்களே எண்ணெய் வஸ்திக்கும் ஏற்றவர்கள். குறிப்பாக, வறட்சியான உடல் நிலை, மிக்க சடராக்னி உள்ளவன், வாதக்கோளாறு உள்ளவன் இவர்களுக்கு இச்சிகிச்சை நல்லது.

வேரில் நீர் இடுவதால் மரம் செழித்து வளர்வது போல எண்ணெய் வஸ்தி உடலில் பரவி அவர்கள் வலிவைப் பெறுகிறார்கள்.

கஷாயவஸ்திக்குத் தகாதவர்கள் எண்ணெய் வஸ்திக்கும் தகாதவர்களே ஆவார்கள்.

வயிற்றில் உணவு இல்லாத நிலை, பாண்டுநோய், காமாலை, நீரிழிவு, நாட்பட்ட ஜலதோஷம், மண்ணீரல் நோய், வயிற்றில் கபம் கட்டிப்போய் அடைபடும் நோய், தொடைகள் தூண்போல் பருத்து அசையாமலிருக்கும் நிலை, இளகலாக மலம் கழித்தல், நஞ்சு, இடுவிஷம் ஆகிய இவற்றை உண்டவர்கள், பித்தம், கபம் இவற்றால் ஏற்படும் கண்நோய், கற்குடல், அதிகப்பருமன், யானைக்கால், தொண்டையில் உண்டாகும் கட்டி, சிறுகட்டிகள், கிருமி நிறைந்த குடல் ஆகிய பிணிகள் உள்ளவர்களுக்கு எண்ணெய் வஸ்தி கொடுக்கக் கூடாது.

அதிகமாக எண்ணெய் குடித்தவர்கள் போன்றவர்களுக்கு கஷாய வஸ்தியால் ஏற்படும் தீமைகள் யாவும் எண்ணெய் வஸ்தியினாலும் ஏற்படும். (12)

உண்ணாமல் காலியாயிருக்கும் குடலுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணெய் வஸ்தி, பரவும் தன்மை, வெகு தூரம் செல்லும் திறமை, நுண்ணிய துவாரங்களிலும் செல்லக்கூடிய சக்தி இவற்றைப் பெற்றிருப்பதால் வாயுவை மேல் நோக்கி இழுத்துச் செல்கிறது. அதனால் வாதத்தைப் போக்குவதில்லை. வாதம், தான் இருக்குமிடத்திலேயே தங்கிவிடுவதால் அது திரும்பி

வருவதில்லை. குறிப்பாக அதனால் சடராக்னிக்கு அழிவு ஏற்படுகிறது. எனவே உணவு உண்ட பிறகுதான் எண்ணெய் வஸ்தி கொடுக்க வேண்டும்.

உணவு உண்டவுடனே கொடுக்கப்படும் எண்ணெய் வஸ்தி, இரைப்பையை அடைத்துவிடுவதால்தான் சிரணப்பையில் தங்கி அங்குள்ள வாதத்தை அகற்றுகிறது. உணவு சீரணித்த பிறகு சீரணப்பையிலிருந்து எண்ணெய் வஸ்தி வெளிவந்து விடுவதால் சடராக்னியை அழிப்பதில்லை.

கஷாய வஸ்தியை, உண்ணாமல் குடல் காலியாயிருக்கும் போதுதான் கொடுக்க வேண்டும். உண்டபின் கொடுக்கப்படும் கஷாய வஸ்தி, அங்குள்ள வாதம் இரண்டும் தீக்ஷ்ணகுணம் உள்ளமையால் உணவுடன் கலந்து ஒன்றாகி விடுகிறது. பிறகு மலத்துவாரத்தில் வந்து, அல்லது மலத்துடன் சேர்ந்து மேல் பக்கத்தில் தங்கிவிடுகிறது. அங்கே தங்கிய அவ்விரண்டும் வெளியில் வராமல் விரைவில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கிறது.

எனவே உண்டபின்தான் எண்ணெய் வஸ்தியைக் கொடுக்க வேண்டும். உண்ணாமலிருக்கும் போதுதான் கஷாய வஸ்தியைக் கொடுக்க வேண்டும். *(13—17)*

பாண்டு நோய், காமாலை, நீரிழிவு இவற்றிற்குக் கொடுக்கப்படும் எண்ணெய் வஸ்தி தோஷங்களைக் கிளப்பி விட்டு மகோதரம் எனும் நோயைத் தோற்றுவிக்கும்.

நாட்பட்ட ஜலதோஷம், மண்ணீரல், கபம் நிறைந்த வயிறு, தூணைப்போல் தொடை பருத்திருத்தல், கழிச்சல், நஞ்சு, இடுவிஷம், பித்தம், கபம் இவற்றால் உண்டான கண் நோய், கற்குடல், மிகப்பருமன், யானைக்கால், தொண்டை நோய், நீரிழிவு நோயினால் உண்டாகும் சிறுகட்டிகள், கிருமிக் குடல் ஆகிய பிணிகளுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணெய் வஸ்தி மேலும் நோயை அதிகப்படுத்தும். *(18)*

9. வஸ்திகளுக்கான கருவி

தங்கம், வெள்ளி போன்ற தாதுக்கள், மணி, சங்கு, மான்கொம்பு, யானைத் தந்தம், எலும்பு, மூங்கில், நாணல், வைரம் பாய்ந்த கருங்காலி, கருவேலம், தினிசு, திந்துகம் என்ற ஒருவகை மரம் இவற்றில் ஏதாவது ஒன்றினால்

வஸ்திகளுக்குப் பயன்படுத்தப்படும் கருவி செய்யப்பட வேண்டும்.

அக்கருவி கோணலின்றி, வழுவழுப்பாகவும், பசுவின் வால் போன்றும் இருக்க வேண்டும். கருவியின் வாய்ப்பகுதி உருண்டையாக இருக்க வேண்டும். நோயாளி ஒரு வருஷத்திற்குக் குறைந்த வயதுள்ளவராகில் ஐந்து அங்குலமும், நோயாளியின் வயது ஒரு வருடமாயிருந்தால் ஆறு அங்குலமும், ஏழு வயதுடையவராகில் ஏழு அங்குலமும், பன்னிரண்டு வயதுடையவராயிருந்தால் எட்டு அங்குலமும், பதினாறு வயதுள்ளவராகில் ஒன்பது அங்குலமும், அதன் நீளம் இருத்தல் வேண்டும். இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ள கருவி தேவைப்படுகிறது.

கருவியின் அடிப்பகுதி நோயாளியின் கட்டைவிரல் சுற்றளவும், நுனிப்பகுதி சுண்டுவிரல் சுற்றளவும் உள்ளதாக இருத்தல் வேண்டும்.

அரை அங்குலம் தொடங்கி அரை அரை அங்குலமாக மூன்று அங்குலம் வரையில் கருவியின் நுழையும் பகுதி அதிகப்பட வேண்டும். அடிப்பாகத்தில் துவாரம் அமைக்கவும். அந்த துவாரம் ஒரு வயது நோயாளிக்கு ஓர் அங்குலமும், ஏழு வயது நோயாளிக்கு ஒன்றரை அங்குலமும், பன்னிரண்டு வயது நோயாளிக்கு இரண்டு அங்குலமும், பதினாறு வயதுள்ள நோயாளிக்கு இரண்டரை அங்குலமும், இருபது வயதுள்ள பிணியாளனுக்கு மூன்று அங்குலமும் உள்ளதாகத் தயார் செய்ய வேண்டும்.

கருவியின் நுனிப்பகுதியில் உள்ள துவாரம், காட்டுப் பயறு, உளுந்து, கடலை, நனைந்த கடலை, இலந்தக் கொட்டை இவை நுழையும்படியாக அமைதல் நன்று. கருவியின் அடிப்பகுதியில் உள்ள துவாரத்திலிருந்து மூன்று அங்குலம் தள்ளி, ஒவ்வொரு அங்குலத்திற்கும் தடை வளையம் இருத்தல் நலம். தடை வளையத்தில் நூல் கட்டி நூலில் முரட்டுத் துணியில் சுற்றப்பட்ட வஸ்தியை இணைக்கவும்.

வயது, பலம், உடல் இவற்றிற்கு ஏற்றவாறு கருவியின் அமைப்பு அமையலாம். (19)

ஆடு, செம்மறியாடு, பன்றி, மான், பசு, எருமை இவற்றின் ஏதாவது ஒன்றின் சிறுநீர்ப் பையை எடுத்து அதில்

எண்ணெயுடன், பயற்றின் மாவையும் பூசி வழவழப்பாகச் செய்து அதை துவாரம், முடிச்சு, நரம்புத் தடுப்பு இவை அற்றதாக ஆக்க வேண்டும். மிகவும் உருண்டையாக இருக்கக் கூடாது. ஆனால் மிருதுவாயும் உறுதியாயும் இருத்தல் நலம். கடுக்காய் கஷாயத்தினால் பதனிட்டு சிவப்பு நிறமாகத் தயார் செய்து மருந்துப் பொருட்கள் வைப்பதற்குத் தகுதியுள்ளதாகத் தயாரிக்க வேண்டும்.

சிறுநீர்ப்பையை சுருக்கமில்லாமல் வாய் பக்கத்தைத் திறந்து வஸ்திக் கருவியில் நுழைத்து தடை வளையத்துடன் நூலில் இறுக்கமாகக் கட்ட வேண்டும். மருந்துப் பொருட்களை சிறுநீர்ப் பையில் இட்டபின் அதன் வாயைக் கட்டுவதற்காக அந்தக் கருவியில் மற்றொரு இடத்தில் வேறு ஒரு நூலைக் கட்ட வேண்டும். *(20)*

முற்கூறிய பிராணிகளின் சிறுநீர்ப்பை கிடைக்காவிடில், நீர் வாழும் பறவையின் மெல்லிய தோல், செம்மறியாட்டின் தோல், அல்லது தேன்மெழுகு பூசிய உறுதியான, மெல்லிய துணி இவற்றைப் பயன்படுத்தலாம். *(21)*

10. மருந்தின் அளவு

கஷாய வஸ்தியின் மருந்தின் அளவு ஒரு வயதுள்ள நோயாளிக்கு நான்குதோலா இருக்க வேண்டும். ஆறு வயது வரையிலும் ஒவ்வொரு வருஷத்திலும் நான்கு நான்கு தோலாவாகப் பெருக்கிக் கொள்ளவும். ஆறு வயதுக்குமேல் பதினெட்டு வயது வரையிலும் ஒவ்வொரு வருடமும் எட்டுத் தோலா அதிகரித்துக்கொண்டே போகவும். பதினெட்டு வயதுக்கு மேல் எழுபது வயது வரையிலும், தொண்ணூற்றாறு தோலா அளவு மருந்து இருக்க வேண்டும். எழுபது வயதுக்குமேல் மருந்தின் அளவு எண்பது தோலாவாக அமைய வேண்டும். சிலர் தொண்ணூற்றாறு தோலாவிற்குப் பதிலாக அறுபத்து நான்கு தோலா பயன்படுத்தலாம் என்கின்றனர். *(22)*

வயதுக்கு ஏற்றவாறு கஷாய வஸ்தியின் அளவு சொல்லப்பட்டதில் மாதுக தைல வஸ்தியில் நான்கில் ஒரு பங்கு பயன்படுத்த வேண்டும். எண்ணெய் வஸ்தியிலும் இதே முறைதான். *(23)*

கஷாய வஸ்தி கொடுக்க வேண்டிய நோயாளிக்கு எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை இவற்றைச் செய்த

பின், வாந்திக்கும் பேதிக்கும் கொடுத்து கஞ்சி முறைகளைப் பின்பற்றலாம். நோயாளியின் உடல் வலிவு பெற்ற பின் எண்ணெய் வஸ்திக்குத் தகுதிபெற்று எண்ணெய்வஸ்தி தேவைப் பட்டால் அதைக் கொடுக்கலாம். எண்ணெய் வஸ்திக்குத் தேவையில்லாவிடில் கஷாய வஸ்தியை தோஷங்களுக்கும், நோய்க்கும் தக்கவாறு கையாளலாம்.

குளிர் காலத்திலும் வசந்த பர்வத்திலும் (சித்திரை—வைகாசி) பகலில் எண்ணெய் வஸ்தியைக் கொடுக்கலாம். கோடை காலத்தில் இரவு வேளை சிறந்தது. அல்லது தோஷங்கள் நோய் இவற்றிற்கு ஏற்றவாறு பகலிலோ இரவிலோ எண்ணெய் வஸ்தியைக் கொடுக்கலாம். குளிர் காலத்தில் இரவிலும், கோடைகாலத்தில் பகலிலும் எண்ணெய் வஸ்தியைக் கொடுத்தால் எண்ணெய்ச் சிகிச்சை எனும் அத்தியாயத்தில் கூறப்பட்ட நோய்கள் உண்டாகும். (24)

தன்வந்தரி முனிவர் கூறுவதாவது :

இரவில் எண்ணெயும், தோஷங்களும் சிற்றமடைவதால் எந்த வஸ்தியையும் இரவில் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வயிறு உப்புசம், உடல் பளு, காய்ச்சல் இவை உண்டாகும். பகலில் தோஷங்கள் தங்கள் இடத்தில் தங்குவதனாலும், சடராக்னி அன்ன ரசத்துடன் சேர்ந்திருப்பதாலும், உடல் துவாரங்கள் நன்கு திறந்திருப்பதாலும், பகல் வேளையில் எண்ணெய் உடல் எங்கும் பரவுகிறது. ஆனால் குறைந்த பித்தம், கபம் உள்ளவன், மிக வறட்சியான உடல் கட்டுடையவன், வாதத்தினால் துன்புறுகிறவன், உணவு உண்டவன், உண்ட உணவு சீரணமானவன் என இவர்களுக்கு இரவிலும் விருப்பப்படி எண்ணெய் வஸ்தியைக் கொடுக்கலாம். (25—27)

தனி வாதத்தினால் துன்புறுகிறவனுக்கும், தவிர்க்க முடியாத நிலையில் உள்ள நோயாளிக்கும் வாந்தி பேதிக்கு மருந்து கொடுக்காமலே அவனுடைய வலிவை எதிர்பார்க்காமல் எண்ணெய் வஸ்தியைக் கொடுத்தல் நலம். (28)

11. வஸ்தி கொடுக்கும் முறை

வாந்திச் சிகிச்சைக்கு முன் செய்ய வேண்டிய நற்செயல்களைக் காட்டிலும், அதிக அளவு நற்செயல்களைச் செய்து நோயாளியின் உடலில் எண்ணெய் தடவி, சுடுநீரில் சுகமாக நீராடச் செய்ய வேண்டும். பிறகு அவன் வழக்கமாக உண்

ணும் உணவில் நான்கில் மூன்று பங்கு உணவை உட்கொள்ளச் செய்ய வேண்டும். உண்ணும் உணவு இலகு குணமுள்ளதாக வும், எண்ணெய்ப் பசையுள்ளதாகவும் பார்த்துக் கொள்ளவும். முதலில் திரவப் பொருளையும் பின்பு உணவையும் உண்ணச் செய்ய வேண்டும். அநுபானமாக நீர் முதலியவற்றைப் பருகச் செய்யலாம்.

உண்டபின் சிறிது நேரம் உலவி, மலம், சிறுநீர் இவற்றைக் கழித்து, சாப்பிட்ட கை உலர்வதற்கு முன், நம்பிக்கையுள்ள பணியாளர்களுடன், காற்றில்லாத வீட்டில் விரித்த படுக்கை யில் படுக்கச் செய்ய வேண்டும். படுக்கை மிகவும் உயரமாக இல்லாமல் அதன் மேல்விரிப்பு விரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கால்பக்கம் உயர்ந்தும் தலைப்பக்கம் தாழ்ந்தும் இருக்கும் படி படுக்கச் செய்ய வேண்டும். இடது பக்கமாகச் சாய்ந்து தலையை கிழக்குப் பக்கமாக வைத்துப் படுக்கச் செய்யவும். (29)

அதிக எண்ணெய்ப் பசையுள்ள உணவை உண்பவனுக்குக் கொடுக்கப்படும் எண்ணெய் வஸ்தி வாய், மலத்துவாரம் இரண்டு வழியாக வெளிவருவதால் மயக்கம், மூர்ச்சை, சட ராக்னிக் குறைவு, மனப்பிரட்டல் இவை உண்டாகின்றன.

வறட்சியான உணவை உண்பவனுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணெய் வஸ்தி, மலத்தைக் கட்டிவிடுகிறது. வலிவையும் நிறத்தையும் குறைக்கிறது.

குறைந்த அளவு நீர், உணவு உண்பவனுக்குக் கொடுக்கப் பட்ட எண்ணெய் வஸ்தி சிறுநீர், மலம் இவற்றைக் கழிப்ப தனால் காலியான வயிற்றில் உள்ள உணவுடன் கலந்து விடு கிறது. அதனால் விபத்து ஏற்படுகிறது.

உண்டபின் வெகுநேரம் கழித்து எண்ணெய் வஸ்தி கொடுக்கப்பட்டவனுக்கு அது சீரணமாகாததினால் காய்ச்சலை உண்டாக்குகிறது.

சடராக்னி, கிரஹணி, மலக்குடல் இவை மனிதனுடைய இடது பக்கத்தில் இருக்கின்றன. அதனால் நோயாளியை இடது பக்கமாகப் படுக்கச் செய்து கொடுக்கப்படும் வஸ்தி இங்குமங்கும் சிதறாமலும், சடராக்னி போன்றவற்றைக் கெடுக்காமலும் நேராகச் சென்று வெளிவந்துவிடுகிறது.

படுக்கையில் படுத்த நோயாளி உடலைச் சரியாகச் செய்து, தன் கையைத் தலையணையாக வைத்துக் கொள்ள வேண்டும். இடது காலை நீட்டி, வலது காலை மடக்கி வலது கையை அதன்மேல் வைத்துக் கொள்வது நலம். (30)

முதலில் மருத்துவர் கெட்டியான துணியினால் துவாரத்தை மூடியிருக்கிற கருவியைப் பாத்திரத்தின்மேல் வைத்து வலது கால் கட்டை விரல், பக்கத்து விரல் இவற்றால் தடை வளையத்தை அழுத்துவதால் வஸ்தியின் வாய் திறந்து கொள்ளும். அதில் சதகுப்பை, இந்துப்பு இவற்றின் தூள்களைத் தூவ வேண்டும். இந்த வஸ்திக் கருவியைத் தொடுவதற்கு முன், முன்பு கூறப் பட்ட மந்திரச் சடங்குகளைச் செய்து, பிறகு நோய்க்கும், நோயாளிக்கும் தகுந்தவாறு தயாரித்த வஸ்தி திரவத்தைச் சூடாக வஸ்தியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வஸ்திக் கருவியில் எண்ணெயைத் தடவி, வஸ்தி சுருக்க மற்றதாகவும், காற்றைக் குமிழ் உருவத்தில் வெளியேற்றத் தகுதியுள்ளதாகவும் இருக்கும்படி செய்யலாம். அந்த வஸ்தி யின் வாயில் மருந்துள்ள கடைசிப் பகுதியை நூலினால் நன்கு கருவியுடன் இணைத்துக் கட்டி, பிறகு கருவியை வலதுகையில் வைத்துக் கொண்டு நிற்க வேண்டும்.

நோயாளியின் மலத்துவாரத்தில் மருத்துவர் தன் இடது ஆள்காட்டி விரலால் நெய்யைத் தடவி கருவியின் நுனியிலும் அவ்வாறே செய்ய வேண்டும். கருவியை மலத்துவாரத்தில் செலுத்தி, முதல் தடை வளையம் செல்லும் வரை நுழைத்து வஸ்தியை அமுக்குவதன் மூலம் மருந்தை உள்ளே செலுத்த வேண்டும். அப்பொழுது கைகள் நடுக்கமில்லாமல் பார்த்துக் கொள்வது நலம். மருந்தை மிக வேகமாகவோ அல்லது மிகத் தாமதமாகவோ செலுத்தலாகாது. அதேசமயம் ஒரே மன துடன் மருந்தைச் சுகமாகவும், மெதுவாகவும் செலுத்த முயல வேண்டும். அச்சமயம் வஸ்தியில் சிறிதளவு மருந்து தங்கும் படி பார்த்துக் கொள்வதோடு முள்ளந்தண்டை நோக்கி ஒரே முறையில் உள்ளே செலுத்த வேண்டும்.

இல்லையேல் தீமைகள் நேரிடும். தீமைகளுக்கு ஸித்தி ஸ்தானத்தில் சிகிச்சையைக் காணலாம். (31)

சிலர் வஸ்தியை அழுத்தும் காலம் முப்பது மாத்திரை (இரண்டு நிமிடம்) அளவு கொண்டதாக இருக்க வேண்டும் என்பர்.

வஸ்தி கொடுக்கும் நேரத்தில் நோயாளி தும்மல், இருமல், சிரித்தல், கொட்டாவி விடுதல், அசைதல் ஆகிய இவற்றைத் தவிர்க்க வேண்டும். சிறுநீர், மலம், கீழ்நோக்கிச் செல்லும் காற்று இவை ஏற்படுமாகில் வஸ்திக் கருவியை விலக்கி, சிறுநீர், மலம் வெளிவந்த பின், மிகுதி உள்ள மருந்தைச் செலுத்தலாம். வஸ்திக்குக் கொடுத்தபின் மல்லாந்து படுத்திருக்கும் நோயாளியின் பின் தட்டுகளை உள்ளங்கையினால் மூன்று அல்லது நான்கு முறை தட்டிக் கொடுத்தும், இரண்டு மூன்று முறை கால்களைத் தூக்கச் செய்தும், தலையணை வைத்துப் படுத்திருக்கும் நோயாளியின் பின்தட்டுகளின் இரு புறங்களிலும் கையை மூடிக் குத்தவும் வேண்டும். பிறகு கீழிருந்து மேல் பக்கமாக உள்ளங்கால், விரல்கள், கால், ஆடுசதை இவற்றில் எண்ணெயைத் தடவி மெள்ள பிடித்துவிட்டு வலியுள்ள இடங்களையும் பிடித்து நூறு மாத்திரை (6 நிமிடங்கள்) அளவு காலம் இவ்வாறு செயல்பட வேண்டும். அதனால் உள்ளுக்குச் செலுத்தப்பட்ட எண்ணெய் வெளிவராமல் நரம்புகளைச் சுற்றிலும் பரவுகிறது.

எண்ணெய்ச் சிகிச்சையில் கூறப்பட்ட முறைகளைக் கடைபிடிக்கச் செய்ய வேண்டும். (32)

உள்ளே செலுத்தப்பட்ட எண்ணெய் வெளிவந்தபின் நோயாளிக்கு சடராக்னி தீவிரமடைந்திருந்தால் அன்று மாலை எளிதில் சீரணமாகக்கூடிய உணவைக் கொடுக்கலாம். சடராக்னி குறைந்திருந்தாலும், எண்ணெய் வெளிவராமலிருந்தாலும் அன்று மாலையும் மறுநாளும் உணவையும் எண்ணெய் வஸ்தியையும் கொடுக்கக் கூடாது.

எண்ணெய் வெளிவரும் நேரமாகிய மூன்று ஜாமங்கள் (9மணி நேரம்) கழிந்த பிறகும் எண்ணெய் வெளிவராவிடில், ஒருநாள் முழுவதும் வெளிவருவதை எதிர்பார்க்கலாம். அதற்குப் பிறகும் அது வெளிவராவிடில், உப்பு, காடி இவை நிறைந்த வர்த்திகளாலோ, அல்லது தீக்ஷ்ணமான வஸ்திகளாலோ எண்ணெயை வெளிவரச் செய்யலாம். எண்ணெயினால் ஏற்படும் தீமைகளுக்கு ஸித்திஸ்தானத்தில் கூறப்பட்ட முறைகளைக் கையாளலாம். வறண்ட தன்மையினால் எண்ணெய் வெளிவராமலும், நோயாளிக்கு ஜடத்தன்மை, சடராக்னிக் குறைவு இவை ஏற்படாமலிருந்தாலும் எண்ணெயை வெளிப்படுத்தும் சிகிச்சையைச் செய்யவேண்டாம். மலம் வெளிவராமல் எண்ணெய் மட்டும் விரைவில் வெளிவந்து விட்டால்,

மறுபடியும் எண்ணெய் வஸ்தியைக் கொடுத்தால் எண்ணெயுடன் - மலமும் வெளிவந்து விடும்.

எண்ணெய் வஸ்தி எடுத்துக் கொண்டபின் நன்கு தூங்கியவனுக்கும், வாந்தி, பேதிக்கு எடுத்துக் கொண்டவனுக்கும், கஷாய வஸ்தி எடுத்துக் கொண்டவனுக்கும் குடலில் தங்கியுள்ள மீதி எண்ணெய் சீரணமாவதற்காகவும், வாதம், கபம் போன்ற தோஷங்கள் தணிவதற்காகவும், காலையில் சுக்கு, தனியா, இவற்றால் தயார் செய்த கஷாயத்தை அருந்தச் செய்யவும். மற்றவர்களுக்கு சுடுநீரைக் கொடுத்தால் போதும். (33)

பிறகு வழக்கமான உணவை உண்ணச் செய்யவும். எண்ணெய் வஸ்தி கொடுத்தவனுக்குக் கஞ்சி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்யக்கூடாது. இல்லையேல் அது எண்ணெய்ப் பசையுள்ள குடலில் பரவி அடைத்துக் கொள்ளும். மூன்றாவது அல்லது ஐந்தாவது நாளில் எண்ணெய் வஸ்தியைக் கொடுக்கலாம். அல்லது எண்ணெய் சீரணமாகும் வரை கொடுக்கலாம்.

அதிக சடராக்கினி உள்ளவன், வறட்சியான உடல் அமைப்பு உள்ளவன், அதிகமான வாததோஷம் பெற்றவன் தினந்தோறும் உடற்பயிற்சி செய்பவன் ஆகிய இவர்களுக்கு தினமும் எண்ணெய் வஸ்தி கொடுக்கலாம்.

இவ்வாறு தோஷங்களுக்குத் தகுந்தபடி மூன்று நான்கு முறை எண்ணெய் வஸ்திகளால் எண்ணெய்ப் பசையை உண்டாக்கித் துவாரங்கள் சுத்தமடையத் தோஷங்களை நீக்கும் கஷாய வஸ்தியைப் பயன்படுத்தலாம்.

வாதம் அதிகமாயிருந்தால் எண்ணெய் வஸ்தி கொடுத்து சுத்தம் செய்யவும். (34)

12. கஷாய வஸ்தி தயாரிக்கும் முறை

எண்ணெய் வஸ்தி கொடுத்த பின், மூன்றாவது அல்லது ஐந்தாவது நாளில் நடுப்பகல் சிறிது கழிந்தபின், மங்களச் சடங்குகளை நோயாளிக்குச் செய்வித்து உடலில் எண்ணெய் தடவி, வியர்வை வரவழைத்து மலம் கழித்தபின், உண்ணாமலிருப்பவனும் அதிகப் பசி இல்லாதவனுமான நோயாளி, புத்தபகவான், தாரை, படைக்கும் கடவுள், அச்வினி குமாரர்கள், இந்திரன், ஆத்ரேயர் போன்ற ஏழு மாமுனிவர்கள்

காசி அரசரான தன்வந்திரி, விதேக நாட்டரசரான ஜனகர், ஆகிய இவர்களையும், அக்னிவேசர், பராசரர், ஜதுகர்ணர், பேடர், க்ஷாரபாணி போன்ற நூலாசிரியர்களையும் வணங்கி தீபம், சந்தனம், மலர், பழம், பலி, சாம்பிராணிப் புகை இவற்றால் வழிபட்டு, வேள்வியில் தேவர்களுக்கு பங்கு அளிப் டதுபோல் இவர்களுக்கும் பங்கு அளித்து, மூலிகைகள், வயது முதிர்ந்த மருத்துவர்கள், அந்தணர்கள் இவர்களையும் வழி பட வேண்டும். பிறகு ஆயுர்வேத நூல்களை நன்கு கற்றறிந் தவர்களுடன் சேர்ந்து மருந்தின் வலிவையும், தோஷங்களின் வலிவையும் ஆராய்ந்து அதற்குத் தகுந்தவாறு கஷாய வஸ்தி யைத் தயார் செய்ய வேண்டும். (35)

மூலிகை வகை இருபது பலம், மலக்காரக்காய் எட்டு, இவற்றைப் பதினாறு மடங்கு தண்ணீரில் போட்டு முறைப் படி கஷாயம் தயாரிக்கவும். அது நாலில் ஒரு பங்காகச் சுண்டியபின், வாதம் அதிகமிருந்தால், சுண்டிய கஷாயத்தில் நான்கில் ஒரு பங்கும், பித்தம் அதிகமிருந்தால் ஆறில் ஒரு பங்கும் ஆரோக்கிய நிலையிலும், கப தோஷத்திலும், எட்டில் ஒரு பங்கும் எண்ணெய் சேர்க்க வேண்டும்.

மூலிகை, மலக்காய், எண்ணெய் எல்லாம் சேர்ந்ததில் எட்டில் ஒரு பங்கு கல்கம் சேர்க்க வேண்டும். அது அதிக திரவமாகவோ, கெட்டியாகவோ இருத்தலாகாது. அத்துடன் வெல்லம் ஒரு பலம், தேன், இந்துப்பு இவற்றைத் தக்க அளவு சேர்க்கவும். மற்ற பொருட்களைத் தோஷங்களுக்கு ஏற்ற வாறு சேர்க்கலாம். (36)

எல்லாப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து நீராவியில் கொதிக்கவைத்து மத்தினால் கடையவும். பிறகு இதை வஸ்தி யில் நிரப்பி எண்ணெய் வஸ்தி கொடுக்கும் முறைப்படி கஷாய வஸ்தியைக் கொடுக்கலாம். இது மிக்கச் சூடாகவும், மிக்கக் குளுமையாகவும் இருக்கலாகாது. அதேபோல் அதிக மிருது வாகவோ, அதிக தீக்ஷ்ணமாகவோ இருக்கலாகாது. அதிக எண்ணெய்ப் பசையுள்ளதாகவோ, அதிக வறட்சியாகவோ, அதிக நீராகவோ, அதிகக் கெட்டியாகவோ இருத்தல் சரி யல்ல. அளவில் அதிகமாகவோ, குறைவாகவோ இருப்பது கூடாது. அடியோடு உப்பில்லாமலும், அதிக உப்புள்ளதாக வும் இருத்தலாகாது. புளிப்பும் அதிகம் கூடாது.

நீராவியில் கொதிக்க வைப்பதினால் மருந்து புளித்துப் போவதில்லை. மத்தினால் கடைவதனால் கஷாயம் எண்ணெய் போன்றவை நன்கு கலந்து ஒன்று சேருகிறது. அவை ஒன்று சேராவிடில் ஒவ்வொன்றும் தமக்குள்ள தோஷத்தை உண்டு பண்ணும். கஷாய வஸ்தி அதிகச் சூடா, குளுமையா என்பது போன்ற மேற்கூறியவற்றினால் ஏற்படும் தீமைகளுக்கு மருத்துவம் உத்தரஸ்தானத்தில் ஸித்தி ஏனும் பகுதியில் கூறப் படும். (37)

வஸ்திக் கருவியைக் குறுக்காக உபயோகித்தால் மருந்து மலத்துவாரத்தில் ஒழுங்காகச் செல்லாமல் தடைபட்டு மலத் துவாரத்தில் புண் உண்டாகும். மெள்ளச் செலுத்தினாலோ மருந்து மலக்குடலை அடைவதில்லை. வஸ்தியை அதிகம் அழுத்துவதால் மருந்து தொண்டைவரை சென்றுவிடும். அதிக மிருதுவாகவும், குளிர்ச்சியாகவும், மருந்தைக் கொடுத்தால் உடலில் ஜடத்தன்மை ஏற்படுகிறது.

மிகச் சூடாகவோ, புளிப்பாகவோ, தீக்ஷ்ணமாகவோ மருந்தைக் கொடுத்தால் முறையே தலை சுற்றல், எரிச்சல், மயக்கம் இவை ஏற்படும்.

அதிக எண்ணெய்ப் பசையுடன் மருந்தைக் கொடுத்தால் உடலில் மந்தத் தன்மையும், அதிக வறட்சியாகக் கொடுத் தால் வாதச் சீற்றமும் ஏற்படும். அதிகத் திரவமாகக் கொடுத் தால் குறைந்த அளவுதான் மருந்து உள்ளே செல்கிறது.

உப்புச் சேராவிட்டால் வஸ்தி சிகிச்சை நன்கு நிறை வேறாது. அளவு அதிகமாயிருந்தால் அளவுக்கு அதிகமாக செயல்படும். அதோடு சிகிச்சையினால் தீமைகளும், துன்பங்களும் ஏற்படும். மிகவும் கெட்டியாகக் கொடுத்தால் மருந்து தாமதித்து உள்ளே செல்கிறது.

அதிகம் உப்பு சேர்ந்திருந்தால் எரிச்சலும், கழிச்சலும் உண்டாகும். ஆசையினால் மருத்துவர் பொருட்களை முறைப் படி சேர்த்து கவனத்துடன் வஸ்தி சிகிச்சையைச் செய்ய வேண்டும். (38—40)

சிலர் கூறுவதாவது

''கஷாய வஸ்தியில் எண்ணெய், தேன் ஒவ்வொன்றும் மூன்று பலம் (12 தோலா) அளவும், இந்துப்பு அரைத்

தோலாவும், கல்கம் எட்டுத் தோலாவும், மற்ற பொருட்கள் பத்துப்பலம் (நாற்பது தோலாவும்) சேர்க்க வேண்டும். இந்த அளவு ஆரோக்கிய நிலை உள்ளவனுக்குக் கூறப்பட்டது.

கஷாய வஸ்தியில் தேன், உப்பு, எண்ணெய், கல்கம், கஷாயம் என்ற வரிசையில் சேர்ப்பது நல்லது." (41—42)

கஷாய வஸ்தி எடுத்துக் கொண்டபின் தலையணையை வைத்து மல்லாந்து படுத்தபடி கொடுத்த மருந்து உடலில் பரவுவதற்காக அதே மனதுடன் இருக்க வேண்டும்.

மலம் வெளிவருவதற்கான உணர்ச்சி ஏற்பட்டால், கால்களைக் குத்திட்டு வைத்துக்கொள்ள வேண்டும். மருந்து ஒரு மணி நேரத்திற்குள் (முகூர்த்தம்) வெளிவர வேண்டும். வராவிடில் விரைவில் இறக்க நேரிடும்.

மருந்து குறிப்பிட்ட நேரத்திற்குள் சரியாக வெளிவருவதற்காக, ஆமணக்கு எண்ணெய், யவ க்ஷாரம், பசுவின் சிறுநீர், புளிப்புச் சுவையுடையதும், எண்ணெய்ப் பசை உண்டாக்குவதும் தீக்ஷ்ண குணமும் உஷ்ண வீர்யமும் உள்ளதுமான மற்றொரு கஷாய வஸ்தியைக் கொடுக்க வேண்டும். மலக்காரக் காயினால் செய்யப்பட்ட வர்த்தியைச் செலுத்தி வியர்வை, பயம், பயமுறுதல் இவற்றை உண்டாக்க வேண்டும்.

வஸ்தி சிகிச்சை முறையாகச் செய்யாததால் ஏற்படும் தீமைகளைப் போக்கச் சிகிச்சையை ஸித்திஸ்தானத்தில் கூறிய படிச் செய்யவும். (43)

கஷாய வஸ்தி தானாகவே சுகமாக வெளிவந்துவிட்டால் முன்போல் இரண்டு, மூன்று, நான்கு என்ற முறையில் கஷாய வஸ்தியை நன்கு நிறைவேறும் வரையில் கொடுக்க வேண்டும்.

முதல் முறை கொடுத்த வஸ்தி வாதத்தையும், இரண்டாவது முறை பித்தத்தையும், மூன்றாவது முறை கபத்தையும் நீக்குகிறது. (44)

கஷாய வஸ்திச் சிகிச்சை குறைவாக செய்யப்பட்டதா, நன்கு நிறைவேற்றப்பட்டதா அளவுக்கு மீறி செய்யப்பட்டதா என்ற விவரத்தை மலம் கழிக்கும் சிகிச்சையில் கூறியபடி அறிந்து கொள்ளவும்.

கஷாய வஸ்தி நன்கு நிறைவேறியிருந்தால் நோயாளியைச் சுடுநீரில் நீராடச் செய்து காற்றடர்ந்த இடத்தில் வாழும் பிராணிகளின் புலால் ரசத்துடன் உணவை உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

நீராடுவதனாலும், உணவு உண்பதனாலும், பரவியுள்ள மீதி தோஷங்கள் தங்கள் இடங்களை வந்தடைகின்றன. (45)

இவ்வாறு கஷாய வஸ்தி நிறைவேறிய பின், நோயாளி வாதத்தினால் துன்புறுகிறவனாயிருந்தால் வலிவை அளிக்கும் உணவு அருந்தச் செய்து மாலையில் சிறிதளவு உணவுகொடுக்க வேண்டும். பிறகு தோஷங்களுக்குத் தக்கவாறு வாதத்திற்கு பத்துவிதப் பொருட்களைக் கொண்டு ([1]தசமூலம்) எண்ணெயில் தயாரித்த எண்ணெய் வஸ்தியையும் பித்தத்திற்கு ந்யக்ரோதாதி கணத்தில் பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட பொருட்களைக் கொண்டு எண்ணெயில் தயாரித்த எண்ணெய் வஸ்தியையும், கபத்திற்கு பத்மகாதிகணத்தில் கூறப்பட்ட பொருட்களைக் கொண்டு எண்ணெயில் தயாரித்த எண்ணெய் வஸ்தியையும் கொடுக்க வேண்டும்.

எண்ணெய் வஸ்தி குறைவாக நிறைவேறியதா, நன்கு நிறைவேறியதா அளவுக்கு மீறி நிறைவேறியதா என்ற அறிகுறிகளை எண்ணெய் குடிப்புச் சிகிச்சையில் கூறியபடி அறிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக, எண்ணெய் வஸ்தி நன்கு நிறைவேறியிருந்தால் சிறிது நேரத்தில் எண்ணெயுடன் மலமும், வாதமும் வெளிவந்து விடும். (46)

கபம் அதிகமாயிருந்தால் எண்ணெய் வஸ்தியை ஒன்று அல்லது மூன்று தடவை கொடுக்க வேண்டும்.

பித்தம் அதிகமாயிருந்தால் ஐந்து அல்லது ஏழு தடவையும், வாதம் அதிகமாயிருந்தால் ஒன்பது அல்லது பன்னிரண்டு தடவைகளும் கொடுக்க வேண்டும்.

---

1. தசமூலப் பொருட்கள்:—வில்வவேர், பெருவாகை வேர், குமிழம்வேர், பாதரிவேர், முன்னைவேர், ஓரிலை, மூவிலை, கண்டங்கத்திரி, முள்ளங்கத்தரி வேர்கள், நெருஞ்சில்.

மேலும் தேவையானால் ஒற்றைப்படை வரிசையில் எண்ணெய் வஸ்தியைக் கொடுக்க வேண்டும். பின் கஷாய வஸ்தியைக் கொடுக்க வேண்டும்.

எண்ணெய் வஸ்தி கொடுத்தபின் கபம் அதிகமாயிருந்தால் உணவுடன் பயத்தம்பருப்புக் கஞ்சியும், பித்தம் அதிகமாயிருந்தால் உணவுடன் பாலும், வாதம் அதிகமாயிருந்தால் உணவுடன் மாமிச ரசமும் அருந்தச் செய்ய வேண்டும். (47—48)

13. தோஷத்திற்குத் தக்கவாறு கஷாயவஸ்தி தயாரித்தல்

வாதத்திற்கு தசமூலம் போன்ற வாதத்தை நீக்கும் பொருட்களால் தயாரிக்கப்பட்ட கஷாயத்தில், சிவதைவேர், இந்துப்பு, இவற்றைக் கல்கமாகச் செய்து கலந்து புளிப்பு, இனிப்புச் சுவையுள்ளதும் உஷ்ண வீர்யம் உள்ளதுமான பொருட்களால் கஷாய வஸ்தி தயாரித்து அதை ஒருமுறை பித்தத்திற்கு கொடுக்க வேண்டும். ந்யக்ரோதாதி கணம், (இனம்) பத்மகாதிகணம் இவற்றில் கூறப்பட்ட பொருட்களால் தயார் செய்த கஷாயத்தில் சர்க்கரை, நெய், பால், கரும்பு ரசம், தேன் இவற்றைக் கலந்து இனிப்பாகவும், குளுமையாகவும் கஷாய வஸ்தி தயாரித்து இதை இருமுறை கொடுக்க வேண்டும்.

கபத்திற்கு ஆரக்வாதி கணம், வத்ஸகாதி கணம் இவற்றில் கூறப்பட்ட பொருட்களால் தயார் செய்த கஷாயத்தில் தேன், பசுவின் சிறுநீர், இவற்றைக் கலந்து, தீக்ஷ்ணமாகவும், உஷ்ணமாகவும், வறட்சித் தன்மையுடையதுமான பொருட்களைச் சேர்த்து கஷாய வஸ்தி தயார் செய்து இதை மூன்றுமுறை கொடுக்க வேண்டும்.

வாதம், பித்தம், கபம் என்ற இம்மூன்றின் கூட்டில் மூன்று வஸ்திகளையும் பயன்படுத்தலாம். (49—51)

வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்களைத் தவிர்த்து மற்ற தோஷங்கள் இல்லாதபடியால் அவற்றைப் போக்கும்படியான வஸ்திகளும் மூன்றேயாகும். நான்காவது தோஷமிருந்தாலல்லவா மற்றொரு வஸ்திக்குத் தேவை எனச் சரகர் கூறுகிறார். (52)

மற்றும் சிலர் வஸ்தி மூன்றே விதம் என்கின்றனர். ஒரு வஸ்தி தோஷங்களைக் கிளப்பிவிடுகிறது. மற்றொன்று தோஷங்களைச் சுத்தம் செய்கிறது. மூன்றாவது தோஷங்களைத் தணிக்கச் செய்கிறது. (53)

தோஷம், மருந்து, வலிவு இவற்றை ஆராய்ந்து வஸ்தியைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். தோஷங்கள் நீங்கும் வரையில் கஷாய வஸ்தியைக் கொடுக்கலாம் என்பது நூலாசிரியரின் கருத்து. (54)

வஸ்திகளை கர்ம வஸ்தி, கால வஸ்தி, யோகவஸ்தி என மூவகைகளில் பயன்படுத்தலாம்.

கர்ம வஸ்தி என்பது முப்பது வகையுடையது. முதலில் ஒரு எண்ணெய் வஸ்தியையும் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக பன்னிரண்டு கஷாய வஸ்திகளையும், பன்னிரண்டு எண்ணெய் வஸ்திகளையும் மாற்றி மாற்றிக் கொடுக்க வேண்டும். கடைசியில் ஐந்து எண்ணெய் வஸ்தி ஆக முப்பது வஸ்திகள், இவ்வாறு கொடுப்பதற்கு கர்ம வஸ்தி எனப்பெயர்.

காலவஸ்தி என்பது பதினைந்து வகையுடையது. முதலில் ஒரு எண்ணெய் வஸ்தி, பிறகு ஒன்றன் பின் ஒன்றாக ஆறு எண்ணெய் வஸ்தி, ஐந்து கஷாய வஸ்தி என இவற்றை மாற்றி மாற்றிக் கொடுக்க வேண்டும். கடைசியில் மூன்று எண்ணெய்வஸ்தி ஆக பதினைந்து வஸ்திகள். இவ்வாறு கொடுப்பதற்கு கால வஸ்தி எனப் பெயர்.

யோக வஸ்தி என்பது எட்டு வகையுடையது. முதலிலும் கடைசியிலும் எண்ணெய் வஸ்தி என இரண்டு வஸ்திகள். நடுவில் கஷாய வஸ்தி மூன்று. எண்ணெய் வஸ்தி மூன்று இவற்றை மாற்றி மாற்றிக் கொடுப்பது ஆக எட்டு வகை. இம்முறை யோக வஸ்தி எனப்பெயர் பெறுகிறது. (55—57)

எண்ணெய் வஸ்தியையோ, கஷாய வஸ்தியையோ அதிகமாகவும், தனித்தனியாகவும் கொடுக்கக் கூடாது. எண்ணெய் வஸ்தியை அதிகமாகவோ, தனியாகவோ கொடுத்தால் தோஷங்களைக் கிளறிவிட்டு சடராக்னிக்கு அழிவையும் உண்டுபண்ணுகிறது.

கஷாய வஸ்தியைத் தனியாகவும் அதிகமாகவும் பயன்படுத்தினால் வாதம் சீற்றமடைகிறது.

ஆகையால் இரண்டு வஸ்திகளையும் மாற்றி மாற்றியும் அளவுடனும் கொடுக்க வேண்டும். இம்முறையைக் கடைபிடித்தால் மூன்று தோஷங்களும் நீங்கிவிடும். (58—59)

எண்ணெய் வஸ்தி, கஷாய வஸ்தி இரண்டையும் மாற்றி மாற்றி பதினெட்டுத் தடவை கொடுக்க வேண்டும். இப்படி பதினெட்டுத் தடவை கொடுத்தால் 324 தடவைகள் (18×18=324) ஆகும். இப்படி வஸ்தி எடுத்துக் கொள்கிறவன், அறிவாளியாகவும், நோயற்றவனாகவும், நீண்ட ஆயுளை உடையவனாகவும், நினைவு சக்தி அதிகம் பெற்றவனாகவும், பாவங்கள் அற்றவனாகவும், தேவர்களைப் போன்று ஒளி வீசுகின்றவனாகவும், குதிரை போன்ற வலிவுடையவனாகவும், யானையைப் போன்று பலம் பெற்றவனாகவும், உறுதியான அறிவுள்ளவனாகவும், புலன்களை வென்றவனாகவும், சடராக்னி சமநிலையில் உள்ளவனாகவும் திகழ்கிறான். (60—61)

14. [1]உத்தரவஸ்தி செய்யும் முறை

ஆண்களுக்கு சிறுநீர்ப்பையில் ஏற்படும் நோய்களுக்கும், மாதர்களுக்கு பெண் குறியிலும் கருக்குழியிலும் தோன்றும் பிணிகளுக்கும் கொடுக்கக்கூடிய வஸ்தி உத்தர வஸ்தி எனப்படும். முதலில் இரண்டு மூன்று முறை கஷாய வஸ்தியைக் கொடுத்து சுத்தமாக்கிய பிறகு இந்த உத்தர வஸ்தியைக் கொடுக்க வேண்டும். இந்த வஸ்தியைச் செலுத்துவதற்கான கருவி நோயாளியின் விரலின் கணுவைப்போல் பன்னிரண்டுமடங்கு நீளமுள்ளதாக இருக்க வேண்டும். அந்தக் கருவியின் வடிவம் பசுவின் வாலைப்போல் அடியில் பருத்தும் நுனியில் சிறுத்தும் உருண்டை வடிவமாகவும் இருக்க வேண்டும். அதன் அடிப்பகுதியிலும், நுனிப்பகுதியிலும் தடைவளையம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கருவியின் நுனியில் உள்ள துவாரம் கடுகு நுழையக்கூடியதாகவும் வழவழப்பாகவும் இருக்க வேண்டும். தங்கம், வெள்ளி போன்ற தாதுப் பொருட்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கருவி, குறுக்கத்தி அல்லது அலரி, அல்லது இருவாட்சி மலரின் காம்புபோல் நேராகவும் உறுதியாகவும் இருக்கலாம். கருவியில் இணைக்கப்படும் வஸ்தி மிருதுவாகவும் இலேசாகவும், இரண்டு தோலா அளவு மருந்துமட்டும் கொள்ளத் தக்கதாகவும் இருப்பதோடு நோயாளியின் வயது, வலிவு, உடலமைப்பு இவற்றிற்கு ஏற்றவாறும் இருத்தல் நலம். (62—64)

---

1. உத்தர வஸ்தி—ஆண்குறியிலும், பெண்குறியிலும் செலுத்தும் வஸ்தி.

15. உத்தர வஸ்தி கொடுக்கும் முறை

நோயாளியை நீராடச் செய்து, உணவு உண்டபின், எண்ணெய் வஸ்தி கொடுப்பதற்கு முன் செய்வதுபோல் மங்களச் சடங்குகளைச் செய்து, இருக்கையில் நேராகவும், சுகமாகவும் அமரச் செய்யவேண்டும். அந்த இருக்கை முழங்கால் அளவு உயரமாகவும், மிருதுவாகவும் இருக்கவேண்டும். ஆண்குறியை அசைவற்றதாகவும், நேராகவும் இருக்கச்செய்து மெள்ளமெள்ள சலாகை என்னும் மெல்லிய கருவியை துவாரத்தைச் சுத்தம் செய்யச் செலுத்த வேண்டும். அந்த சலாகை எனும் கருவி ஜாதிமல்லியின் காம்பு போன்ற சுற்றளவுள்ளதாகவும் கோணலற்றதாகவும், உறுதியாகவும், வழவழப்பாகவும் இருக்க வேண்டும்.

ஆண்குறியின் துவாரத்தைச் சுத்தம் செய்தபின் உத்தர வஸ்தியின் கருவியை அசைக்காமல் நேராக ஆசனவாயில் செலுத்துவதுபோல் ஆண்குறியின் கடைசி வரையிலும் செலுத்தி, பின் வஸ்தியை அழுத்த வேண்டும். எண்ணெய் மருந்து உள்ளே சென்றபின் எண்ணெய் வஸ்தியின் விதிமுறைகளைக் கடைபிடிக்கலாம். இவ்விதம் உத்தரவஸ்தியை மும்முறை அல்லது நான்கு தடவை செய்ய வேண்டும்.

மற்ற முறைகள் யாவும் எண்ணெய் வஸ்தியில் கூறிய படியே ஆகும். (65—69)

16. மாதர்களுக்கு உத்தர வஸ்தி கொடுக்கும் முறை

மாதர்களுக்கு மாதவிடாய் காலத்தில் இந்த உத்தரவஸ்தி கொடுப்பது சிறந்தது. மாதவிடாய் காலத்தில் பெண்குறியும், கருப்பையும் நன்கு திறந்திருக்கும். மிகவும் தேவை ஏற்படில் மாதவிடாய் அற்ற காலத்திலும் இந்த உத்தர வஸ்தியைக் கொடுக்கலாம்.

பெண்குறி நழுவிப்போதல், அதில் வலி, அதில் ஏற்படும் வெட்டச்சூடு நோய், பெரும்பாடு (இரத்த அதிகப்பெருக்கு) ஆகிய இந்நோய்களில், மாதவிடாய் அற்ற காலத்திலும் உத்தர வஸ்தியைத் தரலாம். (70)

மாதர்களின் உத்தரவஸ்திக்குப் பயன்படும் கருவி நோயாளியின் விரல் கணுவைப்போல் பத்துமடங்கு நீளமுள்ளதாகவும், அதில் உள்ள துவாரம் பயறு நுழையக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அந்தக் கருவியை நான்கு கணுக்கள் நீளம்

பெண்குறியின் உள்ளே செலுத்துவதோடு சிறுநீர்ப்பையில் கருவியை இரண்டு கணுக்களின் நீளம் உள்ளே செலுத்தலாம்.

பிரிவிடை ஆகாத சிறுமிகளுக்கு, சிறுநீர்ப்பையில் உண்டாகும் நோயில் ஒரு கணுநீளம் செலுத்துதல் நலம்.

மாதர்களுக்குச் செலுத்தும் நடுத்தர மருந்தின் அளவு நான்கு தோலாவாகவும் சிறுமிகளுக்கு இரண்டு பலமாகவும் இருத்தல் நலம். (71—72)

. மாதர்களை மல்லாக்கப்படுக்கச் செய்து தொடைகளை நன்கு நெருங்கச்செய்து, முழங்கால்களைக் குத்திடச் செய்து ஒரே நாளில் மூன்று அல்லது நான்குமுறை உத்தரவஸ்தியை மூன்று நாட்கள் கொடுக்கலாம். ஒவ்வொரு முறையும் எண்ணெயை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிறகு மூன்று நாட்கள் இடைவெளிக்குப் பின் மறுமுறை மூன்று நாட்கள் தொடர்ந்து உத்தரவஸ்தியைப் பயன்படுத்தலாம்.

வாந்திக்கு மருந்து கொடுத்த பதினைந்து நாட்களுக்குப் பின் பேதிக்கு மருந்து கொடுக்க வேண்டும். பேதிக்கு மருந்து கொடுத்த பதினைந்து நாட்களுக்குப்பின் கஷாய வஸ்தியைக் கொடுக்க வேண்டும்.

கஷாய வஸ்தி கொடுத்தவுடன் எண்ணெய் வஸ்தியைத் தரலாம்.

தேவையிருந்தால் பேதிக்குக் கொடுத்த ஏழு நாட்களுக்குப் பின் எண்ணெய் வஸ்தியைப் பயன்படுத்தலாம்.

வர்ணச்சாயத்தில் நனைக்கப்பட்ட துணி சாயத்தை ஏற்றுக் கொண்டு நீரை வெளிவிடுவது போல வாந்தி, பேதி, வஸ்தி போன்ற மருத்துவ முறைகளால் உடலில் உள்ள தோஷங்கள் வெளிப்படுகின்றன. கெட்டுப் போகாத தாதுக்களையும் நிலை நிறுத்துகின்றன. (73—76)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'வஸ்தி விதி' எனும் இருபத்தெட்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்

*நஸ்ய விதி

'நஸ்ய விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விளக்குவோம். (1—2)

1. மூக்கிலிடும் மருந்தின் விளக்கம்

மூக்குத் துவாரத்தின் வழியாகச் செலுத்தும் மருந்துக்கு நஸ்யம் எனப்பெயர். அதற்கு நாவனம், நஸ்யகர்ம என மற்ற இரண்டு பெயர்களும் உண்டு. மூக்கு துவாரம்தான் தலைக்குச் செல்லும் வழி. அங்கு செலுத்தப்படும் மருந்து தலையின் நடுப்பகுதியில் உள்ள 'சிருங்காடகம்' என்னும் இடத்தை அடைந்து, அங்கு பரவி, தலை, கண்கள், காதுகள், தொண்டை போன்ற இடங்களில் உள்ள நரம்புத் துவாரங்களில் நுழைந்து, கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புக்களில் தோன்றிய எல்லா வகை நோய் கூட்டங்களையும் அங்கிருந்து விரைவில் மூஞ்சப் புல்லின் நுனியைப் பிடித்து இழுத்தால் அதிலுள்ள நாண் வெளிவருவதுபோல் வெளிப்படுத்தி விடுகின்றன. (3)

2. மூக்கிலிடும் மருந்தின் வகை

மூக்கிலிடும் மருந்து விரேசனம், பிருஹ்மணம், சமனம் என மூவகைப்படும்.

1. விரேசனம் — கண், காது, மூக்கு போன்ற இடங்களில் உள்ள தோஷங்களைச் சுத்தம் செய்து வெளிப்படுத்துவது.
2. பிருஹ்மணம்—கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளுக்கு வலிவை அளிப்பது.
3. சமனம்—கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் தோன்றிய நோய்களைத் தணிக்கச் செய்வது. (4)

---

*நஸ்ய விதி—மூக்கின் வழியாகச் செலுத்தப்படும் மருந்து நஸ்யம் எனப்படும். இம்முறையை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

3. விரேசன முறை

கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் ஏற்படும் பரு, வீக்கம், அடைப்பு, அரிப்பு, அசைவற்றிருத்தல், கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல், அழற்சி, நீர் ஊறுதல், அருவருப்பு, சுவையறியாமை, குரல் மாற்றம், பூச்சிகள், முற்றின ஜலதோஷம், காக்காய் வலிப்பு, மணம் அறியாமை, சிறுநரம்புச் சுருட்டு, புரைகுழல், தலையில் ஏற்படும் பொடுகு, கொப்புளம், இந்நோய்கள், கபக் கோளாற்றினால் தோன்றும் பிணிகள் ஆகியவற்றிற்கு ஆங்காங்கு கூறப்பட்ட, சிரோவிரேசனப் பொருட்களால் தயாரித்த தீக்ஷ்ணமான எண்ணெய்,

அல்லது

அதே பொருட்களால் தயாரித்த கஷாயம் அல்லது சூர்ணம் (தூள்) அல்லது சுரசம் (சாறு)

அல்லது

நோய்க்குத் தகுந்தவாறு மேற்கூறிய பொருட்களை திரவமாகவோ நன்கு அறைத்த கல்கமாகவோ தயாரித்து, தேன், இந்துப்பு, கள்வகை, பித்தம், பசுவின் சிறுநீர் இவற்றில் ஏதாவது ஒன்றில் கலக்கி, மூக்கின் வழியாகச் செலுத்தும் முறைக்கு விரேசன நஸ்யம் எனப்பெயர்.

இயற்கையாகவே பயமுள்ளவன், மாதர், இளைத்தவன், மென்மைகுணம் படைத்தவன், இவர்களுக்கு எண்ணெய் வகையில் தயாரித்த விரேசன நஸ்யத்தைப் பயன்படுத்த வேண்டும்.

தொண்டை நோய், கபம்—பித்தம்—வாதம் இவற்றினால் தோஷமடைந்த காய்ச்சல், அதிகத் தூக்கம், மனநோய், கிருமி நோய், தலைநோய், கண்துடிப்பு, கண் மறைப்பு, கண் திறக்க முடியாத நிலை, நஞ்சினால் துன்புறுதல், கண்ணிலிருந்து நீர் வடிதல், பாம்பு கடித்தல், உணர்வற்றுப்போதல் இப்பிணிகளுக்கு கஷாயம், கல்கம் இவற்றை மூக்கில் இடவேண்டும்.

இந்நோய்களின் தோஷங்கள் அதிகரித்து இருக்கையில் விரைவில் குணமளிக்கச் செய்யும் சூர்ணத்தை மூக்கிலிட வேண்டும். அந்தச் சூரணம் மூக்கின் நுனியில் வைத்தவுடனே அதிக வேகத்தை அளிக்கக் கூடியது. (5)

4. பிருஹ்மண நஸ்யமுறை

சூர்யாவர்த்தம் எனும் தலைவலி, ஒற்றைத் தலைவலி, கிருமி, தலைநோய், கண்சுருங்குதல், கண் துடித்தல், கண் மறைப்பு, கண் திறக்கமுடியாமை, பல்வலி, காதில் வலி, ஓசை, மூக்கு, வாய் உலர்தல், பேச முடியாதிருத்தல், குரல் தடை படுதல், மென்னியில் ஏற்படும் நோய், உணர்வற்று தடியைப் போல் கீழே விழும் அபதானகம் எனும் நோய், கை சுண்டிப் போதல், உறக்கமின்மை, இவை போன்ற வாதக கோளாற்றி னால் தோன்றிய நோய்கள் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன.

எண்ணெய்ப் பசையுள்ளதும், இனிப்புச் சுவையுடன் கூடியதுமான பொருட்களினால் தயாரிக்கப்பட்டதும், நோய் களுக்கு ஏற்ற பொருட்களினால் தயாரிக்கப்பட்டதுமான எண்ணெயையும், பிசின், காற்றடைந்த இடங்களில் வாழும் பறவைகளின் மாமிச ரசம், ரத்தம் இவற்றால் தயார் செய்த எண்ணெயையும் மூக்கிலிடுதல் பிருஹ்மண நஸ்யம் எனப்படும். (6)

5. சமந நஸ்யம்

தகாத காலத்தில் தோலில் சுருக்கமும், தலைமுடி நரையும் தோன்றுதல், தலையில் சொட்டை விழுதல், பொடுகு ஏற்படுதல், இரத்தக் கோளாற்றினால் சிறுசிறு சிரங்குகள் தோன்றுதல், வங்கு, நீல நிறமான கடுகு போன்ற புள்ளிகள் ஏற்படுதல் என இரத்த—பித்தத்தினால் தோன்றும் இப்பிணிகளுக்கு ஆங்காங்கு கூறப் பட்ட முறைப்படி எண்ணெய், மூலிகைப் பொருட்களின் சாறு இவற்றினால் தயார் செய்த எண்ணெயை மூக்கிலிடுவது சமந நஸ்யம் என்பதாகும்.

தோஷங்கள் சமநிலையில் இருக்குமானால் பால், நீர் இவற்றால் தயார் செய்த எண்ணெய் அல்லது அணுதைலத் தைப் பயன்படுத்த வேண்டும். (7)

6. மூக்கிலிடும் மருந்து வகை

[1]மர்சம், [2]பிரதிமர்சம் என அளவைக் கொண்டு எண்ணெய் இருவகைப்படும். விரேசனம் அல்லது சமநம் என்ற முறைப்படி கல்கத்தை மூக்கிலிடுவதற்கு [3]அவபீடனம்

---

1. மர்சம்
2. பிரதிமர்சம் } பிருஹ்மணம் எனும் ஸ்நேக நஸ்யத் தின் இருவகைகள்.
3. அவபீடனம் :—பச்சிலை முதலியவற்றின் சாற்றைப் பிழிந்து மூக்கிலிடும் மருந்து தயார் செய்யப் படுவது.

என்றும், விரேசன சூர்ணத்தை (தூள்) மூக்கிலிடுவதற்கு [1]பிரதமநம் என்றும், மற்ற கஷாயத்தை மூக்கிலிடுவதற்கு அவபீடனம் என்றும் பெயர்.

மற்றும் சிலர் கல்க உருவத்தில் தயார் செய்த மருந்தை அமுக்கிப் பிழிந்து வரும் சாற்றை மூக்கிலிடுவதை அவபீடனம் என்றும் கூறுவர்.

பொதுவாக எல்லா வகை மூக்கிலிடும் மருந்துகளும் கபத்தினால் உண்டான நோயைப் போக்குகின்றன. எனினும் தீக்ஷ்ணமான நஸ்யத்திற்கு சிரோவிரேசனம் என்றும், மற்ற எல்லா நஸ்யங்களுக்கும் விரேசனம் என்றும் பெயர். இவை பொதுவாக கபத்தை விரைவில் போக்கடிக்கும் தன்மையுடையன என்பதே இதற்குக் காரணம். (8)

7. அணுதைலம் தயாரிக்கும் முறை

மஞ்செஷ்டி, அதிமதுரம், கரும்புவேர், ஜீவகம், ரிஷபகம், காகோலி, க்ஷீரகாகோலி, பால் முதுக்கன் கிழங்கு, நன்னாரி,

காஞ்சோரி, கருநெய்தல், ரசாஞ்சனம், சித்தரத்தை, வாயுவிடங்கம், அரிசி, சீந்தில்கொடி, சடாமாம்சி, மேதா, குறட்டை மரம், நான்முகப்புல், மருதுமரம், தேவதாரு, சந்தனம் இவற்றை சமஅளவில் எடுத்து நன்கு அரைத்து கல்கமாகச் செய்து, அதில் கல்கத்தைவிட எட்டுப்பங்கு எண்ணெயும், எண்ணெயைவிட ஆறு பங்கு பாலும் கலந்து முறைப்படி தைலம் தயாரிக்க வேண்டும். பித்தம் அதிகமாயின் எண்ணெய்க்குப் பதிலாக நெய் கலந்து முறைப்படி தயார் செய்யவேண்டும். (9)

அல்லது

சந்தனம், அகில், பச்சிலை, மரமஞ்சள் பட்டை, அதிமதுரம், சிற்றாமுட்டி, பேறாமுட்டி, வில்வம், கருநெய்தல், தாமரைத் தாதுக்கள், கரும்பு வேர், வாயுவிடங்கம், விலாமிச்சை வேர், வெட்டிவேர், குருவேர், கோரைக்கிழங்கு, நன்னாரி, கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, ஓரிலை, மூவிலை, கீரைப்பாலை, தேவதாரு, சம்பங்கி, தண்ணீர் முட்டாங்கிழங்கு இவற்றைச் சமஅளவில் எடுத்து இப்பொருட்களை விட நூறுபங்கு தண்ணீர்

---

1. பிரதமனம்—வாயால் ஊதி மூக்கில் மருந்தை உட்செலுத்துவது.

சேர்த்து அதைப் பத்தில் ஒரு பங்காகக் காய்ச்சி, கஷாயம் தயாரித்துக் கொண்டு கஷாயத்திற்கு ஈடான எண்ணெயை அதில் சேர்க்க வேண்டும். காய்ச்சும்போது எண்ணெய்க்குச் சம அளவுள்ள ஆட்டுப் பாலை அதில் இடவும். இப்படி முறைப்படி காய்ச்சி வைத்துக் கொள்ளவும். இது முன்கூறிய அணுதைலத்தை விடச் சிறந்ததாகும். உறுப்புகளுக்கு வலிவை அளிக்கக்கூடியது. தலைமயிர்க்குச் சிறந்தது. தோலுக்கு உகந்தது. தொண்டைக்கு நல்லது. மகிழ்ச்சி உண்டுபண்ணுவது. வலிவை அளிப்பது. மூவகை தோஷங்களையும் கண்டிக்கக் கூடியது. இது மிக நுட்பமான இடங்களுக்குச் செல்லும் தன்மையுடையதால் இதற்கு அணுதைலம் எனப்பெயர். (10)

8. மூக்கிலிடும் மருந்துச் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

உணவு உண்டவன், எண்ணெய், கள், விஷம், நீர் இவற்றைக் குடித்தவன், குடிக்க விரும்புபவன், தலைக்குக் குளித்தவன், குளிக்கவிரும்புபவன், நரம்பைக்கீறி இரத்தம் எடுக்கப்பட்டவன், மலம், சிறுநீர் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளவன், காயம்பட்டவன், வாந்தி, பேதி, வஸ்தி இவற்றை எடுத்துக்கொண்டவன், கருதரித்தவள், ஈன்றவள், புதிதாக ஏற்பட்ட ஜலதோஷம், இருமல், சுவாசம் உடையவர் ஆகியவர்களுக்கும், பருவமில்லாத காலத்திலும், மேக மூட்டமுள்ள நாட்களிலும், மூக்கிலிடும் மருந்தைப் பயன்படுத்தக்கூடாது.

உணவு உண்டவனுக்கு மூக்கில் மருந்திடுவதனால் வாத, பித்த, கபம் எனும் தோஷங்கள் கழுத்துக்கு மேல் உள்ள துவாரங்களில் சூழ்ந்துகொண்டு, வாந்தி, சுவாசம், இருமல், முற்றின ஜலதோஷம் இவற்றைத் தோற்றுவிக்கும்.

எண்ணெய், கள், இடுவிஷம், நீர் இவற்றை அருந்தியவனுக்கும் அருந்த விரும்புகிறவனுக்கும் மூக்கில் மருந்திட்டால் கண், மூக்கு, வாய் இவற்றிலிருந்து நீர் அதிகம் சுரந்து ஒழுகுதல், கண், மூக்கு, வாய் இவற்றின் அழிவு, கண் மறைப்பு, தலைநோய் ஆகியவை உண்டாகும்.

தலைக்குக் குளித்தவனுக்கு மூக்கில் மருந்திட்டால் தலை, கண், காதுகளில் வேதனை, தொண்டைநோய், முற்றின ஜலதோஷம், தாடை, மென்னி இவை அசைவற்றுப்போதல், முகம், வாய் ஒரு பக்கமாகக் கோணுதல், தலையாட்டம் ஆகிய தீமைகள் ஏற்படும்.

தலை குளிக்க விரும்புகிறவனுக்கு மூக்கில் மருந்து இட்ட வுடன் தலை குளித்தால் மூக்கிலிடும் மருந்து, தலை மரத்துப் போதல், சுறுசுறுப்பின்மை, சுவையின்மை, நாட்பட்ட ஜலதோஷம் இவற்றைத் தோற்றுவிக்கும்.

இரத்தம் எடுத்தவனுக்கு, மூக்கில் மருந்திடுவதனால் வாட்டம், சுவையின்மை, சடராக்னிக் குறைவு இவை ஏற் படும்,

மலம், சிறுநீர் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளவனுக்கு மூக்கிலிடும் மருந்து, மலம், சிறுநீர் இவற்றை அடக்குவதனால் உண்டாகும் நோயைத் தோற்றுவிக்கும்.

காயமடைந்தவனுக்கு மூக்கில் மருந்திட்டால், பொறுக்க முடியாத வேதனை உண்டாகும்.

வாந்தி, பேதி, வஸ்தி இவற்றை எடுத்துக் கொண்ட வனுக்கு மூக்கிலிடும் மருந்து, சுவாசம், இருமல், குரல் இழுத் தல், தலைபளு, அரிப்பு, கிருமிகள் தோன்றுதல் ஆகியவற்றிற்குக் காரணமாகிறது.

கருத்தரித்தவளுக்கு மூக்கில் மருந்திட்டால், உணவில் விருப்பமின்மை, காய்ச்சல், மூர்ச்சை, ஒற்றைத் தலைவலி இவை ஏற்படும். அத்துடன் வயிற்றிலுள்ள குழந்தை வங்கு, உறுப்புக்களில் குறைபாடு, பைத்தியம், காக்காய் வலிப்பு இந் நோய்களுடன் கூடியதாகப் பிறக்கும்.

ஈன்றவளுக்கு மூக்கில் மருந்திட்டால், இரத்தம் எடுப்பத னால் தோன்றும் நோய்கள் ஏற்படும்.

புதிதாக ஜலதோஷம் ஏற்பட்டவனுக்கு மூக்கில் மருந் திட்டால் துவாரங்களின் அடைப்பு, கெட்ட நாற்றமுள்ள சளி, மயிர் உதிருதல், கிருமிகள், அரிப்பு, சொரி, சிரங்கு இவை ஏற்படும்.

சுவாசம், காசம் இந்நோய்கள் உள்ளவனின் மூக்கில் மருந்திட்டால் அந்நோய்கள் மேலும் அதிகமாகும். பருவமில் லாத காலம், மேகமூட்டமுள்ள நாள், இவற்றில் உடனடியாக மருந்திட்டாலும், குளிர்ச்சியின் காரணத்தால் தலைவலி, தலையாட்டம், தலை மரத்துப்போதல், தாடை, கண் இவற் றில் அரிப்பு, அழற்சி, மென்னியில் பிடிப்பு, தொண்டை

நோய், நாட்பட்ட ஜலதோஷம், மண்டைக் கரப்பான் இவை வந்து சேரும். (11)

மூக்கிலிடும் மருந்தை இடத்தகாதவர்களுக்கு இடுவதினால் உண்டான மேற்கூறிய பிணிகளுக்கு அதன் காரணம், நோய் ஏற்பட்ட இடம், தோஷங்கள் சீற்றலை அடைந்திருக்கும் நிலை இவற்றை நன்கு ஆராய்ந்து எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வை உண்டாக்கும் சிகிச்சை, தலையிலும் முகத்திலும் பூச்சு மருந்துகளால் தயாரித்த திரவத்தை ஊற்றுதல், தீக்ஷ்ணமான அவபீடகம் என்னும் மூக்கிலிடும் மருந்து, புகை பிடித்தல், வாய் கொப்பளித்தல் போன்ற சிகிச்சையைப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக கருத்தரித்தவளுக்கு, வறட்சியான மூக்கிலிடும் மருந்தைப் போட்டுவிட்டால் மூக்கரட்டை, காகோலி, பூனைக்காலி விதை இவற்றால் தயாரித்த பாலைக் குடிக்கச் செய்து நோயைப் போக்கவும்.

சித்தாமுட்டி, பால் முதுக்கன் கிழங்கு, ஓரிலை, மேதா இவற்றைக் கொண்டு காய்ச்சி தயார் செய்த பாலை அருந்தச் செய்யவும். மேற்கூறிய பொருட்களால் காய்ச்சித் தயாரித்த நெய்யையாவது குடிக்கச் செய்யவும்.

வாதத்தை நீக்கும் பொருட்களால் தயாரித்த எண்ணெயை தலைக்கு மேல் நிரப்புவதிலும், காதில் இடுவதிலும் பயன்படுத்தவும்.

இவ்வாறு வலிவைக் கொடுக்கக்கூடிய உணவும், பருகும் நீரும் அமைந்திருக்க வேண்டும். கருத்தரித்தவளைத் தவிர, மற்ற முன்கூறிய பிணிகளில் தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டால் அப்பிணிகளுக்குச் சொல்லப்பட்ட சிகிச்சை முறையைப் பின்பற்ற வேண்டும். (12)

ஆள்காட்டி விரலின் இரண்டு பர்வம் வரையில் மூழ்கி எடுத்தால், அதிலிருந்து எத்தனைத் துளிகள் விழுகின்றனவோ அத்தனை துளிகள் மர்சம் எனும் மூக்கிலிடும் மருந்தின் அளவாகும்.

இதன் பத்துத் துளிகள் உயர்ந்த அளவாகவும், எட்டுத் துளிகள் நடுத்தர அளவாகவும், ஆறு துளிகள் குறைந்த அளவாகவும் கருதப்படும். இந்த மர்சம் எனும் அளவுள்ள மூக்கிலிடும்

மருந்து கஷாயமாகவோ அல்லது சாறு போன்றவையாகவோ இருந்தால் உயர்ந்த அளவு எட்டுத்துளிகள், நடுத்தர அளவு ஆறு துளிகள், குறைந்த அளவு நான்கு துளிகள் என்று அறிக.

மர்சம் எனும் அளவுள்ள மூக்கிலிடும் மருந்து தூளாக இருந்தால் இரண்டு துவாரமுள்ளதும், ஆறு அங்குலம் நீளமுள்ளதுமான குழல் கருவியில், அந்தத் தூளைப்போட்டு நோயாளியின் தொண்டைக்குள் புகும்படியாக வாயினால் ஊத வேண்டும். இம்முறை தோஷத்தின் நிலைமைக்கு உகந்தவாறு அடிக்கடி பயன்படுத்தலாம். (13)

9. மருந்தை மூக்கிலிடும் முறை

மூக்கிலிடும் மருந்துக்கு உகந்த நோயாளி மலம், சிறுநீர் கழித்தவனாகவும், உள்ளும் புறமும் முகத்தைக் கழுவினவனாகவும், தலைக்கு எண்ணெய், வியர்ப்பிக்கும் சிகிச்சை பெற்றவனாகவும் இருக்க வேண்டும்.

அதிக பசியற்றவனும், பிராயோகிகம் எனும் புகைப்பிடிப்பைச் செய்துகொண்டு சுத்தமான துவாரங்களை உடையவனாகவும் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நோயாளியை விசாலமான, காற்றோட்டம் இல்லாத இடத்தில் படுக்கையில் தலையைக் கொஞ்சம் உயர்த்தி வைத்து, உயர்த்திய கால்களும், விரித்த கை கால்களும் உடையவனாய் இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

பிறகு நோயாளியின் கழுத்துக்கு மேல் உள்ள பாகத்தைக் கைச்சூட்டினால் அடிக்கடி வியர்வை வரும்படி செய்ய வேண்டும்.

மூக்கில் இட வேண்டிய மருந்தை பொன், வெள்ளி, செம்பு இவற்றில் ஏதாவது ஒன்றினால் செய்த சிப்பியில் மூன்றில் ஒரு பாகத்தை இட்டு சுடுநீரில் சூடாக்கி மூக்கில் இடவேண்டும்.

பிறகு நோயாளியின் தலையைப் பின்பக்கமாகச் சிறிதளவு தொங்கவிட்டுத் துணியை நான்காக மடித்துப் போட்டு இடது கையின் கட்டைவிரல், சுண்டுவிரல் இவற்றால் கண்களை மூட வேண்டும்.

நடுவிரலால் மூக்கின் நுனியைத் தூக்கி, ஆள்காட்டி விரல், மோதிரவிரல் இவற்றால் முறையே ஒவ்வொரு மூக்கின் துவாரத்தை மூடி, மற்ற துவாரத்தில் வலது கையினால்,

குழல் போன்ற நாடிக் கருவியினால் அல்லது பஞ்சினால் இடைவிடாமல் மருந்தை ஊற்ற வேண்டும். (14)

10. மருந்து இடுவதற்கான நேரம்

வாதத்தினால் உண்டான நோய்களுக்கு மாலையிலும், பித்தப்பிணிகளுக்கு மதியத்திலும், கபத்தினால் ஏற்பட்ட நோய்களுக்கு காலையிலும் மருந்து இடுதல் வேண்டும்.

உமிழ்நீர் பெருகுதல், உணர்ச்சியற்றிருத்தல், பிதற்றல், பற்களை கடகடவென்று கடித்தல், களைத்தல், கஷ்டப்பட்டுக் கண் திறத்தல், வாயிலிருந்து சிழ்நாற்றம் வீசுதல், காதில் ஓசை, நாவறட்சி, முகம் கோணுதல், தலைநோய், சுவாசம், இருமல், தூக்கமின்மை போன்ற நிலையில் இரவில் மருந்தை மூக்கிலிட வேண்டும்.

உடல் நல்ல நிலையில் உள்ளவனுக்கு, ஹேமந்த ருது (மார்கழி—தை) சிசிர ருது (மாசி—பங்குனி) இக்காலங்களில் மதியத்தில் மருந்திடவேண்டும்.

சரத்—(ஐப்பசி—கார்த்திகை) ருதுவிலும், வஸந்தம்—(சித்திரை—வைகாசி) ருதுவிலும், காலையிலும், கிரீஷ்ம ருதுவில்—(ஆனி—ஆடி மாதங்கள்) மாலையிலும், வர்ஷருதுவில்—(ஆவணி—புரட்டாசி) சூரியன் ஒளி இருக்கும் நேரத்திலும் மருந்து இட வேண்டும்.

ஐந்து செயல்கள் என்ற எண்ணெய்ச்சிகிச்சை, வியர்வை தோற்றுவிக்கும் சிகிச்சை, வாந்தி எடுக்கச் செய்யும் சிகிச்சை, மலம் கழிக்கச் செய்யும் சிகிச்சை, வஸ்தி சிகிச்சை என இந்த (பஞ்சகர்ம) சிசிச்சை செய்தபின் நஸ்ய சிகிச்சை என்ற மூக்கில் மருந்திடும் சிகிச்சையைச் செய்ய வேண்டும். (15)

மூக்கிலிடும் மருந்து குறைவாகவோ, அதிகமாகவோ, ஒரே தடவையிலோ, முழுமையாகவோ இடக்கூடாது.

மருந்து மிகக்குளிர்ச்சியாகவோ, மிகச்சூடாகவோ இருக்கக் கூடாது. நோயாளியின் தலை மிக்க உயர்ந்தும், மிக்கத் தாழ்ந்தும் இருக்கக்கூடாது. உடலின் உறுப்புகளை சுருக்கிக் கொண்டிருக்கும்போது மருந்து இடக்கூடாது.

மருந்தைக் குறைவாகப் பயன்படுத்துவதனால் தோஷங்களைக் கிளப்பிவிடுகின்றன. ஆனால் அவை வெளிவருவதில்லை.

மேலும் பளு, சுவையின்மை, இருமல், உமிழ்நீர் பெருகுதல், முற்றின ஜலதோஷம், வாந்தி, தொண்டைநோய் இவற்றைத் தோற்றுவிக்கும்.

மருந்தை அதிகம் பயன்படுத்துவதனால், எண்ணெய்ச் சிகிச்சையில் அதிக எண்ணெயைப் பயன்படுத்தினால் ஏற்படும் தீமைகள் இங்கும் ஏற்படும்.

ஒரே முறையில் எல்லா மருந்தையும் மூக்கிலிடுவதனால், அதிக எண்ணெய்ப்பசை உண்டாதல், தலைநோய், முற்றின ஜலதோஷம், மூக்கில் சளி அதிகம் சேருதல், மேல்மூச்சு வாங்குதல் அல்லது மூச்சு தடைபடுதல் ஆகிய இவை உண்டாகும்.

மருந்தை மிகவும் சூடாகப் பயன்படுத்தினால் எரிச்சல், அழற்சி, காய்ச்சல், இரத்தக்கசிவு, தலைவலி, பார்வைக் குறைவு, மூர்ச்சை, தலைச்சுற்றல் ஆகியவை உண்டாகும்.

மிகக் குளிர்ச்சியாக மருந்தைப் பயன்படுத்தினால், குறைவாக மருந்தைப் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகளே ஏற்படும்.

தலையை மிக உயரமாகச் செய்து மூக்கில் மருந்திட்டால், மருந்து தலையில் பரவாமல், குறைவாகப் பயன்படுத்துவதால் தோன்றக்கூடிய தீமைகளைத் தோற்றுவிக்கும்.

தலையை மிகவும் தாழ்ந்த நிலையில் வைத்து மூக்கில் மருந்து இட்டால், மருந்து வெகுதூரம் உள்ளே சென்று, மூர்ச்சை, சுறுசுறுப்பின்மை, அரிப்பு, எரிச்சல், காய்ச்சல் இவை உண்டாகும்.

உறுப்புகளை சுருக்கிக் கொண்டிருக்கும்போது மருந்து இடுவதால், மருந்து, நாடிகளில் நன்கு பரவாமல், தோஷங்களைக் கிளப்பிவிட்டு துன்பத்தையும் அசைவற்ற நிலையையும் உண்டுபண்ணும்.

மூக்கில் மருந்திடும்போது மருந்தின் வேகத்தினாலோ அல்லது ஒத்துக்கொள்ளாததினாலோ மயக்கம் ஏற்பட்டால், தலை நீங்கலாக மற்ற உறுப்புகளைக் குளிர்ந்த நீரால் நனைக்க வேண்டும்.

மூக்கில் மருந்திடும்போது சினம், சிரிப்பு, பேசுதல், அசைதல், தும்முதல் இவற்றைச் செய்யக்கூடாது. செய்தால் தலைவலி, முற்றின ஜலதோஷம், இருமல், பார்வைக்குறைவு, தடுமாற்றம், நரை, வங்கு, முகத்தில் எள்ளுப் போன்ற கருநிறத் தழும்புகள் முகப்பரு இவை உண்டாகும். (16)

11. மூக்கில் மருந்தை இட்டபின் செய்ய வேண்டிய முறை

மூக்கில் மருந்து இட்டபின் காது, நெற்றி, தலை, கன்னம், மென்னி, உள்ளங்கை, உள்ளங்கால் இவற்றை உடலுக்கு இதம் தரும்படிப் பிடித்துவிட வேண்டும். மெள்ளக் காறித் துப்பச் செய்யவேண்டும். மூக்கிலிட்ட மருந்து தொண்டைக்கு வந்தவுடன் அதை விழுங்காமல் இரு புறங்களிலும் துப்பிவிட வேண்டும்.

தொண்டைக்குள் சென்ற மருந்தை விழுங்கினால் அது கபத்துடன் சேர்ந்து சடராக்னியைக் குறைத்து தோஷங்களை அதிகரிக்கச் செய்கிறது.

மூக்கின் வழியாக இட்ட மருந்தை ஒரு பக்கத்தில் மாத்திரம் சிந்தினால் அது தலையில் உள்ள எல்லா நரம்புகளிலும் பரவுவதில்லை. சிறிது சிறிதாக மருந்து வெளிவரும் வரை அவனுக்கு வியர்வை வரும்படிச் செய்யவேண்டும். உடனேயே மருந்தை சிந்தவோ, துப்பவோ கூடாது.

மறுமுறை இரண்டாவது பாகத்தையும், பிறகு மூன்றாவது பாகத்தையும் மூக்கிலிட வேண்டும். அல்லது தோஷங்களுக்கு ஏற்றவாறு போதிய அளவு மருந்திட வேண்டும்.

தோஷங்களை வெளிப்படுத்த அவபீடனம் எனும் மூக்கிலிடும் மருந்தை இட்டபின் தோஷங்களின் வலிமையை அறிந்து அதற்கேற்றவாறு எண்ணெயில் கலந்து மருந்தை மூக்கில் இட வேண்டும்.

மருந்திட்டபின் கண்களைத் திறக்கச் செய்து மல்லாந்து [1]நூறு மாத்திரை காலஅளவு படுக்கச் செய்ய வேண்டும்.

கிளப்பிவிடப்பட்ட மீதியுள்ள தோஷத்தைத் தணிப்பதற்காக தோஷங்களைத் தவிர்க்கக்கூடிய புகை பிடித்தலைச்

---

1. நூறு மாத்திரை—சுமார் இரண்டு நிமிடங்கள்.

செய்து சூடான நீரைக் கொண்டு வாய் கொப்பளிக்கச் செய்ய வேண்டும்.

நோயாளியை எண்ணெய்ச் சிகிச்சையில் கூறிய கட்டுப் பாடுகளைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும். மிகுந்த நீருடன் கலந்த உணவை உட்கொள்ளக் கூடாது.

மறுபடி மூன்றாவது நாள் மூக்கிலிடும் மருந்தைப் போட வேண்டும்.

விக்கல், குரல் எழும்பாமை, மென்னி அசைவற்றுப் போவது, உணர்வற்று தடிபோல் கீழே விழுவது போன்ற நிலையிலும், தலையில் வாத நோய் ஏற்பட்டபோதும், மாலை-காலை இரண்டு நேரங்களிலும் மூக்கிலிடும் மருந்தைப் பயன் படுத்த வேண்டும்.

இம்மாதிர் ஐந்து, ஏழு அல்லது ஒன்பது நாட்கள் வரை அல்லது நோய் நீங்கும் வரை, மூக்கில் மருந்தை இடவேண் டும். *(17)*

தலையைச் சுத்தம் செய்தபின் மூக்கிலிடும் மருந்துச் சிகிச்சை நன்கு நிறைவேற்றப்பட்டிருந்தால், எளிதாக மூச்சை உள் இழுக்கவும் வெளியிடவும் முடியும், தும்மல் ஏற்படும். தூக்கம் நன்கு வரும். சரியான நேரத்தில் விழிப்பு ஏற்படும். தலை நோய் நீங்கும். முகம் தெளிவடையும்; புலன்கள் சுத்த மடையும். குறிப்பிட்ட நோய் தணிந்து விடும்.

மருந்தைக் குறைவாகப் பயன்படுத்தியிருந்தால் வாத நோயும், அதிகம் பயன்படுத்தியிருந்தால் கபநோயும் ஏற்படும். அப்பொழுது அவற்றிற்கு ஏற்றவாறு சிகிச்சை செய்ய வேண் டும். மற்ற நோய்களுக்கும் அதற்கேற்றபடி சிகிச்சை செய்ய வேண்டும் *(18)*

12. பிரதிமர்சம் எனும் மூக்கிலிடும் மருந்துக்குத் தகுதியுள்ளவர், தகுதியற்றவர்.

வலிவு குறைந்தவன், இரத்தத்துடன் கபம் வெளிவரும் படி இருமுகிறவன், நாவறட்சி, வாய் உலர்ந்து போதல், இவற்றால் துன்புறுகிறவன், முதியோர், சிறுவர், பயந்தவர், துன்பத்தைப் பொறுக்க முடியாதவர் ஆகியவர்களுக்கு பிரதி மர்சம் எனும் மூக்கிலிடும் மருந்து முறையைப் பயன்படுத்தவேண்டும்.

குறிப்பிட்ட காலம் தவறியும், மழை காலத்திலும் மேக மூட்டமுள்ள நேரங்களிலும் இதைப் பயன்படுத்தலாம்.

நாட்பட்ட ஜலதோஷமுள்ளவன், தோஷங்கள் அதிகம் உள்ளவன், கிருமிகள் உடையவன், தலைநோய் உள்ளவன், கள் குடித்தவன், காதுத் துவாரம் அடைபட்டவன் ஆகிய இவர்களுக்கு பிரதிமர்சம் என்னும் முறைப்படி மூக்கிலிடும் மருந்தைப் பயன்படுத்தக்கூடாது.

இவர்களுக்கு தோஷங்கள் அதிகமாக இருப்பதால் இம் மருந்தைப் பயன்படுத்தினால் அவை மேலும் அந்த தோஷங் களைக் கிளப்பிவிடும்.

13. [1]பிரதிமர்சம் எனும் முறைப்படி மூக்கிலிடும் மருந்துக்கு பதினைந்து காலமும் குணங்களும்

(1) விடியற்காலை, *(2)* உணவின் முடிவில் இடப்பட்ட மருந்து, கண், மூக்கு, போன்ற துவாரங்களைச் சுத்தம் செய்யும். தலையின் பளு குறையும். மனம் தெளிவடையும். *(3)* மலம் கழித்த பின்பும், *(4)* சிறுநீர் கழித்த பின்பும், *(5)* தலை குளித்த பின்பும், *(6)* கண்களுக்கு மை இட்ட பின்பும் *(7)* வாய் கொப்பளித்த பிறகும், மூக்கில் மருந்திட்டால், கண்கள் நன்கு தெளிவடையும். பார்வை நன்றாகத் தெரியும். *(8)* பல் துலக் கிய உடன் மருந்து இடுவதினால் பற்கள் உறுதிப்படும். முகத் தில் மணம் வீசும். *(9)* வழி நடந்தபின், *(10)* உடற்பயிற்சி செய்த பின் *(11)* புணர்ந்தபின், மருந்து இடுவதால் களைப்பு, வாட்டம், வியர்வை வெளிவராதிருத்தல் ஆகியவை நீங்கும். *(12)* பகலில் உறங்கிய பின்பு மருந்து இடுதல், தூக்கம், உடல் உலர்ந்துபோதல், சுறுசுறுப்பின்மை இவற்றைப் போக்குவதுடன், மனதிற்கு இன்பத்தையும் அளிக்கும். *(13)* அதிகச் சிரிப்புக்குப் பின் மருந்து இடுவது வாதத்தைத் தணிக்கிறது. *(14)* வாந்தி எடுத்தபின் மருந்திடுவது, துவாரங்களில் மறைந்து கிடக்கிற கபத்தை நீக்குகிறது. *(15)* நாளின் கடைசியில் மருந்திடுவது, துவாரங்களை நன்றாகச் சுத்தம் செய்கிறது. நல்ல தூக்கத்தை உண்டாக்குகிறது. வ்ழிப்பையும் ஏற்படுத்துகிறது. *(19)*

---

1. பிரதிமர்சம்—பிருஹ்மணம் எனும் ஸ்நேக நஸ்யத்தின் ஒருவகை.

14. பிரதிமர்சம் எனும் மூக்கிலிடும் மருந்தின் அளவு

இந்த மருந்தை இரண்டு அல்லது ஒரு துளி அளவே பயன்படுத்த வேண்டும். அதனால் உள்ளடங்கிய தோஷங்கள் வெளிப்படுவதில்லை. துப்பினால் எண்ணெயின் பகுதி வெளி வருவதில்லை.

பிரதிமர்சம் எனும் முறைப்படி மூக்கிலிடும் மருந்தை ஏழு வயதுக்கு குறைந்தவர்களுக்கும், எண்பது வயது கடந்தவர் களுக்கும் இடக்கூடாது. *(20—21)*

15. புகை பிடிப்பதற்கும், வாய் கொப்பளிப்பதற்கும் தகாதவர்கள்

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகை பிடிக் கும் சிகிச்சையையும், ஐந்து வயதிற்குக் குறைந்தவர்களுக்கு வாய்கொப்பளிக்கும் சிகிச்சையையும் செய்யக்கூடாது.

16. வாந்தி பேதி, சம்சோதனம் இவற்றிற்குத் தகாதவர்கள்

பத்து வயதிற்குக் குறைந்தவர்கள், எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்கு வாந்திக்கும் பேதிக்கும், சம்சோதனத்திற்கும் கொடுக்கக்கூடாது. *(22)*

17. பிரதிமர்சம் எனும் முறைப்படி மூக்கிலிடும் மருந்தின் பயன்

பிறவி முதல் இறப்புவரை நாள்தோறும் பிரதிமர்சம் எனும் மூக்கில் மருந்திடும் முறையை வஸ்தி சிகிச்சையைப்போல பயன்படுத்தலாம். அதனால் மர்சம் எனும் மூக்கிலிடும் மருந்துச் சிகிச்சையால் ஏற்படக்கூடிய பயன்கள் கிட்டும். இதைப் பயன்படுத்துவதால் எவ்விதமான தீமையும் ஏற்படுவதில்லை. இம்முறைக்குக் கட்டுப்பாடு கிடையாது. இது துன்பத்தை அளிப்ப தில்லை. *(23)*

18. பிரதிமர்சம் எனும் முறைப்படி மூக்கிலிடும் மருந்து வகைகளில் எண்ணெயே சிறந்தது

நாள்தோறும் மூக்கில் மருந்திடுவதற்கு எண்ணெய்தான் சிறந்தது. தலைதான் கபத்திற்கு இருப்பிடம். அதை நீக்க எண்ணெயைவிடச் சிறந்தது வேறு ஒன்றும் கிடையாது. ஆகை யால் உடல்நிலை சரியாக உள்ளவனுக்கு இம்மருந்தை நாட் தோறும் பயன்படுத்தலாம். மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது.

19. [1]மர்சம்; [2]பிரதிமர்சம் இவற்றின் சிறப்பு

மர்சம் எனும் முறை விரைவில் பயனை அளிக்க வல்லது. பிரதிமர்சம் என்னும் முறை தாமதித்துப் பயனை அளிக்கக்கூடியது. ஆதலால் மர்சம் என்பது சிறப்புற்ற குணங் களைக் கொண்டது. பிரதிமர்சம் அவ்வளவு சிறப்புடையதன்று.

இவ்விரண்டிற்கும் வேறுபாடு இல்லாவிடில், பலவிதக் கட்டுப்பாடுகளுடன் கூடியதும், சிறிது முறை தவறினால் விபத்தை அளிக்கக்கூடியதுமான மர்சம் என்னும் முறையை யார் பயன்படுத்துவார் ?

அதேபோல் [3]அச்சபேயா எனும் எண்ணெய்ப் பருகும் சிகிச்சை, பல மருந்துப் பொருட்களால் தயார் செய்த எண்ணெய் பருகும் சிகிச்சை, [4]குடீப்பிரவேசம் எனும் ரசாயன சிகிச்சை, [5]வாதாதபம் எனும் ரசாயன சிகிச்சை, [6]அனுவாசன வஸ்தி என்னும் சிகிச்சை, [7]மாத்ரா வஸ்தி எனும் சிகிச்சை ஆகிய இவற்றிற்கு முறையே மர்சம், பிரதிமர்சம் என்ற இரண் டிற்கும் உள்ள வேறுபாடுகள் உண்டு என அறியலாம்.
(24— 27)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'நஸ்ய விதி' எனும் இருபத்தொன்பதாவது
அத்தியாயம் முற்றிற்று.

---

1. மர்சம்
2. ப்ரதிமர்சம் } பிருஹ்மணம் எனும் ஸ்நேக நஸ்யத்தின் இருவகைகள்.
3. அச்சபேயா— தனியாகப் பயன்படுத்தும் எண்ணெய் சிகிச்சை முறை.
4. குடீப்பிரவேசம்—காற்றோட்டமில்லாத குடிசையில் ரசாயன சிகிச்சை பெறுவது.
5. வாதாதபம்—காற்று, வெயில் உள்ள இடத்தில் ரசாயன சிகிச்சை பெறுவது.
6. அனுவாசன வஸ்தி—ஆசனவாய் வழியாக எண்ணெய் செலுத்தும் முறை.
7. மாத்ரா வஸ்தி—எண்ணெய் வஸ்தியில் அளவோடு மருந்தை உபயோகிப்பது.

முப்பதாவது அத்தியாயம்

*தூமபானவிதி

'தூமபானவிதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

1. புகை பிடிப்பதால் நீங்கும் நோய்கள்

தலைவலி, கண்வலி, காதுவலி, கபத்தினால் ஏற்படும் கண்நோய், தலை பளு, ஒற்றைத்தலைவலி, நாட்பட்ட ஜல தோஷம், இருமல், சுவாசம், வாயில் சுவை அறியாமை, வாயிலிருந்து உமிழ்நீர் பெருகுதல், குரல் மாற்றம், வாயிலும் மூக்கிலும் சீழ் நாற்றம், விக்கல், தொண்டை நோய், பல்வலி, வலிவுக்குறைவு, சுவையின்மை, தாடை, கழுத்தின் பின் பக்கம் இவற்றில் பிடிப்பு, கிருமி நோய், அரிப்பு, தோல் நோய், முடியில் ஏற்படும் கோளாறு, தும்மலின்மை அல்லது அதிகம் தும்முதல், சோம்பேறித்தனம், அதிகத்தூக்கம், தூங்கும் நேரத்தில் மூச்சுத் திணறுதல் இவற்றை நீக்குவதற்கும், கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் வாதம், கபம் இவற்றால் ஏற்படும் பிணிகளைத் தவிர்ப்பதற்கும் புகை பிடித்தல் என்னும் முறை பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இவை நீங்கலாக மண்டை ஓடு, புலன்கள், மனம் இவற்றின் வளர்ச்சிக்கும், தெளிவிற்கும் இம்முறை கையாளப்படுகிறது.

புகை போடப் பயன்படுத்தும் பொருட்கள் குளிர்ச்சியுள்ளதாயிருந்தபோதிலும், நெருப்பில் இடப்படுவதன் மூலம் உஷ்ணமாக ஆகிவிடுவதால் பித்த நோய், இரத்த நோய் இவற்றிற்குப் புகைபோடும் முறை ஏற்றதல்ல. (3)

2. புகையின் பிரிவு

புகை பிடித்தல் மூவகையாகப் பிரிக்கப்படுகிறது.

---

* நோயைப் போக்க, புகையை உட்கொள்ளும் சிகிச்சை முறையை எடுத்துரைப்பதால் இவ்வத்தியாயம் தூம பானவிதி எனப் பெயர் பெறுகிறது.
தூமபானம்—புகை பிடிப்பது.

1. சமனம் (தணிக்கச் செய்தல்) 2. பிருஹ்மணம் (வளர்ச்சி), 3. சோதனம் (கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளின் மலங்களை வெளிப்படுத்துதல்). மேலும் அது மூன்றுவகையாகப் பிரிக்கப் படுகின்றது.

1. காஸக்னம்–(இருமலைப் போக்கக் கூடியது)

2. வாமனம் – (வாந்தியை வரவழைப்பது)

3. வ்ரண தூபனம்–(புண்களில் புகையிடுதல்)

சமனம் என்பதற்கு [1]ப்ராயோகிசம், [2]மத்யமம் என்ற மற்ற இரண்டு பெயர்களும் உண்டு.

பிருஹ்மணம் என்பதற்கு [3]ஸ்நேஹனம், [4]மிருது எனப் பெயர்களும் உண்டு.

சோதனம் என்பதற்கு [5]விரேசனம், [6]தீக்ஷ்ணம் என்ற இரண்டு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

3. புகைச் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

[7]விரேசனச் சிகிச்சை செய்துகொண்டவன், [8]வஸ்தி சிகிச்சை பெற்றவன், இரவில் கண் விழிப்பவன், தலையில் அடிபட்டவன், தேன், தயிர், பால், கள், எண்ணெய், கஞ்சி, நஞ்சுநீர் இவற்றைப் பருகியவன், மீன் மாமிசம் உண்டவன், பாண்டுநோய், நீரிழிவு, வயிற்றுக்குள் தோன்றும் நோய், வயிற்று உப்புசம், மேல்நோக்கிச் செல்லும் வாத நோய், கண் மறைப்பு, ரோகிணி (தொண்டைக்குள், நாக்கின் ஓரத்தில்

---

1. ப்ராயோகிகம்
2. மத்யமம்
} சமனம் என்பதற்குள்ள மற்ற பெயர்கள்.

3. ஸ்நேஹனம்
4. மிருது
} பிருஹ்மணத்திற்கு மற்ற பெயர்கள்.

5. விரேசனம்
6. தீக்ஷ்ணம்
} சோதனத்திற்கு மற்ற பெயர்கள்.

7. விரேசனம்—மூக்குத்துவாரத்தின் வழியாக தோஷத்தை வெளிப்படுத்தும் சிகிச்சை முறை.

8. வஸ்தி சிகிச்சை—பீச்சாங்குழல் முதலிய கருவிகளால் எண்ணெய், கஷாயம், போன்றவற்றை ஆசனத்துவாரத்தில் செலுத்தி, மலத்தை வெளிப்படுத்தும் சிகிச்சை.

தோன்றும் கடுமையான நோய்) நோய், ரத்தபித்த நோய் ஆகியவைகளை உடையவன், உஷ்ணமான உடலுடையவன் இவர்களும், உஷ்ணமான காலத்திலும் புகை சிகிச்சை செய்து கொள்வது ஏற்றதல்ல.

4. தகாதவர்கள் புகை சிகிச்சை செய்து கொள்வதால் ஏற்படும் தீமைகள்

தகாதவர்களுக்குப் புகை சிகிச்சை செய்வதனால், தலைச் சுற்றல், காய்ச்சல், தலையில் கொதிப்பு, புலன்கள் கெட்டுப் போதல், தாடை உலர்தல், தாடையில் அழற்சி, வாயி லிருந்து புகை வருவது போன்ற தோற்றம், வாந்தி, மயக்கம், இரத்த பித்தம், முகம் ஒரு பக்கமாக இழுத்துக் கொள்ளுதல் போன்ற தீமைகள் அல்லது இறப்பு உண்டாகிறது. புகை சிகிச்சை செய்துகொள்ளத் தகுதியுள்ளவர்களுக்கும் இச்சிகிச்சை அதிக அளவில் செய்யப்பட்டால் மேற்கண்ட தலைச்சுற்றல் போன்ற நோய்களும் அல்லது இறப்பும் ஏற்படும். (4—5)

5. தீமைகள் விலகுவதற்கான மருத்துவம்

மேற்கண்ட தலைச்சுற்றல் போன்ற நோய்களில் பித்தம் சீற்றமடைகிறது. அந்தப் பித்தம் வாதத்துடன் கலந்திருக் கிறதா அல்லது கபத்துடனா என்பதை அறிந்து அதற் கேற்றவாறு சிகிச்சை செய்ய வேண்டும்.

அதாவது நெய், கஷாயம் உட்கொள்ளுதல், மூக்கில் மருந் திடுதல், வாயில்பூசுவது, மைஇடுதல், எண்ணெய்ப்பசையுள்ள குளிர்ந்த அல்லது சூடான நீரை ஊற்றுதல் ஆகியவற்றைத் தகுந்தபடி பயன்படுத்த வேண்டும்.

எல்லாப் புகை சிகிச்சையினால் ஏற்பட்ட தீமைகளுக்கு ஏற்ற மருத்துவம் இதனால் கூறப்பட்டதாக உணர வேண்டும்.

குறிப்பாக எல்லா துவாரங்களிலும் பரவியுள்ள புகை, எரிச்சல், வயிற்றுஉப்புசம், கண்நோய், மேல்மூச்சு, இருமல், நாட்பட்ட ஜலதோஷம், உடல்தளர்ச்சி, குரல் கம்முதல், அம்ல பித்தம் எனும் நோய் இவற்றை உண்டாக்குகின்றது.

இந்நோய்களை நீக்க நெய், பால், கரும்பு ரசம், திராக்ஷை, சர்க்கரை இவற்றைப் பயன்படுத்தியோ, அல்லது மேற்கண்ட பொருட்களுக்குச் சமானமான குணமுள்ள பொருட்களைப் பயன்படுத்தியோ வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

கார்ப்பு, கசப்புச் சுவையுள்ள பொருட்களோடு மூக்கின் வழியாக மருந்தைச் செலுத்தலையும் வாய்க் கொப்பளித்தலையும் செய்விக்க வேண்டும். *(6—7)*

6. ப்ராயோகிகம் என்ற சமன புகைச்சிகிச்சை செய்வதற்கான காலங்கள்

இரவு நேரம், சிறுநீர் கழித்தபின், மலம் கழித்தபின், பல் துலக்கியபின், வியர்வை வெளிப்பட்டபின், மூக்கின் வழியாக மருந்தைச் செலுத்தும் சிகிச்சை செய்த பின், உணவு உண்டபின், ஆயுதச் சிகிச்சை செய்தபின் என இவை எட்டும் இச் சிகிச்சைக்குத் தகுந்த காலங்களாகும்.

7. பிருஹ்மணம் என்ற மிருதுப் புகைச்சிகிச்சைக்கு ஏற்ற காலம்

பசியெடுத்தபின், புணர்ச்சி செய்தபின், வெகுநேரம் அமர்ந்திருந்தபின், சிரித்தபின், கொட்டாவி விட்டபின், சிறுநீர் கழித்தபின், மலம் கழித்தபின், பல் துலக்கியபின் [1]தர்ப்பணச் சிகிச்சை செய்தபின், [2]புடபாகம் எனும் சிகிச்சைக்குப் பின், ஆயுதச் சிகிச்சைக்குப்பின் இந்த மிருதுப் புகைச் சிகிச்சை செய்ய வேண்டியதற்கான காலங்களாகும்.

8. தீக்ஷ்ணம் என்ற சோதனப் புகைச் சிகிச்சைக்கு உரிய காலம்

மூக்கின் வழியாக மருந்து செலுத்தும் சிகிச்சைக்குப்பின், கண்களுக்கு மை தீட்டியபின், வாந்தி செய்வித்தபிறகு, நீராடியபின், பகலில் தூங்கியபின் என இவை மேற்கண்ட புகைச்சிகிச்சைக்கு உரிய காலங்களாகும். இக்காலத்தில் வாதமும், கபமும் சீற்றமடைந்திருப்பதே இதற்குக் காரணம். *(8)*

வஸ்தி சிகிச்சை செய்வதற்கு எப்பொருட்கள் கூறப்பட்டுள்ளனவோ அப்பொருட்களால் புகைச் சிகிச்சை செய்வதற்கான கருவியையும் செய்ய வேண்டும்.

அக்கருவியின் உருவம், பசுவின் வாலைப் போலவும், அடிபாகம் கட்டைவிரல் பருமன் உள்ளதாகவும், நுனிப்பகுதி சுண்டுவிரல் பருமன் உள்ளதாகவும் அதன் அகலம் இருக்க வேண்டும்.

---

1. தர்ப்பண சிகிச்சை—கண்களுக்கு ஏற்படும் நோய்களை நீக்கி அவற்றிற்கு வன்மையை உண்டாக்கும் முறை.
2. புடபாகம்—கண்களுக்குச் செய்யும் ஒருவகை சிகிச்சை.

இக்கருவியின் நுனிபாகத்தில் துவாரம், மொச்சைக் கொட்டை நுழையும் அளவிலும், அடிப்பகுதியின் துவாரம், பருத்த புகைவர்த்தி செல்லும் அளவிலும் அமைந்திருக்க வேண்டும். அது நேராகவும், மூன்று கணுக்கள் கொண்டதாக வும், வழவழப்புள்ளதாகவும், ஒவ்வொரு கணுவிலும் சிறிய கம்பிகள் பொருத்தப்பட்டனவாகவும் அமைந்திருக்க வேண்டும்.

இக்கருவியின் நீளம், சமனப் புகை சிகிச்சையைப் போல் நோயுற்றவனின் ஆள்காட்டி விரலின் ஒரு கணுவைப் போன்று நாற்பது கணுக்கள் நீளம் உள்ளதாயிருக்க வேண்டும்.

பிருஹ்மணப் புகைச்சிகிச்சைக்கு, முப்பத்திரண்டு கணுக் கள் நீளமுள்ளதாகவும், சோதனப் புகைச் சிகிச்சைக்கு இருபத்து நான்கு கணுக்கள் நீளமுள்ளதாயும் கருவி அமைந்திருக்க வேண்டும்.

காஸக்னம், வமனம் எனும் புகைச்சிகிச்சைக்குப் பத்துக் கணுக்கள் நீளமுள்ளதான கருவி இருக்க வேண்டும்.

புண்களில் புகை சிகிச்சை செய்யும் கருவி எட்டு கணுக் கள் நீளமுள்ளதாக அமைந்திருக்க வேண்டும்.

இதன் சுற்றளவு கொண்டைக்கடலைக்குள்ள சுற்றளவு கொண்டதாயும், துவாரம் கொள்ளு நுழைவதற்கு மட்டும் தகுதியுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

இம்மாதிரி அக்கருவி அமைந்திருப்பதால் புகை தொலை விலிருந்து வருவதாலும், கருவியின் மூன்று கணுக்களும் மேலிருந்து கீழாக நுட்பமாக இருப்பதாலும் புகை மெள்ள மெள்ளச் சென்று நோயுள்ளவனுக்கு துன்பத்தை விளைவிக் காது. (9)

இவ்வகைக் கருவி கிடைக்காவிடில் காஸக்னம் போன்ற புகைச் சிகிச்சைக்கு நாணல், மூங்கில், ஆமணக்குத் தண்டு இவைகளின் குழல்களில் ஒன்றைப் பயன்படுத்தலாம். (10)

9. புகைவர்த்தி செய்யும் முறை

பன்னிரண்டு அங்குல நீளம் உள்ள ஈர்க்கு ஒன்றை 24 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, பிறகு மறுநாள் புகைச் சிகிச்சைக்கான பொருட்களை நன்கு மைய அரைத்து அந்த ஈர்க்கின்மேல் ஒன்பது அங்குலம் வரை ஐந்து தடவை பூச வேண்டும். வர்த்தி கட்டைவிரல் அளவு பருமனாகவும், வால்

கோதுமை நுழையக்கூடியதாகவும் இருக்கும்படி பூசி, நிழலில் காயவைக்க வேண்டும். காய்ந்தபின் உள்ளடங்கிய ஈர்க்கை இழுத்து வெளியே எடுக்க வேண்டும். பிறகு இந்த வர்த்தியை நோய்க்கு ஏற்றவகையில் எண்ணெயில் நனைத்துப் புகைச் சிகிச்சை செய்வதற்கான கருவியில் புகுத்தி நுனியில் தீயிட்டுக் கொளுத்தி புகையை உண்டாக்கிச் சிகிச்சை செய்ய வேண்டும்.

10. புகைச் சிகிச்சை முறை

தெளிந்த மனத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தபடி, சரியாக முன்பே மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்டு உதடுகளையும், பற்களையும் திறந்தபடி இருக்க வேண்டும். புகைச்சிகிச்சைக் கருவியை உற்றுப்பார்த்து முறையே ஒரு மூக்குத் துவாரத்தை அடைத்து, மற்றொரு துவாரத்தினால் புகையை உள்ளிழுத்து வாயின் வழியாக விடவேண்டும். வாயினால் உள்ளிழுக்கப் பட்ட புகையை வாயின் வழியாகவே வெளிவிட வேண்டும். மூக்கினால் வெளிவிடக்கூடாது. அப்படி வெளிவிட்டால் பார்வைக்கு அழிவு ஏற்படும். *(11—12)*

11. ப்ராயோகிகம் எனும் புகைச்சிகிச்சை முறை

ப்ராயோகிகம் எனும் புகைச்சிகிச்சையில் இரண்டு முறை அல்லது மூன்று முறை புகையை வாய் நிறைய உள்ளிழுத்து வெளிவிட வேண்டும்.

கழுத்துக்குமேல் உள்ள பகுதியில் தோஷங்கள் சீற்ற மடைந்திருந்தால் முதலில் மூக்கினால் புகையைப் பிடிக்க வேண்டும். பிறகு வாயினால் பிடிக்க வேண்டும். தோஷங்கள் தொண்டையில் சீற்றமடைந்திருந்தால், முதலில் வாயினால் புகையைப் பிடிக்க வேண்டும். ப்ராயோகிகம் எனும் புகைச் சிகிச்சையை நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை தான் செய்ய வேண்டும்.

12. [1]ஸ்நைஹிகம் எனும் புகைச் சிகிச்சை

இச்சிகிச்சையில் மூன்று முறையோ அல்லது நான்கு முறையோ வாய் நிறையப் புகையை உள்ளிழுத்து, அல்லது கண்ணீர் வெளிவரும் வரை உள்ளிழுத்து முறையே வெளியிட வேண்டும். ஒருநாளில் ஒரு முறைதான் இச் சிகிச்சையைக் கையாளலாம்.

---

1. ஸ்நைஹிகம்—உறுப்புகளுக்கு எண்ணெய்ப் பசையை உண்டாக்குதல்.

13. தீக்ஷ்ணம் எனும் புகைச் சிகிச்சை

இச்சிகிச்சையில் இரண்டு மூக்கு துவாரங்களின் வழியாக நான்கு நான்கு முறை புகையை நிரப்பி, துவாரங்கள் தெளிவு அடையும்வரை புகையை உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு முறை இச்சிகிச்சையைச் செய்யலாம்.

14. காஸக்னம் எனும் புகைச் சிகிச்சை

இச்சிகிச்சையில் இரண்டு அகல்களைப் பயன்படுத்த வேண்டும். கீழ் அகலில் புகையில்லாத தணலில் இருமலைப் போக்கும் மருந்துப் பொடியையோ அல்லது மாத்திரையையோ இட்டு, மேற்புறத்தில் துவாரம் உள்ள மற்றொரு அகலை அதன்மேல் மூடி, மூடிய அகலில் உள்ள துவாரத்தில் புகைச்சிகிச்சைக்கான கருவி(குழாய்)யை வைத்து அதன் வழியாக வாயினாலேயே புகைபிடிக்க வேண்டும். புகை மார்பை அடைந்தபின் வாயினாலேயே புகையை வெளிவிட வேண்டும்.

புகை அடங்கியபின் மறுபடியும் மருந்துப் பொடியைத் தூவி மறுமுறை புகைபிடிக்க வேண்டும். தோஷங்கள் சுத்தமாகும் வரை, அல்லது உடல் லேசான தன்மை அடையும் வரை புகை பிடிக்கலாம். *(13—14)*

15. வாமனம் எனும் புகைச் சிகிச்சை

வாமனம் எனும் புகைச்சிகிச்சையில், முதலில் பயறு அல்லது எள்ளு, அரிசி ஏதாவது ஒன்றினால் செய்த தெளிவான கஞ்சியைக் குடித்தபிறகு புகை பிடிக்கவேண்டும்.

இம்மாதிரியே புண் ஆறுவதற்கும், ஊன் தண்ணீர் நீங்குவதற்கும், வேதனை அடங்குவதற்கும் விரணப் புகைச் சிகிச்சையைச் செய்ய வேண்டும். புகைச் சிகிச்சையை ஒழுங்காகச் செய்யாவிடில் தோஷங்கள் சீற்றமடைந்து நோய்கள் வளர்கின்றன. மிதமிஞ்சி இச்சிகிச்சை செய்வதனால் உண்டாகும் தீமைகள் முன்பே கூறப்பட்டுள்ளன.

16. புகைச் சிகிச்சையினால் ஏற்படும் நன்மைகள்

நன்கு செய்யப்பட்ட இச்சிகிச்சையால் இதயம், தொண்டை, புலன்கள் இவை சுத்தமடைகின்றன. தலையில் பளுக்குறைவு ஏற்படுகிறது. முன்கூறப்பட்டுள்ள நோய்கள் நீங்குகின்றன.

வாதம், கபம் இரண்டின் சேர்க்கையிலும், நல்ல நிலைமையிலிருக்கும்பொழுதும் சமனம் எனும் புகைச் சிகிச்சையையும், வாதம் சீற்றமடைந்திருந்தால் பிருஹ்மணம் எனும் புகைச் சிகிச்சையையும், கபம் சீற்றமடைந்திருக்கையில் ஸம்சோதனம் எனும் சிகிச்சையையும் செய்ய வேண்டும். *(15—18)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'தூம்பான விதி' எனும் முப்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தொன்றாவது அத்தியாயம்

*கண்டூஷாதி விதி

'கண்டூஷாதி விதி' என்னும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. ஸ்நைஹிகம், 2. சமனம், 3. சோதனம், 4. ரோபணம் என கொப்பளித்தல் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவற்றின் முதல் மூன்று வகைகளும் முறையே வாதம், பித்தம், கபம் இவற்றால் உண்டாகும் நோய்களைப் போக்கு பவை. ரோபணம் என்னும் வகை வாய்ப்புண்ணை அகற்ற வல்லது: சமனம் என்பதற்கு ஸ்தம்பனம், ப்ரஸாதனம், நிர்வா பணம் என்ற பெயர்களும் உண்டு. *(3)*

1. [1]ஸ்நைஹிக கண்டூஷம்

இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவையுள்ள உஷ்ண வீர்ய முள்ள பொருட்களால் தயாரிக்கப்பட்ட அல்லது சேர்ந்த அதிக உஷ்ணமில்லாததுமான எண்ணெய், மாமிச ரசம், எள் அரைத்த கல்கத்தினால் செய்யப்பட்ட நீர், அல்லது பால் இவற்றின் சேர்க்கை ஸ்நைஹிகம் எனப்படுகிறது. அதனால் வாய் கொப்பளித்தலை ஸ்நைஹிக கண்டூஷம் என்கிறோம்.

2. [2]சமன கண்டூஷம்

கைப்பு, துவர்ப்பு, இனிப்புச்சுவையுள்ள, சீதவீர்யமுள்ள பொருட்களால் தயாரிக்கப்பட்டதும் பேய்ப்புடல், வேம்பு, நாவல், மா, ஜாதிமல்லி இவற்றின் தளிர்களால் தயாரிக்கப் பட்டதும், ஆம்பல் கிழங்கு, அதிமதுரம் இவற்றால் செய்ததுமான

---

*கண்டூஷம்—மூலிகைப் பொருட்களால் ஆன திரவத்தை வாயில் விட்டுக் கொப்பளித்தல் கண்டூஷம் எனப்படும். அதைப்பற்றிக் கூறுவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. ஸ்நைஹிக கண்டூஷம்—எண்ணெய்ப் பசையுள்ள திரவப் பொருள்களால் வாய் கொப்பளித்தல்.

2. சமன கண்டூஷம்—நோயைத் தணிக்கக்கூடிய வாய்க் கொப்பளிப்பு. ஸ்தம்பனம், ப்ரஸாதனம், நிர்வா பணம் இவை சமன கண்டூஷத்திற்கு மற்ற பெயர்கள்.

கஷாயத்துடன் சர்பத், தேன், பால், கரும்புச்சாறு, நெய் இவற்றின் கூட்டு சமனம் எனப்படும். இவற்றால் வாய் கொப்பளிப்பது சமன கண்டூஷமாகும்.

3. [1]சோதன கண்டூஷம்

கார்ப்பு, புளிப்பு, உப்புச் சுவையுள்ளதும், உஷ்ண வீரியம் உள்ளதும், [2]சிரோவிரேசனப் பொருட்களால் செய்ததும், காடி, கள், தான்யாம்லம், சிறுநீர் இவற்றில் ஏதேனும் ஒரு பொருளுடன் கலந்து கல்கமாகச் செய்ததுமான பொருட்களால் ஆன கூட்டுத் திரவத்தைக் கொண்டு வாய் கொப்பளிப்பது சோதன கண்டூஷம் எனப்படுகிறது.

4. [3]ரோபண கண்டூஷம்

துவர்ப்பு, இனிப்புச் சுவையுள்ள, ரோபணப்பிரகரணத்தில் கூறப்பட்ட பொருள்களால் செய்யப்பட்ட கூட்டுப் பொருளைக் கொண்டு வாய் கொப்பளிப்பது ரோபணகண்டூஷம் என்பதாகும். (4)

பற்கூசல், பல் ஆடுதல், வாதத்தினால் வாயில் உண்டாகும் பிணி இவற்றிற்கு எள்ளை மைய அரைத்து குளிர்ந்த நீரிலோ, அல்லது சூடான நீரிலோ கலந்து வாய் கொப்பளித்தல் சிறந்த முறையாகும்.

பொதுவாக வாய் கொப்பளிப்பதற்கு எண்ணெய் அல்லது மாமிசரசம் சிறந்த பொருளாகும்.

நெருப்புச் சுட்டது போன்ற எரிச்சல், வாய் வேக்காடு, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட காயம், நஞ்சு, [4]க்ஷாரம், நெருப்பு இவற்றால் சுட்டபுண், இப்பிணிகளை நீக்க நெய் அல்லது பாலைப் பருகி வாயில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் வாய் சுத்தமாவதுடன், வாயில் பிளந்த புண்களைக் கூட்டி வைக்கிறது. தேனைக் கொண்டு வாய் கொப்பளிப்பதனால் எரிச்சலும் தாகமும் அடங்குகின்றன.

---

1. சோதனம்—கழுத்துக்குமேல் உள்ள உறுப்புகளில் உள்ள கப நோய்களை நீக்குதல்.
2. சிரோவிரேசனப் பொருட்கள்—தலையில் ஏற்படுகிற நோய்களைத் தீர்க்கக்கூடிய பொருள்கள்.
3. ரோபணம்—புண்களை ஆற்றக் கூடியது.
4. க்ஷாரம்— கார்ப்பும் உப்பும் மிகுதியாக உள்ளதும் உடலைக் கெல்லுவதுமான பொருள்.

[1]தான்யாம்லத்தைக் (ஒருவகைக் காடி) கொண்டு வாய் கொப்பளிப்பதனால் சுவையறியாமை, வாயில் உண்டாகும் அழுக்கு, கெட்ட நாற்றம் இவை விலகுகின்றன.

உப்புச் சேராத குளிர்ந்த தான்யாம்லத்தைக் கொண்டு வாய் கொப்பளிப்பதனால் வறட்சி நீங்கும்.

[2]க்ஷாரப் பொருட்களைக் கொண்டு வாய் கொப்பளித்தால் கபத்தின் கூட்டம் விரைவில் உடையும். *(5—9)*

5. வாய் கொப்பளிக்கும் முறை

அதிகக் காற்றோட்டம் இல்லாத, சூரிய ஒளியுள்ள இடத்தில் நன்றாக அமர்ந்துகொண்டு, அதிலேயே மனதை ஈடுபடுத்தி, தொண்டை, தாடை, நெற்றி இவற்றை வியர்க்கச் செய்து, கொப்பளிக்கும் திரவத்தை வாயில் பாதிஅளவு நிரப்பிக் கொண்டு கொப்பளிப்பது உயர்ந்த அளவாகும். மூன்றில் ஒருபங்கு அதை நிரப்பிக் கொண்டு கொப்பளிப்பது நடுத்தர அளவாகும். நான்கில் ஒரு பங்கு அதை நிரப்பிக் கொண்டு கொப்பளிப்பது குறைந்த அளவாகும். கல்கமாக இருந்தால் இலந்தை விதை அளவு அதை வைத்துக் கொண்டு கொப்பளிக்க வேண்டும்.

வாய் கொப்பளிக்கும்போது தலையைக் கொஞ்சம் நிமிர்த்தியபடி இருக்க வேண்டும்.

கொப்பளிக்கும் பொருட்களின் திரவம் வாயில் அசைய முடியாத நிலையிலிருந்தால் கண்டூஷம் என்வும், அசையக் கூடியதாக இருந்தால் கபளம் எனவும் கூறப்படுகிறது. இதற்கு மேற்கோளாகச் செய்யுள் ஒன்று உள்ளது. அதன் கருத்து— *(10)*

"வாயிலிட்ட திரவப்பொருட்கள் அசைக்க முடியும் அளவுக்கு இருந்தால் கபள க்ரகம் எனவும், அசைக்க முடியாத அளவுக்கு இருந்தால் கண்டூஷம் எனவும் பெயர் பெறுகிறது." *(11)*

---

1. தான்யாம்லம்—ஒரு வகை காடி.
2. க்ஷாரப்பொருட்கள்—கார்ப்பும் உப்பும் மிகுதியாக உள்ளதும் உடலைக் கெல்லும் சக்தியுள்ளதுமான பொருட்கள்.

வாய் கொப்பளித்தலுக்குப் பின் வியர்வை உண்டாக்கு தலையும், உடல்பிடித்து விடுதலையும் செய்ய வேண்டும். அதனால் தூண்டிவிடப்பட்ட கபம், வாய்க்கு வந்து சேருகிறது.

தாடையின் உட்பகுதி கபத்தினால் நிரம்பும்வரையும், மூக்கு, கண் இவற்றிலிருந்து நீர் பெருகத் தொடங்கும் வரையும், கபத்தினால் வாயிலிடப்பட்ட பொருட்கள் கெடாதவரையும் கொப்பளிக்கப் பயன்படும் கஷாயத்தை வாயில் வைத்திருக்க வேண்டும். இம்மாதிரி மூன்று, ஐந்து அல்லது ஏழுமுறை செய்ய வேண்டும், அல்லது புகைபிடிக்கும் சிகிச்சையில் அதற்குண்டான நற்குறி தோன்றும்வரை கொப்பளிக்கப் பயன்படும் பொருட்களை வாயில் வைத்திருக்க வேண்டும்.

இச் சிகிச்சையினால் பிணி நீங்கியிருந்தால் இம்முறை நன்கு நிறைவேறியுள்ளது என அறிந்து கொள்க. சுறுசுறுப்பின்மை, சுவையறியாமை, சுவையின்மை, வாயில் கபநீர் பெருகுதல், வாயில் குழகுழப்பு இவை ஏற்படுமானால் இம்முறை நன்கு கடைபிடிக்கபடவில்லை என்பதை அறிக.

வாய் உலர்தல், வாயில் புண் தோன்றுதல், அழற்சி, சுவையின்மை, இதயத்துடிப்பு, குரல் கம்முதல், காதில் ஓசை இவை தோன்றினால் இம்முறை அளவுக்கு அதிகமாகச் செய்யப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. அதற்கு உகந்த வகையில் சிகிச்சை செய்க. (12)

6. [1]ப்ரதிஸாரண வகை

[2]ரஸக்ரியா, [3]கல்கம், [4]சூர்ணம் என ப்ரதிஸாரணம் மூவகைப்படும். இது வாய் கொப்பளிக்கக் கூறப்பட்ட மூலிகைகளால் செய்யப்பட்டது.

---

1. ப்ரதிஸாரணம்—வாயிலும், தொண்டையிலும், கபம் அதிகம் உண்டாவதால் தோன்றும் வீக்கம், புண் போன்றவற்றை நீக்கப் பூசப்படும் மருந்து.
2. ரஸக்ரியா—கஷாயம் போன்றவற்றை மறுபடியும் சுண்டும்படி காய்ச்சி எடுக்கப்படும் லேஹ்யம் போன்ற கெட்டியான பகுதி.
3. கல்கம்—துவையல் போல மைய அரைக்கப்பட்ட மருந்து.
4. சூர்ணம்—மூலிகைப் பொருட்களைத் தூளாக்குவது.

[1]அபிஷ்யந்தம் எனும் கண் நோய், [2]அதிமந்தம் எனும் கண் நோய், [3]கல சுண்டிகா எனும் தொண்டையில் தோன்றும் நோய் இவற்றை நீக்க இந்த ப்ரதிஸாரணத்தை தக்கபடி பயன்படுத்த வேண்டும். அளவுக்கு மீறி இந்தப் ப்ரதிஸாரணத்தைச் செய்தால் நெருப்புச் சுட்டது போன்று வாயில் எரிச்சல், வாய் உலர்தல், அழற்சி, வீக்கம் போன்ற தொல்லைகள் ஏற்படுகின்றன. *(13)*

7. [4]முகாலேபனம் (முகப் பூச்சின் வகை)

தோஷக்நம் — (தோஷங்களை நீக்குவது)
விஷக்னம் — (நஞ்சைப் போக்குவது)
வர்ண்யம் — (நிறத்தை அளிப்பது)

என இப்பூச்சை மூவகையில் செய்யலாம்.

அங்குலத்தில் நான்கில் ஒரு பங்கு
அங்குலத்தில் மூன்றில் ஒரு பங்கு
அரை அங்குலம்

தடிப்புள்ளதாக இதைப் பூச வேண்டும்.

8. முகப்பூச்சுச் சிகிச்சை பெற்றவன் செய்யத்தகாதவை

அதிகம் பேசுதல், சிரித்தல், கோபப்படுதல், வருத்த மடைதல், அழுதல், வியர்வை உண்டாக்கிக் கொள்ளுதல், நெருப்பின் அருகில் செல்லுதல், வெயிலில் நிற்றல், பகலில் தூங்குதல் இவற்றை விலக்கவும். விலக்காவிடில் அரிப்பு, தோல் உலர்ந்து போதல், நாட்பட்ட ஜலதோஷம், பார்வை இழத்தல் போன்றவை ஏற்படும்.

முகப்பூச்சை உலரும்வரை விட்டுவைக்கக்கூடாது. உலர்ந்த பூச்சு உடல் ஒளியைப் போக்குகிறது. அதனால் பூச்சை உலருவதற்கு முன்பே கலைத்துவிட வேண்டும். பிறகு முகத்தைக் கழுவ வேண்டும். *(14)*

---

1. அபிஷ்யந்தம்—கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல்.
2. அதிமந்தம்—ஒற்றைத் தலைவலியுடன் கண்களைப் பிடுங்குவது போன்ற அதிக துன்பம் அளிக்கும் கண்நோய்.
3. கலசுண்டிகா—உள்நாக்கின் வளர்ச்சியில் தோன்றும் நோய்.
4. முகாலேபனம்—முகத்தின்மேல் பூசப்படும் மருந்து.

9. முகப்பூச்சிற்குத் தகாதவை

இரவு நேரம், இரவில் கண் விழித்தவன், உணவு சீரண மடையாதவன், மூக்கிற்கு மருந்து இடப்பட்டவன், சுவை யறியாதவன், முகவாய்க்கட்டை பிடிப்புள்ளவன், முற்றின ஜல தோஷம் உடையவன் என இவர்களுக்கு முகப்பூச்சு செய்ய லாகாது.

தகாத காலத்தில் சுருக்கம் விழுதல், தகாத காலத்தில் முடி நரைத்துப்போதல், கண் மறைப்பு, வங்கு எனும் முகத் தில் தோன்றும் ஒரு வகை நோய், எள்ளுப் போன்று முகத்தில் ஏற்படும் தழும்புகள் ஆகியவை முகப்பூச்சு சிகிச்சை நன்கு செய்யப்படுவதனால் தணிகின்றன. இச்சிகிச்சை நன்கு நடை பெற்றவனுக்கு பார்வையில் வலிவும், தாமரை மலரைப் போன்ற முக ஒளியும் ஏற்படுகின்றன. (15)

10. [1]மூர்த்த தைல வகை

இது அப்யங்கம், பரிஷேகம், பிசு, வஸ்தி என நான்கு வகைப்படும்.

அப்யங்கம்—தைலம் போன்றவற்றை தலை, மற்ற உறுப்பு இவைகளில் தேய்த்துக் கொள்ளுதல்.

பரிஷேகம்—எண்ணெய் முதலியவற்றை தலையின் மேல் தொடர்ச்சியாக ஊற்றுதல்.

பிசு—சூடான எண்ணெய் போன்றவற்றில், துணி, பஞ்சு இவற்றை நனைத்து ஒத்தடம் கொடுத்தல்.

வஸ்தி—தலையில் எண்ணெய் தேக்கி வைக்கும் முறை.

இந்நான்கு வகையினுள் முறையே ஒன்றைவிட ஒன்று மேன்மேலும் சிறந்ததாகும்.

வறட்சித்தன்மை, அரிப்பு, அழுக்குப் போன்ற நிலைகளில் அப்யங்கம் எனும் முறை பயன்படுத்தப்படுகிறது.

தலையில் சிரங்கு, தலைவலி, அழற்சி, வேக்காடு, புண்கள் முதலியவற்றிற்குப் பரிஷேகம் எனும் முறை கடைப் பிடிக்கப்படுகிறது.

---

[1]மூர்த்த தைலம்—மருந்துப் பொருட்கள் கலந்து தலைக்கு இடும் எண்ணெய்.

முடி உதிர்தல், தலையில் தோல் வெடித்துப் போதல், கண் குத்திடுதல் போன்றவற்றிற்கு பிசு என்னும் முறை கையாளப்படுகிறது.

மரத்துப்போதல், இரவு கண் விழித்தல், முகம் ஒரு பக்கமாகக் கோணுதல், மூக்கு, வாய் வரண்டுபோதல், திமிரம் எனும் கண்நோய், பேச்சுத்தடைபடுதல், கடுமையான தலைவலி இவற்றிற்கு வஸ்தி எனும் மூர்த்ததைலமுறை பின்பற்றப் படுகிறது.

இக்கருத்தை விளக்கும் செய்யுள் ஒன்று உள்ளது :—

"வறட்சி, அரிப்பு, அழுக்கு போன்றவற்றிற்கு அப்யங்கம் எனும் வகையையும், தலையில் சிரங்கு, தலைவலி, அழற்சி, வேக்காடு, புண்கள் போன்றவற்றிற்கு பரிஷேகம் எனும் முறையையும் பயன்படுத்த வேண்டும்.

முடி உதிர்தல், தலையில் தோல் வெடித்துப் போதல், கண் குத்திட்டுப்போதல் போன்றவற்றிற்கு பிசு என்ற முறையையும், மரத்துப் போதல், இரவு கண் விழித்தல், முகம் ஒரு பக்கமாகக் கோணிப்போதல், மூக்கு, வாய் வரண்டு போதல், திமிரம் எனும் கண்நோய், கடுமையான தலைவலி இவற்றிற்கு வஸ்தி எனும் முறையையும் பயன்படுத்த வேண்டும்.'' *(16— 18)*

11. சிரோவஸ்தி செய்யும் முறை *(தலையில் எண்ணெய் தேக்கி வைக்கும் முறை)*

பன்னிரண்டு அங்குலம் அகலமுள்ளதும், தலையைச் சுற்றிக் கட்டுவதற்குத் தகுந்த நீளமுள்ளதும், காதுவரை சுற்றிக் கட்டுவதற்கு ஏற்றதுமான பதனிடப்பட்ட மெல்லிய இரண்டு துவாரமுள்ள உறுதியான தோல்பட்டை ஒன்றைத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

சோதனச் சிகிச்சை செய்து கொண்டபின், எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை இவற்றைச் செய்து மாலையிலோ, காலையிலோ, முழங்கால்அளவு உயரமுள்ள இருக்கையில் நோயாளியை அமர்த்தி, நெற்றியின் வழியாக தலையைச் சுற்றி துணி ஒன்றைக் கட்டி, அதன்மேல் தோல்பட்டையைக் கட்ட வேண்டும். தோல்பட்டை தளராமலிருக்க நாடா ஒன்றினால் இறுகச் சுற்ற வேண்டும்.

பிறகு உளுந்தின் பிசைந்த மாவினால் அதைச் சுற்றிப் பூச வேண்டும், நோய்க்கு ஏற்றவாறு காய்ச்சி பக்குவம் செய்த எண்ணெய் வகையை இளம் சூடாகத் தலையில் ஊற்ற வேண்டும். அந்த எண்ணெய் வகை தலைமயிரின் அடித்தளத்திலிருந்து மேலே இரண்டு அங்குல உயரம் தேங்கி நிற்கும்படி செய்யவேண்டும்.

தேங்கிய எண்ணெய் காது, வாய், மூக்கு இவற்றின் வழியாக வெளிவரும் வரையிலும் வேதனை குறையும் வரையிலும் நோயாளி அதைத் தலையில் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக வாதத்தினால் உண்டான பிணிகளில் பத்தாயிரம் [2]மாத்திரை அளவின் காலமும், பித்தத்தினால் தோன்றிய நோய்களில் 8 ஆயிரம் மாத்திரை அளவின் காலமும், கபத்தினால் தோன்றிய நோய்களில் ஆறாயிரம் மாத்திரை அளவின் காலமும், நல்ல நிலையில் ஆயிரம் மாத்திரை அளவின் காலமும் அதை நோயாளி தாங்கி இருக்க வேண்டும்.

பிறகு எண்ணெய் எடுத்து, சிரோவஸ்தியை நீக்கி, தோள் பட்டை, கழுத்து, கழுத்தின் பின்பக்கம், நெற்றி இவற்றைச் சுகமாக இருக்கும்படி பிடித்து விட வேண்டும்.

பிறகு சூடான நீரில் நீராடச் செய்து தகுந்த உணவை உட்கொள்ளச் செய்யவேண்டும். எண்ணெய்ச் சிகிச்சையில் கூறிய விதிமுறைகளைப் பின்பற்றச் செய்யவும். இந்தச் சிகிச்சையைத் தொடர்ச்சியாக மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்கள் செய்யலாம். (19)

12. மூர்த்த தைலத்தின் பயன்

மூர்த்த தைலத்தைப் பயன்படுத்துவதால் முடி உதிர்தல், தலை நரைத்துப்போதல், செம்பட்டையாதல், தலையின் தோல் வெடித்தல், தலையில் தோன்றும் வாதநோய் இவை யாவும் நீங்கும்.

---

1. சிரோவஸ்தி—தலையில் எண்ணெய் தேக்கி வைக்கும் முறை.
2. மாத்திரை – ஒரு கால அளவு.

கண், காது போன்ற புலன்களுக்கு அதிகத் தெளிவு ஏற்படுத்துவதுடன், குரல், முகவாய்க்கட்டை, தலை இவற்றிற்கு வலிவையும் உண்டாக்குகிறது. (20)

13. காதில் எண்ணெய் ஊற்றுதல்

காது முழுவதும் எண்ணெயை நிரப்பி, காதின் கீழ்ப் பக்கத்தில் வலி நீங்கும்வரை பிடித்துவிட வேண்டும்.

நல்ல நிலையில் உள்ளவனுக்கு நூறு மாத்திரை அளவு காலம் எண்ணெய் நிரம்பியிருக்கச் செய்ய வேண்டும்.

மாத்திரை அளவு என்பது வலது முழங்காலைச் சுற்றி விரலினால் சொடுக்குவது, அல்லது இமைகொட்டும் நேரம் ஆகும். *(21—22)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'கண்டூஷாதிவிதி' எனும் முப்பத்தொன்றாவது
அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்

*ஆச்யோதனாஞ்ஜன விதி

'ஆச்யோதனாஞ்ஜன விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1 —2)

1. ஆச்யோதன சிகிச்சை

கண்களைச் சார்ந்த எல்லா நோய்களுக்கும் பல பொருட்கள் சேர்ந்திருப்பதால் ஆச்யோதனம் எனும் சிகிச்சை முறை உயர்ந்தது. இச்சிகிச்சை கண்களின் செந்நிறம், கண்ணீர் பெருகுதல், உறுத்தல், வலி, எரிச்சல், குத்தல் வலி, பிளப்பது போன்ற வலி, வேக்காடு, வீக்கம், அரிப்பு இவற்றை நீக்குகின்றது.

இந்நோய்கள் வெளிப்படையாகத் தெரியாவிடில் ஆச்யோதனம் எனும் கண் சிகிச்சைக்கான பொருட்களையே கல்கம் போல் அரைத்து கண்களைச் சுற்றிலும் இமையில் படாமல் வெளியில் பூசவேண்டும். இம்மேல்பூச்சுக்கு [1]பிடாலகம் என்று பெயர்.

ஆச்யோதனம், பிடாலகம் எனும் கண் சிகிச்சைகளுக்கு இரவு நேரம் ஏற்றதல்ல. ஆதலால் பகலிலோ அல்லது வேதனை ஏற்பட்டவுடனோ இச்சிகிச்சையைச் செய்யலாம்.

காற்றோட்டமில்லாத இடத்தில் நோயாளியைப் படுக்கச் செய்தபின் கண்களைச் சுத்தம் செய்து, கண்ணின் ஓரத்தில் ஒரு பாத்திரத்தை வைத்து, மருத்துவர் தமது இடது கையினால் நோயாளியின் கண்ணைத் திறந்து வலது கையினால் சிப்பி, அல்லது பஞ்சுத் திரியினால் மருந்தைக் கருவிழியில் படாமல் வெண்விழிமேல் மூக்கின் ஓரமாக பத்து, பன்னிரண்டு அல்லது எட்டுத் துளிகள் கண்களின் மேல் இரண்டு அங்குல உயரத்திலிருந்து சொட்டுச் சொட்டாக ஊற்ற வேண்டும். அதற்கு மேற்பட்ட உயரத்திலிருந்து மருந்தைக்

---

* ஆச்யோதனம் —கண்களுக்கு ஊற்றுத் திரவமான மருந்தை மெல்லிய தாரையாகக் கண்களில் ஊற்றுவது ஆச்யோதனமாகும். அதையும் கண்களுக்கு இடும் மையைப் பற்றியும் விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1 பிடாலகம் —கண்களைச் சுற்றிலும் இமைகளில் படாமல் வெளியில் பூசப்படும் பூச்சு.

கண்களில் சொட்டவிட்டால் கண்களில் நலிவு ஏற்பட்டு அவை செந்நிறமடைகின்றன.

மருந்தைக் கண்களில் சொட்டவிட்டபின் மென்மையான துணியினால் துடைக்க வேண்டும்.

கபம், வாதம் இவற்றினால் ஏற்பட்ட கண் நோய்களுக்கு இச்சிகிச்சை செய்யும்பொழுது மென்மையான துணியை இளம் சூடான நீரில் நனைத்துத் துடைப்பதன் வாயிலாக வியர் வையை உண்டாக்கவேண்டும்.

கபம், வாதம் இவற்றினால் தோன்றிய கண்நோய் சிகிச்சையில் ஆச்யோதன மருந்தும் இளஞ்சூடாக இருக்க வேண்டும்.

பித்தம், இரத்தம் இவற்றால் தோன்றும் கண்நோய்ச் சிகிச்சையில் குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் கண்களைத் துடைக்க வேண்டும்.

ஆச்யோதனம் எனும் வைத்யமுறையில் பயன்படுத்தும் திரவம் மிகவும் கடுமையாகவோ, அதிக உஷ்ணமாகவோ, குளிர்ச்சி யாகவோ, அளவில் கூடவோ, குறைந்தோ, தடைப்பட்ட சொட்டுக்களாகவோ இருக்கக்கூடாது.

அம்முறை மிகவும் கடினமாகவோ, உஷ்ணமாகவோ இருந்தால் கண்களில் எரிச்சல், சிவப்பு நிறம், வேக்காடு, பார்வைக்குறைவு இவை ஏற்படும்.

மிகவும் குளிர்ச்சியாக இருந்தால் கண்கள் குத்திட்டுப் போதல், கண்ணீர்ப்பெருக்கு, கண்களில் உறுத்தல், குத்தல் வலி இவை உண்டாகும்.

அளவில் கூடுதலாயிருந்தால் கண்கள் உலர்ந்து விடுவ துடன் கண்களில் சுருக்கம், துடிப்பு, திறந்தபடி இருத்தல், காற்றைப் பொறுக்க முடியாமை, உறுத்தல் இவை தோன் றும். அது குறைந்த அளவில் இருந்தால் நோய் விலகாது. தடைப்பட்ட சொட்டுக்களாயிருந்தால் கண்ணீர் வருதலும், உறுத்தல் வேதனையும் ஏற்படுகின்றன. *(3—4)*

2. ஆச்யோதன சிகிச்சையின் பயன்

இச்சிகிச்சையில் கண்களில் ஊற்றப்பட்ட மருந்து கண் கோளத்தின் ஓரம், நரம்புகள், [1]சிருங்காடகம் எனும் இடம், மூக்கு, வாய் கழுத்துக்களின்மேல் உள்ள உறுப்புகள் இங்கு பரவி அங்குள்ள தோஷங்களை வெளிப்படுத்துகிறது. (5)

3. கண்மைச் சிகிச்சையின் பயன்

ஆச்யோதன சிகிச்சை செய்த பின்பும், பித்தம், கபம், இரத்தம் இவற்றால் கண்நோய் உண்டானால், கண்களைச் சுத்தம் செய்தபின், கண் புளிச்சை கெட்டியாகவும் அதிகமாக வும் ஏற்பட்டாலும், பிசுபிசுப்பு, அதிகமான அரிப்பு, வீக்கம், வாட்டம், செந்நிறம், வெடிப்பு இவை ஏற்பட்டு, பிணி பக்குவ நிலையிலிருந்தாலும், இந்நோய்கள் கண்களில் மட்டும் இருந்தாலும் கண் மையைப் பயன்படுத்த வேண்டும்.

தோஷங்கள் அதிக வலிவு பெற்றிருக்கும்போதும், தோஷங் கள் வெளிப்படுத்தாத நிலையிலும் இந்த மையைக் கண்களில் இடக்கூடாது. இட்டால் கண்களில் செந்நிறம் அதிகரிப்ப துடன், கண் வேக்காடு, கண்மறைப்பு இவை ஏற்படும். (6)

4. கண்மை வகை

[2]அஞ்சனம் என்பது லேகனம், ரோபணம், ஸ்நேகனம், ப்ரஸாதனம் என நால்வகையாகப் பிரிபடுகிறது. இவற்றில் இனிப்புச்சுவை நீங்கலாக, புளிப்பு முதலான ஐந்து சுவை களுள்ள பொருட்களினால் லேகனம் எனும் கண்மை செய்யப் படுகிறது. இம் மையை [3]சுக்லார்மா போன்ற கண்நோய்களைக் கரைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும்.

ரோபணம் – கைப்பு, துவர்ப்பு, இச்சுவையுள்ள பொருட் கள் எண்ணெயுடன் கலந்து செய்யப்படுவது ரோபணமாகும். இம்மையை [4]அபிஷ்யந்தம் எனும் கண்நோய்க்குப் பயன் படுத்தலாம்.

---

1. சிருங்காடகம்—மூக்கு, காது, கண் இவற்றின் துவாரங்கள் ஒருமிக்க தொண்டைப்பக்கமாகச் சேருமிடம்.
2. அஞ்சனம்—கண் மை.
3. சுக்லார்மா—ஒருவகைக் கண்நோய்.
4. அபிஷ்யந்தம்—கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல்.

ஸ்நேகனம் — பாம்பு போன்றவற்றின் கொழுப்பு முதலிய பொருட்களினால் செய்யப்படும் மை. இம்மையை வாத தோஷத்தினால் தோன்றிய கண்மறைப்பு நோய்க்கு உபயோகப் படுத்த வேண்டும்.

ப்ரஸாதனம்—இது இனிப்புச் சுவையுள்ள குளிர்ச்சிப் பொருட்களை எண்ணெய்ப் பொருட்களுடன் சேர்த்து உருவாக்கப்படும் மை. கிரகண காலத்தில் கதிரவனைப் பார்ப்பதனாலும், இடி, மின்னல், விழுவதனாலும், பூதம், பேய், பிசாசம் போன்ற அற்புதப் பொருட்களைப் பார்ப்பதனாலும், பார்வை இழந்தவனுக்கும், நல்ல நிலையில் இருப்பவனுக்கும் இந்த மை பயன்படும். (7)

வேறு வகையான கடினமான மையையிடுவதனால் கண் கொதகொதப்பு அடைந்தால் ப்ரஸாதனம் எனும் சூர்ணத்தை உபயோகிக்க வேண்டும். அப்பொழுது இது [1]ப்ரத்யஞ்சனம் எனப் பெயர் பெறுகிறது.

சுவையின் மாறுபாட்டினால் கண்மை ஆறு வகைப்படும். அல்லது கடினம், மிருது என இரு வகைப்படும். (8)

5. கண்மை செய்யும் முறை

கண் மையை மூன்று வகையாகச் செய்யலாம். ஒன்று [2]பிண்டம், (மாத்திரைகளாகச் செய்த கண்மை).

[3]ரஸக்கிரியா — தேன் அல்லது லேகியம் போல் கெட்டியாக உள்ள மை. சூர்ணம் — தூள் நிலையில் உள்ள மை.

இம்மூன்று மைகளில் சூர்ணம் எனும் மையை விட ரஸக்ரியா எனும் மை சிறந்தது. இம்மையைக் காட்டிலும் பிண்டம் எனும் மை சிறந்ததாகும்.

ஆகையினால் வலிவுள்ள கண்நோய்கள் நீங்க பிண்டம் எனும் மையையும், நடுத்தரமான கண் நோய்களைப் போக்க

---

1. ப்ரத்யஞ்சனம்—கண்களில் தீக்ஷ்ணமான மையைத் தீட்டி அதனால் ஏற்படும் தீமைகளை நீக்க இடும் ப்ரஸாதன்ம் எனும் மை ப்ரத்யஞ்சனம் எனப் படும்.
2. பிண்டம்—மாத்திரை.
3. ரஸக்ரியா—கெட்டியான மை.

ரஸக்ரியா எனும் மையையும், வலிவு குறைந்த கண்நோய்களை நீக்க சூர்ணம் எனும் மையையும் பயன்படுத்த வேண்டும்.

6. மையின் அளவு

பிண்டம் எனும் கடினமான மையை மிளகு அளவும், ரஸக்ரியா எனும் மையை வாயுவிடங்கவிதையின் அளவும் கண்ணுக்குத் திட்ட வேண்டும்.

பிண்டம் எனும் மையும் ரஸக்ரியா எனும் மையும் மிருதுவான பொருட்களினால் செய்யப்பட்டிருந்தால் வாயுவிடங்க விதையின் இருமடங்கு அளவுள்ள மையைக் கண்ணிற்குத் திட்ட வேண்டும்.

கடினப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட சூர்ணம் எனும் மையை இரு [1]சலாகை அளவும், மிருதுவான பொருட்களால் ஆக்கப்பட்ட சூர்ணம் எனும் மையை மூன்று சலாகை அளவும் பயன்படுத்த வேண்டும். (9)

7. கண்மை தயாரிக்கும் பாண்டங்கள்

இனிப்புச் சுவையுள்ள பொருட்களினால் செய்யப்படும் ரஸக்ரியா எனும் கண்மை தயாரிக்க தங்கப்பாத்திரம் தேவை. புளிப்புச் சுவையுள்ள பொருட்களினால் உருவாக்கப்படும் ரஸக்ரியா எனும் மை தயாரிக்க வெள்ளியினால் செய்த பாண்டம் தேவை.

உப்புச் சுவையுள்ள பொருட்களினால் ஆக்கப்படுகின்ற ரஸக்ரியா எனும் மை தயாரிக்க ஆட்டுக்கொம்பினால் செய்த பாண்டம் சிறந்தது.

கைப்புச்சுவையுள்ள பொருட்களைக் கொண்டு செய்யப்படும் ரஸக்ரியா எனும் மை தயாரிக்க வெண்கலபாத்திரம் சிறந்தது. கார்ப்புச் சுவைப் பொருட்களினால் உண்டாக்கப்படும் ரஸக்ரியா எனும் மை தயாரிக்க வைடூர்யமணியால் அல்லது கல்லினால் செய்த பாத்திரம் முக்கியமானது.

துவர்ப்புச் சுவையுள்ள பொருள்களால் தயாரிக்கப்படும் ரஸக்ரியா எனும் மை உண்டுபண்ண தாமிரம் அல்லது இரும்பினால் செய்த பாண்டம் அவசியம்.

---

1. சலாகா—மை திட்டும் குச்சி.

குளிர்ந்த பொருட்களினால் உண்டாக்கப்படும் ரஸக்ரியா எனும் மை தயாரிக்க நாணல், இத்தி, பதிமுகம், ஸ்படிகம், சங்கு இவற்றில் ஏதாவது ஒன்றினால் செய்த பாண்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு மையை, குறிப்பிட்ட பாண்டங்களில் தயாரிப்பதனால் அது கெட்டுப்போகாமல் வீர்யத்துடன் இருக்கிறது.

8. கண்மை உறைக்கும் கல்லின் அமைப்பு

மாத்திரை உருவத்தில் உள்ள மையை; உறைக்கும் கல் மிக வழவழப்பு உள்ளதாகவும், நடுப் பாகம் ஆழமுள்ளதாகவும், ஐந்து அங்குல நீளம், மூன்று அங்குல அகலமுள்ளதாகவும் அமைந்திருக்க வேண்டும். *(10)*

9. கண்மை தீட்டும் குச்சி

குச்சி போன்ற இக்கருவி தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு இவற்றில் ஏதாவது ஒன்றினால் செய்யப்பட்டிருக்க வேண்டும். விரலையும் பயன்படுத்தலாம்.

தங்கம், வெள்ளி இவற்றினால் செய்த குச்சியைப் ப்ரஸாதனம், ஸ்நேகனம் எனும் அஞ்சனம் தீட்டிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டும்.

செம்பினால் ஆன குச்சியால் லேகனம் எனும் மையைத் தீட்டிக் கொள்ளவும், இரும்புக் குச்சியையும், விரலையும் ரோபணம் எனும் மை தீட்டிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டும்.

குச்சியைவிட விரல் மென்மையாயிருப்பதால் சிறந்தது. ஆகையினால் கண்களில் நோய் ஏற்பட்டபோது விரலையே உபயோகிக்க வேண்டும்.

விரலைத் தவிர குச்சிகள் பத்து அங்குல நீளம், உளுந்து அளவு பருமன், வழவழப்பு, நடுப்பாகம் குறைந்தும், இரு பக்கங்களும் மொட்டுபோலும், கடலையளவு பருமனாகவும் அமைந்திருக்க வேண்டும். *(11)*

10. கண்மை தீட்டிக் கொள்வதற்கான காலம்

அதிகக் குளிர்ச்சி, அதிகச் சூடு இல்லாத மேக மூட்டமற்ற காற்றோட்டம் அதிகமில்லாத காலை, மாலை இரண்டு வேளைகளிலும் மை தீட்டிக் கொள்ள வேண்டும்.

கண்கள் நல்ல நிலைமையில் உள்ளவர்கள் கண் மையைக் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் தீட்டிக் கொள்ளலாம். மை தீட்டிக்கொள்வதனால் பயன் காணாதவர்கள் அதைத் தீட்டிக் கொள்ளக்கூடாது. (12)

ஒரு கண்ணிற்கு நோய் ஏற்பட்டால் அந்தக் கண்ணிற்கு முதலில் கண்மை இடவேண்டும். பிறகு நல்ல நிலையில் உள்ள கண்ணிற்கு மை தீட்ட வேண்டும்.

இதற்கு மாறாக நல்ல நிலையில் உள்ள கண்ணிற்கு முதலிலும் நோயுற்ற கண்ணிற்குப் பிறகும் மை தீட்டினால் நோயுள்ள கண் சுருங்குவதால் மை எனும் மருந்து நன்றாக உள்ளே செல்லாது. இதேபோல் அதிகக் குளிர்ச்சி, அதிகமான சூடுள்ள நேரங்களிலும் மை தீட்டிக்கொண்டால் தோஷங்கள் வளருவதன் மூலம் நோய் வளரும். (13)

11. கண்மை தீட்டத் தகாதவர்கள்

கோபமடைந்தவன், பயந்தவன், சந்தேகம் உள்ளவன், வருத்தமுள்ளவன், களைத்தவன், உணவு உண்டவன், மலப் போக்கிற்கு மருந்து எடுத்துக் கொண்டவன், புகைபிடித்தவன், கள் குடித்தவன், மூக்கிற்கு மருந்து போட்டுக்கொண்டவன், இரவு கண் விழித்தவன், மலம், சிறுநீர் இவற்றின் வேகத்தையுடையவன், அழுதவன், தண்ணீர் தாகமுள்ளவன், காய்ச்சல் உள்ளவன், வாந்தி எடுத்தவன், சூட்டினால் கண் கலங்கியவன், கண்ணில் அடிபட்டவன், தலைவலி உள்ளவன், நீராடியவுடன் கதிரவன் தோன்றுவதற்குமுன் கண்மை தீட்டிக்கொள்ளக்கூடாது.

மீறி தீட்டிக்கொண்டால் அந்த மையின் சூடு, மேல் நோக்கிச் சென்று தோஷங்களைச் சீற்றமடையச் செய்கிறது. அதனால் கண்ணீர் வடிதல், கண்களில் வேதனை, கண்கலங்குதல், நெருப்புப் பட்டது போன்ற எரிச்சல், செந்நிறம், பீளை, குற்றல்வலி, கண் திறக்க முடியாமை, வீக்கம், கண்களில் சிறு கட்டி, கண்மறைப்பு இவை உண்டாகும். (14)

12. கண்மை தீட்டும் முறை

மருத்துவர் நோயாளியை நன்றாக அமர்த்தி அவனுடைய கண்ணின், மேல் இமையை இடது கைக் கட்டைவிரலால் மேலே தூக்கி, கருவிழியின் கீழ்ப்பகுதியில் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் வரை (மூக்கின் அடிபாகத்திற்கு அருகில்தொடங்கி காதுப்பக்கம் வரை) கண்மை தீட்ட வேண்டும். மை மிகக் குறைவாகவோ, அதிகமாகவோ இருக்கக்கூடாது. மிகவும் கடுமையாகவும், மிகவும் திரவமாகவும் அதிகம் கெட்டியாகவும், சுரசுரப்பாகவும் மை இருத்தலாகாது.

மிக வேகமாகவோ, மிகவும் தாமதமாகவோ, கண்களை நன்றாகத் திறக்கச் செய்யாமலோ திட்டக்கூடாது. மருத்துவர், கை நடுக்கமில்லாமல், அடிபடாமல், எங்கும் பரவும்படி மையைத் திட்ட வேண்டும்.

கண்களில் கண்மைச் சூர்ணத்தை (தூள்) இடும்போது குச்சியை இங்குமங்கும் செலுத்தவேண்டும். இல்லையேல் சூர்ணம் ஒரே இடத்தில் தங்கி, கண்களுக்குச் செந்நிறத்தையும், கண்ணீர் வடிதலையும், சுக்ரம் எனும் கண் நோயையும் உண்டாக்கும்.

கண்மை கண்களில் நன்கு பரவுவதற்காக, கண்களைத் திறந்து கருவிழியை மெள்ளமெள்ள இங்குமங்கும் அசைக்க வேண்டும். இம்மாதிரி செய்வதால் மை கண்களில் நன்கு பரவுகிறது. இமைகளைக் கொஞ்சமாக அசைக்கச் செய்ய வேண்டும்.

கண்மை திட்டிக் கொண்டவுடன் கண்களைத் திடீர் என்று திறப்பதோ, கசக்குவதோ, நீரினால் அலம்புவதோ கூடாது. அப்படி செய்தால் சீற்றமடைந்த தோஷங்கள் கண்களைக் குத்திடச் செய்துவிடும்.

கண்களில் இட்ட கண்மையின் வேகம், தானாகத் தணிந்தபின், நோய்க்கும், தோஷங்களுக்கும், நிலைகளுக்கும் ஏற்றவாறு நீரினால் கண்களைக் கழுவவேண்டும். அதன்பின் மருத்துவன் தன் இடதுகைக் கட்டைவிரலில் உள்ள சுத்தமான மெல்லிய துணியால் நோயாளியின் வலது கண்ணை மெள்ளத் துடைக்கவேண்டும். இதேபோல் வலது கைக்கட்டை விரலில் உள்ள மெல்லிய சுத்தமான துணியினால் இடது கண்ணைத் துடைக்க வேண்டும்.

இப்படி சுத்தம் செய்யாவிடில் கண் இமைகளின் உட்பகுதியில் உள்ள மாமிச பாகத்தில் தங்கியுள்ள மை, பிணியைத் தோற்றுவிக்கும்.

கடினமாகக் கண் மையைத் திட்டிய பிறகு புகை பிடிக்கச் செய்ய வேண்டும். மை திட்டிய பிறகும், அரிப்பு, உணர்வின்மை, கண்கள் ஒட்டிக்கொள்ளுதல், இவை உண்டானால் மறுபடியும் கடினமான மையையோ புகைப் பிடித்தலையோ செய்விக்க வேண்டும். மேற்கண்ட அரிப்பு போன்றவை சரியான முறையில் மை திட்டாததன் அறிகுறிகளாகும். அதற்கு மேற்கூறிய சிகிச்சை செய்ய வேண்டும்.

கண்மையை அதிகம் தீட்டுவதனால், கண்களில் கத கதப்பு, குற்றல் வலி, வேதனை, குத்திட்டுப்போதல், உறுத் தல், கண்ணீர்ப்பெருக்கு, கண்கள் திறக்க முடியாமை, இமை உலர்ந்து போதல், தலைவலி, பார்வைக்குறைவு இவை ஏற் படும். இவற்றை நீக்க குளிர்ச்சியான ஆச்யோதனம் (சொட்டு மருந்து) அல்லது எந்தக் கண்மையைத் தீட்டுவதனால் நோய் கள் உண்டாயினவோ அதற்கு எதிரிடையான கண்மையை இட வேண்டும். நன்கு கண்மை தீட்டுதல் போன்ற விரேசன சிகிச்சை செய்யப்பட்டிருந்தால் கண் நோய்கள் நீங்குவதுடன் கண்களை நன்றாகத் திறக்கவும் மூடவும் முடியும். காற்று, வெயில் இவற்றைப் பொறுத்துக்கொள்ளும் தன்மையும் ஏற் படும்.

இதேபோல் [1]ரோபணம் எனும் கண்மை தீட்டும் சிகிச்சையில் அதிகக்குறைவினால் உண்டாகும் நோய்களை ஊகித்து தோஷங்களுக்கு ஏற்றவாறு சிகிச்சை செய்ய வேண் டும். *(15—20)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ஆச்யோதனாஞ்சன விதி' எனும் முப்பத்திரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

---

1. ரோபணம்—கண்ணில் உண்டாகும் இரணங்களை ஆற்றக்கூடிய சிகிச்சை முறை.

முப்பத்து மூன்றாவது அத்தியாயம்

*தர்ப்பண புடபாக விதி

"தர்ப்பண புடபாக விதி" எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. தர்ப்பணம் எனும் சிகிச்சையும் கண் நோய்களும்

எவருடைய கண்கள் வாட்டமுற்றும், உலர்ந்தும், வறண்டும், அசைவற்றும், வக்ரமடைந்தும், உள்ளடங்கியும், கலங்கியும், திறக்க முடியாமலும், இமையின் ரோமங்கள் உதிர்ந்தும், கஷ்டப்பட்டு திறக்கும் நிலையிலும், வேதனையுடன் அல்லது வேதனையில்லாமல் சிவப்பு நிறமாக உண்டாகும் கொடி போன்ற நரம்புகளால் செந்நிறம் கொண்டும், ஸிரோத்பாதம் முற்றிப்போய் கண்களிலிருந்து செந்நிறமான நீர் வடிந்தும், கண்களில் பூவிழுந்தும், கருவிழியில் நோய் ஏற்பட்டும், கண்பார்வை மறைந்தும், பலவகையான கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிந்தும், ஒற்றைத் தலைவலியுடன் கூடி கண்களைப் பிடுங்குவது போன்ற வலி ஏற்பட்டும், [1]அந்யதோவாதம் [2]வாத பர்யாயம் எனும் கண் நோய்ப்பட்டு, கண்கள் உலர்ந்தும், கொஞ்சம் வீக்கம் கொண்டும் இருக்கின்றனவோ அந்தக் கண்களுக்கு தர்ப்பணம் எனும் கண் சிகிச்சை செய்ய வேண்டும்.

நோயாளியின் எந்தக் கண் செந்நிறமடையாமலும்,கண்ணீர் வடியாமலும், புளிச்சையற்றும் வலியற்றும் இருக்கிறதோ

---

* தர்ப்பணம் என்பது ஒருவகை கண் சிகிச்சை கண்களில் உண்டாகும் சில கோளாறுகளைப் போக்கி அவற்றிற்கு வலிமையை அளித்து நிறைவு உண்டாக்கும் முறை தர்ப்பணமாகும். சில மூலிகைகளைப் புடமிட்டுப் பக்குவம் செய்வது புடபாகமாகும். இவ்விரண்டையும் விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. அந்யதோவாதம்—காது, அதன் மூலபாகம், தலை, மோவாய்கட்டை, மற்ற இடங்களிலும், கோளாறடைந்த வாதம் கண்களிலும் புருவங்களிலும் அதிக வேதனை உண்டு பண்ணும் கண் நோய்.
2. வாதபர்யாயம்—வாதம் சீற்றமடைந்து கண்களிலும், புருவங்களிலும், மாற்றி, மாற்றி வலியை உண்டுபண்ணும் கண்நோய்.

அந்தக் கண்ணில் இந்தத் தர்ப்பணம் எனும் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

2. தர்ப்பண சிகிச்சைக்குத் தகாத காலம்

கண் நோயாளிக்கு கண் நோயினால் உண்டாகும் [1]உபத்திரவங்கள் தொடர்ந்து ஏற்படும் நோய்கள் அடங்காத நிலையிலும், அதிகமான குளிர்ச்சி, சூடு, மழை இக்காலங்களிலும் மேகம் மூட்டமாயிருக்கும் நேரத்திலும் மூக்கிலிடும்மருத்துவத்திற்குத் தகாதவர்களுக்கும் இந்த சிகிச்சையைச் செய்யக்கூடாது. இதே முறையை [2]புடபாகத்திலும் பின்பற்ற வேண்டும்.

3. தர்ப்பண சிகிச்சை செய்யும் முறை

காலை அல்லது மாலை வேளையில், காற்று, வெயில், தூசி இல்லாத இடத்தில் நீலம் அல்லது மஞ்சள் நிறமுள்ள மறைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும்.

நோயாளியை உண்ட உணவு சீரணித்தபின், சுகமான படுக்கையில் மேல்நோக்கிப் படுக்கச்செய்து, நன்கு பிசைந்த உளுத்தம் மாவினால் கண்கோளத்திற்கு வெளிப்புறத்தில் இரண்டு அங்குல உயரம் ஏற்படும்படி பூசவேண்டும். அந்தப் பூச்சு, உள்ளே ஊற்றப்படும் மருந்து வெளியில் வராமலிருக்கும்படி அமைய வேண்டும். நோய்க்கு ஏற்றவாறு மருந்துப் பொருட்களால் பக்குவம் செய்த பால், நெய், நெய்க்கசண்டு இவற்றில் ஒன்றைச் சூடான நீரில் வைத்து உருகச் செய்து மூடின கண்களில் கண் இமைகளின் ரோமங்களும், புருவங்களில் உள்ள ரோமங்களும் மூழ்கும்படி ஊற்ற வேண்டும். பிறகு மெள்ள மெள்ளக் கண்களைத் திறக்கச் செய்து [3]மாத்திரையை (ஒரு வகை கால அளவு) எண்ண செய்ய வேண்டும்.

கண் இமைகளின் உட்புறத்திலுள்ள மாமிசப்பகுதியில் உண்டாகும் நோய்களில் நூறு மாத்திரை அளவும், விழிகள் கூடுமிடத்தில் நோய்கள் கண்டால் முந்நூறு மாத்திரை அளவும், வெண் விழிகளில் தோன்றும் நோய்களுக்கு ஐந்நூறு மாத்திரை அளவும், கருவிழியில் ஏற்படும் நோய்களுக்கு எழு

---

1. உபத்திரவம்—ஒரு நோயைக் காரணமாகக்கொண்டு தோன்றும் மற்றொரு நோய்.
2. புடபாகம்—சில மூலிகைகளை நெருப்பில் வைத்துப் புடமிட்டுப் பக்குவம் செய்வது.
3. மாத்திரை—ஒருவகை கால அளவு.

நூறு மாத்திரை அளவும், விழியில் உண்டாகும் பிணிகளுக்கு எண்ணூறு மாத்திரை அளவும், [1]அதிமந்தம் எனும் கண் நோயில் ஆயிரம் மாத்திரை அளவும், வாதத்தினால் தோன்றும் பிணியில் ஆயிரம் மாத்திரை அளவும், பித்தத்தினால் ஏற்படும் நோயில் அறுநூறு மாத்திரை அளவும், கபத்தினால் தோன்றும் நோய்களுக்கும் உடல்நிலை நன்கு அமைந்தவனுக்கும் ஐந்நூறு மாத்திரை அளவும் கண்ணில் மருந்தை வைத்துக் கணக்கிடவேண்டும். அதாவது மருந்து நிற்கும்படி வைத்திருக்க வேண்டும். (4)

பிறகு கண்களில் ஊற்றிய மருந்தை, கடைக்கண் ஓரத்தில் பூசப்பட்டிருக்கும் உளுந்துப்பூச்சில் குச்சியைக் கொண்டு சிறு துவாரம் செய்து அதன் வழியாகப் பாத்திரத்தில் வடியச் செய்ய வேண்டும். பிறகு கண்களின் மேல்பகுதியில் பூசியுள்ள உளுந்துமாவை நீக்கிவிட்டு யவதானியத்தின் கல்கத்தினால் கண் கோளங்களைத் துடைத்து, எண்ணெய்ப் பசையினால் ஏற்பட்ட கபத்தைத் தணிப்பதற்குத் தோஷங்களுக்குத் தகுந்தபடி புகைபிடிக்கச் செய்யவேண்டும்.

பிறகு மிதமான சூடுள்ள நீரினால் நோயாளியின் முகத்தைக் கழுவச்செய்து, பிணிக்கு ஏற்றவாறு உணவு உட்கொள்ளச் செய்ய வேண்டும். வெயில், வானம், ஒளிமிக்க பொருள் இவைகளை இச்சிகிச்சை பெற்றவன் பார்க்கக்கூடாது. (5)

இம்முறைப்படி வாதத்தினால் கண் நோய் கண்டவனுக்கு ஒவ்வொரு நாளும், ரத்த பித்தத்தினால் கண்நோய் ஏற்பட்டவனுக்கு ஒருநாள்விட்டு ஒருநாளும், கபத்தினால் கண்நோய் உள்ளவனுக்கும் உடல்நிலை சரியாக உள்ளவனுக்கும் இரண்டு நாட்கள் இடைவெளி விட்டும் இச்சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

இரண்டு தோஷங்களின் சேர்க்கையிலும், மூன்று தோஷங்கள் கூடியிருக்கையிலும் அதிகப்பட்ட தோஷத்திற்கு ஏற்றவாறு தர்ப்பண சிகிச்சை செய்ய வேண்டும்.

இவ்வாறு ஒருநாள், மூன்று நாட்கள், ஐந்து நாட்கள் அல்லது நிறைவு ஏற்படும்வரை அதாவது பிணி நீங்கும்வரை இச்சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

---

1. அதிமந்தம்—ஒற்றைத் தலைவலியுடன் கண்களைப் பிடுங்கி எறிவது போன்ற வலியை உண்டாக்கும் கண்நோய்.

நிறைவு, நிறைவின்மை, மிக்க நிறைவு என்ற இவற்றில் நிறைவு என்பது ஆரோக்கிய நிலையையும், நிறைவின்மை என்பது வாதத்தினால் ஏற்பட்ட நோயையும், மிக்கநிறைவு என்பது கபத்தினால் ஏற்பட்ட நோயையும் குறிப்பதாகும். (6)

4. புடபாகம் என்பதன் விளக்கம்

தர்ப்பண சிகிச்சை நன்கு நிறைவேறியபின், எந்தக் கண் நோய்களுக்குத் தர்ப்பண சிகிச்சை செய்யப்பட்டதோ அதே வித நோய்களுக்குப் புடபாகம் எனும் சிகிச்சை செய்ய வேண்டும். ஸ்நேஹனம், லேகனம், ப்ரஸாதனம் என புடபாகம் மூவகைப்படும்.

(அ) [1]ஸ்நேஹன புடபாகம் என்பது நீர்ப்பாங்கான இடங்கள், மற்ற சாதாரண இடங்கள் இவற்றில் வாழும் உயிரினங்களின் புலால், கொழுப்பு, எலும்புக்குள் உள்ள சோறு, நிணநீர் இவற்றையும் இனிப்புச் சுவையுள்ள பொருட்களையும் பால்விட்டு அரைத்து வறண்ட கண்களில் பிழிவதாகும்.

(ஆ) [2]லேகன புடபாகம் – காற்றடர்ந்த இடங்களில் வாழும் பிராணிகள் புள்ளினங்கள் இவற்றினுடைய புலால், கல்லீரல் இவற்றையும் அல்லது முத்து, பவழம், சங்கு, செம்பு, இரும்பு, கடல்நுரை, அன்னபேதி, ஸ்ரோதோஞ்சனம், இந்துப்பு போன்ற கரைக்கும் பொருட்களையும், தயிர், மோர்த்தெளிவு, தேன் இவற்றை விட்டு அரைத்து எண்ணெய்ப் பசையுள்ள கண்களில் இடுவது லேகன புடபாகம் எனப்படும்.

(இ) [3]ப்ரஸாதன புடபாகம் – காற்றடர்ந்த இடங்களில் வாழும் பிராணிகள், பறவைகள் இவற்றின் கல்லீரல், இதயம், எலும்புக்குள் இருக்கும் சோறு, நிணநீர், இனிப்புச் சுவையுள்ள பொருட்கள் இவற்றைத் தாய்ப்பால், பசுவின்பால் இவற்றைவிட்டு நன்றாக மையாக அரைத்துக் கண்களில் இடுவது பிரஸாதனபுடபாகமாகும்.

---

1. ஸ்நேஹன புடபாகம்—எண்ணெய்ப் பசையுண்டாக்கும் புடபாகம்.
2. லேகன புடபாகம்—கண்களில் அதிக மாமிச வளர்ச்சியைக் கரைக்கக்கூடிய புடபாகம்.
3. ப்ரஸாதன புடபாகம்—கண்களுக்குத் தெளிவை உண்டாக்கும் புடபாகம்.

இந்த புடபாகம், வாதம், பித்தம், இரத்தம் இவற்றினால் தோன்றும் கண் நோய்கள், பார்வைக் குறைவு, கண்களில் ஏற்படும் புண் இவற்றை நீக்கும், கபத்தை வளர்க்கும். (7)

5. புடபாகம் செய்யும் முறை

சுக்கு, தனியா, ஓமம், பெருங்காயம், நெய் இவற்றுடன் கூட்டி இடித்த இறைச்சியை உருண்டையாகச் செய்துகொண்டு ஒரு பலம் எடுத்து அதனுடன் அதே அளவுள்ள மருந்துகளைச் சேர்த்து அரைத்து, உருண்டையாகச் செய்து, ஆமணக்கு, ஆல், நீலோத்பலம் இவற்றுள் ஏதாவது ஒன்றின் இலைகளால் சுற்றி தர்ப்பை, மூஞ்சுப்புல் இவற்றில் ஏதாவது ஒன்றினால் கட்ட வேண்டும்.

ஸ்நேகன புடபாகத்தில், ஆமணக்கு இலையையும், லேகன புடபாகத்தில் ஆலமரத்தின் இலையையும் ப்ரஸாதன புட பாகத்திற்கு நீலோத்பலத்தின் இலையையும் பயன்படுத்த வேண்டும்.

இந்த உருண்டையின்மேல் இரண்டு அங்குலம் உயரம் களிமண்ணால் பூசி, வெண்கருங்காலி, தனுகு மரம், இலுப்பை மரம், ஆலமரம், குமிழ், முருக்கமரம், மருதமரம், புங்குமரம், பாதிரி இவற்றின் ஏதாவது ஒன்றின் விறகுகளாலாவது பசு, எருமை இவற்றின் சாணத்தினால் செய்த விராட்டியினா லாவது அந்த உருண்டையை நடுவில் வைத்து எரிக்க வேண் டும்.

அந்த உருண்டை நன்றாகச் செந்நிறம் உண்டாகும் வரை எரிந்தபின் அதை வெளிப்படுத்தி உருண்டையில் பூசப்பட் டுள்ள மண்ணை நீக்கிக் கட்டியிருக்கும் தர்ப்பை அல்லது மூஞ்சப்புல்லை அவிழ்த்து, இலைகளை நீக்கி, அதைச் சுத்த மான துணியில் இட்டுப் பிழியவேண்டும். பிழிந்த ரசத்தினால் மாலை வேளையில், நோயாளியின் கண்களில் தர்ப்பணச் சிகிச்சையைப் போல் நிரப்பவேண்டும்.

ஸ்நேஹன புடபாகமாயிருந்தால் இருநூறு மாத்திரை அளவு காலமும், லேகன புடபாகமாயிருந்தால், நூறுமாத்திரை அளவு காலமும், ப்ரஸாதன புடபாகத்தில் முந்நூறு மாத்திரை அளவு காலமும் நிரப்பி மருந்தை வைத்திருக்க வேண்டும். (8)

ப்ரஸாதனபுடபாகம் நீங்கலாக மற்ற ஸ்நேகனம், லேக னம் என்ற புடபாகங்களில் தர்ப்பண சிகிச்சைக்குச் செய்தது

போன்ற புகை பிடித்தலைச் செய்ய வேண்டும். ஸ்நேகனம், லேகனம் எனும் புடபாகம் நோயாளி பொறுத்துக் கொள்ளும் அளவு சூடுள்ளதாக இருக்க வேண்டும். பிரஸாதன புடபாகம் குளிர்ச்சியடைந்தபின் செய்ய வேண்டும்.

இந்த சிகிச்சையை ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள்வரை செய்யலாம்.

புடபாகம், தர்ப்பணம் எனும் சிகிச்சை செய்த நாட்களின் இருமடங்கு நாட்கள் வரை பத்தியத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

புடபாகம் முடிந்தபின், ஜாதி மலர்கள், மல்லிகை மலர்கள் இவற்றைக் கண்களில் இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும்.

[1]பக்வாதிஸாரம் எனும் பேதி நோய்க்குக் கூறப்பட்ட புடபாகத்திலும் இம்முறையையே பின்பற்ற வேண்டும். *(9)*

ஆச்யோதனம் என்று கண்களுக்கு மருந்து ஊற்றும் மருத்துவத்திலும், கண்களுக்கு மை தீட்டும் சிகிச்சையிலும், தலையில் எண்ணெய்த் தேய்க்கும் சிகிச்சையிலும், புடபாக சிகிச்சையிலும் நம்மையறியாமல் வேறு நோய்கள் ஏற்பட்டால் அதற்கேற்றவாறு சிகிச்சை செய்ய வேண்டும். *(10)*

அஷ்டாங்க சங்கிரகம், ஸூத்ரஸ்தானத்தில்
'தர்ப்பண புடபாக விதி' எனும் முப்பத்து மூன்றாவது
அத்தியாயம் முற்றிற்று.

---

1. பக்வாதிஸாரம்—உணவு சீரணத்தபின் அதிகமாக ஏற்படும் கழிச்சல்.

முப்பத்து நான்காவது அத்தியாயம்

*யந்த்ர சஸ்த்ர விதி

'யந்த்ர சஸ்திர விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

1. சல்யம்—யந்த்ரம் இவற்றின் விளக்கம்

மனதையும் உடலையும் துன்புறுத்தக் கூடியவற்றைச் சல்யங்கள் என்கிறோம். தனித்தனி இடங்களில் பொருந்தியிருக்கிற இந்தப் பலவிதமான சல்யங்களை வெளிப்படுத்துவதற்கான கருவிகளை யந்த்ரம் என்று கூறுகிறோம்.

மூலநோய், பவுத்திரம் எனும்நோய் இவற்றில், அறுவை சிகிச்சை, [1]க்ஷாரசிகிச்சை, நெருப்பினால் சுடும் சிகிச்சை இவற்றைச் செய்வதற்கும் மற்ற உறுப்புக்களைக் காக்கவும் யந்த்ரம் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு வஸ்தி போன்ற முறைகளைப் பயன்படுத்துவதில் உபயோகப்படுவதும், கொம்பு, சுரக்குடுவை, கடி என்ற கருவி, நாவற்கொட்டை போன்ற முகத்தையுடைய குச்சி இவைகளும் யந்த்ரங்கள் எனப்படும்.

இவற்றைத் தவிர பல உருவங்களைக் கொண்டதும், பலவித செயல்களைச் செய்யக்கூடியதும், ஆரோக்கிய நிலையில் உள்ளவன், நோயாளி இவர்களுக்கு உபயோகப்படுபவைகளும் யந்த்ரங்கள் எனப் பெயர் பெறுகின்றன. ஆகையினால் செயலுக்கு ஏற்றவகையில் யந்த்ரங்கள் பலவிதமாக அமைந்திருப்பதால் அவற்றைக் கணக்கிட்டுக் கூற முடியாது.

---

* யந்த்ரசஸ்த்ர விதி—மூலிகைகளைப் பயன்படுத்தவும், அறுவைச்சிகிச்சையில் உதவியாகப் பயன்படும் கருவி 'யந்த்ரம்' எனப்படும். அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கருவி சஸ்திரம். இவ்விரண்டையும் இவ்வத்தியாயத்தில் விளக்குவதால் இப்பெயர் பெறுகிறது.

1. க்ஷார சிகிச்சை—கார்ப்பும் உப்பும் மிகுதியாக உள்ளதும் உடலைக்கெல்லும் தன்மை வாய்ந்ததுமான பொருள்கள் க்ஷாரம் எனப்படும். இவற்றைக் கொண்டு செய்யப்படும் சிகிச்சை க்ஷார சிகிச்சை எனப்படும்.

சிலர் யந்த்ரங்களை நூற்று ஒன்று எனக் கணக்கிடு கிறார்கள்.

2. யந்திரங்களின் வகைகள்

சுருங்கக்கூறின் ஸ்வஸ்திக யந்திரம், ஸந்தம்ச யந்திரம், தாள யந்திரம், நாடி யந்திரம், சலாகாயந்திரம், உபயந்திரம் என இவைகளை ஆறு வகையாகப் பிரிக்கின்றனர். (3—4)

3. ஸ்வஸ்திக யந்திரங்களின் அமைப்பு

இந்த யந்திரங்கள் காக்கை, சிங்கம், பருந்து, கரடி போன்ற பிராணிகளின் முக அமைப்புக் கொண்டவை. ஒரே பெயரால் அழைக்கப்படுபவை. அநேகமாக இரும்பினால் செய்யப்பட்டு பதினெட்டு அங்குலம் நீளமுடையவை. அவற்றின் நுனிப்பகுதி பயறு போல இருக்கும். கழுத்தில் சிறு கடலையைப்போல் வழுமூண்ட முனைகளைப் பெற்ற கீலங்கள் இணைக்கப்பட்டும் அடிப்பகுதி ஈட்டியைப்போன்று வளைந்த பிடியை உடையதாகவும் இருக்கும்.

இவை எலும்புகளில் நுழைந்திருக்கும் [1]சல்யங்களை வெளியேற்றப் பயன்படுகின்றன.

இவற்றில் சிங்கம், புலி, பாம்பு, முதலை போன்ற முக அமைப்புக் கொண்ட யந்திரங்கள் வெளிப்படையாகத் தெரியும் முனைகளையுடைய சல்யங்களை வெளியேற்ற பயன்படுத்தப்படுகின்றன.

வெளிப்படையாகத் தெரியாத முனைகளையுடைய சல்யங்களை வெளிப்படுத்த காயங்களுக்கு ஏற்றவாறு யந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். அந்த யந்திரங்கள் கொக்கு, காகம், கரடி போன்ற முக அமைப்புடையவை. (5)

4. ஸம்தம்ச யந்திரம்

இது கழுத்துப் பகுதியில் உள்ள முளையால் இணைக்கப்பட்டது, இணைக்கப்படாதது என இருவகைப்படும். இவை பதினாறு அங்குலம் நீளமுடையவை. தோல், மாமிசம், ரத்தக் குழாய்கள், நரம்புகள் இவற்றில் புதைந்திருக்கிற சல்யங்களை வெளிக்கொணர இவை பயன்படுபவை.

---

1. சல்யங்கள்—உடலிற்குள் புகுந்து துன்பத்தைத் தரும் முள், ஆணி, கல், மண் முதலிய வெளிப் பொருட்கள்.

இவற்றைத் தவிர ஒரு வகையான [1]ஸந்தம்சம் உண்டு. அது ஆறுஅங்குல நீளமும், அரை அங்குல சுற்றளவும் கொண்டது. இரு பக்கங்களிலும் வளைந்த இரு பிடிகளை உடையது. கட்டைவிரல், ஆள்காட்டி விரல் இவற்றின் சேர்க்கையைப் போன்ற உருவம் பெற்றது.

இந்த ஆறு அங்குலமுள்ள ஸந்தம்சம் என்ற யந்திரம் நுட்பமான சல்யங்களையும், இமைகளின் ரோமங்களையும் மாமிசப்பையில் புதைந்திருப்பனவற்றையும் வெளிப்படுத்தப் பயன் படுகிறது. (6)

5. முசுண்டி யந்திரம்

இந்த யந்திரத்தின் முகத்தில் பிடிக்குமிடத்தில் சிறிய பற்கள் அமைக்கப் பட்டிருக்கும். வளையாத நேரான இரண்டு பிடிகள் இதற்கு உண்டு. அடிப்புறத்துப் பிடியில் ஒரு வளையம் பொருத்தப் பட்டிருக்கும். அந்த வளையம் முன்னும் பின்னுமாகத் தள்ளக் கூடியது. முன்பக்கம் வளையத்தைத் தள்ளத்தள்ள அதன் வாய் குறுகி சிறிதாகிக் கொண்டேயிருக்கும். பாதி ஒடிந்த மூல நோயின் முளையை எடுக்கவும், ஆழமான காயங்களில் உள்ள கெட்ட மாமிசங்களை வெளிப்படுத்தவும் இது உதவுகிறது. (7)

6. தாள யந்திரங்கள்

இந்த யந்திரங்கள் இருவகைப்படும். பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ளதும், மீன் தாடையில் உள்ள செதில்கள் போன்ற இரு தாள்களை உடையதுமானது ஒருவகை. மற்றொரு வகை ஒரே தாளையுடையது. இவ்விரண்டு யந்திரங்களும் காதுகளுக்குள்ளிருக்கும் சல்யங்களை வெளிப்படுத்தப் பயன்படுபவை. (8)

7. நாடீ யந்திரங்கள்

இந்த யந்திரங்கள் பலவகைப்படும். அவற்றின் உள்ளே துவாரங்கள் இருக்கும். அவற்றில் சில பல முகங்கள் உள்ளவை. சில ஒரே முகம் உடையவை. இவை பல வகைகளில் பயன்படுகின்றன.

இவை உடலிலுள்ள துவாரங்களில் புதைந்திருக்கும் சல்யங்களைப் பார்ப்பதற்கும், எடுப்பதற்கும், சிகிச்சையை

1. ஸந்தம்சம்—நன்கு பற்றிக் கொள்ளும் தன்மையுடையது.

எளிய முறையில் செய்வதற்கும், உறிஞ்சுவதற்கும் பயன்படுகின்றன. இவற்றின் நீளமும், பருமனும், உட்பக்கத்தின் அகலமும், யந்திரத் துவாரங்களின் அமைப்புக்கு ஏற்றபடி அமைக்க வேண்டும். (9)

இது பத்து அங்குல நீளமும் ஐந்து அங்குல சுற்றளவும் மூன்று முகத்துவாரங்களும் கொண்டது. இரண்டு பிடிகளுடன் கூடிய கொக்கி போன்ற வாரங்கத்தையுடைய குழல் போன்றதுமான நாடீயந்திரம், தொண்டைக்குள் உள்ள சல்யத்தைப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நாடீ யந்திரம் தொண்டையில் உள்ள துவாரத்தின் அளவுக்குச் சமமாக அமைக்கப்பட வேண்டும்.

அதேபோல் நான்கு பிடிகளையும் ஐந்து முகத்துவாரங்களையும் கொண்ட மற்றொரு நாடீ யந்திரம் தொண்டைக்குள் உள்ள சல்யத்தைப் பார்ப்பதற்குப் பயன்படுகிறது.

தொண்டைக்குள் உள்ள சல்யத்தை வெளிப்படுத்தப் பயன்படும் நாடீ யந்திரம் 12 அங்குல நீளமும், மூன்று முகத்துவாரங்கள் கொண்டதும், தாமரைத் தண்டில் உள்ள முள் போன்ற உருவமுடையதும் ஆக இருக்கும். (10)

8. [1]அர்சோ யந்திரங்கள்

இந்த யந்திரங்கள் மூவகைப்படும். இவை இரும்பு, செம்பு, தந்தம், கொம்பு அல்லது மரத்தினால் செய்யப்பட்டவை. இந்த யந்திரத்தின் அமைப்பு பசுவின் காம்பைப் போன்றது. நான்கு அங்குல நீளமும், கை அளவு சுற்றளவுமுள்ளது ஒருவகை. ஐந்து அங்குல சுற்றளவுள்ள இந்த யந்திரம் ஆண்களுக்குப் பயன்படுத்தக்கூடியது. ஆறு அங்குலமுள்ள யந்திரம் பெண்களுக்குப் பயன்படுத்தக்கூடியது.

மற்றொரு வகையான அர்சோ யந்திரம் இரு துவாரங்களைக் கொண்டது. ஒரு துவாரம் பார்ப்பதற்கும், மற்றொன்று சிகிச்சை செய்வதற்கும் பயன்படும்.

இந்த யந்திரம் நன்றாகப் பார்ப்பதற்கும் அறுவை, க்ஷாரம், நெருப்பினால் சுடுவது போன்ற செயல்களைச் சரி செய்வதற்கும் பயன்படுகிறது.

---

1. அர்சோ யந்திரம்—மூல நோயிலுள்ள முளைகளை சிகிச்சை செய்வதற்குப் பயன்படும் கருவி.

இந்த யந்திரத்தில் உள்ள துவாரம் மூன்று அங்குல நீளமும் கட்டை விரல் நடுப்பகுதியளவு விரிவும் உள்ளதாக இருக்க வேண்டும்.

இது ஓரங்குல நீளமுள்ளதாயிருந்தால் அரை அங்குலம் மேல் பகுதியிலும் அரை அங்குலம் கீழ்ப்பகுதியிலும் விட்டு நடுப்பகுதியில் ஒரு வட்டவடிவமான வரம்பு கட்ட வேண்டும். மூன்றாவது வகை அர்சோயந்திரம் இரண்டாவது யந்திரத்தைப் போன்றதே. ஆனால் பக்கங்களில் துவாரமற்றது. இந்த யந்திரம் மூலநோயின் முளையை நசுக்குவதற்காகப் பயன்படுகிறது.

பவுத்திரம் எனும் நோயில் இந்த யந்திரத்திலுள்ள வரம்பை எடுத்துவிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

இதேபோல் மூக்கில் தோன்றும் முளையையும் அர்ப்புதம் எனும் நோயையும் நீக்குவதற்கு மூக்கில் நுழையக்கூடிய சிறிய குழல் போன்றதும் இரண்டு அங்குலம் சுற்றளவு கொண்டதும் ஒரு துவாரம் உள்ள ஆள்காட்டி விரலின் நீளம் கொண்டதுமான ஒரு யந்திரம் தயார் செய்ய வேண்டும். (11)

9. [1]அங்குலித்ராணகம் எனும் யந்திரம் *(விரலைக் காக்க கூடிய யந்திரம்)*

இந்த யந்திரம் கட்டை விரல் நுழையக் கூடியதாயும், சிறிது பருமனாகவும், குழல் வடிவுள்ளதாகவும், வரம்புள்ளதாகவும், மேலும் கீழும் இரு துவாரங்கள் உடையதாகவும் பசுவின் காம்பு போன்றும் நான்கு அங்குலம் நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டும். இது மரம், கொம்பு அல்லது தந்தத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதை உறுதியான நூலினால் மணிக்கட்டில் கட்டிக் கொண்டு நோயாளியின் மூடிய வாயைத் திறக்க வேண்டும். (12)

10. [2]யோனிவ்ரணதர்சன யந்திரம் —*(பெண்குறியில் புதைந்திருக்கும் சல்யங்களைப் பார்க்கப் பயன்படும் கருவி)*

பெண்குறியில் தோன்றும் புண்ணைப் பார்ப்பதற்குப் பதினாறு அங்குலம் நீளம் உள்ளதான ஒரு யந்திரம் அமைக்க-

---

1. அங்குலித்ராணகம்—இது நோயாளியின் மூடிய வாயைத் திறக்கப் பயன்படுகிறது. அப்படி திறக்கும்பொழுது நோயாளியின் பற்களினால் விரல்கள் கடிபடாமல் இருப்பதற்காக உபயோகப் படுத்தப்படுகிறது. அங்குலி—விரல், த்ராணகம்—காப்பது.
2. யோனிவ்ரணதர்சன யந்திரம்—பெண் குறியில் புதைந்திருக்கும் சல்யங்களைப் பார்க்கப் பயன்படும்கருவி.

வேண்டும். அதன் நடுவில் ஒரு துவாரம் இருக்க வேண்டும். குமிழ் போன்ற ஆணிகளால் இணைக்கப்பட்ட நான்கு சலாகைகள் சுழலுவதற்கு ஏற்றபடி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு சலாகையின் முனைகள் தாமரை மொட்டுப் போல வழவழப்பாக இருக்க வேண்டும். அடியிலுள்ள சலாகையின் தாள்களைப் பிடித்து அழுத்தினால் மேல்பகுதியில் உள்ள தாள்கள் விரிவு அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.

பெண்குறியில் உண்டாகும் குழிப்புண்ணைக் கழுவுவதற்கும், அதில் எண்ணெய் போன்றவற்றை ஊற்றிப் பசையுண்டாக்கவும் பயன்படும். *வஸ்தி என்னும் யந்திரம் போன்ற அமைப்புடையதாயும், ஆறு அங்குலம் நீளமுள்ளதாயும், அதன் முகத்தில் வரம்பு அற்றதாயும், அடிப்பகுதியில் உள்ள துவாரம் கட்டை விரல் நுழையக்கூடியதாகவும், முனையில் உள்ள துவாரம் கடலை நுழைய கூடியதாகவும் இந்த யந்திரம் அமைய வேண்டும்.

11. நீர்ப்பீலிகை எனும் நோயில் நீரை வடிப்பதற்கு உதவக்கூடிய யந்திரம்.

இந்த யந்திரம் இரு பக்கங்களிலும் துவாரங்கள் உடையதாயிருக்க வேண்டும். இதற்கு மாற்றாக மயில் இறகினால் தயார் செய்த குழலைப் பயன்படுத்தலாம்.

[1]ஸ்நேக வஸ்தி [2]உத்தரவஸ்தி [3]பிரதமனம் எனும் நஸ்யம், [4]தூமபானம், சிறுநீர் அடைப்பு, [5]நிருத்தமணி இந்த நோய்களில் அவ்வவற்றிற்குத் தக்கவாறு யந்திரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். *(13)*

12. [6]சிருங்க யந்திரம் *(கொம்பினாலான பீச்சாங்குழல்)*

இந்த சிறிய யந்திரம் எட்டு அங்குல நீளமும், நடுத்தரமானது பத்து அங்குல நீளமும், பெரியது பன்னிரண்டு அங்

---

*வஸ்தி—மருந்துப் பொருள்களால் தயார் செய்த திரவங்களை பீச்சாங்குழல் வழியாக ஆஸனத் துவாரத்திற்குள் செலுத்துவது.

1. ஸ்நேக வஸ்தி—எண்ணெய்ப் பசையுண்டாக்குவது.
2. உத்திர வஸ்தி—பெண்குறியில் செலுத்துவது.
3. ப்ரதமநம்—மூக்கிலிடும் ஒருவகை மருந்து.
4. தூமபாநம்—புகைபிடிப்பது.
5. நிருத்தமணி—ஆண் குறியின் மணி முனையை மூடிவிடும் நோய்.
6. சிருங்க யந்திரம்—கொம்பினாலான யந்திரம்.

குல நீளமும் கொண்டிருக்க வேண்டும். மேலே மூன்று அங்குலம் அளவான முகம் உடையதாம். முனையில் வெண்கடுகு நுழையும்படியான துவாரமுடையதாய் இருக்கும். மெல்லிய தோலினால் கட்டப்பட்டிருக்கும். இதன் முனை முலைக்காம்புபோல் அமைந்திருக்க வேண்டும். இந்த யந்திரம், வாதம், நஞ்சு, இரத்தம், நீர் இவற்றால் கெட்டுப்போன தாய்ப்பாலை உறிஞ்சும் வேலையில் பயன்படுகிறது.

13. [1]அலாபூயந்திரம்.

கபத்தினால் கெட்டுப் போன இரத்தத்தை உறிஞ்ச அலாபூ யந்திரம் பயன்படுகிறது. இது பன்னிரண்டு அங்குலம் நீளமும், பதினெட்டு அங்குலம் அகலமும் கொண்டதாயிருக்கும். இதன் முகம், நான்கு அல்லது மூன்று அங்குலம் சுற்றளவு உள்ளதாய் இருக்க வேண்டும். இதன் உட்புறத்தில் தர்ப்பை, காய்ந்த விறகு, துணி இவற்றைச் சுருட்டி உள்ளே நுழைத்து தீயிட்டு ஒளி எழுப்பி அதன் மூலமாக அதிகப்படியான கெட்ட இரத்தத்தையும் கபத்தையும் வெளிப்படுத்தலாம்.

14. [2]கடீயந்திரம்

இந்த யந்திரம் அலாபூ யந்திரத்தைப் போலவே சமமான அளவுடையதாயும் செயலை உடையதாயுமிருக்கும். இது குன்மத்தை மேலுக்கு இழுத்து கரைக்கப் பயன்படுகிறது. (14)

15. சலாகாயந்திரங்கள்

இவை பலவகை உருவங்களைக் கொண்டவை. பலவகைச் செயல்களிலும் பயன்படக் கூடியவை. செயல்களுக்கு ஏற்றவாறு நீளமும் அகலமும் அமைந்திருக்க வேண்டும். நாற்புறமும் தேடும் செயலில் பயன்படுத்தக்கூடிய இந்த இரண்டு யந்திரங்களும் மண்ணுளிப்பாம்பின் முகம் போன்ற முக அமைப்புப் பெற்றிருக்கும். இதற்கு ஏஷணீ என்றும் பெயர்.

காது, மூக்கு, போன்ற துவாரங்களில் உள்ள சல்யங்களை வெளிப்படுத்த உதவும் சலாகா யந்திரங்கள் இரண்டு வகை. ஒன்று எட்டு அங்குலம் உடையது. மற்றொன்று

---

1. அலாபூ யந்திரம்—சுரக்குடுவை போன்ற யந்திரம்.
2. கடீ யந்திரம்—சிறு குடுவை போன்ற பாத்திர உருவத்தில் உள்ள யந்திரம்.

ஒன்பது அங்குலமுடையது. இவற்றின் முனை கடலைப்பருப்பு போல் அமைந்திருக்கும்.

[1]சங்கு யந்திரம் ஆறு வகைப்படும். அவற்றில் இரண்டு யந்திரங்கள் புண்களைச் சுரண்டும் செயலில் பயன்படுத்தக் கூடியவை. முறையே பன்னிரண்டு பதினாறு அங்குல நீளம் உடையவை.

பாம்பின் படம் போன்ற உருவமைப்புள்ள இரண்டு யந்திரங்களுள் ஒன்று பன்னிரண்டு அங்குல நீளமுடையது. மற்றொன்று பதினாறு அங்குல நீளமுடையது.

அம்பு போன்ற முகமுடைய இரண்டில் முறையே பத்து அங்குலம், பன்னிரண்டு அங்குலம் உள்ள யந்திரங்கள் சல்யங்களை அசைப்பதற்கு பயன்படுபவை.

உடலில் புகுந்துள்ள முள், ஆணி, கல், மண் போன்ற வெளிப்பொருட்களை வெளியே இழுப்பதற்குப் பயன்படுபவை இரண்டு யந்திரங்கள். அவை மீன் பிடிக்க உதவும் தூண்டில் போல் முக அமைப்புக் கொண்டவை.

கருக்குழியில் இறந்துபோன குழந்தையை வெளி எடுக்க உபயோகப்படும் யந்திரங்கள், முனையில் சங்கம் போன்ற அமைப்பும் பதினெட்டு அங்குல நீளமும் உடையவை.

சிறுநீர்ப் பையில் சேர்ந்திருக்கிற மிகச் சிறிய கற்களை வெளி எடுக்கப் பயன்படும் யந்திரங்கள், பாம்புப் படத்தைப் போல் முனையில் கொஞ்சம் வளைந்திருக்கும்.

கெட்டுப்போன பற்களைப் பிடுங்கப் பயன்படும் யந்திரம் அம்பு போன்ற முகம் உடையது. நான்கு அங்குல நீளம் உடையது. பருமனாகவும் உருளையாகவும் உள்ள முகம் கொண்டது. (15)

நுனிப்பகுதியில் பஞ்சினால் சுற்றப்பட்ட ஆறு குச்சிகள் (சலாகைகள்) தயார் செய்து கொள்ள வேண்டும். இவை பல விதமான புண்களில் ஊன்தண்ணீரைத் துடைப்பதற்கும், கார சிகிச்சை செய்யவும் பயன்படும்.

அவற்றில் இரண்டு ஆறு, ஏழு அங்குலமுள்ளவை மூக்கின் தொளையிலும் அருகிலும் உள்ள புண்களைச் சுத்தம் செய்யப்பயன்படக்கூடியவை.

---

1. சங்கு யந்திரம்—கொக்கிப் போன்ற முனை கூர்மையற்ற யந்திரம்.

ஆசனத்துவாரத்தில் உள்ள புண்களைத் துடைப்பதற்கு பத்து அங்குலம், பன்னிரண்டு அங்குலமுள்ள குச்சிகள் பயன் படுகின்றன.

காதுகளில் உள்ள புண்களைச் சுத்தப்படுத்த வேள்வியில் நெய் ஊற்றுவதற்குப் பயன்படும் கருவி போன்ற முகம் உடையதும், அரச இலையின் நுனி போன்ற அமைப்பு உடையதுமான இரண்டு குச்சிகள் பயன்படுகின்றன. அதேபோல் [1]க்ஷார சிகிச்சை, நெருப்பினால் சுடும் சிகிச்சை இவைகளுக்கு நாவற் கொட்டை போன்ற அமைப்புடைய பன்னிரண்டு, பத்து, எட்டு அங்குலமுடைய குச்சிகள் தயார் செய்யப்படவேண்டும். அவற்றின் முனைகள் முறையே இரண்டு அங்குலம், ஓரங்குலம், அரை அங்குலம் ஆழம் உள்ளதாக அமைந்திருக்க வேண்டும். (16)

16. பலவகை சலாகைகள்

நடுப்பகுதி பருத்தோ, மெலிந்தோ, நீண்டோ, சிறியதாகவோ பல குச்சிகள் (சலாகைகள்) உண்டு. குடல் இறக்கமெனும் நோயில் பயன்படும் குச்சி, நடுப்பகுதியிலிருந்து முனைவரை திரண்டும் உருண்டும் இருக்க வேண்டும். முனைப்பகுதி பிறைச்சந்திரன் போன்ற அமைப்புப் பெற்று இருக்க வேண்டும்.

மூக்கில் உண்டாகும் முளை நோயிலும் புரைகுழல் நோயிலும் சுடுவதற்காக இலந்தை விதைப் பருப்புப் போன்ற முக அமைப்பு உள்ளதாக குச்சிகள் இருக்க வேண்டும்.

கார மருந்துகளையும், நஞ்சு கலந்த மருந்துகளையும் இடுவதற்குப் பயன்படும் [2]தர்வி போன்ற அமைப்புள்ள மூன்று குச்சிகள் வேண்டும்.

அவை சுண்டுவிரல், மோதிர விரல், நடுவிரல் நகங்களுக்கு ஈடான பள்ளங்களை நுனியில் கொண்டிருக்க வேண்டும்.

1. க்ஷார சிகிச்சை—கார்ப்பும், உப்பும் மிகுதியாக உள்ளதும் உடலைக் கெல்லும் சக்தியுடையதுமான திரவியம் க்ஷாரம். அந்தத் திரவியத்தினால் செய்யும் சிகிச்சை க்ஷார சிகிச்சை.

2. தர்வி—வேள்வியில் நெருப்பில் நெய் ஊற்றுவதற்குப் பயன்படும் சிறு அகப்பை போன்ற கருவி.

பெண்குறியில் இடும் வஸ்திக்கும் மை தீட்டுவதற்கும் பயன்படும் குச்சிகள் ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கின்றன. (17)

17. துணை யந்திரங்கள்

காந்தக்கல், சயிறு, தோல், நரம்பு, துணி, கல், இரும் புலக்கை, உள்ளங்கை, உள்ளங்கால், விரல், நாக்கு, பல், நகம், கிளை, கேசம், குதிரை, காலம், பாகம், மகிழ்ச்சி, அச்சம் இவை யந்திரங்களுடன் பயன்படுவதால் துணையந்திரங் கள் எனப்படுகின்றன. (18)

இவற்றை உடல் முழுவதிலுமோ அல்லது உடலில் ஏதா வது ஓர் உறுப்பிலோ, மூட்டுகள், வயிற்றிலோ இரத்தக் குழாய்கள் இவற்றிலோ அவற்றிற்குத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும். (19)

18. யந்திரங்களின் பொதுச் செயல்கள்

அடித்தல், நிரப்புதல், கட்டுதல், செலுத்தல், திருப்புதல், அசைத்தல், விரித்தல், பிடித்து விடுதல், உடலில் உள்ள வழி களைச் சுத்தப்படுத்தல், இழுத்தல், எடுத்தல், தெளிவுபடுத்தல், உயர்த்துதல், தாழ்த்துதல், ஒடித்தல், கடைதல், உறிஞ்சுதல், நுழைத்தல், பிளத்தல், நேராகச் செய்தல், கழுவுதல், ஊதல், மையிடுதல், துடைத்தல் என்ற இந்த இருபத்து நான்கு செயல் களும் பெரும்பாலும் துணையந்திரங்களைச் சார்ந்தவை. (20)

சுங்க முக யந்திரம் (கழுகு முக யந்திரம்) நாற்புற மும் சுழலும் தன்மை பெற்றது. ஆழமான பகுதியில் நன்கு எளிதில் புகக்கூடியது. பற்றிக் கொள்ள வேண்டியவற்றைக் கெட்டியாக பற்றி இழுக்கும் தன்மை பெற்றது. எல்லா உறுப்புகளிலும் பயன்படுத்த ஏற்றதாயுள்ளது. ஆகையினால் இந்தக் கழுகுமுக யந்திரம், மற்ற யந்திரங்களை விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. (21)

19. *சஸ்திரங்கள்

இவை இருபத்தாறு வகைப்படும்.

1. தந்த லேகனம்—பற்களைச் சுரண்டும் கருவி.
2. மண்டலாக்ரம்—சிறிய அரிவாள் போன்ற கருவி.
3. விருத்திபத்ரம்—அகன்ற கூர்மையுள்ள கத்தி

---

*சஸ்திரம்—அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தும் கருவி (ஆயுதங்கள்)

4. உத்பல பத்ரம்—நெய்தல் மலர் போன்ற தளமுள்ள கத்தி.
5. அத்யர்த்த தாரை—நெய்தல் மலரைவிட ஒன்றரை மடங்கு குறைந்த தளமுடைய கருவி.
6. முத்ரிகா—ஆள்காட்டி விரலின் ஒரு சணுவில் மாட்டிக் கொள்ளக்கூடிய கருவி.
7. கர்தரி—கத்திரிக்கோல்.
8. ஸர்ப வக்த்ரம்—பாம்பு முகத்தைப் போன்ற அமைப்புள்ள கருவி.
9. கர பத்ரம்—கைவாள்.
10. குசபத்ரம்—தர்ப்பை முனை போன்ற கூர்மையான கத்தி.
11. ஆடாமுகம்—வாத்து அலகைப் போன்ற கத்தி.
12. அந்தர்முகம்—கத்தரிக்கோல் போன்ற உட்புறம் வளைந்து கருக்கு உடைய கத்தி.
13. சராரீ முகம்—நாரை என்ற பறவை அலகு போன்ற கத்தி.
14. த்ரிகூர்ச்சம்—மூன்று முனைகளையுடைய கருவி.
15. குடாரிகா—கோடாரி போன்ற கருவி.
16. வ்ரீஹிமுகம்—நெல்முனை போன்ற முனையுள்ள கருவி.
17. சலாகை—இருமுகம் உள்ள கருவி.
18. வேதஸபத்ரம்—நொச்சி இலை போன்ற கூர்மையான கருவி.
19. ஆரா—ரம்பம் எனும் கருவி.
20. கர்ண வ்யதன ஸூசி—காது குத்தப் பயன்படும் ஊசி போன்ற கருவி.
21. ஸூசி—ஊசி.
22. ஸூசீகூர்சம்—பல ஊசிகள் சேர்ந்து தர்ப்பைகளினால் கட்டப்பட்ட முடிச்சு போன்ற கருவி.
23. கஜம்—மத்து போலிருக்கும் கருவி.
24. ஏஷணீ—வழவழப்பான ஊசிபோன்ற கருவி.
25. படிசம்—தூண்டில் முள் போன்ற கருவி. (22)
26. நக சஸ்திரம்—நகம் அகற்றும் கருவி.

இவற்றில் [1] தந்தலேகனம், [2] மண்டலாக்ரம் என்ற இரண்டு கருவிகளும் சுரண்டும் செய்கையில் பயன்படுகின்றன.

---

1. தந்தலேகனம்—பற்களின் காரைகளைச் சுரண்டுவது.
2. மண்டலாக்ரம்—வளைந்த முகமுடையது.

விருத்திபத்திரம், உத்பல பத்திரம், அத்யர்த்த தாரை என்ற மூன்று சஸ்திரங்களும், கிழிப்பதற்கு உபயோகப்படுகின் றன. விருத்தி பத்ரம், உத்பல பத்திரம், அத்யர்த்ததாரை, முத்ரிகா இந்நான்கு சஸ்திரங்கள் பிளப்பதற்குப் பயன்படுகின் றன.

மண்டலாக்ரம், விருத்தி பத்திரம், உத்பல பத்திரம், அத்யர்த்த தாரை, முத்ரிகா, கத்திரி, ஸர்ப்ப வக்த்ரம், கர பத்ரம் என்ற இந்த எட்டு சஸ்திரங்களும் அறுவைக்குப் பயன் படுகின்றன.

குச பத்ரம், ஆடாமுகம், அந்தர்முகம், சராரீமுகம், த்ரி கூர்ச்சம், இந்த ஐந்து சஸ்திரங்களும் தோலைக் குத்தி இரத்தம் வெளிப்படுத்தும் செயலில் பயன்படுகின்றன.

குடாரிகா, வ்ரீஹிமுகம், சலாகா, வேதஸ பத்திரம், ஆரா, கர்ணவ்யதனம் என்ற இந்த ஆறு சஸ்திரங்களும் துளைக்கும் செயலில் பயன்படுபவை.

இந்த ஆறு சஸ்திரங்களில் ஆரா, வ்ரீஹிமுகம் எனும் சஸ்திரங்கள் அறுவையிலும் வெட்டுவதிலும் பயன்படுபவை. ஊசிகள் தைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஸூசி கூர்ச்சம், வெட்டுவதற்குப் பயன்படுகிறது. ஏஷணி எனும் சஸ் திரம், துழாவுவதற்கும் பிளப்பதற்கும் பயன்படுகிறது. படிசம் எனும் சஸ்திரம், பிடிப்பதற்கும், நகசஸ்திரம் எனும் சஸ்திரம் எடுப்பதற்கும், பிளப்பதற்கும், சுரண்டுவதற்கும், கீறி இரத்தம் உண்டாக்குவதற்கும் உபயோகப்படுகின்றன.

இவ்விதம் மேற்கண்ட சஸ்திரங்கள் பன்னிரண்டு வகை யான செயல்களில் பயன்படுத்தப்படுகின்றன. (23)

20. சஸ்திரங்களின் அமைப்பு

பற்களில் படிந்திருக்கும் காரையைச் சுரண்டுவதற்குப் பயன்படும் தந்தலேகனம் எனும் சஸ்திரம், நான்கு சதுரமான நாளங்கள் உடையதாகவும் மற்றொரு பக்கத்தில் கட்டு உள்ள தாகவும், ஒரே பக்கம் கருக்கு உள்ளதாகவும் அமைந்திருக் கும்.

21. மண்டலாக்ரம்

மண்டலாக்ரம் – (உருண்டையான நுனியுடைய சிறிய வாள்) எனும் சஸ்திரம், ஆள்காட்டி விரல் நகத்தின் உட்

புறம் போன்று வளைந்து கூர்மையான கருக்குடன் கூடிய தாக அமைந்திருக்கும்.

இந்த சஸ்திரம், கண் இமைகளின் உட்புறத்தில் வளர்ச்சி யடைந்த தேவையற்ற மாமிசத்தையும், ஈறுகளில் உள்ள அதிக மாமிசத்தையும், ஆழமான புண்களில் உள்ள கெட்ட மாமி சத்தையும் போக்குகிறது. உள்நாக்கு நோயிலும், சீறுவதற் கும், அறுப்பதற்கும் பயன்படுகிறது. (24)

22. விருத்திபத்ரம்

விருத்தி பத்ரம் (அகன்ற தளமுள்ள கத்தி) எனும் சஸ் திரம், அகன்ற கூர்மையான கத்தி போன்ற அமைப்புள்ளது. இது இரு வகைப்படும். ஒன்று வளைவில்லாமல் நீண்ட முனை யுடன் கூடியது. வீக்கம் மேலாக உயர்ந்திருந்தால் இதைப் பயன்படுத்த வேண்டும்.

மற்றொன்று பின்புறம் வளைந்த முனையுடையது. இதை வீக்கத்துடன் கூடிய ஆழமான புண்களில் பயன்படுத்த வேண்டும். இவ்விரண்டும் அறுத்தல், வெட்டுதல், கிழித்தல் இவற்றைச் செய்வதற்குப் பயன்படுகின்றன. (25)

23. அங்குளீசஸ்த்ரம்—*(விரலில் மாட்டிக் கொள்ளும் கருவி.)*

மோதிரம் போன்ற ஒரு வளையம் தயார் செய்து கொள்ளவும். அதிலிருந்து இந்த சஸ்திரத்தின் முகம் ஆரம்பிக்கப் பட்டு நீண்டிருக்க வேண்டும். இதன் குறுகலான பகுதி அரை அங்குல நீளமுள்ளதாக இருக்க வேண்டும். இதன் அமைப்பு [1]விருத்தி பத்ரம், [2]மண்டலாக்ரம், [3]அத்யர்ததாரை இவற்றில் ஏதாவது ஒன்றை ஒத்திருக்க வேண்டும். இதை ஆள்காட்டி விரலின் முதல்கணுவில் மாட்டி, அதன் இரு புறங் களிலும் உள்ள வளையத்தில் கயிற்றை நுழைத்துக் கட்டிய பின் தொண்டை அறுவை சிகிச்சையில் இதைப் பயன்படுத்த வேண்டும். (26)

---

1. விருத்திபத்ரம்—அகன்ற தளமுள்ள பகுதி.
2. மண்டலாக்ரம்—உருண்டையான முகமுடைய சிறிய வாள்.
3. அத்யர்த்ததாரை—அரைப் பங்கிற்கும் அதிகமான கருக்குள்ளது.

24. கத்தரிக்கோல்

மூன்றில் ஒரு பங்கு கைப்பிடியுள்ள கத்தரிக்கோல், கரயம் தசைநார், ரோமம், நூல் இவற்றைத் துண்டிக்கும் வேலையில் பயன்படுகிறது.

25. [1]ஸர்ப்பவக்த்ரம்

ஸர்ப்ப வக்த்ரம் எனும் கத்தரிக்கோல் பாம்பின் முகம் போன்றது. அரை அங்குலம் கூர்மை உடையதும், வளைந்ததுமான இந்தக் கத்தரிக்கோல் மூக்கு, காது, இவற்றில் உண்டாகும் முளை, புரை குழல் இவற்றை வெட்டுவதற்குப் பயன்படுகிறது.

26. [2]கரபத்திரம் *(கைவாள்)*

கரபத்திரம் (சிறிய கை வாள்) எனும் சஸ்திரம் பத்து அங்குலம் நீளம், இரண்டு அங்குலம் அகலம் சிறு சிறு பற்களை உடைய கூர்மையான முனை, நல்ல மரத்தினால் செய்யப்பட்ட பிடி இவைகளுள்ளது. இது எலும்பை வெட்டும் வேலையில் பயன்படுகிறது.

27. [3]குசபத்திரம் *(தர்ப்பை முனை போன்றது)* ஆடாபத்திரம் *(வாத்து அலகு போன்ற கருவி)* எனும் சஸ்திரங்கள். இரண்டும் இரண்டு அங்குல கருமுனையுள்ளவை.

28. அந்தர்முகம் *(உள்பக்கம் வளைந்த முகம்)*

அந்தர்முகம் (உள்பக்கம் வளைந்த முகம்) எனும் சஸ்திரம். பிறை சந்திரன் போல் வளைவுள்ள அரை அங்குல கருமுனை உள்ளது. (27)

29. குடாரிகா *(கோடாரி எனும் கருவி)*

பருமனான கைப்பிடியுடையதும், பசுவின் பல்லைப் போன்ற உருவமுடையதும், அரை அங்குலம் கருமுனை உடையதுமாய் அமைந்திருக்கும். இது எலும்புகளின்மேல் உள்ள நரம்புகளைக் கீறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

30. வ்ரீஹிமுகம் *(நெல் முனைபோன்றது)*

ஒன்றரை அங்குல கருமுனை உடைய இந்த சஸ்திரம், அதிகமாக மாமிசம் உள்ள இடத்தில் உள்ள நரம்புகளைக்

---

1. ஸர்ப்பவக்த்ரம்—பாம்பின் முகம் போன்றது.
2. கரபத்திரம்—சிறிய கை வாள்.
3. குச பத்திரம்—தர்ப்பை முனை போன்றது.

கீறவும், தொடைகளின் சந்துகளில் ஏற்படும் கட்டிகளைக் கீறிப் பிளப்பதற்கும், நீர்ப்பீலிகை, குன்மம், பெருங்கட்டி இவற்றைக் கீறிப் பிளப்பதற்கும் பயன்படுகின்றது.

31. சலாகை எனும் சஸ்திரம் *(நீண்ட இரு முனைகள் உள்ள ஊசி)*

இதற்கு இரு முனைகள் உண்டு. முன்முனை குறுக்கத்தி மலரின் மொட்டுப்போல் அமைந்திருக்கும். இது செம்பினால் செய்யப்பட்டது. இது விழியில் உள்ள பழுதடைந்த நரம்புகளைக் கீறுவதற்குப் பயன்படுவது. (28)

32. ஆரா எனும் சஸ்திரம் *(அரம் எனும் கருவி)*

நான்கு அங்குல நீளமும், அரை அங்குல முக வட்டமும் உடைய இது அரைஅங்குல அளவே உள்ளே செல்லக்கூடியது. இது அதிகமாக வளர்ந்திருக்கும் [1]கர்ணபாலி எனும் காதில் உண்டாகும் புண்ணைக் கீறவும், கட்டி பழுத்துவிட்டதா பழுக்கவில்லையா என்று தீர்மானிக்க முடியாத நிலையில் கட்டியைப் பிளக்கும் செயலிலும் பயன்படுத்தப்படுகிறது.

33. கர்ணவ்யதனம் *(காது குத்தும் ஒரு வகை ஊசி.)*

மூன்று அங்குலம் நீளமுடையது. அதன் முனைக்கும் கீழே மூன்றில் ஒரு பங்கு தூரத்தில் துவாரம் இருக்கும். பருமனானது. மல்லி மொக்கைப்போல முனை உடையதாயிருக்கும். (29)

34. மூவகை ஊசிகள்

இவை நூல்கள் உள்ளே நன்கு நுழையக்கூடியதாகவும் ஒடியாமல் கெட்டியாகவும் இருக்க வேண்டும். இவற்றில் அதிகம் சதை வளர்ச்சியடைந்த இடங்களைத் தைப்பதற்குப் பயன்படும் ஊசி, மூன்று பட்டைகள் கொண்டதாகவும் மூன்று அங்குல நீளம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

சிரணப்பை, இரைப்பை, மர்மமான இடங்கள் இவற்றைத் தைப்பதற்கு நெல்முனை போன்றதும், வில்லைப்போல் வளைந்தும் இரண்டரை அங்குல நீளமுள்ளதுமான ஊசி பயன்படுகிறது. (30)

1. கர்ணபாலி—காதின் வெளிப்புறத்தில் ஏற்படும் வீக்கம்.

35. ஸூசீ [1]கூர்ச்சம் எனும் ஊசிகள் - (தர்ப்பங்களை முடிச்சாகக் கட்டுவதுபோல் ஊசிகளைக் கட்டுவித்தல்)

இந்த ஊசிகள் திரண்டு உருண்டவை. வட்டமான சிறிய பீடத்தில் ஏழு அல்லது எட்டு ஊசிகளை வைத்து நன்றாகக் (1) கூர்ச்சம்போல் கட்ட வேண்டும். இந்த ஊசிகள் குஷ்டம், வெண்குஷ்டம், வங்கு, சொட்டை, உணர்வற்ற நிலை இவற்றில் பயன்படுத்தக் கூடியவை.

36. [2]கஜம் எனும் சஸ்திரம் - (மத்துபோல் இருக்கும் சஸ்திரம்)

இது அரை அங்குலத்திற்கு உட்பட்ட முனை உடையது. இப்படிப்பட்ட எட்டு முட்களை வட்டமான தன் சிகரத்தை சுற்றிலும் கொண்டிருக்கும், இந்த சஸ்திரம் மூக்கிற்குள் மெள்ளச் செலுத்தி அங்குள்ள கெட்ட ரத்தத்தை வெளிப் படுத்தப் பயன்படுகிறது. இது செம்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்டது.

37. ஏஷணிகள் எனும் சஸ்திரங்கள் (ஆயுதங்கள்) மண்ணுளிப் பாம்பு போன்ற நீண்ட கம்பி.

இவை இரு பக்கங்களிலும் வழவழப்பானவை. இவற்றில் ஒன்று எட்டு அங்குலம் நீளமுடையது. இந்த சஸ்திரம் புரையோடிய புண்களைத் துழாவுவதற்கும், அழுகிப்போன புண், அதற்குள் இருக்கும் சல்யம், ஊன் தண்ணீர் பெருகும் புண் இவற்றில் உள்ள துவாரங்களைத் துழாவ்வதற்கும் பயன்படுகின்றன.

மற்றொன்று ஊசியைப் போன்றது. க்ஷார மருந்தினால் பூசப்பட்ட நூலை அதன் துவாரத்தில் கோத்திருக்க வேண்டும். இது புரையோடிய நாடிகளில் உண்டாகும் [3]பவுத்திரம் எனும் நோயைப் பிளப்பதற்கு உபயோகப்படுகிறது.

38. [4]படிசம் (தூண்டில் முள்) எனும் சஸ்திரம் (ஆயுதம்)

இதன் முகப்பகுதி நன்கு வளைந்திருக்கும். மிகவும் கூர்மையான நுனிப்பகுதி உடையது. இது உள்நாக்கில் தோன்

---

1. கூர்ச்சம் — நீண்ட பல தாள்களைப் போன்ற ஊசிகளைச் சேர்த்துக் கட்டுவது.
2. கஜம்—இது மத்தைப் போன்ற உருவமுள்ளது.
3. பவுத்திரம்—ஆசனத் துவாரத்தின் ஓரத்தில்தோன்றும் கட்டி.
4. படிசம்—தூண்டில் முள்.

றும் நோய்களை தர்ப்பைகளைக் கட்டுவதுபோல் பிடிப்பதற்கும் வெண்விழியில் ஏற்படும் அர்மா (கொடி) எனும் நோயைப் பிடிப்பதற்கும் பயன்படுகிறது.

39. நக சஸ்திரம் — *(நகத்தில் மாட்டிக் கொள்ளும் கருவி)*

இதன் நீளம் எட்டு அங்குலம். ஒரு பக்கம் குதிரையின் காது போன்ற முகம். மற்றொரு பக்கம் கன்றுக் குட்டியின் பற்கள் போன்ற முகம், இது நுட்பமான சல்யங்களை (உடலில் புகுந்துள்ள முள், ஆணி, கல், மண் போன்ற வெளிப் பொருட்களை) வெளிப்படுத்தப் பயன்படுகிறது. (31)

40. [1]அநுசஸ்திரங்கள் (துணைக் கருவிகள்)

அட்டை, க்ஷாரம், நெருப்பு, கதிரவன், காந்தக்கல், கண்ணாடி, படிகக்கல், குருவிந்தம் (கோரைக்கிழங்கு) நகம், கரி, நொச்சி, சொரசொரப்பான இலைகள், கடல் நுரை, உலர்ந்த சாணி இவைகளையும் மேலும் பலவகை சஸ்திரங்களையும், மற்ற பல யந்திரங்களையும் மருத்துவர் தம் அறிவுக்கும், யோசனைக்கும் ஏற்றவாறு சிகிச்சை முறைகளுக்கு உதவும்படி, துணைக்கருவிகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

யந்திரங்கள், சஸ்திரங்கள் இவற்றைக் கையின் உதவியின்றிப் பயன்படுத்த முடியாததால் அவற்றுள் கைதான் மிக மிகச் சிறந்தது. (32)

41. யந்திரங்களின் குறைபாடுகள்

மிக்க நீளம், மிக்க நீளக் குறைவு, மிக்க பருமன், மிகுந்த மெல்லிய முனையுடைமை, மிக்கக் கோணல், மேடு பள்ளமாயிருத்தல், கைப்பிடியில்லாமை, தளர்ந்திருத்தல் என இந்த எட்டும் யந்திரங்களின் குறைபாடுகள் எனக் கருதப்படும்.

42. சஸ்திரங்களின் குறைபாடுகள்

மிக்க நீளம், மிகக் குறுகியிருத்தல், மிக்கப் பருமனாயிருத்தல், மிக்க மெல்லியதாயிருத்தல், வளைந்திருத்தல், கூர்மையின்மை, கருக்கில் சிதைவு, கருக்கு மழுங்கியிருத்தல் என இந்த எட்டும் சஸ்திரங்களின் குறைபாடுகளாகும். கரபத்திரம் (வாள்) என்பது இதற்கு விலக்கு. (33)

---

1. அநுசஸ்திரங்கள்—இவை சஸ்திரங்களாக இல்லாவிட்டாலும் அவற்றின் வேலையைச் செய்வதால் அநுசஸ்திரங்கள் எனப்பெயர் பெறுகின்றன. அநுசஸ்திரங்கள் — துணைக்கருவிகள்.

43. சஸ்திரங்களைப் பயன்படுத்தும் முறை

நெருப்பில் நன்கு காய்ச்சப்பட்ட சஸ்திரங்களைக் கார ஜலத்தில் நனைத்து அதைப் புண்ணில் புதைந்த அம்பின் முனையை வெளிப்படுத்தவும், எலும்பை வெட்டவும் பயன் படுத்த வேண்டும். காய்ச்சப்பட்ட சஸ்திரங்களைத் தண்ணீரில் நனைத்து மாமிசத்தை அறுப்பதற்கு உபயோகப்படுத்த வேண் டும். அதையே எண்ணெயில் நனைத்து உடைப்பதற்கும், பிளப்பதற்கும், நரம்புகளைக் கீறுவதற்கும், தசை நார்களை வெட்டுவதற்கும் பயன்படுத்த வேண்டும். (34)

வெட்டுவதற்குப் பயன்படும் சஸ்திரத்தின் கூர்மை பயத் தம் பருப்பின் அளவு உள்ளதாக இருத்தல் வேண்டும்.

கரைப்பதற்குப் பயன்படும் சஸ்திரத்தின் கூர்மை பாதி பயத்தம் பருப்பின் அளவுள்ளதாக இருக்க வேண்டும். கீறு வதற்கும் வழிப்பதற்கும் பயன்படும் சஸ்திரங்களின் கூர்மை மயிர் அளவு உள்ளதாக இருக்க வேண்டும். (35)

44. ஆயுதங்களைப் பிடிக்கும் முறை

அறுத்தல், பிளத்தல், கீறுதல் இச்செயல்களைச் செய்ய ஆயுதங்களின் கணுப்பகுதியை ஆள்காட்டி விரல், கட்டை விரல் இவற்றால் நன்றாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். இச்செய்கைகளில் நன்கு கவனம் வேண்டும்.

இரத்தத்தைக் கசியச் செய்யப் பயன்படும் ஆயுதத்தைக் கணுவின் முன்பாகத்தில் பிடித்துக்கொள்ள வேண்டும்.

நெல் போன்ற முகம் கொண்ட சஸ்திரத்தை அதன் கணுவரை உள்ளங்கையில் மறைந்திடும்படிச் செய்து, அதன் முகத்தை ஆள்காட்டி விரல், கட்டை விரல் இவற்றால் பிடித்துக்கொள்ள வேண்டும்.

பிடுங்கி எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதத்தை அடியில் பிடித்துக்கொள்ள வேண்டும்.

சாமணம், கத்தரி இவற்றைக் கயிற்றுக்கு மேலும் நடுப் பகுதியிலும் பற்றிக்கொள்ள வேண்டும். மற்ற ஆயுத சிகிச்சை களில் செயல்களுக்குத் தக்கவாறு பிடிப்பை உண்டாக்கிக் கொள்க. (36)

45. ஆயுதங்களைத் தீட்டுவதற்கான கல்லின் அமைப்பு

ஆயுதங்கள் தீட்டுவதற்குப் பயன்படும் சாணைக்கல், வழ வழப்பாகவும், உளுந்து, பயறு (கருப்பு, பச்சை) இவற்றின்

திறம் உள்ளதாகவும் இருக்க வேண்டும். திட்டிய சருக்கு நீடித் திருக்க இலவமரத்தின் பலகையைப் பயன்படுத்த வேண்டும். (37)

46. மருத்துவர்களுக்கு அறிவுரை

மருத்துவ நூல்களை நன்கு கற்றறிருந்தபோதிலும் அறுவைச் சிகிச்சையைப் பலமுறை கண்கூடாகப் பார்த்து அறியாதவன் அதைச் செய்யத் தகுதியற்றவன். உடலின் முழுப் பகுதியும் நரம்பு, தசை நார், மர்மங்கள் ஆகியவற்றால் சூழப்ப பட்டுள்ளது. ஆகையால் அறுவைச் சிகிச்சையைக் கண்கூடாகக் கண்டறியாதவன், கீழ்க்கண்ட பொருட்களில் அறுவைச் சிகிச்சை செய்து பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மயிர் நிறைந்த தோல், மலர், பழம், சுரைக்காய், வெள்ளரி, நீர், சேறு நிறைந்த துருத்தி, பஸ்தி, மாமிச உருண்டை, நெய்தல் தண்டு இவற்றில், வெளி எடுத்தல், அறுத்தல், தைத்தல் முதலான செயல்களைச் செய்து பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறே நீர் நிறைந்த குடத்தின் ஒரு பக்கத்தில் துளையிட்டு அதன் மூலம் கருவியின் வழியாக பஸ்தி செய்யும் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். நெருப்பினால் சுடுவது, க்ஷார சிகிச்சை இவற்றை மிருதுவான மாமிசத் துண்டில் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மனித உருவமுள்ள பொம்மையின் உறுப்புக்களிலும், துணை உறுப்புக்களிலும் கட்டுக்கட்டும் முறையைக் கற்றுக் கொள்க. (38)

அறுவைச் சிகிச்சையில் சிறந்து விளங்க விரும்பும் மருத்து வன் முழு உறுப்புக்கள் கூடி நஞ்சினால் இறக்காத, நோயி னால் துன்புறாத, குடல்கள் வெளிப்படுத்தப்பட்ட பிணத்தை தர்ப்பைப் புற்களினால் சுற்றி, இரும்புக் கூண்டில் வைத்து பிறருடைய கண்களில் படாமல், தனிமையான இடத்தில் பெருகும் ஆற்றின் ஓரத்தில் வைக்க வேண்டும்.

பிறகு அழுகிய பிணத்தை எடுத்துவந்து சுத்தம் செய்து விலாமிச்சைவேர், மூங்கில் குச்சி, தர்ப்பைக் கூர்ச்சம் இவற்றில் ஏதாவது ஒன்றினால் மெள்ள மெள்ளக் கிளறி, தோல் போன்ற உடல் முழுவதையும் மேற்புறமும், உட்புறமும் உள்ள உறுப்புகளையும், நரம்புகள், தசை நார் இவற்றையும் ஆசிரி

யர் கற்பித்த முறைப்படியும் கற்றறிந்த நூல்படியும், கண் கூடாகப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். (39)

மருத்துவ நூல்களை நன்கு கற்றறிதல் அவற்றைக் கண் கூடாகப் பார்த்தல் இவை இரண்டும் சேர்ந்து மருத்துவரின் அறிவை மேன்மேலும் வளர்க்கிறது. (40)

47. ஆயுதங்கள் வைக்கும் உறை

சாதாரணப் பட்டுத்துணி, மயிரிழை முனைகள் மேல் தூக்கியுள்ள ஒருவகைப்பட்டுத் துணி, கம்பளி, வெண்பட்டு, மிருதுவான தோல் இவற்றில் ஏதாவது ஒன்றினால் ஒன்பது அங்குலம் அகலமுள்ளதும், பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ள தும், கெட்டியானதுமான உறை ஒன்று செய்துகொள்ள வேண் டும். (41)

அந்த உறை மூடக்கூடியதாகவும் நன்கு தைக்கப்பட்ட தாகவும் இருக்க வேண்டும். உறையின் உட்புறத்தில் கம்பளியை வைத்துத் தைத்திருக்க வேண்டும்.

ஆயுதம் வைத்தபின் அந்த உறை மூடுவதற்கு ஏற்ற வகையில் தாழ்ப்பாள் பொருந்தியிருக்க வேண்டும். அது பார்ப் பதற்கு அழகாகவும் எடுத்துச் செல்ல வசதியுள்ளதாகவும் அமைந்திருக்க வேண்டும். (42)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'யந்த்ர சஸ்திர விதி' எனும் முப்பத்து நான்காவது
அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

*ஜலௌகா விதி

'ஜலௌகாவிதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

அரசன், செல்வந்தன், பயந்தவன், மிருதுவான உடலமைப்புள்ளவன், சிறுவன், முதியவர், பெண்டிர் இவர்களுக்கு இரத்தத்தை எடுக்க அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. அட்டைகளின் வகை

நஞ்சுள்ளவை, நஞ்சற்றவை என அட்டைகள் இருவகைப் படும். அவற்றில் கெட்ட நீர், இறந்து அழுகிப்போன பாம்பு, தவளை, மீன் இவற்றிலிருந்து தோன்றியதும், சிறுநீர், மலம் இவற்றிலிருந்து தோன்றியதும், சிவப்பு, வெளுப்பு, மிகக் கருப்பு நிறமுள்ளவைகளும், மிகவும் நுட்பமானவைகளும், மிகப் பருமனுள்ளவைகளும், வேகமாக இங்குமங்கும் செல் பவைகளும், வழவழப்புள்ளவைகளும் உடலின் நடுப்பாகத்தில் பருமனானவைகளும், அதிக ரோமங்களுடன் கூடியவைகளும் வானவில் போன்ற பல நிறமுள்ள கோடுகளை உடலில் பெற் றவைகளுமான அட்டைகள் நஞ்சுத்தன்மை கொண்டவைகளா கும்.

அவை கடித்தால் எரிச்சல், வீக்கம், வேக்காடு, அரிப்பு, சிறுகட்டிகள், அக்கி, காய்ச்சல், மூர்ச்சை, வெண்குட்டம் இந் நோய்கள் உண்டாகும்.

இந்நோய்கள் நீங்க நஞ்சு, பித்தம், இரத்தம் இவற்றை விலக்கக்கூடிய சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

தாமரை, நீலோத்பலம், செங்கழுநீர் போன்ற மண முள்ள மலர்களிலிருந்து தோன்றியவைகளும் அகலமான தெளிந்த நீருள்ள குளத்தில் படிந்திருப்பவைகளும், பாசியி

---

*ஜலௌகா விதி—ஜலௌகா என்பது அட்டைப் பூச்சி. அதன் உதவியால் உடலில் உள்ள கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தும் முறையை விளக்கு வதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறும்.

விருப்பவைகளும், கரு நிறமுள்ள பாசி போன்ற நிறமுள்ளவை களும், நீலநிறக் கோடுகள் அமைந்தவைகளும், உருண்டை வடிவமானவைகளுமான அட்டைகள் நஞ்சற்றவைகளாகும். (3—4)

இவ்வகையான அட்டைகளுள் பதினெட்டு அங்குலம் நீள முள்ள அட்டைகள் மிகப்பெரியவை எனக் கருதப்படும்.

நான்கு, ஐந்து அல்லது ஆறு அங்குலமுள்ள அட்டை களை மனிதர்களிடமிருந்து இரத்தம் எடுக்கப் பயன்படுத்த வேண்டும். மற்ற அட்டைகளை யானை, குதிரை இவற்றிட மிருந்து ரத்தம் எடுக்கப் பயன்படுத்த வேண்டும்.

இந்த அட்டை வகைகளில் மிருதுவான உடல் அமைப்புப் பெற்றவைகளும், மெல்லிய தோல் உடையவைகளும், மிகவும் சிறிய தலைகள் உள்ளவைகளும், அடிப்பாகம் பருத்திருப்பவை களுமான அட்டைகள் பெண் இனத்தைச் சார்ந்தவை என அறிய வேண்டும்.

இதற்கு மாறாக அரைவட்டச் சந்திரன் போன்ற அமைப்புக் கொண்டவைகளும் உருண்டையான முகவடிவம் பெற்றவை களுமான அட்டைகள் ஆண் இனத்தைச் சார்ந்தவைகளாகும்.

நீண்ட நாட்கள் உள்ள நோய்களுக்கு ஆண் இன அட்டை களைப் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு மாறான நோய்களுக்கு பெண் இன அட்டை களைப் பயன்படுத்த வேண்டும்.

2. அட்டைகளை வளர்க்கும் முறை

அட்டைகளை ஈரமுள்ள தோல் பட்டையின் உதவியால் பிடித்து மணமுள்ள சேறு நிறைந்த மண் குடத்தில் வைக்க வேண்டும்.

சிருங்காடகம் எனும் மணமுள்ள கிழங்கு, கொட்டிக் கிழங்கு, சாருகம் எனும் ஒருவகைக் கிழங்கு, பாசி, தாமரைக் கிழங்கு, உலர்ந்த இறைச்சி, மண், தாமரை விதையின் தூள், இனிப்பும், குளிர்ச்சியும் தெளிவும் பெற்ற நீர் இவற்றை அட்டைகளுக்கு உணவாகவும், நீராகவும் மண்குடத்தில் இட வேண்டும்.

அட்டைகளின் வாயிலிருந்து சுரக்கும் கெட்ட நீரையும், குடத்திலுள்ள சேற்றின் குழகுழப்பையும் நீக்குவதற்காக மும் மூன்று நாட்களுக்கு ஒருமுறை பழைய உணவுவகைகளையும் நீரையும் நீக்கிவிட்டு புது உணவையும் நீரையும் குடத்தில் நிரப்ப வேண்டும்.

ஐந்து நாட்களுக்கு ஒருமுறை அட்டைகள் வைக்கப்பட் டிருக்கும் மண்குடத்தை மாற்ற வேண்டும்.

குடித்த கெட்ட இரத்தத்தை வாந்தி எடுத்து வெளி யேற்றாததாலும், அடிக்கடி இரத்தத்தைக் குடிப்பதாலும் சில அட்டைகள் மயக்கமடைகின்றன. அப்பொழுது அவற்றை வெளிப்படுத்த நீர் நிறைந்த பாத்திரத்தில் இடவேண்டும். அங்கும் அவை அசையாமலும், உணவில் விருப்பம் கொள்ளா மலுமிருந்தால் அவற்றை வெளியேற்றிவிட வேண்டும்.

மஞ்சள், கடுகு இவற்றின் கல்கத்தை அதே குடத்தில் போடுவதால் சிறுநீரையும் மலத்தையும் மற்ற குடத்தில் உள்ள அட்டைகள் கழித்துவிடும். பின்பு அவற்றைக் காடி நிரம் பிய, அல்லது மோர் நிரம்பியுள்ள கலயத்தில் போட்டு ஊக்கு விக்க வேண்டும். அந்த அட்டைகள் நீரில் அமர்ந்தோ படுத்துக் கொண்டோ சுகமாக இருந்தால் அவ்வட்டைகளைச் சிகிச்சைக் குப் பயன்படுத்தலாம்.

நோயாளியின் கெட்ட ரத்தத்தை வெளிப்படுத்த வேண் டிய உடல் பகுதியை மண் அல்லது வரட்டியின் தூள் இவற் றால் தேய்த்து வறட்சியைத் தோற்றுவித்த பிறகு அட்டை யைக் கெட்ட இரத்தத்தை உறிஞ்சுவதற்காக விடவேண்டும்.

அட்டை; கெட்ட இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கா விடில் பால், நெய், வெண்ணெய், இரத்தம் இவற்றில் ஏதா வது ஒன்றின் ஒரு துளியை அந்த இடத்தில் வைக்க வேண் டும். அப்பொழுதும் உறிஞ்சாவிடில், அந்த இடத்தைச் சிறிது இரத்தம் வெளிவரும்படி கத்தியால் கீறிவிட வேண்டும்.

அட்டை குதிரையின் குளம்பைப்போல் வாயை உயர்த்திக் கொண்டு கழுத்தைத் தூக்கிக் கொண்டிருக்குமாகில் அது கெட்ட இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிவிட்டது என அறிந்து கொள்ள வேண்டும்.

குழந்தையைப்போல் மூச்சுவிட்டுத் தலையை ஆட்டிக் கொண்டு அலை வேகத்தில் குடிக்கத் தொடங்கியவுடன் அதன்

மேல் ஈரததுணியைப் போட்டு மூடவேண்டும். மூடிய துணி யின் மேல் சிறிது சிறிதாக நீர் தெளிக்க வேண்டும்.

நீர் கலந்த பாலிலிருந்து பாலைத் தனியாகப் பிரித் தெடுக்கும் அன்னப்பறவையைப் போல் அட்டை நல்ல ரத் தத்தை விட்டுவிட்டு கெட்ட இரத்தத்தை உறிஞ்சுகிறது.

கடித்த இடத்தில் குத்தல் வலி, அரிப்பு உண்டாகில் அட்டை சுத்தமான இரத்தத்தைக் குடிக்கத் தொடங்கிவிட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது சுத்த மான இரத்தத்தைக் காக்க அட்டையை எடுத்துவிட வேண் டும்.

இரத்த ஆசையினால் அட்டை எடுக்க வராவிட்டால் தேன் அல்லது உப்புத்தூளை அட்டையின் வாயில் தூவ அது கடித்த இடத்தை விட்டுவிடும். (5)

அட்டை வெளிப்பட்டபின், அரிசிமாவை அதன் உடலில் பூசி, வாயில் எண்ணெய், உப்பு இவற்றைத் தடவி வாலைப் பிடித்து தலை கீழாகத் தொங்கவிட்டு வாலிலிருந்து வாய் வரை உள்ள பாகத்தை, மெள்ளமெள்ள கெட்ட இரத்தத்தை அது வெளிவிடும்வரை அழுத்த வேண்டும்.

ஒருமுறை கெட்ட இரத்தத்தைக் குடித்த அட்டையை ஒருவாரம் முடிய மறுமுறை பயன்படுத்தக்கூடாது.

இரத்தம் உறிஞ்சப்பட்ட இடத்தில் மேலும் சிறிதளவு கெட்ட இரத்தம் தங்கியிருந்தால் அந்த இடத்தில் உப்பைப் போட்டுத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

பிறகு கடித்த இடத்தைக் குளிர்ந்த நீரினால் கழுவிப் பருத்தி அல்லது சுத்தமான துணியை நெய்யில் நனைத்து அதனால் புண்ணை மூட வேண்டும்.

மேலும் தங்கியுள்ள கெட்ட இரத்தத்தைச் சுத்த மாக்கிய கடித்த இடத்தில் துவர்ப்பு, இனிப்பு, குளிர்ச்சியுள்ள பொருட்களை நெய்யில் கலந்து பூசவேண்டும். (6)

கெட்ட இரத்தத்தை எடுக்கும் முறையில் அதிக இரத்தம் வெளிப்படுத்தப்பட்டதா அல்லது குறைந்த அளவில் வெளிப் படுத்தப்பட்டதா அல்லது தேவையான அளவு வெளிப்படுத்தப் பட்டதா என இவற்றின் குறிகளை சிராவ்யத விதி என்னும் அத்தியாயத்தில் கண்டபடி அறிந்து கொள்க..

கடித்த இடத்தில் வீக்கம், தளர்ச்சி, எரிச்சல், செந் நிறம், வலி இவை ஏற்படாவிடில், அட்டை கெட்ட இரத் தத்தை நன்கு உறிஞ்சிவிட்டது என அறிந்து கொள்ளலாம்.

இரத்தம் கெட்டிருந்தால் அதை நீக்க குடுவை போன்ற கருவியைப் பயன்படுத்தக் கூடாது.

அலாபூ என்றால் சுரக்குடுக்கை. அந்தக் குடுக்கை யினால் செய்யப்படும் யந்திரம் அலாபூ யந்திரம். அந்த யந்திரத்தில் நெருப்புச் சுவாலையைவிட்டு, உள்ளே இருக்கும் வாதத்தை வெளிப்படுத்தி, அதை நோயுள்ள இடத்தில் கவிழ்த்து வைத்தால், அது அங்குள்ள கபத்தினால் உண்டா கும் தோஷத்தை அல்லது இரத்தத்தை உறிஞ்சிவிடும். கடீயந் திரம் என்பது சிறு குடுவைபோன்ற பாத்திரம். இவ்விரண்டு கருவிகளையும், ரத்த பித்தத்தினால் இரத்தம் கெட்டிருந் தால் அதை நீக்கப் பயன்படுத்தக்கூடாது. அதற்குக் காரணம், அந்தக் கருவிகளுக்கு நெருப்பின் தொடர்பு இருப்பதால் பித் தத்தை சீற்றமடையச் செய்கிறது.

வாத கபத்தினால் கெடுதலடைந்த இரத்தத்தை நீக்க அலாபூ யந்திரம், கடீயந்திரம் என இவற்றை உபயோகிக்க வேண்டும்.

கபத்தினால் கெட்டுப்போன இரத்தம் உறைந்துவிடுவ தனால், அதை மாட்டுக் கொம்பினால் எடுக்கக்கூடாது. வாத பித்தத்தினால் கெடுதலடைந்த இரத்தத்தைக் கொம்பினால் எடுக்க வேண்டும். கெட்ட இரத்தம் எடுக்க வேண்டிய இடத் தில் கொம்பை வைத்து அதைச் சுற்றி மெல்லிய துணிமடிப்பை வைத்து உறிஞ்ச வேண்டும்.

இம்முறைப்படியே அலாபூ யந்திரம், கடீ யந்திரம் இவற்றைச் சூடாக்கி, வாத கபத்தினால் கெடுதலடைந்த ரத்தத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்த வேண்டும். (7)

கெட்ட இரத்தத்தைக் கீறி வெளிப்படுத்துமுன் நரம்பு கள், மூட்டுகள், எலும்புகள், மர்ம ஸ்தானங்கள் இவற்றை விட்டு, மேல்பகுதியை துணிப்பட்டை அல்லது கயிற்றினால் சமமாகக் கட்ட வேண்டும்.

கீழிலிருந்து மேல்நோக்கிக் கீற வேண்டும். ஆழமாகவோ அகலமாகவோ. குறுக்காகவோ ஒன்றின்மேல் ஒன்றாகவோ

கீறக்கூடாது. ஒரே இடத்தில் தங்கியுள்ள கெட்ட இரத்தத்தைக் கீறி வெளிப்படுத்த வேண்டும்.

உணர்வற்ற இடத்திலுள்ள கெட்ட இரத்தத்தை நீக்க கொம்பு அல்லது அலாபூ அல்லது கடீ யந்திரம் இவற்றுள் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும்.

உறைந்துபோன கெட்ட இரத்தத்தை எடுக்க அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும்.

உடல் முழுவதும் பரவியுள்ள கெட்ட இரத்தத்தை, கருநிற இரத்தக் குழாயைக் கீறி வெளிப்படுத்த வேண்டும்.

கெட்ட இரத்தம் ஒரே இடத்தில் தேங்கி உறைந்திருந்தால் அதைக் கீறி வெளிப்படுத்த வேண்டும். கெட்ட இரத்தம் உள்ளடங்கியிருந்தால் அதை வெளிப்படுத்த அட்டையைப் பயன்படுத்த வேண்டும்.

தோலில் இருந்தால் அலாபூ, கடீ, கொம்பு இவற்றாலும், உடல் முழுவதும் பரவியிருந்தால் காரி இரத்தக் குழாயைக் கீறியும் கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

வாதத்தினால் கெட்டுப்போன இரத்தத்தைக் கொம்பினாலும், பித்த தோஷத்தினால் கெட்டுப்போன இரத்தத்தை அட்டையினாலும், கபத்தினால் கெட்டுப்போன இரத்தத்தை அலாபூ, கடீ, எனும் யந்திரங்களினாலும் வெளிப்படுத்த வேண்டும்.

கெட்ட இரத்தம் நீக்கப்பட்ட மனிதனுக்கு, குளிர்ச்சியான மேற்பூச்சு பூசுவதனால் வாதம் சீற்றமடைந்து குத்தல் வலி, அரிப்பு, வீக்கம் இவை உண்டாகின்றன. அவற்றை நீக்க சூடான நெய்யை அந்த இடத்தில் ஊற்ற வேண்டும்.
(8—12)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'ஜலௌகா விதி' எனும்
முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று

முப்பத்தாறாவது அத்தியாயம்

*சிராவ்யத விதி

'சிராவ்யத விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

இரத்தத்தை வெளிப்படுத்த பல முறைகள் முன்பு கூறப் பட்டுள்ளன. அவற்றுள் மற்ற [1]விரேசனம் போன்ற உபாயங் களிலும், இரத்தத்தை வெளிப்படுத்துவதால் நீங்கும் பிணிகளி லும், சிராவ்யதம் (காரி இரத்தக் குழாய்களைக் கீறிக் கெட்ட இரத்தம் வெளிப்படுத்தும் முறை) என்னும் முறை மிகச் சிறந்தது.

வயலின் கரை உடைந்து போனால் அதிலுள்ள தண்ணீர் வெளிச்சென்று பயிர் நீரற்று, அழிந்துவிடுவதுபோல், இந்த சிராவ்யதம் என்னும் சிகிச்சையினால் எல்லா நோய்களும் அகன்று விடுகின்றன. (3)

1. சிராவ்யதம் செய்ய வேண்டியதன் அவசியம்

உடல் சிகிச்சைகளில் வஸ்தி சிகிச்சையை, பாதி சிகிச்சை அல்லது முழு சிகிச்சையாக ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பது போல், [2]சல்ய தந்திரத்தில் சிராவ்யதம் எனும் சிகிச்சையை பாதி சிகிச்சையாகவோ அல்லது முழு சிகிச்சையாகவோ ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

எல்லா நோய்களுக்கும் முக்கியக் காரணமாயிருப்பது இரத்தமாகும். கெட்ட இரத்தத்தைவிட உடலைக் கெடுக்கக் கூடியது வேறு ஒன்றுமில்லை. ஆகையினால் கெட்ட இரத் தத்தை வெளிப்படுத்தும் சிகிச்சையை முதலில் கூறுகிறோம். (4—5)

---

*சிராவ்யத விதி—சிரை என்றால் காரி ரத்தக் குழாய். அந்தக் குழாய்களைக் கீறி இரத்தம் வெளிப்படுத்தும் முறைகளைக் கூறுவதால் இவ் வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

1. விரேசனம்—மலத்தை இளக்கி வெளிப்படுத்தும் சிகிச்சை.
2. சல்ய தந்திரம்—சல்ய சிகிச்சை.

2. சுத்தமான இரத்தத்தின் இலக்கணமும் பயனும்

உணவின் சாரமாய், கெடுதலடையாத ரசம் எனும் நீர், கெட்டுப்போகாத [1]ரஞ்சகம் எனும் பித்தத்துடன் கலந்து இரத்தமாக மாறுகிறது.

இரத்தத்தின் நிறம் பட்டுப்பூச்சியின் நிறம் போன்றும், முயல் ரத்தத்தின் நிறம் போன்றும், மணி, அரக்கு, சிகப்புத் தாமரை, பொன் இவற்றின் நிறம் போன்றும் இருக்கும். கழுவினாலும் இரத்தத்தின் சிவப்புக்கறை மாறாது.

இது இனிப்புச் சுவையும், சிறிதளவு உப்புச் சுவையும் கொண்டது. பசையுள்ளது. குளிர்ச்சியில்லாமலும் சூடில்லாமலும் நடுநிலையில் உள்ளது. குரு குணமுள்ளது. பித்தத்திற்கு உள்ள தான [2]ஸஞ்சயம் [3]ப்ரகோபம், [4]உபசமனம் என்ற மூன்று குணமும் இரத்தத்திற்கும் உண்டு. இயற்கையிலேயே தெளிவானதும் உஷ்ண குணமுள்ளதாகவும் ஆகும்.

இந்த இரத்தத்தைச் சிலர் தூஷ்யம் என்றும், மற்றும் சிலர் தோஷம் என்றும் வேறு சிலர் தூஷ்யம், தோஷம் இரண்டும் என்றும் கூறுகின்றனர். (6)

முறையான உணவு, பழக்கவழக்கங்கள் இவற்றைக் கடைபிடிப்பதனால் சுத்தமடைந்த இரத்தம், வலிவு, நிறம், நல்வாழ்வு இவற்றை அளிப்பதுடன் ஆயுளை வளர்ப்பதற்கும் முக்கிய காரணமாகிறது.

இதற்கு எதிரிடையான கேடடைந்த ரத்தம், சரத்காலத்தின் (ஐப்பசி, கார்த்திகை) இயற்கையினால் கெட்டுப்போன

---

1. ரஞ்சகம்—உணவு ரசத்தை நிறம் மாற்றும் ஆமாசயத்தில் அடங்கிய பித்தம்.
2. ஸஞ்சயம்—ஒரே இடத்தில் சேர்ந்திருப்பது.
3. ப்ரகோபம்—சீற்றத்தை அடைவது.
4. உபசமனம்—தணிப்பது.

இரத்தம் இவைகள், [1]அபிஷ்யந்தம், [2]அதிமந்தம், [3]சுக்ரம் [4]அர்ம [5]திமிரம் [6]ரக்த ராஜி என்ற கண்நோய்கள், தலையில் குத்தல் வலி, பிளப்பது போன்ற வலி, எரிச்சல், அரிப்பு முதலிய தலையில் ஏற்படும் பிணிகள், காதுநோய், வாயில் அழற்சி, மூக்கில் கெட்ட நாற்றம், வாயில் குழகுழப்பு, தோல் நோய், குன்மம், மண்ணீரல் நோய், பெருங்கட்டி, அக்கி, காய்ச்சல், இரத்த பித்த நோய், குஷ்டம், சிறுகட்டிகள், யானைக்கால், ஆண்குறியில் தோன்றும் நோய், வீக்கம், வாத ரத்தம் எனும் நோய், ரத்தம் கலந்த சிறுநீர், சிறிய ரோகங்கள், சடராக்னிக் குறைவு, குரல் தடைபடுதல், உடல் பளு, அயர்வு, சுவையின்மை, புளிப்பு ஏப்பம், வாயில் உப்புச் சுவை, சினம், மோகம், வியர்வை, மூர்ச்சை, தடிபோல் உணர்வற்றுவிழுதல், நடுக்கம், சோம்பல் ஆகியவற்றை உண்டாக்கும்.

எல்லா தோஷங்களுக்கும் எதிரிடையான குளிர்ச்சி, உஷ்ணம், ஸ்நிக்தம், வறட்சி இக்குணமுள்ள பொருட்களால் நீங்கக்கூடிய பிணிகள் நீங்காவிடில் இரத்தம் சீற்றமடைதலே காரணமென அறிந்துகொள்ள வேண்டும்.

ஆகையினால் கெட்டுப்போன அதிகமான இரத்தத்தை வெளிப்படுத்த அதற்குத்தகுந்த காரி இரத்தக் குழாயைக் கீற வேண்டும். (7)

3. சிராவ்யதம் செய்யத் தகாதவர்கள்

எண்ணெய் குடித்தவன், எண்ணெய்ச் சிகிச்சை செய்து கொண்டவன், வியர்வைச் சிகிச்சை செய்து கொண்டவன், வாந்தி, பேதி, வஸ்தி இவற்றில் ஏதாவது ஒன்றிற்குச் சிகிச்சை பெற்றவன், கருவுள்ளவள், ஈன்றவள், சீரணமாகாதவன், காமாலைப் பிணியுள்ளவன், அலி, பதினாறு வயதுக்குக் குறைந்தவன், எழுபதுவயதிற்கு மேற்பட்டவன், காயமடைந்

1. அபிஷ்யந்தம்—கண்களில் பலவிதக் கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல்.
2. அதிமந்தம்—ஒற்றைத் தலைவலியுடன் கூடிய கண் கோளத்தில் தோன்றும் நோய்.
3. சுக்ரம்—கண் விழியில் தோன்றும் நோய்.
4. அர்ம—கண்களில் தோன்றும் நரம்புக் கொடி.
5. திமிரம்—கண் மறைப்பு.
6. ரக்தராஜி—கண்ணில் தோன்றும் கடுகு அளவுள்ள கட்டி.

தவன், அதிகம் மலம் கழிப்பவன், வாந்தி எடுப்பவன், இழுப்பு, இருமல் நோயுற்றவன், வயிற்று நோய் உள்ளவன், இரத்த பித்த நோய் உள்ளவன், மூலநோய் உள்ளவன், பாண்டு ரோகம் உடையவன், உடல் முழுவதும் வீக்கமுடையவன் என்ற இவர்களுக்கு சிராவ்யதம் என்ற கெட்ட இரத்தத்தை வெளியெடுக்கும் சிகிச்சை செய்யக்கூடாது.

4. கீறக்கூடாத காரி இரத்தக் குழாய்கள்

கெட்ட இரத்தம் எடுக்க வேண்டிய இடத்தைத் தகுந்தவாறு கட்டாமல் சிகிச்சை செய்யக்கூடாது. குறுக்குவாட்டிலும் செய்யக்கூடாது. சிரை எனும் காரி இரத்தக்குழாய் கையில் அகப்படாத நிலையிலும், அதிகக் குளிர், அதிகச்சூடு உள்ள காலங்களிலும், அதிகக் காற்று, மேக மூட்டம் உள்ள நேரங்களிலும் இச்சிகிச்சை செய்யக்கூடாது.

எண்ணெய் குடித்தவர்களுடைய கெட்ட இரத்தத்தை நன்றாகக் கீறி வெளிப்படுத்தினாலும் அது வெளிவராது. வந்தாலும் அதிகம் பெருகும்.

எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுடைய தோஷங்கள் நன்றாக திரவமாகி இரத்தத்துடன் கலந்து நன்கு பெருகுகிறது.

நஞ்சு கலந்த இரத்தத்திலும், ஒரு நோயைத் தொடர்ந்து வரும் மற்றொரு நோயிலும், மிகவும் தேவையான இடத்திலும் கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தும் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

நோய்க்கு ஏற்றவாறு கெட்ட இரத்தம் வெளிப்படுத்தும் இடங்களைப்பற்றிக் கூறுவோம். (8)

5. கீற வேண்டிய காரி இரத்தக் குழாய்கள்

தலையிலும், கண்களிலும் உண்டாகும் நோய்களில் நெற்றி, அல்லது மூக்கின் பக்கம், கண்களின் ஓரம் இவற்றிலுள்ள காரி இரத்தக் குழாயைக் கீறி கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

காதுகளில் ஏற்படும் நோய்களில் காதுகளைச் சுற்றியுள்ள இடங்களில் காரி இரத்தக் குழாயைக் கீறி கெட்ட இரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

மூக்கில் தோன்றும் பிணிகளில் மூக்கின் நுனியிலும் முற்றின ஜலதோஷத்தில் மூக்கிலும் நெற்றியிலும் உள்ள காரி ரத்தக் குழாயைக் கீறி ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

முகத்தில் தோன்றும் நோய்களில் நாக்கு, உதடு, கன்னம், தாடை இவற்றில் உள்ள ரத்தக் குழாயிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். கழுத்துக்கு மேல் பகுதியில் உள்ள உறுப்புகளில் தோன்றும் நரம்பு முடிச்சு நோய்களில் கழுத்து, காது, பொட்டு, தலை இவற்றில் ஓடுகிற காரி இரத்தக் குழாய்களிலிருந்து கெட்ட இரத்தத்தை வெளிக்கொணர வேண்டும்.

காக்காய் வலிப்பு எனும் நோயில், கன்னங்கள் சேரு மிடத்தில் உள்ள காரி இரத்தக் குழாயிலிருந்தும், பைத்தியம் பிடித்திருக்கும்போது, மார்பு, கண் ஓரங்கள், நெற்றி இவற் றில் உள்ள காரி இரத்தக் குழாய்களையும், பெரிய கட்டி களிலும், பக்கச் சூலைகளிலும், அக்குள், இரு மார்பகத்தின் நடுவில் உள்ள காரி இரத்தக் குழாய்களையும் கீறி, இரத் தத்தை அப்புறப்படுத்த வேண்டும். நான்காவது முறைக்காய்ச்ச சலில் தோள்களுக்குக் கீழேயுள்ள ஏதாவது ஒரு கெட்ட ரத்தக் குழாயைக் கீறி இரத்தத்தை எடுக்க வேண்டும். மூன்றாவது முறைக்காய்ச்சலில் தோள்பட்டைகளின் முக்கூட்டுப் பகுதியி லுள்ள கெட்ட இரத்தக்குழாயைக் கீறியும், சீதபேதியிலும், வயிற்றுவலியிலும், இடுப்பின் பின்புறத்தில் சுற்றிலுமுள்ள இரண்டு அங்குலம் உள்ள பகுதியில் இருக்கிற கெட்ட இரத்தக் குழாய்களைக் கீறியும், ஆண்குறியில் தோன்றும் நோய், விந்துவில் ஏற்படும் பிணிகள் இவற்றில் ஆண்குறியில் உள்ள இரத்தக் குழாய்களைக் கீறியும், தொண்டையில் உண்டாகும் நோய்களில் தொடையில் உள்ள காரி இரத்தக் குழாயைக் கீறியும், முழங்காலுக்கு மேல் தொடையில் தோன்றும் வாத வியாதிகளில் முழங்கால் மூட்டுக்கு மேலே அல்லது கீழே நான்கு அங்குல தூரத்தில் உள்ள இரத்தக் குழாயைக் கீறியும், ஒன்றின்மேல் ஒன்றாக உண்டாகும் கட்டிகளில், தொடைக்கு இரண்டு அங்குலம் கீழே உள்ள இந்திரவஸ்தி எனும் மர்ம ஸ்தானத்தில் உள்ள காரி இரத்தக் குழாயைக் கீறியும் கெட்ட இரத்தத்தை நீக்க வேண்டும்.

முழங்காலில் உண்டாகும் நரித்தலை வாய் எனும் வீக்கத் திலும், தொடையில் உண்டாகும் வலியிலும், கணுக்காலுக்கு மேலே நான்கு அங்குல தூரத்தில் உள்ள காரி இரத்தக் குழா யைக் கீறி, கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

யானைக்கால் நோயின் சிகிச்சையைப்பற்றி, யானைக் கால் சிகிச்சைப் பகுதியில் கூறப்படும்.

கால்களில் தோன்றும் எரிச்சல், கூசுதல், நகச்சுற்று, வாத ரத்தநோய், குதிகால்களை ஊன்றி நடக்க முடியாமல் ஏற்படும் நோய், உள்ளங்கால்களில் ஏற்படும் பிளப்பு, வெடிப்பு போன்ற நோய் இவற்றில் காலில் உள்ள க்ஷிப்ரம் எனும் மர்மஸ்தானத்திற்கு இரண்டு அங்குலம் மேல் உள்ள காரி இரத்தக் குழாயைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். ஒரு பக்கத்திலுள்ள கை கால் இவற்றிற்குக் கூறியபடி மற்ற கை கால்களுக்கும் சிகிச்சையை அறிந்துகொள்ளவும்.

மண்ணீரலில் தோன்றும் கட்டியில் இடது கையின் நடுவில் செல்லுகிற காரி இரத்தக் குழாயையும், கல்லீரலில் தோன்றும் நோயில் வலது கையின் நடுவில் செல்லும் காரி இரத்தக் குழாயையும் கீறி கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இருமல், இழுப்பு என்ற நோய்களில் கைகளின் நடுவில் செல்லுகிற காரி இரத்தக்குழாயை தோளில் தொடங்கி கணுக்கை வரையிலும் பரவும் வலியுடன் கூடிய வாத நோயில் முழங்கால் மூட்டுக்கு மேலே அல்லது கீழே நான்கு அங்குல தூரத்தில் உள்ள காரி இரத்தக் குழாயைக் கீறியும், கை உலர்ந்து போதல், கைகள் உணர்ச்சியற்றுப்போதல் என்ற நோய்களில் முழங்கால் மூட்டுக்கு மேலே அல்லது கீழே நான்கு அங்குல தூரத்தில் உள்ள காரி இரத்தக் குழாயையும் கீறி, கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நோய் அதிகப்பட்டு காரி இரத்தக்குழாய் வெளிப்படையாகத் தெரியாவிடில் வேறு நோய்க்குக் கூறியபடி அருகிலுள்ள காரி இரத்தக் குழாயைக் கீறி கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். (9)

6. கீறல் சிகிச்சைக்கு முன் செய்ய வேண்டியவை

இந்தச் சிகிச்சை செய்யுமுன் படுக்கை, இருக்கை, நீர் நிறைந்த பாத்திரம், கட்டு கட்டுவதற்கான துணி இவற்றைத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தகர விதை, ஏலரிசி, கற்பூரம், கோஷ்டம், வட்டத் திருப்பி, வாயுவிடங்கம், தேவதாரு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓட்டடை, மஞ்சள், எருக்கம் செடியின் மொட்டு, புங்கு,

இவற்றைக் கிடைத்தவரையிலும் தயார்செய்து தூளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தூளை இரத்தப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தலாம்.

இரத்தப் பெருக்கை நிறுத்துவதற்குக் கீழ்க்கண்ட பொருட்களைத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பாச்சோத்தி, அதிமதுரம், ஞாழல் பூ, பத்தங்கம், காவி, ரஸாஞ்சனம், இலவம் பிசின், சங்கு, யவஅரிசி, கோதுமை, உளுந்து இவற்றைத் தூள் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் ஆல், அரசு, மருதமரம், புரசு, தானிக்காய், ஆச்சா மரம், வெண் மருது, தனுகு மரம், காட்டாத்திப்பூ, ஸால மரத்தின் பிசின், கருவேலம், திந்துகம் இவற்றின் பட்டைகள், மொட்டுகள், பிசின், தேவதாருவின் பிசின், மண், ஓடு, தாமரைத் தண்டு, அஞ்சனக்கல் இவற்றையும் தூள் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பட்டுத் துண்யை எரித்துத் தயாரித்து மை, கொம்பரக்கு, கடல்நுரை, இவற்றின் தூளையும் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அப்படியே அதிக இரத்தப் பெருக்ினால் உண்டாகும் விபத்துக்களை நீக்கத் தேவையான கருவிகளையும், பொருட்களையும் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

கருவிகளையும் பொருட்களையும் தயார் நிலையில் வைத்திருக்கும் மருத்துவருக்கு மதிமயக்கம் ஏற்படாதல்லவா? *(10)*

7. சிகிச்சை முறை

நோயாளிக்கு மங்களச் சடங்குகள் செய்து, நோய், பலம், நோயாளிக்கு ஒத்துக்கொள்ளக்கூடியது இவற்றை ஆராய்ந்து எண்ணெய்ப் பசையுள்ள காற்று நிறைந்த இடங்களில் வாழும் உயிரினங்களின் மாமிச ரசம், கஞ்சி, இவற்றைக் குடிக்கச் செய்ய வேண்டும். இரண்டரை நாழிகை நேரம் களைப்பாறச் செய்து காலையிலோ, மாலையிலோ மேற்கண்ட சிகிச்சை செய்ய வேண்டும்.

நெருப்பு, சூடு, உஷ்ணமான நீராவி இவற்றில் ஏதாவது ஒன்றினால் சிகிச்சை செய்ய வேண்டிய இடத்தில் வியர்வையை உண்டாக்க வேண்டும்.

முழங்கால் அளவு உயரமுள்ள மெதுவான இருக்கையில் நோயாளியை அமர்த்தி, முழங்கால்களின் மேல் தனது முழங்

கைகளை வைத்துக் கொள்ளச் செய்து, கால்களைச் சமமாக அமைந்திருக்கும்படி கதிரவனைப் பார்க்கும் நிலையில் இருக்கச் செய்ய வேண்டும்.

பிறகு நோயாளியின் தலைமயிருக்குக் கீழே, நெற்றியிலே துணி அல்லது தோல் அல்லது மரவுரியால் கட்டுக் கட்ட வேண்டும். முழங்கால்களின்மேல் வைத்துக் கொண்டிருக்கும் இரண்டு கைகளின் முட்டிகளிலும் துணியைச் சுருட்டிக் கொடுத்து அவற்றினால் கழுத்தின் பின்புறத்தில் காதுகளுக்குக் கீழ்ப் பகுதியில் செல்லும் 'மந்யா' என்னும் இரத்தக் குழாய் களை அழுத்திப் பிடித்துக்கொள்ளச் செய்து, பற்களை நன் றாகக் கடிக்கச் செய்ய வேண்டும். நோயாளியின் கன்னங்கள் உப்பும்படிச் செய்யச் சொல்ல வேண்டும்.

பிறகு நோயாளியின் பின்பக்கம் நிற்கும் மற்றொரு மனிதன், தனது இடது ஆள்காட்டி விரலினால் கழுத்தின் மேல் உள்ள ரத்தக்குழாய்களை மெள்ள அழுத்தியபடி, கழுத்தைத் துணியால் நோயாளிக்கு வலி ஏற்படாதபடி கட்ட வேண்டும்.

இந்த முறை வாயின் உட்புறமுள்ள ரத்தக் குழாய்கள் நீங்கலாக வெளிப்புறத்து உள்ள இரத்தக் குழாய்களைக் கட்டு வதற்கானது.

அதன்பின் மருத்துவர் தனது கட்டை விரலால் நடுவிர லின் முனையை இழுத்து வேகமாக நோயாளியின் ரத்தக் குழாயைச் சுண்ட வேண்டும். சுண்டுவதனால் நரம்புகள் வெளிப் படையாகத் தெரியும். அவை புடைத்துக் கொண்டிருக்கும். தொட்டுப் பார்க்கவும் முடியும். அப்பொழுது இடது கையில் வைத்திருக்கும் சிறுகோடரி போன்ற ஆயுதத்தைக் குழாய்களின் நடுவில் வைத்து, வலது கையின் நடுவிரல் அல்லது கட்டை விரலின் நடுப்பகுதியினால் அழுத்த வேண்டும். அப்படிச் செய் வதால் ஆழமாகத் தோலின் உள்பக்கத்தில் மறைந்திருக்கிற ரத்தக்குழாய் மேலே தெரியும்.

கழுத்துப் புடைக்கும்படி இருமச் செய்வதாலும், கோபம் அடையும்படிச் செய்வதாலும் ரத்தக் குழாய்கள் இரத்தத்தி னால் நிரம்பி விடுகின்றன. அப்பொழுது கெட்ட இரத்தம் வெளிவந்துவிடும்.

மூக்கின் நுனியைக் கட்டை விரலினால் மேலே தூக்கி, மூக்கின் அருகில் உள்ள இரத்தக் குழாயை நெல் போன்ற முகமுடைய ஆயுதத்தினால் கீற வேண்டும். (11)

நாக்கின் கீழ் உள்ள இரத்தக் குழாயைக் கீற வேண்டுமானால் நாக்கை உயரே தூக்கச் செய்து நாக்கின் நுனியை பற்களினால் அழுத்தச் செய்து கீற வேண்டும்.

தாடை, பற்களின் அடிப்பக்கம் இவற்றில் இரத்தம் வெளிப்படுத்த வேண்டுமானால் வாயைத் திறக்கச் செய்து வெளிப்படுத்த வேண்டும். கழுத்து நோயில் இரண்டு மார்பகத்தின் மேலே கீற வேண்டும்.

வயிற்றிலும், மார்பிலும் உள்ள இரத்தக்குழாயைக் கீற வேண்டுமானால் நோயாளியின் மார்பை விரிக்கச் செய்தும் தலையை உயரே தூக்கச் செய்தும் பிறகு கீற வேண்டும்.

நோயாளியின் கைகளை உயரே தூக்கச் செய்த பின் விலாப்பக்கத்தில் உள்ள இரத்தக் குழாயைக் கீற வேண்டும். ஆண்குறியை உயரே தூக்கச் செய்து ஆண் குறியில் உள்ள இரத்தக் குழாயைக் கீற வேண்டும்.

இடுப்பின் பாகம், பின்பக்கம், தோள் இவற்றில் உள்ள இரத்தக் குழாய்களைக் கீற வேண்டுமானால் இடுப்பின் பின் பாகத்தை உயர்த்தும்படிச் செய்து பேசாமலும் அசையாமலும் இருக்கச் செய்தபின் கீற வேண்டும்.

தோளில் தொடங்கி முழங்கையிலும், அதற்குக் கீழேயுள்ள பகுதியிலும் பரவும் ஒருவகை வலியுடன் கூடிய வாதநோய், காலில் உண்டாகும் நரம்புக் குடைச்சல்வலி, இவற்றில் நோயாளியின் முழங்கைகள், முழங்கால்கள் இவற்றை விரித்து அமைதியாக அமரச் செய்து, பெரு விரலை உள்மடக்கி வைத்து, கெட்டியாக மூடச்செய்தபின், கீற வேண்டிய இடத்திலிருந்து நான்கு அங்குலம் மேலே துணி அல்லது கயிற்றினால் கட்ட வேண்டும். அதன் பின் கீற வேண்டும்.

காலில் உள்ள இரத்தக் குழாயைக் கீற வேண்டுமானால் ஒரு காலை நன்றாக ஊன்றிக் குத்திடச் செய்து மற்றொரு காலைச் சிறிதளவு மடக்கி அதை மற்ற, முதலில் கூறிய காலின்மேல் வைத்து முழங்கால் மூட்டிற்குக் கீழே, கணுக்கால்வரை கைகளால் பிடித்துவிட்டபின், கீற வேண்டிய இடத்-

திலிருந்து நான்கு அங்குலம் மேலே, துணி அல்லது கயிற்றினால் கட்டியபின் கீறல் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

இதே விதமாக கூறப்படாத இடங்களில் கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்பொழுது இடங்களுக்கு உகந்தவாறு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். (12)

மாமிசம் அடர்த்தியாக உள்ள இடங்களில் நெல் போன்ற முகத்தையுடைய ஆயுதத்தினால் யவஅரிசி அளவு கீறவேண்டும். மற்ற இடங்களில் அரை யவஅரிசி அளவு அல்லது நெல் அளவு கீற வேண்டும்.

எலும்புகளுக்கு மேல் பகுதியிலுள்ள இரத்தக் குழாயைக் கீற வேண்டுமானால் யவ அரிசியின் பாதி அளவு கோடரி போன்ற சிறுவாளினால் கீற வேண்டும்.

பொதுவாக மருத்துவர் கீறல் சிகிச்சையைச் செய்ய வேண்டிய எல்லா இடங்களிலும், எப்பொழுதும் மிக நீளமற்றதும், பருமன் அல்லாததும், வளையாததும், உடையாததும், மர்மஸ்தானங்களில் காயம் ஏற்படுத்தாததுமான ஆயுதங்களையே பயன்படுத்த வேண்டும். அதனால் விரைவில் சிகிச்சை கைகூடும். (13)

ஒரே முறை கீறியவுடன் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, ஒரு முகூர்த்த நேரத்திற்குள் தானாகவே நின்றுவிட்டால், நன்றாகக் கீறல் செய்யப்பட்டதற்கு அது அடையாளமாகும்.

கீறியபின் சிறிதளவு ரத்தமே வெளிப்பட்டு, தைலம், சூர்ணம் இவற்றைப் பயன்படுத்தியும் இரத்தம் துளித்துளியாக வெளிவந்தால், கீறல் சிகிச்சை நன்கு செய்யப்படாததற்கு அது அறிகுறியாகும்.

கீறியபின் இரத்தம் நிற்காமல் இரைச்சலுடன் அதிகம் வெளிவந்தாலும், மிகுந்த முயற்சியினாலும் நிறுத்தப்பட்டாலும், அதிகம் கீறப்பட்டதற்கு அது அடையாளமாகும். (14—15)

நன்றாகக் கீறல் சிகிச்சை செய்யப்பட்டிருந்தபோதிலும் மூர்ச்சை, பயம், கருவிகள் நழுவிப்போதல், இரத்தம் மிகக் கட்டியிருத்தல், அதிகம் உணவு உட்கொண்டிருத்தல், வலிமைக் குறைவு, மழுங்கிய ஆயுதம், சிறுநீர், மலம் வெளிப்படுவது, வியர்வை அதிகம் வெளிவராதிருத்தல், கபத்தினால் புண்ணின் துவாரம் அடைபட்டிருத்தல் போன்ற காரணங்களால் இரத்தம்

வெளிவராவிடில் அதற்குக் காரணமறிந்து அதற்கேற்றபடி சிகிச்சை செய்ய வேண்டும்.

கீறி எடுக்க வேண்டிய இரத்தக் குழாயின் வாயில் எண்ணெயும், உப்பும் கலந்த தகரவிதைச் சூர்ணத்தைப் பூச வேண்டும். நோயாளியின் பின்புறத்தைத் தட்டிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் இரத்தம் நன்கு பெருகும். இரத்தம் நன்றாக வெளிவந்தபின், கபத்தையும் வாதத்தையும் தணிப்பதற்கும், இரத்தம் தடைபடாமல் வருவதற்கும், உப்புக் கலந்த சூடான எண்ணெயை இரத்தம் எடுக்க வேண்டிய குழாயின் வாயில் ஊற்ற வேண்டும். *(16)*

செந்துருக்கம் பூவிலிருந்து மஞ்சள் நிறமுள்ள திரவம் வெளிவருவது போல் முதலில் கெட்ட இரத்தம் வெளியில் நன்றாகப் பெருகித் தானாக நின்றுவிடும். அதற்குமேல் பெருகும் இரத்தம் சுத்தமானது என அறிந்துகொள்ள வேண்டும். அந்த இரத்தத்தை வெளியில் எடுக்கக் கூடாது. *(17)*

இரத்தம் வெளிப்படுத்தும் நோயாளிக்கு இரத்தம் எடுக்கும்போது மயக்கம் ஏற்படுமானால், உடனே கருவியை எடுத்துவிட்டுக் குளிர்ந்த நீரில் நனைத்த கையினாலும், விசிறியின் காற்றினாலும், இன்பமான வார்த்தைகளாலும், மயக்கத்தைப் போக்க முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு இரத்தம் எடுக்கும்பொழுதும் மறுபடியும் மூர்ச்சை ஏற்பட்டால் அன்றையதினம் சிகிச்சையை நிறுத்திவிட வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் சிகிச்சையைத் தொடங்க வேண்டும். ஆனால் அப்பொழுது எடுக்கும் இரத்தத்தின் அளவு பதின்மூன்றரை பலமாக இருக்க வேண்டும். இதற்கு மேலும் இரத்தம் எடுக்க வேண்டுமானால் நோயாளியின் பிணி, உடல், பருவம், வலிமை இவற்றை மனத்தில் கொண்டு செய்ய வேண்டும். *(18)*

8. வாதம் முதலான தோஷங்களால் கெட்டுப்போன இரத்தத்தின் இலக்கணம்

நுரை, சிவப்பு, கருநிறம், வெளுப்பு, வறட்சி, கெட்டித்தனமின்மை, துவர்ப்புச் சுவையைத் துணைச் சுவையாகக் கொளல், இரும்புக்கு ஈடான நாற்றம், வேகமாகப் பெருகும் தன்மை, குளுமை என இப்படியுள்ள இரத்தத்தை வாத தோஷத்தினால் கெட்டுப்போன இரத்தம் என அறிந்துகொள்ளவும்.

வெளிப்படும் இரத்தம், ஒட்டடை, அஞ்சனக்கல் இவற்றின் நிறம் போன்றதும், கரு நிறமுள்ள நீர் நிறம் போன்றதும், மஞ்சள், பச்சை கலந்த நிறம் கொண்டதும், கெட்ட நாற்றமுடையதும், மீனின் வாடை வீசுவதும், உவர்ப்புச் சுவையுடையதால் ஈக்கள் மொய்க்காததும், சூடாகியிருப்பதால் திரவமானதும், மயில் தோகை போன்ற பல வர்ணங்களையுடையதும், பசுவின் சிறுநீர் போன்ற நிறமுடையதுமாக அமைந்திருந்தால் அந்த இரத்தம், பித்த தோஷத்தினால் ஏற்பட்டது என அறியவும்.

மலை அத்திப்பூ, காவி இவற்றின் நிறமுடையதும், வெண்ணிறமுடையதும், குளிர்ச்சி, பசை, திரவம், கெட்டியான தன்மை, பிசுபிசுப்பு இவற்றையுடையதும், நூல் போன்றதும், காயத்தின் வாயிலேயே தங்கிவிடக் கூடியதும், உப்புச் சுவை கொண்டதும், நிணநீருக்குச் சமமான நாற்றமுடையதுமான இரத்தம் கபதோஷத்தினால் கெட்டுப்போன இரத்தம் எனத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

இரண்டு தோஷங்கள் சேர்ந்து கெட்டுப்போன இரத்தத்தை இரண்டு தோஷங்களுக்கும் தனித்தனியே கூறப்பட்ட கெட்டுப்போன இரத்தத்தின் அறிகுறிகளைக் கண்டு அறிந்து கொள்ள வேண்டும்.

வெண்கலத்தைப் போன்ற நீல நிறமுள்ளதும், அழுக்கும் நாற்றமும் கொண்டதுமான இரத்தம், வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் சேர்க்கையினால் கெட்டுப்போனது எனப் புரிந்து கொள்ளவும். சுத்த இரத்தத்தைப்பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது.

இரத்தம் எடுக்கப்பட்ட இடத்தை மேலிருந்து கீழாகக் கட்டை விரலால் அழுத்திக்கொண்டு கருவியை மெள்ள வெளிப்படுத்தி அவனைத் தேற்ற வேண்டும்.

பிறகு எண்ணெயில் நனைத்த பஞ்சை, கீறப்பட்ட இடத்தில் வைத்துக் கட்ட வேண்டும். அதன்பின் நோயாளியைச் சுகமான படுக்கையில் படுக்கச்செய்தல் வேண்டும். (19)

அதன் பிறகும் இரத்தக்கசிவு ஏற்பட்டால் முன்னால் கூறப்பட்ட, இரத்தத்தை நிறுத்துவதற்கான சூர்ணத்தை, அதன் மேல் தூவி, விரலால் மெள்ள அழுத்தவேண்டும். பிறகு இலவ மரத்தின் பிசின், மயில் தோகையைச் சுட்ட சாம்பல்இவற்றை வைத்து இறுகக்கட்ட வேண்டும். அல்லது குளிர்ந்த நீரினால்

நனைக்கலாம். இனிப்பு, துவர்ப்புச் சுவையுள்ள உணவு, நீர் வகை இவற்றைப் பருகச் செய்யலாம். இனிப்பு, துவர்ப்புச் சுவையுள்ள பொருட்களால் அந்த இடத்தை நனைக்கலாம். மேற்பூச்சுமிடலாம். காற்றோட்டமுள்ள இடத்தில் வைத்து இளைப்பாறச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் இரத்தப்பெருக்கு நின்றுவிடும். பத்மகாதி கணத்தில் கூறப்பட்டுள்ள பொருட்களைக் கொண்டு கஷாயம் தயாரித்து சர்க்கரை, தேன் இவற்றுடன் கலந்து இனிப்புச் சுவையுடையதாக்கி அந்தக் கஷாயத்தைப் பருகச் செய்ய வேண்டும்.

கலைமான், மான், ஆடு, செம்மறியாடு, எருமை, பன்றி இவற்றின் ஏதாவது ஒன்றின் இரத்தக் குழாயைக் கீறி எடுத்த இரத்தத்தை அப்படியே, அல்லது காய்ச்சின நெய்யுடன் கலந்து பருகச் செய்வதோடு, பால், கரும்புச்சாறு இவைகளையும் தரலாம். (அல்லது)

மேல்கூறப்பட்ட பிராணிகளின் இரத்தத்தை தர்ப்பையினால் கலக்கி ஆசனத் துவாரத்தின் வழியே உட்செலுத்த வேண்டும். பிறகு நெய், கருப்பஞ்சாறு கலந்த கஞ்சியையும் மாமிச ரசத்தையும் குடிக்கச் செய்ய வேண்டும்.

பிறகு நோயாளியின் முன் கீறிய இடத்தையே கீற வேண்டும். இவை எல்லாவற்றைச் செய்தும்கூட இரத்தம் நிற்காவிடில் அதை நிறுத்த காரப்பொருட்களை இட வேண்டும். அல்லது

கீறப்பட்ட இரத்தக்குழாய் சுருங்குவதற்காக காய்ச்சப்பட்ட கருவியினால் சுடவேண்டும் இரத்தப்பெருக்கை ஒரு நிமிடமும் நீடிக்க விடக்கூடாது.

இரத்தம் குறைந்தவனுக்கு, வாதம் மர்மஸ்தானங்களை அடைந்து மூர்ச்சை, நினைவின்மை, தலையாட்டம், தலைச்சுற்றல், தொண்டை நரம்புகள் அசைவற்றுப்போதல், உணர்வற்று தடியைப்போல் கீழே விழுதல், முகவாய்க்கட்டை நழுவுதல், விக்கல், பாண்டு நோய், செவிடு, தாதுக்களின் அழிவு, நடுக்கவாதம் இவற்றை உண்டு பண்ணும். அல்லது யமன் உலகத்திற்கு அனுப்பி வைக்கும். (20)

உயிரினங்களுக்கு இரத்தமே உயிர். இரத்தக் குறைவினால் சடராக்னி குறைந்துவிடுகிறது. அதனால் வாதம்

அதிகரிக்கிறது. ஆகையால் நிலைமைக்கு ஏற்றவாறு [1]பிரும்மண சிகிச்சை செய்ய வேண்டும். (21)

மறுபடியும் கெட்ட இரத்தத்தை மாலை அல்லது மறுநாள் வெளிப்படுத்த வேண்டும். இதனாலும் கெட்ட இரத்தம் மீதியிருந்தால் அல்லது முழுவதும் வெளிப்படாமலிருந்தால் குளிர்ந்த நீரை ஊற்றவும். குளிர்ச்சியான பொருட்களால் மேற்பூச்சுப் பூசவேண்டும்.

மலம் கழிக்கச் செய்தல், பட்டினி கிடக்கச் செய்தல், பசையுள்ள இனிப்புச் சுவையுடன் கூடிய உணவு, நீர் இவற்றைப் பருகச் செய்தல் இவற்றால் இரத்தத்தைச் சுத்தமாக்கவும்,

ஒருமாதம் வரை எண்ணெய்ச் சிகிச்சைக்குக் கூறிய முறைகளைக் கடைபிடிக்கச் செய்து மறுபடியும் கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்த கீறல் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

சரியான முறைப்படி கீறாததாலும், அதிகம் கீறியதாலும், கோணலாகக் கீறியிருந்தாலும், குறுக்காகக் கீறியதாலும் தோன்றக்கூடிய தீமைகளை அதற்குத் தகுந்த சிகிச்சையைச் செய்து போக்கிக்கொள்ள வேண்டும். (22)

ஆயுதங்களைச் சரியான முறையில் பயன்படுத்தாதனால் சீற்றமடைந்த வாதம் முதலான தோஷங்கள் தங்கள் இடத்தை விட்டு இரத்தத்துடன் கலந்து மேல்நோக்கிச் செல்கின்றன. அந்த தோஷங்கள் தங்கள் இடத்திற்கு வந்து சேரும் வரை, உடலுக்கு ஏற்ற உணவு வகையையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்ற வேண்டும்.

கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தியபின், மிகவும் குளிர்ச்சியும், சூடுமில்லாததும், லகு குணமுள்ளதும், சடராக்னியைத் தூண்டுவதும், உடலுக்கு ஏற்றதுமான உணவையும் உட்கொள்ளச் செய்ய வேண்டும். (23)

கீறல் சிகிச்சை செய்த உடலில் இரத்தத்தின் நிலை சீர்குலைந்திருக்குமாதலால் சடராக்னியைக் கெடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். (24)

---

1. பிரும்மணம்—உடலைப் பருமனாக்கும் சிகிச்சை.

9. சுத்த இரத்தத்தின் இலக்கணம்

உடல் நிறமும், புலன்களும் தெளிவாயிருக்கும். புலன்களுக்குப் பொருட்கள் நன்கு புலப்படும். சீரணசக்தி தடைபடாதிருக்கும். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். புஷ்டியும் வலிவும் பெற்றிருக்கும். இவ்வித நிலையில் உள்ள மனிதன் ஆரோக்கியம் உள்ளவன் எனக் கருதப்படுகிறான். (25)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
''சிராவ்யத விதி'' எனும் முப்பத்தாறாவது அத்தியாயம்
முற்றிற்று.

முப்பத்தேழாவது அத்தியாயம்

*சல்யாஹரண விதி

'சல்யாஹரணம்' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். *(1—2)*

மேல்நோக்கியோ, கீழ் நோக்கியோ, குறுக்காகவோ இந்த மூவகை வழிகளில் சல்யங்கள் உடலுக்குள் புகலாம். அந்த உட்புகுதல் நேர்மை, கோணல் என இருவகையாகவும் பிரிக்கப்படுகிறது. *(3)*

1. சல்யம் புகுந்த இடத்தைக் கண்டு பிடிக்கும் முறை

கரு நிறமுள்ளதும், சிறுகட்டிகள் நிறைந்ததும், வீக்கமுள்ளதும், துன்பமளிப்பதும், அடிக்கடி இரத்தக் கசிவு உள்ளதும், நீர்க் குமிழிபோல் காணப்படுவதும், மெதுவான மாமிசம் உடையதுமான காயத்தைச் சல்யம் உட்புகுந்ததால் ஏற்பட்டதென அறியலாம். *(4)*

சல்யம் தோலுக்குள் புகுந்திருக்குமாகில் அங்கு நிறமாற்றமும், வீக்கமும் ஏற்படும். அந்த இடம் கெட்டியாகவும் அகன்றுமிருக்கும்.

மாமிசத்திற்குள் சல்யம் நுழைந்திருக்குமானால், அந்த இடத்தில் வீக்கம் அதிகரிக்கும். அங்குள்ள புண் எளிதில் ஆறாது. தொடமுடியாததாயிருக்கும். எரிச்சலும் அழற்சியும் ஏற்படும்.

---

*சல்யாஹரண **விதி**—எந்த வகையிலாவது உடலில் புகுந்தும், அல்லது உடலுக்குள்ளேயே தோன்றியும், மனதிற்கும் உடலுக்கும் துன்பமளிக்கும் எல்லாப் பொருட்களும் சல்யம் எனக் கூறப்படுகின்றன. அந்தத் தீமை விளைவிக்கும் பொருட்களை வெளிப்படுத்தும் முறையை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறுகிறது.

தசை நாருக்குள் புகுந்திருந்தால், எரிச்சலும் அழற்சியும் ஏற்பட்டு தொடமுடியாத நிலையிலிருக்கும்.

நரம்புகளில் புகுந்திருந்தால் மேல்பக்கம் புடைத்தும், வலியுள்ளதாகவும் இருக்கும்.

ஸ்நாயு (எலும்புகளை ஒன்றோடு ஒன்று பிணைக்கும் தசை நார்) என்னுமிடத்தில் புகுந்திருந்தால் அவ்விடம் சுருங்கி யிருக்கும். பொறுக்க முடியாத கடுமையான வலி ஏற்படும்.

ஸ்ரோதஸ் (உடலில் உள்ள துவாரங்கள்) என்னுமிடத்தில் புகுந்திருந்தால் அவற்றின் செயல்கள் தடைபடும்.

இரத்தக் குழாய்க்குள் நுழைந்திருக்குமானால் வாதம் நுரையுடன் கூடிய இரத்தத்தை வேகமாக வெளிப்படுத்தும். வெளிவரும் இரத்தம் இரைச்சலுடன் வரும். உடல் உறுப்புகளில் வேதனை ஏற்படும். மனப்பிறட்டல் தோன்றும்.

எலும்புக்குள் சல்யம் புகுந்திருக்குமாகில் பலவகையான வேதனையுடன் வீக்கமும் ஏற்படும்.

மூட்டுக்களில் நுழைந்திருக்குமானால் அதிகமான வலியுடன் கூடிய வீக்கம் ஏற்படும். இவற்றின் அசைவுகள் தடைபடும். எலும்புகளின் மூட்டுக்களில் சல்யம் உட்சென்றிருக்குமானால், எலும்புகளின் பலமான உராய்வும், நிலையற்ற பொறுக்கமுடியாத வேதனையும் ஏற்படும். (5)

வயிற்றுக்குள் உள்ள உறுப்புகளில் சல்யம் உட்புகுந்திருக்குமாகில் குடைச்சலும் உப்புசமும் உண்டாகும். அந்தப் புண்ணின் வாயில் சிறுநீர், மலம், உணவு இவை தென்படும்.

மர்ம ஸ்தானங்களில் சல்யம் புதைந்திருக்குமானால், அவ்விடங்களில் அடிபடுவதனால் உண்டாவதுபோல வேதனை ஏற்படும்.

தோல் முதலான இடங்களில் ஆங்காங்கு வெளிவரும் நீரைக்கொண்டு சல்யம் உட்புகுந்த இடங்களை அறிந்து கொள்ளலாம்.

மிக நுட்பமான பகுதிகளில் புகுந்திருக்குமாகில் மேற்கூறிய அறிகுறிகள் தெளிவாகத் தென்படாது. (6)

ஆரோக்கிய நிலையிலுள்ள மனிதனுடைய உடற்பகுதியில் சல்யம் நேராகப் புகுந்திருக்குமானால் அவ்விடம் ஏற்படும் புண் தானாகவே ஆறிவிடும். ஆனால் வாதம், பித்தம், கபம் இவற்றின் சீற்றலினாலும், அடிபடுதல், உடற்பயிற்சி செய்தல் போன்றவற்றினாலும் மறுபடியும் அசைவு ஏற்பட்டு துன்பத்தை அளிக்கின்றது. (7)

2. சல்யம் இருக்குமிடத்தை அறிதல்

தோலில் சல்யம் புகுந்திருக்குமாகில், அதன்மேல் எண்ணெய்ப் பசையையும் வியர்வையையும் உண்டாக்கி, மண், உளுந்து, கோதுமை, சாணம் இவற்றின் ஏதாவது ஒன்றின் தூளினால் தோலைத் தேய்க்க வேண்டும். அப்பொழுது சிவப்பு நிறமும் வலியும் ஏற்படுகிற இடத்தில் சல்யம் புதைந்திருப்பதாக அறிந்துகொள்ள வேண்டும்.

அல்லது

எந்த இடத்தில் உறைந்த நெய்யை வைத்தால் விரைவில் உருகி விடுகிறதோ, அங்கு சல்யம் புதைந்திருப்பதாக அறியலாம்.

அல்லது

எந்த இடத்தில் மேற்பூச்சுப் பூசினால் விரைவில் உலர்ந்து விடுகிறதோ, அந்த இடத்தை சல்யம் உடையதாகத் தெரிந்து கொள்ளலாம். மாமிசத்தில் சல்யம் புதைந்து கிடக்குமானால், எண்ணெய்ச் சிகிச்சை, வியர்வைச் சிகிச்சை, வாந்தி, பேதிக்கு கொடுத்தல் போன்றவற்றைச் செய்து உடலை இளைக்கச் செய்ய வேண்டும். இளைத்தபின் புகுந்திருக்கும் சல்யம் இடம் விட்டு நகர்ந்துவிடும். அப்பொழுது எந்தப் பகுதியில் சல்யம் புகுந்திருப்பதாக ஊகிக்கிறோமோ அந்தப் பகுதியை அசைத்துக் கொண்டே வந்தால் செந்நிறமும் வலியும் உண்டாகும். அந்த இடத்தில் சல்யம் புதைந்து கிடக்கிறது என்பதை அறியலாம்.

இம்மாதிரியே வயிற்றுக்குள்ளும், எலும்புகளிலும், தசைநார்கள், துவாரங்கள் இவற்றிலும் புதைந்து கிடக்கும் சல்யங்களை அறிந்துகொள்ள வேண்டும். (8)

நரம்புகள், துவாரங்கள், இரத்தக் குழாய்கள், எலும்புகளை ஒன்றோடு ஒன்று பிணைக்கும் தசைநார் இவற்றில் புதைந்து கிடக்கும் சல்யத்தைக் கண்டுபிடிக்க சக்கரம் உடைந்த குதிரை

வண்டியில் நோயாளியை அமரச்செய்து மேடுபள்ளமான இடத்தில் வண்டியை வேகமாக ஓட்ட வேண்டும். அப்பொழுது நோயாளிக்கு வலியும் செந்நிறமும் உண்டாகும் இடத்தில் சல்யம் புதைந்திருப்பதாக அறிந்துகொள்ள வேண்டும். *(9)*

மூட்டுகளில் புதைந்து கிடக்கும் சல்யத்தைக் கண்டறிய அவற்றுள் எண்ணெய்ப்பசை, வியர்வை இவற்றை ஏற்படுத்தி கைகால்களை நீட்ட மடக்கச் செய்யவும். மேலும் கட்டுதல், பிடித்துவிடுதல் இவற்றைச் செய்வித்தபிறகு அதனால் செந்நிறமும் துன்பமும் உண்டாகும் இடத்தை சல்யம் புதைந்திருக்குமிடம் என அறிந்து கொள்க.

எலும்பில் சல்யம் புதைந்திருக்குமானால் அதைக் கண்டு பிடிக்க எலும்பில் எண்ணெய்ப் பசையையும் வியர்வையையும் உண்டாக்கி, பிறகு கட்டும்பொழுதும் அழுத்தும்பொழுதும் எங்கு வலி ஏற்படுகிறதோ அந்த எலும்பில் சல்யம் புதைந்திருப்பதாகக் கண்டறியவும். *(10)*

மர்ம ஸ்தானங்களில் புதைந்து கிடக்கும் சல்யத்தைக் காண, மாமிசத்தில் புதைந்து இருக்கும் சல்யத்தைக் காண்பதற்குக் கூறிய முறையைப் பின்பற்றவும். *(11)*

3. பொதுவாக சல்யம் இருக்குமிடத்தை அறிந்து கொள்ளும் முறை

ஏதாவது உயரமான இடத்தில் ஏறுதல், யானை, தோள், குதிரை, மரம் இவற்றில் ஏறுதல், விரைவாகச் செல்லும் ஊர்தியின் மீது ஏறுதல், குதித்தல், உட்காருதல், நீந்துதல், உடற்பயிற்சி செய்தல், கொட்டாவி விடுதல், ஏப்பம் விடுதல், இருமுதல், தும்முதல், துப்புதல், சிரித்தல், மூச்சையடக்கிச் சிறிது நேரம் உள்ளேயிருத்தி வெளிவிடுதல், மலம், சிறுநீர், விந்து இவற்றை வெளியிடுதல் என இச்செயல்களால் எங்கு சிவப்பு நிறமும், வலியும் ஏற்படுகிறதோ

அல்லது

சிறிய முயற்சி செய்தால் உணர்ச்சியின்மை, பளு, உராய்தல், வீக்கம் எங்கு உண்டாகிறதோ அங்கு சல்யம் புதைந்திருக்கிறது என அறிந்து கொள்ளலாம். *(12)*

உருண்டை வடிவம் கொண்டவை, இரண்டு, மூன்று, நான்கு கோணங்கள் உடையவை எனச் சுருக்கமாக சல்யங்

கள் நான்கு விதமாகப் பிரிக்கப்படுகின்றன. புலப்படாத முறிந்த சல்யத்தின் வகையை அந்தக் காயத்தின் உருவத்தைக் கொண்டு புரிந்து கொள்ளவும். எல்லாவிதமான மிகப் பெரிய சல்யங்களை வெளியேற்றும் விஷயத்திலும் மேலிருந்து கீழாகச் சல்யம் புதைந்திருக்குமானால் அதைக் கீழிருந்து மேல் பக்க மாகவும், கீழிருந்து மேல்பக்கமாகப் புதைந்திருந்தால் மேலிருந்து கீழ்ப்பக்கமாகவும் இருவகையாக வெளிப்படுத்த வேண்டும். (13)

மேலிருந்து கீழாகச் செல்வதை அநுலோமம் என்றும் கீழிருந்து மேலாகச் செல்வதை பிரதிலோமம் எனவும் கூறுகின்ற னர். குறுக்காகப் பாய்ந்த சல்யத்தை மாமிசத்தைக் கீறி துன்பம் ஏற்படாவண்ணம் எடுக்க வேண்டும். (14)

மேல்நோக்கிப் புடைத்த சல்யம் கீறுவதற்குத் தகுதியான முகம் உடையதாயிருந்தாலும் இதை வெளிப்படுத்தக்கூடாது. அப்படியே அக்குள்கள், தொடைச் சந்துகள், மார்பு, விலா எலும்பு இவற்றில் புதைந்திருக்கும் சல்யங்களையும் வெளி எடுக்கவே கூடாது.

புதைந்து கிடக்கும் எந்த சல்யத்தை எடுப்பதனால் மனிதன் இறந்துவிடுவானோ அதையும், மர்மஸ்தானங்களில் புதைந்திருக்கும் சல்யத்தையும், வீக்கம் வலி இவ்றறைத் தோற்றுவிக்காத சல்யத்தையும், வெளி எடுக்கக்கூடாது. (15)

4. சல்யங்களை வெளிப்படுத்தும் முறை

கையினால் எடுக்கக்கூடிய தீயபொருளாகிய அதைக் கையி னாலேயே எடுக்கவும். கையினால் எடுக்க முடியாவிடில் யந்தி ரத்தினால் முறைப்படி எடுக்கவும். யந்திரத்தினாலும் எடுக்க முடியாவிடில் ஆயுதத்தினால் புண்ணைக் கீறி இரத்தத்தை அகற்றி நெருப்பு போன்றவற்றால் வியர்வையை உண்டுபண்ணி சுட்டு, நெய், தேன் முதலியவற்றால் புண்ணை நிரப்பிக் கட்ட வேண்டும்.

ஆயுத சிகிச்சைக்குப் பின் கடைபிடிக்க வேண்டிய முறை களைப் பின்பற்றவும்.

நரம்புகளிலும், எலும்புகளை ஒன்றோடு ஒன்று கட்டும் தசை நார்களிலும் புதைந்திருக்கும் சல்யத்தைச் சலாகை (குச்சி போன்ற) எனும் கருவியின் நுனியினால் நேராகக் கொண்டு வந்து வெளிப்படுத்த வேண்டும்.

இதயத்தில் புதைந்திருக்கும் எடுக்க முடியாத சல்யத்தை எடுத்து குளிர்ச்சியான தண்ணீரை நோயாளியின்மேல், தெளித்து, சல்யம் நேராக வந்தபின், தகுந்த முறையில் யந்திரத்தின் துணைகொண்டு அதை வெளிப்படுத்த வேண்டும்.

மற்ற இடங்களில் புதைந்து, எடுக்க முடியாத நிலையில் இருக்கும் சல்யத்தை வெளிப்படுத்த இதயத்திற்குக் கூறிய முறையையே கையாளவும்.

எலும்புகளிலோ அல்லது எலும்புகளின் துளையிலோ புதைந்திருக்கும் சல்யங்களை, கால்களால் நோயாளியை அழுத்திக்கொண்டு கருவியினால் பற்றி எடுக்க வேண்டும். அப்பொழுதும் எடுக்க முடியாவிடில் வலுவுள்ள மனிதனைக் கொண்டு நோயாளியைப் பிடிக்கச் செய்து, சல்யத்தின் நுனியை யந்திரத்தில் பிணைத்து, அந்த யந்திரத்தின் அடிப்பகுதியை வில்லின் நாண் கயிற்றில் கட்டவேண்டும். அந்த வில்லைக் குதிரையின் கடிவாளத்தில் கட்ட வேண்டும். குதிரையின் நான்கு கால்களையும் கயிற்றினால் கட்டி, அதை அசைய முடியாமல் செய்து, குதிரையைச் சாட்டையினால் அடிக்க, குதிரை நகர முடியாமல் தலையைத் தூக்கும். அப்பொழுது புதைந்திருக்கும் சல்யம் வெளிவந்துவிடும்.

அல்லது

ஒரு மரக்கிளையை வளைத்து முன்போல் வில்லின் நுனியை, வளைத்த கிளையில் கட்டி, கிளையை விட்டுவிட வேண்டும். கிளை வேகமாக மேலெழும்பொழுது அதன் வேகத்தில் சல்யமும் வெளிவந்துவிடும்.

ஆழமாகப் பதியாததால் எளிதில் எடுக்கக்கூடிய சல்யத்தை தர்ப்பைகளால் சுற்றி இழுக்க வேண்டும்.

சல்யம் புதைந்திருக்குமிடம் வீங்கியிருந்தால் அந்த வீக்கத்தை அழுத்தி சல்யத்தை எடுக்க வேண்டும்.

புடைத்துக் கொண்டு, மேல்தூக்கி, வெளிப்படையாகத் தெரியும் சல்யத்தைச் சிறிய கல் அல்லது சிறிய குழவியினால் ஆட்டி, அசைத்து எடுக்கும் நிலைக்குக் கொணர்ந்தபின், அதை வெளியில் எடுக்க வேண்டும். (16)

காதுள்ள (பிடிக்கக்கூடிய இடமுள்ள) சல்யங்கள் உட்புகுந்திருந்தால் அதை நாடீ யந்திரத்தினாலோ, பல முகங்கள்

உள்ள சலாகை (குச்சி போன்ற கருவி) யந்திரத்தினாலோ தகுந்தவாறு பிடித்து முன்போல் இழுக்க வேண்டும்.

நேராகச் சென்ற சல்யத்தை புண்ணின் வாய் பெரிதாக இருக்குமாயின் காதில்லாத (பிடிக்கக்கூடிய இடமில்லாத) காந்தக் கல்லினால் வெளியில் எடுக்க வேண்டும். (17)

சிரணப்பையில் புதைந்திருக்கும் சல்யத்தை மலம் கழிக்கச் செய்து வெளிப்படுத்த வேண்டும்.

வாதம், மலம், சிறுநீர், கர்ப்பம் ஆகியவற்றில் பொருந் தியிருக்கும் சல்யத்தை நோயாளியை முக்கும்படி செய்து வெளி எடுக்க வேண்டும்.

வாதத்தினாலோ அல்லது நஞ்சினாலோ கேடு அடைந்த தாய்ப்பாலை வாயினால் உறிஞ்சியோ கொம்பினால் உறிஞ் சியோ வெளி எடுக்க வேண்டும். (18)

தொண்டைக் குழாயில் சிக்கிக் கொண்டிருக்கும் சல் யத்தை எடுக்க முதலில் தாமரைத்தண்டில் உள்ள நூலைத் தண்டுடன் தொண்டைக் குழாயில் விடவேண்டும். சல்யம் நூலில் சிக்கிக்கொண்டபின் நூலுடன் கூடிய தாமரைத் தண்டை வெளிஇழுப்பதன் மூலம் சல்யத்தை வெளிப்படுத்த லாம்.

நூலுடன் கூடிய தாமரைத் தண்டு கிடைக்காவிடில் தாமரைத்தண்டில் வேறு நூலைக் கட்டி முன் செய்ததுபோல் செய்து வெளிப்படுத்தலாம். (19)

அரக்குப் போன்ற சல்யம் தொண்டையில் சிக்கிக் கொண் டால், தொண்டையில் குழல் உள்ள யந்திரத்தை முதலில் புகுத்த வேண்டும். அதன்பின் நுட்பமான முனையுடைய சலாகையைச் (குச்சி போன்ற கருவி) சூடாக்கி குழல் வழி யாக உட்செலுத்த வேண்டும். அந்த சலாகையில் (குச்சி போன்ற கருவி) அரக்கு போன்ற சல்யம் சூட்டினால் ஒட்டிக் கொண்டபின் குழல் வழியாகத் தண்ணீரை ஊற்ற வேண்டும். அப்பொழுது உருகிய அரக்கு கெட்டிப்பட்டபின் அதை வெளி எடுக்க வேண்டும்.

அரக்கு அல்லாத மற்ற சல்யங்கள் தொண்டையில் சிக்கி யிருந்தால் சூடாக்கிய சலாகையில் அரக்கு அல்லது தேன்

மெழுகைத் தடவி முன்போல அதைச் செலுத்தி வெளி எடுக்க வேண்டும். (20)

மீனின் முள்போன்ற எலும்போ அல்லது வேறு வகை யான எலும்போ தொண்டையில் சிக்கிக் கொண்டிருந்தால், விரலில் நூல் அல்லது துணியைச் சுற்றித் தொண்டையில் செலுத்தி அதில் சிக்கிக்கொண்ட எலும்பை வெளிப்படுத்த வேண்டும்.

அல்லது

மயிர்ச்சுருளையின் ஒரு முனையில் நூலை இறுகக் கட்டி மற் றொரு முனையை விரலில் சுற்றிக்கொண்டு, வாயினுள் செலுத்த வேண்டும். அது உள்ளே செல்ல வசதியாக தண்ணீர் பருகச் செய்ய வேண்டும். மயிர்ச்சுருள் உள்ளே சென்று வுடன் வாந்தி ஏற்படும். பிறகு மயிர்ச் சுருளில் எலும்பு சிக்கிக் கொள்ளும். நூலை வெளி இழுக்க மயிர்ச் சுருளு டன் எலும்பும் வெளி வந்துவிடும்.

எலும்பு, தொண்டையில் ஆழப்பதியாமலிருந்தால் பல் துலக்கும் குச்சியைக்கொண்டு வெளிப்படுத்திவிடலாம். ஆழமாக எலும்பு பதிந்திருந்தால் முன்போல் மயிர்ச் சுருளையைத் தொண் டைக்குள் செலுத்தித் தண்ணீர் குடிக்கச் செய்து வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும். அப்பொழுது ஆழமாகப் பதிந் திருக்கும் எலும்பு மயிர்ச் சுருளையில் சிக்கிக் கொள்ள, நூலைப் பிடித்து இழுத்து, சுருளையில் சிக்கிக்கொண்ட எலும்பை வெளி எடுக்க வேண்டும். அதனால் தொண்டை யில் ஏற்படும் புண்ணை ஆற்றுவதற்குக் கடுக்காய், நெல்லிக் காய், தானிக்காய் இவற்றின் தூளை நெய், தேன், கற்கண்டு இவற்றில் குழைத்து தொண்டைக்குள் சுற்றிலும் தடவ வேண் டும். (21)

நீரில் மூழ்கி, வயிறு நிரம்பத் தண்ணீர் குடித்த மனி தனைத் தலைகீழாகத் தொங்கவிட்டு வயிற்றை அமுக்க வேண் டும். அல்லது குலுக்கவோ, வாந்தி எடுக்கவோ செய்ய வேண் டும்.

அல்லது

தரையைத் தோண்டி நீரில் மூழ்கியவனைக் கழுத்து வரையில் பள்ளத்தில் இறக்கி அவனைச் சுற்றி சாம்பலை நிரப்ப வேண் டும். அப்படி செய்யாவிடில் குடித்த தண்ணீர்மேல்நோக்கிச் சென்று உப்புசம், இருமல், சுவாசம், கடுமையான ஜல தோஷம், புலன்களின் அழிவு, காய்ச்சல், கபத்தினால் ஏற்

படும் நோய்கள் ஏற்பட்டு மரணம் ஏற்படும். ஆகையினால் அதற்கேற்றவாறு சிகிச்சை செய்ய வேண்டும். (22)

உண்ணும்போது சோற்று உருண்டை தொண்டையில் தங்கிவிட்டால் தண்ணீர் பருகச் செய்ய வேண்டும். அல்லது பிடரியைச் சுற்றித் தட்டுவதனால் உருண்டையை உள்ளே போகும்படி செய்ய வேண்டும். தொண்டையில் சிக்கிய கபம் அல்லது சோற்றுப் பருக்கையை வாயை ஊதியோ கனைக்கச் செய்தோ, இருமச்செய்தோ வெளிப்படுத்த வேண்டும். (23)

கண்களில் நுட்பமான தூசி, துரும்புகள் விழுந்தால், கண்ணைக் கசக்கியோ, ஊதியோ, திரி அல்லது நனைந்த துணியைக் கொண்டோ, நாக்கினாலேயோ வெளிப்படுத்த வேண்டும்.

கண்ணின் இரப்பையில் உள்ள மாமிசப் பகுதியில் பதிந்திருக்கும் தூசி துரும்புகளை வெளிப்படுத்த சூடான நீரின் ஆவியால் வியர்வையை உண்டாக்கி அதிமதுர கஷாயத்தில் நெய் அல்லது தேனைக் கலந்து ஊற்ற வேண்டும்.

கண்களிலும், உடலின் உறுப்புகளிலும் உள்ள மிக நுட்பமான தூசி துரும்புகள், கண்ணீர் வடிதல், தும்முதல், இருமுதல், ஏப்பம் விடுதல், மலம், சிறுநீர் கழித்தல் கீழ்நோக்கிச் செல்லும் காற்று இவற்றால் தானே வெளிவந்துவிடும். (24)

செவியினுள் பூச்சி புகுந்திருந்தால் குத்தல் வலி, பளு, 'குர் குர்' என்ற இரைச்சல் ஏற்படும். பூச்சி துடிக்கும்போது அதிக வேதனை உண்டாகும். இவற்றை நீக்க உப்புக் கலந்த நீர், மதுசுக்தம் எனும் புளிப்பு நீர், கள், அல்லது பொறுக்கும்படியான சுடுநீர் இவற்றில் ஏதாவது ஒன்றைக் காதில் ஊற்ற வேண்டும். அப்பொழுது மேலே வந்த பூச்சியை எடுத்து எறியவும்.

பூச்சி வெளிவராமல் செவியினுள் இறந்துவிட்டால், அது கெட்டுப்போய் அழுகி குழகுழப்பை உண்டாக்கும்.

இந்நிலையில் காதில் நீர்வடிதல், காதில் எரிச்சல் இவை உண்டாகும். இவற்றிற்கான சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

காதில் நீர் நிரம்பியிருப்பதால் காதைக் கையால் பிசைந்து எண்ணெய் கலந்த நீரை ஊற்ற வேண்டும். அல்லது ஒரு பக்கமாகச் சாய்ந்து கையால் காதின் பின்பக்கத்தைத் தட்ட

வேண்டும் அல்லது நாடீ யந்திரத்தினால் உறிஞ்சி எடுக்க வேண்டும். (25)

அரக்கு, பொன், வெள்ளி இவை போன்ற தாதுப் பொருட்களான சல்யங்கள் (தீய பொருள்கள்) உடலில் நீண்ட நாள் தங்கியிருந்தால் அநேகமாக அவை உடலின் சூட்டினால் கரைந்து விடுகின்றன. (26)

கொம்பு, மூங்கில், மரம், எலும்பு, பல், மயிர், கல், மண் இவற்றைச் சார்ந்த சல்யங்கள் உடலில் கரைவதில்லை. (27)

கொம்பு, மூங்கில், இரும்பு, பனை மரம் இவற்றின் சல்யங்கள், உடலில் நீண்ட நாட்கள் தங்கி மாமிசத்தையும் ரத்தத்தையும் கெடுத்துத் தனியாகத் தங்கி விடுகின்றன. (28)

மாமிசம் அடர்த்தியாக இருக்குமிடத்தில் சல்யம் புகுந்திருக்குமாகில் அவ்விடம் பழுப்பதில்லை. அதாவது சல்யம் புலப்படாது. ஆகையினால் அவ்விடத்தைப் பிடித்துவிடுதல், வியர்வை உண்டாக்குதல், வாந்தி, பேதிக்குக் கொடுத்தல் இவற்றால் சுத்தம் செய்ய வேண்டும். (29)

அதன்பின், உடலை இளைக்கச் செய்வதற்காகவும், பருக்கச் செய்வதற்காகவும் சிகிச்சையைச் செய்ய வேண்டும். தீக்ஷ்ண குணமுள்ள பொருட்களால் வியர்வை உண்டாக்கும் ஒத்தடம் கொடுக்க வேண்டும். தீக்ஷ்ண குணமுள்ள உணவு, நீர் இவற்றைக் கொடுக்க வேண்டும்.

பிறகு சல்யம் பொருந்தியுள்ள இடத்தைக் கண்டு பிடித்து பழுக்கச்செய்து ஆயுதத்தினால் பிளந்தோ, துழாவியோ அழுத்தியோ சல்யத்தை வெளிப்படுத்த வேண்டும். (30)

சல்யங்கள், அவை புகுமிடங்கள், அவற்றை வெளி எடுக்கும் கருவிகள் பலவகையாக இருப்பதால், அவற்றின் உருவங்களை அறிவில் சிறந்த மருத்துவன் தெரிந்துகொண்டு அவற்றிற்கான முறைகளால் சிகிச்சை செய்து சல்யங்களை வெளிப்படுத்த வேண்டும். (31)

புண்ணின் ஓரங்கள் ஆறியிருந்தாலோ, தொடுவதற்கு முடிந்தாலோ, வீக்கமும், சூடும் குறைந்திருந்தாலோ அந்த இடத்தில் சல்யம் இல்லை என அறிந்துகொள்ளவும். (32)

இயற்கையாகவே தோஷங்கள், மலங்கள் இவற்றால் அழுக்கடைந்த நம் உடலே சல்யங்களில் மிகச்சிறந்த சல்யமாகும். மற்ற சல்யங்களைவிட இவ்வுடலே பெரிய சல்யமாகக் கருதப்படுகிறது.

ஆகையால் நல்ல உணவு வகையினாலும், நற்பழக்கவழக்கங்களினாலும் முதலில் உடலைப் பேண வேண்டும். (33)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'சல்யாஹரண விதி' எனும்
முப்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்

*சஸ்திர கர்ம விதி

'சஸ்திர கர்ம விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம் (1—2)

நிஜம்—(வாத—பித்த கபங்கள் கோளாறடைந்து ஏற்படும் நோய்கள்)

ஆகந்துகம்—(வாத—பித்த கபங்கள் கோளாறடையாமலே எதிர்பாராத நிலையில் தோன்றும் நோய்கள்).

என்ற இந்த இருவகை நோய்களுக்கும் மருந்துகளினால் சிகிச்சை செய்தும் பயன் ஏற்படாவிடில் அப்பொழுது அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. இந்த நோய் பெரும்பாலும் முதலில் வீக்கத்தில் தொடங்குகிறது. வீக்கம் தோன்றியவுடன் வாதம், கபம், பித்தம், இரத்தம் இவற்றினுள் இரண்டின் சேர்க்கை அல்லது மூன்றின் சேர்க்கை இவைகளைக் கவனித்து வீக்கம் பழுத்து விடுமோ என்று அச்சத்தினால், நோயாளிக்கு பட்டினி கிடத்தல், மேற்பூச்சுப்பூசுதல், மருந்து ஊற்றுதல், இரத்தம் எடுத்தல், கஷாயம், மருந்து நெய் இவற்றைப் பூசவும் பருகவும் செய்தல் ஆகியவற்றைச் செய்விக்க வேண்டும்.

வாந்திக்கும் பேதிக்கும் கொடுத்துக் குடலைச் சுத்தம் செய்ய வேண்டும். செய்தும் வீக்கம் தணியாவிடில், அதைத் தளரச் செய்ய வேண்டும். தளராவிடில், ஒத்தடம் கொடுக்க வேண்டும். (3)

1. பழுக்காத நிலையிலுள்ள வீக்கத்தின் அறிகுறிகள்

வீக்கக் குறைவு, உஷ்ணக்குறைவு, வேதனைக் குறைவு, தோலின் நிறம் செட்டியாயிருத்தல் இவை பழுக்காத நிலையிலுள்ள வீக்கத்தின் அறிகுறிகளாகும்.

2. பழுத்து வரும் வீக்கத்தின் அறிகுறிகள்

பரபரப்பான நிலை, வேதனை, செந்நிறம், எரிச்சல், நெருப்பு சுட்டது போன்ற எரிச்சல், சுவையின்மை, நாவறட்சி,

---

*சஸ்திர கர்ம விதி—சஸ்திரங்கள் என்றால் ஆயுதங்கள். அவற்றைக் கொண்டு செய்யப்படும் சிகிச்சை முறையை விளக்குவதால் இந்த அத்தியாயம் இப்பெயர் பெறும்.

காய்ச்சல், ஒன்றிலும் விருப்பமில்லாமை, தொடமுடியாத நிலை, தூக்கமின்மை, இவைகள் வீக்கம் பழுக்கத் தொடங்கும் பொழுது தோன்றும்.

அந்த வீக்கத்தில் தோய்ந்த நெய்யை ஊற்றினால் அது உருகிவிடும். மேற்பூச்சுப் பூசினால் அது உலர்ந்துவிடும். கடுகை அறைத்துப் பூசுவதால் ஏற்படும் தினவு போன்ற தினவு ஏற்படும். எறும்புகள் ஊறுவது போன்ற உணர்வு ஏற்படும். கையால் பிடித்துவிடுவது போலும், விரல்களால் அமுக்குவது போன்றும், தடியினால் அடிப்பது போன்றும், ஊசிகளால் குத்துவது போன்றும், வேல் எனும் சக்தி ஆயுதத்தினால் பிளப்பது போன்றும், ஆயுதத்தினால் வெட்டுவது போன்றும், தேள்கள் கொட்டுவது போன்றும், நெருப்பினால் சுடப்பட்டது போன்றும், காரப்பொருட்கள் இடுவதனால் ஏற்படும் எரிச்சலையொத்த எரிச்சலும், மத்தினால் கடைவது போன்றும் இப்படி பல அறிகுறிகள் தென்படும். (4)

3. பழுத்த பிறகு வீக்கத்தின் அறிகுறிகள்

இதில் பொதுவாக துன்பங்களின் கடுமை குறைந்திருக்கும். வாடியிருத்தல், தோல்கள் தளர்ந்துவிடுதல், சுருக்கம் விழுதல், வெளுத்தல், நடுவில் புடைத்திருத்தல், விரலினால் அமுக்கிவிட்டால் மறுபடியும் புடைத்துக் கொள்ளுதல், நீர் நிரம்பிய தோல் பையை ஒருபுறம் அழுத்தினால், நீர் மற்றொரு புறம் செல்வதுபோல், வீக்கத்தின் ஒருபுறத்தில் அழுத்தினால் சீழ் மற்றொருபுறம் செல்லுதல், தினவு ஆகியவை தோன்றும். நன்கு பழுத்துவரும் வீக்கத்தில் சொன்ன அறிகுறிகள் தணிந்திருக்கும். (5)

வாதமில்லாவிடில் வீக்கத்தில் வலி ஏற்படாது. பித்தம் சேராமல் வீக்கத்தில் எரிச்சல் உண்டாகாது. கபம் கலக்காமல், வீக்கம் உண்டாகாது. ரத்தச் சேர்க்கையில்லாமல் செந்நிறம் உண்டாகாது. எனவே இரத்தத்துடன் கலந்த வாதம், பித்தம், கபம் எல்லாம் சேர்ந்து வீக்கத்தைப் பழுக்கச் செய்கிறது. (6)

4. அதிகம் பழுத்த வீக்கத்தின் அறிகுறிகள்

வீக்கம் அதிகமாகப் பழுத்துவிட்டால் வீக்கத்தினுள் துவாரம் விழுந்து புரையோடும். தோல் மெலிந்துவிடும். அவ்விடத்தை வாதம், பித்தம், கபம் எனும் தோஷங்கள் அரித்து

விடும். தோலில் சுருக்கம் பரவும், கருநிறம் கொள்ளும், ரோமங்கள் உதிர்ந்துவிடும். (7)

கபத்தினாலுண்டான சில வீக்கங்க்ள், ஆழமாகப் புதைந்திருப்பதால், ரத்தம் மட்டும்தான் பழுத்து இருக்கும். அப்பொழுது பழுத்ததன் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிகிறதில்லை. தோல் நிறத்திற்குச் சமமாகவும், வீக்கம் குளிர்ந்தும், வேதனை குறைந்தும், கல்போல் கடினமாகவும் காணப்படுவதைக்கொண்டு அந்த இடம் பழுக்கவில்லை என்று கருதக்கூடாது. இது இரத்தம் பழுத்த வீக்கம் எனச் சொல்லப்படுகிறது. (8)

இரத்தம் மட்டும் பழுத்த கட்டியை அதன் பழுத்திருக்கும் நிலையை அறிந்து, பயந்தவன், முதியவன், சிறுவன்,வலிவற்றவன், அலி, தாதுக்கள் குறைந்தவன், கருதரித்தவள், நஞ்சு அருந்தியவன், முகம் ஒரு பக்கம் கோணலாக ஏற்படும் வாத நோயுள்ளவன், ஆயுத சிகிச்சையைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியற்றவன் என இவர்களுக்கு நன்றாகப் பழுத்ததன் பயனாக வாத—பித்த—கபங்களால் துன்புறுத்தும் மூட்டுக்கள் மர்மஸ்தானங்கள் இவ்விடங்களிலும், குறைந்த வீக்கம் உள்ள இடங்களிலும் தீக்ஷ்ண குணமும் சீத வீர்யமும் உள்ள பொருட்களால் வீக்கத்தைப் பிளக்கவேண்டும். மற்றவர்களிடத்தில் ஆயுதத்தினால் கிறி வீக்கத்தைப் பிளக்க வேண்டும். (9)

பழுக்காத வீக்கத்தைப் பிளப்பதனால் நரம்புகள், எலும்புகளை ஒன்றோடு ஒன்று கட்டும் தசைநார் இவற்றிற்கு அழிவு ஏற்படும். இரத்தப்பெருக்கு அதிகரிக்கும். வேதனை அதிகமாகும். வீக்கத்தில் பிளவை உண்டாக்கும், அல்லது பிளந்த இடத்தில் விஷப்புண்கள் ஏற்படும். (10)

பழுத்த வீக்கத்தைக் கீறாவிட்டால், உள்ளேயே சீழ் அதிகமாகத் தங்கி, நரம்புகள், எலும்புகளை ஒன்றோடு ஒன்று கட்டும் தசைநார், இரத்தம், மாமிசம் இவற்றை வீக்கம், புற்கூட்டங்களை நெருப்பு எரிப்பதுபோல் எரித்துவிடுகிறது. (11)

அறியாமையினால் பழுக்காத வீக்கத்தை அறுப்பவன், பழுத்த வீக்கத்தை அறுக்காமல் இருப்பவன் என இவ்விரு ஆலோசனையற்ற மருத்துவர்கள் நாயின் மாமிசத்தை உண்பவர்களுக்கு ஈடாவார்கள். (12)

அறுவைச் சிகிச்சை செய்வதற்குமுன் நோயாளிக்குப் பிடித்தமான உணவை உட்கொள்ளச் செய்து, தீக்ஷ்ண குணமுள்ள கள்ளை அருந்தச் செய்ய வேண்டும். உணவு உட்கொண்டிருப்பதனால் மூர்ச்சையடையமாட்டான். கள் அருந்தியிருப்பதால் ஆயுதச் சிகிச்சையின் வேதனையை அறியமாட்டான்.

ஆனால் பிரசவ காலத்தில் குழந்தை கருப்பையில் இயற்கைக்கு மாறாகத் திரும்பி வயிற்றில் சிக்கிக் கொள்வதால் உண்டாகும் நோயுள்ளவள், மகோதரம் உள்ளவன், ஆண்குறியில் கல்லடைப்பு நோயுள்ளவன், வாயில் உண்டாகும் நோயுள்ளவன் என இவர்களுக்கு உணவும் கள்ளும் கொடுக்கக் கூடாது. (13—14)

5. அறுவை சிகிச்சையின் பொது வழி

சிகிச்சை செய்வதற்கு முன் கருவி, ஆயுதம், காரப்பொருட்கள், நெருப்பு, நாவற்பழம்போன்ற அமைப்புள்ள கருவி, பஞ்சு, துணி, இலை, நூல், தோல்பட்டை, தேன், எண்ணெய், கஷாயம், பூச்சுமருந்து, கல்கம், ஊற்று மருந்து, நீர்க்குடம், குளிர்ந்ததும் சூடானதுமான நீருள்ள வாணலிகள், விசிறி போன்ற புண்களுக்கு தேவைப்படும் பொருட்கள் இவற்றை ஒன்று சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு நன்னாளில், நல்ல நேரத்தில், தயிர், மஞ்சள் கலந்த அரிசி உணவு, குடிநீர், பொன், ரத்தினம், இவற்றை அளித்து அந்தணருக்கு மரியாதை செய்து, தன் குல தெய்வத்தை வணங்கச் செய்ய வேண்டும்.

பிறகு நோயாளிக்கு உணவளித்து, வீக்கம் உள்ள இடத்தில் எண்ணெய்ப் பசையுண்டாக்கி, வலுவுள்ள மனிதர்களால் பிடிக்கச் செய்து, கிழக்கு நோக்கி படுக்கையில் அமர்த்தியோ அல்லது படுக்கச் செய்தோ கட்டிவிட வேண்டும்.

மருத்துவர் நோயாளிக்கு எதிர்முகமாக இருந்துகொண்டு, மர்மஸ்தானங்கள், நரம்புகள், தசைநார், மூட்டுக்கள், எலும்பு, இரத்தக்குழாய் இவற்றைத் தவிர்த்து, ஆயுதத்தை மேலிருந்து கீழ்முகமாக ஒரே முறை விரைவில் சீழ் இருக்குமிடம்வரை பார்த்துக் கீறவேண்டும். பெரிய வீக்கமாக இருந்தால் இரண்டு அங்குலம் கீறவேண்டும். வீக்கம் உண்டான இடத்தின் தன்மைக்கு ஏற்றவாறு கவனித்து இரண்டு அல்லது மூன்று அங்குலம் ஆழம் கீற வேண்டும். கீறப்பட்ட இடத்தில் இடதுகை ஆள்காட்டி விரலால் சீழ் பரவியிருக்கும்வரை துழாவிப் பார்க்க வேண்டும்.

ஆழமாகவும், மாமிசம் அடர்த்தியான இடத்திலும் ஏஷணி என்னும் குச்சி போன்ற கருவியினாலும், இதற்கு எதிரிடையான இடத்தில், தாமரைத் தண்டினாலும், வீக்கத்தின் வாய் அதிகமாகத் தெரியாத இடத்தில் பன்றியின் ரோமத்தினாலும் துழாவி, சீழ் பரவியிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள வேண்டும். (15)

கீழ்துழாவும் கருவிகள் தடையின்றிச் செல்லும்வரை செலுத்தி சீழ் இருப்பதை அறிந்து அவ்விடம்வரை கீற வேண்டும். வீக்கம் புடைத்து மேல்தூக்கியிருக்குமிடங்களில் சீழ் நன்கு வெளிப்படுமாறு வகுத்துக் கீறவேண்டும். சீழ் உள்ளே தங்காமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும். (16)

சீழ் தங்காமலிருக்க அகலமாகவும் ஆழமாகவும் கீற வேண்டும். (17)

6. அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவருக்குத் தேவையான குணங்கள்

அறுவைச் சிகிச்சையில் திறமை, விரைவில் செய்யும் கை வன்மை, வியர்வை பெருகாமலும், நடுக்கம் ஏற்படாமலும் இருத்தல், மனதில் குழப்பம் ஏற்படாத தீர்மானமான அறிவு ஆகியவை அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவனுக்கு இருக்க வேண்டும். சிகிச்சைக்கு உரிய ஆயுதம் கூர்மையாக இருக்க வேண்டும். (18)

7. குறுக்காகக் கீற வேண்டிய இடங்கள்

புருவம், கழுத்து, நெற்றிக்கட்டு, கண்களின் கோளம், உதடு, பல்லீறின் கீழ்ப்பகுதி, கழுத்துப்பிடரியில் உள்ள நரம்பு, தொண்டை, கழுத்தின்மேல் பகுதி, அக்குள், வயிறு, தொடை இடுக்குகள் என இவ்விடங்களில் குறுக்காகக் கீறவேண்டும். மற்ற இடங்களில் குறுக்காகக் கீறினால் நரம்புகள், தசைநார் இவற்றின் அழிவும், தாங்கவொண்ணாத வலியும் ஏற்படும். மேலும் புண் ஆறுவதற்கு நீண்ட நாளாகும், மாமிச முடிச்சுகள் தோன்றும். (19)

8. அறுவைச் சிகிச்சைக்குப் பின் செய்யவேண்டியவை

அறுவைச் சிகிச்சை செய்தபின், நோயாளியை நீரால் தெளித்து, நல்வார்த்தைகளால் தேற்றி, நாற்புறங்களிலும் புண்ணை நன்றாக விரல்களால் அழுத்தவேண்டும். பிறகு

கஷாயத்தினால் புண்ணை அலம்பி புண்ணிலிருந்து ஊறிவரும் நீரைப் பஞ்சினால் துடைக்கவேண்டும்.

வேதனையை நீக்கக் கூடியதும், காக்கக் கூடியதுமான, குக்கில், அகில், குங்குலியம், வசம்பு, வெண்கடுகு, பெருங்காயம், உப்பு, வேம்பின் இலை இவற்றைத் தூள் செய்து நெய்யில் குழப்பி புகைபோட வேண்டும்.

பிறகு தோஷங்களுக்குத் தகுந்தபடி வாதத்திற்குத் தேனிலும், பித்தத்திற்கு நெய்யிலும், கபத்திற்கு எள்ளு கல்கத்திலும் மருந்தைக் கலந்து இவற்றைத் துணியில் தடவி வர்த்தியைப் போன்று சுருட்டி, புண்ணில் வைத்து எள் கல்கத்தினால் நிரப்ப வேண்டும்.

அதிகமாக வறுக்கப்படாத யவதானியத்தின் மாவை நெய்யில் கலந்து பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, இடது கை விரல்களினால் தண்ணீரைத் தொட்டபடி புண்ணைச் சுற்றிலும் மாவைத் தடவ வேண்டும். இதன்மேல் கனமான பஞ்சுத் துணியை வைத்து மூடி, வலது அல்லது இடது பக்கமாகச் சுற்றிக் கட்டுப் போடவேண்டும். கட்டப்படும் கட்டு மிருதுவாகவும், அழுத்தமில்லாமலும், சுருக்கமற்றதாகவும் நேராகவும் அமைதல் வேண்டும். (20)

வாதம்—கபம் இவற்றினால் உண்டான புண்களுக்கு இரண்டு அல்லது மும்முறை கட்டுக் கட்ட வேண்டும். பித்தம், ரத்தம், அடிபடுவது இவற்றால் ஏற்படும் புண்களுக்கு ஒரே தடவை கட்டுக் கட்ட வேண்டும். (21)

ஆயுதத்தினால் கிறப்பட்ட புண்ணில் தொடர்ந்து வலி இருக்குமானால் அதிமதுரத்தினால் தயாரித்த சூடான நெய்யைப் புண்ணில் ஊற்றவேண்டும். குடத்திலிருந்து நீரை எடுத்துத் தெளிக்க வேண்டும். யக்ஷன், ராக்ஷசன், பூதங்கள் இவர்களிடமிருந்து காக்க, குக்கில் போன்ற பொருட்களினால் புகை போட வேண்டும். கெட்ட தேவதைகளுக்கு ஏற்றவாறு பலியிடவேண்டும். (22)

ஓரிலைத்தாமரை, பெருமல்லி, சிறுமல்லி, ஜடாமாம்சி, பிரும்மதண்டு, வசம்பு, சதகுப்பை, குடை போன்ற ஒரு வகைப்புல், அருகம்புல், வெண்கடுகு இவற்றைத் தலையில் கட்டிவைக்க வேண்டும். (23)

குக்கில் போன்ற பொருட்களினால் தினம் இரண்டுமுறை காலையிலும் மாலையிலும் நோயாளியின் படுக்கை, இருக்கை இவற்றிற்குப் புகை போடவேண்டும்.

எண்ணெய்ச் சிகிச்சையில் (அத்தியாயம் 25ல்) கூறிய முறைகளையும் ''நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகள்'' என்ற மூன்றாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட முறைகளையும் கடைபிடிக்கச் செய்ய வேண்டும். (24)

குறிப்பாக அறுவை சிகிச்சை செய்துகொண்ட நோயாளி பகலில் தூங்கினால் புண்ணில் வீக்கம், அரிப்பு, செந்நிறம், வேதனை, வலி, சீழ் இவை அதிகரிக்கும். (25)

இந்த நோயாளி பெண்களை நினைப்பதாலும், தொடுவதாலும், பார்ப்பதனாலும் விந்து நழுவுதல் ஏற்படும். அதனால் பெண்களின் சேர்க்கை இல்லாமலேயே, சேர்க்கையினால் ஏற்படக்கூடிய நோய்கள் உண்டாகும். (26)

நோயாளிக்கு புண்ணிற்கு ஏற்றபடி உணவு கொடுக்க வேண்டும். ஒருவருடம் கடந்த சம்பா அரிசி, அறுபதாம் குருவை அரிசி, யவதானியம், கோதுமை இவற்றில் ஏதாவது ஒன்றையும், வேர்க்கடலை, பயறு, துவரை, கார் அரிசி இவற்றில் ஏதாவது ஒன்றின் கஞ்சியையும் காற்று நிறைந்த இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிச ரசத்தில் கலந்து பருகச் செய்ய வேண்டும்.

பாலைக்கீரை, ஆரைக்கீரை, அம்மான் பச்சரிசி, சிறுகீரை, கத்தரி, புடல், பாகல், இளம் முள்ளங்கியின் கீரை இவற்றுடனும் மாதுளை, நெல்லிக்காய், இந்துப்பூ, வசை இவற்றுடனும் நெய் கலந்து உண்ணச் செய்து, சூடாக்கி ஆறியதும் லகு குணமுள்ளதுமான சுடுநீரை சிறிதளவு பருகச் செய்ய வேண்டும்.

இவ்வாறு உண்ணவும் பருகவும் செய்வதால் விரைவில் நோயாளிக்கு சீரணம் ஏற்படுகிறது. (27)

உணவு சீரணமாகாவிடில், வாதம்—பித்தம், கபம் போன்றவைகளுக்கு அதிக சீற்றம் ஏற்படும். இந்த சீற்றத்தினால் புண்ணில் வீக்கம், வலி, அழற்சி, எரிச்சல், வயிறு உப்புசம் இவை தோன்றும். (28)

இவ்வித நோயாளி புது தானியங்கள், உளுந்து, கொண்டைக்கடலை, கொள்ளு, மொச்சைக் கொட்டை, ஊகு

முள் உள்ள தானியம், குளிர்ந்த நீர், கள், கரும்புச்சாறு, பால், மாவுப்பொருட்கள், எள்ளினால் செய்த பொருட்கள், உலர்ந்த கீரைகள், உலர்ந்த மாமிசம், உலராத தனியா, புளிப்பு, உப்பு, உவர்ப்பு, காரம் இச்சுவைகளையுடைய பொருட்கள், நீரில் வாழும் உயிரினங்களின் மாமிசம் ஆகிய இவற்றை உண்ணக்கூடாது. (29)

மேற்கண்ட பொருட்களுக்கு நவதானிய இனம் எனப் பெயர். இவை புண்பட்ட நோயாளிக்கு எல்லா தோஷங்களையும் தோற்றுவிக்கக்கூடியவை.

தீக்ஷ்ணமானதும், உஷ்ண வீரியமுள்ளதும், வறட்சித்தன்மையும், புளிப்புச்சுவையும் கொண்டதுமான புண்ணிற்கு விரைவில் தீமையை விளைவிக்கும். (30)

வெட்டிவேர் விசிறியினால் விசிற வேண்டும். புண்ணை உராயவும், சொரியவும் கூடாது. குத்தக்கூடாது. அசையக் கூடாது. இம்முறைகளைக் கடைபிடித்து புண்ணைக் காப்பாற்ற வேண்டும். (31)

நண்பர்கள், வயோதிகர்கள், அந்தணர்கள் இவர்கள் கூறும் மனதிற்குகந்த கதைகளைக் கேட்டும், விரைவில் நோய் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையுடனும் இருப்பவனின் புண் சீக்கிரம் ஆறிவிடும். (32)

மூன்றாவது நாள் புண்ணைச் சுத்தப்படுத்துதல் போன்ற செயல்களைச் செய்ய வேண்டும். இரண்டாவது நாள் கட்டை அவிழ்த்துவிட்டால், புண்ணில் சிறுசிறு முடிச்சுகள் தோன்றும். நாட்பட்டபின் புண் ஆறும், பொறுக்க முடியாத வலி ஏற்படும். (33)

மருந்து கலந்த வர்த்தியும், கல்கமும் அதிக எண்ணெய்ப் பசையுள்ளதாகவும் அதிக வறட்சித் தன்மையுடையதாகவும் இருக்கக்கூடாது.

வர்த்தியையும் கல்கத்தையும், அதிகத் தளர்த்தியாகவும், அதிக ஆழமாகவும், சொர சொரப்பாகவும், தவறாகவும் புண்ணில் வைக்கக்கூடாது.

அதிக எண்ணெய்ப் பசையுள்ள வர்த்தியைப் பயன்படுத்துவதால் புண்ணில் நைப்புத்தன்மை ஏற்படும்.

வறட்சித்தன்மையுடைய வர்த்தியை உபயோகிப்பதனால், புண்ணில் பிளவும், வேதனையும் உண்டாகும்.

மிக்க தளர்ச்சியாக இருப்பதனால் புண் சுத்தமடைவதில்லை. அதிக ஆழமாக வைப்பதினால் புண் வெலவெலத்து விடும்.

சொர சொரப்பினாலும், தவறாக வைப்பதனாலும் புண்ணின் ஓரங்களில் உராய்வு ஏற்படும். (34)

புண்ணின் உள்ளே நன்கு செலுத்தப்பட்டுள்ள வர்த்தி புண்ணை விரைவில் சுத்தம் செய்து ஆற்றிவிடுகிறது. (35)

பழுக்காத வீக்கத்தைக் கீறிவிட்டால் அந்தப் புண்ணிற்கு எதிரிடையில்லாத, பழுக்கச் செய்யும் குணமுள்ள, உணவு வகைகளை உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

மருந்துப் பொருட்களினால் ஒத்தடம் கொடுத்து வியர்வையை வரவழைக்க வேண்டும். (36)

9. தையல் போடும் முறை

தையல் போடத் தகுந்த புண்ணில் அசையும் எலும்பு, தீய பொருள், தூசி, புல், ரோமம், உலர்ந்த இரத்தம் இவற்றை நீக்கி, பிளந்ததும், தொங்குகிறதுமான மாமிசத்தையும், மூட்டுக்களையும் எலும்புகளையும் அதன் உரிய இடத்தில் சரியாகப் பொருத்தி, இரத்தம் நின்றபின் புண்ணிற்கு ஏற்றவாறு தசைநார், நூல், ரோமம் இவற்றுள் ஏதாவது ஒன்றை ஊசியில் கோர்த்துத் தைக்க வேண்டும். தைப்பதற்கு சணல், மலை அகத்தி, பெருங்குறும்பை, ஆளிமரம் இவற்றின் நார்களையும் பயன்படுத்தலாம். (37)

10. தையலின் வகை

1. கோஷ்பண்கா—பசுவின் முகம்போல அல்லது பாம்பின் படம் போல் தைப்பது.

2. துன்னஸேவனி—கிழிந்த தோலைத் தைக்கும் முறை.

3. வேல்லிதகம்—கொடி போல் வளைவாகத் தைத்தல்.

4. க்ரந்திபந்தனம்—இரு பகுதிகளையும் சேர்த்து தைத்து முடிச்சுப் போடுதல்.

என சுருக்கமாக தையல் போடும் முறை நான்கு வகைப்படும். இவற்றின் உருவங்களையும் பெயர்களினாலேயே அறிந்து கொள்ளலாம். இவற்றை காயத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும். (38)

மிக நெருக்கமாகவும், மிக்க இடைவெளிவிட்டும், சதையைச் சிறிதளவு பிடித்துக்கொண்டோ, அதிக அளவு பிடித்துக் கொண்டோ தைக்கக்கூடாது. நன்றாக தைக்கப்பட்டதை அறிந்து அஞ்சனக்கல், அதிமதுரம், வேம்பு, பாச்சோத்தி, ஞாழல், ஆனைவணங்கியின் பழம், பட்டுத்துணியின் சாம்பல், இவற்றைப் பொடியாக்கி, தேனும் நெய்யும் கலந்து தைக்கப் பட்ட இடத்தில் பூசி முன்போல் கட்டுக் கட்ட வேண்டும். (39)

11. தையல் போடத் தகாத இடங்கள்

தொடை இடுக்கு, மார்பு, அக்குள், இவற்றிலும், அசைவுள்ள உறுப்புகள், மாமிசம் அடர்த்தியாக இல்லாத இடங்கள், வாதம் சஞ்சரிக்கக்கூடிய உறுப்புகளிலுள்ள புண், இரத்தமும் சல்யமும் உள்ளடங்கியிருக்கும் புண், நஞ்சு, நெருப்பு, காரப் பொருட்கள் இவற்றால் ஏற்பட்ட புண் இவ்விடங்களில் தைக்கக்கூடாது. (40)

12. தையல் போடத் தகுந்த புண்கள்

கொழுப்பினால் உண்டான புண், நன்கு கீறப்பட்டு சுத்தம் செய்யப்பட்ட புண், கபத்தினால் ஏற்பட்ட முடிச்சு, சிறுமடல் உள்ள காது, அடியினால் எதிர்பாராத முறையில் தோன்றிய புண், இந்த இடங்களில் தைக்க வேண்டும்.

மேலும் தலை, நெற்றி, கண்கோளங்கள், காது, மூக்கு, கன்னம், உதடு, பிடரி, வயிறு, கை, பின்பக்கம், ஆசனவாய், ஆண்குறி, அண்டகோசம், அசையாத அடர்த்தியான மாமிசம் உள்ள இடம் இவற்றிலுள்ள புண்களைத் தைக்க வேண்டும். (41)

13. புண்களில் கட்டுப் போடும் முறை

கோசம், வாமம், உத்ஸங்கம், ஸ்வதிகம், அநுவேல்லிதம், உத்தோலி, மண்டலம், ஸ்தகிகம், யமகம், கட்வா, சீநம், விபந்தம், விதானம், கோஷ்பணம், பஞ்சாங்கி என கட்டுகள் பதினைந்து வகைப்படும்.

இவற்றின் உருவங்கள் பெரும்பாலும் பெயர்களினாலேயே அறிந்துகொள்ளத்தக்கவை.

1. கோசம் என்ற கட்டு — விரலின் கணுக்களில் கட்டுவது.

2. தாமம் என்ற கட்டு — தொடை இடுக்குகள் போன்ற இக்கட்டான இடங்களில் கட்டுவது.

3. உத்ஸங்கபந்தம் என்ற கட்டு — முறிந்து தொங்கும் கைகளில் கட்டும் கட்டாகும்.

4. ஸ்வஸ்திகம் என்ற கட்டு — மூட்டுகள், தசைநார், எலும்பு, நரம்பு இவை ஒன்று சேருமிடம், புருவம், மார்பகத்தின் நடுப்பகுதி, அக்குள், கண், கன்னம், காது இவ்விடங்களில் கட்டப்படுவதாகும்.

5. அநுவேல்லிதம் — கை, கால்களில் கட்டப்படுவது.

6. உத்தோலி — கழுத்திலும் ஆண்குறியிலும் போடப்படும் கட்டு.

7. மண்டலம் — உருண்டையான உறுப்புகளில் இடப்படும் கட்டு.

8. ஸ்தகிகம் — கட்டைவிரல், விரல்கள், ஆண்குறியின் நுனி, சிறுநீர் தங்கியுள்ள விரை, குடலிறக்கம், இவ்விடங்களில் கட்டப்படும் கட்டாகும்.

9. யமகம் — அருகில் உள்ள இரண்டு புண்களுக்குக் கட்டும் கட்டு.

10. கட்வா — தாடை, பொட்டு, கழுத்து இவ்விடங்களில் போடப்படும் கட்டுகள்.

11. சீனம் — கண்களின் ஓரங்களில் கட்டப்படுவது.

12. நிபந்தம் — வயிறு, தொடை, பின்பக்கம் இவ்விடங்களில் கட்டப்படுவதாகும்.

13. விதானம்—தலை போன்ற அகலமான உறுப்புகளில் கட்டப்படும் கட்டு.

14. கோஷ்பணம்—மூக்கு, உதடு, முகவாய்க்கட்டை, தொடைகள் இவ்விடங்களில் இடப்படும் கட்டு.

15. பஞ்சாங்கி—கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளில் கட்டும் விதம்.

அல்லது இடங்களுக்குத் தகுந்தவாறு கட்டுகளை அமைத்துக் கொள்ளலாம். புண்களுக்குத் துன்பம் ஏற்படாத விதத்தில் கட்டுகளின் முடிச்சு இருக்க வேண்டும் (42)

வாதத்தினால் உண்டான புண் அழுகின புண், ஆழ மான புண் இவ்விடங்களில் கட்டுக்கட்டுவது நலனை அளிக் கும்.

அழுகின புண், ஆழமான புண், உள்ள இடங்களில் வலது புறமாகவோ அல்லது இடது புறமாகவோ கட்டுப் போடலாம். பொதுவாக எல்லா இடங்களிலும் அழுத்தம், தளர்தல், சமம் என மூவகையான கட்டுகளைப் பயன்படுத்த லாம். (43)

கபத்தினாலும் வாதத்தினாலும் தோன்றிய புண்களுக்குக் கட்டு இறுக்கமாக அமையவேண்டும். பித்தத்தினால் ஏற்படும் புண்களுக்கு இலேசாகவும், தளர்ச்சியாகவும் கட்டுப் போட வேண்டும். வாத—பித்தத்தினாலும், கப—பித்தத்தினாலும் உண்டான புண்களுக்கு சமமாகக் கட்டுப் போட வேண்டும். (44)

இதேபோல் பின்பக்கம், அக்குள், தொடை இடுக்கு, தொடை, தலை இவ்விடங்களில் இறுக்கமாகக் கட்டுப்போட வேண்டும். கை—கால், முகம், காது, கழுத்து, ஆண்குறி, விரை, பின்பகுதியின் இருபக்கங்கள், வயிறு, மார்பு இவ்விடங் களில் சமமாகக் கட்டு கட்ட வேண்டும்.

கண்களின் மூட்டுகளில் தளர்ச்சியாகக் கட்டு அமைதல் வேண்டும். தளர்ச்சியாகக் கட்டுப் போடவேண்டிய இடத்தில் வாத—பித்தத்தினால் புண்கள் ஏற்பட்டால் சமமான கட்டை யும், சமமாகக் கட்டுப்போட வேண்டிய புண்ணில் வாத—கபத் தினால் புண்கள் உண்டானால் இறுக்கியும் கட்ட வேண்டும்.

இறுக்கிக் கட்ட வேண்டிய இடத்தில் வாத—கபத்தினால் புண்கள் தோன்றுமாயின் மிக இறுக்கமாகவும் கட்டுப்போட வேண்டும்.

குளிர்காலத்திலும், சித்திரை — வைகாசி மாதங்களிலும் கட்டிய கட்டை மூன்று நாட்களுக்குப் பின் அவிழ்க்க வேண்டும்.

அழுத்தமாகக் கட்ட வேண்டிய இடத்தில் பித்தத்தினால் உண்டான புண்ணாக இருந்தால் சமமாகக் கட்டுப்போட வேண்டும்.

சமமாகக் கட்டுப்போட வேண்டிய இடத்தில் பித்தம், இரத்தம் இவற்றினால் உண்டான புண்ணாக இருந்தால் தளர்ச்சியாகக் கட்ட வேண்டும்.

தளர்ச்சியாகக் கட்டவேண்டிய இடத்தில் பித்தம், இரத்தம் இவற்றினால் புண் ஏற்பட்டிருந்தால் அவ்விடத்தில் கட்டு போடவே கூடாது.

சரத்ருது (ஐப்பசி—கார்த்திகை மாதங்கள்), கிரீஷ்ம ருது (ஆனி, ஆடி மாதங்கள்) இந்தப் பருவங்களில் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கட்டுக் கட்ட வேண்டும்.

புண்களில் கட்டு இடப்படாவிடில் கொசுக்கள், பூச்சிகள் கடிப்பதாலும், புல், மரத்துண்டு, தூசி, குளிர்ச்சி, காற்று, வெயில் இவற்றின் சேர்க்கையினாலும், பலவித துன்பங்களால் துன்புறுத்தப்பட்டு புண்கள் அழுகும் தன்மையை அடைகின்றன.

நெய் போன்ற எண்ணெய்ப் பசையுள்ள பொருட்கள், அந்தப் புண்ணில் வெகுநேரம் தங்கி நிற்பதில்லை. இடப்பட்ட மருந்தும் விரைவில் உலர்ந்துவிடுகிறது. விரைவில் புண் ஆறுவதுமில்லை. ஆறினாலும் தோலில் நிறமாற்றம் ஏற்படுகிறது. (45)

மேலும் எலும்பு தூளாகியும், கடைந்தும், உடைந்தும், நழுவியும், பிளந்தும், எலும்பு, தசைநார், நரம்பு இவை அறுந்தும் உள்ள புண், கட்டுக் கட்டுவதனால் விரைவில் குணமாகிவிடுகிறது. (46)

மேலும் உட்காருவது, நிற்பது, உறங்குவது போன்ற எல்லாச் செயல்களினாலும் துன்பத்தைக் கொடுப்பதில்லை. புண்ணில் உள்ள ஓரங்கள் மேலே உயர்ந்தும், புடைத்தும், நேர்மையான நிலையில் இல்லாததும், கெட்டியாகவும், அதிக வலி உள்ளதாயுமிருக்கின்ற புண், கட்டுக் கட்டுவதினால் சமமாகவும் மிருதுவாகவும், வலி நீங்கியும், சுத்தமாகவும் ஆகி விரைவில் ஆற்றிவிடுகிறது. (47)

அழுத்தமாகவும், மாமிசம் அடர்த்தியில்லாததும், எண்ணெய்ப் பசையற்றதும், ஆறாததுமான புண்ணை, தோஷங்களுக்கும், பர்வங்களுக்கும் ஏற்ற வகையில் பழுக்காததும், இளமையுள்ளதும், துவாரம் அற்றதும், சுத்தமானதும், கரடு முரடு இல்லாததும் ஆன, பாலுள்ள மரங்கள், பூவரசு, மருது, கடம்பம் இந்த மரங்களின் இலைகளை நான்கு புறமும் நன்றாக வைத்து மறைத்துக் கட்ட வேண்டும். (48—49)

14. கட்டுக் கட்டக்கூடாத புண்கள்

குஷ்ட நோயில் ஏற்படும் புண்கள், நெருப்புச் சுட்ட புண்கள், சர்க்கரை — நீரிழிவு நோயினால் உண்டான சிறிய கட்டிகள், புண்ணின் ஓரங்களில் சிறிய முடிச்சுகளில் ஏற்பட்டிருக்கும் புண், மூஞ்சூறு நஞ்சினால் ஏற்பட்டிருக்கும்' புண், காரப் பொருட்களால் சுடப்பட்ட புண், நஞ்சினால் தோன்றியிருக்கும் புண், மாமிசம் அழுகிப்போன புண், ஒருவகையான ஆசனவாய் அழற்சி, சிதைவுற்ற மாமிசமுள்ள புண், வியர்வையும், எரிச்சலுமுடைய புண், வீக்கம் உண்டாகி, பரவும் தன்மையுள்ள புண் என இவ்விதப் புண்களுக்குக் சுட்டுக் கட்டக்கூடாது. (50—51)

நன்கு கவனிக்கப்படாத புண்ணில், ஈக்கள் பூச்சிகளைக் கொண்டு சேர்க்கும். அந்தப்பூச்சிகள், புண்ணைத் தின்பதுடன், வலி, வீக்கம், இரத்தக்கசிவு இவற்றை உண்டாக்குகின்றன.

இதில் சுரசாதி கணம் எனும் பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்ட பொருட்களால் சுத்தம் செய்து, நிரப்ப வேண்டும். ஏழிலம்பாலை, புங்கு, எருக்கு, வேம்பு, முருக்க மரம் இவற்றின் பட்டையினாலான கல்கத்தைப் பசுவின் சிறுநீரில் கலக்கிப் பூசவேண்டும்.

காரப்பொருட்களின் நீரை அங்கு ஊற்ற வேண்டும். அல்லது புண்ணில் வேறு ஒரு மாமிசத்துண்டை வைத்தால் புண்ணில் உள்ள பூச்சிகள், புதிதாக வைக்கப்பட்ட மாமிசத் துண்டைப் பற்றிக் கொள்ளும். அப்பொழுது அந்த மாமிசத் துண்டை எடுத்துவிடுவதன் மூலம் பூச்சிகளை வெளியேற்றலாம். (52—54)

புண்ணில் ஏற்படும் நிலைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்களையும், காலத்தையும், நோயாளியின் உடல் நிலையையும் அறிந்து, அவற்றிற்கு ஏற்ற சிகிச்சை செய்ய வேண்டும்.

தோஷங்கள் உள்ளடங்கியுள்ள புண்ணை மருத்துவர் அவசரப்பட்டு சோதிக்காமல் ஆற்றக்கூடாது. அந்த தோஷம் சிறு பிழையினாலும், உள்ளுக்குள்ளேயே வளர்ச்சி பெற்று மறுபடியும் துன்பத்தை விளைவிக்கும். ஆகையால் நன்றாக ஆறும் வரையில் சிகிச்சை செய்ய வேண்டும். (55)

நோயாளிக்குப் புண் ஆறியபோதிலும், அசீர்ணமான உணவு, உடற்பயிற்சி, புணர்ச்சி, கோபம் இவற்றை விட்டு விட வேண்டும். இம்முறையை ஆறு அல்லது ஏழு மாதங்கள் வரை கடைபிடிக்க வேண்டும். (56)

இவ்வாறு புண்களைப்பற்றிச் சுருக்கமாக இங்கு கூறியுள்ளோம். விவரமாக அறிந்துகொள்ள இந்நூலில் உள்ள பின் பகுதியை நாடலாம். (57)

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில்
'சஸ்திர கர்ம விதி' எனும் முப்பத்தெட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது அத்தியாயம்

*க்ஷார கர்ம விதி

'க்ஷார கர்ம விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

1. க்ஷாரத்தின் குணங்கள்

பலவகை மூலிகைப் பொருட்களின் சேர்க்கையினால் ஆக்கப்படுவது க்ஷாரம். இது எல்லாச் சுவைகளுக்கும் இருப்பிடமானது. கார்ப்புச் சுவையும், உப்புச்சுவையும் அதிகமாகக் கொண்டது. கடுமையான குணமுள்ளது. உஷ்ண வீர்யமுள்ளது. எரிச்சல், பழுக்கச் செய்தல், பிளத்தல், உருகச் செய்தல், சுத்தப்படுத்தல், ஆற்றுதல் ஆகிய இக்குணங்களை உடையது.. புழுக்கள், அசீரண நிலை, கொழுப்பு, நஞ்சு இவற்றைப் போக்கவல்லது. எல்லாவகையான ஆயுதங்களிலும், துணை ஆயுதங்களிலும் உயர்வானது.

வெட்டுதல், பிளத்தல், உடைத்தல், கரைத்தல் என இவ்வகையான செயல்களை ஆற்றும் வல்லமை உடையது.

மிகுந்த பிரயாசையுடன் ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய உறுப்புக்களிலும், ஆயுதச்சிகிச்சை செய்து பயன் படாத இடத்திலும் மூக்கில் உண்டாகும் முளைநோய், புரை குழல், ஆயுதச்சிகிச்சை செய்து ஆறாத புரையோடிய புண்கள், மேன்மேலும் ஆறாமல் வளர்ந்து கொண்டிருக்கிற புண்கள் ஆகிய இவற்றிலும் இந்த க்ஷார சிகிச்சை பயன்படுகிறது. (3)

2. க்ஷாரவகை

உள்ளுறுப்புக்களைச் சுத்தப்ப்டுத்துதல், வெளி உறுப்புக் களைச் சுத்தப்படுத்துதல் என க்ஷாரத்தின் குணம் இருவகைப் படும்.

---

*கார்ப்புச் சுவையும் உப்புச் சுவையும் மிகுதியாக உள்ளதும் உடலைக் கெல்லும் சக்தியுடையதுமான பொருள், க்ஷாரமாகும். இப்பொருட்களைப் பயன் படுத்திச் செய்யும் மருத்துவத்தை விளக்குவதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெற்றது.

மூலநோய், புரை குழல், [1]பவுத்திரம், நரம்புச்சுருட்டல், புரையோடிய புண், அழுகிய புண், தோலின்மேல் உண்டாகும் முளை, கண்களின் இரப்பையில் உட்புறமாயுள்ள மாமிசப் பகுதியில் தோன்றும் நோய், முகத்தில் உண்டாகும் பிணி, குஷ்டம், பெரு வியாதி, முகத்தில் தோன்றும் எள்ளுப் போன்ற கரு நிறமுள்ள மரு ஆகிய இவை வெளி உறுப்புகளைச் சுத்தப்படுத்தும் க்ஷார வகையால் போக்கக் கூடியவை. குன்மம், இடுநஞ்சு, நீர்ப்பீலிகை, சடராக்னிக் குறைவு, மலம் தேங்கியிருத்தல், வயிற்றுவலி, வயிறு உப்புசம், அச்மரி, சர்க்கரா என்னும் சிறுநீர்ப்பையில் தோன்றும் நோய் இவை உள்ளுறுப்புகளைச் சுத்தப்படுத்தும் க்ஷார வகையால் போக்கக் கூடியவை. இந்த க்ஷாரவகை அவ்வித நோய்களின் சிகிச்சை கூறுமிடங்களில் சொல்லப்படும். (4)

3. க்ஷார சிகிச்சைக்குத் தகுதியற்றவர்கள்

பயந்த குணமுள்ளவன், வலிவற்றவன், இளைத்தவன், வாதம்—பித்தம் இவற்றால் துன்பப்படுகிறவன், காய்ச்சல் உள்ளவன், பேதி ஆகிறவன், பாண்டு நோயுள்ளவன், தலைவலியுள்ளவன், இதய நோயுடையவன், நீரிழிவு உள்ளவன், கண்களில் அழற்சியுள்ளவன், கண்மறைவு பெற்றவன், சுவையறியாதவன், பேதிக்கும்—வாந்திக்கும் எடுத்துக் கொண்ட நோயாளி, மாதவிடாய் உடையவள், கருதரித்தவள், மேல் தூக்கிய கோசமுடைய பெண்குறியுள்ளவள், உடல் முழுவதும் வலி உள்ளவன், விஷம், கள், இவற்றைக் குடித்தவன் ஆகிய இவர்களுக்கு உள்ளுறுப்புக்களைச் சுத்தப்படுத்துதல், வெளி உறுப்புக்களைச் சுத்தப்படுத்துதல் என்ற இருவகை க்ஷாரங்களையும் செய்யக்கூடாது.

4. க்ஷார சிகிச்சைக்குப் பொருந்தாத உறுப்புகள்

மர்ம ஸ்தானங்கள், நரம்புகள், எலும்புகளை ஒன்றோடு ஒன்றுகட்டும் தசைநார், மூட்டுக்கள், இளம் எலும்புகள், தைக்கப்பட்டது போன்ற குறிகளையுடைய பகுதி, ரத்தக் குழாய்கள், தொண்டை, தொப்புள், நகங்கள், விரை, ஆண் குறி, கண், காது, போன்ற துவாரங்கள், குறைவான மாமிசம் உள்ள இடங்கள், கண்ணின் இரப்பையின் உட்புறமாயுள்ள மாமிசப்பகுதியில் தோன்றும் நோய் நீங்கலாக மற்ற கண் நோய் ஆகியவற்றில் இந்த இருவகை க்ஷார சிகிச்சையும் செய்யக்கூடாது.

அவ்வாறே, குளிர்காலம், கோடைகாலம், மழை காலம், மேகம் மூட்டம் போட்டிருந்த நாள், எதிர்காற்று வீசும்

1. பவுத்திரம் — ஆசனவாயின் ஓரத்தில் ஏற்படும் பிளவை.

பருவங்கள் ஆகியவற்றில் மேற்கண்ட க்ஷார சிகிச்சைகளைப் பயன்படுத்தக்கூடாது. (5)

வெளி உறுப்புகளின்மேல் உபயோகப்படுத்தும் க்ஷாரம் நடுத்தரம், மிருது, தீக்ஷ்ணம் என மூவகைப்படும். (6)

மருத்துவன், ஐப்பசி—கார்த்திகை மாதங்களில் தூய்மையுடையவனாய், முதல்நாள் இரவு பட்டினியிருந்து, வெண்ணிற ஆடை அணிந்து, நன்னாளில், புனிதமான இடத்தில் தோன்றிய, புழுக்கள், மழை, நெருப்பு இவற்றால் வீணாகாத நடுத்தர வயதுள்ள, மிகப்பெரிய காட்டுப்பருத்தி மரத்தின் நாற்புறங்களிலும், கள், மாமிசம், மணமுள்ள மலர்கள், அக்ஷதை இவற்றைப் பலிகொடுத்து, அந்த மரத்தை வலம்வந்து, பூசை செய்து அதன் கீழே அமரவேண்டும்.

பிறகு அந்த மரத்தில் உள்ள தேவதைகளை வணங்க வேண்டும். ''இம்மரத்தில் வாழும் தேவதைகளே! உங்களுக்கு வணக்கம். நீங்கள் அழிவற்ற இந்த வாழுமிடத்தை விட்டுவிட்டு கோபங்கொள்ளாமல் சென்றுவிடுங்கள்.

நான் எல்லா உயிரினங்களின் மருந்துக்காக, குறிப்பாக அந்தணர்களின் மருந்துக்காக இந்த மரத்தை வெட்டப்போகிறேன். ஆசையினாலோ, கோபத்தினாலோ இந்த மரத்தை வெட்டவில்லை'' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். (7—9)

மறுநாள் காலை அந்த மரத்தினடியில் ஏதாவது அற்புத நிகழ்ச்சியோ, மாறுபாடோ தெரியாவிட்டால், கதிரவன் தோன்றும் வேளையில் அந்தணர்களைக்கொண்டு நல்வார்த்தைகள் கூறச்செய்து, அந்த காட்டுப் பருத்தி மரத்தை கிழக்கு அல்லது வடக்குப்பகுதியில் விழும்படி வெட்ட வேண்டும்.

இதேபோன்று கல்யாண முருக்கன், புரசு, மருதமரம், கொன்னை, மலைவேம்பு, விருக்ஷகம், வெட்பாலை, ஆடுதோடாச்செடி, காட்டு உவகை, ஏழிலம்பாளை, புங்கு, பாச்சோத்தி, வாழை, தான்றிக்காய் மரம், அலரி, மணிப்புங்கு, கொடிவேலி, எருக்கு, குறட்டை மரம், நாயுருவி, முன்னை, இவற்றை வேர், கிளைகளோடு சித்திரை—வைகாசி மாதங்களில் வெட்ட வேண்டும். அதைத் துண்டுகளாக்கிச் சுணையுள்ள யவம் எனும் தானியத்தைத் தாளுடன் கொண்டுவந்து, நான்கு வகையான பீர்க்கங்கொடிகளையும் சேகரித்து, இவை எல்லாவற்றையும் வேர், பழம், கிளை, இலை இவற்றைத்

துண்டு துண்டாக வெட்டி முழுவதும் உலராத நிலையில் கற்பாறையில் காற்றோட்டமில்லாத இடத்தில் சுண்ணாம்புக் கற்களைப் போட்டு குவித்து, எள்ளுத்தாள்களை இட்டு எரித்து விட வேண்டும். எரிந்து அணைந்தபின் சுண்ணாம்புக்கற்களின் சாம்பலைத் தனியாகவும் மற்ற மரங்களின் சாம்பலைத் தனியாகவும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பிறகு சுண்ணாம்புக்கல்லின் சாம்பல் ஒரு [1]துரோண அளவும் மற்ற மரங்களின் சாம்பல் ஒரு துரோண அளவும் சேர்க்க வேண்டும். மற்றமரச் சாம்பலில் காட்டுப்பருத்தி மரத்தின் சாம்பல் அதிக அளவில் கலந்திருக்க வேண்டும். இவற்றை நாலாயிரம் தோலா தண்ணீர், நாலாயிரம் தோலா பசுவின் சிறுநீர் இவற்றில் போட்டு கலந்து சுத்தமான பெரிய துணியால் வடிக்கட்ட வேண்டும். அந்த வடிக்கட்டிய திரவம், பிசுபிசுப்பும், செந்நிறமும் பெற்று தெளியும்வரை வைத்திருக்க வேண்டும். அது தீக்ஷ்ணகுணம் அடைந்தபின், அந்தக் குழம்பை எடுத்துக்கொண்டு சாம்பலை விட்டுவிட வேண்டும். பிறகு எண்ணெய் காய்ச்சும் முறைப்படி அந்தக் குழம்பை வாணலியிலிட்டுக் காய்ச்ச வேண்டும். காய்ச்சும்போது மத்தினால் கடைந்துகொண்டிருக்க வேண்டும்.

பிறகு மற்றொரு வாணலி (இரும்புச்சட்டி)யில் முன்பு சுட்ட சுண்ணாம்புக் கற்களையும், சங்கநாபி எனும் திரவத்தையும் சோழிகளையும் சிறு துண்டுகளாக்கிப் போட்டு கருகும் வரையில் வறுக்க வேண்டும். வறுத்த அந்தப் பொடியை (ஒரு குடவம் அளவு) 16 தோலா அளவு எடுத்து முன்பு காய்ச்சிக் கொண்டிருக்கிற குழம்பில் போட்டுக் கடைய வேண்டும். குமிழிகள் ஏற்படும்வரையும், மத்தில் ஒட்டிக் கொள்ளும்வரையும் காய்ச்ச வேண்டும். அதை இரும்புப் பாத்திரத்தில் சேகரித்து யவதானியக் குவியலில் புதைத்துவைக்க வேண்டும். இதுவே நடுத்தர க்ஷாரம் எனப்பெயர் பெறும். (10)

முன் சொன்ன க்ஷாரப்பொருட்களில் சுண்ணாம்புக்கல், சோழி, சங்கநாபீ இவற்றைச் சேர்க்காமல் தயார் செய்வது மிருது க்ஷாரம் எனப்படும்.

நேர்வாளம், கொடிவேலி, கலப்பைக்கிழங்கு, புங்கு, பவழம், தாளீசபத்திரி, சவுட்டு உப்பு, ஸர்ஜக்ஷாரம், பிரும்ம தண்டு, பெருங்காயம், வசம்பு, அதிவிடயம், இவற்றை நன்

---

1. துரோணம்—1024 தோலா அளவு. தமிழ்நாட்டில் பதக்கு என்ற முகத்தலளவு.

றாகத் தூள்செய்து இரும்புச் சட்டியிலிட்டு எரித்துக் கருக்கி, சோழி, சங்கநாபீ இவற்றையும், சேர்த்து மத்யமக்ஷாரத்தில் கூறியபடி தீக்ஷ்ணக்ஷாரம் செய்ய வேண்டும்.

இந்த க்ஷாரங்களைத் தயார் செய்த ஏழு நாட்களுக்குப் பின் நோயின் நிலையை அறிந்து பயன்படுத்த வேண்டும். க்ஷாரங்களின் வீர்யம் குறைந்துபோனால் மறுபடியும் அதிக குணம் ஏற்படுவதற்கு க்ஷார நீரைச் சேர்க்க வேண்டும்.

5. க்ஷாரத்தின் பத்து குணங்கள்

1. அதிகக் காரகுணமற்றது
2. அதிக மிருதுத் தன்மை அற்றது.
3. வெண்ணிறம் கொண்டது.
4. மழமழப்பானது
5. விரைவில் உடலில் பரவும் தன்மையுடையது.
6. பிசுபிசுப்புடையது
7. சிகரம் போல மேலான வரம்புள்ளது.
8. காடி முதலியவற்றால் தணியும் தன்மையுடையது.
9. சிறிதளவு வலியைக் கொடுப்பது.
10. நீர்க்கசிவை உண்டாக்காது.

6. க்ஷாரத்தின் பத்து தோஷங்கள்

1. அதிக உஷ்ணம்
2. அதிக குளிர்ச்சி
3. அதிக தீக்ஷ்ணம்
4. அதிக மிருது
5. அதிக மெல்லியது
6. அதிக கனம்
7. அதிக பிசுபிசுப்பு
8. பரவும் தன்மை
9. வீரியக் குறைவு
10. சரியாகப் பக்குவமடையாமை

(11)

7. க்ஷார சிகிச்சைக்குத் தேவையான கருவிகள்

பஞ்சு, வர்த்தி, குச்சிகள், அகப்பை, சிறு கிண்ணம், நெய், தேன், காடி, உமியினால் செய்த காடி, மோர்த் தெளிவு, பால், தண்ணீர், குளிர்ச்சியான பூச்சுப்பொருட்கள், படுக்கை, இருக்கை இவற்றை சிகிச்சை செய்வதற்கு முன்பு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

8. க்ஷார சிகிச்சை செய்யும் முறை

க்ஷாரசிகிச்சைக்குத் தகுதியுள்ள நோயாளியை அமர்த்தி அல்லது படுக்கச்செய்து, நோயாளியை மிகவும் நெருங்கிய நண்பர்களால் பிடித்துக்கொள்ளச்செய்து, நோய்உள்ள இடத்தை

பிளந்தோ அல்லது சுரண்டியோ, துடைத்தோ, பஞ்சு அல்லது துணியினால் சுருட்டிய குச்சியினால் க்ஷாரத்தை இடவும்.

பிறகு நூறுமாத்திரை (ஒரு சொடுக்கு நேரம்) கால அளவு அப்படியே வைத்திருக்க வேண்டும்.

கண்களின் இரப்பையின் உட்புறமாயுள்ள மாமிசப் பகுதியில் தோன்றும் நோயில் இமைகளை நன்றாகத் திறந்து, பஞ்சு அல்லது தேன் மெழுகினால் கருவிழியை மூடி, தாமரை இலை போன்ற மெல்லிய அளவு க்ஷாரத்தைப் பூச வேண்டும்.

மூக்கில் உண்டான முளைநோய், புரைகுழல் இவற்றில் நோயாளியை கிழக்கு முகமாக அமர்த்தி மூக்கை உயர்த்தி க்ஷாரத்தைப் பூச வேண்டும்.

ஐம்பது மாத்திரை (சொடுக்கும் நேரம்) கால அளவு அப்படியே வைத்திருக்கவேண்டும். அவ்வாறே காது நோய்களி லும் பின்பற்ற வேண்டும். ஆசனவாயில் தோன்றும் முளை நோயில், மருந்து பூசப்பட்டிருக்கும் கருவியின் துவாரத்தைக் கையினால் மூடி, நூறு மாத்திரை கால அளவு அப்படியே இருக்கச் செய்யவேண்டும்.

பிறகு பஞ்சு அல்லது மெல்லிய துணியினால் பூசப்பட்ட க்ஷாரத்தைத் துடைத்து, நன்கு சிகிச்சை செய்யப்பட்டதா என்பதை ஆராய்ந்து அவ்விடத்தில் தேனையும், நெய்யையும் குழைத்துப் பூசவேண்டும். சுக்தம் எனும் காடி, உமியினால் செய்த காடி, மோர்த்தெளிவு, பால் இவற்றால் குளிர்ச்சியை உண்டாக்கவும்.

குளிர்ச்சி பொருந்திய இனிப்புச் சுவையுடைய பொருட் களை நெய்யில் குழப்பி மேற்பூச்சு இடவும். பசையினாலும், குரு குணத்தினாலும் உடலுக்கு செழிப்பை உண்டாக்குவதும், ஈரப்பசையைத் தோற்றுவிப்பதுமான உணவு வகையைக் கொடுக்க வேண்டும்.

நோய் வேரூன்றிப்போய் க்ஷாரச் சிகிச்சைக்குக் கட்டுப் படாத நிலையில், தான்யாம்லத்தின் அடியில் படிந்திருக்கும் கசண்டு, அதிமதுரம், எள்ளு இவற்றைப் பொடி செய்து கல்க மாக்கிப் பூச வேண்டும். அல்லது பிரும்ம தண்டுடன் எள்ளைச் சேர்த்துச் செய்த கல்கத்தினாலாவது பூச வேண்டும். அல்லது சிவதை வேர், வாயுவிடங்கம் இவற்றை அரைத்து கல்கமாகச் செய்து பூச வேண்டும்.

மல்லிகை, ஆடு தொடா இலை, அழிஞ்சல், வேம்பு, கருநொச்சி, பேய்ப்புடல், அலரி இவற்றினால் செய்த கஷாயத்தினால் புண்ணைக் கழுவவேண்டும்.

இவற்றையே கல்கமாகவோ கஷாயமாகவோ தயார் செய்து நெய் அல்லது எண்ணெயில் குழைத்துப் புண் ஆறுவதற்குப் போடவேண்டும். அல்லது சிறுநாகப்பூ, மஞ்ஜஷ்டி, சந்தனம், எள்இலை, இவற்றின் கஷாயத்திலோ அல்லது கல்கத்திலோ நெய் அல்லது எண்ணெய் கலந்து புண்ணில் பூச வேண்டும்.

நோய்க்கும் தோஷங்களுக்கும் ஏற்றவாறு சிகிச்சை செய்ய வேண்டும். அதிமதுரத்துடன் எள்ளையும், நெய்யில் குழப்பிப் புண்ணற்கு இடுவது, இரணம் ஆறுவதற்கு மிகச் சிறந்தது. (12)

9. க்ஷார சிகிச்சை வெற்றி பெற்றதன் அறிகுறிகள்

பழுத்த நாவற்பழத்தின் கருநிறம் போன்று, புண் குணமடைந்து, எளிய சிகிச்சையினால் நோய் தணிந்திருக்குமேயானால் அது க்ஷாரசிகிச்சை வெற்றிபெற்றதன் அறிகுறியாம்.

மேற்கூறிய அறிகுறிகளுக்கு எதிரிடையாகவும், குத்தல் வலி, அரிப்பு, பஞ்சு இவை ஏற்பட்டால், சிகிச்சை நன்கு நடைபெறவில்லை என அறிந்துகொள்ளலாம். இவ்விடத்தில் மறுபடியும் க்ஷாரசிகிச்சை செய்ய வேண்டும்.

நெருப்புச் சுட்டது போன்ற எரிச்சல், சாதாரண எரிச்சல், செந்நிறம் கலந்த வீக்கம், காய்ச்சல், அழற்சி, பிளக்கும் தன்மை, தலையில் தோன்றும் பிணி, வாதம், பித்தம் இவற்றின் சீற்றத்தினால் ஏற்பட்ட நோய்கள் ஆகியவை தோன்றினால் க்ஷாரத்தினால் அதிகமாகச் சுடப்பட்டது என்று அறிந்து கொள்க.

மேலும் கண்களில் க்ஷாரத்தினால் அதிகமாக சுடப்பட்டிருந்தால் இமை விழுந்துவிடுவதுடன் கண்பார்வை அழிந்துவிடும்.

மூக்கில் தோன்றும் நோயில் க்ஷாரத்தை அதிகம் பயன்படுத்தினால், மூக்கு, மூக்குத்தண்டு, மூக்கில் உள்ள இளம் எலும்பு இவை பிளந்துவிடும். மூக்கு சுருங்கி விடுவதுடன் மணம் அறியும் சக்தியும் அழிந்துவிடும்.

இவ்வாறே காது போன்ற இடங்களில் குறிப்பிட்ட இடங்களில் ஏற்பட்டிருக்கும் தீமைகளைக் கொண்டு தெரிந்து கொள்க.

மலம், சிறுநீர் அடைப்பு, கழிச்சல், ஆண்மை இழத்தல், ஆசனவாய் பிளத்தல், உயிர் பிரிதல், அல்லது எப்பொழுதும் வீக்கம், குத்தல் வலி, வேதனை, இரத்தக் கசிவு, மலம், சிறுநீர், கீழ்நோக்கிச் செல்லும் வாயு இவற்றை அடக்கும் சக்தி யின்மை ஆகியவை ஆசனவாயில் க்ஷாரம் அதிகம் பயன் படுத்துவதனால் ஏற்படும்.

க்ஷாரத்தை அதிகமாகப் பயன்படுத்தியதால் உண்டாகும் தீமைகளுக்கு முன்பு கூறிய புண்ணை ஆற்றக்கூடிய மருந்து களை அடிக்கடி பயன்படுத்தி புண்ணை ஆற்ற வேண்டும்.

ஆகையால் முதலிலேயே க்ஷாரத்தை அதிக அளவில் ஒரே நேரத்தில் பயன்படுத்தக்கூடாது. (13)

புளிப்புச் சுவை இயற்கையிலேயே குளிர்ச்சித்தன்மை பொருந்தியது. தொட்டாலே குளிர்ச்சியை அளிப்பது.

புளிப்புச் சுவையுள்ள பொருட்களால் தயாரிக்கப்பட்ட க்ஷாரம், இனிப்புத் தன்மையுடன் மிருதுத் தன்மையையும் பெறுகிறது. ஆகையால் புளிப்புச் சுவையை க்ஷாரத்தின் வேகத்தைத் தணிப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். (14)

க்ஷாரசிகிச்சை முறை தவறியிருந்தால் காய்ச்சல், கழிச் சல், நாவறட்சி, மோகம், மூர்ச்சை, இதயவேதனை இவை ஏற்பட்டு புல்கூட்டத்தை நெருப்பு விரைவில் எரித்துவிடுவது போல் உடலை எரித்துவிடுகிறது. (15)

க்ஷாரம் அதிகம் பயன்படுத்தப்பட்டிருந்தால் உடனே நெய் கலந்த தயிர், வெல்லத்துடன் கலந்த தயிர் ஆடை அல்லது கற்கண்டுடன் கலந்த எண்ணெய் இவைகளைக் குடிக்கச் செய்ய வேண்டும். (16)

நெல்லிக்கனி, விளாம்பழம், புளிப்பு மாதுளம்பழம் இவற் றின் இரு மடங்கு சாற்றில் நெய் கலந்து முறைப்படி காய்ச்சி தயார் செய்த நெய்யைக் குடிக்கவும். க்ஷார சிகிச்சையில் மேற் பூச்சையும் பயன்படுத்த வேண்டும். (17)

மாதுளை, நெல்லிக்காய், புளிப்பு மா, விளாங்காய், களாக்காய், மா, துரிஞ்சிக்காய், இவற்றைக்கொண்டு இளஞ் சூட்டில் காய்ச்ச வேண்டும்.

க்ஷாரசிகிச்சை அதிகம் செய்யப்பட்டவனுக்கு வலிமைக்கு ஏற்றவாறு இவை அளவுடன் கொடுக்க வேண்டும். அதனால் க்ஷாரம் அதிகப்பட்டதனால் ஏற்பட்ட தீமைகள் நீங்கும். தோல் தெளிவடையும்.

இரத்தப்பெருக்கு அதிகம் ஏற்பட்டால் உள்ளும் புறமும் குளிர்ந்த சிகிச்சை செய்ய வேண்டும். *(18—19)*

அஷ்டாங்க சங்கிரகம் ஸூத்ரஸ்தானத்தில் :
'க்ஷார கர்ம விதி' எனும்
முப்பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

நாற்பதாவது அத்தியாயம்

*அக்னிசர்ம விதி

'அக்னிகர்ம விதி' எனும் அத்தியாயத்தை ஆத்ரேயர் போன்ற மாமுனிவர்கள் கூறியபடி விவரிப்போம். (1—2)

1. நெருப்பினால் சுடுவது

காரப்பும், உப்பும் மிகுதியாக உள்ள, உடலைக் கெல் லும் சக்தியுடைய க்ஷார சிகிச்சையைவிட நெருப்பினால் சுடும் சிகிச்சை மேலானது. மருந்துகள், க்ஷார சிகிச்சை, அறுவைசிகிச்சை இவற்றைச் செய்தும் போக்க முடியாத நோய் களையும் நெருப்பினால் சுடும் சிகிச்சையினால் நீக்கிவிடலாம். அப்படி நீங்கிய நோய் மறுபடியும் திரும்பி வருவதில்லை. அதனால்தான் அச்சிகிச்சை உயர்வானது.

2. உறுப்புகளில் சுடுவது

தோல், மாமிசம், நரம்பு, எலும்புகளை ஒன்றோடு ஒன்று கட்டும் கெட்டியான தசை நார், மூட்டுகள், எலும்பு கள் இவற்றில் இச்சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

3. தோலில் சுடுவது

மசகம் எனும் கருநிறமுடைய பரு, எள் அளவும் அதே நிறமுமுள்ள மரு, தோலில் ஆணிபோல் இருக்கும் முளை, வலியுள்ள, உணர்வற்ற, சுருங்கிய உறுப்புகள், கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல், ஒற்றைத் தலைவலியுடன் கூடிய கடுமையான கண் நோய், வலியால் துன்பப்படுகிற தலை, புருவம், பொட்டு, நெற்றி இவ்விடங்களில் நெருப்பினால் சுடும் சிகிச்சை செய்ய வேண்டும்.

சூரிய காந்தக்கல், திப்பிலி, ஆட்டுப்புழுக்கை, பசுவின் பல், அம்பு, குச்சி போன்ற கருவி இவற்றால் தோலில் சூடு போட வேண்டும்.

---

*அக்னிகர்ம விதி—சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளை நெருப்பில் காய்ச்சி சுடும் முறையை விவரிப்பதால் இவ்வத்தியாயம் இப்பெயர் பெறு கிறது.

[1]அபிஷ்யந்தம் [2]அதிமந்தம் எனும் கண்நோய் வந்தால் புருவம், பொட்டு, நெற்றி இவ்விடங்களில், நோயின் கொடுமைக்கும், நோயுள்ள இடத்திற்கும் தகுந்தவாறு ஊகித்துச் சுடவேண்டும்.

4. மாமிசத்தில் சுடுவது

நரம்புச் சுருட்டல், புரை குழல், முளையுள்ள மூல நோய், [3]பவுத்திரம், [4]கண்டமாலை, யானைக்கால், குடல் இறக்கம், அழுகின புண், புரையோடிய காயம், ரத்தக் குழாய்களில் ஏற்படும் ஆழமான, சீழ் நிறைந்த புண், ஊன்தண்ணீர் பெருகுகிற புண் இவைகள் வந்தால் நாவல்கொட்டை போன்ற அமைப்புள்ள கருவி, ஊசி, குச்சி போன்ற சலாகை எனும் கருவி, நெய், வெல்லம், தேன், தேன்மெழுகு, எண்ணெய், சுத்தமான மாமிசத்திலிருந்து எடுக்கப்படும் ஒருவகை எண்ணெய், பொன், செம்பு, இரும்பு, வெள்ளி, வெண்கலம் இக்கருவிகளால் மாமிசம் அடர்த்தியாயுள்ள இடத்தில் சுட வேண்டும்.

5. நரம்புகளைத் தசை நார் போன்றவற்றில் சுடுதல்

நரம்புகள், எலும்புகளை ஒன்றோடு ஒன்று கட்டும் தசை நார், மூட்டுக்கள், எலும்பு இவை வெட்டுண்டு அதிக இரத்தம் வெளிப்படும் இடத்திலும் பற்களுக்குச் செல்லும் இரத்தக் குழாய், நழுவிய கண் இமைகள், புருவங்களுக்கு அருகாமை, பார்வை அறவே இழந்திருக்கும் நோய், இவ்விடங்களில் கீறல் சிகிச்சை நன்கு செய்யாததினால் இரத்தப் பெருக்கு ஏற்படும் நிலையில் நாவல் கொட்டை போன்ற உருவமுள்ள கருவி, ஊசி, தேன்மெழுகு, தேன், வெல்லம் இவற்றில் ஏதாவது ஒன்றினால் நரம்புகளில் சூடு போட வேண்டும். (3)

6. நெருப்பினால் சுடும் சிகிச்சைக்குத் தகாதவர்கள்

வயிற்றினுள் பிளந்த உறுப்புகளையுடையவன், இரத்தக் கொதிப்பு உள்ளவன், சல்யம் வெளியில் எடுக்கப்படாத

---

1. அபிஷ்யந்தம்—கண்களில் பலவித கெட்ட நீர்கள் சேர்ந்து கண்ணீர் வடிதல்.
2. அதிமந்தம்—ஒற்றைத் தலைவலியுடன் கூடிய கடுமையான கண் நோய்.
3. பவுத்திரம்—ஆசனத்துவாரத்தின் ஓரத்தில் ஏற்படும் கட்டி.
4. கண்டமாலை—கழுத்தைச் சுற்றிலும் தோன்றும் கட்டிகள்.

நிலையிலுள்ளவன், உடல் முழுவதும் ஏற்பட்ட புண்களால் துன்புறுகிறவன், க்ஷார சிகிச்சைக்குத் தகாதவன் இவர்களுக்கு வெயிற்காலத்தில் நெருப்பினால் சுடும் சிகிச்சையைச் செய்யக்கூடாது.

ஆனால் இவர்களுக்கு இச்சிகிச்சை செய்துதான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், வெயிற்காலத்திற்கு எதிரிடையான செயல் முறைகளைச் செய்து, எண்ணெய்ப் பசையுள்ள உணவை அருந்தச் செய்தபின் சுடும் சிகிச்சையைச் செய்யலாம். (4)

7. சுடும் முறை

சுடும் சிகிச்சை செய்கிறவனுக்கு முதலில் மங்கலச்சடங்குகள் செய்வித்து, சிகிச்சைக்குத் தேவையான பொருட்களைத் தயார் செய்து வைத்துக்கொண்டு, கிழக்கு நோக்கி அமர்த்தியோ அல்லது கிழக்குமுகமாக நோயாளியின் பார்வை இருக்கும்படி படுக்கச்செய்தோ, நோயாளிக்கு மிகவும் வேண்டியவர்களைக்கொண்டு கட்டிப் பிடிக்கச் செய்து மருத்துவர் சிகிச்சையைத் தொடங்கவேண்டும்.

கருங்காலி, இலந்தை விறகுகளின் கரி இவைகளால் நெருப்பை மூட்டி புகையின்றி அசையாமல் நன்றாக எரிக்கவும். துருத்தி அல்லது விசிறியினால் அந்த நெருப்பை தீக்கொழுந்து உண்டாகும் வரை விசிற வேண்டும். இரும்பு உருகும் நிலைக்கு ஜ்வாலை வரும்படி செய்ய வேண்டும்.

அந்த தீக்கொழுந்தில் நாவற்கொட்டை போன்ற அமைப்புள்ள கருவி போன்றவைகளைத் தணலில் இட்டு, பழுக்கக் காய்ச்சி, நோய் உண்டான இடத்திற்கு ஏற்றவகையில், வட்டமாகவோ, அரை வட்டமாகவோ ஸ்வஸ்திக உருவத்திலோ, எட்டுக்கால் பூச்சி போன்ற அமைப்பிலோ, புள்ளி உருவத்திலோ, கோட்டின் உருவத்திலோ முறைப்படி சுடவேண்டும். இச்சிகிச்சை செய்யும்பொழுது அடிக்கடி நல்வார்த்தைகளாலோ அல்லது நீர் தெளித்தோ நோயாளியைத் தேற்றி, வடு ஏற்படும் வரை சுட வேண்டும்.

சுடவேண்டிய இடம் புடைத்தோ, துவாரம் உள்ளதாகவோ, பிளந்தோ இருந்தால் அங்கும், புரையோடியிருக்கும் பற்களின் நாடியிலும், புழுக்களுடன் கெட்டுப்போன புண்களிலும், எண்ணெய், தேன்மெழுகு, தேன், வெல்லம், இவற்றில் ஏதாவது ஒன்றினால் நிரப்பி அதன்பின் சுட வேண்டும்.

நன்றாகச் சூடு போட்டபின் தேனும், நெய்யும் கலந்து அதில் ஊற்றவேண்டும். பிறகு குளிர்ச்சியானதும், எண்ணெய்ப் பசையுள்ளதுமான பொருட்களைச் சுட்ட இடத்தில் பூச வேண்டும். (5)

8. நன்றாகச் சுடப்பட்டதன் அறிகுறிகள்

சுடும்பொழுது ''சட்சட'' என்ற ஒலி உண்டாகி, கெட்ட நாற்றம் வீச, சுட்ட இடத்தில் தோல் சுருக்கம் ஏற்படுவது இவைகள் நன்கு சுடப்படடதின் அறிகுறிகளாகும். அங்கு பூறாவின் நிறம், சிறிதளவு வீக்கம், வலி, உலர்ந்த சுருங்கிய புண் இனை தோலில் நன்கு சுடப்பட்டதின் அறிகுறிகள். மாமிசம் நன்கு சுடப்பட்டிருந்தால் புண்ணின் வரம்புகள் கருநிற மாகவும் புடைத்துமிருக்கும். இரத்தம் நின்ற பிறகு அதிலிருந்து நீர்வடியும். நரம்புகள் நன்கு சுடப்பட்டிருந்தால் அதனால் வரும் புண் கருப்பு, சிவப்பு நிறமுள்ளதாகவும், கரடு முரடாகவும், உறுதியாகவும் இருக்கும். நரம்புகளுக்குக் கூறிய அடையாளங்களை தசைநார் போன்றவைகளிலும் அறிந்து கொள்ளலாம். நன்றாகச் சுடப்படாதது, அதிகமாகச் சுடப்பட்டது இவற்றின் அறிகுறிகளை கவனக்குறைவினால் சுடப்பட்டதற்குச் சொன்ன அறிகுறிகளால் அறிந்து கொள்க. அதற்குக் கூறிய சிகிச்சையை மேற்கண்டவற்றிற்கும் செய்க. (6)

கவனக்குறைவால் சுடுவது, துத்தம், துர்தக்தம் (முறை தவறிச் சுடப்பட்டது) ஸம்யக்தக்தம் (சரியாகச் சுடப்பட்டது). அதிதக்தம் (அளவுக்குமீறி சுடப்பட்டது) என நான்கு வகைப் படும்.

நிறமாற்றமும் அதிக எரிச்சலும் உண்டானால் அது கவனக்குறைவினால் சுடப்பட்டது எனப்படும். கொப்புளம், நெருப்பின் பக்கத்தில் இருப்பது போன்ற எரிச்சல், சாதாரண எரிச்சல், நாட்பட்டு புண் ஆறுதல் போன்ற இந்த அடையாளங்களைக் கொண்டது முறை தவறி சுடப்பட்டது. பழுத்த பனம்பழத்தின் நிறம், ஓரங்கள் சமமாக இருத்தல், சுடும் பொழுது சடசட என ஓசை எழுதல், கெட்ட நாற்றம், தோல் சுருங்குதல் இவை ஏற்பட்டால் அது சரியாகச் சுடப் பட்டதாகும். தாங்கமுடியாத வேதனை, புகை வருவது போன்ற தோற்றம், மாமிசம் தொங்குதல், நரம்பு போன்ற வைகளில் தோன்றும் தீமைகள், ஆழமான புண், காய்ச்சல், எரிச்சல், நாவறட்சி, மூர்ச்சை, வாந்தி, அதிக இரத்தப் பெருக்கினால் உண்டாகும் துன்பம், எளிதில் புண் ஆறாதிருத்

தல், புண் ஆறிய இடத்தில் நிறமாற்றம் இவைகள் [1]அதிதக்த மாகும்.

எண்ணெய் வகை உடல் முழுவதும் எளிதில் பரவும் தன்மையுடையதாலும் வெகு தூரம் ஊடுருவி உட்புகுவதாலும், அவற்றால் சுடுவது மிகவும் துன்பத்தைத் தரக்கூடியது. (7)

கவனக்குறைவினால் சூடுபோட்ட இடத்தில் மறுபடியும் நன்கு . சுடவேண்டும். பிறகு உஷ்ண குணமுள்ள மருந்தைப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் குளிர்ச்சியினால் இரத்தம் உறைந்து போன பின்பு உடலின் உஷ்ணம் வெளிவராது. இதனால் வேதனை அதிகரிக்கும். இரத்தம் கட்டிவிடும்.

உஷ்ண சிகிச்சையினால் உஷ்ணத்தை வெளிப்படுத்தி விட்டால் வலி குறைந்துவிடும். இரத்தமும் கட்டியாகாது. (8—9)

முறை தவறி சுடப்பட்டால் குளிர்ச்சியும் உஷ்ணமுமான குணங்களைப் பெற்றிருக்கும் மருந்துகளையே முதலில் பயன் படுத்த வேண்டும். பிறகு குளிர்ச்சியுள்ள நெய் போன்றவற்றினால் பூசவும் ஊற்றவும் வேண்டும். (10)

சரியாகச் சுடப்பட்டபொழுது மூங்கில் உப்பு, இத்தி மரம், சந்தனம், காவி, சீந்தில்கொடி இவற்றின் சூர்ணம் அல்லது கல்கத்தை நெய்யில் கலந்து பூசவேண்டும். அல்லது நீர்ப்பாங்கான இடங்களில் வாழும் பிராணிகளின் மாமிசத்தில் நெய் கலந்து பூசவேண்டும். உஷ்ணம் தணிந்தபின், பித்தத்தினால் ஏற்பட்ட கட்டிக்கு உண்டான சிகிச்சையைப் பின்பற்ற வேண்டும்.

அளவுக்கு மீறி சூடு போட்டபொழுது அழுகிப்போன மாமிசத்தை வெளிப்படுத்தி குளிர்ச்சியான சிகிச்சையைச் செய்ய வேண்டும். பிறகு சம்பா அரிசியின் தவிட்டினால் நெய் கலந்து பூச வேண்டும். அல்லது திந்துகி எனும் மரத்தின் பட்டையைத் தூள் செய்து, நெயில் கலந்து பூச வேண்டும். பிறகு சீந்தில் கொடியின் இலைகளாலோ அல்லது முள்ளங்கியின் இலைகளாலோ புண்ணை மூட வேண்டும். நோயாளிக்கு பித்தத்தினால் ஏற்பட்ட அக்கி எனும் நோய்க்குச் செய்யும் சிகிச்சையைச் செய்ய வேண்டும்.

1. அதிதக்தம்—அளவுக்கு மீறி சுடப்பட்டது.

எண்ணெயில் சுடப்பட்ட புண்ணிற்கு வறட்சி ஏற்படுத்தும் மருந்தைப் பயன்படுத்த வேண்டும். (11—14)

ஆயுதம், நெருப்பு இம்மூன்றும் மரணத்திற்குச் சிறந்த ஆயுதங்களாகும். ஆகையினால் மருத்துவர் இச்சிகிச்சைகளில் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

இந்நூலின் இதயம் போன்று அமைந்திருக்கும் ஸூத்ர ஸ்தானம் எனும் பகுதி இத்துடன் முற்றுப் பெறுகிறது.

இந்த ஸூத்ரஸ்தானம் எனும் பகுதியில் நுட்பமாகவும், ஸூத்ரம்போல் சுருக்கமாகவும் கூறப்பட்டவைகளே மற்ற எல்லா இடங்களிலும் விரிவாகக் கூறப்படுகின்றன. (15—16)

'அஷ்டாங்க சங்கிரகம்' ஸூத்ரஸ்தானத்தில் 'அக்னிகர்ம விதி' எனும் நாற்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸூத்ரஸ்தானம் முற்றும்.

அருஞ்சொற்கள்

சொல்	பக்கம்
அ	
அபகர்ஷம்	6
அர்த்தம்	6
அநுபக்ரமணீயம்	18
அணுதைலம்	24
அதிசாரம்	31
அநுவாஸனம்	44
அகஸ்திய நக்ஷத்திரம்	45
அபானவாயு	47
அச்மரீ	48
அவபீடகம்	48
அர்திதம்	48
அக்கி	50
அக்னிமந்தம்	51
அரிஷ்டம்	76
அஷ்டீலா	103
அக்ஷிதர்ப்பணம்	131
அப்ரும்மசர்யம்	154
அஹிதம்	176
அமாத்ராசனம்	177
அநுபானம்	178
அலசகம்	188
அவஸேசனம்	194
அபதர்ப்பணம்	195
அத்ரவியம்	201
அபிஷ்யந்தி	224
அர்க்கம்	258
அம்பஷ்டம்	260
அஸாத்ம்ய இந்திரியார்த்த ஸம்யோகம்	341
அவபீடனம்	452
அச்சபேயா	464
அநுவாசனவஸ்தி	464
அபிஷ்யந்தம்	477
அதிமந்தம்	477
அஞ்சனம்	484
அன்யதோவாதம்	491
அர்சோயந்திரம்	500
அங்குலித்ராணகம்	501
அலாபூயந்திரம்	503
அத்யர்ததாரை	509
அதிதக்தம்	577
ஆ	
ஆசமனம்	22
ஆதானகாலம்	156
ஆஸவம்	42
ஆஸ்தாபனம்	44
ஆமரோகம்	51
ஆகந்துகம்	53
ஆச்சோதனம்	64
ஆருகம்	112
ஆமம்	196
ஆப்யந்தரம்	203
ஆநூபம்	288
ஆம விஷம்	148
ஆக்ஷேபம்	282
இ	
இரத்தபித்தம்	85
இரசசேஷாசீர்ணம்	197
இரசாயனம்	200
இலகு	204
இலங்கனம்	364
ஈ	
ஈனம்	5
உ	
உத்தமம்	5
உஷ்ணம்	5
உத்கர்ஷம்	6
உதமந்தம்	45
உதாவர்த்தம்	47
உத்பாதங்கள்	163
உபசயம்	265
உதரம்	130
உபசமனம்	264
உபத்திரவம்	346
உதானவாயு	402
உரக்ஷதம்	405
உதகோதரம்	430
உத்திரவஸ்தி	447
உபசமனம்	524
ஊ	
ஊர்த்துவாங்கம்	2
ஊஷ்மா	182

சொல்	பக்கம்
ஊர்ஜஸ்கரம்	200
ஊஷகம்	257
எ	
எண்வகைப் பெருநோய்கள்	153
எண்ணெய் வஸ்தி	195
ஐ	
ஐந்து பிண்டங்கள்	30
ஐவகை உப்புகள்	142
ஐவகைச் சிகிச்சைகள்	641
ஒ	
ஓஜஸ்	63
க	
கரம்	5
கருமம்	10
கடுகம்	26
கஷாயவஸ்தி	52
கர்ஜூரம்	77
கல்லடைப்பு	85
கல்கம்	131
க்லேதம்	182
கர்ப்பசல்யம்	231
க்வாதம்	262
கந்தம்	265
க்லோம	308
கண்டூஷம்	473
கலசுண்டிகா	477
கடயந்திரம்	503
கரபத்திரம்	510
கர்ணபாலி	511
கஜம்	512
கா	
காயம்	2
காலம்	10
காங்கோதகம்	56
காகமத்கு	74
காலராத்ரி	155
காணிக்கை	202
காடி	272
கி	
கிரகம்	2
கிரௌஞ்சம்	45
கிலாடம்	68
கு	
குரு	5
குல்மாஷம்	116
குடீப்ரவேசம்	464
குசபத்திரம்	510
கூ	
கூர்சிகா	68
கூர்ச்சம்	512
கோ	
கோசாம்ரம்	111
கோஷ்டம்	229
கௌ	
கௌரவம்	265
ச்	
ச்ருங்காடகம்	484
ச	
சல்யம்	2
சலம்	5
ச்லக்ஷ்ணம்	5
சடராக்னி	29
சமித்துக்கள்	35
சரத்ருது	40
சமனசிகிச்சை	153

சதுர்ஜாதகம் 212
சம்சோதனம் 352
சம்சமனம் 352
சமனகண்டூஷம் 473
சலாகா 486
சிருங்கயந்திரம் 502
சங்குயந்திரம் 504

சி

சித்தர்கள் 35
சிசிரருது 40
சித்தரசாயனம் 52
சிரோவிரேசனம் 228
சிக்குவா திகணம் 136
சியாமம் 261
சிரோவஸ்தி 480

சீ

சீதம் 5
சீது 77

சு

சுகசாத்யம் 19
சுவாஸம் 60
சுவாஸநோய் 63
சுரஸம் 258
சுக்லார்மா 484
சுக்ரம் 525

சூ

சூக்குமம் 5
சூகம் 82
சூர்ணம் 476

சே

சேதனம் 264

சோ

சோமலதா 232
சோபாஞ்சனம் 137
சோதனம் 474

த

தம்ஷ்ட்ரா 2
தமஸ் 10
த்ரிவர்க்கம் 36
தர்ப்பணம் 64
தக்ரபிண்டிகா 68
தமோகுணம் 155
தண்டஅலசகம் 189
த்ரிஜாதகம் 212
த்ரிகடுகம் 213
தகலாவணிகம் 90
தசமூலப் பொருட்கள் 444
தர்ப்பணம் 491
தர்வி 505
தந்தலேகனம் 507

தா

தான்யாம்லம் 475

தி

திரவம் 5
திரிபலா 179
திரவியம் 201
திமிரம் 525

தீ

தீக்ஷ்ணம் 5
தீபனம் 365

து

துவஜஸ்தம்பம் 27
துஷோதகம் 409
துரோணம் 567

தூ

தூஷ்யங்கள் 6
தூவி 89
தூமபானம் 465

தே

தேசம் 19

ந

நஸ்யம் 24
ந்யங்கு 94
ந்யக்ரோதம் 261

நி

நிஜம் 10
நியதாயுள் 19
நிண நீர் 41
நிமித்தகாரணம் 38
நியமம் 202
நிதானம் 344
நிருத்தமணி 502

ப்

ப்ரகிருதி 264
ப்ரதமகம் 30
ப்ரஸஹம் 41
ப்ராமரம் 71
ப்ரஸஹங்கள் 93
ப்ருஹ்மணம் 108
ப்ரக்ஞாபராதம் 341
ப்ராயோகிகம் 466
ப்ரதிஸாரணம் 476
ப்ரத்யஞ்சனம் 485
ப்ரஸாதனபுடபாகம் 494
ப்ரதமனம் 502
ப்ரகோபம் 524

ப

பத்யம் 19
பதிதன் 31
பர்யஸ்திகம் 37
பர்ணிமூலம் 59
பலி 202
பாஹ்யம் 203
பஞ்சகோலம் 285
படோலாதிகணம் 285
பரிணாமம் 341
பத்தோதரம் 430
பத்தகுதோதரம் 431
பக்வாதிஸாரம் 496
படிசம் 512

பா

பாலம் 2
பாசனம் 52
பாண்டு 130
பாஹ்யம் 203

பி

பிரோயோகிகம் 25
பித்ருக்கள் 32
பிரதிதூனி 89
பிரதுதம் 93
பிரதிச்யாயம் 121
பிரச்சானம் 130
பிரியங்கு 260
பிப்பலி 262
பிரபாவம் 273
பிரதிமர்சம் 452
பிரதமநம் 453
பிடாலகம் 482
பிண்டம் 485

பீ

பீனஸம் 31
பீயூஷம் 68

பு

புடபாகம் 468

ம்

ம்ருத்ஸனம் 5

ம

மத்திமம் 5
மந்தம் 151
மகோதரம் 59
மஜ்ஜை 74
மத்வாஸவம் 78
மகாமிருகங்கள் 81
மண்டம் 87
மதாத்யயம் 108
மகுஷ்டம் 149
மந்திரம் 201

மணி 202
மங்கலம் 202
மர்சம் 452
மத்யமம் 466
மண்டலாக்ரம் 507

மா

மாக்ஷிகம் 71
மாற்றுப்பொருள் 79
மாத்ராவஸ்தி 464
மாத்திரை 480

மி

மிருத்வீகாஸவம் 78
மித்ரவிந்தா 166

மு

முகபாரிசவாயு 31
முஷ்ககம் 259
முஸ்தா 260
முகாலேபனம் 477

மூ

மூர்த்ததைலம் 478

மே

மேதஸ் 303

மை

மைரேயம் 150

மோ

மோரடம் 68

ய

யவம் 44

யோ

யோகவாஹி 71
யோநிவ்ரண தர்சன யந்திரம் 501

ர

ரஜஸ் 37
ரஸாஞ்ஜனம் 24
ரஸாலா 91
ரஸாயனம் 200
ரசாயனமுறை 213
ரஸக்கிரியா 476
ரஞ்ஜகம் 524
ரக்தராஜி 525

ரு

ருது 19
ருக்ஷம் 5

ரூ

ரூக்ஷணம் 365

ரோ

ரோகிதம் 94
ரோகிணி 167
ரோகக்னம் 200
ரோத்ரம் 257
ரோபணம் 474

ல

லகு 5
லங்கனம் 52
லங்கனசிகிச்சை 194
லங்கன பாசன சிகிச்சை 194

லே

லேகன புடபாகம் 494
லேகியம் 262

வ

வஸ்தி 11
வமனம் 11
வஸை 74
வசந்தருது 40
வர்த்தி 47

வஸ்திகர்ம 48
வர்ண்யம் 258
வஸ்தியைச் சுத்தப்படுத்தல் 103
வத்ஸகம் 259
வசூரிகா 303
வாதாதபம் 464

வா

வாயு 182
வாஜீகரணம் 200
வாகை 228
வாத பர்யாயம் 491

வி

விருஷ 2
விஸ்ரம் 5
விரேசனம் 11
விஸர்க்ககாலம் 39
விருஷ்யயோகம் 52
வியவாயி 72
விபாகம் 74
விலேபி 87
விஷ்கம்பி 102
விஷ்கிரம் 93
விஷூசிகா 196
விஷ்டப்தம் 196
விதக்தம் 197
விலம்பிகா 197
விக்ருதி 264
விசாரம் 264
விசதம் 265
விகாஸீ 401
விஸ்போடகம் 303
விருத்திபத்ரம் 509

வீ

வீரதரம் 257
வீர்யம் 273

வே

வேள்வி 202

ஸ்

ஸ்நிக்தம் 5
ஸ்திரம் 5
ஸ்நேகவஸ்தி 52
ஸ்தாவரவிஷம் 115
ஸ்மிருதி 166
ஸ்நேகம் 204
ஸ்தூலம் 265
ஸ்தைரியம் 265
ஸ்ரோதோஞ்சனம் 208
ஸ்தம்பனம் 258
ஸ்வேதம் 204
ஸ்நேகனம் 365
ஸ்வேதனம் 365
ஸ்நேகவிதி 376
ஸ்வேதவிதி 390
ஸ்நைஹிகம் 470
ஸ்நைஹிககண்டூஷம் 473
ஸ்நேஹன புடபாகம் 494

ஸ

ஸரம் 5
ஸத்துவம் 157
ஸந்யாஸம் 167
ஸம்சோதனம் 52
ஸந்நிபாதம் 62
ஸர்ஜக்ஷாரம் 90
ஸமம் 152
ஸமயோகம் 182
ஸங்காதம் 265
ஸந்தர்ப்பணம் 195
ஸம்தம்சம் 499
ஸர்ப்பவக்த்ரம் 510
ஸஞ்சயம் 524

ஸா

ஸாமுத்ர நீர் 56
ஸாத்த்ரம் 265

ஸி

ஸித்தபிண்டிகை 116

ஸூ

ஸூக்தம் 119

ஸௌ

ஸௌவீரம் 24
ஸௌவீராஞ்சனம் 208

ஜ

ஜரா 2
ஜங்கமவிஷம் 115

ஜா

ஜாங்கலம் 42

ஜீ

ஜிவனாதிகணம் 158
ஜிவந்தி 241

ஹ

ஹலீமகம் 156
ஹரித்ரம் 259
ஹாரித்ரகம் 151

ஹி

ஹிதம் 176

ஹூ

ஹூங்காரம் 27

ஹே

ஹேமந்தருது 40

க்ஷ

க்ஷதோதரம் 431
க்ஷாரசிகிச்சை 300
க்ஷாரம் 474

க்ஷீ

க்ஷீரசாகம் 68

க்ஷெள

க்ஷெளத்ரம் 71

எஜியன் அச்சகம், சென்னை-600014.